# இலக்கியவெளி

www.ilakkiyaveli.com

சிறுகதைச் சிறப்பிதழ்

ISSN: 2564-2421

கலை இலக்கிய அரசியல் பண்பாட்டு இதழ்

இதழ் 3 : ஜுலை - டிசம்பர் 2022 ரூ. 300.00 (இந்தியா மட்டும்)



## சாந்தன் – 75



நேர்காணல்:



## பெருமாள் முருகன்

**கட்டுரை:** இரா.பிரேமா, அமுது ஜோசேப் சந்திரகாந்தன், மைதிலி தயாநிதி, செ.யோகராசா, க.பஞ்சாங்கம், இரா.ஸ்ரீவித்தியா, நா.சுலோசனா, நா.இளங்கோ, பா. இரவிக்குமார், சா.தேவதாஸ், சி.ரமேஷ், ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்

**கதை:** சு.வேணுகோபால், எம்.ஏ.சுசீலா, எம்.ரிஷான்ஷெரீப், பெர்லின் பொ.கருணாகரமூர்த்தி, லறீனா அப்துல் ஹக், தேவகாந்தன், சாந்தன், தாட்சாயணி, யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

**அஞ்சலி:** கு.சின்னப்ப பாரதி: க.பஞ்சாங்கம், தெணியான்: மு.அநாதரட்சகன்

**கவிதை:** கலாப்ரியா, ஆழியாள், செ.இராஜேஸ்வரி, மா.காளிதாஸ் **திரை:** “ஜன கண மன” : ஆதன்

**நூல் மதிப்புரை:** உடுவில் அரவிந்தன், சு.குணேஸ்வரன், நா.நவராஜ், ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAKING REALITY DREAMS
A REALITY

RE/MAX



PRAVINA
SHANMUGANATHAN
Sales Representative

Direct :

(647) 866-0629

Pravina.Shan@remax.net



RE/MAX

Reality Services Inc, Brokerage

Independently Owned
and Operated

(905/416) 456-1000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

www.ilakkiyaveli.com

# இலக்கியவெளி

ISSN: 2564-2421
கலை இலக்கிய அரசியல் பண்பாட்டு இதழ்

## சிறுகதைச் சிறப்பிதழ்

### கட்டுரைகள்:


தமிழ்ப் பண்பாட்டுக் கட்டுமானத் தகர்ப்புகள் (சிறுகதைகளை முன் வைத்து)
இரா.பிரேமா....7

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் ஒரு மடைமாற்றம் – அ.முத்துலிங்கத்தின் தன்கதை உரைப்பிய உத்திகளின் உன்னதம் பற்றிய ஒரு பார்வை
அமுது ஜோசேப் சந்திரகாந்தன்....15

குந்தவையின் எழுத்துகள்
மைதிலி தயாநிதி....20

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி (1930–1960) : மறுமதிப்பீடு
செ.யோகராசா....26

பின் காலனித்துவமும் தமிழ்ச் சிறுகதைத் தோற்றமும்
க.பஞ்சாங்கம்....31

அம்பையின் சிறுகதைகள் – லிங்கச் சொல்மையவாதத்திற்கு எதிரான பெண் அடையாளத்தின் குரல்
இரா.ஸ்ரீவித்தியா....34

கி.ரா.வின் சிறுகதைகளில் மொழிச் சித்தரிப்பு
நா.சுலோசனா....44

தமிழின் முதல் சிறுகதை எனும் பெரும் புதிர்
நா.இளங்கோ....50

தமிழ்ச் சிறுகதைகள் உணர்த்தும் பெண்ணின் இருப்பும் வெளியும்
பா.இரவிக்குமார்....59

விளிம்புநிலை வாழ்வின் சுடுமண் தகிப்பு
சா.தேவதாஸ்....67

இரண்டாயிரத்துக்குப் பின்னர் ஈழத்துச் சிறுகதைகள்
சி.ரமேஷ்....74


### நேர்காணல்: பெருமாள்முருகன்


கல்யாணராமன்....99


### சிறுகதைகள்:


இரை – சு.வேணுகோபால்....110
நின்ற சொல் – எம்.ஏ.சுசீலா....118
ரம்போவின் இறுதி நாட்கள் – எம்.ரிஷான் ஷெரீப்....124
உணர்வோடு விளையாடும் பறவைகள் – பெர்லின் பொ.கருணாகரமூர்த்தி....132
நோனாச்சி – லறீனா அப்துல் ஹக்....139
நாகமணி – தேவகாந்தன்....149
பெறுமதிகள் – சாந்தன்....155
அகத்தி – தாட்சாயணி....158
அதே. அதே. – யோகேஸ்வரி சிவப்பிரகாசம்....164


### மதிப்புரை:


'லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனாவும் சில கதைகளும்' – உடுவில் அரவிந்தன்....171
'கட்டடக்கா(சூ)ட்டு முயல்கள்' – சு.குணேஸ்வரன்....175
'புத்தரின் நிழல்' – நா.நவராஜ்....179
'படிக்கம்' – றூபி வலன்ரீனா பிரான்சிஸ்....186


சிறுகதைச் சிறப்பிதழ் (பக்.7 முதல் 192 வரை)

### கவிதைகள்:


ஆழியாள்....193
கலாப்ரியா....194
செ.இராஜேஸ்வரி....195
மா.காளிதாஸ்....196


### சாந்தன் – 75


சாந்தனின் புனைவு வெளியும் புலப்பாட்டு நெறியும் – சி.ரமேஷ்....199
சாந்தனின் நாவலும் குறுநாவல்களும் – ஓர் அறிமுகம் – மைதிலி தயாநிதி....216


### கட்டுரை:


அக்னஸ் வார்தா: எதிர்நீச்சலெனும் அழகியல்
ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்....221


### அஞ்சலி: கு.சின்னப்ப பாரதி


க.பஞ்சாங்கம்....228


### அஞ்சலி: தெணியான்


மு. அநாதரட்சகன்....230

கடிதங்கள்....232


### திரை: ஜன கண மன


ஆதன்....238

தலையங்கம்....4


11246 (P)
Aru

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.ilakkiyaveli.com
இலக்கியவெளி
ISSN: 2564-2421 கலை இலக்கிய அரசியல் பண்பாட்டு இதழ்

ஆசிரியர்
அகிலேஸ்வரன் சாம்பசிவம் (அகில்)

இணை ஆசிரியர்
சு.குணேஸ்வரன் (இலங்கை)
உதவி ஆசிரியர்
சி.ரமேஷ் (இலங்கை)

ஆசிரியர் குழு:
க.பஞ்சாங்கம் (இந்தியா)
கல்யாணராமன் (இந்தியா)

ஆலோசனைக் குழு:
இரா.செல்வி (இந்தியா)
கங்காதர்சினி அகிலேஸ்வரன் (கனடா)

கணணி வடிவமைப்பு:
பி.ஆர்.ராஜன்

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இலக்கியவெளி
607-550 Scarborough Golf Club Road,
Scarborough, Ont, M1G 1H6, Canada.

தொலைபேசி:
0014168226316

மின்னஞ்சல்:
editorilakkiyaveli@gmail.com

வலைத்தளம்:
www.ilakkiyaveli.com

நன்கொடை மற்றும் விளம்பரத் தொடர்புகளுக்கு:
0014168226316
editorilakkiyaveli@gmail.com

சிறப்பிதழ் இந்தியா – விலை ரூ. 300
தனியிதழ் இந்தியா – விலை ரூ. 100

ISSN: 2564-2421

இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து
ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய
ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்

– ஆசிரியர்

## தலையங்கம்

# யாழ்ப்பாண நூலகம் தொடக்கம் ரணிலின் புத்தக அலுமாரிவரை

அறிவையும், ஆற்றலையும், புதிய சிந்தனையையும் வழங்கக்கூடிய இடமாக நூலகங்கள் விளங்குகின்றன. கிரேக்க அறிஞர் பிளேட்டோ 'புத்தகம் இல்லாத வீடு ஜன்னல் இல்லாத அறை போன்றது. எந்த வீட்டில் நூலகம் இருக்கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது' எனக் கூறினார்.

தென்னாசியாவின் மிகப்பெரிய அறிவியல் பொக்கிசமாகப் போற்றப்பட்ட யாழ் நூலகம் உருவத்தில் மட்டுமல்லாது உள்ளடக்கத்திலும் பெரிய நூலகமாக விளங்கியது. ஈழத் தமிழ் மக்களின் அறிவின் அடையாளமாகவும், பண்பாட்டின் பொக்கிசமாகவும், வரலாற்றுக் கருவூலமாகவும் யாழ் நூலகம் விளங்கியது. இங்கு கிட்டத்தட்ட 97000 அரியவகைப் புத்தகங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவின் தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அறிஞர்கள் தேடிச் சென்று பயன்படுத்தும் ஒரு நூலகமாக யாழ் நூலகம் விளங்கியது.

உலகில் வேறு எங்கும் இல்லாத நூற்றாண்டுப் பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800களில் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் என மிகப் பெரிய எண்ணிக்கையிலான பொக்கிசங்களை இந்நூலகம் தன்னகத்தே கொண்டிருந்தது.

யாழ்ப்பாண நூலகம் 1981 மே 31ம் திகதி சிங்களக் காடையர்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. தமிழ் மக்களின் அறிவாற்றலைப் பொறுக்கமுடியாத அப்போது ஆட்சியில் இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தனாவும், சில அமைச்சர்களுமே இதன் சூத்திரதாரிகள் எனக் கூறப்படுகின்றது. ஈழத் தமிழர்களின் அறிவாற்றலை, பண்பாட்டு விழுமியங்களை, வரலாற்று ஆவணங்களை ஆதாரங்கள் எதுவுமில்லாமல் அழித்தெழிக்க வேண்டும் என்ற கண்மூடித்தனமான இனவெறியே இதன் மூலகாரணம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உருப்பெற இந்நூலக எரிப்பும் ஒரு முக்கிய காரணம். 1585 இல் கத்தோலிக்க மதத் தலைவர்களால் எழுதப்பட்ட கிடைத்தற்கரிய பல தமிழ் நூல்கள், ஐசாக் தம்பையா என்பவர் நன்கொடையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடுத்த இலக்கியம், சமயம், மொழியியல், தத்துவம் தொடர்பான சுமார் 6000 நூல்கள், இந்திய வர்த்தகர் ஒருவரால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சத்தியசோதனை, 1672 இல் பிலிப்பஸ் பால்டியார் எழுதிய டச்சு ஆட்சியில் இலங்கை என்னும் நூல், 1660 இல் கண்டி மன்னரால் றொபேட் நொக்ஸ் சிறைப்பிடிக்கப்பட்ட வேளை றொபேட் நொக்ஸ் எழுதிய இலங்கையர் யாவர் என்னும் நூல் போன்ற பல அரிய நூல்கள் எரிந்து சாம்பலாயின. சேர்.பொன்.இராமநாதன் எழுதிய பகவத்கீதை விளக்கம், சித்தாந்தம், செந்தமிழ் இலக்கிய நூல்கள், திருமதி இராமநாதன் அம்மையாரால் எழுதப்பட்ட இராமாயண மொழிபெயர்ப்பு, மகாகவி பாரதியாரின் நண்பரான நெல்லையப்பன் எழுதிய நூல்கள், கடலைக்குடி நடேச சாஸ்திரியார் எழுதிய சோதிட சாஸ்திர நூல்கள், வானசாஸ்திரம் சம்பந்தமான நூல்கள், சித்த வைத்திய வாசகங்கள் அடங்கலான ஏட்டுச் சுவடிகள் ஆகியவை அழிந்துபோன பொக்கிசங்களுள் சில.

மேலும், முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய அபிதானகோசம், சிங்காரவேலு முதலியார் எழுதிய அபிதான சிந்தாமணி, முதலியார் இராசநாயகம் எழுதிய புராதன யாழ்ப்பாணம், சுவாமி ஞானப்பிரகாசர், முத்துத்தம்பிப்பிள்ளை ஆகியோர் எழுதிய யாழ்ப்பாணம் பற்றிய நூல்கள், கல்லடி வேலுப்பிள்ளை என்று அழைக்கப்படுகின்ற கே.வேலுப்பிள்ளை இயற்றிய யாழ்ப்பாண வைபவகௌமுதி, சிற்பக்கலை பற்றிய நூல்கள், தனிநாயகம் அடிகளார் பதிப்பித்து வெளியிட்ட 'தமிழ் கலாசாரம்' என்னும் ஆங்கில சஞ்சிகை, இராசையனார், வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, ஆனந்தக்குமாரசாமி மற்றும் முதலியார் குலசபாநாதன் சேகரித்த நூல்கள் மற்றும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் எரிந்தழிந்தன.

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவில் இந்த கொடும் நிகழ்வு நேர்ந்த வேளை அதனை சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியில் இருந்து நேரில் பார்த்த தாவீது அடிகளார் அந்தக் கணத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி அந்த நூலகத்தின் பெறுமதியை எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

நூலகம் எரியுண்டபோது பேராசிரியரும் கவிஞருமான எம்.ஏ.நுஃமான் தனது கவிதையொன்றில் அந்தத் துயரச் சம்பவத்தை பின்வருமாறு பதிவுசெய்கின்றார்.

**புத்தரின் படுகொலை!**

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
'எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?'
என்று சினந்தனர்.
'இல்லை ஐயா
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்......
என்றனர் அவர்கள்.
'சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை'
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது.

ஈழ வரலாற்றில் மிக முக்கிய கருப்பு நாளாக, துயரம் மிக்க சம்பவமாக அமைந்த நூலகம் தீ வைக்கப்பட்ட சம்பவம் நடந்து 41 ஆண்டுகள் கடந்த நிலையில் மக்கள் மனதில் இன்னும் அது ஆறாத, அழியாத வடுவாகவே காணப்படுகின்றது.

யாழ் நூலகம் மீண்டும் அதே இடத்தில் அரசாங்கத்தால் கட்டியெழுப்பப்பட்ட போதிலும் அழிந்த பொக்கிசங்கள் அழிந்தவை தான். புதிய கட்டிடமும் இன்னும் எரிந்துபோன நூலகத்தின் நினைவிடமாகவே ஈழத்தமிழர்களின் கண்களுக்குத் தெரிகிறது.

எத்தனையோ கலைக்கூடங்கள், கோயில்கள், வரலாற்று ஆதாரங்களை, எண்ணிலடங்காத பெறுமதிமிக்க மனித உறவுகளைத் தொலைத்துவிட்டு அநாதரவாக நிற்கிறது ஈழத்தமிழ் சமூகம் இன்று. எதையுமே அவர்கள் மீளப்பெறப் போவதில்லை. இழந்தவை போக இருக்கிறார்களா இல்லையா என்ற கேள்விக்கு விடை கூடக் கிடைக்காமல் இழப்புக்களை சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவிக்கும் ஈழத்தமிழர்களது இழப்புக்களை எதனுடனும் ஒப்பிட முடியா. சுமார் 40ஆண்டுகள் கழிந்த நிலையில் மீண்டும் ஒரு வன்முறை தென்னிலங்கையில் அரங்கேறியது. 2022 ஜூலை 9ஆம் திகதி ரணில் விக்ரமசிங்கவின் வீடு வன்முறையாளர்களால் எரியூட்டப்பட்டது. அரிய நூல்கள் பல எரிந்து நாசமாகிப் போயின.

தன் வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்ற பட்டினத்தார் வாக்குத்தான் பலருக்கும் நினைவில் நிழலாடியது.

சிங்கள அரசியல்வாதிகளின் அட்டூழியங்களின் மிக உச்சம் அதன் தலைநகரில் அவர்களுக்கு எதிராகவே நிகழ்த்தப்பட்டது.

'என்னுடைய பொக்கிசம் என்னுடைய நூலகம் தான். அதில் 2500க்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்தன. சில புத்தகங்கள் அந்த புத்தங்களை எழுதிய எழுத்தாளர்களால் கையொப்பமிடப்பட்டு தரப்பட்டவை. அமெரிக்க இராஜதந்திரி கென்றி கீஸிங்கர் (Henry Kissinger) கூட கையொப்பமிட்டுத் தந்திருந்தார். இவையெல்லாம் தீயில் நாசமாகிப் போய்விட்டன. ஹிட்லரின் பாசிசவாதிகளால் தான் இப்படி வீட்டை எரித்து நாசமாக்கமுடியும்' என்று தனது வேதனையை பகிர்ந்திருந்தார் ரணில்.

யாழ் நூலக எரிப்பு சிங்கள இனவாதத்தின் உச்சக்கட்டம். ரணில் வீடு எரிப்பு சிங்கள அரசியல்வாதிகளுக்குள் நடத்த அதிகாரப் போட்டியின் விளைவு. யாழ்ப்பாண நூலக எரிப்பு மற்றும் ரணில் வீடு எரிப்பு இரண்டு சம்பவங்களும் மன்னிக்கமுடியாத சம்பவங்களாக இருக்கின்றன.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டபோது சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து மன்னிப்போ அல்லது சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனையோ வழங்கப்படவில்லை. மாறாக அவர்களை வீரர்களாக சிங்கள இனவாதிகள் கொண்டாடினார்கள்.

2016ஆம் ஆண்டு முதல் முதலாக ரணில் யாழ் நூலக எரிப்புக்கு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார்.

இழந்தவை எல்லாமே இழந்தவைதான். எதுவும் மீளக் கிடைக்கப்போவதில்லை. இனிமேலாவது இதுபோன்ற வன்முறைகள் நடக்காமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். புத்தரின் அகிம்சையும், போதனைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இவ்விடத்தே ஐயன் வள்ளுவனின் குறள் ஒன்று ஞாபகத்துக்கு வருகின்றது,

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ்ப் பண்பாட்டுக் கட்டுமானத் தகர்ப்புகள்

## (சிறுகதைகளை முன் வைத்து)

இரா பிரேமா

தமிழ்ச் சிறுகதைகள் தோற்றம் பெற்று ஒரு நூற்றாண்டுக்கு மேல் கடந்துவிட்டது. வ.வே.சு. ஐயர், பாரதியார், மாதவையா போன்றவர்களைத் தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடிகள் என்று குறிப்பிடலாம். மணிக்கொடி இதழ் சிறுகதைகளுக்கு மிக ஆழமாக அடித்தளமிட்டது. அந்த இதழில் எழுதிய புதுமைப்பித்தனும், கு.ப.ராவும் தமிழ்ச் சிறுகதைகளுக்குத் தனி மதிப்பை ஏற்படுத்தித் தந்தனர். தொடர்ந்து தமிழ்ச் சிறுகதை வரலாற்றை நோக்கும்போது விந்தன், தி ஜானகிராமன், ஜெயகாந்தன், அகிலன், நா.பா, கல்கி போன்றவர்கள் சிறுகதை இலக்கியத்தை ஆழமாகவும் அகலமாகவும் வளர்த்தெடுத்துள்ளனர். பெண் எழுத்தாளர்களில் வசுமதி ராமசாமி, குமுதினி, குகப்பிரியை, அநுத்தமா, லட்சுமி, ராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் சுதந்திரத்திற்கு முந்தைய காலகட்டம் தொடங்கி சிறுகதைகள் வரலாற்றில் தடம் பதித்துள்ளனர்.

அடுத்து வந்த காலகட்டங்களில் அசோகமித்திரன், அய்க்கண், சு சமுத்திரம், சுஜாதா, பிரபஞ்சன், சூடாமணி, சிவசங்கரி, இந்துமதி, வாசந்தி, அனுராதா ரமணன் போன்றவர்கள் தமிழ்ச் சிறுகதை ஆக்கத்திற்கு வளம் சேர்த்தனர். மறுபுறம் கரிசல் காட்டு எழுத்தாளரான கி.ரா, பூமணி, நாஞ்சில் நாடன், பொன்னீலன் போன்றோர்களும், முற்போக்கு எழுத்தாளர்களான ப.ஜெயபிரகாசம், மேலாண்மை பொன்னுசாமி, ஆதவன் தீட்சண்யா, கந்தர்வன், தமிழ்ச்செல்வன், தேனி சீருடையான் போன்றவர்களும், தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புயலென நுழைந்து தன் அதிரடியான எழுத்துக்களால் இலக்கிய உலகை ஒட்டுமொத்தமாகத் தன் பக்கம் திருப்பிய எழுத்தாளர் அம்பை, வண்ணநிலவன், வண்ணதாசன், சுப்ரபாரதி மணியன், திலகவதி, உஷா சுப்பிரமணியன், காவேரி, பாமா, ஆண்டாள் பிரியதர்ஷினி, உமா மகேஸ்வரி என்று பலர் தமிழ்ச் சிறுகதைகளுக்குப் புதிய அடையாளங்களைத் தந்து வருகின்றனர். எழுத்து, கணையாழி, சுபமங்களா போன்ற சிறு பத்திரிகைகளும், கலைமகள், மஞ்சரி, அமுதசுரபி என்ற இலக்கிய இதழ்களும், கல்கி, ஆனந்த விகடன், குமுதம், சாவி, இதயம் பேசுகிறது, குங்குமம் போன்ற வெகுஜன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ்களும் தமிழ்ச் சிறுகதைகளை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்கு ஆற்றியுள்ளன.

தொடக்க காலத்திலிருந்து தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள் அவ்வப்போது சமூகத்தைப் புரட்டிப்போடும் அதிரடியான கதைகளை எழுதி வந்துள்ளனர். மூட பழக்க வழக்கங்களிலும், சடங்கு சம்பிரதாயங்களிலும், மரபார்ந்த நம்பிக்கைகளிலும் காலங் காலமாக மூழ்கிக் கிடக்கும் தமிழ்ச் சமூகத்தை இத்தகைய படைப்புகள் மூலம் தட்டி எழுப்ப முயற்சி செய்துள்ளனர். அப்படிப்பட்ட படைப்புகளையும், அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களையும் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் அடிப்படை நோக்கமாகும்.

பாரதியாரின் 'காந்தாமணி' சிறுகதை ஒரு மாறுபட்ட சமூகச் சித்திரமாகும். காந்தாமணி ஓர் அழகிய இளம்பெண். அவள் வயதுக்கு வந்ததும் அவளது தகப்பனார் பணத்தாசை காரணமாக 55 வயதான கிழவனுக்கு மணமுடித்துக் கொடுக்கிறார். காந்தாமணிக்கு அவ்வாழ்க்கையில் சிறிதும் விருப்பமில்லை. எனவே, தான் சிறுவயதில் காதலித்த மலையாள வாலிபனைத் திருமணம் செய்து கொள்கிறாள். அதே கதையில் இன்னொரு கதையும் இடைமிடைந்துள்ளது. சிறுவயதில் காதலித்து, வேறு வேறு இடங்களில் மணமுடித்துக் கொடுக்கப்பட்ட பார்த்தசாரதி ஐயங்காரும் அவருடைய காதலியும் (கணவனை இழந்து மொட்டையடித்து வைதீகம் பேணி வருபவள்) தங்கள் வயதினைச் சிறிதும் பொருட்படுத்தாமல், ரங்கூனுக்கு ஓடிச்சென்று திருமணம் செய்து கொள்கின்றனர். இவ்விரு திருமணங்களும் காதல் மணங்கள் மட்டுமல்ல, கலப்பு மணங்களும் ஆகும். பாரதியாரின் இக்கதை அதிரடியான சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கினது. பாரதியார் இக்கதை மூலமாக வாசகர்களுக்கு மூன்று நிலைப்பாடுகளை உணர்த்த முற்பட்டுள்ளார்.

1. திருமணத்தில் பெண்களின் விருப்பம் மதிக்கப்பட வேண்டும்.

2. திருமணத்திற்கு சாதி சம்பிரதாயங்கள் தேவை இல்லை. ஒன்றுபட்ட மனங்களே தேவை.

3. மேற்கூறிய இரண்டும் மதிக்கப்படாத போது சம்பந்தப்பட்ட ஆண் பெண் இருவரும் தாங்களே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் தவறில்லை என்று எடுத்துரைக்கின்றார்.

இக்கருத்துக்கள் அவருடைய காலத்தில் மிகவும் புரட்சிகரமாக இருந்திருக்கும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. இக்கதை மூலம் பாரதியார் குழந்தை மணம், வயது சென்ற கிழவனுக்கு வயதுக்கு வராத இளம் சிறுமியரை மணமுடிக்கும் பொருந்தா மணம், ஆண் குழந்தை வேண்டி வயதான காலத்தில் ஆடவன் மறுமணம் புரிந்து கொள்ளுதல் போன்ற சமூகக் கொடுமைகளை எடுத்துக்காட்டி, அக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார். அதற்கு, காதல் மற்றும் கலப்பு மணங்களே வேண்டற்பாலது என்று எடுத்துரைக்கின்றார். இக்கதையின் மூலம், பெரியாருக்கு முன்னரே கலப்பு மணத்திற்கு வித்திட்டுள்ளார் பாரதியார்.

கு.ப.ரா. ஒரு வித்தியாசமான கதைசொல்லி. மணிக்கொடி எழுத்தாளர்களுள் ஒருத்தரான இவர், தம் கதைகளில் பாலுணர்வுச் சிக்கல்களைத் துணிச்சலுடன் கையாண்டுள்ளார்.

கு.ப.ரா. வின் 'திரை', ஒரு விதவைப் பெண்ணின் நியாயமான உணர்வுகளை எடுத்துக்காட்டும் சிறுகதையாகும். ஓர் இளம் விதவைப்பெண், தன் தங்கை கணவனிடம் காட்டும் அன்பு, பண்பாட்டு அடிப்படையில் சரியானது இல்லை என்று கருதப்பட்டாலும், அவ்வுணர்வு இயற்கையானது என்பதை மிகத் துணிச்சலோடு படைத்துக் காட்டியுள்ளார், கு.ப.ரா. பெண்ணாகப் பிறந்து விட்டதற்காக, அதுவும் கணவனை இழந்து விட்டதற்காக, அந்த இளம் வயதிலேயே அவளின் உணர்வுகள் சாகடிக்கப்பட வேண்டும் என்பது எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்று பேசும் இக்கதை, கடுமையான பெண்ணடிமைப் பண்பாட்டினை மீறி, சமுதாயத்தின் இரும்புத் திரையைக் கிழிக்கும் விடுதலைக் கதையாக அமைந்துள்ளது. பெண் ஆணைப் போல பாலுணர்வை வெளிப்படுத்தக் கூடாது என்று தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வரும் பண்பாட்டுக் கட்டுமானத்தை உடைத்து, 'பெண்ணும் மனிதப் பிறவிதான்.அவளுக்கும் உணர்ச்சிகள் உண்டு. அவள் தன் உணர்வை வெளிக்காட்டுவதில் தவறில்லை' என்று இக்கதை மூலம் சுட்டிக்காட்டுகிறார் கு ப ரா. அவர், இன்றைய நவீன பெண்ணியவாதிகளின் கருத்தை இக்கதை வழி அன்றே பேசியுள்ளதைக் காண முடிகின்றது.

தமிழ்ச் சிறுகதைகளை உலக அளவிற்கு எடுத்துச் சென்ற பெருமைக்குரியவர் புதுமைப்பித்தன். சொல்ல வந்ததைச் சுற்றி வளைக்காமல், ஆணித்தரமாக எடுத்துரைக்கும் வல்லமை பெற்றவர் அவர். 'பொன்னகரம்' என்ற அவருடைய சிறுகதை, 'கற்பு' என்ற கருத்தாக்கத்தைப் பற்றிப் பேசும் கதையாகும். கற்பு பற்றி தமிழ்ப் பண்பாட்டில் காலம் தோறும் பல கருத்துக்கள் நிலவி வருகின்றன. புராண இதிகாசக் கதைகள், கற்பு என்பது பதிவிரதா தர்மம் என்று கூறுகின்றன. அதாவது 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்பதை எடுத்துரைத்து, அவனுக்காகவே வாழ்வது அல்லது அவன் சொற்படி வாழ்வது என்பது பதிவிரதா தர்மமாகப் பேசப்பட்டது. கற்பு என்பது ஒரு பெண்ணின் உடல் சார்ந்தது என்றும் ஒரு பெண்ணின் மனம் சார்ந்தது என்றும் பல்வேறு கருத்துக்கள் தமிழ் மண்ணில் நிலவி வருகின்றன. இவ்வாறு தெளிவில்லாத கருத்தாக்கமாகக் கற்பு நிலவி வருகின்ற சூழ்நிலையில், அதனைப் பொன்னகரம் கதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்ச் சிறுகதைகளை உலக அளவிற்கு எடுத்துச் சென்ற பெருமைக்குரியவர் புதுமைப்பித்தன். சொல்ல வந்ததைச் சுற்றி வளைக்காமல், ஆணித்தரமாக எடுத்துரைக்கும் வல்லமை பெற்றவர்.**

ஊடாகக் கேள்விக்குள்ளாக்குகிறார் புதுமைப்பித்தன். இக்கதையில், அம்மாளு என்ற பெண், குடித்துவிட்டு அடிபட்டு வந்து கிடக்கும் தன் கணவனுக்குப் பால் கஞ்சி காய்ச்சி தருவதற்காகத் தன் உடலை விலை பேசுகின்றாள். அடிபட்டுக் கிடக்கும் கணவனின் பசி தீர்க்க கையில் காசில்லாத அம்மாளு விலை போகிறாள். கணவனுக்காகத் தன் உடலை விற்கத் துணிந்த அந்தப் பெண்ணை, பதிவிரதை என்று கொண்டாடப் போகிறீர்களா? அல்லது விபச்சாரி என்று தூற்றப் போகிறீர்களா? என்ற வினா தொக்கி நிற்கின்ற வகையில், கதையினை, 'என்னமோ கற்பு கற்பு என்று கதைக்கின்றீர்களே. இதுதான் ஐயா பொன்னகரம்' என்று முடிக்கின்றார். இந்த ஆணாதிக்க சமூகத்தில், ஒழுக்கம் என்பது பெண்களுக்கே உரியது என்ற நோக்கில், கற்பு என்பது பெண்களுக்கே உரியது என்று முத்திரை குத்தப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் மேல் நிலையில் இருக்கும் மக்கள் கற்பு பற்றிப் பேசலாம். அதனை வாழ்க்கையின் ஆதாரப் பிடிப்பாகக் கொண்டு வாழலாம். அவர்கள் பூட்டிய இல்லத்திற்குள் நின்று, பாதுகாப்பான சூழலில் கற்பைப் பற்றிக் கதைக்க முடியும். ஆனால், ஒரு வேளைக் கஞ்சிக்கே வழியின்றி நடுரோட்டில் வாழ்க்கை நடத்தும் நலிவடைந்த சமூகத்தினரிடையே இத்தகைய கற்புக் கோட்பாடெல்லாம் வற்புறுத்தப்பட முடியுமா? என்ற சிந்தனையை இக்கதை முன்வைக்கின்றது. இன்றைக்கு வரைக்கும் இச்சிறுகதை புரட்சிக் கதையாகவே பார்க்கப்படுகிறது. இக்கதையைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பதற்கு அச்சப்படும் சூழலே இன்றும் நிலவி வருகிறது.

கலைஞர் கருணாநிதி, 1956 இல், பகுத்தறிவுச் சிந்தனையோடு படைத்த சிறுகதை 'நளாயினி'. மக்களின் மூடத்தனத்தைச் சுட்டிக் காட்டி, சிந்திக்க வைக்கும் கதை இது. நளாயினி, காலங் காலமாக இந்திய மண்ணில் கற்புக்கரசியாகக் கொண்டாடப்படுகிறாள். அவள், குட்டரோகம் பிடித்த கணவனைக் கூடையில் வைத்து தாசி வீட்டுக்குத் தூக்கிச் செல்லும் பதிபக்தி நிறைந்தவள் என்று போற்றப்படுகிறாள். இந்திய மண்ணில் ஒவ்வொரு பெண்ணும், நளாயினி போன்று பதி பக்தி நிறைந்த பெண்ணாக விளங்க வேண்டும் என்று இந்த ஆணாதிக்க சமூகம் எதிர்பார்க்கின்றது.

கலைஞர், நளாயினி கதையைப் பகுத்தறிவுப் பார்வையோடு அணுகி, இத்தகைய கதைகளின் உண்மைத் தன்மையை, சாதாரண மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் மீட்டுருவாக்கம் செய்துள்ளார். பழமை எண்ணங்களில் ஊறிக் கிடக்கும் தமிழ்ப் பெண்களுக்கு இதன் மூலம் விழிப்புணர்வு ஊட்ட முயன்றுள்ளார். இக்கதையில் நளாயினி தன் கணவர் மௌத்கல்யரைக் கூடையில் சுமந்து, தாசி வீட்டிற்கு எடுத்துச் செல்கிறாள். இதைப் பார்த்த உலகா என்ற அவள் தோழி, அவளைப் பத்தினி என்று கொண்டாடுகிறாள். மற்றொரு தோழியான இதயாவிடம் நளாயினி புலம்புகின்றாள். 'குட்டரோகம் பிடித்த கணவனோடு உறவுகொள்ள விருப்பப்படாததால், அவனைத் தாசி வீட்டிற்குத் தூக்கிச் சென்றேன். குட்டரோகம் உடைய அவன் உடம்பைத் தொட விருப்பப்படாததால் அவனைக் கூடையில் சுமந்து சென்றேன். தோழி உலகா, என்னைப் பத்தினி என்று கொண்டாடினாலும், என் இளமை என்னை வாட்டி வதைக்கின்றது. விரக தாபத்தால் துடிக்கின்றேன்' என்று புலம்புகின்றாள். உண்மையிலேயே நளாயினி பேசியிருந்தால் இப்படித்தான் இருக்கும் என கலைஞர் சுட்டிக்காட்டுகின்றார். அவர், நளாயினியைக் கற்புக்கரசியாகக் காட்டும் கதை ஆணாதிக்கச் சமூகத்தின் கற்பனை உருவாக்கம் என்று அதிரடியாகச் சொல்கிறார். இக்கதையில் சுட்டப்படும் உலகா என்ற தோழி இச்சமூகத்தையும், இதயா என்ற தோழி நளாயினியின் மனச்சாட்சியையும் சுட்டுகின்றன. இக்கதை இலக்கிய வட்டத்தில் இன்றளவும் பேசப்படக்கூடிய பொருண்மையாக விளங்குகின்றது.

புதுமைப்பித்தனுக்குப் பின்னர், சமூக மாற்றத்திற்கான புதிய சிந்தனைகளை அதிகளவு எழுத்தில் வடித்துத் தந்தவர் ஜெயகாந்தன். அவர், பெண்களின் பிரச்சினைகளை, அதற்கான வேர்களை, அதன் அடி ஆழம் வரை சென்று ஆராய்ந்து கதைப்படுத்தியுள்ளார்.

'கற்பு' என்பதன் பெயரால் பெண்கள் காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். உடல் தூய்மை என்பது பெண்களைச் சுற்றி எழுப்பப்பட்ட கண்ணுக்குத் தெரியாத கோட்டையாகும். பெண்கள் மென்மையானவர்கள்; பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்; அவர்கள் கற்பை அதாவது தங்கள் உடல் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பெண்களின் உடல் தூய்மை அவர்களின் அறியாமையினாலும் ஆடவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாத்காரத்தாலும் பறிக்கப்படலாம். ஆனால், அதற்கான தண்டனையைப் பெண்களே அனுபவிக்க வேண்டும். அவளைப் பலாத்காரம் செய்த ஆண் சமூகத்தின் கண்களுக்குக் குற்றவாளியாகத் தெரிவதில்லை. ஆணாதிக்க சமூகத்தில் நிலவும் இந்த ஒருதலைப்பட்ச கற்புக் கோட்பாட்டை நீக்க பாரதியாரும்,

''கற்பு நிலையென்று சொல்ல வந்தால்
இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்''

என்று பாடியுள்ளார். தந்தை பெரியாரோ, 'ஆணுக்குக் கற்புத் தேவையில்லை என்றால் பெண்ணுக்கும் அது வேண்டற் பாடில்லை' என்கிறார். எழுத்தாளர் ஜெயகாந்தன் இதனைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து, ஒரு பெண் அறியாமையால் உடல் தூய்மை இழந்து நிற்கின்றபோது, அதனைப் பெரிது பண்ணி, அவளைச் சமூகத்தின் முன்னால் குற்றவாளியாக நிறுத்தத் தேவையில்லை என்பதனை 'அக்கினிப் பிரவேசம்' கதையின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

16 வயதே நிறைந்த கதையின் நாயகி, பணக்கார இளம் வாலிபனால் கற்பிழந்து நிற்கிறாள். தனக்கு ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்ற அளவில் நிலையை உணர்ந்து கொண்டு, அவள் தன் தாயின் முன் நிற்கின்றாள். அப்போது அவள் தாய் சூழலின் விபரீதம் அறிந்து ஆவேசப்படுகிறாள். பின் பதட்டம் தணிந்து, ''வாழை ஆடினாலும் வாழைக்குத் தான் சேதம், முள் ஆடினாலும் வாழைக்குத் தான் சேதம்'' என்பதைப் புரிந்து கொண்டு, பெண்ணினத்தின் தலையெழுத்தைத் தேய்த்து அழிப்பது போல அவள் மீது தண்ணீரைக் கொட்டினாள். 'எல்லாம் மனசுதான். மனசு சுத்தமாக இருக்கனும். மனதிலே அழுக்கு இருந்தால் தான் இழுக்கு' என்று கூறி, அவளை ராம பாதம் பட்டுப் புனிதமான அகலிகையைப் போல எண்ணி புனிதப்படுத்துகிறார். அறியாப் பேதையைச் சமூக அரக்கனிடம் இருந்து காத்த அத்தாயை, ஜெயகாந்தன் ராமனாகவே உருவகப்படுத்துகிறார்.

இக்கதை, அறுபதுகளில் வெளியான போது, தமிழ்ச் சமூகமே கொந்தளித்து எழுந்தது. ஆணாதிக்க மனப்போக்கு சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளதை இக்கொந்தளிப்பின் மூலம் உணர்ந்துகொண்ட ஜெயகாந்தன், இச்சமூகத்திற்கான தன் பதிலை, மற்றொரு கதையின் மூலமே தந்தார். 'சில நேரங்களில் சில மனிதர்கள்'என்ற நாவலில், பாலியல் பலாத்காரத்திற்கு ஆட்பட்ட கதையின் நாயகி கங்கா, தன் தாயால் இச்சமூகத்திற்கு முன்னால் குற்றவாளியாகக் காட்டிக்கொடுக்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் ஆண் வல்லூறுகளால் துரத்தப்பட்டு, நாளும் நிம்மதி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற அவலத்தைப் படைத்துக் காட்டி, சமூகத்தைச் சிந்திக்க வைத்தார்.

அனுராதா ரமணனின் 'சிறை' மற்றொரு குறிப்பிடத்தகுந்த சிறுகதையாகும். ''அன்று கௌதம முனிவரின் குடிலில் பொழுது புலர்வதற்கு முன் ஏற்பட்ட விபத்து - இன்று பாகீரதிக்கு ஏற்பட்டு விட்டது. நேரமும் காலமும் மனிதர்களும் தான் வேறு ...வேறு. சம்பவம் ஒன்று தான்....'' என்று அக்கதை தொடங்குகின்றது. உண்மைதான். நேரம், காலம், மனிதர்கள் வேறுபட்டாலும், சமூகப்பார்வை எல்லாக் காலகட்டங்களிலும் ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது. பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள். அவள் கற்புடையவளாக இருக்க வேண்டும். அவளுக்கு இளமைக் காலத்தில் தந்தையும், திருமணத்திற்குப் பின் கணவனும், வயதான காலத்தில் மகனும் பாதுகாவலர்கள் என்ற எழுதப்படாத சட்டம் இச்சமூகத்தில் நிலவினாலும், ஒரு பெண் கற்பு இழந்து நிற்கும் போது, அவளைப் பாதுகாக்க வேண்டிய ஆண்கள் மீது, இச்சமூகம் குற்றம் சாட்டுவதில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணைத்தான் குற்றவாளியாக முன்னிறுத்துகிறது. வேத ஆகம காலத்திலிருந்து இன்றுவரை பெண்கள் மீது தான் கற்களும் சொற்களும் வீசி எறியப்படுகின்றன. ஆணாதிக்கச் சமூகத்தின் பச்சோந்தித்தனமான இத்தகைய போக்கை அனுராதா ரமணன், தன் கதையில் வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றார். பெண்களுக்குத் துரோகம் இழைக்கும் ஆணாதிக்க உலகில், பாதிப்புக்குள்ளான பெண் அழுதுகொண்டு நிற்கக்கூடாது. அவள், துணிந்து, அதிரடியான முடிவெடுக்க முன்வர வேண்டும். இனி எத்தனை காலங்கள் தான் பெண்கள் அடிமைகளாக மௌனம் பூண்டு நிற்க இயலும். பெண்ணுக்கும் மனசு உண்டு. அவளுக்கென்று உணர்ச்சிகள் உண்டு. அவளுக்கான மொழி அவளிடம் இருந்து வெளிப்பட வேண்டும். அப்படி வெளிப்பட்டால், அவள் அகலிகையாக இருக்கமாட்டாள். பாகீரதியாகத் தான் இருப்பாள் என்று காட்டியுள்ளார். தன்னை-தன் உடலை-அநியாயமாகச் சூறையாடிய அந்தோணியும், தன்னைக் கதறக் கதற உதறித் தள்ளிவிட்டுச் விட்டு சென்ற கணவன் ரகுபதியும், ஒன்றும் பேசாது நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டு இருக்கும் ஊர் ஜனங்களுக்கும் மத்தியில் அனாதையாக நிற்கும் பாகீரதி-துணிந்து தன்னை இந்நிலைக்கு ஆளாக்கிய அந்தோணியின் வீட்டிலேயே குடியேறுகிறாள். ''என்னைத் தொட்ட பாவத்தை நீயும் அனுபவிக்க வேண்டாமா?'' என்று சாடி, அவன் வீட்டிலேயே வந்து குடித்தனம் செய்கிறாள். அவர்களுக்குள் ஒட்டும் இல்லை. உறவும் இல்லாத வாழ்க்கை. முப்பது வருடங்களுக்கு மேல் இத்தகைய ஊமை வாழ்க்கை நடந்தேறிய பின் அந்தோணி நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகிறான்.

அந்தக் கணத்தில் பாகீரதி ஒரு முடிவு எடுக்கிறாள். வாழ்நாள் முழுக்க இவளை நான் காப்பாற்றுவேன் என்று திருமணம் செய்து அழைத்து வந்து, நடுத்தெருவில் நிறுத்தி விட்டு ஓடிய ரகுபதியைக் காட்டிலும், ஒருமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **புதுமைப்பித்தனுக்குப் பின்னர், சமூக மாற்றத்திற்கான புதிய சிந்தனைகளை அதிகளவு எழுத்தில் வடித்துத் தந்தவர் ஜெயகாந்தன். அவர், பெண்களின் பிரச்சினைகளை, அதற்கான வேர்களை, அதன் அடி ஆழம் வரை சென்று ஆராய்ந்து கதைப்படுத்தியுள்ளார்.**

தொட்ட பாவத்திற்காக, முப்பது வருடங்கள் வீட்டில் தங்க இடம் கொடுத்துப் பாதுகாத்த, அந்தோணிசாமி அவள் மனதில் உயர்ந்து நிற்கிறான். தன்னை விட்டு ஓடியவனின் மனைவியாக இருப்பதைவிட அந்தோணியின் விதவையாக வாழ்வதே மேல் என்று முடிவெடுத்த பாகீரதி, தன் தாலியைக் கழட்டி அந்தோணியின் துப்பாக்கியில் மாட்டிவிட்டு சுருண்டு விழுகிறாள்.

எழுத்தாளர் அனுராதா ரமணன் சமூகத்திற்கு இக்கதையின் மூலம் சாட்டையடி கொடுத்துள்ளார்; 'சாதுமிரண்டால் காடு கொள்ளாது ' என்பது பழைய மொழி. 'பெண் துணிந்தால் இச்சமூகம் தாங்காது' என்ற புது மொழியை உருவாக்கி, தமிழ்ப்பண்பாடு என்று கதைத்துக் கொண்டிருக்கும் சமூகத்திற்கு, பெண்ணின் புதிய பரிமாணத்தை விஸ்வரூபப்படுத்தியுள்ளார்.

உஷா சுப்பிரமணியத்தின் 'வடிகால்' சிறுகதை, தமிழ்ப் பண்பாட்டுக் கட்டுமானத்தைத் தகர்ப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. உஷா சுப்ரமணியம் தீவிரமான எழுத்துக்குச் சொந்தக்காரர். தமிழ் இலக்கியச் சூழலில் பெண் சுதந்திரம் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து எழுதிய பெண் எழுத்தாளர்கள் ஒரு சிலரே. அவர்களில் இவர் முன்னோடி எனலாம். இவர் தனக்குச் சரியெனப் பட்டதை அப்படியே எழுத்தில் வடிப்பவர்; சமூகத்திற்கு அஞ்சி கைகட்டி நிற்பவர் அல்ல இவர். மரபார்ந்த பல சமூகக் கட்டுமானங்களைத் தம் படைப்பின் மூலம் கேள்விக்குள்ளாக்கி உள்ளார்; தனக்கென ஒரு தனிப் பாதையை உருவாக்கிக் கொண்டு இன்றுவரை அதில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு எழுதி வருபவர்; வணிக எழுத்துக்கு விலை போகாதவர். இவரது முதல் சிறுகதை 'வடிகால்' 1976 இல், ஆனந்த விகடனில் முத்திரைக் கதையாக வெளிவந்தது. அக்கால கட்டத்திலேயே இக்கதை பல்வேறு கண்டனங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் ஆளானது. ''உஷாவின் எழுத்துக்களில் ஒரு துணிச்சல் இருக்கும் கருத்துக்களைத் தைரியமாக எடுத்துச் சொல்ல தயங்க மாட்டார்'' என்று ஆனந்த விகடன் மேனாள் ஆசிரியர் மணியன், உஷா சுப்ரமணியன் எழுத்து பற்றிக் கருத்துரைத்துள்ளது இங்கு நோக்கத்தக்கது.

'வடிகால்' சிறுகதையில், ஒரு இள வயது ஆணும் பெண்ணும் நாள்தோறும் ரயில் பயணங்களின் போது சந்தித்துக் காதல் வசப்படுகின்றனர். இருவரும் கீழ் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; அலுவலகத்தில் வேலை பார்த்து, தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றி வருபவர்கள். இருவருக்குமே குடும்பச் சுமைகள் அதிகம். பெற்றோர்களையும் உடன் பிறந்தவர்களையும் பராமரிக்கும் பொறுப்பு உடையவர்கள். இருவருக்கும் திருமணம் என்பது சில பல வருடங்களுக்குச் சாத்தியப்படாது என்றாலும், இருவரும் அவற்றையெல்லாம் புரிந்துகொண்டு காதலித்து வருகின்றனர். திருமணத்தை அவர்கள் பெரிதாக நினைக்கவில்லை. இச்சூழலில் அவர்கள் இருவருடனும் ரயிலில் பயணம் செய்யும் சக தோழி அவர்களுக்கு உதவ முன் வருகிறாள். அவள் திருமணமானவள். அவர்கள் இருவரின் வீட்டுச் சூழலையும் நன்கு அறிந்தவள். திருமணம் பற்றிச் சிறிதும் சிந்தியாது வாழும் அவர்கள் இருவருக்கும் உதவ நினைக்கிறாள். தான் தன் குடும்பத்தோடு ஒரு வாரம் வெளியூர் செல்வதாகக் கூறும் அவள், வீட்டுச் சாவியை அவர்களிடத்துத் தருகிறாள். ''நீங்கள் நான் வரும் வரை என் வீட்டைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று கூறுகிறாள். காதலர்கள் உணர்ச்சிக்கு ஒரு 'வடிகால்' தேவை என்பதை உணர்ந்து அத்தோழி செயல்படுகிறாள்.

இக்கதை, இத்துடன் முடிந்து விடுகிறது. காதலர்கள் தங்கள் தோழியின் இல்லத்திற்குச் சென்றார்களா? இல்லையா? அவர்கள் உணர்ச்சிகளுக்கு வடிகாலாக அது அமைந்ததா? என்பதெல்லாம் சொல்லப்படாத விடயங்களாகக் கதையில் தொக்கி நிற்கின்றன.

இக்கதையில் உஷா சுப்பிரமணியம் துணிந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளார். குடும்பச் சூழலில் திருமணம் செய்து கொள்ள இயலாத இருவரும் தியாகிகளாக வாழ்வதுதான் ஒரே முடிவா? சிந்திக்க வைக்கின்றார். மனித உள்ளங்களின் விரகதாபம் இயற்கையானது. அது தீர்க்கப்பட வேண்டியது... பண்பாட்டுக் கட்டுமானங்களால் அவ்வுணர்வு நசுக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டு விடக்கூடாது. அவர்களின் உணர்ச்சி, சக மனிதர்களால் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட வேண்டும். அதற்கான நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று நினைத்து, அவர், கதையைக் கொண்டு சென்றுள்ளார். 'வடிகால்' கதை தந்த அதிர்வு இன்றுவரை தமிழ்ச் சமூகத்தில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

சமூகக் கொடுமைகளுக்காகக் குரல் கொடுக்கும் மற்றொரு பெண் எழுத்தாளர் ஜோதிர்லதா கிரிஜா. ஆண்களின் அடக்குமுறைக்கு இணங்கி வாழ வேண்டிய சூழலில் பெண்கள் சந்திக்கும் அவலத்தை 'நான் ஒன்றும் நளாயினி இல்லை' என்ற சிறுகதையில் அவர் படைத்துக் காட்டியுள்ளார். ஆண்களின் அதிகாரத்தையும் அடக்குமுறையையும் ஆணவத்தையும் தோலுரித்துக் காட்டும் இது போன்ற கதைகள் சமூகத்திற்கு விழிப்புணர்வு ஊட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எண்பதுகளில் எழுதப்பட்ட அக்கதையின் நாயகி ராஜி. அவளது கணவன் ரமணன். இருவரும் அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள். ரமணனை விட ராஜி அதிகம் சம்பாதிப்பவள். இவர்களுக்கு ஒரு குழந்தை. அக்குழந்தையை, நாள்தோறும் குழந்தைக் காப்பகத்தில் விட்டுவிட்டு இருவரும் வேலைக்குச் செல்கிறார்கள். ஒரு நாள் ராஜிக்கு அலுவலக வேலை காரணமாகக் குழந்தையைக் காப்பகத்திலிருந்து அழைத்து வர முடியாத சூழலில், கணவனிடம் அழைத்து வரச்சொல்லி தொலைபேசியில் வேண்டுகிறாள். அவன் குழந்தையை அழைத்து வந்தானா? இல்லையா? என்ற ராஜியின் சந்தேகத்துடன் கதை தொடங்குகிறது.

"ராஜிக்கு இதயம் தடதடத்துக் கொண்டிருந்தது. ரமணன் குழந்தை காப்பகத்துக்கு மறக்காமல் போய் குழந்தையை எடுத்துக்கொண்டு வருவானா? இல்லாவிட்டால் தனக்கேயுரிய மறதியில் எங்காவது ஊர் சுற்ற போய்விடுவானா? என்ற கவலைதான்".

அன்றும் வழக்கம் போல குழந்தையைக் காப்பகத்திற்குச் சென்று கூட்டி வர மறந்த ரமணனைப் பார்த்து அவள் ஆத்திரம் கொள்கிறாள். நாள் தோறும் வீட்டு வேலைகளில் எந்தவிதமான உதவியும் இல்லாமல் ராஜி தவிக்கின்றாள். ஞாயிற்றுக்கிழமையும் கூட அவளுக்கு ஓய்வில்லை.

"காந்தியைப் பற்றிச் சும்மா கட்டுரை எழுதினால் போதுமா? ஒருநாளாவது கக்கூஸ் கழுவி இருக்கேளா? சமைக்கிறது. முழுக்க முழுக்க நானு... ஞாயிற்றுக்கிழமை துளியளவும் ரெஸ்ட் எடுத்துக்க விடரேளா? இன்னைக்கு அமர்க்களமா இருக்கணும் சமையல்னுடறேள். ஒரு வாரத்திற்கு வேண்டிய துணிகளை நான்தான் துவைக்க" என்று ஆத்திரத்துடன் சோம்பேறிக் கணவனைத் தாளித்து எடுகிறாள்.

"அவனுடைய பசிகள் அனைத்துக்கும் ஈடுகொடுத்துக்கொண்டு, தடுப்பை மறுப்பதால், அடிக்கடி அபார்ஷன் செய்து உடம்பை நாராக்கிக்கொண்டு,.. கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்டுக்கொண்டு... இவ்வளவு செய்கிற தனக்கு இவன் செய்வது என்ன? அதிகாரம்? வெட்டி அதிகாரம்...!"என்று தனக்குள் புலம்புகின்றாள் ராஜி.

ஒவ்வொரு முறையும் கணவன் செய்யும் அதிகாரத்தையும் அராஜகத்தையும் பொறுத்துக் கொண்டு இருக்கும் ராஜி ஒரு நாள் பொறுமையிழந்து காளியாகி விடுகிறாள். கணவன் ரமணனிடம், "உங்களுக்கு ஒரு வாரம் டைம் தரேன். அதுக்குள்ள யோசித்து ஒரு முடிவுக்கு வாங்க. என்னோட வீட்டு வேலை சுமைகளை எந்த அளவுக்கு நீங்கள் பங்கெடுத்துக்கறதா இருக்கப் போகிறீர்கள். இதனைப் பொறுத்துத்தான், நான் டிவோர்ஸ் கேஸ் போடறதும் போடாததும் இருக்கும்" என்று கண்டிப்பாகக் கூறுகிறாள். கணவன் எது செய்தாலும் பொறுத்துக் கொள்ளத் தான் ஒன்றும் நளாயினி இல்லை என்ற கதாநாயகி ராஜியின் குரல், ஒட்டுமொத்த உழைக்கும் பெண்களின் குரலாக இக்கதையில் ஓங்கி ஒலிக்கிறது.

சாகித்ய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் அம்பையின் "வீட்டின் மூலையில் ஒரு சமையலறை"என்ற கதை, தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மற்றுமொரு மைல்கல் ஆகும். பெண்களை அடிமைத்தளையில் வைத்து இருக்கும் காரணிகளுள் சமையல் அறையும் ஒன்று என்பதை இக்கதை முதல்முதலில் அதிரடியாக முன்வைத்தது. தங்களையும் சமையலறையையும் பிரிக்க இயலாது. தாங்கள்தான் அடுக்களை அரசி.

**உஷா சுப்பிரமணியத்தின் 'வடிகால்' சிறுகதை, தமிழ்ப் பண்பாட்டுக் கட்டுமானத்தைத் தகர்ப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. உஷா சுப்ரமணியம் தீவிரமான எழுத்துக்குச் சொந்தக்காரரர். தமிழ் இலக்கியச் சூழலில் பெண் சுதந்திரம் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து எழுதிய பெண் எழுத்தாளர்கள் ஒரு சிலரே. அவர்களில் இவர் முன்னோடி எனலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமையல் அறை இருட்டில் உழன்று கொண்டே இருப்பதால் பெண்களின் அறிவு மழுங்கடிக்கப்பட்டு விட்டது என்ற அதிரடியான உண்மையையும் சகபெண்களுக்கு இக்கதையின் மூலம் உணர்த்தியுள்ளார் எழுத்தாளர் அம்பை.**

தாங்கள் சமையலறையில் எடுக்கும் அதிகாரம் தங்களின் ஒட்டுமொத்த குடும்ப அதிகாரத்திற்கும் துணைபோகும் என்றெல்லாம் பெண்கள் அறியாமை உலகில் மூழ்கிக் கிடந்தனர். இதனை, "ஒளியற்ற, ஜன்னல் குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து, கடலில் வசிக்கும் ஆக்டபஸ் ஜந்துவின் எண்கால்போல் ஆதிக்கக்கரங்கள் நீண்டு வளைத்துப்போட்டன. கால்கள் இறுக இறுகக் கட்டுண்டு கிடந்தனர் ஆனந்தமாக. அவை இடுப்பை இறுக்கினால் ஒட்டியாணம் என்றும், காலைச் சுற்றினால் கொலுசு என்றும், தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர் பெண்கள். நாலாபுறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்துகொண்டு அதை ராஜ்யம் என்று நினைத்து அரசோச்சினர். இன்று மட்டன் புலவு, நாளை பூரி மசாலா என்று பூமியைத் திருப்பிப் போடும் முடிவுகளை எடுத்தனர்." என்று காட்டுவதன் மூலம், பெண்களுக்கு வீட்டின் கொத்துச் சாவியும் அடுக்களை மேலாண்மையும் உண்மையான அதிகாரம் ஆகாது. அது 'பேடி அதிகாரம்' என்று சுட்டிக் காட்டியுள்ளார். 'அடுக்களை அரசி' என்பது முள்கிரீடம். சமையல் அறையில் பெண்களைக் காலங் காலமாக முடக்கிப் போட்டு, அவர்களை அதிலேயே நாளெல்லாம் உழன்று கொண்டிருக்க இந்த ஆணாதிக்க சமூகம் ஏற்படுத்திய ஏற்பாடு என்பதையும் உணர்த்தியுள்ளார்.

சமையல் அறை இருட்டில் உழன்று கொண்டே இருப்பதால் பெண்களின் அறிவு மழுங்கடிக்கப்பட்டு விட்டது என்ற அதிரடியான உண்மையையும் சகபெண்களுக்கு இக்கதையின் மூலம் உணர்த்தியுள்ளார் எழுத்தாளர் அம்பை.

இக்கதை பெண்களை மட்டுமல்ல ஆண்களையும் அதிரடியாகப் புரட்டிப்போட்டது எனலாம். ஆணாதிக்கச் சமூகம், சமையலறையில் பெண்களை முடக்கிப் போடுவதன் மூலம், அவர்களின் அறிவைச் சீர்குலைத்து, ஒரு சிறு முன்னேற்றமும் இல்லாமல் செய்து விட்டது என்ற பேருண்மையை உலகிற்கு இக்கதை படம் போட்டுக் காட்டி விட்டது. பெண்களின் உழைப்பு சமையலறையில் சுரண்டப்படுகிறது என்பதை, "நாலு நாட்களுக்கு ஒரு முறை ஸ்டவ் திரியை இழுத்துவிட வேண்டும்; மண்ணெண்ணெய் கிடைக்கும்போது வாங்க வேண்டும்; மழைக்காலத்தின் கவலை அரிசி, பருப்பில் பூச்சி; மாங்காய்க் காலத்தில் ஊறுகாய்; வெய்யில் காலத்தில் அப்பளம்; பழங்கள் வரும் காலத்தை ஒட்டி ஷர்பத், ஜூஸ், ஜாம்; பழைய துணிகள் போட்டுப் பாத்திரம்; சமையலறை முற்றத்துக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சுண்ணாம்பு; மாதவிடாய் தள்ளிப் போயிற்றோ என்று கவலை; தள்ளிப் போகாவிட்டால் கவலை என்று மண்டையெல்லாம் பூச்சி, ஊறுகாய், சுண்ணாம்பு என்று அடைத்திருக்காவிட்டால்.

மூளையின் இழுப்பறைகளை இவற்றை எல்லாம் போட்டு நிரப்பியிருக்காவிட்டால், அவர்களும் அறிவார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பார்கள் என்பதை, "ஒருவேளை அந்த ஆப்பிள் விழுவதைப் பார்த்திருக்கலாம்; தண்ணீர் கெட்டிலின் மூக்கு நுனி ஆவியைப் பார்த்திருக்கலாம்; புதுக் கண்டங்களைக் கண்டுபிடித்திருக்கலாம். கைலாய பர்வதத்தில் அமர்ந்து காவியம் எழுதியிருக்கலாம். குகைகளுக்கு ஓவியம் தீட்டியிருக்கலாம். பறந்திருக்கலாம். போர்கள், சிறை, தூக்குமரங்கள், ரஸாயன யுத்தங்கள் இல்லாத உலகம் உண்டாக்கியிருக்கலாம்" என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் அதிகமாகப் புழங்கும் சமையலறை சரியான பராமரிப்பு இன்றி, வெளிச்சமின்றி, புகைமண்டி, இருட்டு அடைந்த நிலையில் காட்சியளிக்கின்றன. கரப்பான் பூச்சிகளோடு காணப்படும் சமையலறை, பெண்களைச் சுகாதார அடிப்படையில் மிகவும் பிற்படுத்திவிடுகின்றது என்ற விடயத்தையும் இக்கதை எடுத்துக்காட்டி, வாசகர்களிடையே ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இக்கதை சமூகத்தில் ஒரு புரட்சிகரமான சிந்தனை கருத்தாக்கத்தை விதைத்தது என்றாலும், அதைவிட முக்கியமாக ஒவ்வொரு பெண்ணிடமும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தாங்கள் கல்வி கற்று முன்னேற வேண்டும். இச்சமூகத்தில், ஆண்களைப் போல் தாங்களும் சாதனைகள் செய்ய வேண்டும். தங்கள் வெளி அடுக்களை அல்ல. அது பிரபஞ்ச வெளியாக அமைய வேண்டும் என்ற கருத்தாக்கத்தை அவர்களுக்குள் ஆழமாக விதைத்தது. பெண்கள் தங்களைச் சமூகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜைகளாக உருவாக்கிக்கொள்ள இக்கதை மிகப் பெரும் காரணியாகத் துணைநின்றது எனலாம்.

எழுத்தாளர் பாமாவின் 'பொன்னுத்தாயி' சிறுகதை மற்றுமொரு அதிரடியான கதையாகும். மரபார்ந்த நம்பிக்கைகளையும் கட்டுமானங்களையும் உடைத்தெறிந்து வாழ்வியலின் எதார்த்தத்தை உணர்த்தும் இச்சிறுகதை பழமைவாதிகளுக்கு அதிர்ச்சியூட்டும் படைப்பாகும்.

இக்கதையின் நாயகி பொன்னுத்தாயி. அவள் மூக்காண்டி என்பவனைத் திருமணம் செய்து, நான்கு குழந்தைகளுக்குத் தாயாகிறாள். அவன் சம்பாதித்ததைத் தானே சாப்பிட்டும் குடித்தும் அழிக்கின்றான். பெண்டாட்டி பிள்ளைகளுக்குக் கொடுத்து உதவுவது இல்லை. வேலைக்குச் செல்லாத நாட்களில் பொன்னுத்தாயி சம்பாதித்து வரும் பணத்தை அடித்துப் பிடுங்கி அதனையும் குடித்து அழித்து விடுவான். அவன் அட்டூழியம் தாங்கமுடியாத பொன்னுத்தாயி, பால்குடி மறக்காத கடைசிக் குழந்தையை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு மற்ற மூன்றையும் மூக்காண்டியிடம் ஒப்படைத்துவிட்டு, தன் தாய் வீட்டுக்கு வந்து விடுகிறாள். பால் குடி மறக்கடித்த பின்னர், தான் தூக்கி வந்த குழந்தையையும் புருசனிடம் கொண்டு விட்டு விட்டு திரும்பி வந்து, பொருள் விற்றுப் பிழைக்கின்றாள். குழந்தைகளைத் தனியாக வளர்க்க முடியாத மூக்காண்டி, பொன்னுத்தாயைத் திரும்ப வீட்டிற்கு அழைக்கின்றான். அவள் வர மறுக்க, அவளை ரத்தம் வரும் வரைக்கும் அடித்து நொறுக்குகின்றான்.அவளும், தலையில் ரத்தம் வழிய வழிய காவல் நிலையத்திற்குச் சென்று புருஷன் அடித்து காயமாக்கிய கொடுமையைப் பற்றி பிராது கொடுக்கிறாள். காவலர்கள் மூக்காண்டியை அடித்து இழுத்துவந்து காவலில் வைக்கின்றனர்.

வீட்டுக்கு வந்த பொன்னுத்தாயிடம், அவள் தாய், பெற்ற குழந்தைகளுக்காகவாவது, அவனோடு சேர்ந்து வாழ வற்புறுத்துகிறாள். அதை மறுத்த பொன்னுத்தாயி, அவன் கட்டிய தாலிக் கயிற்றினை அறுத்து எறிந்துவிட்டு, தாலியினை எடுத்து விற்று விட்டு, அப்பணத்தில் பொருள் வாங்கி ஒரு சிறிய கடையினைத் தொடங்கி வாழ்கிறாள். ஊர் பெண்களும் மற்றவர்களும் அவள் செய்கையைப் பற்றிப் பலவிதமாகக் கருத்துரைக்க அதை எல்லாம் சிறிதும் பொருட்படுத்தாது, 'அவனிடத்துப் பெற்ற பிள்ளைகள் அவனுடையவை. அவனும் அக்குழந்தைகளைக் காப்பாற்ற கடமைப்பட்டவன்' என்று அவர்களுக்குப் பதில் கூறிவிட்டுத் தன் வேலையைத் தான் பார்க்கிறாள். இக்கதை, பொன்னுத்தாயி தாலியை அறுத்து எறிவதும், பெற்ற குழந்தைகளைக் கட்டியவனிடமே விட்டு விட்டு வருவதும், பதி பக்தி, தாய்மை என்று காலங்காலமாக போற்றப்பட்டு வந்த புனிதக் கட்டுமானங்களை உடைத்தெறிகின்றது. நாளும் குடித்துவிட்டு வந்து அடிதடியில் ஈடுபடும் கணவனோடு ஒத்து வாழ வேண்டுமென்று வற்புறுத்தும் பெற்றோர்களுக்கு இக்கதை ஒரு மரண அடியாக அமைந்துள்ளது எனலாம். பொன்னுத்தாயி போன்று, கணவனால் துன்பத்திற்கு ஆளாகும் மற்றப் பெண்களும் இத்தகைய அதிரடியான முடிவை எடுக்கும் போது மட்டுமே, ஆணாதிக்க அராஜகங்களை ஒழிக்க இயலும்.

## முடிவுரை

மகாகவி பாரதியார் தொடங்கி எழுத்தாளர் பாமா வரை, தமிழ்ச் சமூகத்தில் குறிப்பாக ஆணாதிக்கச் சமூகத்தில் கண்மூடித்தனமாகப் பின்பற்றப்பட்டு வந்த பண்பாட்டுக் கட்டுமானங்களைத் தங்கள் படைப்புகளால் தகர்த்து எறிந்துள்ளனர். பலவித தளங்களில், பலவிதமான அடிமைத் தளைகளில் சிக்குண்டு, தாங்கள் சிக்குண்டிருக்கிறோம் என்பதை அறியாமலேயே வாழும் பெண்களுக்கு, இத்தகைய எழுத்துக்கள் வரப்பிரசாதமாக அமைந்துள்ளன.

கற்பு, பதிவிரதா தர்மம், பலதார மணம், பொருந்தா மணம், திருமணத்தின் போது பெண்களின் விருப்பு வெறுப்புகளை அறியாமல் செயல்படுவது, கணவனை இழந்த பெண்களைக் கைம்மைக் கோலம் பூண வைத்து அவர்களின் கோலத்தைச் சிதைத்தல், இளம் கன்னி விதவைகளின் மனதில் எழும் இயற்கையான உணர்ச்சிகளை மதிக்காமை, பெண்களுக்குக் கல்வி மறுத்தல், சமையலறையே அவர்களது இடம் என்று அவர்கள் மனதில் தகவமைத்து, அவர்களின் மூளையை மழுங்கடித்தல், வேலைக்குப் போகும் பெண்கள் எதிர்கொள்ளும் பங்கு நிலை மோதல்களும், கணவனிடத்து எதிர்கொள்ளும் அதிகார அடக்குமுறைகளும் என்று பெண்களைப் பிற்படுத்தும் சமூகக் காரணிகளை அறிந்து அவற்றைக் கதைக்களமாக்கி, பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முற்பட்டுள்ளனர் மேற்கூறிய எழுத்தாளர்கள்.

சமூகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆழ வேரூன்றியிருந்த பண்பாட்டுக் கட்டுகளைத் தகர்க்க முற்பட்டபோது, அவர்கள் பலவிதமான எதிர்ப்புக்களையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டனர். சில எழுத்தாளர்கள் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. சில எழுத்தாளர்கள் அதற்குத் தங்கள் எழுத்துக்களின் மூலமே எதிர்வினை ஆற்றியுள்ளனர். சிலருடைய எழுத்துக்கள் மேலும் பல எழுத்தாளர்களை அக்கருத்து குறித்து எழுத வைத்தன. இத்தகைய மறுமலர்ச்சி சிறுகதைகள் தமிழ் இலக்கிய உலகிற்குக் கிடைத்த கருவூலங்களாகக் காலத்திற்கும் போற்றப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை




# தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் ஒரு மடைமாற்றம்

## அ.முத்துலிங்கத்தின் தன்கதை உரைப்பிய உத்திகளின் உன்னதம் பற்றிய ஒரு பார்வை


அமுது ஜோசேப் சந்திரகாந்தன்


தன்கதைகளின் வாய்மொழி உரைப்புடனேயே சிறுகதைகளின் உரைப்பியல் வளர்ச்சியும் கதைக்கேட்கும் ஆர்வமும் கதை சொல்லும் பாங்குகளும் தொன்றுதொட்டு பல்லின பன்மொழி வழக்கில் வலம் வந்தவை என்பது பொதுவான கருத்து.

தமிழிலும் ஏனைய தென்னாசிய மொழிகளிலும் பழைய புராணக் கதைகள் முதல் மணிமேகலை போன்ற பெருங்காப்பியங்கள் வரை இலக்கிய உரைப்புகளினதும் நீண்ட தொடர்பாடல்களினதும் மென்மையான இடைச் செருகல்களாகவும் கிளைக் கதைகளாகவும் உட்புகுத்தப்பட்ட ஏராளமான கதைத் துணுக்குகள் இதற்கு சான்றாகும்.



இலக்கியங்களின் பிழிசாறாகப் பெறப்பட்ட இலக்கண மரபுகள் மொழிவழக்குகளின் பாவனைப் பாங்குகளையும் ஆக்கப் படைப்புகளையும் ஆற்றுப்படுத்த ஆரம்பித்தபோது அவை ஆக்க இலக்கியங்களின் வரம்புகளை படச்சட்டம் போன்று வரையறை செய்யத் தொடங்கின. இதன் பரிணாம வரையறைகளுள் ஒன்று சிறுகதைகள் பற்றிய பரவலான சில வரைவிலக்கணங்களாகும்.

நோபல் பரிசு பெற்ற வங்காளப் பெருங்கவி இரவீந்திரநாத் தாகூர் (1861-1941), அவரது தாய் மொழியில் எழுதிய 'பர்சயபான்' (மழையுடன் வாழ்தல்) என்ற கவிதையில் சிறுகதையைப் பற்றி இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார் "மகிழ்ச்சியும் துயரமும் கலந்த நாளந்த வாழ்க்கையின் சாதாரண நிகழ்வுகள், எமது மறதிப் பெட்டகத்திலிருந்து விலகி விடாத சில சோக சரங்கள், பெரும் விளக்கங்களைத் தவிர்த்து பல நிகழ்வுகளுக்குள் சிக்கிவிடாமலும், தத்துவங்களுக்குள் தத்தளிக்காமலும், வாசிப்பு முடிந்தாலும் கதை இன்னும் முடிவடையவில்லை என்ற நல்லுணர்வு மட்டும் எஞ்சிருக்கும் நிலை." இதுவே சிறுகதையின் உள்ளடக்கம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ் மிக்க அமெரிக்க சிறுகதை எழுத்தாளரும் கவிஞருமான எட்கார் ஆலன் போ அவர்களின் "ஆக்கப்படைப்பின் தத்துவார்த்தங்கள் எனும் கட்டுரையில் "சிறுகதை என்பது ஒரு நாவலை விட நீளம் குறைவான உரைநடையிலான கற்பனைப் படைப்பு, ஒரு சிறுகதையை அரை மணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் வரை ஒரே அமர்வில் வாசிக்க வேண்டும்" என்று கூறினார். அவரது வரையறைகளில் சிறுகதைகளின் யதார்த்தமான நனவுலகம் பற்றி அதிக அழுத்தம் தரப்படவில்லை.

சிறுகதை ஓர் விடயம் பற்றியும் ஒரு நிகழ்வு பற்றியும் அமைதல் வேண்டும் என்று வாதம் செய்பவரும் உண்டு. இந்த விவாதங்களை எல்லாம் தாண்டி தமிழ்ச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை உலகம் அவற்றின் எண்ணுக் கணக்கிலும் எண்ணக்கணக்கிலும் வீறு நடை போட்டு எழுந்து வளர்ந்துள்ளது.

இந்த வளர்ச்சிகளின் இன்றைய பின்புலத்தில் தமிழ் உலகம் முன்வரிசையில் வைத்து போற்றி வரும் படைப்பாளரும் கதாசிரியருமான திரு.அ.முத்துலிங்கம் அவர்களின் அற்புதமான ஆக்கப் படையல்கள் சிறுகதை இலக்கியத்திற்கு ஒரு புதிய இலக்கணப் பாதையை அகலமாகத் திறந்து வழி காட்டியுள்ளதென்பதே எனது கருத்தாகும். அடிப்படையில் அவர் ஒரு மடைமாற்றியாகவும் தமிழ்ச் சிறுகதையுலகில் ஒரு புதிய பாதையில் முன்னோடியாகவும் விளங்குகிறார்.

தன்கதையின் செழுமையான உயிர்க்கூறுகள் இயல்பாகவே அவரது கதைகளையும், கட்டுரைகளையும், ஊடுருவி நிற்பதை அவரது வாசகர்கள் இலகுவாகவே இனம் கண்டு கொள்வர். இதுவே அவர் சிறுகதை இலக்கியத்துக்கு திறந்து வைத்த புதிய பாதை. இது ஒரு முக்கியமான மடைதிறப்பு அல்லது மடைமாற்றம். ஒரு வளர் மரபின் புதிய கட்டுடைப்பு. காத்திரமான இலக்கிய இலக்கணத்தின் புதுவழி.

முத்துலிங்கத்தின் கதைகள் வரலாறு, பண்பாடு, மொழி வழக்காறு, வாழ்வியல் தூலங்கள், மரபுப் போக்குகள், நெடுங்காலமாக கோத்திரங்கள், குலங்களுக்குள் பேணப்படும் கலையம்சங்கள் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை கலையழகு நிறைந்த ஓர் சுவர் ஓவியம் போல் வண்ண ஒளிர்வாக வாசகனின் மனக்கண்முன் குத்திட்டு நிற்கச் செய்கின்றன.

அவரது தன்கதை உரைப்பிய உத்திகளுள் முனைப்பாக விளங்குவது கவர்ச்சியான அவரது வட்டார மொழிவழக்குக் கையாள்கையாகும். அவர் எழுதிய "அக்கா" எனும் முதலாவது சிறுகதை துவக்கம் "சிலம்பு செல்லப்பா", "அம்மாவின் பாவாடை" "தாத்தா விட்டுபோன தட்டச்சு மெசின்", "தில்லை அம்பலப் பிள்ளையார் கோவில்" முதலான பல கதைகளில் காணமுடிகிறது.

இந்த யாழ்ப்பாண வட்டார மொழிவழக்குப் பிரயோகம் மெதுவாக மறைந்தும் அழிந்தும் வரும் ஒரு காலத்தினதும் இறுக்கமான சமூகத்தினதும் பன்முக வரலாற்றுத் தூலங்களை இலக்கியப் பண்பாட்டின் தனித்துவத் தன்மைகளுடன் பல்வேறு பாத்திரங்களூடாகப் பதிகை செய்துவிடுகின்றது.

குடும்ப, சமூக, சமயவயப்பட்ட பல்லுறவுகளினூடாக உயர்ந்தும் விழுந்தும் எழுந்து நடந்த பல ஊர்களின், சிறு நகரங்களின் வரையப்படாத வரலாற்றை இக்கதைகள் மென்மையாக பதிகை செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது சிறுகதைகளில், புனைவுகள் போன்ற தன்கதைகளும் தன்கதை போன்ற புனைவுகள் வழியாகவும் மேற்கிளம்பும் பல முக்கிய கூறுகளுள் பாத்திரவடிப்பு, மொழிவழக்கு, முரண்பாடு, கதையின் கருப்பொருள், நிகழ்நினைவு போன்றவை முக்கியம் பெறுகின்றன.

கற்பனையான சுயசரிதைகளைத் தவிர்த்து கதாசிரியர் அனுபவத்தை கதைவழியாக உரைக்கும்போது அதன் உண்மைத் தன்மை வாசகனை கதையினுள் ஈர்க்கின்றது.

தன்கதைப் போக்கிலான சிறுகதைகள் ஆபத்தும் கடினமுமானவை. ஒரு சிலரைப் பாதுகாக்க கற்பனையாக்கப்பட்ட பிரிவுகளுடன் நினைவுகள் மறைக்கப்படல் அல்லது சில இடைவெளிகளை எதேச்சையாக நிரப்புதல் மற்றும் அதிகபட்ச கதை விளைவுகளுக்காக, நிகழ்வுகளை மறுசீரமைத்தல் போன்றவற்றை இவரது கதைகளில் அறவே காணமுடியாது. உண்மையை அப்படியே உரைப்பதால் இவரது தன்சரிதைக் கதைகள் மிக்க வலுப்பெறுகின்றன.

ஒரு பொதுவான உரையாடலில் அல்லது சொல்லாடலில் ஒருவரின் சொற்பொருளை மற்றவர் எதிர்த்து மாற்றுக் கருத்தினை முன் வைக்கலாம். கேட்பவரின் புரிதல் தவறானதென்றால் மீண்டும் பேசியவர் அதனை விளக்கி உரைக்கலாம். இங்கு புரிந்து கொள்ளலும், விளக்கியுரைப்பதும் உரையாடலின் இயங்கு தளமாகத் தொழிற்படுகின்றன.

ஆனால் எழுத்து என்பது மனித சிந்தனைப் புலத்தின் வேறு ஒரு தளத்தில் செயற்படுவதாகும். எழுதுபவர் தானே தனக்குள் தனியுரையாடலை நிகழ்த்திப்பார்த்து, கருத்துப்பரிமாற்றத்தையும், வாதப் பிரதி வாதங்களையும், வளைவுகள், புள்ளிகள், நேர்கோடுகள் எனும் உயிரற்ற குறியீடுகளினூடாக ஆக்கி வாசகர் அதற்கு உயிர் தரும் வகையில் அளிக்கின்றார். எழுத்து எழுத்தாளனிடமிருந்து அந்நியப்படும் நிலையிலேயே வாசகனைச் சென்றடைகின்றது.

உயிரற்ற குறியீடுகளான வெறும் எழுத்துகள் வாசகரின் மனதிலே மீளுயிர்ப்புப் பெறுகின்றன. உரையாடல் எனும் நிகழ்வு, பேசுமை, கேட்பியம் என்ற பாங்கில் இருவருக்கிடையில் இடம்பெறுதல் போன்று, வாசிப்பு எனும் நிகழ்வு வாசகனுக்கும் அவன் வாசிக்கும் இலக்கியப் படைப்பிற்குமான ஒரு உரையாடல் எனும் புது நிகழ்வாகின்றது. இந்த உரையாடலை வெறும் கனவுலகின் கற்பனைக் காட்சிகளாகவல்லாது நனவுலகில் நாள் தோறும் நாம் சந்திக்கும் சமர் புரியும் உயிருள்ள ஜீவராசிகளாக நடமாடச் செய்வதே கதாசிரியனின் மகத்தான சவால். இதில் குறைவின்றி நிறைவுடன் வெற்றிபெற்றுள்ள பலநூறு சிறுகதைகளைப் படைத்துத் தந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உரையாடல் உலகில் வலம் வருபவர் அ.முத்துலிங்கம். உயிரற்ற எழுத்திற்கு மீண்டும் உயிர் தரும் வாசகனுடன் எழுதியவரிடமிருந்து அந்நியப்பட்ட நிலையில் இப்பொழுது எழுத்து ஒரு புதிய உரையாடல் உறவை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு வாசகனிடத்திலும் எழுத்து மீட்டுயிர்ப்பு அடைகின்றது.

மறுபுறத்தில் எழுத்தும் எழுத்தின் பிரயோகமும் சமூகவயப்படுத்தப்பட்ட காலம் முதல் பொருண்மியமும், அரசியல் சட்டங்கள், கட்டளைகளும், வரலாறும், அறவியல் நியமங்களும், நீதிக் கோட்பாடுகளும், கவிதைகளும், காப்பியங்களும், சரிதைகளும், கடிதங்களும், கதைகளும், புனைவுகளும் நாவல்களும் காலத்தை விஞ்சி நிலைபெறும் ஒரு புதிய மொழித் தொடர்ச்சியைப் பெற்றன.

பேச்சு இல்லாத நிலையில் நேரடியாகவே எழுத்து உருவம் பெறுதலால் அது பேச்சு அல்லது உரையாடலின் மறு உருவமாகின்றது.

உரைப்பியலின் தத்துவார்த்த நெறிகள் பற்றி



சிந்தனையாழம் மிக்க பல நூல்களைத் தொடர்ச்சியாக எழுதி வந்தவர் சென்ற நூற்றாண்டின் புகழ்மிக்க இலக்கிய மொழிசார் மெய்யியலாளர் போல் றிக்கர் என்பார். அவரது காலமும் கதையும் (உரைப்பும்) (*Time and Narrative*) என்ற தலைப்பில் வெளியான மூன்று தொகுதிகள் அடங்கிய பெரு நூல்கள் அவருடைய இறுதி ஆக்கங்களாகும். அவை பற்றி சில குறிப்புகள் கூறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பனையான சுயசரிதைகளைத் தவிர்த்து கதாசிரியர் அனுபவத்தை கதைவழியாக உரைக்கும்போது அதன் உண்மைத் தன்மை வாசகனை கதையினுள் ஈர்க்கின்றது.**

இங்கு பொருத்தமானது என எண்ணுகிறேன்.

வரலாற்றில் காலம் பற்றிய எண்ணக்கருவின் வகிபாகம் எத்தகையது என்று விளக்கும் போது இலக்கியத்தில் மூன்று காலங்களின் யதார்த்தப் பண்புடைத்தான பிணைப்பு உள்ளது என அவர் விளக்குகின்றார். அவற்றில் இரண்டைப் பற்றி இங்கு எடுத்துக் கூறுதல் பயனுள்ளது.

ஒன்று அண்டகோளத்தின் தொடர்ச்சியான அலகுமுறைப்பட்ட கால ஓட்டம். இங்கு இடைவிடாத மாற்றங்கள் இயல்பாக என்றுமே நிகழ்பவை.

மற்றையது நாம் இவ்வுலகில் வாழ்கின்ற காலம். தற்போது இங்கு, நிகழ்பவையை சுட்டும் தற்காலம். இத்தற்காலத்தில் சில கணங்கள் ஏனைய நேரங்களை விட மிக அர்த்தமுள்ளவையாக எம்மால் மனதிலும் நினைவிலும் பதியப்படுகின்றன. உதாரணமாக திருமண நாள், ஒரு பிள்ளையின் பிறப்பின் நாள், மிக அன்பான ஒருவரின் இறப்பின் கணம் போன்றவை. ஏனைய நாட்களை, கணங்களை விட இவை முக்கியமானவையாகக் கணிக்கப்படுகின்றன.

அண்ட உலகத்தின் அளவிட முடியாத காலக் கணிப்பில் எமது சிறிய கணங்கள் பெறுமதி அற்றவை போல் தோன்றினாலும், இந்த சிறிய கணங்களில் தான் எமது வாழ்க்கையின் அர்த்தம் புலப்படுகின்றது. இதனால்தான் ஒரு படைப்பாளியினால் இரண்டு மணித்தியாலங்களில் வாசிக்கக் கூடிய இருநூறு பக்க நாவலில் ஒரு வாசகனை அறுபது வருட காலம் நீளும் கதை நிகழ்வுகளுக்கூடாக கால நேரம் இணைந்த அனுபவங்களுக்கப்பால் முன்நகர்த்திச் செல்ல முடிகின்றது.

முத்துலிங்கத்தின் கதைகளின் உரைபியப்பாங்கு, கூரிய உளி கொண்டு ஒரு சிற்பத்தைச் செதுக்குதல் போன்று அமைந்திருக்கும். இத்தகைய கதை உரைப்புமுறை, முதல் வசனத்தில் துவங்கி கதையின் இறுதி வார்த்தை வரை வசமான ஈடுபாட்டுடன் வாசகரை உள்ளிளுக்கும் வலிமை கொண்டது. இதுவே ஒரு எழுத்தாளனைப் படைப்பாற்ல் மிக்க கதாசிரியன் எனும் உயர் நிலைக்கு உந்தி விடுகின்றது.
இங்குதான் முத்துலிங்கத்தின் கதைகளினூடான காலப் பதிகை முக்கியத்துவம் பெறுகின்றது. மொழியினுள் காலம் சிலைபோல் வடிக்கப்படுகின்றது. மண்ணின் வாசனைமிக்க வரலாறு எழுத்தோடு ஒட்டிச் சேர்ந்து விடுகின்றது.

''மண்ணைச் சுமந்த மொழி'' எனும் தலைப்பில் முத்துலிங்கம் அவர்களின் பல்துறைப் புலமையும், கலை-இலக்கிய ஆளுமையும் பற்றி அண்மையில் நான் ஒரு கட்டுரை வரைந்திருந்தேன் அதில் அவரது இலக்கிய ஆளுமையைச் செதுக்கிய பல ஆட்களையும், அறிவியல் துறைகளையும், இலக்கிய குடும்ப சூழலையும் பற்றி நான் விவரித்திருக்குமாற்றினை இங்கு மீண்டும் அழுத்திக் கூற விரும்புகின்றேன்.

எமது மறதிப் பெட்டகத்திலிருந்து விலகி விடாத சில சோக சரங்களை மீட்டுத் தருதல் சிறுகதையின் உயிருள்ள அம்சம் என இரவீந்திரநாத் தாகூர் கூறியதுபோல் முத்துலிங்கத்தின் கதைகளில் அவரது இளமைக்காலத்தில் மாட்டு வண்டியில் செய்த திருவிழாப் பயணம், தனது கண்முன்னே தன் தம்பியின் திடீர் அகால மரணம், பள்ளிப்பருவத்தே மாணவர்கள் மீது அலைபாயும் பாச உணர்வுகள், வீர தீரங்கள், இன்னும் வாலிப வயதின் பலமான, இயல்பான பல அனுபவங்களையும், அவர் கால ஓட்டங்களைக் கருதியல்லாமல் நினைவுகளை மீட்டி நிலை நிறுத்துகின்றார்.

இவற்றின் உளவியல், சமூகவியல் தன்மைகளை பல எடுத்துக்காட்டுகளுடன் ''மண்ணைச் சுமந்த மொழி'' எனும் எனது கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளேன். தான் வாழ்ந்த ஊரின் சிறிய பெரிய தெருக்களையும் ஒற்றையடிப் பாதைகள் மதில்கள் , மரங்கள் செடிகள் என யாழ்ப்பாணத்தின் இயற்கை வளமும் பழம் பெரும் ஊர்களின் வேர்களும், மரபுக் கட்டமைவுகளும் செழிப்பான முகங்களும், கருகிச் சுருங்கி, கண் முன்னே சிதைந்து அழிந்து வரும் இக்காலத்தில் இத்தகைய நிழற்படம் போன்ற அவரது எழுத்தோவியப் பிரதிமைகள் நிஜத்தன்மை மிக்க தன்சரிதைக் கதைகள், கட்டுரைகள் ஒரு பெரும் வரலாற்று ஆவணமாகவே என்றும் விளங்கும் என்பதையும் அதில் விபரித்துள்ளேன்.
நீண்ட காலம் தொடர்ந்த கொடிய போரினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வுகளாலும், மெல்ல மெல்ல மறந்தும், மறைந்தும் வரும் எமது ஈழத் தாயகத்தின் வரலாற்றுத் தூலங்களை வாசகர் முன் தூக்கி நிறுத்தும் வல்லமை அவரது மென்மையான யதார்த்தமான வசன விபரிப்புகளினூடாக வெளிவரும்போது அது வாசகரை மங்கிப் போகும் வரலாற்றின் வாசல் படிக்கு மீண்டும் மீண்டும் வரவழைக்கும். இது அவரது எழுத்தின் தனித்துவ வலிமையும் கலைத்துவ வல்லமையுமாகும்.

ஆகையினாலேதான் "தமிழ் மொழிக்கு ஒரு நாடில்லை" எனும் தலைப்பில் 2013 இல் வெளிவந்த முத்துலிங்கத்தின் நேர்காணல்களின் ஒரு தொகுப்பில் "இலங்கையில், வசதி குறைந்த ஓர் குக்கிராமத்தில் பிறந்த நீங்கள் பணி நிமித்தம் பூமிப்பந்தின் பல எல்லைகளைக் கடந்து பல நாடுகளில் வாழ்ந்தீர்கள், இப்போ கனடாவில் வசிக்கின்றீர்கள், உங்களின் இன்றைய மனம் குறித்து பகிர்ந்துகொள்ள முடியுமா?" என்ற தொனியில் எழுத்தாளர் கடற்கரய் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு, முத்துலிங்கம் அளித்த பதிலின் சிலவரிகளை ஆதாரமாகக் கொண்டு அவரின் மண் வாசனை மிக்க சொல்வழக்குகள் பற்றி தொட்டுக்காட்டியுமுள்ளேன்.

அவரது கதைகள் சில சொல்லோவியங்கள் போன்ற விவரணத் தன்மை உடையவை "எங்கள் இதயம் பிறந்த இடத்தை விட்டுப் போவதில்லை" என்ற உயிர்த்துடிப்புள்ள வரிகள் முத்துலிங்கத்தின் எழுத்தாளுமையின் ஆதாரசுருதியாக அமைவது எது என்பதை அடையாளம் காணவும், மழைக்காட்டுப் பெருவிருட்சம்போல் விரிந்து வரும் அவரது இலக்கிய மேதாவிலாசத்தின் இரகசியத்தை இனம் காட்டும் திசைமானி போன்றும் அமைகின்றது. உலகெங்கும் பரவி வாழும் ஈழத்தமிழர்களின் மனங்களை அவர்கள் விட்டு வந்த மண்ணுடன் மீளவும் ஒட்டவைக்கும் மாயமீட்சி முத்துலிங்கத்தின் எழுத்துக்களில் உயிரூட்டமுள்ளவகையில் உருப்பெற்றிருப்பதனைப் பல வாசகர்கள் உணர்ந்திருகின்றார்கள்.

அவரது வட்டாரத் தமிழ்ப் பதங்களும் பாவனையும் இடைவிடாமல் எடுத்தியம்பும் ஒரு பெரும் உண்மை, தான் ஒரு யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளன் என்ற அடையாள முத்திரையை, முத்துலிங்கம் முழுமையாகவே வரிந்து கொண்டவர் என்பதுதான். அவர் குழந்தைப் பருவமுதல் எழுதி விளையாடிய அந்த கொக்குவில் புழுதி மண்ணே அவரது எழுத்துகளுக்கு உயிரும், உரமும், ஒளியும், நீரும், காற்றும் ஆரம்ப காலமுதல் தந்து வளர்த்தது. அந்த மண்வாசனையோடு இணைந்த அவரது ஆத்மார்த்த உறவும் அனுபவமுமே எழுதுலகில் பல சிகரங்களை எட்டித் தொட அவரை இடைவிடாது உந்தி வருகின்றது. காட்சிப் புலம் நிறைந்த அவரது வட்டார மொழி வழக்குப் பாவனையிலேயே அவரது எழுத்தின் யதார்த்தப் பாங்கு பெருமிதமாகப் பளிச்சிடுகின்றது.

தன்சரிதைப் போக்கில் அவர் எழுதிய உண்மை கலந்த நாட்குறிப்புகள் எனும் நூலில் உள்ள "முதல் நினைவு," "குதிரைவால் தாவணி," "படிக்காசு" போன்ற நினைவு மீட்டல் கட்டுரைகளும், மற்றும் தமிழினி வெளியீடான எழுநூற்றி எழுபது பக்கம் கொண்ட அ.முத்துலிங்கம் கதைகள் பெருந் தொகுப்பிலுள்ள, "கோடை மழை," போன்ற சிறுகதைகளிலும் இந்த மண் வாசனை மிக்க யதார்த்தப் போக்கினைக் கண்டு தெளியலாம்.

வரலாறு, விஞ்ஞானம் போன்ற அறிவியல் துறைகள் சார்ந்த எப்பொருள் பற்றி இவர் எழுதினாலும் அங்கு புதியதும் புதுமையானதுமாக ஏதோ ஒன்று புலப்படும். எப்பொருள் பற்றி அவர் விவரித்தாலும், அதில் புதிய ஓர் பார்வையும் தகவலும் எதிர்பாராத விதமாக ஆனால் இயல்பாகவே இணைந்துள்ளதுபோல வாசிப்பின் இனிமையைக் கூட்டிவிடும். உதாரணமாக "கில் காமேஷ்" உலகின் அதிபழைய நூல் எனக்கொள்ளப்படுகிறது. கி.மு. 2750 இல் இந்த நூல் மெசப்பொத்தேமியா (இன்றைய ஈராக்) நாட்டில் எழுதப்பட்டது என்பது பொதுவான கருத்து. இந்நூல் பற்றிக் குறிப்பிடுகையில் இந்த நூலின் துவக்கத்தில் "அனைத்தையுமே கண்டேன், அதையே இவ்வுலகுக்கு எடுத்துரைப்பேன்... என எழுதப்பட்டுள்ளது. இவற்றை அப்படியே திருக்குறள், கம்பராமாயணம் மற்றும் சேக்கிழாரின் பெரியபுராணத்துடனும் ஒப்பிட்டு, இப்பழந் தமிழ் நூல்களிலும் முதல் பாட்டில், "உலகு" என வருதல் கவனிக்கத் தக்கதென்கிறார். இது போன்ற தொடர்புக் குறிப்பு நீண்ட ஒரு ஆய்வுக்கான சிறு தொடக்கப் புள்ளி போன்றே உற்று நோக்கப்பட வேண்டும். இவ்வாறான ஒப்புநோக்குகள் இவரது எழுத்தில் வெகு

**அவரது வட்டாரத் தமிழ்ப் பதங்களும் பாவனையும் இடைவிடாமல் எடுத்தியம்பும் ஒரு பெரும் உண்மை, தான் ஒரு யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளன் என்ற அடையாள முத்திரையை, முத்துலிங்கம் முழுமையாகவே வரிந்து கொண்டவர் என்பதுதான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தியாகவும் இயல்பாகவும் விரவியுள்ளன. இவையும் வாசகனுக்குப் புதிய பாதைகளைத் திறப்பவை. விண்வெளி ஆய்வாளர் முதல் விளையாட்டு வீரர் வரை, ஆபிரிக்க எழுத்தாளர் முதல் அராபிய கவிஞர்கள் வரை அமெரிக்க விஞ்ஞானிகள் கனடிய அமெரிக்க எழுதாளர்களையும் அவரவரின் புலமைத் தளம் பற்றிய நிறைவான புரிதலுடனும், விளக்கமான விவரணங்களுடனும் ஆழமான பல செவ்விகளை வாசக விருந்தாக்கியுள்ளார். இவரது வியத்தலும் இலமே நூலில் உள்ள கட்டுரைகள் உன்னதமான உலக இலக்கியங்களின் பிழிசாறுகளை எடுத்து தேனுடன் கலந்து அருந்துதல் போன்றது.

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்கள், இலக்கியப் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், நடிகர்கள், இயக்குநர்கள், பாடகர்கள் என பலவேறு துறை சார்ந்த பிரமுகர்களைத் தேர்ந்து நேர்முகமாக அவர்களைச் செவ்வி கண்டு இவர் படைத்தளிக்கும் ஒவ்வொரு செவ்வியுமே இவரது பல்துறைப் புலமையையும், ஆழ்ந்த, பரந்த வாசிப்பையும் தெட்டென வெளிப்படுத்துபவை. பல கோணங்களில் இருந்து புதிய தகவல்களை, அறிவுக்குகந்த பல்வேறு ஒளிக்கீற்றுக்களை வாசகனின் உள்ளத்தில் பாய்ச்சி நிற்பவை.

அறிவியல், விளையாட்டுத்துறை, புவியியல், அண்டவியல், பூகோளவியல், மானிடவியல்,, சமூகவியல், நவீனவிஞ்ஞானம், வரலாற்றியல், இசையியல், விலங்கியல் ஆகிய பல்வேறு உட் சார்புத் தொடர்புகள் அறவே இல்லாத வெவ்வேறு துறைகள் பற்றி அபூர்வமான ஆனால் எமக்குப் பயனுள்ள, தேவையான பல தகவல்களை மிகவும் லாவகமாகவும், மேன்மையாகவும் இவரது கதைகள் கட்டுரைகளுக் கிடையில் நுட்பமான இடைச் செருகலாக இணைத்து விடுவார்.

இவை வாகசக ஆர்வத்தைத் தூண்டி நிற்பவை. வாசிக்கக் கையில் விரித்த நூலை இடையில் வைக்காது தொடரும்படி கண்களை வருடிச் செல்பவை. முத்துலிங்கத்தின் நேர்காணல்கள் அவற்றின் தன்மையிலும், கூர்மையிலும் மிகவும் செழுமை மிக்கவை. செவ்விலக்கியச் செறிவு கொண்டவை.

முத்துலிங்கத்தின் சிறுகதைகள் பற்றிய பேராய்வு ஒரு பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவை. அத்தகைய ஓராய்வு தொடர்ந்து வரும் தமிழ் சிறுகதை இலக்கியங்களின் வளத்தையும் கதாசிரியர்களின் புதிய போக்குகளையும் ஆக்கபூர்வமான விரிந்த பரந்த செழிப்பான பாதைகளை நோக்கி உந்தி நிற்கும் என்பதில் கருத்து வேறுபாடிருக்காது.

**கட்டுரை**

சிறுகதைச் சிறப்பிதழ்

# குந்தவையின் எழுத்துகள்

**26.12.2021 அன்று ''குந்தவையின் சிறுகதைகள்'' எனும் தலைப்பில் இலக்கியவெளி நடாத்திய இணைய வழிக் கலந்துரையாடல் அரங்கு 15 இல் ''குந்தவையின் சிறுகதைகளில் அழகியல்'' என்ற தலைப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரை சிறிய மாறுதல்களுடன் ''குந்தவையின் எழுத்துகள்'' எனும் தலைப்பில் பிரசுரமாகிறது...**

## மைதிலி தயாநிதி

இலங்கையின் மூத்த பெண் எழுத்தாளர்களுள் ஒருவரான குந்தவை எனும் புனைபெயர் கொண்ட இரா. சடாட்சரதேவி யாழ்ப்பாணத்தில் தொண்டைமானாறு எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். சுன்னாகம் இராமநாதன் கல்லூரி பழைய மாணவி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963 ஆம் ஆண்டிலேயே ''சிறுமை கண்டு பொங்குவாய்'' எனும் அவர் சிறுகதை ஆனந்த விகடனில் முத்திரைக் கதையாகப் பிரசுரமாகியிருந்ததெனினும், அவர் தமிழுலகு பரவலாக அறியும் எழுத்தாளரானது யோகமிருக்கிறது எனும் தலைப்பில் அவரது பதின்மூன்று கதைகள் 2002 ஆம் ஆண்டு மித்ர வெளியீடாக வந்த பின்னரே ஆகும். அவரின் ஒன்பது சிறுகதைகள் கொண்ட இன்னொரு தொகுப்பான ஆறாத காயங்கள் 2016 ஆம் ஆண்டு வெளிவந்தது. இக்கட்டுரை அவரது எழுத்துகளின் வடிவம் சார்ந்த பண்புகளைச் சுருக்கமாக நோக்குகிறது.

பொதுவாகவே அனைத்து இலக்கிய வகைகளுக்கும் அவை கூறும் விடயம் (பொருள்), அவ்விடயத்தைப் புலப்படுத்தும் முறை (வடிவம்) என இரண்டு பிரதான அம்சங்கள் உண்டு. இலக்கியத்தில் அழகியல் என்பது அதன் வடிவம் சம்பந்தமானது. சிறுகதையைப் பொறுத்தவரையில் அதன் கட்டமைப்பு, பாத்திரவார்ப்பு, சூழற் பின்னணி வர்ணனை (setting), தலைப்பு, நடை முதலானவை வாசகர் மனதில் உணர்வு அல்லது உணர்ச்சி ரீதியிலான தாக்கத்தை விளைவிப்பதுடன், தொடர்ந்து வாசிக்க வேண்டும் எனும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும். காலத்துக்கேற்ற பொருளும், அதைச் சிறப்பாகப் புலப்படுத்தும் வடிவமும் ஒன்று சேரின், சிறந்தகதை என்ற பாராட்டுப் பெறும். ''சிறுகதை ஒரு குறிப்பிட்ட மனோநிலையை அல்லது உணர்வுநிலையைக் காட்டுவதாக அமைதல் அவசியம். இந்த மனோநிலையை வார்த்தைகளால் சுட்டிக்காட்டாது கதையில் வாசிக்கும் வாசகனின் மனதில் அவனை அறியாது அவ்வுணர்வு நிலை தோன்றும்படி செய்ய முடியுமானால் அவ்வாறான சிறுகதை ஒரு தலைசிறந்த சிறுகதையாக அமைய முடியும்'' என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுவார் (தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், 1980, 19). அதாவது, கதையில் விடயங்களைக் குறிப்பாகப் புலப்படுத்தல் என்பது சிறந்த சிறுகதைக்குரிய இலட்சணங்களில் ஒன்றாகும். இவ்வகையில் கவிதையுடன் நெருங்கிய தொடர்பு பூண்டது சிறுகதை. இந்த உத்தியை ''*Show, don't tell* '' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

எனினும், இலங்கையின் இலக்கிய வரலாற்றில் 1950 களின் பிற்கூற்றிலும், அறுபதுகளிலும் இலக்கியத்தின் சமூகப் பொறுப்பு பெரிதும் விதந்தோதப்பட்டது. சமூகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கூறப்படும் பொருளின் கனதியே முக்கியமானது என்ற கருத்து இலக்கிய உலகில் வேரூன்றியது. இந்நிலைப்பாட்டை வலுப்படுத்துவதில் மார்க்சிய இலக்கிய அணுகுமுறை பெரும் பங்கு வகித்தது. இலக்கியத்தில் சமூகப் பெறுமானத்துக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் சில வேளை அதன் கலைப்பெறுமானத்தைப் பாதித்தது (இருபதாம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கியம், 1979, 16) எனினும் அக்காலகட்டத்தில் இலக்கியத்தில் பொருளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைச் சிவத்தம்பி பின்வருமாறு நியாயப்படுத்துகின்றார்: ''கலைப்படைப்பு என்பது சமூகத்திற்கு அப்பாற்பட்டது அல்ல என்பதை நிலைநிறுத்த வேண்டிய தேவை அன்றிருந்தது. அன்று அவ்வாறு வற்புறுத்தப்படாது விடப்பட்டிருப்பின் கலைக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் எவ்வித தொடர்புமில்லை என்ற வாதம் வென்றிருக்கும். அப்படி நடந்திருப்பின் கலை சமூக மாற்றத்தை எதிர்க்கும் சக்தியாக மாற்றப்பட்டிருக்கும்'' (உயிர்ப்புகள், 1986, 123). எனினும், அதைக் கடந்து செல்லும் காலம் வந்து விட்டது என 1986 இல் குறிப்பிடுகின்றார். அதாவது, பொருளில் மாத்திரமன்றி வடிவத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டியதன் தேவையை வற்புறுத்துகின்றார்.

''ஆக்கம் மாத்திரம் படைப்பு ஆகாது. படைப்பு எனும்பொழுது ஆக்கமும் அளிப்பும் இணைகின்றன... ஓவியம், சிற்பம், இசை முதலாம் துறைகளில் வரும் படைப்புகளுக்கு இவ் உரைகல்வாசகம் எத்துணை பொருந்துமோ இலக்கியத்துக்கும் அத்துணை பொருந்தும். ஓவியம்,சிற்பம், இசை முதலாம் துறைகளில் படைப்பு ஆக்கி அளிக்கப்படுகின்றபொழுது அவற்றின் செம்மையை உத்தரவாதம் செய்வதற்கான 'தொழில் நுட்பம்' எத்துணை அவசியமோ இலக்கியத்திலும் ஆக்க நுட்பப்புலமை அத்துணை அவசியமானதாகும்... எழுதப்படுவதால் எதுவும் இலக்கியமாகி விடுவதில்லை; தீட்டப்பெறுவதால் எல்லா ஓவியங்களும் ஓவியங்களாகாதிருப்பது போன்று. செதுக்கப்படுவதால் எல்லாப் படிமங்களும் படிமங்கள் ஆகிவிடாதிருப்பது போன்று, பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்த கதைக்குள் ஒரு முக்கியமான விமரிசன உண்மை தொக்கு நிற்கின்றது.'' என்று சிவத்தம்பி கூறுகின்றார் (உயிர்ப்புகள், 1986, 121). அதாவது கதைப்பொருள் (*plot*) மாத்திரம் சிறுகதையின் சிறப்பிற்குக் காரணமாக அமைந்து விடமுடியாது. அதன் வடிவமும் மிக முக்கியமானது என்பதே இதன் தாற்பரியமாகும்.

இலங்கையின் சிறுகதை வரலாறு ஏறத்தாழத் தொண்ணூறு ஆண்டு கால வளர்ச்சியைக் கொண்டது எனலாம். ஆங்கில இலக்கியம், மதராஸ் பிரசிடென்சியில் வளர்ச்சியுற்ற தமிழ்ப் புனைகதை இலக்கியம் என்பவற்றின் தாக்கம் காரணமாக இலங்கையில் 1930 தொடக்கம் உருவப் பிரக்ஞையுடன் சிறுகதை எழுதப்படலாயிற்று என்பார் பேராசிரியர் கா.சிவத்தம்பி (தமிழில் சிறுகதையின், தோற்றமும் வளர்ச்சியும், 1980, 144). குந்தவை 1960 களில் சிறுகதை எழுதத் தொடங்கியவர். இக்காலகட்டத்தில் எழுத்துலகில் கால் பதித்த பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் சிலர் பின்னாளில் பெயர் பெற்ற எழுத்தாளர்கள் ஆகினர் என்று குணராசா குறிப்பிட்டுள்ளார் (ஈழத்துச் சிறுகதை வரலாறு, 2001, பக்கம் 165-175). அவ்வரிசையில் பவானி ஆழ்வாப்பிள்ளை, சிதம்பரபத்தினி போன்ற பேராதனைப் பல்கலைக்கழகப் பெண் பட்டதாரி எழுத்தாளர்களுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியவர் குந்தவை. அவர் எழுதிய 22 சிறுகதைகளை உள்ளடக்கிய இரு தொகுதிகள் வெளிவந்துள்ளன. தாம் எழுந்த காலத்தின் பிரதிபலிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளமை அவற்றின் சிறப்பியல்பாகும். யோகமிருக்கிறது எனும் நூலுக்குத் தாம் எழுதிய முன்னுரையில் எஸ்.பொ. கதையின் பொருளமைதி குறித்துப் பின்வருமாறு கூறுவார்: " ஈழத்தின் சமகால அவலங்களில், அவற்றின் குறியீடுகளை அல்ல, அவற்றின் பல்வகைத்தான கொடூர அழிபாடுகளை அவர் கதைகள் பதிவு செய்கின்றன. உலகப் போர்களுக்குப் பின்னர், போர்க்கால அவலங்களும், அழிவுகளும், இடப்பெயர்வுகளும் இந்தக் கதைகளிலேதான் மிகுந்த அவதானிப்புடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியத்தில் இது முதன்மையான முயற்சி என்பதிலே குந்தவை திருப்தி அடையலாம்" *(2002, பக்கம் 13-14).*

சிறுகதையின் பேசுபொருளைப் புலப்படுத்துவதிலும் குந்தவை வல்லவர் என்பதை அவரது சில சிறுகதைகள் புலப்படுத்துகின்றன. அவற்றுட் பெரும்பாலானவை ஒன்றுக்கொன்று முரணான இருமையில் கட்டமைக்கப்பட்டவை. அது அதிகாரம்-அதிகாரமின்மை, சமூகச் சிறப்புரிமை உடைமை- சமூகச் சிறப்புரிமை இன்மை முதலியனவாக இருக்கலாம். அவ்விருமைகளுக்கிடையிலான ஓயாத பதற்றம், முரண்பாடுகளினால் உண்டாகும் பாதிப்பைக் கதைகள் பேசுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக இறுக்கம், ஆநிரை, ஊழியமும் ஊதியமும், இணக்கம், புழுக்கம் எனும் சிறுகதைகளைக் குறிப்பிடலாம். கதையில் பல்வேறு பிரிவுகளுக்கிடையே ஓர் ஒற்றுமைத்தன்மையை (*organic unity*) அவதானிக்கலாம், இக் கதைகள் படிப்படியாக நிதானமாக வளர்க்கப்பட்டு, உச்சநிலையை இயல்பாக எய்துகின்றன. எல்லாக்கதைகளிலும் முடிவு என்பது முக்கியமானது. ஆனால் குந்தவையின் கதைகளில் முடிவு என்பது அசாதாரண முக்கியத்துவம் வாய்ந்தது போற் தோன்றுகின்றது. மேலும், சூழற் சித்திரிப்புகள், பாத்திரங்களின் எண்ணச் சித்திரிப்புகள் என்பன மூலமாகப் பெரும்பாலும் கதைகள் நகர்த்தப்படுகின்றன. அதே சமயம் எடுத்துரைப்பு முறையில் சொல்லப்பட்ட, கதைகளும் உண்டு. பாத்திர வார்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்ட கதைகள் மிகச் சிலவே. எதிர்மறைப்பாத்திர வார்ப்பினைப் புலப்படுத்தும் "யோகம் இருக்கிறது" எனும் கதை சிறந்த கதைகளுள் ஒன்று. ஊடுபனுவலாக்கம் (*intertextuality*), பாத்திரத்தின் உள்ளகத் தனிமொழி/ தமக்குள்ளே பேசிக்கொண்டிருத்தல் (*interior monologue*), *flashback* எனும் பின்னோக்கு உத்தி, சிறுகதைப் பொருளுக்கேற்ற பொருத்தமான இயற்கை வர்ணனை, அர்த்தமிக்க தலைப்புகள் எனப் பல்வேறு சிறப்பம்சங்களை அவர் கதைகளில் அவதானிக்கலாம். பொதுவாக யதார்த்தமாக, நேரடியாகப் பொருள் கொள்ளக் கூடிய தெளிந்த நடையில் எழுதுகின்றார் எனினும் அவரின் கதைகள் சிலவற்றை வாசிக்கும்போது அவற்றிற்கு ஏதாவது உட்பொருள் இருக்குமோ என்ற எண்ணம் இடையிடையே தலைதூக்குகின்றது. சில கதைகள் வரலாற்றுச்சூழல், சமூகச் சூழல் அறிவினால் தெளிவுபடுத்தப்பட வேண்டியவை. பெண்களுக்கே சிறப்பாக உரித்தான உடலியல், உணர்வு சார்ந்த விடயங்களை நீட்சி, பாதுகை, பெயர்வு முதலான சிறுகதைகளில் காணலாம்.

அடுத்து, மேலே கூறப்பட்ட வடிவப் பண்புகளுக்கு எடுத்துக்காட்டாகச் சில கதைகளைச் சற்று விரிவாக நோக்கலாம்.

## இறுக்கம்

இராணுவத்தின் அதிகாரத்தின் அழுங்குப் பிடிக்குள் சிக்குண்டிருக்கும் மக்களின் வாழ்வைத் தனி ஒரு பெண் பாத்திரத்தின் மனவோட்டங்கள், காட்சிப் படிமங்கள் மூலமாகச் சித்திரிக்கிறது இக்கதை. இராணுவம் பிரதேசத்தைக் கையகப்படுத்தியமையால் எழுந்த சிக்கலை எதிர்கொண்ட சமூகத்தின் கையறுநிலையை, கைவிடப்பட்ட உணர்வை (*feeling of abandonment*) மையமாகக் கொண்டு இக்கதை புனையப்பட்டுள்ளது. இராணுவ அதிகாரத்தின் பரவலாக்கமும், மக்கள் நலம் உதாசீனப்படுத்தப்படுகின்றமையும் "செக்கிங்", விவசாயப் பொருளாதாரத்திற்குத் தேவையான லான்ட்மாஸ்ரையும், மக்கள் சேவைக்கென ஒதுக்கப்பட்ட அரச பேரூந்துகளையும் இராணுவ வீரர்கள் தமது போக்குவரத்துத் தேவைகட்குப் பயன்படுத்துகின்றமை தொடர்பான படிம வர்ணனைகள் மூலம் குந்தவை வெளிக்கொணர்கிறார். அதே போன்று, இராணுவ அதிகாரத்தால் மக்களுக்கு ஏற்படும் பயம், பதட்டம், மன உளைச்சல், மன அழுத்தம் முதலான உளவியல் தாக்கங்கள் இக்கதையில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை.. ஆனால், கோயிலில் பிள்ளையாருக்கும், வைரவருக்கும் தவறாமல் கும்பிடுதல்கள் செய்யும் வீதியால் போய்வருவோர் பற்றிய சித்திரிப்புகள் மூலம் இவற்றை ஆசிரியர் உணர்த்துகின்றார். "மண்டையைத் தாக்கும் காலை வெய்யில்" என்ற குறிப்பு கதைச்சூழ்நிலைப் பண்பினை உணர்த்துவதுடன் அது இன்னமும் மோசமாகப் போகக் கூடும் என்பதையும் சூசகமாகச் சொல்கிறது.

இந்த அநாமதேய ஒற்றைப் பெண் கதாபாத்திரத்திற்கு இனப்பிரச்சினை தோன்றாத பழைய காலம் குறித்த ஏக்கமுண்டாவதை இலங்கையர்கோனின் "வெள்ளிப்பாதசரம்" கதைக்குறிப்பினைப் புகுத்துவதன் மூலம் ஆசிரியர் காட்டுகின்றார். இது ஊடுபனுவலாக்கம் என்று சொல்லப்படும். அத்துடன், அந்த கற்பனைக் கதையில் இடம் பெறும் கொள்ளிவாய்ப் பிசாசு பற்றிய குறிப்புகள் மூலம் கற்பனையையும், நிஜ வாழ்வையும் மிக லாவகமாக அவர் இணைக்கின்றார். அப்பகுதியைக் கீழே தருகிறேன்: "அரிக்கன் லாம்பு, வண்டிலின் கீழ் 'முணுக் முணுக்' என அசைந்து அசைந்து எரிய மாட்டுச் சலங்கைகள் 'சல் சல்' என லயத்தோடு தாளமிட, காற்றை எதிர்கொண்டவாறு, உற்சாகமாகப் பாடிக்கொண்டே இவளும் ஐம்பது வருடம் முன்னதாக, ஏன் இலங்கையர்கோன் காலத்திலாவது பிறந்திருந்தால் கூட இந்த மாட்டுவண்டிச் சவாரிச் சுகம், இவளுக்குக் கிடைத்திருக்கும்.

கொள்ளிவாய் பிசாசுகளைக் கூடப் பார்த்து இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைச் சதுப்பு நிலத்திலிருந்து எழும் ஒருவித வாயுவென அறிந்து கொண்டு ஆர்வமாய்ப் பார்த்து இருப்பாளோ! அல்லது அறியாமையினால் பிசாசுதான் என எண்ணிப் பார்த்திருப்பாளோ?

அந்தக்காலப் பிசாசு என்ன பிசாசு? இந்தக்காலத்தில் எத்தனை உண்மையான பிசாசுகளை இந்த வல்லைவெளியில் மக்கள் பார்த்து விட்டார்கள்?''

சிறுகதையின் முடிவு குந்தவையின் கதைகளில் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஏலவே குறிப்பிட்டிருந்தேன். அதை விளங்கிக் கொள்ளக் கதைப்போக்கைச் சுருக்கமாகவேனும் அறிந்து கொள்ளல் வேண்டும். சைக்கிளில் ஏற்றி வந்தவன் அப்பெண்ணை ''பஸ் இங்கு வரும்'' என்று இராணுவ செக் பொயிண்ட்க்கு முன்னால் இறக்கி விட்டுப் போய்விடுகின்றான். தனியாக அங்கே நின்று கொண்டிருக்கப் பிடிக்காது அவள் வல்லைவெளியில் நடந்து போய் அங்குள்ள ஆலயச் சூழலிலுள்ள மக்களுடன் மக்களாக பஸ்ஸுக்குக் காத்திருக்கின்றாள். அரச பேரூந்து வருகிறது. அதில் இராணுவத்தினர் பயணிக்கின்றனர். அதைக் கை நீட்டி மறிக்கத் தயாரான அவளை ஒரு இராணுவத்தினன் கேலியோடு பார்க்கிறான். அதன் பின்னர் வரும் மினிபஸ்ஸில் அவள் ஏறுகின்றாள். ஆனால் மினிபஸ் புறப்படும் வழியாகக் காணவில்லை. றைவரும், கொண்டக்டரும் கோயிலில் நின்று பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதை ஜன்னலூடாகப் பார்க்கின்றாள். ''மினி பஸ்ஸிற்குள் சனங்களெல்லாம் அப்படியே இருப்பது போலத் தெரிந்தது. இவளுக்குத் தானும் அவர்களும் பஸ்ஸோடு மீள தனியே விடப்பட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது'' என்று கதை நிறைவுறும். கதையின் இந்த இறுதிப்பகுதிதான் சொல்லாத சேதிகளை அல்லது வெளிப்படையாகச் சொல்ல முடியாத சேதிகளை எமக்கு உணர்த்துகின்றது என்று நான் நினைக்கிறேன். தானும் மக்களும் கைவிடப்பட்டாற் போன்ற முன்பே அனுபவித்த, ஏமாற்றத்தை, அவள் இப்பொழுது அடைகிறாள் என்று சொல்லப்படுகிறது. அது என்ன ஏமாற்றம்? யாரால் ஏற்பட்டது ? என்பதெல்லாம் அக்கால அரசியல் சூழலைக் கருத்திற் கொண்டு ஊகிக்க வேண்டியதாயுள்ளது.

### "இணக்கம்"

இச்சிறுகதையில் அதிகார சமத்துவமற்ற மூவின சமூகத்தினர்க்கிடையிலான ஊடாட்டங்களின் இயல்புகள் தனி ஒரு பெண் பாத்திரத்தின் சிறுநகர அனுபவங்களூடாகப் புலப்படுத்தப்படுகின்றன.

யுத்தகாலத்தில் யுத்தபூமியில் மட்டுமன்றி, அதற்கு வெளியேயும் தமிழர் ஏனைய இனத்தார் மத்தியிலே தன்மானத்துடன் நிம்மதியாக வாழ்ந்து விட முடியவில்லை. அப்பட்டமாகவே அவர்கள் அநீதியாக, பாரபட்சமாக நடாத்தப்பட்டார்கள். அந்நேரங்களில் பணிந்து போவதைத்தவிர வேறு வழி அவர்களுக்கிருக்கவில்லை என்னும் கருத்துப்பட எழுதப்பட்ட கதை இணக்கமாகும். இக்கதை நிகழும் காலம் சரியாக எனக்குப் புலப்படவில்லை. யுத்தம் புரிந்து கொண்டு இன இணக்கம் பற்றி இலங்கை அரசு பேசிய கால கட்டத்தில் எழுதப்பட்ட கதையாக இருக்கலாம். அப்படியென்றால் இணக்கம் என்பது இங்கு எள்ளற் தொனியுடன் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்று சொல்லலாம்.

இச்சிறுகதை இலங்கையின் தென்மேற்கில் உள்ள புத்தள நகரத்தினை மையமாகக் கொண்டது. அங்கு முஸ்லிம் பாடசாலை ஒன்றில் (பாத்திமா) ஆசிரியையாகக் கடமையாற்றுபவரும், முஸ்லிம் பெண்ணொருவரின் இல்லத்தில் வாடகைக்குத் தங்கியிருப்பவருமான யாழ்ப்பாணத்தைப் பூர்விகமாகக் கொண்ட பெண் பாத்திரம் மூலமாகக் கதை தன்மைக் கூற்றுநிலையில் கூறப்படுகின்றது. முஸ்லிம், சிங்களம், தமிழ் என்று மூன்று இனங்களும் வாழும் அந்த நகரின் போர்க்கால இன உறவுகளே கதையின் பேசுபொருளாகின்றன. இதற்குப் பின்புலமாகத்தான் நகரத்தின் கடைத்தெருக்கள் பற்றிய வர்ணனை அமைகின்றது. ஆனால், எடுத்துரைப்பு முறையைக் கையாளாது, ஒரு புகைப்படக்கலைஞர் போன்று நகரத்தைப்பற்றிய பிம்பங்கள் மூலமாக இன உறவுகளைக் காட்டுகின்றார். சூழல் பற்றிய மிக நுண்ணிய சித்திரிப்பு குந்தவையின் கதைகளில் இடம் பெறுவதுண்டு. அது அவரது எழுத்தின் அடையாளம் ஆகும். ஆனால் அது எவ்வளவு தூரம் கதைக்கருவிற்கு வலிமை சேர்க்கிறது என்பது ஆலோசிக்கப்பட வேண்டிய விடயம். ''இணக்கத்தில்'' இந்த நகர் வர்ணனை முக்கியமானது என்பது என் கருத்து. வெறுமனே இக்கதையை வாசித்துக் கொண்டு போதல் உசிதமானதன்று. ''ஏன் இவ்விடயங்கள் இங்கு சொல்லப்படுகின்றன?'' என்ற கேள்வியும் முக்கியமானது. இத்தகைய கதைகள் பொழுது போக்கிற்காக வாசிக்கப்படுவை அல்ல. கதை சொல்லப்படும் நேர்த்திக்காக வாசிக்கப்பட வேண்டியவை என்று நினைக்கிறேன்.

''ஊடுபனுவலாக்கம்'' எனும் உத்தி இக்கதையிலும் கையாளப்படிருக்கின்றது.

''கொதிமணலில் போடப்பட்டுச் சுருண்டு, கையும் காலும் கோணி, கோணி கோணி இழுத்துத் துடிக்கும் ஒரு உருவம்.. அந்தப் பெண்ணின் கத்தலுக்கும், எறியப்பட்ட காசுச் சிதறல்களுக்கும் பொருள் விளங்குகையில் பரிதாபத்தை மீறி எரிச்சலே மேலோங்கியது.

சீச்சீ! இந்தப்பாவப்பட்ட சீவனை கொதிமணலில் துடிக்க விட்டு இப்படியும் பிழைக்க வேண்டுமா?... வேறு என்ன செய்வது? பாவம், அவளுக்கும் வேறு எத்தனை கஷ்டங்களோ? என் மனதில் ஏதோ ஒரு கதை... அழைக்கின்றவர்கள். அந்தப்பெண்ணைச் சிலகணம் மறந்து, அதன் தலைப்பைத் தேடிப்பிடித்தேன். வண்ணநிலவனுடையது.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணநிலவனுடைய "அழைப்பவர்கள்" என்ற கதை நோயாளியான மனிதன் ஒருவனை காலையில் புகையிரத நிலையமொன்றில் பிச்சையெடுப்பதற்காக மனைவி, பிள்ளைகள் எனக் குடும்பம் முழுவதுமே ஒன்று சேர்ந்து, கஷ்டப்பட்டு எழுப்பி அவனை அத்தொழில் செய்யத் தயாராக்குவது பற்றியது.

வண்ணநிலவனின் கதையை இங்கு குறிப்பிடுவதற்கான காரணம் யாது? என்பதையும் நோக்குதல் வேண்டும். ஜீவனோபாயத்திற்காகத் தவிர்க்கமுடியாதவாறு மிக்க அசௌகரியமான கால இட, சூழ்நிலைகளிலும் பணியாற்ற வேண்டியுள்ளது என்பது இந்த ஊடுபனுவலாக்க உத்தி மூலம் உணர்த்தப்படுகிறது என நினைக்கிறேன்.

ஊழியமும் ஊதியமும் என்ற கதை யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் தன்னார்வ நோயாள பராமரிப்பாளராகத் தொண்டாற்றும் கிராமயுவதியின் ஒருநாள் நிகழ்வுகளை அப்படியே பட்டியலிட்டுக் காட்டுகிறது. வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த அவள் தனது சம்பளமும் "கொஞ்சமாவது குடும்பச் செலவைக் கொண்டு ஓட உதவும் இனி" என்று நம்புகின்றாள். ஆனால் அன்றைய நாள் ஊதியத்தைப் பெற்றுக் கொண்டபின்னர், அடுத்தநாள் செலவுகளைக் கழித்தபின்னர் எவ்வளவு மிஞ்சும் என்று கணக்குப் பார்க்கிறாள்.

"அதிகாலையில் எழுந்து தனக்கு சாப்பாடு கட்டித் தருவதற்காகப் புட்டுக்கு மா குழைத்த பெரியக்காவை நினைத்துக் கொண்டாள். வழக்கத்திற்கு மாறாக வெள்ளன எழும்பி தனக்கு உருளைகிழங்கு சீவிப் பொரித்துத் தந்த சின்னக்காவை நினைத்துக் கொண்டாள். பாதி இருட்டில் பஸ் நிறுத்தம் வரை வந்த அண்ணனை நினைத்துக் கொண்டாள். கையிலிருந்த நூறுகளில் மிஞ்சி நிற்கப்போகும் ஒரே ஒரு தாளைப் பார்த்துக் கொண்டாள். மனம் கசந்து போய்விட்டது." என்று கதை நிறைவுறுகின்றது. உழைப்புச் சுரண்டலை மையமாகக் கொண்ட இக்கதையின் முடிவில் நாள் முழுதும் உழைத்த இளம் பெண்ணின் ஏமாற்றமும் வருத்தமும் சொற்சிக்கனத்துடன் உணர்த்தப்படுகின்றன.

## ஆநிரைகள்

ஆநிரைகள் என்ற சிறுகதை 2009 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போர் அழிவுகளையும், அதிகாரம் கைமாறியதையும் சங்க காலப் போர்முறைகளில் ஒன்றான ஆநிரை கவர்தல் எனும் போர் முறை விவரிப்பின் மூலம் சொல்கிறது. சங்கப் போர் முறை எனும் உருவகம் மூலம் கதை கூறல் என்பது இச் சிறுகதைக்கு ஆழமான பரிமாணமொன்றினை அளிக்கிறது. கனவு உத்தியும் இக்கதையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறுக்கீடு வடிவத்தில் வித்தியாசமாகப் படைக்கப்பட்ட ஒரு சிறுகதை குறுக்கீடு. இக்கதை அறிவிற்கும் அதிகாரத்திற்கும் இடையில் உள்ள தொடர்பை அடிப்படையாகக் கொண்டது. கருத்தியற் சுதந்திரம் படைப்பாளிக்கில்லாதிருப்பதும், தனது படைப்புக்காக அதிகார பீடத்தில் உள்ளவர்களால் படைப்பாளி கொடுமைக்குள்ளாக்கப்படுவதும் இன்றும் நிகழ்வன என்பதை இக்கதை காட்டுகின்றது. நூல்கள் மனிதர்களை மாற்றுகின்றமையால், அதிகாரத்தில் உள்ளோர் அவற்றைக் கண்டு அஞ்சுகின்றனர். மறைமுகமாக நூலின் ஆற்றலை இக்கதை உணர்த்தி நிற்கின்றது.

## புழுக்கம்

புழுக்கம் என்ற சிறுகதை பெண்பிள்ளைகளை மட்டுமே பெற்றெடுத்த யாழ்ப்பாணத் தாயொருத்தியின் மன ஆற்றாமையை எடுத்துரைப்பது. இரு தொகுதிகளிலும் காணப்படும் கதைகளுள் காலத்தால் முற்பட்டதாக இக்கதை இருக்கலாம். 1982 இல் வெளிவந்தது. அதிகம் பேசப்பட்ட சமூகப் பிரச்சினை எனினும், எழுதப்பட்டிருக்கும் விதம் இக்கதைக்குப் புது மெருகளிக்கின்றது. எடுத்துரைப்பு முறை சிறிதேனும் இல்லாது உரையாடல் வடிவில் கதை நகர்த்தப்படுகின்றமை இக்கதையின் சிறப்பம்சம். நான்கு பெண்களை மட்டும் பெற்ற தாய் ஒருத்தியின் ஆற்றாமையை கதை நேரடியாக, ஆனால் நயத்துடன் பேசுகின்றது.

"இந்தக் காலத்திலை ஒரு குடும்பத்துக்கு ஒரு பெடியன் இருந்தாலே காணும். அவன் படிச்சா என்னா, படிக்காட்டா என்ன, வெளி நாட்டுக்கு அனுப்பி விட்டா உழைச்சுக்கொண்டு வந்திடுவான். சகோதரங்களையும் கரை சேர்த்துப் போடுவான்."

பலகையிலிருந்தபடி பயிற்றம் உருண்டைக்கு மா அளப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த நாகுவிற்கு ஏதோ ஆற்றாமை குபீரென்று எழுந்து நெஞ்செல்லாம் ஓடி அடைந்தது. கைக்கு எட்டும் தூரத்தில் கிடந்த விசிறியை எட்டி எடுத்து விசிறிக் கொண்டாள்.
"சீ என்னமாய்ப் புழுங்குது."
……………………

வெளியே வந்து முற்றத்தைப் பார்க்க இறங்கி நின்று கொண்டாள். பங்குனி மாதம் மதியம் திரும்பி வெகுநேரம் சென்றும் புழுக்கம் குறையவில்லை. குசினி ஓட்டிற்கு மேலாகத் தெரிந்த வேப்பமரத்தின் ஒரு இலை கூட அசையவில்லை."

மனித உணர்ச்சியும் இயற்கையும் ஒருங்கிணைந்து கதைக்கு மெருகூட்டுவதை இவ்வரிகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## யோகம் இருக்கிறது

உயர் அரசசேவைக்குப் பொருத்தமில்லாத குணநலன் பொருந்திய பாத்திரத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட கதை "யோகம் இருக்கிறது" என்பதாகும். இச்சிறுகதையின் தலைப்பானது எள்ளற்தொனியைப் புலப்படுத்துவது. கதையின் பெரும்பகுதி இந்த ஆண் எதிர்மறைப் பாத்திரத்தின் மனவோட்டங்களினூடாகவே சொல்லப்படுகிறது (*third person limited point of view*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாபாத்திரம் தான் இலஞ்சக் குற்றச்சாட்டுக் காரணமாகச் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டது நண்பர், உறவினர், ஊராருக்குத் தெரிந்து விட்டதோ என அச்சமுற்று, கூசிக் குறுகுகிறது. அதேசமயம் தான் செய்த குற்றம் குறித்து அது எத்தகைய பின்னிரக்கத்தையும் காட்டவில்லை என்பதுடன், அதைப் பின்வருமாறு நியாயப்படுத்தவும் முயல்கிறது.

"காசிற்குத்தேவை எப்பொழுதுமே இருந்து வந்தது. அவன் அந்தக் கலையில் தீவிரமாக முன்னேறி விட்டிருந்தான். தான் ஒரு சாதாரணமானவன். உலக இயல்புகளுக்கு உட்பட்டவன்; தகழியின் கேசவப்பிள்ளை மாதிரி. இயற்கையைத் தானே தகழியும் எழுதியிருக்கிறார்."

மலையாள எழுத்தாளர் தகழியின் ஏணிப்படிகள் என்ற நாவலின் நாயகன் கேசவபிள்ளையை உதாரணமாகக் காட்டி செயல் நியாயப்படுத்தப்படுகின்றதுடன், இவையெல்லாம் இயற்கையாக நிகழும் சம்பவங்கள் என்று சமாதானமும் கூறப்படுகின்றது.

இறுதியாக, நாம் எல்லோரும் அனுபவித்திருக்கக் கூடிய பொதுவானதொரு உளவியல் பண்பினை புலப்படுத்தும் வகையில் கதை முற்றுப்பெறுகிறது. அவமான உணர்ச்சியினால் பீடிக்கப்பட்டு எதிர்ப்படும் யாவரும் தன்னை ஏதாவது கேள்வி கேட்டு விடுவார்களோ என அஞ்சிய கதாபாத்திரம் "யாழ்ப்பாணத்தானுக்கு தன்பாட்டுக்கு வேலையைப் பார்த்துக் கொண்டு போகத் தெரியாது" என்று கோபப்படுகிறது. ஆனால், அரசியல்வாதி நண்பன் பிரச்சினையைத் தீர்த்துத் தருவதாகச் சொன்னவுடன் அதன் மனதில் நம்பிக்கை துளிர்க்கின்றது; அதுவரை இருந்த கவலையெல்லாம் மறைந்து விடுகின்றது என்பதைக் கதையின் இறுதி வாக்கியம் உணர்த்துகிறது: "காரின் கண்ணாடிக் கதவினூடே யாழ்நகர் தன் பாட்டுக்கு தன் வேலையைப் பார்த்துக்கொண்டு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது".

நிறைவாக, குந்தவையின் சில கதைகள் எழுதப்பட்டுள்ள முறைமை குறித்து சுருக்கமாக எனது கருத்துகளைத் தந்துள்ளேன். சூழற் பின்னணி, மனிதச் செயற்பாடுகள் என்பன குறித்த மிக நுணுக்கமான வர்ணனைகள், உரையாடல் மூலமாக கதையைக் கொண்டு செல்லல், பாத்திரங்களின் மனவோட்டங்களைப் பதிவு செய்தல், சங்க இலக்கியம், நவீன கால இலக்கியக் குறிப்புகள் மூலமாக சிறுகதைக்குப் புதிய பரிமாணம் அளித்தல் என்பன குந்தவையின் சிறுகதை எழுத்துகளின் சிறப்பியல்புகள் எனலாம். இவருடைய சில கதைகளை வாசிக்கும்போது சொல்லும் விடயத்திற்கப்பால் வேறு விடயங்களும் கதையிற் புதையுண்டிருக்கிறதோ என்ற ஐயம் எனக்கு எழுவதுண்டு. எடுத்துக்காட்டாக, இறுக்கம், கோழிக்கறி என்ற கதைகளை வாசிக்கும்போது அவ்வெண்ணம் தோன்றியதுண்டு. நுணுக்கமான வர்ணனைகள், பட்டியலிட்டுக் காட்டும் விவரங்கள் என்பனவற்றையெல்லாம் தாண்டி, அவை எதற்காகக் கதையில் சொல்லப்படுகின்றன என்பது குறித்த விசாரமே எனக்கு இந்தக் கட்டுரையை எழுதுவதற்குத் தூண்டுதலாக இருந்தது. அதுவே அவரது எழுத்தின் மேல் எனக்குள்ள ஈர்ப்பிற்கான ஒரு காரணம் என்பேன்.

கட்டுரை

# ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி (1930–1960)

## மறுமதிப்பீடு

### செ.யோகராசா

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றி அவ்வப்போது ஆய்வுநூல்கள் சிலவும் கட்டுரைகள் பலவும் வெளிவந்துள்ளன. எனினும் முக்கியமான எழுத்தாளர்கள் சிலர் பற்றி தவறான மதிப்பீடுகள் அவற்றில் இடம்பெற்றுள்ளன. இன்றுவரை அறியப்படாத, இனங்காணப்படாத எழுத்தாளர்கள் சிலர் பற்றி புதிதாக அறியமுடிகின்றது. அறியப்பட்ட தகவல்கள் சில பரவலாக அறியப்படாத சூழலும் காணப்படுகிறது. இத்தகைய ஆரோக்கியமற்ற ஆய்வுச் சூழலில் இயன்றளவு இவை யாவற்றையும் உள்ளடக்கியதாக இக்கட்டுரை முயற்சி அமைகின்றது.

**1. சிறுகதை முன்னோடிகள் பற்றிய மறுமதிப்பீடு**

முக்கியமான சிறுகதை முன்னோடிகளாகக் கருதப்படுகின்ற இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோர் எழுதியுள்ள சிறுகதைகளில் கணிசமானவை ஈழத்து வரலாற்றுச் சம்பவங்களும் இதிகாச புராண நிகழ்வுகளுமாகும். இவற்றுள் கணிசமானவை ஆரம்பகாலத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் இவர்கள் இத்தகைய பேசுபொருளில் ஆரம்பகாலத்தில் ஈடுபாடு கொண்டமைக்கான காரணங்கள் பற்றி நாம் சிந்திப்பதில்லை. இவ்வேளை இரண்டு காரணங்களை நினைவுகூரமுடிகிறது.

ஒன்று, எழுத்துலகில் பிரவேசிக்க முற்பட்ட ஆரம்பகாலச் சூழலில் இவர்களது இலட்சியம் எழுத்தார்வம் மட்டுமே சார்ந்திருந்தது.

சி.வைத்தியலிங்கத்தின் வார்த்தைகளில் கூறினால் "எழுத வேண்டும் ஏதாவது சிருஷ்டிக்க வேண்டும் என்ற உணர்ச்சி என்றும் சிறகடித்துக் கொண்டிருக்கும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மனநிலையில் முற்குறிப்பிட்ட பேசு பொருளில் நாட்டம் கொண்டனர். அவற்றை அழகியல் நோக்குடன் எழுதுவதில் மட்டும் ஆர்வம் காட்டினர்.

மற்றொரு காரணம், அத்தகைய படைப்புகள் பலவும் தமிழ்நாட்டில் அப்போது வெளிவந்து கொண்டிருந்த 'கலைமகள்' சஞ்சிகையில் பிரசுரமாகின்ற வாய்ப்புக் காணப்பட்டமை. 'கலைமகள்' ஈழத்து எழுத்தாளர்களுக்கு தாராள மனதுடன் இடமளித்தது. காரணம் கலைமகளுக்குத் தேவையாகவிருந்தது சுவையான பேசுபொருள்களாகும். ஆரம்ப நிலையில் எமது முன்னோடிகளுக்குத் தேவையாகவிருந்தது புகழ்நாட்டம். இத்தகைய எழுத்துச் சூழலில் ஈழத்துக் குவேனியும், காசியப்பனும், துட்டகைமுனுவும், பூதந்தேவன் கோட்டையும் பேசுபொருளாகியதில் வியப்பில்லை.

மேற்குறித்த இரு எழுத்தாளர் பற்றியும் எமது முன்னோடி விமர்சகரிருவர் இரு குற்றச் சாட்டுக்களை முன் வைத்தமை பற்றியும் இவ்வேளை நினைவுகூரவேண்டும். அவற்றுளொன்று மேற்குறிப்பிட்ட இருவரும் மனோரதியப் பாங்குடன் எழுதினரென்பது, இவ்விரு எழுத்தாளர்களதும் ஆரம்பகால வாசிப்பு ரசனை அதற்கே இடமளித்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்காகப் பிற்காலச் சிறுகதைகளின் சில சிறப்பம்சங்களைக் கவனிக்காமல் இருந்துவிடக் கூடாது.

மற்றொரு குற்றச்சாட்டு, குறிப்பாக இலங்கையர்கோன் ஆண்பெண் உறவு பற்றி எழுதிய சிறுகதைகள் பற்றி மிகையான பார்வையை முன்வைத்தமை! எடுத்துக்காட்டு, கு.ப.ரா, பிச்சமூர்த்தி ஆகிய இருவரையும் போலவே இலங்கையர்கோனும் ஆண்பெண் உறவு சம்பந்தமான பொருளில் அதிகம் ஈடுபாடுள்ளவராக இருந்தார். சுந்தரர் பரவையாரைப் பற்றி எழுதினாலென்ன, மேரி மகதலேனா, மேனகை, மாதவி, அனுலா முதலிய பெண் பாத்திரங்களைப் பற்றி எழுதினாலென்ன, தசையின் துடிப்பு, மீதுனங்களின் சேர்க்கையே எல்லாவற்றிற்கும் ஆதார சுருதியாக இருக்கிறது. என்பது இலங்கையர்கோனின் தத்துவம். இத்தகைய தவறான முன்வைப்புக் காரணமாக இலங்கையர்கோன் சிறுகதைகள் விரசம் மிகுந்தவை என்ற அபிப்பிராயம் வாசகரிடம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதே கவனத்திற்குரியது.

இலங்கையர்கோன் எழுதிய வெள்ளிப் பாதரசம், முதற்சம்பளம், மச்சாள், அனாதை, தாழை நிழலிலே, சக்கரவாகம் முதலான சிறுகதைகளில் பிரதேசவாடை, மண்வாசனை, உளவியல் நோக்கு, முதிய தம்பதிகளுக்கிடையிலான பாச உணர்வு முதலான பல சிறப்பம்சங்கள் வெளிப்பட்டுள்ளன என்பதனை இவ்வேளை வற்புறுத்துவது அவசியம். சி.வைத்தியலிங்கத்தின்



சிறுகதைகளிலும் வரலாற்றுச் சம்பவங்கள், மனோரதியப் பாங்கு என்பன இடம்பெற்றிருப்பினும் வேறுபல சிறப்பம்சங்கள் இடம்பெற்றிருப்பது பற்றி இவ்வேளை குறிப்பிடுவது அவசியமே.

அவற்றுள் முதலில் குறிப்பிடவேண்டியது பெண்களது பன்முகப்பட்ட மனப்போராட்டங்கள், ஏக்கங்கள், பிரச்சினைகள் முதலியன நுட்பமான முறையிலும் கலாபூர்வமான முறையிலும் வெளிப்படுத்தப்படுகின்றமை. 'விதவையின் இதயம்', 'மின்னல்', 'உள்ளப் பெருக்கு', 'நெடுவழி', 'கங்காகீதம்' என்பன இவ்விதத்தில் கவனிப்பிற்குரியன.

விரிவஞ்சி 'விதவையின் இதயம்' என்ற ஒரு சிறுகதை மட்டும் இவ்வேளை எடுத்துக்காட்டப்படுகின்றது. விதவைப் பெண்ணொருத்தியின் உடல்சார் மன உணர்வுகளை வெகு இயல்பான முறையில் வெளிப்படுத்துகிறது இச்சிறுகதை. விதவை விசாலாட்சி "மனதை ஏதோ ஒரு புழு அரித்துக் கொண்டு வந்தது. அவள் வயதை ஒத்த பெண்கள் வாழ்க்கையின் இன்பங்களைச் சுவைத்து வருவதை அவள் எங்ஙனம் சகிப்பாள்? காட்டு நிலாப்போல பொங்கி வழிந்து கொண்டிருந்த அவள் யௌவனம் எவரும் அனுபவிக்க முடியாமல் நெஞ்சில் உறைந்துபோய்க் கிடந்தமை, அவள் உள்ளத்தில் எரிச்சலையும் பொறாமையையும் வளர்த்து வந்தது. தன் ஆத்திரம் முழுவதையும் தீர்ப்பதற்கு அவளுக்கு வேறு வடிகால் கிடைக்கவில்லை. நித்தியலட்சுமி தான் கண்ணுக்கு முன்னால் ஒயிலாய் நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாள். தன் சக்களத்தியின் மகளான நித்தியலக்சுமியை காரணமில்லாமல் கோபிக்கின்ற விசாலாட்சி அவளது விவாகத்திற்குக் குறுக்கே நிற்பது தொடக்கம் தடைகள் ஏற்படுத்தி நித்தியலக்சுமி திருமண தினத்தன்று தாலி கட்டும் சுபநேரத்தில் கிணற்றுள் விழுந்து உயிருடன் தப்பிப் பிழைக்கின்றாள்.'' அவளது கழிவிரக்கமும் குற்ற உணர்ச்சியுமே சிறுகதையாக நகர்கின்றன. இச்சிறுகதையை வாசிக்கும் இலக்கிய ஆர்வலருக்கு இத்தகைய பேசுபொருளை இன்னொரு விதத்தில் நகர்த்தும் கு.ப.ரா வின் 'ஆற்றாமை' நினைவிற்கு வரக்கூடும்.

சி.வைத்தியலிங்கத்தின் பெண்கள் பற்றிய மேற்குறித்த சிறுகதைகள் அவரை அத்துறை முன்னோடியாகக் கருதுவதற்கு வாய்ப்பளித்துள்ளன. இன்றுவரையான ஆய்வாளரெவரும் இவ்விடயம் பற்றி கவனிக்காதிருந்தமை ஒரு புறமிருக்க, இது தொடர்பாக மிகப் பொருத்தமற்ற விமர்சனக் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதும் விசனத்திற்குரியது. ஈழத்து விமர்சன முன்னோடிகளில் ஒருவரின் பின்வரும் கூற்றினைக் கவனிக்க: ''சி.வைத்தியலிங்கமோ தேசிக விநாயகம்பிள்ளையைப் போல மென்மை, பெண்மை, கனிவு, அழகு, இனிமை முதலிய பண்புகளை விரும்புபவர். இலக்கியம் அவற்றைப் பிரதிபலிக்க வேண்டும் என்று நம்புபவர். கவிதையின் கனிவும் வடமொழி இலக்கியத்தின் பெருமிதமும் துலங்கவேண்டும் என்று வற்புறுத்துபவர். அந்தளவில் சிதம்பர சுப்பிரமணியத்துடன் கருத்தொற்றுமையுடையவர். தனது ஏனைய சிறுகதைகளிலிருந்து பேசு பொருள் ரீதியில் விலகி நிற்கின்ற – முக்கியமான வேறிரு சிறுகதைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுளொன்று, 'ஏமாளிகள்', பிச்சைக்காரர்கள் எவ்வாறு ஏமாற்றிப் பிச்சை எடுக்கிறார்கள் என்பது பற்றிய என்றும் பொருந்தக்கூடிய சிறுகதை இது.

மற்றொன்று 'மரணத்தின் நிழல்' இது மரணப் படுக்கையிலுள்ள ஒருவரின் இறுதிக் கண நினைவுகள் பற்றிய கலாபூர்வமான சிருஷ்டி. இத்தகைய பேசுபொருள் சார்ந்த படைப்புகள் தமிழில் அரிதாகவே வெளிவந்துள்ளன. கு.ப.ரா வின் 'விடியுமா?' இச்சிறுகதை உருவாக்கத்திற்கு வழி வகுத்திருப்பதனை முடிவு உணர்த்துகின்றமை குறிப்பிடத்தக்கது. இச்சிறுகதைக்கு மட்டுமன்றி இவரது கணிசமான கதைகளுக்கும் கு.ப.ரா வின் சிறுகதைகள் உந்து சக்தியாகவிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, ஈழத்தின் கு.ப.ரா என்று இவரை விமர்சகர்கள் சிலர் குறிப்பிடுவதில் தவறில்லை. எனினும் இலங்கையர்கோன் பற்றி அவ்வாறு சிலர் குறிப்பிடுவது பொருத்தமற்றது.

மற்றொரு முன்னோடி எழுத்தாளரான சம்பந்தனது சிறுகதைகள் மேற்குறிப்பிட்ட இருவரதும் சிறுகதைகளிலிருந்து வேறுபட்டவை. அவை பற்றி அறியாமல் இரு வரலாற்றுச் சிறுகதைகள் மட்டும் எழுதியுள்ள அவரையும் வரலாற்றுச் சிறுகதைகள் எழுதியவராகவே விமர்சன முன்னோடிகள் கணித்துள்ளனர். அவரது ஏனைய 14 சிறுகதைகளும் காதல், பாசம் சார்ந்த மனப்போராட்டங்கள் பற்றி எழுந்தவை. அவ்வழி தத்துவச் சாயல் இழையோடுவனவாகவும் காணப்படுபவை. இவை காரணமாக இவரது சிறுகதைகளில் மௌனி, லா.சா.ரா ஆகியோரது செல்வாக்குக் காணப்படுவதாக கருதுகின்ற ஆய்வாளருமுள்ளனர். ஆயினும் அவர்கள் எழுத்துத்துறைக்கு வருமுன்னரே சம்பந்தன் தனது சிறுகதைகளுள் கணிசமானவற்றை எழுதி முடித்துவிட்டார் என்பது கவனத்திற்குரியது.

## 2. முன்னோடிகள் காலகட்டத்து முக்கியமான வேறு எழுத்தாளர்கள்

மேற்குறிப்பிட்ட காலகட்டத்தில் எழுதிய வேறு சில எழுத்தாளர்கள் பற்றி ஈழகேசரிக் கதைகள் தொகுப்பு வெளிப்படுத்துகின்றது. இவ்விதத்தில் முக்கியமான ஒருவர் ஆனந்தன். இவரெழுதிய 'தண்ணீர்த் தாகம்' சாதிப்பிரச்சினை தொடர்பான முக்கியமானதொரு சிறுகதையாகும். இளமைக் காலத்தில் தனது வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடித்துக் கொண்டிருந்த பறையர் குலப் பெண்ணொருத்தியை ஏசித் துரத்திய ஐயரொருவர் பிற்காலத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது (தாதியாகவிருந்த) அப்பெண்ணிடம் சாகுந்தறுவாயில் தண்ணீர் வாங்கிக் குடிப்பதே அச்சிறுகதை! இவ்வாறே 'சில்வரம்புலி' எழுதிய 'தெளிவு' நா.பாலசுப்பிரமணியம் எழுதிய 'செல்வி' முதலான சிறுகதைகளும் சாதிப்பிரச்சினை பற்றியனவாம். இத்தியாதி சிறுகதைகள் ஊடாக ஆரம்பகாலச் சிறுகதைகளின் இன்னொரு செல்நெறியை அறிந்து கொள்ள முடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## 3. கவனிக்கப்படாத இன்னொரு எழுத்தாளர்

இக்காலகட்டத்தில் அதிக சிறுகதைகள் எழுதியிருந்தாலும் அவற்றைச் சிறுகதைகள் என்று எவரும் கருதாமை காரணமாக கவனத்திற்குள்ளாகாத எழுத்தாளரொருவர் காணப்படுகின்றார். கவிஞர் மு. செல்லையாவே அவராகின்றார். அவரெழுதிய நகைச்சுவை ஆக்கங்கள் என்று கருதப்பட்டு வந்தவற்றுள் கணிசமானவை சிறுகதைகளே! (இதுபற்றிய விரிவான ஆய்வுக் கட்டுரையொன்றும் கட்டுரையாளரால் எழுதப்பட்டுள்ளது. பார்க்க: ''கவனிக்கப்பட வேண்டிய ஈழத்துச் சிறுகதை முன்னோடி: அல்வையூர் மு.செல்லையா'' முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு, ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு, தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2020) இவ்வாறான சிறுகதைகளுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சாதிப் பிரச்சினை தொடர்பானவை. இவற்றுளொன்று 'சிவனும் மகனும் சம்பாஷித்தல்' என்பது. சாதி பற்றிய கடவுளர் இருவரதும் வெவ்வேறுபட்ட அபிப்பிராயங்கள் அது பற்றிய உயர் சமூகத்தினது மனோபாவம், அதற்கெதிரான ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் செயற்பாடுகள், சமூக, அரசியல், ஊடகத் துறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் முதலியன அவர்களது உரையாடல்கள் ஊடாக வெளிப்படுகின்றன. சாதிபற்றிய முருகனது முற்போக்கான கருத்துக்களும் சிவபெருமானது பிற்போக்கான கருத்துக்களும் துணிச்சலுடனும் சுவாரஷ்யமான முறையிலும் வெளிப்படுத்துப்படுவதே கவனத்திற்குரியது.

"...நீ செல்வச்சந்நிதியில் அந்தத் தாழ்த்தப்பட்ட சாதியாருக்குச் சிறிது சுவாதீனங் கொடுத்தாய். அதனால் அவர்கள் உன்னை அன்புடன் வணங்கி உயர்சாதி மக்களுடன் சமரசமாய் உலாவுகின்றார்கள். பல மடங்களைக் கட்டி இன்ன சாதியாரின் மடமிது என்று வகுத்தறிய முடியாமல் பல உயர்மக்களைக் கலக்கமுறச் செய்கின்றனர். காவடி எடுக்கின்றார்கள். அன்னதானம் புரிகின்றார்கள். சுருக்கிச் சொல்லுகில் தம் வீடுபோற் பாவித்து வருகின்றார்கள். உனக்கு என்ன பித்தமா? காந்தியினுடைய சமரசம் உனக்கு ஏன்? மேலும் 'மகன் அறிவு தந்தை அறிவு' என்றபடி உனது போக்கும் எனது போக்கும் ஏறக்குறைய ஒத்திருத்தல் வேண்டும் அல்லவா? "தந்தைக்கு மகன் புத்தி கூறுவது மரபல்லவாயினும் நீங்கள் நடுவயசு உடையவர்களாய் வாழ்ந்த அக்காலத்தில் நான் உங்களுக்குச் சில விசயம் போதித்துள்ளேன். இதைப்பற்றி எனது அரிய நண்பன் அருணகிரிநாதனும் 'தந்தைக்கு முன்னந் தனியான வாளொன்று சாதித்தருள் கந்தச்சுவாமி' என்று விதந்து கூறியுள்ளான். மேலும் பிரமனுக்குங் குட்டுக் கொடுத்துப் படிப்பித்திருக்கின்றேன். ஆனபடியால் வயது பின்னிட்டு வாக்கு மாறிய உங்களுக்குச் சில விசயங்களைப் போதிப்பது பிழையாகாது என்றே எண்ணுகிறேன்." (சிவனும் மகனும் சம்பாஷித்தல், மு. செல்லையா, ஈழகேசரி 24.09.1933)

ஒரு விதத்தில் புதுமைப்பித்தனது கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் என்ற சிறுகதையுடன் ஒப்பிட்டு நினைவு கூரத்தக்கதாகவுள்ளது.

## 4. மலையகத்தில் சிறுகதை

முப்பதுகளில் மலையகத்திலும் சிறுகதை தோற்றம் பெறுகிறது என்பதையும் அண்மையில் அறிய முடிந்துள்ளது. கோ. நடேசையர் எழுதிய 'திரு இராமசாமி சேர்வையின் சரிதம்' இவ்விதத்தில் கவனத்திற்குரியதாகின்றது. வறுமை காரணமாக தமிழ்நாட்டிலிருந்து மலையகத்திற்கு வந்த ஒருவன் கஷ்டப்பட்டுத் தொழில் செய்து கங்காணியாவது பற்றியதே இச்சிறுகதையாகும்.

## 5. மறுமலர்ச்சிக் காலகட்டச் சிறுகதைகள்

'மறுமலர்ச்சிக் கதைகள்' என்ற மறுமலர்ச்சிச் சஞ்சிகையில் (1946-1948) வெளியான சிறுகதைகளின் தொகுப்பு வெளிவந்த பின்னர் இக்காலகட்டத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றியும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு சிந்திக்கின்றபோது இதுவரை கூறப்பட்டு வந்த அபிப்பிராயமொன்று தவறானதாகக் காணப்படுவது புலப்படுகின்றது! அது பின்வருமாறு,

"பண்பு அடிப்படையில் இக்காலப் பகுதியிலே தோன்றிய எழுத்தாளர்கள் முந்திய தலைமுறை எழுத்தாளர்களிலிருந்து அதிகம் வேறுபட்டவர்களல்லர். 1930 ஆம் ஆண்டு ஈழத்துச் சமுதாய அரசியற் போக்குகளில் அதிக மாற்றங்கள் இன்மையே இவர்களில் காணப்படும் ஒற்றுமைக்கான அடிப்படை எனலாம். அவ்வகையில் 30 ஆம் 40ஆம் ஆண்டுச் சிறுகதைகளை ஒருசேர நோக்குவது பொருத்தம்"

மேற்குறிப்பிட்ட தவறான அபிப்பிராயத்தை உதிர்த்த விமர்சகர் தான் அவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்து எதுவும் கூறவில்லை என்ற முரண்சுவை ஒருபுறமிருக்க, 40களில் வெளிவந்த சஞ்சிகைகளுள் 'மறுமலர்ச்சி' தவிர, 'பாரதி' (முதல் முற்போக்குச் சஞ்சிகை) 'பாரதி' (மண்டூர்; இச்சஞ்சிகையின் வரவு பற்றிய தகவல் அண்மையிலேயே இக்கட்டுரையாளரால் வெளிக்கொணரப்பட்டிருந்தது) 'எரிமலை' (பத்திரிகை) முதலியன பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

அதுமட்டுமன்றி 'மறுமலர்ச்சிக் காலகட்டம்' எது என்பது பற்றிய தெளிவும் இவ்வேளை அவசியமாகின்றது. உண்மையில் மறுமலர்ச்சிக் காலகட்டம் என்பது 46 களில் வெளிவந்த மறுமலர்ச்சி முதலான சஞ்சிகைகளுடன் மட்டும் தொடர்புபட்டதன்று. இவற்றுடன் சமகாலத்தில் வெளிவந்த 'ஈழகேசரி' பத்திரிகையில் வெளியான ஆக்கங்களுடனும் தொடர்புபட்டது. மேலும் இவ்வாறு கருதப்படும் மறுமலர்ச்சிக் காலகட்டம் இரண்டாவது காலகட்டம் என்பதே சரியானது. இன்னொரு விதமாகக் கூறின் 30களில் வெளிவந்த 'ஈழகேசரி'யின் வரவுடன் ஆரம்பித்ததே மறுமலர்ச்சிக் காலகட்டத்தின் ஆரம்பமாகும்.

இன்னுமொன்று, விமர்சகர் சிலர் கூறுவதுபோன்று முப்பதுகளில் டொனமூர் சீர்சிருத்தங்கள் அரசியல் விழிப்புணர்ச்சியை ஓரளவு ஏற்படுத்தியிருப்பினும் அதனைவிட முக்கியமானது எழுத்தாளரது கொழும்பு நோக்கிய இடப்பெயர்வும் மத்தியதர வர்க்கத்தினரிடமேற்பட்ட இலக்கிய ஈடுபாடுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமன்றி அரசியல் விழிப்புணர்ச்சியின் தாக்கம் எழுத்துலகில் வெளிப்படத் தொடங்குவதும் மறுமலர்ச்சியின் இரண்டாவது காலகட்டத்திலிருந்தாகும். மேலும் இக்காலகட்டத்தில் இலவசக் கல்விமுறை அறிமுகமானமையும் எழுத்தாளர் சங்கங்கள் உருவானமையும் பிரதேச மட்ட இலக்கிய எழுச்சி ஏற்பட்டமையும் (எடுத்துக்காட்டு: மட்டக்களப்பு, திருகோணமலை) சிறுகதைப் போட்டிகள் நடாத்தப்பட்டமை பற்றியும் மனங்கொள்வது அவசியமாகின்றது. மட்டக்களப்பு, திருகோணமலை, மலைநாடு சார்ந்துள்ள எழுத்தாளர்கள் சிலரது எழுத்துலகப் பிரவேசமும் நிகழ்கின்றது.

மேற்குறிப்பிட்ட விதத்தில் எழுத்தாளர் பலர் பற்றிக் குறிப்பிடலாமாயினும் இவ்வேளை அ.செ.முருகானந்தன், கனகசெந்திநாதன், அ.ந.கந்தசாமி, வ.அ.இராசரத்தினம், பித்தன், புரட்சிக்கமால், நா.பாலேஸ்வரி, இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முதலானோர் பற்றி மட்டும் நினைவு கூரப்படுகின்றது.

ஈழத்துச் சிறுகதை என்பது ஈழத்துத்தமிழ் மக்களது வாழ்க்கையுடன் சுவறத் தொடங்குவது இக்காலகட்டத்திலிருந்தே என்பதும் கவனத்திற்குரியது. அ.செ முருகானந்தன் எழுதிய 'மாடு சிரித்தது' சிறுகதை அரசியல் மாற்றத்தையும் 'மனிதமாடு' சமூக மாற்றத்தையும் திறம்படச் சித்திரித்துள்ளன. கனக செந்திநாதனின் சிறுகதைகள் பலவும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டம்சங்களை சிறப்பாகப் பதிவு செய்கின்றன.

எழுத்தாளனின் சமூகப் பார்வை அகற்சி பெறுவதை அ.செ.முருகானந்தன் மலையகம் பற்றி எழுதிய 'காளிமுத்துவின் பிரஜாவுரிமை' நெஞ்சத்தை ஈர்க்கக் கூடிய விதத்தில் வெளிப்படுத்தியுள்ளது.

முஸ்லிம் எழுத்தாளரின் வரவும் இக்காலப் பகுதியிலேயே இடம்பெற ஆரம்பிக்கின்றது. புரட்சிக் கமால் (1948இல்) எழுதியிருந்த 'சதிகாரி' எழுத்தாளரது புனைபெயருக்கேற்ப புரட்சிகரமான சிருஷ்டியாகின்றது. பித்தனின் 'கலைஞனின் தியாகம்' புதுமைப்பித்தனின் மறைவையும் 'பாதிக்குழந்தை' முஸ்லிம் சமூக நிலை பற்றிய கடும் விமர்சனத்தையும் வெளிப்படுத்துகின்றன.

பெண் எழுத்தாளரின் வரவு நிகழ்வதும் இக்காலகட்டத்திலேதான். மறுமலர்ச்சி சஞ்சிகை சிறுகதைப்போட்டியூடாக இரு பெண் எழுத்தாளர்கள் (பத்மா துரைராஜா, பொ. கதிராயித்தேவி, மற்றொருவரான கமலா தமிழ்நாட்டு எழுத்தாளராக அறியப்படுகிறார்)

பாரதி (மண்டூர்) சஞ்சிகையில் ஈழத்தின் பல பிரதேச எழுத்தாளர்களுக்கும் களமமைக்கின்றது. எடுத்துக்காட்டாக: இச்சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றவர் யாழ்ப்பாண எழுத்தாளரான என்.கே.ரகுநாதன் ஆவார். (இவரது சிறுகதை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாதிப்பிரச்சினை பற்றியது) இரத்தினபுரியிலிருந்து எழுதிய 'சிறிது வெளிச்சம்' கு.ப.ரா, இத்தலைப்பில் எழுதியிருந்த சிறுகதையொன்றினை நினைவுபடுத்தக்கூடியது.

முற்போக்குச் சஞ்சிகையான பாரதி (கொழும்பு) யில் முல்க்ராஜ் ஆனந் முதலானோரின் முற்போக்கு மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் சில வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

'எரிமலை' (திருகோணமலை) பத்திரிகையூடாகவும் கிழக்கிலங்கைப் பெண் எழுத்தாளர்கள் இருவர் (ந. பாலேஸ்வரி, இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்) அறிமுகமாகின்றனர்.

சுருங்கக் கூறின் ஆரம்பத்தில் கவனித்த ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் முதற்காலகட்டத்திற்கும் ஈழத்தில் சிறுகதை ஆழமாகச் சுவறத் தொடங்கிய முற்போக்குச் சிறுகதைகள் உருவான (ஐம்பதுகளில் ஆரம்பிக்கும்) மூன்றாவது காலகட்டதிற்குமான இணைப்பை இம் மறுமலர்ச்சிக் காலகட்டமே ஏற்படுத்தியிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், முற்குறிப்பிட்ட 'எரிமலை' பத்திரிகை மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'உதயன்' சஞ்சிகை, கொழும்பிலிருந்து வெளிவந்த 'கலைஞானி' சஞ்சிகை முதலானவை பார்வைக்குக் கிடைக்கின்றபோதுதான் இந்த இரண்டாவது காலகட்ட சிறுகதை வரலாறு - வளர்ச்சி பற்றிய தேடல் முடிவு பெறுமென்பதனை மனங்கொள்வது அவசியம்.

இறுதியாக, ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றிய இன்றுவரையான ஆய்வு முயற்சிகள் பற்றி ஆழ்ந்து நோக்கும்போது ஐம்பதுகள் தொடக்கம் அறுபதுகள் வரையான ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றிய அவதானிப்பிலும் முக்கியமானதொரு குறைபாட்டினை அவதானிக்க முடிவது பற்றி சிந்திக்கவேண்டி உள்ளது. இம்மூன்றாவது காலகட்டத்தில் முற்போக்குச் சிறுகதைச் செல்நெறி செல்வாக்குப் பெறத் தொடங்கியது யாமறிந்ததே. அதேவேளையில் தேசிய இனப்பிரச்சினையும் இனமுரண்பாடும் முனைப்புறத் தொடங்கின. இத்தியாதி விடயங்கள் சார்ந்தெழுந்த சிறுகதைச் செல்நெறியின் தோற்றம் பற்றிய கவனிப்பு இடம்பெறவில்லை. 'சுதந்திரன் சிறுகதைகள்' தொகுப்பின் வரவு இவ்விதச் செல்நெறி பற்றிய தேடலுக்கு வழிவகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'கலைச்செல்வி சிறுகதைகள்' திரட்டிலுள்ள சிறுகதைகள் பற்றியும் கவனிக்கின்றபோதுதான் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி (1930-1960) பற்றிய இம்மதிப்பீடு முழுமையடையும் என்பதும் மனங்கொள்ளத் தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை




# பின் காலனித்துவமும் தமிழ்ச் சிறுகதைத் தோற்றமும்

க.பஞ்சாங்கம்

காலனித்துவம் நிலைநிறுத்தப்பட்ட பிறகு பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட எத்தனையோ பல மாற்றங்களில் தமிழ்க் கலை இலக்கியத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மிகவும் உன்னிப்பாக ஆராயத்தக்கவை ஆகும். அன்றைக்குத் தமிழ் இலக்கியம் இருந்த நிலையைப் பாரதியார் தன்னுடைய "சின்னச் சங்கரன்" கதையில் பதிவு செய்துள்ளார். குட்டி ஜமீன்தார்களுக்குக் கிளுகிளுப்பு ஊட்டும் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள் என்பதைச் "சாற்றுவதும் காமக்கலை, சாதிப்பதும் போற்றுவதும் காமன் அடிப்போது" என்று எழுதினார். மேலும் "யமகம், திரிபு, பசு, மூத்த பந்தம், நாக பந்தம், ரத பந்தம், தீப்பந்தம் முதலிய யாருக்கும் அர்த்தம் ஆகாத நிர்ப்பந்தங்களைக் கட்டி, அவற்றை மூடர்களிடம் காட்டி அமர்த்தனென்று மனோராஜ்யம்" செய்துகொண்டிருந்தது புலவர் கூட்டம் என்கிறார் பாரதி. இத்தகைய சூழலில்தான்1835-இல் புகுத்தப்பட்ட கட்டாய ஆங்கிலக் கல்வியின் மூலம் தமிழர்களுக்கு அறிமுகமான மேலைநாட்டு இலக்கிய வடிவங்களில் ஒன்றான சிறுகதையின் வருகை காலனித்துவத் தமிழ்ச் சமூகத்திற்குள் எந்த அளவிற்கு ஆழமாகவும் நுட்பமாகவும் வினைபுரிந்துள்ளது என்பதை விரிவாகத் தமிழாராய்ச்சி உலகம் ஆராய்ந்து அறிய வேண்டும். இது பெரிதும் ஆர்வம் தரத்தக்க ஒரு முயற்சியாகும்.

இலக்கியம் என்றால் அது செய்யுள் வடிவில்தான் இருக்க முடியும் என்ற தமிழ் மரபு கேள்விக்கு உள்ளாகி உரைநடையிலும் இலக்கியம் படைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. மேலும் இலக்கியம் என்றால் புராணம் சார்ந்த கதைகளின் மேல்தான் கட்ட முடியும் என்பது போய் நம் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளைக் குறிப்பிட்ட விதத்தில் எடுத்துரைக்கும் போது அதுவும் அழகான இலக்கியம்தான் என்ற உணர்வு உருவாகத் தொடங்கியது. இலக்கியம் படைக்க மொழி இலக்கணம், அணி இலக்கணம், யாப்பு இலக்கணம் எனப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது மாறி ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியப் பயிற்சி அடிப்படைத் தேவை என்ற காலனித்துவச் செல்வாக்கு எங்கும் பரவியது."ராஜ பாஷையையும் தமிழையும் கலந்து படிக்க வேண்டும்" என்றும் "இரண்டையும் நன்றாக உணர்ந்தவர்கள் மட்டுமே உத்தமமான வசன காவியங்கள் எழுதக் கூடும்" என்றும் கருத்துரைத்தார் முனிசிப் வேதநாயகம் பிள்ளை. மேலும் சாதி, வர்க்கம், பாலினம் என்று பலவிதமாகப் பிளவுண்டு கிடந்த தமிழ்ச் சமூகத்தில் எல்லோருக்கும் கல்வி என்ற ஆங்கிலக் கல்வி முறையினால் யாரும் எழுதலாம், வாசிக்கலாம் என்கிற ஜனநாயகத்தன்மை உருவாகி ஆதிக்க மரபுவாதிகளை அதிர வைக்கும் சூழல் ஏற்பட்டது. காலனித்துவத்தின் வருகையினால் நிறுவப்பட்ட அச்சுக்கூடங்களின் பக்கவிளைவாகப் புறப்பட்டுக் கிளம்பிய பல்வேறு பத்திரிக்கைகளின் தேவையின் பொருட்டுச் சிறுகதைகளை எழுதுகிற போக்கும் பெருகியது. கூடவே இலக்கியத்தை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் கும்பலாக இருந்து கேட்டல் என்கிற மரபிலிருந்து விலகித் தனியாக வாசித்துத் தனியாகத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **வெள்ளைக்கார அதிகாரிகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்குத் தொடங்கப்பட்ட "சென்னைக் கல்விச் சங்கம்" 1839 இல் வெளியிட்ட "பத்திரத் திரட்டு" என்ற நூலில்தான் முதன்முதலில் சிறுகதையையும் நாவலையும் சேர்த்துக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் புனைகதை (fiction) பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன**

தனக்கான உலகிற்குள் பிரவேசித்துப் பரவசம் காணும் புதிய நுகர்வு அனுபவம் பெருவாரித் தமிழர்களுக்கு வாய்த்தது. மேலும் எழுதப்படும் இலக்கியம் குறித்து மதிப்புரை என்றும் விமர்சனம் என்றும் எழுதி இலக்கிய உரையாடலை வளர்க்கும் புதிய சூழலும் உருவானது. இவையெல்லாம் காலனித்துவத் தமிழ்ச்சமூகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே சிறுகதையை ஒருவகையான இலக்கிய வடிவம் என்பதற்கும் மேலாக அது காலனித்துவச் சமூகத்தின் மிகப்பெரிய பண்பாட்டு நடவடிக்கை என்ற கோணத்தில் பார்த்துப் பழக வேண்டியிருக்கிறது.

### தொடக்ககால முயற்சிகள்:

தமிழில் கதை சொல்வதுதான் மரபாக இருந்து வந்துள்ளது. ஆனால் உரைநடையில் கதை எழுதுவதன் மூலம், தான் காணும் சமூகத்தை விமர்சிக்கிற புதிய போக்கைத் தமிழில் தொடங்கி வைத்தவராக இத்தாலி நாட்டுப் பாதிரியாரான வீரமாமுனிவர் (கொன்ஸ்டாண்டியஸ் பெஸ்கி -1680 - 1749)கருதப்படுகிறார். இவர் எழுதிய "பரமார்த்த குருவின் கதை "என்ற சிறுநூல் எட்டுக் கதைகளைக் கொண்டது. (1).இக்கதைகள் தமிழ்நாட்டுக் குருமார்களை எள்ளி நகையாடுவதற்கு எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகிறார் ஜி.யு.போப் (2). வரலாற்று அறிஞர் கே கே பிள்ளை இந்துமத சன்னியாசிகளைக் கேலி பண்ணுவது இக்கதைகளின் நோக்கம் என்கிறார். (3) வ.சு.செங்கல்வராய பிள்ளை இக்கதைகளை "உரைநடை அங்கதம்" என அழைக்கிறார்.(4)மேற்கண்ட இக் கூற்றுக்களின் மூலம் நவீனச் சிறுகதையின் அடிப்படையான வாழும் சமூகத்திலிருந்து கதைப் பின்னலை எடுத்துச் சமூகத்தை விமர்சனத்திற்கு உட்படுத்துதல் என்கிற முறையில் "பரமார்த்த குருவின் கதை" தமிழ் இலக்கிய வெளியில் ஒரு புதிய தொடக்கம் என்பது உறுதியாகிறது.

****

வெள்ளைக்கார அதிகாரிகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்குத் தொடங்கப்பட்ட "சென்னைக் கல்விச் சங்கம்" 1839 இல் வெளியிட்ட "பத்திரத் திரட்டு" என்ற நூலில்தான் முதன்முதலில் சிறுகதையையும் நாவலையும் சேர்த்துக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் புனைகதை (fiction) பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன என்ற தகவல் முக்கியமான ஒன்றாகும். (5)சிறுகதை இலக்கியம் நோக்கித் தமிழை எடுத்துச் சென்றவர்களில் குறிப்பிடத்தக்கவராக அறியப்படுபவர் மேற்கண்ட சென்னைக் கல்விச் சங்கத்தில் ஆசிரியராக இருந்த தாண்டவராய முதலியார் ஆவார். இவர் 1826 - இல் உலகப் புகழ்பெற்ற பஞ்ச தந்திரக் கதைகளை மராட்டிய மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து அச்சடித்து வாசிக்க வழங்கியதோடு "கதா சரித் சாகரம் "என்ற வடமொழிக் கதைக்கொத்தில் இருந்து எடுத்துத் தான் தொகுத்த கதைகளையெல்லாம் "கதா மஞ்சரி" (1826)என்ற பெயரில் அச்சில் கொண்டு வந்தார். (6) இதைத்தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல வாய்மொழிக் கதைகள் அச்சிடப்பட்டுத் தொகுப்புகளாக வெளிவந்தன (7). அக்காலத்தில் புதிதாக அச்சடிக்கப்பட்டு வெளிவந்த பத்திரிக்கைகளும் சிறுகதை என்ற பெயரில் கதைகளை வெளியிடத் தொடங்கின. (8) இப்படித்தான் காலனித்துவத்தின் வழியாகக் கதை கேட்டல் என்ற மரபிலிருந்து கதை வாசித்தல் என்ற புதிய பழக்கம் தமிழ் வாசகர்களின் உணர்வுத் தளத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது. இதன் தொடர்ச்சியாகக் கல்வி நிறுவனங்களிலும் சிறுகதைகள் பாடத்திட்டத்தில் இடம்பெறத் தொடங்கின. திருமணம் செல்வக்கேசவராய முதலியார் (1864-1921) எழுதிய "அபிநயக் கதைகள்" என்ற நூல் இந்த இடத்தில் குறிப்பிடத்தக்க ஒன்று. இவர் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். தனது தொகுப்பிற்கு *Tamil Novelettes* என்று ஆங்கிலத்தில் துணைத் தலைப்பும் தந்துள்ளார். இந்தத் தொகுப்பில் ஆறு கதைகள் உள்ளன. அவற்றில் ஒன்று "கோமளம்" என்ற கதை. இது காவிரிப்பூம்பட்டினம், யாழ்ப்பாணம் ஆகிய தமிழ் நிலம் சார்ந்து புனையப்பட்டாலும் அடிப்படையில் ஷேக்ஸ்பியர் எழுதிய "சிம்பலின்" என்ற நாடகத்தைத் தழுவியதாகும். இது போல பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலம் வழிவந்த இந்தப் புனைகதைத் துறையில் ஆர்வம் காட்டிய மற்றொரு பண்டிதர் ச.ம. நடேச சாஸ்திரி ஆவார். (1859-1906). இவர் தென்னிந்தியாவில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டு வந்த நாட்டுப்புறக் கதைகளைத்திரட்டி இந்தியன் ஆண்டிக்குயரி (*Indian Antiquary*) என்ற இதழில் வெளியிட்டு வந்தார். இதனால் இலண்டனில் இருந்த நாட்டுப்புற இலக்கியக் கழகம் இவரைத் தனது உறுப்பினராக்கிக் கொண்டது. இவ்வாறு தமிழ் இலக்கியச் செயல்பாடு என்பது காலனித்துவத்தோடு இணைந்து இயங்க வேண்டிய சூழல் இருந்ததை உணர முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1886-ல் தொகுத்த நாட்டுப்புறக் கதைகளைத் “திராவிட மத்திய காலக் கதைகள்” என்றும் “தக்காண பூர்வக் கதைகள்.” என்றும் தொகுத்து வெளியிட்டார். இதில் அவர் எழுதிய முன்னுரையில் கதை குறித்து அவர் கூறும் கருத்து, கதையை ஓர் இலக்கிய வடிவமாக ஏற்கத் தயங்கிய மரபார்ந்த தமிழ்ப் புலவர்களை முன்வைத்துச் சொன்னதுபோலவும் அதேநேரத்தில் காலனித்துவம் வழங்கிய இந்த உரைநடை இலக்கியம் குறித்த புதிய புரிதலை உள்வாங்கிக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. அவர் எழுதுகிறார்:

“கதைகளும் ஒரு வித சாஸ்திரம்தான். அவைகளை ஒன்று சேர்த்து எழுதிப் படித்து அவைகள் மூலமாய் அவைகள் எத்தேசத்தில் வழங்கிவருகின்றனவோ அத்தேசத்தின் நடையுடைபாவனை, நாகரிகம், வித்தை முதலியவைகளை அறியக் கூடும் என்று வித்துவான்கள் எத்தேசத்திலும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்... கதைகளுக்கும் மற்ற சாஸ்திரங்களைப் போல் அறிவைப் பரவச் செய்யும் குணம் நமது மூதாதையர்களால் வெகு நாளைக்கு முந்தியே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இத்துடன் கிலேசம் அல்லது துக்கம் அடைந்திருக்கும் மனதைக் களிப்பிக்கிற குணம் கதைகளுக்கும் அதிகமாய் உண்டு. (9)”

இவ்வாறு நவீன கதைகள் குறித்துத் தெளிவான பார்வை கொண்டிருந்த நடேச சாஸ்திரியார் 1894 ஆம் ஆண்டு “தானவன் என்ற போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்” என்ற தலைப்பில் பல மர்மக் கதைகளை ஆங்கில இலக்கியத்தைத் தழுவி எழுதி வெளியிட்டார். இவைகள் தமிழ்நாட்டிற்கு ஒத்தவைகளாக எழுதப்பட்டிருக்கின்றன என்று கூறுவதும் கவனிக்கத்தக்கது. இத்தகைய கதைகளால் வாசித்தல் மூலம் அடையும் இன்பத்தை எளிதாக வாசகர் மனதில் நிலைநிறுத்த முடிந்தது. மேலும் எந்தக் காலத்திலும் புதியன உள்ளே வரும்போது அவைகள் மரபுக்கு ஏற்றதுதான் எனும் முகமூடியை அணிந்துகொண்டுதான் தங்களை நிலை நிறுத்திக் கொள்கின்றன. தமிழ்ச் சமூகத்திலும் இதுதான் நடந்துள்ளது. இப்படித்தான் ஆங்கில இலக்கியக் கல்வி, கல்விக்கூடங்களில் அறிமுகமாகி ஓர் 50 ஆண்டுகளுக்குள் தமிழ் இலக்கியத்தின் திசை மிக வேகமாகத் திருப்பப்பட்டுவிட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியிடம் மிக வேகமாகத் தங்களை ஒப்புக் கொடுத்து விட்ட தமிழக ஆட்சியாளர்கள் போலவேதான், இலக்கிய உலகத்திலும் நிகழ்ந்துள்ளது. அங்கங்கே எழுந்த மரபார்ந்த பண்டிதர்களின் எதிர்ப்பு முன்னெடுப்புக்கள், முணுமுணுப்புகள் எடுபடவில்லை. சிறுகதை நிலைபெற்றுவிட்டது. தொடர்ந்து பாரதியார் (1882 - 1921), வ.வே.சு.ஐயர் (1881-1925), மாதவையா(1872-1925) என்று ஆங்கிலம் அறிந்த பலரும் நவீன தமிழ்ச் சிறுகதைகளைப் படைத்துத் தமிழ் இலக்கியப் பெருவெளியில் சிறுகதையை நிலை நிறுத்தி விட்டனர்.

அடிக்குறிப்புகள்:

1) புதுச்சேரியைச் சார்ந்த முத்துசாமிப்பிள்ளை என்பவர் கொடுத்த கையெழுத்துப் பிரதியை வைத்து 1822 இல் சென்னைக் கல்விச் சங்கத்தார் பரமார்த்த குருவின் கதையை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.1876- இல் வீராசாமி செட்டியார் வெளியிட்ட “விநோதரச மஞ்சரி” என்னும் தொகுப்பிலும் இது “அவிவேக பூரண குருகதை” என்ற பெயரில் வெளிவந்துள்ளது.
2) G.U.Pope, The sacred kural, preface,p.v
3) K.K.Pillai,Tamil culture,vol.V1,no.3(1957),P166
4) V.S.Chengalvaraya pillai, History of Tamil prose literature,p.51
5) கோ. கேசவன், தமிழ்ச் சிறுகதைகளில் உருவம், ப.28.
6) பெ.கோ சுந்தர்ராஜன் (சிட்டி), சிவபாதசுந்தரம், தமிழில் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும், ப.13.
7) ஈசாப்பின் நீதிக்கதைகள் (1853),மதனகாமராஜன் கதை (1855), மயில் ராவணன் கதை (1868), முப்பத்திரண்டு பதுமைக் கதைகள் (1869), தமிழறியும் பெருமாள் கதை, (1869), விவேக சாகரம்(1875),கதாசிந்தாமணி, (1876) தக்காணத்துப் பூர்வக் கதைகள் (1880), திராவிட பூர்வகாலக் கதைகள் (1886) திராவிட மத்திய காலக் கதைகள் (1886), தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை, பூலோக வினோதக் கதைகள் (1897) முதலியன பலவும் அச்சடிக்கப்பட்டு வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கப் பயன்பட்டன.
8) உதயதாரகை, தினவர்த்தமானி, விவேகசிந்தாமணி, விவேகபானு, வித்யா பானு, சக்கரவர்த்தினி, புதுவைக் கலைமகள், வித்யா விகாரிணி- இப்படிப் பல இதழ்கள் வெளிவந்தன. இக்காலகட்டத்தில்1869 இல் அ.சதாசிவம்பிள்ளை (1820 - 1895) வெளியிட்ட “ நன்னெறி கதா சங்கிரகம்” என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் குறிப்பிடத்தகுந்தது. இதற்கு விளக்கமாக “இதிலே சன்மார்க்க சாதனைக்கும் போதனைக்கும் உரிய அநேக விந்தைக் கதைகள் அடங்கியிருக்கின்றன” என்ற வரிகளோடு ஆங்கிலத்திலும் “கலெக்சன் ஆப் மாரல் டே லஸ் இன் தமிழ்” என்றும் அச்சடித்திருந்தார்.தமிழில் சிறுகதையின் வாசிப்புப் பழக்கம் எவ்வாறு ஆங்கில மொழியோடு இணைந்து காலனித்துவத்தின் பக்கவிளைவாக வளர்ந்திருக்கிறது என்பதை இவைகள் புலப்படுத்துகின்றன..
9) திராவிட மத்திய காலக் கதைகள், முன்னுரை, ப. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைச் சிறப்பிதழ்

# அம்பையின் சிறுகதைகள் – லிங்கச் சொல்மையவாதத்திற்கு எதிரான பெண் அடையாளத்தின் குரல்

இரா.ஸ்ரீவித்தியா

அம்பையின் சிறுகதைகளை ஆய்வு செய்வதற்கு முன் அவருடைய வாழ்க்கைப் பின்னணி குறித்து அறிந்து கொள்வது அவசியமாகிறது. எழுத்தாளரின் வாழ்வனுபவங்களே அவர்தம் படைப்பு அனுபவங்களாக வெளிப்படுகின்றன. அம்பையின் சொந்த வாழ்வு அனுபவங்களுக்கும் அவர்தம் படைப்புகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதைக் காண முடிகிறது. அதனால் அவர்தம் வாழ்க்கைக்குறிப்புகளை முதலில் தொகுத்துக் கொள்வது இன்றியமையாததாகிறது. இன்றைய கேரளாவிலும் அன்றைய சென்னை



மாகாணத்திலுமிருந்த பாலக்காட்டிலிருந்து புலம்பெயர்ந்த பிராமணக் குடும்பத்தைச் சார்ந்தவர் அம்பை. பின்னர் அவருடைய குடும்பம் கோயம்புத்தூரில் குடியேறியது. 1944இல் பிறந்த அம்பையின் இயற்பெயர் சி.எஸ்.லட்சுமி. அவருடைய அம்மாவழிப் பாட்டியின் பெயர் என்பதாலும் வெள்ளிக்கிழமை பிறந்ததாலும் இப்பெயர் அவருக்குச் சூட்டப்பட்டது. தானாக முயன்று தமிழ் கற்று நைடதம் போன்ற கடின செய்யுட்களுக்கு (பின்னர் இந்த நைடதம் பரிசாகப் பாட்டி அம்பைக்கு வழங்குகிறார்.) எல்லாம் பொருள் கூறும் பாட்டியின் தமிழ் ஆர்வம் அம்பையைத் தொற்றிக் கொண்டது. பாட்டியும் அம்மாவும் அவரிடத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இசையில் ஆர்வம் இருப்பினும் அதைத் தொடர முடியாத அம்பையின் தாய், ‘நான் நினைச்ச பல விஷயங்கள பண்ண முடியாம போச்சு. என்னுடைய குழந்தைகளாவது அவுங்க விரும்பினதைப் பண்ணனும்’ (காலச்சுவடு நேர்காணல்) என்ற அவருடைய எண்ணம் அம்பையின் பல்வேறு சுய தேர்வுகளுக்குக் களம் அமைத்துத்தந்தது.

அம்பை அவருடைய பெற்றோருக்கு மூன்றாவதாகப் பிறந்தவர். மூத்தவர் மகன். இரண்டாவது பெண். மூன்றாவதாக அம்பை பிறந்ததால் இதுவும் பெண்ணாகப் பிறந்துவிட்டதே என்ற கவலை குடும்பத்தினருக்கு. அவருடைய பிறப்பு ஒரு விபத்தாக எதிர்கொள்ளப்பட்டது. பிறந்து வீட்டிற்கு வந்த பின்னரும் அவரைத் தந்தை வெகுநாட்களுக்குக் கொஞ்சவே இல்லை என்பது அவருடைய அம்மாவின் ஆதங்கம். அண்ணன், அக்காவின் சிறுவயது புகைப்படம் எல்லாம் இருக்கும்போது தனக்கு நான்கு வயது வரை புகைப்படமே எடுக்கப்படவில்லை என்பதை அம்பை சுட்டிக் காட்டுகிறார். பெண்ணாகப் பிறந்தது மட்டுமில்லாமல் சிவந்த நிறமாகவும் இல்லாததால் (அம்மா ஒரு கொலை செய்தாள் கதையில் வரும் நிரஜாட்சியை இங்கு நினைவு கூரலாம்.) அவருடைய அப்பா அவரைக் கறுப்பி, கறுப்பி என்று கூப்பிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அவரிடையே தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்துகிறது. கட்டுப்பாடுகள் பெரிதாக இல்லை என்றாலும் மறைமுகமாகக் கட்டுப்பாடுகளை உணர்த்திக்கொண்டே இருக்கும் குடும்பம் அவருடையது. சமையலறைக்குள் அம்மா விடாததால் அவர்வீட்டு அல்சேஷன் நாய் இரண்டு காலை மட்டும் வெளியே வைத்துக்கொண்டு மீதி உடலை அடுக்களைக்குள் நுழைத்திருப்பது போல பெண்களின் நிலையும் குடும்பக் கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டுதான் வெளியுலகுக்கு வர முடிந்தது என்பதை எள்ளலாகக் குறிப்பிடுகிறார்.

அம்பை மட்டுமே அவருடைய குடும்பத்தில் தமிழ் எழுதப் படிக்க அறிந்தவர் (தமிழ்வழிக் கல்வியைக் கற்றவர்). ஏனையோர் சொந்தக் கடிதங்களைக்கூட ஆங்கிலத்திலேயே எழுதுபவர்கள். பதினாறாவது வயதில் ஆர்.வி. நடத்திய கண்ணன் என்கிற குழந்தைகளுக்கான இதழில் அம்பை எழுதிய 'நந்திமலைச் சாரலிலே' என்கிற நாவல்தான் அவருடைய முதல் படைப்பு. அதற்காக அவர் சூட்டிக்கொண்ட பெயர்தான் அம்பை. அந்தக்காலக்கட்டத்தில் (1960) ஆனந்தவிகடனில் தேவன் 'பார்வதியின் சங்கல்பம்' என்ற குறுநாவலைத் தொடர்கதையாக எழுதியுள்ளார். அந்தக் கதையில் தலைவி பார்வதி கணவனால் உதாசீனப்படுத்தப்படுபவள். ஒரு கட்டத்தில் கணவன் தன்னைக் கைவிட்டுவிடத் தன்னுடைய தமிழறிவைக்கொண்டு பிரபலமான எழுத்தாளராக முன்னேறுகிறாள். புகழ்பெற்ற பின்னர் அவளுடைய கணவன் சேரவரும்பொழுது, நீ எனக்குத் தேவையில்லை என்று மறுத்துவிடுகிறாள். எழுத்தாளராகும்பொழுது பார்வதி தனக்குச் சூட்டிக்கொண்ட பெயர்தான் அம்பை. பார்வதியின் இந்த உறுதியால் கவரப்பட்ட அம்பை, அதனைத் தனக்குரிய புனைபெயராகவும் தெரிவு செய்கிறார். பின்னர் மகாபாரதத்தைப் படிக்க நேரும்பொழுது அம்பையின் பெயர் அவருக்கு மேலும் பிடித்து விடுகிறது. தொடர்ந்து தமிழ்ப் புனைவு எழுத்துக்களுக்கு இந்தப் புனைபெயரையும் ஆங்கிலப் படைப்புகளுக்கு இயற்பெயரையும் பயன்படுத்துகிறார்.

அம்பை பெங்களூர் பல்கலைக்கழகத்தில் இளங்கலையும் சென்னைக் கிறித்துவக்கல்லூரியில் முதுகலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘பெண் பிறப்பதில்லை, உருவாக்கப்படுகிறாள்’ என்கிறார் சிமோன் தெ பௌவாயர். அப்படி உருவாக்கப்படுகின்ற சூழல்களையும் அத்தகைய கட்டமைப்புகளுக்கு எதிரான குரலையும் அம்பையின் சிறுகதைகளில் காண முடிகிறது.**

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முனைவர்ப் பட்டமும் பெற்றவர். அவருடைய முனைவர்ப் பட்ட ஆய்வேட்டின் தலைப்பு *American Policy towards refugees fleeting Hungary due to the failed Revolution of 1956.* துணைவர் விஷ்ணு மாத்தூருடன் தற்சமயம் மும்பையில் வசித்து வருகிறார். நந்திமலைச் சாரலிலே என்ற நாவலைத் தொடர்ந்து அம்பை எழுதிய அந்திமாலை (1966) நாவல் கலைமகள் நாராயணசாமி ஐயரின் பரிசினைப் பெற்றது. 1967இல் சிறகுகள் முறியும் என்கிற கதை கணையாழியில் வெளிவந்தது. பின்னர் அதே தலைப்பில் (1976) சிறுகதைத் தொகுப்பு நூலாக வெளிவந்தது. 1976இல் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் பற்றி அவர் மேற்கொண்ட ஆய்வு *The Face Behind the Mask* என்ற ஆங்கில நூலாக (1984) வெளிவந்தது. அவருடைய இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’ (1988). தொடர்ந்து வெளிவந்த காட்டில் ஒரு மான் (2000), வற்றும் ஏரியின் மீன்கள் (2007), கறுப்புச் சிலந்தியுடன் ஓர் இரவு (2013), சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை (2021 ஆண்டுக்கான சாகித்ய அகாடமி பரிசு பெற்றது.) ஆகிய அவருடைய சிறுகதைத் தொகுப்புகள் குறிப்பிடத்தகுந்தவை.

ஆங்கிலத்தில் அவருடைய படைப்பாக்கங்கள் லட்சுமி ஹோம்ஸ்ட்ராமால் மொழிபெயர்க்கப்பட்டு *A Purple Sea* (1992 - இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 சிறுகதைகள் அடங்கியுள்ளன.) என்ற பெயரிலும் *In A Forest, A Deer* (2006), *Fish in a Diwindling Lake* என்ற பெயரிலும் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இந்திய மொழிகளில் வெளிவந்த புனைவு மொழிபெயர்ப்புக்கான வகைமையின்கீழ் அம்பை வோடஃபோன் கிராஸ்வேர்ட் புத்தகப் பரிசினைத் தனது மொழிபெயர்ப்பாளருடன் (*In A Forest, A Deer*) இணைந்து பெற்றார். அமெரிக்காவில் உள்ள விளக்கு அமைப்பின் புதுமைப்பித்தன் விருது, கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வாழ்நாள் இலக்கிய விருது(2008), தமிழக அரசின் கலைஞர் மு. கருணாநிதியின் பொற்கிழி விருது (2011), சென்னைப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத்தின் உன்னதத்திற்கான விருது (2011) ஆகிய பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். அண்மையில் சாகித்ய அகாடமி பரிசையும் பெற்றுள்ளார்.

பெண்ணிய ஆய்வில் முப்பது வருடங்கள் அம்பை தம்மை ஒப்புக்கொடுத்தவர். *The Hindu, The Times of India* ஆகிய செய்தித்தாள்களிலும் *Economic and Political Weekly* யிலும் கட்டுரைகள் எழுதியவர். சிகாகோ பல்கலையில் 1992 இல் *Visiting Fellow* ஆகப் பணியாற்றியவர். ஃபோர்டு ஃபவுண்டேஷனின் நிதியுதவி பெற்று *Illustrated Social History of Women in Tamil* என்ற தலைப்பிலும் ஹோமிபாபா உதவித்தொகை பெற்று *An Oral History and Pictoral Study* என்ற தலைப்பிலும் ஆய்வுத்திட்டங்களை மேற்கொண்டவர். இந்த ஆய்வுகள் *Seven Seas and Seven Mountains* பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. அவற்றுள் *The Singer and the Song* என்ற முதல் தொகுதி பெண் இசைக்கலைஞர்களின் நேர்காணல்கள் அடங்கிய தொகுப்பாகும். *Mirrors and Gestures* என்ற இரண்டாவது தொகுதி பெண் நடனக்கலைஞர்களிடமிருந்து எடுக்கப்பட்ட நேர்காணல்களின் தொகுப்பாகும். 1988இல் *SPARROW(Sound & Picture Archives for Research on Women)* என்ற ஆவணக்காப்பகத்தை *NGO* உதவியுடன் நிறுவி அதன் இயக்குநராகச் செயல்படுகிறார். இக்காப்பகத்தில் பெண் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் படைப்பாக்கங்கள் சேகரம் செய்யப்பட்டுள்ளன. பெண் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் பற்றிய ஏராளமான நூல்களை ஸ்பேரோ வெளியிட்டுள்ளது. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட இரோம் ஷர்மிளாவின் *Fragrance of Peace* என்ற கவிதைத் தொகுப்பை அமைதியின் நறுமணம் (2010) என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார். மிச்சிகன் பல்கலையில் *Global Feminism Project*ன் உறுப்பினராகவும் விளங்குகிறார். ‘எந்தச் சமரசமும் செய்துகொள்ளாத ஒரு பெண்ணியவாதி’ என்று தன்னைக் கருதுகிறார். இத்தகைய விரிவான பின்னணி அம்பை என்கிற ஆளுமையைப் புரிந்து கொள்வதற்கு ஏற்பாக அமைகிறது.

‘பெண் பிறப்பதில்லை, உருவாக்கப்படுகிறாள்’ என்கிறார் சிமோன் தெ பௌவாயர். அப்படி உருவாக்கப்படுகின்ற சூழல்களையும் அத்தகைய கட்டமைப்புகளுக்கு எதிரான குரலையும் அம்பையின் சிறுகதைகளில் காண முடிகிறது. எப்படி இருக்கிறோம் என்பதைவிட எப்படி இருக்க மறுக்கிறோம் என்பது முக்கியமானது. அத்தகைய மறுப்பையும் சுயாதீனமான தன்னிலையின் குரல்களையும் அம்பையின் கதைகளில் கேட்க முடிகிறது. சிறகுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முறியும், வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, காட்டில் ஒரு மான் ஆகிய தொகுப்புகளில் உள்ள கதைகளையும் மூன்று நாடகங்களையும் இணைத்து அம்பை சிறுகதைகள் (1972-2000) என்ற தலைப்பில் காலச்சுவடு பதிப்பகம் ஒரு தொகுப்பாகக் கொண்டு வந்துள்ளது. அந்தத் தொகுப்பிலிலுள்ள அம்மா ஒரு கொலை செய்தாள், வாமனன், புனர், அணில், திக்கு, ஆரம்பகாலக் கவிதைகள், அடவி ஆகிய சிறுகதைகளை முன்வைத்துச் சில உரையாடல்களை நிகழ்த்த இக்கட்டுரை முனைகிறது.

காலச்சுவடு நேர்காணலில் அம்பை இவ்வாறு கூறுகிறார். 'எனக்கு ருத்ரவீணா ஒரு குரு கத்துக் கொடுத்துட்டு இருந்தார். அவர் பேசறபோது சொல்லுவார். 'நான் வெறும் பாட்டப் பத்தி சொல்றதா நெனைக்காதே. இது வாழ்க்கை சம்பந்தப்பட்டது. ஒரு ராகம் உன்னை ஒரு பெரிய சீற்ற அலையா வந்து தாக்கக் கூடாது. கரையில நிக்கிறபோது உம்மேல அது மெத்துன்னு வந்து உன்ன தொடறது பாரு. அந்த மாதிரி இருக்கணம் ராகம். அந்த அலை முதல்ல பெரிய அலையா இருந்தது. அதன் அத்தனை தாக்கத்தையும் தாங்கிண்டுதான் உன்னை மெத்துனு தொடறது. இதை நான் எல்லாத்துக்குமே சம்பந்தப்படுத்துறேன். இலக்கியம், சினிமா எல்லாத்துக்குமே பெண்ணியம், மார்க்சியம் எதுவானாலும் அது உன்ன வந்து தொடறப்ப அத்தனை வீரியத்தையும் உள்ளடக்கியிருக்கணும்' என்று அம்பை கூறுவது அவருடைய படைப்பாக்கங்களுக்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது. நுட்பமான பெண்ணியக் கோட்பாடுகளைப் பிரச்சார நெடியுடன் பயன்படுத்தாமல், வலிந்து புகுத்தாமல், ஓங்கி ஒலிக்காமல் அதே சமயத்தில் வீரியத்துடனும், அழகான அங்கதத் தொனியில் கலைநுட்பத்துடன் பதிவு செய்வதில் அம்பை கைதேர்ந்தவராக விளங்குகிறார்.

## மொழியும் தன்னிலையாக்கமும்

மொழிக்கும் தன்னிலையாக்கத்திற்கும் உள்ள தொடர்பு பெண்ணியத் திறனாய்வில் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். மொழி, தன்னிலையாக்கம், சமூக அமைப்பு மற்றும் அதிகாரம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு குறித்து ஆராய்வதற்குப் பின்னமைப்பியல் பெண்ணியவாதிகளுக்கு உகந்த கோட்பாடாக விளங்குகிறது. பின்னமைப்பியல் கோட்பாட்டைப் பெண்ணியத்திற்கு ஏற்ற வகையில் பொருத்திப் பார்க்கிற முயற்சி பெண்ணிய பின்னமைப்பியலாக விரிவு கொள்கிறது.

தன்னிலை மற்றும் தன்னிலையாக்கம் பின்னமைப்பியல் கோட்பாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. தனிநபரின் நனவு மற்றும் நனவிலி சிந்தனைகள், உணர்ச்சிகள், தன்னைக் குறித்த அவரது உணர்வுகள், இந்த உலகுக்கும் அவருக்குமான உறவு குறித்த தனிநபரின் புரிந்துணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய சொல் தன்னிலையாக்கமாகும்.

1. தன்னிலை தனித்து இல்லை. அது சமூகத் தன்னிலையாக விளங்குகிறது.
2. தன்னிலை உலகை உருவாக்கவில்லை. உலகு தன்னிலையை உருவாக்கியுள்ளது.
3. தன்னிலை மொழியின், பண்பாட்டின் விளைபொருளே.
4. நான் என்பது தனி நான் அல்ல. அது பல நான்களின் இணைவு.
5. தன்னிலையாக்கம் முழுமை பெற்றதல்ல. அது செயல்பாட்டில் - இயக்கத்தில் இருக்கிற ஒன்று - இத்தகைய தெறிப்புகளைப் பின்னமைப்பியல் வழங்கியுள்ளது.

ஃபிராய்டை மறுவாசிப்பு செய்த லக்கான், தன்னிலையாக்கத்தின் வளர்ச்சியை மூன்று கட்டங்களாகப் பிரித்து விளக்கியுள்ளார். (கற்பனை நிலை, குறியீட்டு நிலை, உண்மை நிலை) குழந்தையின் முதல் அடையாள உருவாக்கம் கற்பனை நிலையில் நிகழ்கிறது. கண்ணாடியில் தன்னைப் பார்க்கும் குழந்தை தானும் கண்ணாடியில் தோன்றும் பிம்பமும் ஒன்றே எனக் கருதுகிறது. தாய் உடலும் தன் உடலும் வேறு வேறல்ல என்று கருதுவது போல, இந்தக் கண்ணாடி நிலையிலும் தான் பிறர் என்கிற வேறுபாடு உருவாவதில்லை. மொழிக்கு முந்தைய இந்தத் தான்மை அடையாளத்தில் உருவகப்பண்பு மேலோங்கியுள்ளது என்கிறார் லக்கான்.

குழந்தை மொழியுலகிற்குள் நுழையும் பருவத்தை லக்கான் குறியீட்டு நிலை என்று குறிப்பிடுகிறார். மொழி மூலமாகத்தான் குழந்தை சமூகத்திற்குள், சமூக உறவிற்குள் நுழைகிறது. நான், அம்மா, அப்பா முதலான குறிப்பான்களின் தொடர்ச்சி குழந்தையின் அகத்திற்குள் நுழையும்பொழுது தான் x பிறர் என்கிற வேறுபாட்டுணர்வும் பால் அடையாளமும் உண்டாவதாக லக்கான் குறிப்பிடுகிறார்.

பெண் - ஆண் என்கிற வேறுபாடு இயற்கையின் வேறுபாடாகும். உடல் சார்ந்த ஒன்றாகும். ஆணுறுப்பு உடையது ஆண். பெண்ணுறுப்பு உடையது பெண் என்கிற உடலியல் ரீதியான வேறுபாடு இயற்கை உண்டாக்கியது. ஆனால் ஆண்மை - பெண்மை என்கிற பாலின அடையாளங்கள் சமூகம் உண்டாக்கிய செயற்கை கற்பிதங்கள் என்பதை பௌவாயர் விளக்கியுள்ளார். இத்தகைய கற்பிதங்களைக் கட்டமைப்பது மொழியே. எனவேதான் தன்னிலை மொழியை உருவாக்கவில்லை. மொழிதான் தன்னிலையை உருவாக்குகிறது என்பதைப் பின்னமைப்பியல் முன்னிறுத்துகிறது. மொழியைப் பற்றிய எந்தவொரு அறிதலும் தன்னிலை பற்றிய அறிதலாகவும் மொழியில் நிகழ்த்தப்படுகிற எந்தவொரு புரட்சியும் தன்னிலையில் நிகழ்த்துகிற புரட்சியாகவும் விளங்குகிறது. எனவேதான் பெண் மொழியில் நிகழ்த்துகிற புரட்சி, பெண் தன்னிலையில் நிகழ்த்துகிற புரட்சியாக விளங்குவதால் பிரெஞ்சுப் பெண்ணியவாதிகள் பெண் மொழிக்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கிறார்கள். அம்பையின் சிறுகதைகள் தன்னிலையாக்கத்தில் செயல்படும் மொழி அரசியலை வெளிப்படுத்துகின்றன.

'கதாநாயகி ஓடுகிறாள். குண்டர்கள் துரத்துகிறார்கள். கதாநாயகன் வருகிறான். சண்டை நடக்கிறது. அவன் அவளை அடைகிறான். அவன் ஆண்.

பஸ்ஸில் ஏறிய
மஞ்சள் புடவையை
மனத்தில் கிடத்தி
புணர்ந்து பார்த்தேன்.

- மனத்தில்தானே? பரவாயில்லை. அது ஆண் பிள்ளை மனது அப்படித்தான் இருக்கும். நிஜமாகவே பண்ண வருவாள் ஒருத்தி. தாலி கட்டிக்கொண்டு. இதற்காகவே.

பூரி நன்னாயில்லையா? வருவாள் ஒருத்தி
உனக்குச் சமைத்துப்போட.
எங்கள் ஸுட்டிங் துணியை அணியுங்கள்.
உங்கள் காதலி விரும்புவாள்.
எங்கள் ஷூவை அணியுங்கள். பெண்கள்
உங்களைத் திரும்பிப் பார்ப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஷர்ட்டை அணியுங்கள். உங்களுள்
உள்ள சிங்கம் விழித்துக் கொள்ளும்.
எங்கள் பிளேடை உபயோகியுங்கள். உங்கள்
கன்னம் அவளுக்குப் பிடிக்கும். அதன்பின் -
எங்கள் டுத் பேஸ்ட் வாங்குங்கள். பின் அவள்
முகம் அருகே வரலாம்.எங்கள் பானத்தை
அருந்துங்கள். உங்கள் ஆபிஸர் உங்கள்
சுறுசுறுப்பை விரும்புவார்.

கசங்கிய ஆடை எதற்கு? கசங்காத எங்கள் துணி - ஆடையை அணியுங்கள். உங்கள் திறமை போற்றப்படும்.

நீ சம்பாதிப்பவன்
நீ வேலைக்குச் செல்பவன்
நீ உரிமைகளை உடையவன்
நீ ஓட்டுப் போடுபவன்
நீ அழக்கூடாதவன்
நீ உறுதியானவன்
நீ தீர்மானங்கள் செய்பவன்
நீ உலகை மாற்றுபவன்
நீ திண்மையானவன்
நீ பெண்களைச் சுகிப்பவன்
நீ படுக்கையின் ஆக்கிரமிப்பாளன்
நீ மேலதிகாரிகளைக் கவருபவன்
நீ ஆண் | (புனர், பக்.255-256)
என்று ஆண் தன்னிலையையும்
நீ வீட்டைப் பேணுபவள்
நீ அழகு சாதனங்களுக்கானவள்
நீ அடக்கமானவள்
நீ தீர்மானங்ளைக் கேட்டுக்கொள்பவள்
நீ தேவியானவள்
நீ உபயோகமானவள்
நீ சுகத்தைத் தருபவள்
நீ தேவைக்காக மட்டுமே வேலை செய்பவள்
நீ பாதுகாக்கப்பட வேண்டியவள்
நீ பெண்

என்று பெண் தன்னிலையையும் மொழி மற்றும் சமூக நிறுவனங்கள் கட்டமைக்கும் பாங்கு அம்பையின் புனர் சிறுகதையில் நன்கு வெளிப்படுகிறது. இந்த அடையாள உருவாக்கத்தில் சிக்கி அல்லலுறும் பெண் - ஆண் தன்னிலைகளாக சபரியும் லோகிதாசும் விளங்குகின்றனர். அடையாளங்களை மீறினால் தன்னிலை அடையும் வாதையும் நுட்பமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. லோகிதாசும் சபரியும் பிறக்கவில்லை. உருவாக்கப்படுகின்றனர் என்பதை இக்கதை அழகாகச் சுட்டிக்காட்டுகிறது.

ஆண் அடையாளம் போன்று பெண் அடையாளம் முழுமை பெற்ற அடையாளமாக இல்லை. ஆணின் மாற்றமையாக, ஆணின் இன்மையாக அவள் முன்னிறுத்தப்படுகிறாள் என்பதை லூஸி இரிகரே (*Speculam of the Other Woman, This Sex Which Is Not One*) சுட்டிக்காட்டுகிறார். ஆணாதிக்கச் சமூகத்தில் *A*, *B* என்கிற இரு அடையாளங்களாக ஆண் பெண் அடையாளங்கள் உருவாக்கப்படுவதில்லை. *A*, *A-(Negative A)* என்கிற அடையாளங்கள்தான் இங்கு கட்டமைக்கப்படுகின்றன என்கிறார் இரிகரே. இத்தகைய இன்மை அடையாளங்களை, சுமத்தப்பட்ட பெண்மை அடையாளங்களை அம்பையின் சிறுகதைகள் மையப்படுத்துகின்றன. அம்மா ஒரு கொலை செய்தாள் கதையில் வரும் நீரஜாட்சியும் உனக்கு இந்த இழவுக்கு என்னடீ அவசரம்? என்று நீரஜாட்சியை வார்த்தையால் வதைக்கும் அவளுடைய அம்மாவுமே இத்தகைய அடையாளங்களுக்குப் பலியானவர்களே. அக்கினி அசுத்தங்களை மட்டும் சுட்டெரிக்கவில்லை. மொட்டுக்களையும் மலர்களையும் கூடக் கருக்கிவிடுகின்றது. கறுப்பு நிறத்தால் தாழ்வுணர்ச்சிக்கு உள்ளான நீரஜாட்சியை அணைத்துக்கொள்ளும் அவளுடைய அம்மா அவளின் நீண்ட தலைமுடி, நடனத்துக்கு ஏற்ற வாகான உடம்பு எனப் பிற விஷயங்களைச் சுட்டிக்காட்டி அழகு விதைகளை அவளுள் ஊன்றித் தேவதையாய்க் காட்சியளித்த தாய், தங்கையின் மகள் கல்யாணச் சந்தையில் நிராகரிக்கப்பட்ட வலியில் தன்னுடைய மகளையும் வார்த்தையால் வாட்டிவிடுகிறாள். மகளின் மனதில் இருந்த அம்மாவைப் பற்றிய தேவதை பிம்பம் உறியப்பட்டு மனித அம்மாவாகக் காட்சியளிக்கும் நிலைக்குத் தாய் தள்ளப்படுகிறாள்.

## அனில் - பெண் எழுத்து மரபின் மீள் கண்டுபிடிப்பு

பெண்களைப் பொறுத்தவரை எழுதுதல் என்பதே ஓர் எதிர்ப்புச் செயல்பாடுதான். பெண் எழுத்தில் எதிர்ப்பு ஒரு மிக முக்கியக்கூறு என்கிறார் கோரா கப்லான். 1980கள் வரை ஆங்கில இலக்கியத் துறையில் ஆண்களின் எழுத்துக்களே பயிற்றுவிக்கப்பட்டன. ஜார்ஜ் எலியட், சார்லட் பிராந்தே, வெர்ஜினியா உல்ஃப் போன்ற ஆளுமைகள் கற்பிக்கப்படவேயில்லை. 1960களில் தோன்றிய பெண்ணியத்தின் இரண்டாம் அலை, பெண்ணியத் திறனாய்விற்கு வழிவகை செய்தது எனினும் 1970-80கள் வரை ஆண் எழுத்தாளர்களின் படைப்புகளில் பெண்கள் ஒரே மாதிரி சித்திரிக்கப்படுவதையும், செயலூக்கமற்ற கதாபாத்திரங்களின் வகைமாதிரிகளை ஆண் எழுத்துகள் நிலைநிறுத்தும் இலக்கிய ஒடுக்குமுறையையும் தொடக்ககாலப் பெண்ணியத் திறனாய்வாளர்கள் முன்வைத்தனர்.

சூன்யக்காரி x கன்னி என்கிற இணைமுரணே ஆண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்திலுள்ள பெண் வார்ப்புகளின் வகைமாதிரிகள் எனலாம். கதையின் முடிவில் சூன்யக்காரி கொல்லப்படுவாள். கன்னி கதைத்தலைவனால் திருமணம் செய்து கொள்ளப்படுவாள். பெண்ணியத் திறனாய்வாளர்கள் சாசர், ஷேக்ஸ்பியர் தொட்டு இத்தகைய கொல்லுதல் x கொள்ளுதலாகிய முரண்பாடுகளை ஆண் எழுத்துக்களில் தொடர்ந்து சுட்டிக்காட்டி ஒரு கட்டத்தில் ஆண் எழுத்துக்களின் பிரதிகளை மறுவாசிப்பு செய்வதில் சலிப்பும் சோர்வும் எய்தினர். பெண்ணியத் திறனாய்வாளர்களின் கவனம் பின்னர் பெண்களின் எழுத்துக்களை நோக்கித் திரும்பியது. வரலாற்றில் மறைக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட பெண்களின் எழுத்துக்கள் மீள் கண்டுபிடிப்புகளுக்கு உள்ளாயின.

கடந்தகாலங்களில் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட பெண்களின் பிரதிகளை விராகோ பதிப்பகம் (இலண்டன்) வெளியிட்டது. இப்பதிப்பகம் பெண்களின் படைப்புகளை வெளியிடுவதற்கென்றே உருவான பதிப்பகமாகும். (இந்தியாவில் *Kali for Women*) விராகோ நவீன செவ்விலக்கியங்களின் வரிசையில் 19, 20 ஆம் நூற்றாண்டில் எழுந்த பெண்களின் பிரதிகள் மலிவு விலையில் மறு அச்சுக்குக் கொண்டு வரப்பட்டன. பெண்களின் படைப்புகள் ஏராளமாக வெளிவரத் துவங்கும்பொழுது இத்தகைய எழுத்துக்களை ஆய்வு செய்கிற போக்கு உருவானது. அதை முன்னெடுத்தவர் அமெரிக்க பெண்ணியத் திறனாய்வாளரான எலைன் ஷோவால்டர் ஆவார். *A Literature of Their Own: Britsh Women Novelists from Bronte to Lessing* (1978) என்ற அவருடைய குறிப்பிடத்தகுந்த ஆய்வில் பெண் எழுத்து மரபின் மூன்று கட்டங்களைக் குறிப்பிடுகிறார்.

பெண் எழுத்தாளர்கள் வேறுபட்ட சூழல், வேறுபட்ட பண்பாட்டுப் பின்னணி, வேறுபட்ட உள்ளடக்கங்களைக் கொண்டிருப்பினும் அப்படைப்புகளில் திரும்பத் திரும்ப இடம்பெறுகிற கரு, கற்பனை, எடுத்துரைப்புமுறை, உள்ளடக்கச் சிக்கல்கள் முதலியவற்றைக் கொண்டு பெண்மை, பெண்ணியம், பெண்நிலை என்கிற மூன்று போக்குகளை ஷோவால்டர் அடையாளம் காண்கிறார். போலச்செய்தல், எதிர்ப்பு, தன் அடையாளம் ஆகியவற்றை இந்த மூன்று கட்டங்களின் பண்புகளாகக் குறிப்பிடுகிறார். ஆண்களின் வகைமாதிரி, ஆய்வு முறைமைகள் ஆகியவற்றை அளவுகோலாக எடுப்பதை விடுத்துப் பெண்களின் அனுபவங்களை அளவுகோலாகக் கொண்ட இந்தப் பெண்ணியத் திறனாய்வை கைனோ கிரிட்டிக்ஸ் (பெண் மையத் திறனாய்வு) என ஷோவால்டர் அடையாளப்படுத்துகிறார்.

பெண் x ஆண் என்கிற இருமை எதிர்வுகளைத் தாண்டி இன்றைக்குப் பெண்ணியம் பின்னைப் பெண்ணியமாக வளர்ந்தபோதும் சகோதரித்துவம், ஓரினக் காம அழகியல், பைத்தியப் பண்பு, தாய் - மகள் உறவு ஆகிய பெண் எழுத்துக்கூறுகளின் தேவை இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும் தொடர வேண்டிய அவசியத்தை ஷோவால்டர் சுட்டிக் காட்டுகிறார். அம்பையின் பல சிறுகதைகளில் இத்தகைய சகோதரித்துவம், தாய்-மகள் உறவு முதலிய பெண் எழுத்துக்கூறுகளைக் காண முடிகிறது.

அணில் சிறுகதை ஒதுக்கப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பெண் ஆளுமைகளை நூலகத்தில் தேடியெடுக்கும் கதைசொல்லியின் கதை. வெறும் பொம்பளங்க புஸ்தகம்மா. வேணுமாம்மா? என்ற அலட்சியத்துடன் கேட்கிறார் நூலகர், அலட்சியப்படுத்தப்பட்ட மூன்றாவது மாடியில் புழுதிகளுக்கு நடுவே ஒடிந்து விழும் புத்தகப்பொடித் துகள்களின் ஊடாகப் பெண் எழுத்து மரபு அவர்முன் உணர்வு ரீதியாக விரிகிறது. கூடவே அவரின் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் அணிலும்.

ரோலண்ட் பர்த்தின் 'பிரதியின் இன்பம்' என்கிற படைப்பு இங்கு சுட்டத்தகுந்தது. அதில் அவர் பிரதியை வாசிப்பதால் ஏற்படும் இன்பத்தைக் கோட்பாட்டு அடிப்படையில் முன்வைக்கிறார். இலக்கியப் பிரதிக்கும் வாசகருக்கும் உள்ள உறவு களிப்பு என்ற பார்வையில் பாலியல் இன்பம் போன்றது என்கிறார் பார்த். வாசிப்பின்போது உடல் உடலோடு சல்லாபம் செய்கிறது. இங்கு உடல் என்று பர்த் குறிப்பிடும் சொல் மூளையின் ஆழ்மனச் செயல்பாட்டைக் குறிக்கிறது. இலக்கியத்தின் யதார்த்தமான உடல் வாசகர் கைக்குக் கிட்டுகிறது. களிப்புக்கும் இன்பத்துக்கும் பரஸ்பர உறவு அவசியமாகும். வாசிப்புடன் வாசகரின் எதிர்வினையைக் குறிக்க *PLAISSIR, JOUISSANCE* என்ற இரண்டு சொற்களை பர்த் பயன்படுத்துகிறார். இவை முறையே இன்பம், களிப்பு என்ற பொருளைத் தருகின்றன. பர்த்தின் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் *JOISSANCE* என்ற சொல் பிரெஞ்சு மொழியில் கலவியின்பத்தைக் குறிக்கிறது. பர்த்தின் கருத்தும் இதுவேயாகும் என்கிறார். மூலப்பிரதியை உள்ளபடி உணர்ந்து வாசிப்பது ஆனந்தத்தின் இந்த உச்சகட்ட நிலைக்கு ஒப்பானது. களிப்பின் எல்லையை அடையும்போது மெய்மறந்த உணர்வு - தன்னை இழந்த, ஆழ்ந்த சமர்ப்பண உணர்வு மேலிடுகிறது மகிழ்ச்சியும் இன்பமும் நிறைந்த இந்த ஆனந்தக் களிப்பை வர்ணிப்பது சாத்தியமில்லை என்று பார்த் கூறுகிறார். இன்பத்தை வர்ணிப்பது ஒரு வேளை சாத்தியமாகலாம். ஆனால் ஆனந்தக் களிப்பை உணரத்தான் முடியும். இந்த ஆனந்தக் களிப்பை எய்தும்போது தன்னுடைய இருப்பின் கடைசி எல்லையை ஏதோ ஒன்று பிடித்து உலுக்கியது போலவும் தன்னுடைய உணர்வின் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியை அது எடுத்துக்கொண்டு அதன் உணர்வின் பகுதியைத் தந்ததுபோலவும் தோன்றுகிறது. அதாவது வரலாறு, பண்பாடு, மற்றும் உளவியலின் அடிப்படைகள் ஆட்டம் கண்டது போன்ற - ரசித்தல் உணர்வு, மதிப்புகள், நினைவுகள் எல்லாமே புதிதாகிவிட்டது போன்ற - அன்றாட வாழ்வின் சலிப்பு கலகலப்பாக மாறியது போன்ற அனுபவம் ஏற்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக மொழியுடன் எதிர்வினை புரியும்போது ஒருவிதமான பதற்றம் அல்லது நிலநடுக்கத்தின் உணர்வு தோன்றுகிறது என்கிறார் பர்த். (கோபிசந்த் நாரங்க், பக். 151-152) புழுதிகளின் நடுவே ஒடிந்து விழும் தாள்களின் ஊடாகப் பெண் எழுத்தை வாசிக்க நேரிடும் கதைசொல்லியின் (அணில்) சிலிர்ப்பும் இத்தகையதே.

ஒழுங்குபடுத்தப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புத்தகத்தின் நடுத்தண்டில் விரல் பட்டபோது உள்ளங்காலிலிருந்து ஒரு மகிழ்ச்சி நடுக்கம் ஏறியது. பாலுறவின் உச்சகட்ட சிலிர்ப்பு மாதிரி. அன்னா சத்தியநாதம் அம்மாள் மரணப்படுக்கையில் படுத்து, கணவரை ஜெபம் செய்யச் சொன்னபோது மூன்றாம் மாடியில் துக்கம் கொண்டாட நானும் அணிலும்தான். கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப முதன்முதல் குதிரை மேல் கிளம்பியவர் இந்த மாடியின் வலை சன்னல்களை உடைத்துத்தான் போனார். ஒரே வீட்டை விற்றுத் தன் கல்யாணத்தை நடத்தக் கூடாது என்று தன் தகப்பனாருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு நெருப்பிட்டுக் கொண்டு ஒரு வங்காளப் பெண் மரித்த ஜ்வாலை இங்கு பாம்பாய்த் துரத்தியது. ஜ்வாலை மூன்றாம் மாடி முழுவதும் பரவி எனக்கும் அணிலுக்கும் தன் ரூபத்தைக் காட்டிவிட்டுப் போயிற்று. தெலுங்கு அட்டவணைக்காரர் இருக்கவில்லை அன்று.' (ப. 275) புழுதிகளுக்கு நடுவே புதைந்து கிடக்கும் நூறாண்டுகளுக்கு முன்னதாக விரியும் பெண்களின் உலகு சட்டெனக் கலைகிறது 'தெரிகிறது. நேரமாகிவிட்டது. உன் பசை தீர்ந்துவிட்டது. இந்தப் பெண்களை எனக்குவிட மனதில்லை. ஒரு மந்திரக் கயிறு எங்களை இணைக்கிறது. அவர்கள் பேசுவது கேட்கிறது. ஷண்முகவடிவு வீணையின் சட்ஜத்தை மீட்டுவது காதில் பாய்கிறது. 'வண்ணத்தாமரையைக் கண்டு நாடி மதுர கீதம் பாடும் வண்டு... மதி மயங்கி.. என்று கே.பி. சுந்தராம்பாள் பாட மதி மயங்கி ...என்று ஆர்மோனியத்துடன் பின்பாட்டுப் பாடுகின்றாள் வாசவாம்பாள். மெரீனா கடற்கரையில் வை.மு.கோ சுதந்திரக்கொடியை ஏற்றுகிறார். கையில் குழந்தையுடன் சிறை போகின்றனர் ஹிந்தியை எதிர்த்த பெண்கள்.

பார். இது வேறு உலகம். அந்தப் பசை கொஞ்சமாவது உனக்குள் ஏற்றியிருக்கும் உலகம். எனக்கும் உனக்குமான உலகம். (ப. 276) உணர்வுபூர்வமான அணிலுடன் நிகழ்த்தப்படும் இந்த உரையாடலின் குறுக்கீடாய் நூலகரின் குரல்.



'இதையெல்லாம் ஒக்கப்படுத்த (ஒழுங்குபடுத்தப்பட்ட) ரொம்ப செலவாகுது. நெறயப் பேரு உபயோகிக்கிறது கிடையாது. ஒங்கள மாதிரி ஒண்ணு ரெண்டு பேரு. இதுக்காக ஆளு, பசை எல்லாம் கவர்மெண்டு செலவு பண்ண முடியுமா? எரிச்சுடப் போறாங்க. (ப.277) விளக்கு அணைக்கப்பட்டது அந்த நூலகத்தில் மட்டுமல்ல. என்றாலும் கதைசொல்லியின் வடக்குப்புறம் பார்த்த சன்னல் படிக்கிறவர்களுக்கு மட்டுமல்ல, மந்திரக்கயிறால் பிணைவுறும் மற்றுமொரு கண்ணிகட்டும் நம்பிக்கைக் கீற்றாய்த் தெரிகிறது.

## பெண்ணியமும் மதமும்

பெண்ணியத்தைப் பொறுத்தவரை, மதம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் நம்பிக்கைகளும் சடங்குகளும் என்று குறுகிய வரையறைக்குள் அடக்கிவிட முடியாது. ஆண்மை தெய்வீகத்தோடு இணைக்கப்படுகிறது, அதன் மூலம் தந்தையாதிக்கச் சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட கற்பிதங்களைப் பெண்களின் அகவெளிக்குள் அழுத்தமாக ஊன்றிவிடுகிற தந்திரோபாயத்தை மதம் மேற்கொள்கிறது. இந்த அரசியலை நுணுக்கமாக அணுகுகிற பெண்ணியத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வாளராக லூஸி இரிகரே விளங்குகிறார். *Divine Women* (1993) என்ற தன்னுடைய கட்டுரையில் மதத்தை விமர்சனம் செய்வதோடு நிற்காது, அதன் ஆதிக்கக் கருத்தியலை வேரறுக்கச் செய்யும் வழிமுறைகளையும் விளக்குகிறார். ஆண்மையக் கற்பிதங்களைத் தெய்வீக ஆண்மை இலட்சியப்படுத்தி விடுகிறது. எனவே பெண்கள் தங்களுக்கான அடையாளத்தை மறுகட்டுமானம் செய்ய வேண்டும் என்கிறார் இரிகரே. தெய்வீக ஆண்மைக்கு மறுதலையாகத் தெய்வீகப் பெண்மைச் சித்திரிப்புகளைப் பெண் எழுத்து வெளிக்கொணர வேண்டும். தந்தையாதிக்கத் தொன்மங்களைப் போலச்செய்வதன் வாயிலாகப் பகடி செய்வது, அதனைத் தலைகீழாக்குவது என்பன போன்ற வழிமுறைகளைச் சுட்டிக்காட்டுகிறார் இரிகரே.

இனத்தால், நிறத்தால் மேற்கத்திய நாடுகளிலிருந்து வேறுபட்ட இந்தியா போன்ற சில நாடுகளில் தந்தைவழிச் சமூகத்திற்கு முற்பட்ட தாய்வழிச் சமூகத்தின் அடையாளத்தைக் காணமுடிகிறது. குடும்பம் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டவர்களாக, வாழ்க்கைத்துணை மற்றும் குழந்தை அற்றவர்களாக, ஆக்ரோஷமானவர்களாக, ஊருக்குப் புறத்தே இருப்பவர்களாக இத்தகைய தாய்த்தெய்வங்கள் (காளி, கொற்றவை, பிடாரி, நீலி...) காட்சியளிக்கின்றன. லிங்கச்சொல்மையவாதம் (*Phallagocentricism*) வரையறுத்துள்ள பெண்மை கற்பிதங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகத் திகழும் இந்தத் தாய்த்தெய்வங்கள் பெண்களின் எல்லையற்ற ஆற்றலை, சுயாதீன அடையாளத்தைப் பெண் தன்னிலைக்கு எடுத்துரைக்கும் தாய்வழிச்சமூகத்தின் எச்சமாய் இருப்பதைக் காண முடிகிறது. இத்தகைய எச்சங்களைத் தந்தைவழிச் சமூகத்தால் முற்றிலும் அழித்து ஒழிக்க முடியவில்லை எனினும் மறுபுறம் ஓரிறைக்கோட்பாடும் தந்தைவழிச்சமூகமும் இணைந்து உருவாக்கிய தொன்மங்கள் பாலினப் பாகுபாட்டை மதத்தின் வழியாகச் சமூக வெளியில் நிலைநிறுத்துகின்றன. ஆண்மையைத் தெய்வீகத்துடன் இணைப்பதன் மூலமாகத் தெய்வீக ஆண்மை கட்டமைக்கப்படுகிறது. (தெய்வீக ஆண்மை - காளியைக் கட்டுப்படுத்தும் சிவன், உமையை நடனத்தில் தோற்கடிக்கும் சிவன், லட்சுமி காலடியில் அமர்ந்திருக்க, சயனிக்கும் திருமால்... என்ற இந்தத் தெய்வீக ஆண்மையின் லீலா விநோதங்ளைப் பட்டியலிட்டுக்கொண்டே செல்லலாம்.) இத்தகைய கற்பிதங்கள் ஆணுக்கு வரம்பற்ற அதிகாரத்தையும் அதற்கான சமூக ஏற்புடைமையையும் சப்தமில்லாமல் உருவாக்கிவிடுகின்றன. இத்தகைய கற்பிதங்களுக்கு மாறாக, பெண்களின் சுயாதீனத்தை நிலைநிறுத்தும் பெண் அடையாளத்தை மொழி வழியாகக் கட்டமைக்க வேண்டிய அவசியத்தை இரிகரே சுட்டிக்காட்டுகிறார்.

ஆண் மொழியிலுள்ள குறியீட்டாக்கங்களில் பெண் எழுத்து ஓர் உடைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்கிறார் இரிகரே. ஆண்களின் எழுத்துக்களில் உள்ள வெள்ளை இடைவெளிகளைப் பயன்படுத்தி அங்கதம் மற்றும் போன்மைச் செயல்பாடுகளால் ஆண்களின் குறியீட்டாக்கங்களைக் குலைத்துப் போட வேண்டும் என்கிறார். ஆண்களின் ஒற்றைத் தருக்க அமைப்புக்கு - லிங்கச் சொல்மையவாதத்துக்கு மாறாகப் பன்மைத்துவம் கொண்ட பெண்களின் குரல், அடையாளம், பாலியல் முதலியவற்றைக் கொண்டாடுகிறார் இரிகரே. அம்பையின் சிறுகதைகளில் (திக்கு, அடவி...)இத்தகைய குறியீட்டாக்கங்களின் எதிர்ச் செயல்பாட்டை, அங்கதத்தை, போன்மையைக் காண முடிகிறது.

'திக்கு' என்னும் சிறுகதையில் லட்சுமிக்கும் ஆதிசேஷனுக்கும் நடக்கும் உரையாடல் கதைக்குள் கதையாக இடம்பெறுகிறது.

'இல்லை, இவன் எப்படி இப்படித் தூங்குகிறான்? ஆதி, ஞாபகம் இருக்கிறதா, நான் தனியாக நின்றேன் ஆதி! என் முன்னே நதி மௌனமாக ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கடக்கப் படகோடு குகன் இல்லை. ஒரு சிறு பாலம் போட அனுமன் இல்லை. ஓர் அணில் கூட இல்லை. ஆதி, எனக்கு ஏன் இந்தத் தனிமை? நானும் மீனாக நீந்தியிருக்கிறேன். ஆமையாகக் கனத்த ஓட்டோடு நடந்திருக்கிறேன். காட்டுப்பன்றியாக அலைந்திருக்கிறேன். என் அவதாரங்களைப் பற்றி யாருக்குத் தெரியும்? அவை இவனுடையதோடு ஒட்ட வைத்தவை. வால் மாதிரி வண்ணம் சேர்க்க பரவசப்படுத்த. கிளுகிளுப்பூட்ட...

## நீ பேசுவது ஒரு பெண் தெய்வம் சொல்வது மாதிரி இல்லையே?

பெண்ணாவது தெய்வமாவது ஆதி! என் எண்ணப்படி எது நடக்கிறது? பாத்திமாவுடன் பேசியபடி பாலைவனத்தைச் சுற்றிவர ஆசை. மேரி கையிலிருந்து குழந்தையை வாங்கி என் இடுப்பில் வைத்துக்கொண்டு பெதலஹெம் மற்றும் சுற்றுப் பிரதேசங்களைப் பார்த்து வர ஆசை. இப்படி இவன் காலடியில் உட்கார்ந்திருப்பதில் என்ன சுகம்? அக்கடா என்று படுக்க ஒரு பாம்புப் படுக்கை உண்டா எனக்கு?

ஆதியின் மனம் இதைக் கேட்டு உருகியது. இன்னொரு பாம்புப் படுக்கையை உண்டாக்கினான். விஷ்ணு கண்விழித்தபோது பக்கத்தில் இன்னொரு பாம்புப் படுக்கையில் லட்சுமி உடலை ஒடுக்காமல், தாராளமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தபடி தூங்கிக்கொண்டிருந்தாள்.' (ப. 324) இந்தத் தன் அடையாளத்தின் குரல்தான் பெண் எழுத்தின் பலம். அடவியிலும் கடந்தகாலமும் நிகழ்காலமும் அருகருகே வைக்கப்படுகிறது. செந்திரு - திருமலையின் நிகழ்காலப் பக்கங்களும், சீதை - இராமனின் கடந்தகால நிகழ்வுகளும் ஒத்த நிலையில் இருப்பதை அடவி முன்னிறுத்துகிறது.

யாராலும் ஒடிக்க முடியாத சிவ தனுசை இராமன் முறித்ததாக இதிகாசங்கள் புனைய, அம்பையின் எழுத்திலோ அது பகடியாகத் திசைமாற்றம் செய்யப்படுகிறது. சீதை சிறுமியாக இருக்கும்போது வீட்டைச் சாணமிட்டு மெழுகுகிறாள். வில்லின் அருகே வந்ததும், ஒரு கையால் வில்லைத் தூக்கிப் பிடித்து இன்னொரு கையால் அதன் கீழே மெழுக ஆரம்பிக்கிறாள். சனகனின் கண்கள் வியப்பில் விரிகின்றன. (ப. 436)

பெண்ணியத் திறனாய்வாளர்கள் இரண்டு நிலைகளில் மதத்தை அணுகுகின்றனர். ஒன்று, ஆணின் சிறப்பிடத்தையும் அடையாளத்தையும் அவனின் நோக்குநிலையையும் பேணும் வடிவமாக மதம் இருப்பதை வெளிக்கொணர்வது. அதன்மூலம் ஓரத்தில் தள்ளப்பட்ட பெண்ணின் அதிகாரத்தையும் சுயேச்சையான வாழ்நிலையையும் சுட்டிக்காட்டுவது. இரண்டாவது, லிங்கச்சொல்மையவாதம் கட்டமைத்துள்ள குறியீட்டாக்கங்களைப் போன்மைச் செயல்பாடு மூலமாகச் சிதைக்கின்ற பணியை மொழி வழியாக மேற்கொள்வது. அதன்மூலம் பெண்களின் இயல்பான அடையாளங்களை, இச்சைகளை, அன்பை, சமத்துவத்தை, அறத்தைப் பேணுகிற முயற்சியில் ஈடுபடுவது. அம்பையின் சிறுகதைகள் இந்த இரண்டு செயற்பாட்டையும் மேற்கொள்கின்றன.

சவிதா பாயி, ருக்மணி பாயி, மீனாபாயியுடன் செந்திரு உணரும் சகோதரித்துவ உறவும் சீதைக்கு ருத்ர வீணை கற்றுத்தரும் ராவணனின் நட்புறவும் பல கைகள் பந்தாடிய வாழ்க்கையை உதறித் தனக்கான வாழ்க்கையைத் தானே தேர்வு செய்யும் சீதையின் தீர்மானமும் அடவியின் குறிப்பிடத்தகுந்த பக்கங்களாகும்.

பெண் எழுத்தில், பெண்ணியத் திறனாய்வில் பெண் அடையாள உருவாக்கம் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுகிறது. ஃபிராய்டு பெண்ணின் அடையாளத்தையும் தன்னிலையாக்கத்தையும் குறைபாடு உடையதாகப் பார்க்கிறார். பிறக்கும்பொழுது பெண் - ஆண் இருவரும் இரு பாலியத்தன்மையுடன் இருப்பதாகக் கூறும் ஃபிராய்டு, வளரும்பொழுது ஆண் குறி தனக்கு இல்லாததைக் கண்ட பெண் குழந்தை ஆண்குறிப்பொறாமைக்கு உள்ளாகிறது என்கிறார். ஃபிராய்டின் கருத்தைப் பெரும்பாலான பெண்ணியவாதிகள் ஏற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்தவா, சீக்சு, இரிகரே போன்றோர் உளப்பகுப்பாய்வையும் மொழியையும் இணைத்துத் தங்களுக்குரிய வழிமுறைகளில் தன்னிலையாக்கத்தை விளக்குகின்றனர். மொழியின் குறியீட்டு ஒழுங்குக்கு முற்பட்ட குறியியல் நிலையில் ஆணின் அதிகாரத்திற்கு உட்படாத பெண்ணின் இச்சை உணர்வுகளை மீட்டெடுக்க முடியும் என்பது கிறிஸ்தவாவின் நம்பிக்கை. கவிதை மொழியில் இத்தகைய குறியியல் பண்புகளின் தாக்கம் மிகுதி என்கிறார் கிறிஸ்தவா. பெண் உடலையும் தாய்மையையும் மூல ஊற்றாகக் கொண்ட பெண் எழுத்து முறையை சீக்சும் இரிகரேவும் முன்வைக்கின்றனர். வடிவம், ஒழுங்கு, தர்க்கம், நேர்க்கோட்டு எடுத்துரைப்பு முதலியவற்றை மறுதலிக்கும் புதிர்ப்பண்புகள் நிறைந்த, தொன்மக்கூறுகள் வாய்ந்த, நெகிழ்வுப் பண்பு நிரம்பிய, சிலேடைக் கூறுகளுடைய, உருவகப்பண்புகளுடைய, பெண்மொழியைப் பிரெஞ்சுப் பெண்ணியவாதிகள் முன்னிறுத்துகின்றனர். ஆண் எழுத்து முறையிலிருந்து பெண் எழுத்து வேறுபட்டது என்றாலும் பெண் எழுத்தைப் பெண்ணுக்கே உரியதாகக் கூறவில்லை. ஜாய்ஸ், ஜெனே போன்ற எழுத்தாளர்களிடமும் பெண் எழுத்துக் கூறுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார் சீக்சு. உணர்வுகளைப் பொதுமையாக்கினால் பலம், பலவீனம் என்கிற பாகுபாடே இல்லாமல் போய்விடும் என்பதை (வாமனன்) வனஜா தெளிவுபடுத்துகிறாள்.

## 'உடலின் எந்த உறுப்புகள் அவளைப் பௌதீகரீதியில் தாயாக்குகின்றன?

இவை இருந்துவிட்டாலே அந்த உணர்ச்சி வந்துவிடுமா? வாமூ, தாய்மை உடம்பை ஒட்டிய ஓர் உணர்ச்சி இல்லை. பெண்ணுக்கு மட்டுமே இயல்பாய் உடம்போடு வருவது இல்லை. ஆணுக்குக் குழந்தையிடம் பாசம் அவன் உடம்பின் எந்தக் குறிப்பிட்ட உறுப்பிலிருந்து வருகிறது? எல்லா உணர்ச்சிகளும் பொது இயல்புகளா?

ஆமாம். அப்படித்தான் அதைப் பார்க்க வேண்டும். அப்போது யார் வேண்டுமானாலும் எந்த உணர்ச்சியை வேண்டுமானாலும் இயல்பாக்கிக் கொள்ளலாம். அப்படியானால் எது பலம் எது பலவீனம் என்ற பாகுபாடு போய்விடும். எது நசுக்கல் எது அடிமைத்தனம் என்பது மாறிவிடும். எது அதிகாரம் எது செல்வாக்கு என்று பார்க்கும் நோக்கு போய்விடும். (ப. 237) என்று தாய்மையை - உணர்ச்சிகளைப் பொதுமைப்படுத்துவதன் வாயிலாக வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும் நிர்மூலமாக்கும் அரசியலை அம்பையின் எழுத்துக்கள் முன்னெடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைச் சிறப்பிதழ்

# கி.ரா.வின் சிறுகதைகளில் மொழிச் சித்தரிப்பு

நா.சுலோசனா

கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும் வாழ்க்கைப்பாடுகளையும் ஏமாற்றங்களையும் விவரிப்பவையாகக் கி.ரா.வின் கதைகள் இருக்கின்றன. கரிசல் இலக்கியத்தின் முன்னத்திஏர் இலக்கிய உலகில் கி.ரா. என்று அன்போடு அழைக்கப்படுகின்ற கி.ராஜநாராயணன் நாவல், குறுநாவல், சிறுகதைகள், கட்டுரைகள், கடிதாசிகள், நாட்டுப்புறக் கதைகள், சிறுவர்களுக்கானது, அகராதி எனப் பல துறைகளில் ஆளுமை கொண்ட படைப்பாளர். அவர் நிறைய சிறுகதைகள் எழுதியிருந்தாலும் அவரின் கறிவேப்பிலை, புறப்பாடு, சாவு, அவத்தொழிலாளர்கள் எனும் நான்கு கதைகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றில் அவரின் மொழி ஆளுமையையும் பண்பாட்டுக் கூறுகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.



### முதன்மைச் சொற்கள்

மொழி, பேச்சு வழக்கு, உவமை, வட்டார வழக்கு, எருவடி, பிடாங்கு வேட்டு, லோலாய், நாட்டுப்புறப்பாடல்கள், புறப்பாடு, லம்பல், பிரிமனை, சிலேப்பனம் கட்டுவது, ராமப்பயிர், பறவைப்பருத்தி, தகிப்பாறுதல், திரணம், வத்திக்கணும், தவங்குதல்

### புறப்பாடு:

புறப்பாடு என்பதற்குப் பயணம் கிளம்புதல், வெளியேறுகை, புறந்தோன்றுகை, கோயில் மூர்த்தி வெளியில் எழுந்தருளுதல், புண்கட்டி வகை (நெல்லை வழக்கு) 'பூப்பின் புறப்பாடு ஈர் ஆறு நாளும்' (பொருள். கற்.46) என்று அகராதிகள் சுட்டுகின்றன.

சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார், எழுதுவதை நிறுத்திக்கொண்டார், மூச்சை நிறுத்திக்கொண்டார், உயிர் அடங்கியது, உயிர் பிரிந்தது, ஆத்மா போயிடுச்சு, சிவலோகப் பதவியடைந்தார், வைகுண்டப் பதவி அடைந்தார், கர்த்தருள் நித்திரையானார், வபாத் ஆனார், துஞ்சினார், ஆழ்ந்த உறக்கத்தைத் தழுவினார், வண்டி கிளம்பிடுச்சு, புறப்பட்டாச்சு என மரணத்தைக் குறிக்கப் பலசொற்கள் இருக்கின்றன. 'தூங்கி விழிப்பதுபோலும் சாக்காடு' என்கிறார் திருவள்ளுவர்.

ஓர் இறப்பு என்பது சிரிப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதைப் புறப்பாடு எனும் சிறுகதையில் விவரிப்பாகச் சொல்கிறார் கி.ரா. ''அண்ணாரப்ப கவுண்டர் - ஆள் தீந்துபோயிட்டார், ஆள் குளோஸ் என்று சொல்லியவனும் சந்தோஷமாகச் சொன்னான். கேட்டவர்களும் சந்தோஷமாகக் கேட்டார்கள். நெசமாகத்தான் சொல்லுதியா? மத்தியில் சந்தேகம். மத்தியில் என்றால் இடையில் என்று பொருள். இது கிராமத்து வழக்கு. அந்தாப் பாருங்க. பொய்யா சொல்லுதேன். கயத்தாத்து மேளத்துக்கு ஆள் புறப்பட்டாச்சி''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டிலுள்ளவர்களும் கிராமத்தவர்களும் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கிராமத்து வழக்கில் பதிவு செய்வதோடு நடைமுறை வழக்கங்களையும் விளக்கிச் சென்றிருப்பார்.

**உவமை:**

உவமை என்பது படைப்பாளர் கையாளும் மொழிநடையில் ஒன்றாகும். இலக்கியங்களில் உவமை பெற்றிருக்கும்



நீண்ட நாட்கள் கட்டிலோடு இருப்பவர்கள் உயிர் போகும் நிலையில் இருந்தால் அவரைக் கட்டிலிலிருந்து கீழே இறக்கிப் போடுவது வழக்கம். இல்லையென்றால் கட்டிலையே ஆவி சுற்றிக் கொண்டிருக்கும் என்பது நம்பிக்கை. வேறு யாரும் பிறகு அதைப் பயன்படுத்தமாட்டார்கள். புறப்பாடு எனும் சிறுகதையின் வழியாக கி.ரா., வயதானவர் உயிர் போகும் நிலையில் பிழைக்கவும் வழியில்லாமல், உயிர் போவது இழுத்துக்கொண்டே இருப்பதால் அதை உறவினர்களும்

இடத்தைப் படைப்பாளரின் மொழிதான் வலுப்படுத்துகிறது. "அபூர்வமான அழகுணர்ச்சி, ரசனையில் திளைத்திடும் மனோபாவம். இவர் தமிழ் மண்ணுக்கே உரித்தான பழத்தோட்டம். வித்தியாசமான மனிதர்களைக் கதாபாத்திரங்களாக மாற்றும் ஆற்றல்" என்பது கி.ரா.,வின் கலை வன்மை! என்று சுந்தர ராமசாமி குறிப்பிடுகிறார்.

அண்ணாரப்பக் கவுண்டர் அந்த ஊர் மட்டுமல்ல சுற்று வட்டாரத்திலே அந்தப் பட்டியிலேயே அதிக வயசானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவர். வயோதிகத்தினால் படுத்த படுக்கையாகி உயிர் போவதற்கு ஊசலாடிக் கொண்டிருக்கிறார். அவருடைய கம்பீரமான உயரமும் உருவமும் வாடிய சருகுபோல் சுருண்டு வளைந்து சிறுத்துவிட்டது. "தேய்ந்துபோன கலப்பை மாதிரி" கட்டிலின் ஒரு மூலையில் பெரியவர் ஒடுங்கிப்போய் இருந்தார். (புறப்பாடு, 1973, ப.147)

அண்ணாரப்பக் கவுண்டரின் பல் பற்றிச் சொல்லும்போது "பன்னரிவாள் பல்மாதிரி தேய்ந்து போனது" என்கிறார். அண்ணாரப்பக் கவுண்டரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நாட்களைக் குறிப்பிடும்போது, " நாட்கள் ஆமையைப்போல் நகர்ந்து கொண்டிருந்தது" என்கிறார்... (புறப்பாடு, ப.151)

கறிவேப்பிலை எனும் சிறுகதையில் வயதான பப்புப்பாட்டி, பப்பு தாத்தா (பருப்பை விரும்பிச் சாப்பிடுவதால் பப்புப்பாட்டி, பப்பு தாத்தா என அடைமொழியோடு அழைக்கப்பட்டனர். பருப்பு-பப்பு) இவர்களின் முதுமையைப் பார்க்கும்போது உலர்ந்த பழங்களின் ஞாபகம் வரும் என்கிறார்.

"கொம்பை ஒடித்து உருவியவுடன் அதைச் சுற்றியுள்ள கொடி தொங்குவதுபோல் தலை தொங்கியது" என ராமானுஜ நாயக்கரின் நிலையை சாவு எனும் சிறுகதையில் விவரிக்கிறார்.

வயதானவர்களின் நரைத்தமுடிக்குத் தும்பைப் பூவை உவமை காட்டுகிறார். அவத்தொழிலாளர் எனும் சிறுகதையில் வயதான பெண்மணியின் பல்லில்லாத பொக்கை வாயைச் சொல்லும்போது "சில்லரை எடுக்கத் திறக்கும் ஜிப்பில்லாத மணிபர்சு" என்கிறார்.

"தரையை ஒட்டி வேகமாகப் பருந்தைப்போல் பறந்து செல்கின்றன பிளஷர் கார்கள்" 50ஆண்டுகளுக்கு முன்பு பேருந்தே நிற்காத ஊர்களிலுள்ள மக்களின் நிலையையும் இன்றைய காலகட்டத்தில் வாகனங்களின் பெருக்கத்தையும் வேகத்தையும் அவத்தொழிலாளர்கள் கதையில் பதிவுசெய்துள்ளார்.

### சடங்கு

மக்களின் வாழ்வியல் சடங்குகளோடும் வழக்கங்களோடும் பின்னப்பட்டிருக்கின்றன. சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சில செயல்முறைகளின் தொகுப்பு சடங்கு ஆகும். இச்செயல்பாடுகள் சமூகத்தின் பயன் கருதி செய்யப்படுகின்றன. சடங்குகள் மங்கலச் சடங்கு, அமங்கலச் சடங்கு என இரு வகைப்படும். அமங்கலச் சடங்குகள் உயிர் புறப்பாடு, சடல நீராட்டு, திருவடிப்பேறு, கல் நிறுவுதல், ஆண்டுத் திதி போன்றவை அடங்கும்.

"தரையில் வட்டமான பெரிய சொளகு (முறம்) அதன்மேல் குவிக்கப்பட்டுள்ள கம்மம்புல் அம்பாரம். அதன்மேல் எருமைத் தோலினால் முறுக்கப்பட்ட உழவு வடங்கள் இரண்டு வைக்கப்பட்டுள்ளன. அதன்மேல் ஜக்கம்மாவை ஏற்றி நிற்க வைக்கிறார்கள். கைகள் நிறைய புதுவளையல்கள், மஞ்சள் பூசிக் கழுவிய முகத்தின் நெற்றியில் துலாம்பாரமாகத் தெரியும் சிவப்புக் குங்குமம். கண்களிலிருந்து மாலைமாலையாய்க் கண்ணீர் வழிந்துகொண்டே இருக்கிறது. அவளை எவ்வளவு அழகுபடுத்த முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறார்கள். இது அவளுடைய சுமங்கலியின் கடேசிக்கோலம். விடைபெற்றுப் போக சுமங்கலியின் அதிதேவதையே வந்து நிற்கிறாள்" (சாவு, ப.30). வேலை வேலை என்று ஓடிக்கொண்டிருக்கிற பெண்கள் செய்துகொள்ளாத அலங்காரங்கள் எல்லாம் தன் கணவன் இறந்தபின் செய்யப்படுவதுதான் சமூகத்தின் அவலம். இது பண்பாட்டு அடையாளத்தின் வெளிப்பாடு ஆகும். இதுபோல பண்பாட்டு ஆய்வறிஞர் தொ.பரமசிவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “நான் பிறந்து விழுந்தது இந்த மண்ணில்தான். இந்தப் புழுதியை நான் தலையில் வாரி வாரிப் போட்டுக் கொண்டும் என் சுவட்டாளிகளின் தலையில் வாரி இறைச்சும் ஆனந்தப்பட்டிருக்கிறேன். இந்தக் கரிசல் மண்ணை நான் ருசித்துத் தின்றதற்கு என் பெற்றோரிடம் எத்தனையோ முறை அடிவாங்கியிருக்கிறேன். இன்றைக்கும் தெவிட்டவில்லை இந்த மண்” என்கிறார் கி.ரா.

பதிவுசெய்துள்ளார். இவை சமூகத்தின் கேள்விகளிலிருந்து காப்பாற்றப்படும் அடையாளங்கள் ஆகும்.

இந்தச் சமயத்தில் தும்பைப்பூவைப்போல் தலை நரைத்த ஒரு வயசான கிழவி, சாப்பிடும் வெண்கலத் தாலத்தைக் கொண்டுவந்து கூட்டத்தை நோக்கி ஒரு மரக்கழியினால் ‘கண் கண் கண்’ என்று அடித்து ஓசை எழுப்புகிறாள். இப்பொழுது தாலி அறுக்கப்போகும் இந்த சுமங்கலி முழுகாமல் இருக்கிறாள் என்பது இதற்கு அர்த்தம். (ப.31) தட் தட் தட், கிளக் கிறீச், படீர் படீர் என்று கதாபாத்திரங்களின் மனநிலையை விவரிக்க ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துகிறார்.

நிறைவாழ்வு வாழ்ந்த பெரியவர்களை வழியனுப்பும்போது கரும்பு வீசுவது, வாழைப்பழங்களைச் சூறை போடுவது, சில்லறை நாணயங்களை வாரி இறைப்பது வழக்கம். இதைப் புறப்பாடு கதையில் கி.ரா., பதிவுசெய்திருக்கிறார். ஆனால் இன்றைய காலகட்டங்களில் இதுபோன்ற வழக்கங்கள் இல்லையென்றே சொல்லலாம்.

### கதாபாத்திர விவரிப்பு:

கதாபாத்திரங்களே ஒரு கதையின் வெற்றியில் முக்கிய பங்குபெறுகின்றன. அதுவும் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துவதிலும் கதாபாத்திரத்தின் பண்புநலனுக்கேற்றவாறு பெயர் வைப்பதிலும் கி.ரா., தனித்துவம் மிக்கவர். பப்புப்பாட்டி, பப்பு தாத்தா பற்றி “பேரீச்சம்பழ நிறம் - உடம்பின் தோல்கள், கணக்கில்லாத மச்சங்கள், கருப்பு சிகப்பு நிறத்திலும் கருநீல நிறத்திலும், உடம்பின் சில பகுதிகளில் வறண்ட பாலுண்ணிகள் நிறைந்திருந்தன. முகத்தில் சில இடங்களில் சிலந்தி வலையின் நிழலை ஞாபகப்படுத்தும் கோடுகள். தென்னம்பாளையின் காய்ந்த ஓட்டின் மேலுள்ளதைப் போன்ற நெருக்கமான நேர்கோடுகள். பனைமரத்தின் இடையிலுள்ளதைப் போல் சதுரக் கட்டங்கள். இப்படி உடம்பெங்கிலும் வயோதிகத்தினால் விழுந்த கோடுகள் நிறைந்திருக்கின்றன. கைகள் ஒன்றுதான் அவர்களுடைய உடைமை, அவைகள்தான் அவர்களுடைய மூலதனம். (கறிவேப்பிலை, ப.179) என்று முதுமையைச் சொற்களால் வடித்திருக்கிறார்.

அவத்தொழிலாளர் கதையிலும் கழுகுமலை, வானரம்பட்டி, காக்காத்தோப்பு, கல்லூரணி, குருவிகுளம், நாலாடின் புத்தூர் (நாலு ஆட்டின் புந்தூர்) என்னும் ஊர்ப்பெயர்களை ஒம்பது கழுகு, ஏழு வானரம், மூனு காக்கா, ரெண்டு கல்லு, அஞ்சு குருவி, நாலு ஆடு என்று பேருந்து நடத்துநர் கணக்கு எழுதுவதைப் பார்த்து பேருந்துக்குள் இருப்பவர்கள் மனுசங்க இல்லையோ எனத் தோன்றும் அளவிற்கு மொழியைப் பதிவுசெய்துள்ளார் கி.ரா.

### மக்கள் மொழி:

படைப்பாளர் இலக்கிய நயத்திற்காகவும் படிப்போரின் ஆர்வத்தைக் கூட்டுவதற்கும் கதைகளினூடாகக் கதாபாத்திரங்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் நாட்டுப்புறப்பாடல்களை மக்கள் மொழியாகக் கையாள்வதுண்டு.

“கத்தரிக்காய் எங்களுக்கு
கத்தரிக்காய் எங்களுக்கு
கைலாசம் உங்களுக்கு
டண்டணக்கு டண்டணக்கு
டண்டணக்கு டண்டணக்கு
வாழைக்காய் எங்களுக்கு
வைகுந்தம் உங்களுக்கு
டண்டணக்கு டண்டணக்கு

தாயாரே தாயாரே” (ப.153) எனப் ‘புறப்பாடு’ சிறுகதையிலும்

“நொச்சி மலையாளம்
கொடிபடரும் குற்றாலம்
கொடிபடந்து ஏதுசெய்ய - இப்போ
கொடி மன்னர் இல்லாமே”
“இஞ்சி மலையாளம்
இலை படரும் குற்றாலம்
இலை படந்து ஏதுசெய்ய - இப்போ
இளவரசர் இல்லாமே”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மஞ்ச மலையாளம்
மலை படரும் குற்றாலம்
மலைபடந்து ஏது செய்ய - என்
மகராசர் இல்லாமே''

எனத் தனிமையில் ராமானுஜ நாயக்கரின் மனைவி ஜக்கம்மா பாடுவதாக 'சாவு' எனும் சிறுகதையிலும் இறந்தவரை நினைத்து பாடியதில் நாட்டுப்புறப் பாடலைக் கையாண்டிருக்கிறார். இதன்வழி உணர்வுகளின் வலி புலப்படுகிறது.

## வழக்குச் சொற்கள்;

''நான் பிறந்து விழுந்தது இந்த மண்ணில்தான். இந்தப் புழுதியை நான் தலையில் வாரி வாரிப் போட்டுக் கொண்டும் என் கூட்டாளிகளின் தலையில் வாரி இறைச்சும் ஆனந்தப்பட்டிருக்கிறேன். இந்தக் கரிசல் மண்ணை நான் ருசித்துத் தின்றதற்கு என் பெற்றோரிடம் எத்தனையோ முறை அடிவாங்கியிருக்கிறேன். இன்றைக்கும் தெவிட்டவில்லை இந்த மண்'' என்கிறார் கி.ரா. மண்ணின் மணம் மாறாமல் மக்களின் மனத்துக்கேற்றவாறு சொற்களை மக்களின் மொழியில் கையாண்டிருப்பது கி.ரா.வின் படைப்பு உத்தியாகும். கரிசல் மக்களின் பேச்சு வழக்கை அப்படியே பதிவுசெய்திருக்கிறார்.

## பிடாங்கு வேட்டு

வெடிக்கும் பொருள் ஒன்றைப் பிளந்துகொண்டு வெளிவருவதால் பிளத்தல், வெடித்தல் எனும் கருத்துத் தோன்றியிருக்கிறது.

''புள் - பிள் - பிடு - பிடுங்கு - பிடாங்கு - பிடாங்கு வேட்டு அடைத்திருந்தது திடுமெனத் தானே திறந்துவிட்டால், பிடுங்கிவிட்டதென்பர். தண்ணீர் தொட்டியில் அடைப்பு பிடுங்கிவிட்டது என்பதும் வெள்ளத்தால் குளக்கரை நடுவில் பிடுங்கிவிட்டதும் வழக்கு.

விள் - (வெள்) - வெட்டு - வேட்டு'' (செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, ஆறாம் மடலம், பாகம் 2, முதல் பதிப்பு, 2005, ப.36, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்க வெளியீடு, தமிழ்நாட்டரசு) புறப்பாடு கதையில் அண்ணாரப்பக் கவுண்டர் இறந்த செய்தி கேட்டு ஒடக்கு (ஆடுகிறவர்கள்), பிடாங்கு வேட்டுக்காரர், உருமிக்காரர் என எல்லோரும் வந்திருந்தனர் என்பதிலுள்ள பிடாங்கு வேட்டு என்பது குழாய்வெடி ஆகும். தஞ்சை வழக்கில் பிடாங்கு வேட்டினைப் பீரங்கிவேட்டு என்கின்றனர்.

நிறைவாழ்வு வாழ்ந்தவர்களை வழியனுப்பும்பொழுது சரவெடி வெடிப்பது இன்றைய காலகட்டத்திலும் தொடர்கிறது.

## சிலேப்பனம் கட்டுவது

உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் அண்ணாரப்பக் கவுண்டரின் நிலையால் பல வேலைகள் நடக்கமுடியாமல் தள்ளிப்போவதும், இந்த பௌர்ணமி, அமாவாசை என நாள்கள் போய்க் கொண்டிருப்பதால் எல்லோரும் வருத்தத்தோடு இருக்கிற நிலையில் விசயம் தெரிந்த ஒருத்தர் ''தொண்டையில் சிலேப்பனம் கட்டினால் அள் தீரும்'' என்றார்.

சிலேப்பனம் கட்டறதுக்கு என்ன செய்யணும் என்று வீட்டுக்காரர்களில் ஒருவர் ஆவலோடு கேட்டார்.

'பஞ்சுப்பால் விடணும்'
'அது விட்டாச்சே எப்பவே'
'என்ன பால் விட்டீங்க?'
'பசுவம் பால்'

'எருமைப்பால் சொட்டு விடணும். அதுதான் திக்காய் இருக்கும். திக்காய் இருக்கணும்ண்ணா ஆட்டுப்பால் விடலாமே?'

'சரிதான் ஆட்டுப்பாலையும் பசுவம் பாலையும் விட்டு ஆளை எழுப்பிடுவிங்க போலிருக்கே! ஆட்டுப்பால் அமிருதம்! பசும்பாலும் அப்படித்தான். பேசாம எருமைப் பாலையே விடுங்க!'

எமனுக்கும் எருமைக்கும் உண்டான சம்மந்தம் எனத் தோன்றியது அங்கிருந்தவர்களுக்கு. பாலைக் காய்ச்சாமல் பச்சைப் பாலை விடுவதே சிலேப்பனம் என்று தீர்மானித்தார்கள். (ப.148-149) இந்த விவரிப்பின்வழி கி.ரா., சமூகத்திற்கு ஒரு செய்தியைச் சுட்டிச்செல்கிறார். பேரன், பேத்திகளும், கொள்ளுப்பேரன் பேத்திகளும் எருமைப்பாலில் பஞ்சைமுக்கித் தங்களது முத்தாத்தாவுக்குத் திறந்திருந்த அவரது வாயில் பஞ்சுப்பால் பிழிந்தார்கள்.

கவுண்டர் அரும்பாடுபட்டுச் சம்பாரிச்ச நிலம் அந்த எருவடிப் புஞ்சை. அந்தப் புஞ்சையின் பேரில் அவருக்கு எவ்வளவோ பிரியம். 'அங்கே போனா நீதான் போகணும்'. அந்த நிலத்தில் கொஞ்சம் மண்ணை எடுத்துக்கிட்டுவா அதைத் தண்ணியிலே கரைச்சி அவருக்கு ஒரு சங்கு ஊட்டு.

அந்தக் கரிசல் மண்ணைச் சங்கில் சுண்டைக்காய் அளவு இட்டு அந்த ஊரின் உப்புத் தண்ணீரான குடிநீரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைத்து கவுண்டரின் திறந்த வாயில் புகட்டினார்கள். மறுநாள் பின்னிரவு எல்லோரும் அலுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் வேளையில் கவுண்டர் காலமானார். வயசானவர்கள் போனால் யாரும் அழக்கூடாது என்பது சம்பிரதாயம்.

எருக்குழி: வீட்டுக்குப் பின்பக்கம் அல்லது பக்கத்தில் அமைந்த அடுப்புச் சாம்பல், சாணம், தழை முதலிய கழிவுகளைப் போடும் உரக்குழி. (கி.ராஜநாராயணன், வழக்குச் சொல்லகராதி, ப.40)

எருவடி: மாடுகளின் சாணம் அன்றாடம் எருக்குழிக்குப் போகும். ஆண்டுக்கொருமுறை அங்கிருந்து அந்த சாண எரு எடுத்துச் செல்லப்பட்டு வயலில் கொட்டப்படும். அந்த வயலுக்கு எருவடி புஞ்சை என்று பெயர்.

பிரிமனை: பானையை வைப்பதற்குப் பயன்படும் வட்டமான அடிக்கட்டு. வைக்கோல் பிரியில் செய்யப்படுவது. அன்றைய காலகட்டத்தில் இன்றைய நவநாகரிக உலகில் எல்லாம் உலோகத்திலான வளையங்களைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

### லோலாய் (லோலாய்ப்படுதல்)

லோல் என்ற சமற்கிருதச் சொல் படுதல், திண்டாடுதல், தொங்கலாடுதல், அலைவுறுதல் என்று பொருள். லோலாக்கம் என்றால் திண்டாட்டம். 'லோலோ' என்று அலைந்ததுதான் மிச்சம். 'நானே லோல் பட்டுக்கிட்டுக் கிடக்கிறேன்' என்பார்கள்.

தொங்கும் காதணிக்கு லோலாக்கு என்று பெயர். அது ஆடிக்கொண்டே இருப்பதால் இப்பெயர் பெற்றது. லோல்படுதல் என்பதையே 'லோலாய்ப்படுதல்' என்கிறோமோ என்பதையும் நோக்கலாம்.

### ராமப்பயிர்

கம்மம் பயிரில் ராமப்பயிர் தட்டுப்பட்டால் அந்த வருட மகசூல் அதிகமாகும் என்பது நம்பிக்கை. கம்மம் பயிரில் ஒரு பயிரின் சோகையில் வெண்ணிறமான கோடு ஒன்று அபூர்வமாக விழுந்திருக்கும். அந்தப் பயிரை சம்சாரிகள், ராமப்பயிர் (நாமப்பயிர்) என்று அழைப்பார்கள். மாயமான் சிறுகதையிலும் இச்சொல் வந்துள்ளது.

பறவைப்பருத்தி: பருத்தி வெடிப்பு இனி ஓய்ந்துவிடும் என்று தெரிந்தவுடன் கூலிக்காரர்கள் நிலங்களில் புகுந்து தங்கள் இஷ்டப்படி எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அவர்களை யாரும் அந்தச் சமயத்தில் ஒன்றுஞ் சொல்லக்கூடாது. அந்தநாள் அவர்களுடையது. கூலிகளுக்கு அன்று ஒரு கொண்டாட்டமான நாள். சம்சாரிகளிடத்தில் கூலிக்காரர்களுக்கு இந்த உரிமை உண்டு.

ஒத்தாசணை, (ஒத்தாசை, உதவி), போஷாக்கு, (ஊட்டம், பலம்), பவ்யம் (பணிவு - ரொம்ப பவ்யமான பையன்), தகிப்பாறுதல் (இளைப்பாறுதல், ஓய்வெடுத்தல், லீவு நாட்கள்), பிராயம் (வயது), தூத்துறது (பெருக்கிறது), தொண்டுகிழவர் (வயது முதிர்ந்தவர்), நீத்துப்பாகம், அல்லாடுதல் (தவித்தல்), திரணம் (பணயம்), அருகு (புல்), வத்திக்கணுமில்லே (நிலைக்கணுமே), வள்ளிசா (ஒரேயடியா), தவங்குதல் (முதுமை), கவுரதை (கௌரவம்), முகாந்தரம் (அறிகுறி), அம்போ - யாருமில்லை

### என்னை அம்போன்று விட்டுட்டு போயிட்டான்.

'அவ்ளோ பெரிய வூடு அம்போன்று கெடக்கு' (தஞ்சை) பாரதி தன்னுடைய சுயசரிதையில் 'பள்ளிப் பிராயத்தில்', 'ஆங்கோர் கன்னியைப் பத்துப் பிராயத்தில் ஆழ நெஞ்சிடை யூன்றி வணங்கினன்' என்பார்.

தூத்துறது (வீட்டைப் பெருக்குவது, கூட்டுவது, தூக்குறது) 'நெல் தூத்துறது', 'மண்ணை வாரி தூத்துறது', 'காத்து உள்ளபோது தூத்துறது'

தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த மண்ணின் மக்களின் வாழ்வியல் நிலைப்பாடுகளை யதார்த்தமான, மக்கள் புரியும் மொழியில், அவர்கள் பேசுகிற மொழியில், எளிய சொற்களைக் கையாண்டு தெளிந்த நீரோடைபோல் சொல்வதுதான் கி.ரா.வின் மொழி ஆளுமை.

உவமைகள், சொலவடைகள், ஒலிக்குறிப்புச் சொற்கள், பயன்பாட்டு வழக்குமொழிகள் என அனைத்தையும் கி.ரா. அவருக்கே உரிய நடையில் பதிவுசெய்துள்ளார். இந்த வட்டார வழக்குகளைப் பதிவு செய்யவில்லையென்றால் மக்கள் பேசிய மொழி இல்லாமல் போய்விடும். இது ஒரு ஆவணப்படுத்துதல் ஆகும். இல்லையென்றால் இப்படியான சொற்கள் இருந்தனவா என்னும் கேள்வியை எழுப்பும். இதன்வழி தமிழின் மொழிவளம் பெருகுகிறது.

பயன்பட்ட நூல்கள்:

1. கி.ராஜநாராயணன், வழக்குச்சொல்லகராதி, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு 2008.
2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, ஆறாம் மடலம், பாகம் 2, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு, தமிழ்நாட்டரசு, முதல் பதிப்பு 2005.
3. கி.ராஜநாராயணன், கரிசல் சிறுதைகள், அன்னம் - அகரம் வெளியீட்டகம், 2014.
4. https://puthagampesum.wordpress.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் முதல் சிறுகதை எனும் பெரும் புதிர்

நா.இளங்கோ

தமிழ் இலக்கிய வகைமைகளிலேயே நான் பெரிதும் நேசித்து வாசித்து மகிழும் இலக்கிய வகைமை என்று சிறுகதைகளைத்தான் குறிப்பிடுவேன். கவிதைகளை வாசிப்பதும் நேசிப்பதும் ஒரு அலாதியான அனுபவம் என்றாலும் உரைநடை இலக்கிய வகைமைகளில் சிறுகதைகள்தான் என்னை மிகவும் ஈர்க்கின்றன. சங்க இலக்கிய அகப்புறத் தனிப்பாடல்களைச் சுவைக்கும் அதே பெருவிருப்போடுதான் நான் ஒவ்வொரு சிறுகதையையும் அணுகுவேன். சிறுகதைகளில் மட்டும் அப்படி என்ன ஈர்ப்பு? தேனீக்கள் எல்லைகள் கடந்து மலர்க் கூட்டங்களைத் தேடி, நாடி துளித்துளிகளாய் மலர்களில் உள்ள இனிப்புச் சுரப்பை உறிஞ்சி வயிற்றில் சுமந்து கூட்டுக்கு வந்ததும் ஆறஅமர வயிற்றிலேயே சிலபல வேதி மாற்றங்களைச் செய்து அந்த இனிப்பைத் தேனாக்கிச் சேமித்துத் தருகிறதே, அப்படித்தான் சிறுகதை ஆசிரியர்களும். வாழ்க்கை அவர்களின் படைப்பில், படைப்பாற்றலில் வேதிமாற்றமடைந்து அழியாத கலையாகிறது! இலக்கியமாகிறது!



சிறுகதை ஆசிரியன் பேராற்றலோடு சுழித்தோடும் வாழ்க்கை என்னும் ஆற்றின் ஒரு கரையில் இறங்கி வாசகர்களின் கழுத்தைப் பிடித்து ஓடும் ஆற்றுநீரில் சிலகணங்கள் முக்கி எடுத்துவிடுகிறான். முங்கி எழுந்த வாசகர்களாகிய நமக்கோ அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே கொஞ்ச நேரம் பிடிக்கிறது. உள்ளே முங்கியிருந்த கணத்தில் வந்துமோதிய ஆற்றுநீரின் வேகம், குளிர்ச்சி, வாசம், சுவை இவைகளெல்லாம் நம்நினைவில் மீண்டும் மீண்டும் அலைகளாய் வந்து மோதிப் பரவசப்படுத்துகின்றன. ஆறு எங்கே தொடங்கியது? எங்கே முடியப் போகிறது? எதுவும் நமக்குத் தெரியாது, நமக்கு அதைப்பற்றிக் கவலையுமில்லை. நீரில் முங்கிய நேரத்தில் கடந்துபோன ஆற்றுப்பெருக்கைத்தான் நமக்குத் தெரியும். நம் உறவு அதனோடுதான். அது தந்த அதிர்ச்சி, சிலிர்ப்பு, மகிழ்ச்சி, பரவசம் இவைகள்தாம் நமக்கு முக்கியம்.

சிறுகதை என்பது சிறிய கதை இல்லை. சின்னதாய்க் கதைசொல்வதால் அது சிறுகதை ஆவதில்லை, கதைகள் வேறு, சிறுகதைகள் வேறு. வாழ்க்கையின் ஒரு பகுதி, உணர்வோட்டத்தின் ஒரு துணுக்கு, கதா பாத்திரங்களினுடனான கண நேரத் தீண்டலின் சிலிர்ப்பு இவற்றில் ஏதோவொன்றோ இதுபோன்ற பிறிதொன்றோ படைப்பாளியின் எழுத்தாற்றலால் நம் மனமேடையில் நடத்தும் நாடகமே சிறுகதை.

சிறுகதைகள் கதை சொல்வதற்காகப் பிறப்பெடுத்த இலக்கிய வகைமை இல்லை. ஆனால் அவை கதையும் சொல்லுகின்றன. கதை என்ற வடிவம்தான் நம்மிடயே சில ஆயிரம் ஆண்டுப் புழக்கத்தில் உள்ளனவே. தொல்காப்பியர் சொன்ன பொருளொடு புணராப் பொய்ம்மொழியும், பொருளொடு புணர்ந்த நகைமொழியும் கதைகள் தாமே. ஆனால் மேற்கத்திய சரக்கான நவீன சிறுகதைகள் இதனினும் வேறானவை. அவை ஆற்றொழுக்காக ஆதிமுதல் அந்தம்வரை எதையும் விவரிப்பதில்லை. திடுமெனத் தொடங்கி, திடுமென முடிந்துவிடும் சிறுகதைகள் நமது சங்ககாலத் திணைப் பாட்டுகளைப் போலத்தான் சொன்னதை வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சொல்லாதவைகளைப் புரிந்துகொள்ள வைக்கும் ஒரு இலக்கிய வடிவம். திணைப்பாடல்களுக்கு முதல், கரு என்ற பின்னணிச் சட்டகங்கள் உண்டு. திணை, துறை என்ற பழகிய வழித்தடங்கள் உண்டு. ஆனால் சிறுகதைகளுக்கு இவையேதும் இல்லை. கடலில் நாம் காணும் பனிச்சிகரங்களைப் போலத்தான் சிறுகதை ஆசிரியன் தம்முடைய விவரிப்பின் வழியாக வாசகர்களுக்குக் கொஞ்சம்போலக் காட்சிப்படுத்துகின்றான். மூழ்கியிருக்கும் அந்தப் பனிமலை போல அவன் சொல்லாதது அந்த விவரிப்பின் கீழே மறைந்திருக்கும். அதனை உய்த்துணர்ந்து மனதால் வாசிக்கத் தெரிந்தவனே நல்ல சிறுகதை வாசகன். சில கோடுகளால் முழுஉருவத்தையும் காண்பிக்கத் தெரிந்த ஓவியனைப் போலவே சிறுகதை ஆசிரியர்களும் தம்முடைய படைப்பின் வழியே சிலவற்றைச் சொல்லிப் பலவற்றை அனுபவிக்கச் செய்கிறார்கள்.

## தமிழின் கதைத் தொகுப்புகள்

தமிழ்ச் சிறுகதைகளின் நதிமூலத்தைத் தேடும்முன் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் வெளிவந்த கதைத் தொகுதிகளின் வரலாற்றை ஒரு புரட்டு புரட்டிவிடுவது நல்லது.

இனக்குழுக்களாக மக்கள் வாழ்ந்துவந்த வேட்டைச் சமூகத்திலேயே கதை சொல்லும் பழக்கம் தோன்றியிருக்க வாய்ப்புண்டு. குழுவாக வேட்டைக்குச் சென்று திரும்பியவர்கள் குகைளில் இருந்த மற்றவர்களுக்கும் குகைகளில் இருந்தவர்கள் வேட்டைக்குச் சென்று திரும்பியவர்களிடமும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டபோது கதைகள் பிறந்திருக்க வேண்டும். கதைசொல்லும் பழக்கம் தகவல் தொடர்பாகவும் ஓய்வுநேரப் பொழுதுபோக்காகவும் அம்மக்களிடையே வளர்ச்சி பெற்று வாய்மொழி மரபாக நின்று நிலைபெற்றுவிட்டது. உலகெங்கிலும் உள்ள அனைத்து இன மக்கட் குழுக்களுக்கும் தனித்தனியான வாய்மொழிக் கதைகள் ஏராளமாக உள்ளன. இன்றுவரை சொல்லப்படும், எழுதப்படும் பெரும்பாலான புனைகதைகளுக்கும் காவியங்களுக்கும் ஆதிமனிதர்களின் வாய்மொழிக் கதைகளே ஆதாரமாக அமைந்துள்ளன. கதைகள் அச்சு வாகனமேறிய தொடக்கக் காலங்களில் இவ்வகைக் கதைகளைத் திரட்டியே பலரும் பலவகையான கதைத் தொகுப்புகளை வெளியிட்டனர்.

வீரமாமுனிவர் (1680-1749) எழுதிய பரமார்த்த குரு கதை என்ற கதை நூல், அவர் காலத்திற்குப் பிறகு, 1822இல் சென்னை கல்விச் சங்கத்தாரால் அச்சிடப்பட்டது. சில ஆய்வாளர்கள் பரமார்த்தகுரு கதை நூலையே தமிழின் முதல் சிறுகதை நூலாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகளைச் சிறுகதைகள் என்ற வகைப்பாட்டில் அடக்க இயலாது. அவை கதைகள் அவ்வளவே. பின்னர் கதாமஞ்சரி (1826), ஈசாப்பின் நீதிக்கதைகள் (1853), மதன காமராஜன் கதை (1885), மயில் இராவணன் கதை (1868), முப்பத்திரண்டு பதுமை கதை (1869), தமிழறியும் பெருமாள் கதை (1869), விவேக சாகரம் (1875), கதா சிந்தாமணி (1876) முதலான கதை நூல்கள் தமிழில் வெளியாயின. பண்டிதர் ச.ம.நடேச சாஸ்திரி, தமிழ் நாட்டில் வழங்கி வந்த செவிவழிக் கதைகளைத் தொகுத்து, தக்காணத்துப் பூர்வ கதைகள் (1880), திராவிடப் பூர்வ காலக் கதைகள் (1886), திராவிட மத்திய காலக் கதைகள் (1886) என்ற தலைப்புகளில் வெளியிட்டார். தெலுங்கிலும் கன்னடத்திலும் வழங்கி வந்த தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை போன்ற கதைகளும் தமிழில் அச்சாயின. அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் தொகுத்த விநோத ரச மஞ்சரி என்ற நூல் 1876இல் வெளிவந்தது. இதில் கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகம், ஏகம்பவாணன், ஔவையார் போன்ற புலவர்களின் வரலாறு கதையாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும் தமிழிலும் நாவல் எழுதிவந்த அ.மாதவையா 1910ஆம் ஆண்டில் இந்து ஆங்கில நாளிதழில் வாரம் ஒரு கதையாக 27 சிறுகதைகளை எழுதினார். பின்பு இக்கதைகள் 1912இல் *Kusika's Short Stories* என்ற பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து 1924இல், மாதவையா இக்கதைகளில் பதினாறைத் தேர்ந்தெடுத்துக் குசிகர் குட்டிக் கதைகள் என்ற பெயரில் இரு தொகுதிகளாகத் தமிழில் வெளியிட்டார். சமூகச் சீர்திருத்த நோக்குடன் இக்கதைகளைப் படைத்ததாக மாதவையா அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இத்தொகுப்புகளில் இடம்பெற்ற திரௌபதி கனவு குழந்தை மணத்தையும், கைம்பெண் கொடுமையையும், அவனாலான பரிகாரம் என்ற கதை வரதட்சணைக் கொடுமையையும் பேசின. மாதவையா, தாம் ஆசிரியராக இருந்து வெளியிட்ட பஞ்சாமிர்தம் இதழிலும் தமிழில் பல சிறுகதைகள் எழுதியுள்ளார்.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் உருவம் மற்றும் உள்ளடக்கத்தில் நவீன சிறுகதைகளுக்கு நெருக்கமான வடிவத்தில் கதைகளை எழுதியவர் என்று பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராயரைப் பல தமிழ்த் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். 'அபிநவக் கதைகள்' என்னும் தலைப்பிலான அவரின் சிறுகதைத் தொகுப்பு வெளியான ஆண்டு தெரியவில்லை. தற்போது 1921இல் வெளியான அந்நூலின் மூன்றாம் பதிப்புதான் நமக்குக் கிடைக்கின்றது. *TAMIL NOVELETTES* – அபிநவக் கதைகள் என்ற தலைப்பில் *MADRAS, SRCK PRESS COMPANY* என்ற பதிப்பகம் வெளியிட்டதாக அந்நூலின் முகப்பு தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பலங்காரம், தனபாலன், கோமளம், ஸுப்பையர், கிருஷ்ணன், ஆஷாடபூதி என்ற ஆறு சிறுகதைகள் அத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அபிநவக் கதைகள் குறித்து, சிட்டி-சிவபாதசுந்தரம், "தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் வடிவ அமைப்பு தெளிவாக அறியப்படாதிருந்த ஆரம்ப நாளில், கதை சொல்லும் திறமை யொன்றையே சிறப்பாகக் கையாண்டு, வாசகர் மனத்தில் ஒருமை உணர்வு தோன்றும் விதத்தில் கதையை நகர்த்திச் செல்லும் சிறப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் எழுதியவர்களிடம் இருக்கக் காணலாம்; இப்படிப்பட்ட கதைகளுக்குச் செல்வக்கேசவராய முதலியாரின் 'ஸுப்பையர்' என்ற கதை ஓர் எடுத்துக்காட்டு ஆகும்" என்று குறிப்பிடுகின்றனர்.

'ஸுப்பையர்' என்ற சிறுகதை சென்னையில் அக்காலத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். சென்னையிலுள்ள பீபிள்ஸ் பூங்கா இந்தப் பூங்காவிற்கு ராணித் தோட்டம், விக்டோரியா தோட்டம் முதலான பெயர்களும் உண்டு. இதில் ஆண்டுதோறும் கண்காட்சி விழா நடப்பது வழக்கம். அப்படி 1886ம் ஆண்டு நடந்த கண்காட்சியில் மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. அத்தீவிபத்தே இக்கதையின் பின்னணி.

> கண்காட்சியைப் பார்க்க, கதையின் நாயகன் ஸுப்பையரும் அவரது நண்பர் நாகஸ்வாமியும் செல்கின்றனர். அப்போது ஏற்பட்ட மிகப்பெரிய தீவிபத்தில் பலர் இறந்து போயினர், மிகப் பலருக்கு தீக்காயங்கள் ஏற்படுகின்றன. சிலர் காணாமல் போய்விடுகின்றனர். ஸுப்பையரும் நாகஸ்வாமியும் கண்காட்சியிலிருந்து திரும்பி வராததால் அவர்கள் இறந்தவர்களாகக் கருதப்பட்டனர். ஈமக்கடன்கள் செய்து முடிக்கப்பட்டன. ஸுப்பையரின் மனைவி காமாட்சியம்மாள், இருபது வயதானவர், மாங்கல்யத்தைக் களைந்து, தலையை மழித்து, விதவைக் கோலத்திற்கு மாற்றப் பட்டிருந்தார்..
>
> இருபத்தோராம் நாள் நள்ளிரவில் தெருக்கதவைத் தட்டுகிற சப்தம் கேட்டது. காமாட்சி யம்மாள் திடுக்கிட்டு விழித்தாள். "நான்தான் சுப்பு. கதவைத் திறக்கச் சொல்லுமே" என்ற வார்த்தைகள் கேட்டன. ஸுப்பையர் ஆவிதான் வந்து இப்படிப் பயமுறுத்துகிறதென்று நம்பிய வீட்டுக்காரர் யாரும் வாய் திறக்கவில்லை.
>
> அக்கம்பக்கத்து வீடுகளிலும் போய்க் கதவைத் தட்டிக் கூப்பிட்டார் ஸுப்பையர். துர்மரணமாகச் செத்ததால் அவனுடைய ஆவிதான் அலைகிறது என்று பயந்து, எவரும் கதவைத் திறக்கவில்லை. பின்னர் வீதியில் வந்து கொண்டிருந்த இரண்டு மூன்று சாஸ்திரிகளில் நாராயணஸ்வாமி என்பவர் தைரியமாய் எதிர்கொண்டு உண்மையை விசாரிக்கிறார். ஸுப்பையரும் நண்பர் நாகஸ்வாமியும் கண்காட்சிக்குச் சென்றபோது வழியில் சேலத்து வர்த்தகர் ஒருவர் எதிர்ப்பட்டதும் அவருடன் ஸுப்பையர் அவசர வியாபார விஷயமாக சேலத்துக்குப் போனதும், கண்காட்சிக்குப் போகாததால் தீ விபத்தில் சம்பந்தப்படாததும் தெரியவருகிறது. பின்னர் ஸுப்பையரை வீட்டுக்கு அழைத்துச் சென்று, நடந்ததை எடுத்துச் சொல்லிக் குடும்பத்துடன் சேர்த்து வைக்கிறார்.

இச்சிறுகதை செல்வக் கேசவராயரின் படைப்பு நேர்த்திக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இத்தொகுப்பிலுள்ள மற்ற கதைகளும் இத்தரத்திலேயே படைக்கப்பட்டுள்ளன. "அபிநவக் கதைகள் என்ற பெயரில் செல்வக் கேசவராயர் படைத்த சிறுகதைகளே தமிழின் முதல் சிறுகதைகள்" எனத் தமது 'தமிழ் இலக்கியம்' நூலில் குறிப்பிடுகிறார் அறிஞர் கமில் ஸ்வெலபில்.

தமிழின் மிகச் சிறந்த சிறுகதை ஆசிரியர்களில் ஒருவரான புதுமைப்பித்தன், தமது சிறுகதை -1 என்ற கட்டுரையில் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை, "செல்வக் கேசவராய முதலியார் எழுதியுள்ள அபிநவக் கதைகள் என்ற சிறு தொகுதியை ஆரம்பமாக வைத்துக் கொண்டு கவனித்தால் இன்று நம்முடைய சாதனை பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடியதுதான்" என்று குறிப்பிடுகின்றார். (புதுமைப் பித்தன் கட்டுரைகள், ப. 26)

பேராசிரியர் செல்வக் கேசவராயர் தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவர் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஆனால் தமிழ்ச் சிறகதைகளின் வரலாற்றைப் பேசும் பலருக்கும் இவர் தெரியாமல் போனது வியப்பிலும் வியப்பே. அபிநவக் கதைகள் நூலின் மூன்றாம் பதிப்பு வெளியிடப் பட்ட ஆண்டு 1921. அநேகமாக அந்நூலின் முதல்பதிப்பு 1910ஆம் ஆண்டிற்கு முன்பே வெளிவந்திருக்க வேண்டும். (இந்த யூகம் ஆய்விற்குரியது). எப்படியிருந்தாலும் தமிழின் முதல் சிறுகதைகள் என்று பேசப்படும் பாரதியின் ஆறிலொரு பங்கு, வ.வே.சு.ஐயரின் குளத்தங்கரை அரசமரம் ஆகிய சிறுகதைகளுக்கு முன்பே செல்வக் கேசவராயரின் அபிநவக் கதைகள் வெளிவந்து விட்டன என்பதே உண்மை. அதன் காரணமாகவே மேனாட்டு அறிஞர் கமில் ஸ்வெலபில் அபிநவக் கதைகளைத் தமிழின் முதல் சிறுகதைகள் என்கிறார்.

## தமிழின் முதல் சிறுகதை – சில விவாதங்கள்

தமிழ்ச் சிறுகதைத் திறனாய்வாளர் எம்.வேதசகாய குமார் அவர்கள் பஞ்சாமிர்தம் இதழில் வெளியான அ.மாதவையாவின் கண்ணன் பெருந்தூது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாரதியின் சிறுகதைகளை மதிப்பிடும் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள், "பாரதியார், தாம் எழுதிய கதைகளை அந்த உருவ அமைதியுடன் எழுதாமற் போனது துரதிட்டமே. பாரதியார் எழுதிய சிறிய கதைகள் சம்பவங்களை உள்ளவாறே குறிப்பனவாக இருக்கின்றனவே யன்றிச் சம்பவங்களின் உணர்வு நிலையைக் காட்டுவனவாக இல்லை. மேலும் அவர் எழுதியுள்ள கதைகள் கட்டுக்கதைகள் என்று வகுக்கப் படத்தக்க முறையில் அமைந்தனவே" என்பார்.**

என்ற சிறுகதையே தமிழின் முதல் சிறுகதை என்று குறிப்பிடுகிறார்.

> வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம் போலல்லாமல் இது தமிழ் வாழ்விலிருந்தே கிளர்ந்தெழுந்த வடிவமாக அமைகிறது. சாதி அமைப்பில் இருந்தான விடுதலை தாழ்ந்த சாதியினரை விட உயர்ந்த சாதியினருக்கே அத்தியாவசியமானது என்ற இக்கதை முன்வைக்கும் பார்வை மிகவும் பொருளுடையது. மாதவையரை இனங்காட்டுவதும் கூட. ஆசிரியர் குறுக்கீடு பெருமளவின்றி உரையாடல் வடிவமாகத் திகழும் இக்கதையின் வடிவம் அபூர்வமானது. பேச்சுமொழியைக் கையாளுவதில் இதன் ஆசிரியர்க்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. பேச்சு மொழியை முழுவதுமாகக் கையாளும் முதல் சிறுகதையும் கூட. (எம். வேதசகாய குமார், கண்ணன் பெருந்தூது, சொல்புதிது, ஜூலை-செப்டம்பர், ப.79)
>
> என்கிறார் வேதசாகாய குமார்.

ஆர்.எஸ். ஜேக்கப் என்பவர் தமிழின் முதல் சிறுகதை எது? என்ற தலைப்பில் குறுநூல் ஒன்றினை வெளியிட்டுள்ளார். அந்நூலில் 1877ஆம் ஆண்டு ஜூலை மாத நற்போதகம் இதழில் வெளியான சரிகைத் தலைப்பாகை எனும் சிறுகதையே தமிழின் முதல் சிறுகதை என்று பதிவு செய்கின்றார். திருமணத்திற்குக் கடன்வாங்கிச் செலவு செய்யும் பழக்கத்தைக் கண்டனம் செய்யும் வகையில் அக்கதை எழுதப்பட்டுள்ளது என்பார் அவர். கதையில் ஆசிரியர் பெயர் குறிப்பிடப் படவில்லை என்றாலும் ஜேக்கப் அவர்கள் அருள்திரு சாமுவேல் பவுல் அவர்களே இக்கதையின் ஆசிரியர் என்று குறிப்பிடுகின்றார். கதையின் மொழிநடையை வைத்தும் நற்போதகம் இதழின் அப்பொழுதைய ஆசிரியர் சாமுவேல் பவுல் அவர்களே என்பதனைக் கொண்டும் இது சாமுவேல் பவுல் அவர்களின் கதையே என்று உறுதிப்படுத்த முடியும் என்கிறார் ஜேக்கப் அவர்கள். மிகப்பெரிய அளவில் நெடுங்கதையாக எழுதப்பட்டுள்ள இக்கதையை முதல் சிறுகதை என்று முன்மொழியும் ஜேக்கப் அவர்களே நூலின் நிறைவுப் பகுதியில் இது ஆய்வின் தொடக்கமே, முடிவல்ல என்று முடிக்கிறார். எனவே ஜேக்கப் அவர்கள் குறிப்பிடும் 1877இல் அருள்திரு சாமுவேல் பவுல் எழுதியதாகக் கருதப்படும் சரிகைத் தலைப்பாகை என்ற சிறுகதையே தமிழின் முதல் சிறுகதை என்ற கருத்து ஆய்வுக்குரியதாகும்.

ஈழத்தின் முதல் பத்திரிகையாக 1841 தொடங்கி வெளிவந்து கொண்டிருந்த உதயதாரகை எனும் இதழுக்கு 1857 தொடங்கி 1881 வரை ஆசிரியராகப் பொறுப்பு வகித்தவர் வட்டுக்கோட்டை ஆர்னாலட் சதாசிவம் பிள்ளை அவர்கள். உதயதாரகை இதழில் அவ்வப்போது தாம் எழுதிய நாற்பது சிறுகதைகளைத் தொகுத்து 1869இல் நன்னெறிக் கதா சங்கிரகம் என்ற பெயரில் கதைத் தொகுப்பாக அவர் வெளியிட்டார். இத்தொகுப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் சிறுகதைகளின் வரலாற்றை விரிவாக எழுதிய சோ.சிவபாதசுந்தரம், சிட்டி இணையர் தம்முடைய சிறுகதை வரலாற்று நூலில் ஆர்னாலட் சதாசிவம் பிள்ளை அவர்களையே தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர் என்று கருதலாம் என்றும் அவருடைய நன்னெறிக் கதா சங்கிரகம் என்ற நூலையே தமிழின் முதல் சிறுகதைத் தொகுப்பு என்று கருதலாம் என்றும் குறிப்பிடுவர். 1869இல் ஆர்னால்ட் சதாசிவம் பிள்ளை தொகுத்து வெளியிட்ட நன்னெறிக் கதா சங்கிரகம் என்ற இத்தொகுப்பின் முன்னுரையில், "மதனகாமராஜன் கதை, பதுமைக்கதை, விவேகசாரம் ஆகிய இன்பரசக் கதைகள் பல தமிழில் உள்ளன. சிலகதைகள் இரண்டு பேர் ஒருவர் முகத்தை ஒருவர் கூச்சம் நாணமின்றி நோக்கி வாசிக்கத் தகுந்தவை அல்ல" என்று சொல்லி அதற்கு மாற்றாகச் "சன்மார்க்க சாதனைக்கும் போதனைக்கும் உரிய "விஷயங்களைப் போதிப்பதற்காக அந்தத் தொகுப்பை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சதாசிவம் பிள்ளையின் கதைத் தொகுதியைத் தொடர்ந்து ஈழத்திலிருந்து மேலும் சில கதைத் தொகுதிகள் வெளிவந்தன என்று அறிகிறோம். 1. 1875ஆம் ஆண்டு வெளியான பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணம் பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கதா சிந்தாமணி என்ற கதைத் தொகுதி. இத்தொகுப்பில் ஏழு கதைகள் இடம் பெற்றுள்ளன. 2. தம்பி முத்துப்பிள்ளை எழுதிய ஊர்க்கதைகள் என்ற கதைத் தொகுதி. இத்தொகுப்பில் நூற்றொரு கதைகள் இடம்பெற்றுள்ளன. 3. ஐதுருஸ் லெப்பை மரைக்கார் எழுதிய ஹைதர்சா சரித்திரம் என்ற கதைத் தொகுதி. ஆக பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஈழத்தில் பல நல்ல சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்தன என்பதனை அறிகிறோம். இத்தொகுதிகளில் இடம்பெற்ற கதைகள் தமிழின் நவீன சிறுகதைக்குரிய தகுதியினைப் பெற்றிருந்தனவா? என்பது ஆய்வுக் குரியதாகும்.

## தமிழின் முதல் சிறுகதை<br>வ.வே.சு ஐயரின் குளத்தங்கரை அரசமரம்

வ.வே.சு. ஐயர் 1915ஆம் விவேகபோதினி இதழில் தன் மனைவியின் பெயரான பாக்கியலெஷ்மி என்ற புனைபெயரில் குளத்தங்கரை அரசமரம், சிறுகதையை எழுதினார். 1915 விவேக போதினியின் செப்டம்பர், அக்டோபர் மாத இதழ்களில் இரு பகுதிகளாக (ஒரு சிறிய கதை) என அடைப்புக் குறிகளுடன் *THE PEEPUL TREE NEAR THE TANK (A SHORT STORY)* என்ற துணைத் தலைப்புகளுடன் இக்கதை வெளியானது

பின்னர் புதுச்சேரி, கம்ப நிலையம் என்ற பதிப்பகம் மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் என்ற பெயரில் குளத்தங்கரை அரசமரம் உள்ளிட்ட ஐந்து கதைகளை நூலாக வெளியிட்டது. வெளியான ஆண்டு அநேகமாக 1920ஆக இருக்கலாம். அந்நூலில் இடம்பெற்ற மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன், கமல விஜயன், அழேன் ழக்கே, குளத்தங்கரை அரசமரம் என்ற ஐந்து சிறுகதைகளில் குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதையே தமிழின் முதல் சிறுகதையாகப் பல விமர்சகர்களால் அடையாளப் படுத்தப்படுகிறது. மணிக்கொடி எழுத்தாளர்களாலும் விமர்சகர்களால் முன்மொழியப்பட்ட இக்கருத்து தமிழ்ச் சூழலில் மிக வலிமையாக வேரூன்றி விட்டது. பாடப்புத்தகங்களும் பெரும்பாலான சிறுகதைத் திறனாய்வு நூல்களும் இக்கருத்தினையே திரும்பத் திரும்பச் சொல்லி உண்மைபோல் ஆக்கிவிட்டன. வ.வே.சு.அய்யர் இக்கதையில் பாத்திர ஒருமை, நிகழ்ச்சி ஒருமை, உணர்வு ஒருமை என்ற மூன்றையும் சிறப்பாக அமைத்துள்ளதாக இலக்கிய விமர்சகர்கள் கூறுகின்றனர். குளத்தங்கரை அரசமரம் சிறுகதையின் சுருக்கத்தினை இனி காண்போம்.

> சிறுவயதில் திருமணமான ருக்குமணியும் நாகராஜனும் சாந்தி முகூர்த்தத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இதற்கிடையில் பேங்க் திவாலானதால் ருக்குமணியின் தகப்பனார் காமேஸ்வர ஐயர் செல்வத்தை இழக்கிறார். இதன் காரணமாக, நாகராஜனின் தகப்பனார் தன் மகனுக்கு வசதியான வேறுஇடத்தில் திருமணம் செய்ய ஏற்பாடு செய்கிறார். நாகராஜன் இதை விரும்பாவிட்டாலும் தாலி கட்டும்போது மறுத்து, தகப்பனாரின் மூக்கறுக்கத் திட்டமிடுகிறான். இந்தத் தந்திரத் திட்டத்தை அறியாத ருக்குமணி, தான் ஏமாற்றப்பட்டுவிட்டதாக மனம் உடைந்து குளத்தில் விழுந்து தற்கொலை செய்துகொள்கிறாள்.
>
> நாகராஜனோ "இனிமேல் எனக்கென்ன இருக்கிறது. ருக்குமணி, நீயோ அவசரப்பட்டு என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாய். எனக்கு இனிமேல் சம்சார வாழ்க்கை வேண்டாம். இதோ சந்நியாசம் வாங்கிக்கொள்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே யாரும் தடுப்பதற்கு முன், தான் உடுத்தியிருந்த வேட்டியையும் உத்திரீயத்தையும் அப்படியே தாராகக் கிழித்துவிட்டான். அவன் தாயார் தகப்பனார் ஒருவரும் வாய் பேசவில்லை. நாகராஜனும் அவர்கள் திடுக்கிட்டதிலிருந்து சுதாரிச்சுக் கொள்வதற்குள் அவர்கள் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்துவிட்டு யாருடனும் பேசாமல் கௌபீனதாரியாகப் புறப்பட்டுப் போய்விடுகிறான்.

அக்ரகாரத்தை ஒட்டிய குளக்கரையில் வளர்ந்திருக்கும் ஒரு முதிய மரம் இக்கதையைச் சொல்வதாக கதை விவரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூற்றுமுறையே இக்கதையின் தனிச்சிறப்பாகும். கதையின் முடிவில் வ.வே.சு. ஐயர் பின்வருமாறு எழுதுகிறார்.

> இப்படி முடிந்தது என் ருக்மணியின் கதை! என் அருமைக் குழந்தைகளே! பெண்கள் மனசு நோகும்படி ஏதாவது செய்யத் தோணும்போது இனிமேல் இந்தக் கதையை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். விளையாட்டுக்காகக் கூடப் பெண்ணாய்ப் பிறந்தவர்களின் மனதைக் கசக்கவேண்டாம். எந்த விளையாட்டு என்ன வினைக்குக் கொண்டு வந்துவிடும் என்று யாரால் சொல்ல முடியும். (மங்கையர்க்கரசியின் காதல், ப. 68)

குளத்தங்கரையில் இருந்த அரசமரம் வாசகர்களை நோக்கி அறிவுரை சொல்வதுபோல் வெளிப்படையான பிரச்சாரக் கருத்துடன் இக்கதை முடிகிறது. மேலும் மகாகவி காளிதாசனின் "பெண்ணியலாரின் அன்பு நிறைந்த இருதயம் பூப்போல் மிகவும் மெல்லியது, அன்புக்குக் கேடுவரின் உடனே விண்டு விழுந்து விடும் (குஸும ஸத்ருசம் ... ஸத்ய பாதி பிரணயி ஹ்ரதயம் -காளிதாசன்) எனும் மேற்கோளும் கதையின் நடுவே பாத்திரக் கூற்றாக இடம்பெற்றுள்ளது.

குளத்தங்கரை அரசமரம் என்ற வ.வே.சு. ஐயரின் கதை வங்கமொழியில் இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கதேர் கதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிறுகதையின் மொழிபெயர்ப்பு என்று கருதப்படுகிறது. தாகூர் வங்க மொழியில் எழுதிய இக்கதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு கல்கத்தாவிலிருந்து வெளிவரும் மார்டன் ரெவ்யூ இதழில் 1914ஆம் ஆண்டு 'THE STORY OF THE RIVER STAIR' என்ற தலைப்பில் வெளியானது. வ.வே.சு.ஐயரின் கதை 1915 விவேகபோதினி இதழில் வெளியானது. தாகூர் கதையில் ஆற்றங்கரைப் படிக்கட்டு கதை சொல்கிறது. வ.வே.சு.ஐயரின் கதையில் குளத்தங்கரை அரசமரம் கதை சொல்கிறது. எட்டுவயதில் விதவையான ஒரு பெண் யுவதியான பிறகு ஒரு பாலசன்யாசியிடம் மனதைப் பறிகொடுத்து, அவரிடம் எந்தச் சலனமும் ஏற்படாததால் ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்துகொள்வதைத் தாகூரின் கதை விவரிக்கிறது. சிறுவயதில் மணமுடிக்கப்பட்ட ருக்மணி வயது வந்த பிறகும் வரதட்சிணைக் கொடுமை காரணமாக கணவன் வீடு செல்லமுடியாத சூழலில் குளத்தில் குதித்து உயிரை விடுவதைச் சொல்கிறது வ.வே.சு. ஐயரின் கதை. எனவே இக்கதையைத் தாகூர் கதையின் மறுஆக்கம் என்று சொல்ல முடியாது. ஆனால் தாகூர் கதையின் தாக்கத்தினால் ஐயர் இக்கதையினை எழுதியிருக்கலாம்.

## தமிழின் முதல் சிறுகதை மகாகவி பாரதியின் ஆறிலொரு பங்கு

தமிழின் முதல் சிறுகதை வ.வே.சு.ஐயரின் குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதைதான் என்பது மணிக்கொடிக் காலம் தொடங்கித் தமிழ்ச் சமூகத்தில் அழுத்தந் திருத்தமாகப் பதிந்து போய்விட்டது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர்தான் முதல் தமிழ்ச் சிறுகதை குறித்த விசாரணை, திறனாய்வு உலகில் தலைகாட்டத் தொடங்கியது. வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம் சிறுகதைக்கு முன்பே காத்திரமான சிறுகதைகளைப் படைத்த சுப்பிரமணிய பாரதியின் பங்களிப்பு குறித்துப் பலரும் அப்பொழுதுதான் பேசத் தலைப்பட்டார்கள். மணிக்கொடி காலத்து இலக்கியக் கர்த்தாக்கள் எவரும் பாரதியின் சிறுகதைகளைக் குறித்து பேசவில்லை. வ.ரா.வும் கூட எங்கும் பேசியதாகத் தெரியவில்லை. இத்தனைக்கும் வ.வே.சு.அய்யரின் 'குளத்தங்கரை அரசமரம்' எழுதப்படுவதற்கு ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்னரே பாரதி சிறுகதைகளை எழுதத் தொடங்கிவிட்டார். சி.சு.செல்லப்பா 1974 ஆம் ஆண்டு எழுதிய இலக்கிய விமர்சனம் என்னும் நூலில் வ.வே.சு. ஐயரே தமிழ்ச் சிறுகதைக்குத் தந்தை என்று குறிப்பிட்டிருந்தார். பின்னர் 1988 1988 ஆம் ஆண்டு சி.சு.செல்லப்பா தமது கருத்தை மாற்றிக்கொண்டு பாரதிதான் சிறுகதையின் தந்தை என்ற புதிய முடிவுக்கு வந்தார்.

இச்சிக்கல் குறித்து சி.சு.செல்லப்பா கூறும்போது, “தமிழ்ச் சிறுகதைக்கு வ.வே.சு.ஐயர்தான் தந்தை என்ற கருத்தை மணிக்கொடிக் காலம் முதல் அழுத்திச் சொல்லி வந்திருக்கிறோம். மங்கையர்க்கரசியின் காதல் தொகுப்பை வைத்து, குறிப்பாக குளத்தங்கரை அரசமரம் சிறுகதையை வைத்துத் தற்காலத் தமிழ் இலக்கியத்தின் சகல துறைகளையும் தொட்டு, பாரதி சிறுகதைத் துறைக்கு ஆரம்பப் பங்கு செலுத்தியதாகச் சொல்வதற்கில்லை என்ற கருத்து பரவலாக இருக்கிறது. ஆனால், உண்மை வேறுவிதம் என்பதை அப்போது உணர இயலாது; நான் உணர்ந்தபோது விமர்சனப் பொறுப்பைச் சரிவர செய்யத் தவறிய குற்றவுணர்வு மனதை உறுத்தியது. பாரதியின் ஆறிலொரு பங்கு என்ற கதை 1913-இல் எழுதப்பட்டது. (ஆறிலொரு பங்கு கதை எழுதி வெளியிடப்பட்ட ஆண்டு -1919) தமிழில் குறிப்பிடத்தக்க முதல் சிறுகதையாக அமைந்திருப்பதுதான் இதன் விசேஷம். இந்தச் சிறுகதையை ஆராய்ந்து மாற்றிக்கொண்டதன் மூலம் என் தவறுக்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டேன் என்று செல்லப்பா கூறியுள்ளார்.

பிராயச்சித்தம் செய்த சி.சு.செல்லப்பா தமிழின் முதல் சிறுகதையாகத் தேர்வுசெய்த கதை சுப்பிரமணிய பாரதியின் ஆறிலொரு பங்கு சிறுகதையைத்தான். தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஆறிலொரு பங்கு என்ற சிறுகதையின் பங்களிப்பினைத் தவிர்த்துவிட முடியாது. 'ஒரு நாவலுக்குரிய கருப்பொருளைக் கொண்டது' என்று சில விமர்சகர்களால் புறக்கணிப்படும் அக்கதையை பாரதி ஒரு சிறிய கதையாகத்தான் கருதினார். நூறாண்டுகளுக்கு முன்பு, 1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவர் புதுச்சேரியிலே வசித்த போது, 'ஆறில் ஒரு பங்கு ஓர் சிறிய கதை' என்ற நூலைத் தன் சொந்த முயற்சியிலே மூன்றணா விலையுள்ள நூலாக வெளியிட்டார். அந்நூலினை 1911ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு ஆணை ஒன்றின் மூலம் தடைசெய்தது.. அந்தத் தடையை நீக்குமாறு அரசாங்கத்தை அறிவுஜீவிகளும் பத்திரிகையாளர்களும் வலியுறுத்த வேண்டும் எனக்கோரி 1912ம் ஆண்டு அக்டோபர் 8ஆம் தேதி ஹிந்து நாளிதழுக்கு, ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதிக்குக் கடிதம் எழுதினார் மகாகவி பாரதி. ஆக 1910ஆம் ஆண்டிலேயே பாரதியின் ஆறிலொரு பங்கு சிறுகதை எழுதி வெளியிடப்பட்டுவிட்டது என்பதே உண்மை.

மகாகவி பாரதி நவீன மேற்கத்திய சிறுகதைகளின் வடிவக் கோட்பாடு முதலான அனைத்து இலக்கிய நுணுக்கங்களை அறிந்தவர் என்பதற்கு சின்ன சங்கரன் கதைக்கு அவர் எழுதிய முன்னுரையே சாட்சி.

> 'நமது நாட்டுக் கதைகளிலே பெரும்பாலும் அடிதொடங்கிக் கதாநாயகனுடைய ஊர், பெயர், குலம், கோத்திரம், பிறப்பு, வளர்ப்பெல்லாம் கிரமமாகச் சொல்லிக் கொண்டு போவது வழக்கம். நவீன ஐரோப்பியக் கதைகளிலே பெரும்பகுதி அப்படியல்ல. அவர்கள் நாடகத்தைப் போல கதையை நட்டநடுவில் தொடங்குகிறார்கள். பிறகு போகப்போக கதாநாயகனுடைய பூர்வ விருத்தாந்தங்கள் தெரிந்துகொண்டே போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எழுதுகிற பாரதி ஐரோப்பியச் சிறுகதை வடிவங்களை முழுவதுமாக அறிந்தே அதனை நிராகரித்துத் தமிழின் மரபார்ந்த வாய்மொழிக் கதைசொல்லல் உத்தி மற்றும் வடிவத்தினைத் தேர்ந்து கொண்டுள்ளார் என்று ஊகிக்க முடிகிறது. மேலும் நவீனச் சிறுகதைப் பாணியில் வங்கக்கவி தாகூர் எழுதிய சிறுகதைகள் பலவற்றை பாரதி மொழிபெயர்த்துள்ளார் என்பதனையும் நாம் இங்கே கருதிப் பார்க்க வேண்டும். சிறுகதை என்பது ஐரோப்பியக் கலைவடிவம் எனக் கருதப்பட்ட காலத்தில் அதை மறுதலிப்பதுபோல் பாரதி தமக்கான ஒரு புதிய சிறுகதை வடிவத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்தியுள்ளார்.

ஆறிலொரு பங்கு சிறுகதைக்கு பாரதி எழுதியுள்ள முன்னுரை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

> "ஒருஜாதி, ஒருயிர். பாரத நாட்டிலுள்ள 30 கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம். பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்திலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம். மத விரோதங்கள் இருக்கலாகாது. இவ்வுணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத்தன்மையும் கொடுக்கும். வேறு வழியில்லை இந்நூலை பாரதநாட்டில் உழவுத் தொழில் புரிந்து, நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரட்சிப்போராகிய பள்ளர் பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதார்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்."

பாரதி ஆறிலொரு பங்கு என்று கதையின் தலைப்பாகக் குறிப்பிடுவது நமது தேசத்தின் மக்கள் தொகையில் ஆறிலொரு பங்கு அளவில் இருக்கும் தீண்டத்தகாத வகுப்பினராகக் கருதப்படும் தாழ்த்தப்பட்ட மக்களையே. அவர்களை உயர்த்தும் மகத்தான சமூக சேவைக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள் கதையின் நாயகன் கோவிந்தராஜனும் கதையின் நாயகி மீனாம்பாளும். அதனால்தான் பாரதி தம் முன்னுரையில் பாரதநாட்டில் உழவுத் தொழில் புரிந்து, நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரட்சிப்போராகிய பள்ளர் பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதார்களுக்கு இக்கதையை அர்ப்பணம் செய்கிறேன் என்று குறிப்பிடுகிறார்.

கதை இதுதான், கோவிந்தராஜன் அவனது தாய்மாமன் மகள் மீனாம்பாள் இருவரது காதல் உறவில் ஏற்படும் சிக்கலால் அவர்கள் விருப்பம் ஈடேறாமல் போய்விட இருவருக்கும் மன உடைவும் விரக்தியும் ஏற்பட்டு மீனாம்பாளின் தற்கொலை முயற்சியும் கோவிந்தராஜனின் துறவறம் பூணும் நிகழ்வும் நேர்ந்துவிட்ட நிலையில் எதிர்பாராத நிகழ்ச்சியால் மீனாம்பாள் உயிர்மீட்சியும் கோவிந்தராஜனின் துறவறம் நீங்கலும் ஏற்பட்டு இருவர் விருப்பமும் ஈடேறுகிறது. மொத்தத்தில் ஒரு சிறுகதைக்குரிய கதைப்பின்னல்தான். கதையின் நாயகன் கோவிந்தராஜன் மனவோட்டத்தில்தான் கதை சொல்லப்படுகிறது. இலக்கிய விமர்சகர்கள் குறிப்பிடுவது போல் நாவலுக்குரிய விரிந்த களமெல்லாம் இக்கதையில் இல்லை.

இக்கதையின் தொடக்கவரிகளைச் சுட்டிக்காட்டி கதைசொல்லலில் எத்தனை நேர்த்தியோடு செயல்பட்டுள்ளார் என்று சி.சு.செல்லப்பா அவர்கள் விவரிக்கும் பகுதியை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

> ஒரு புதுவித சிறுகதை ஆரம்பத்துக்கு உரிய அத்தனை லக்ஷணங்களும் இந்த வாக்கியங்களில் 'அச்சர'வாக அமைந்திருப்பதுதான். கதைக்குக் களம் நேர்த்தியாகப் போடப்பட்டிருக்கிறது. அஸ்திவாரமும் அழுத்தமாக விழுந்திருக்கிறது. தகவல்கள் அளவோடு தரப்பட்டிருக்கின்றன. சூசனை உணர்த்தல் சூட்சமமாகச் செய்யப்பட்டிருக்கிறது. வர்ணனை நடை லாகவமாக இருக்கிறது. சொற்செட்டு காண்கிறது. நடைபாணியில் (ஸ்டைல்) பிகு இருக்கிறது. நடை பேச்சுப் பாங்கானதாக இருக்கிறது. இது அக நோக்குப் பார்வை (ஸப்ஜெக்டிவ்) சுயவெளியீடாக இருப்பதால் சகல தகவல்களையும் கதாபாத்திரமே மனவோட்டமாகச் சொல்லி கதையை நகர்த்திச் செல்வதால், நிகழ்வும் மனநிலையும் பின்னி வருகிறது. அத்தனை சம்பாஷணைகளையும்கூட 'நான்' கதாபாத்திரம் பதிவு செய்து அதன் சிந்தனை, உணர்ச்சி இரண்டிலும் தோய்ந்து விடுகிறது. பிரதம கதாபாத்திரத்தின் ஆதாரபூர்வத்தை, பாடாந்திரத்தை (இன்டர்பிரட்டேஷன்) ஏற்றுக்கொண்டு முழுக்கதைப் போக்கையும் கவனிக்க வேண்டி இருக்கிறது. மீனாம்பாள் ஒரு தடவைகூட நம்மிடம் நேரில் பேசவில்லை. அவனது கடிதத்தை வைத்தும் கோவிந்தராஜனே சொல்லும் சம்பாஷணைகளையும் வைத்தும்தான் அவள் தெரியவருகிறாள். எந்த ஒரு இடத்திலும் பிசிறு தட்டாமல் விட்டுக் காட்டாமல், பராக்கு காட்டாமலே தடம் இம்மியும் தவறாமல் கதையை இந்தத் தன்பேச்சு மூலம் நடத்திச் செல்லும் திறன் சிறப்பாக இருக்கிறது.

சி.சு.செல்லப்பா மட்டுமல்லாது இன்றைய திறனாய்வாளர்கள் அனைவருமே பாரதியின் ஆறிலொரு பங்கு சிறுகதையைத் தமிழின் மிகச்சிறந்த தொடக்க காலச் சிறுகதையாகவும் முன்னோடிச் சிறுகதையாகவும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். பாடப் புத்தகங்களில் வாசித்த தமிழின் முதல் சிறுகதை, குளத்தங்கரை அரசமரம், தமிழ்ச் சிறுகதையின் தந்தை வ.வே.சு. ஐயர் என்ற கருத்துகள் செல்வாக்கு இழந்து வருகின்றன.

பாரதியே நவீனத் தமிழ்ச் சிறுகதைகளின் தந்தை என்றும் முன்னோடி என்றும் 1910இல் அவர் எழுதிய ஆறிலொரு பங்கு சிறுகதையே தமிழின் முதல் நவீனச் சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் ஆய்வுலகம் ஒருவாறு ஏற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டது. ஆனால் அண்மைக் காலத்தில் பாரதியின் ஆறிலொரு பங்கு சிறுகதைக்கு முன்பே அதாவது 1905ஆம் ஆண்டிலேயே துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம் என்ற சிறுகதையை எழுதியுள்ளார் அதுவே தமிழின் முதல் நவீனச் சிறுகதை என்ற கருத்து வெளிப்படத் தொடங்கியுள்ளது.

### தமிழின் முதல் சிறுகதை துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்.

1905ஆம் ஆண்டு சக்கரவர்த்தினி இதழில் ஷெல்லிதாஸ் என்ற புனைபெயரில் சுப்பிரமணிய பாரதி எழுதிய சிறுகதையே துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம் என்ற சிறுகதை. 1905ஆம் ஆண்டு நவம்பர் இதழில் தொடங்கி, 1906 ஜுலை வரை, இதழுக்கு இரண்டு பக்கங்கள் என்ற அளவில் சில இதழ்கள் இடைவெளி விட்டு மொத்தம் ஐந்து இதழ்களில் அத்தியாயப் பகுப்புடன் இக்கதை வெளியிடப்பட்டது. ஐந்து இதழ்களில் வெளியான இக்கதை நெடுங்கதையன்று. பத்துப் பக்க அளவிலான ஒரு சிறுகதைதான் இது. வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம் சிறுகதையை விட அளவில் சிறியது.

பாரதியாரின் கதைகள் தொகுப்பிலே துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம் என்ற சிறுகதை தொகுக்கப்படவில்லை. முதன்முதலாக 1905இல் பாரதியாரால் எழுதப்பட்ட இக்கதை சீனி.விசுவநாதன், டி.வி.எஸ். மணி ஆகியோரால் கண்டெடுக்கப்பட்டு 1979இல் வெளியான சக்கரவர்த்தினி கட்டுரைகள் என்ற நூலில் இடம்பெற்றது. அதுவும் முதல் அத்தியாயம் இல்லாமல் பதிப்பிக்கப்பட்டது. பின்னர் 1989இல்தான் பாரதி எழுத்துகள் –சில புதிய கண்டுபிடிப்புகள் என்னும் நூலில் பெ.சு.மணி அவர்கள் முதல் அத்தியாயத்தைக் கண்டுபிடித்து முழுக் கதையையும் வெளியிட்டார்.

சுப்பிரமணிய பாரதியின் முதல் சிறுகதையாகிய துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம் என்ற இச்சிறுகதையே தமிழின் முதல் சிறுகதையுமாகும் என்பதனைப் பதிவு செய்தவர் செங்கதிரோன் என்ற இலங்கை இலக்கிய இதழின் ஆசிரியர் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் அவர்களே ஆவார். இவர் இலங்கையிலிருந்து வெளிவரும் ஞானம் –கலை இலக்கியச் சஞ்சிகையின் 197ஆம் இதழில் (ஒக்டோபர் 2016) பாரதியார் எழுதிய முதல் சிறுகதை என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில்

> “வருடக் கணக்கை வைத்துப் பார்த்தாலும் சரி, இலக்கியக் கொள்கையைக் கொண்டு அளவிட்டாலும் சரி தமிழின் நவீன சிறுகதை என்பது சுப்பிரமணிய பாரதியாரிடமிருந்தே தொடங்குகிறது எனலாம். 1905இல் அவர் சக்கரவர்த்தினியில் எழுதிய துளசிபாயி அல்லது ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம் தான் தமிழின் முதல் சிறுகதை எனக்கொள்ள இடமிருக்கிறது. (ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை -197, ப. 36)

என்று பதிவு செய்துள்ளார். மேலும் அவர் தரும் கதைச் சுருக்கம் பின்வருமாறு,

> துளசிபாய் என்ற பெயருடைய ரஜபுத்திர கன்னிகைக்குத் திருமணம் நிச்சயிக்கப்பெற்று அவளுக்கு விவாகம் நடத்துவதற்காக மணமகனுடைய ஊருக்குப் பல்லக்கில் அவளை இருத்திப் பயணம் செல்கிறார்கள். போகும் பாதையில் ஒரு கொள்ளைக்காரக் கும்பலிடம் துளசிபாய் அகப்பட்டுக் கொள்கிறாள். அவளை அக்பரின் படைத்தளபதி அப்பாஸ்கான் என்பவன் அந்தக் கொள்ளைக்காரக் கும்பலிடமிருந்து காப்பாற்றுகிறான். தன்னைக் காப்பாற்றிய அப்பாஸ்கானுக்கு ஒரு வயிரக் கணையாழியைப் பரிசளித்துத் துளசிபாய் நன்றி பாராட்டுகிறாள். கதையின் முற்பகுதி இங்கே முடிவடைகிறது. அடுத்து ஒரு வருடகால இடைவெளிக்குப் பின்னர் அப்பாஸ்கான் மீண்டும் துளசிபாயைச் சந்திக்கும் சந்தர்ப்பம் வருகிறது. அப்போது திருமணமாகிக் கணவன் இறந்துபோன நிலையில் துளசிபாயை சுற்றத்தார் இந்திய நாட்டின் பண்டைய வழக்கப்படி உடன்கட்டை ஏறும்படி வற்புறுத்துகிறார்கள். துளசிபாய் கதறிக்கொண்டு கூக்குரலிட அவ்வழியே வந்த அப்பாஸ்கான் அருகில் சென்று பார்க்கிறான். “இது எனது எனது எனது துளசி யல்லவா? அரே அல்லா மேரீ குலாப்கோ ஜலாவேங்கே! எனது காதல் ரோஜாவையா இப் பாதகர் சாம்பலாக்கப் போகிறார்கள்? இதோ! அவர்கள் அத்தனை பேரையும் ஹதம் செய்து விடுகிறேன்' என்ற கோபத்தோடு அவர்களோடு சண்டையிட்டு மீண்டும் துளசிபாயை காப்பாற்றுகிறான்.
>
> இவ்விதம் தன்னால் இருதடவைகள் காப்பாற்றப்பெற்ற துளசிபாய் மீது அப்பாஸ்கான் காதல்கொள்கிறான். அப்பாஸ்கானின் காதலை துளசிபாயும் ஏற்றுக்கொள்கிறாள். (ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை -197, ப. 36)

மகாகவி பாரதியின் முதல் சிறுகதையாகிய இக்கதை அக்காலத்தில் வடநாட்டு ரஜபுத்திர வம்சத்தில் பெருவழக்காயிருந்த சதிதகனம் எனும் உடன்கட்டை ஏற்றும் பழக்கத்தைச் சாடுவதோடு அதிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளசிபாய்க்கு விடுதலையும் வழங்குகிறது மேலும் விதவைத் திருமணம், மூடநம்பிக்கை எதிர்ப்பு, இந்து முஸ்லீம் ஒற்றுமை, கலப்புத் திருமணம் முதலான பலமுற்போக்குக் கருத்துகளைப் பதிவு செய்கிறது.

பாரதியின் சிறுகதைகளை மதிப்பிடும் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள், "பாரதியார், தாம் எழுதிய கதைகளை அந்த உருவ அமைதியுடன் எழுதாமற் போனது துரதிட்டமே. பாரதியார் எழுதிய சிறிய கதைகள் சம்பவங்களை உள்ளவாறே குறிப்பனவாக இருக்கின்றனவே யன்றிச் சம்பவங்களின் உணர்வு நிலையைக் காட்டுவனவாக இல்லை. மேலும் அவர் எழுதியுள்ள கதைகள் கட்டுக்கதைகள் என்று வகுக்கப் படத்தக்க முறையில் அமைந்தனவே" என்பார்.

பேராசிரியர் க.பஞ்சாங்கம் அவர்கள் தமது கட்டுரையொன்றில் மகாகவி பாரதியாரின் துளஸீபாயி சிறுகதையினை மேற்கோள் காட்டி கா.சிவத்தம்பி ஐயாவின் கருத்துகளை மறுத்துரைப்பதோடு அக்கதையின் சிறப்பியல்புகளை மிக விரிவாக எடுத்துரைக்கின்றார்.

> துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரிதம் (1905) என்ற பாரதி எழுதிய முதல் கதையாகக் கருதப்படும் சிறுகதையிலேயே பாரதி தன் எழுத்தின் –புனைவின் முத்திரையை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். இந்து முஸ்லீம் ஒற்றுமை என்ற தேசிய இயக்கத்தின் நிகழ்ச்சி நிரலை முன்னிறுத்தும் அற்புதமான வரலாற்றுச் சிறுகதையாக அது அமைந்துள்ளது. இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்திய அக்பர் காலத்து நிகழ்வாகப் புனைகிறார் கதையை. .... ஒரு சாதாரண முக்கோணக் காதல் கதையைப் பின்னணியாக வைத்துக் கொண்டு, கதைக்குள் பன்முகப்பட்ட சமூக விமர்சனங்களையும் ஆண் – பெண் காதல் உணர்வின் வீச்சையும் கொண்டுவந்து விடுகிறார்.

என்று இக்கதையை மதிப்பிடும் க.பஞ்சாங்கம் அவர்களின் கருத்து இங்கே கவனிக்கத் தக்கது.

துளஸீபாயி என்ற சிறுகதை அடிப்படையில் ஒரு காதல் கதை. காதல் இந்து ரஜபுத்திர கன்னிகைக்கும் முகமதிய சிற்றரசன் மகனுக்கும். இந்து முஸ்லீம் மதக் கலப்புக் காதல், இந்தக் காதல் பின்னால் விதவைத் திருமணமாக முடிகிறது. பாரதியின் முதல்கதையே அதிரடியான சமூகச் சீர்திருத்தங்களைப் பேசுகிறது. உடன்கட்டை ஏற்றும் பெண்ணடிமைத் தனத்துக்கு எதிரான உரத்த குரலை இக்கதை பதிவு செய்வதோடு, சாத்திரம், சடங்கு, தர்மம் என்ற பொய்யுரைகள் மூலம் ஓர் இளம்பெண்ணை உயிரோடு எரிக்கும் கொடூரத்திற்குக் காரணமான புரோகிதப் பிராமணர்களின் கபடங்களையும் அம்பலப் படுத்துகிறது.

உள்ளடக்கம் மட்டுமன்றி வடிவ நேர்த்தியிலும் கதைசொல்லும் உத்தியிலும் காட்சிச் சித்திரிப்பிலும் உணர்வுநிலை வெளிப்பாட்டிலும் இக்கதை நவீன சிறுகதை களுக்கு இணையாகப் படைக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. ஆக, தமிழின் நவீனச் சிறுகதை இலக்கியம் பாரதியிடமிருந்தே தொடங்குகிறது. அதிலும் 1905இல் சக்கரவர்த்தினி என்ற இதழில் ஷெல்லிதாசன் என்ற பெயரில் பாரதி எழுதிய துளஸீபாயி என்ற சிறுகதையைத் தொடக்கமாக வைத்தே தொடங்குகின்றது என்பதனை ஆய்வுலகம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

## துணைநின்ற நூல்கள்


கலாநிதி க.குணராசா,
"ஈழத்துச் சிறுகதை வரலாறு",
வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், 2001

கா.சிவத்தம்பி,
"தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்",
தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மூ.ப. 1980

பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி), சோ.சிவபாதசுந்தரம்,
"தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்",
பாரிநிலையம், சென்னை, 2016

வ.வே.சு.ஐயர்,
"மங்கையர்க்கரசியின் காதல்",
அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, 1986

செங்கதிரோன்,
"பாரதியார் எழுதிய முதல்சிறுகதை" (கட்டுரை),
ஞானம் (கலை இலக்கியச் சஞ்சிகை 197) கொழும்பு, ஒக்டோபர் 2016.

சி.சு.செல்லப்பா,
"தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது",
காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 2016

செல்வக்கேசவராய முதலியார்,
"அபிநவ கதைகள்",
S.R.C.K. PRESS COMPANY, சென்னை, மூ.ப. 1921

முனைவர் க.பஞ்சாங்கம்,
"தமிழ்ச் சிறுகதைகளும் மனிதப் பெருவெளியும்",
பரிசல் புத்தக நிலையம், சென்னை, 2019

புதுமைப்பித்தன்,
"புதுமைப்பித்தன் கட்டுரைகள்",
ஸ்டார் பிரசுரம், சென்னை, 1954

டாக்டர் ஆர்.எஸ். ஜேக்கப்,
"தமிழில் முதல் சிறுகதை எது?",
நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2013

இணையப் பக்கம்: மாலன்,
"தமிழின் முதல் சிறுகதை எது? கட்டுரை",
*http://maalan.co.in/*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# தமிழ்ச் சிறுகதைகள் உணர்த்தும் பெண்ணின் இருப்பும் வெளியும்

பா.இரவிக்குமார்

வாழ்க்கையின் பல்வேறு உணர்வுகளையும் அனுபவங்களையும் வெளிப்படுத்துவன இலக்கியங்கள் என்றபோதும், சிறுகதைகள் இவற்றை நுட்பமாக வெளிப்படுத்துவன. தமிழ்ச் சிறுகதைகள் பிறந்து நூறாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. பாரதியார், வ.வே.சு.ஐயர், திருமணம் செல்வக் கேசவராயர், மாதவையா தொடங்கி, புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், கு.அழகிரிசாமி, மௌனி, லா.ச.ரா., அசோகமித்திரன், ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், பிரபஞ்சன், தி.ஜானகிராமன், சுந்தரராமசாமி போன்ற எண்ணற்ற இலக்கியவாதிகளால் வளர்த்தெடுக்கப்பட்டவை தமிழ்ச் சிறுகதைகள். தமிழ்ச் சிறுகதையின் உருவம், உள்ளடக்கம் குறித்துக் கணிசமான அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுகதை இலக்கியத்தைப் பெண் எழுத்தாளர்கள் வளர்த்தெடுத்த வரலாற்றைப் பெரும்பாலானவர்கள் கண்டுகொள்வதில்லை. கவிதை, சிறுகதை என்றாலே ஆண் எழுத்தாளர்களின் பிம்பங்களே நினைவிலும் நனவிலியிலும் பதிந்ததற்கான காரணங்கள் தனித்த ஆய்விற்குரியன. உண்மையில், பண்டிதை விசாலாட்சி அம்மாள், வி.பாலம்மாள், வை.மு.கோதைநாயகியம்மாள், மு.மரகதவல்லி, குகப்ரியை, வி.ராதாமணி அம்மாள், எஸ்.ஆர்.ஜயலட்சுமி, குமுதினி, எஸ்.அம்புஜம்மாள், லஷ்மி கிருஷ்ணமூர்த்தி, டி.எஸ்.ராஜலட்சுமி, கி.சாவித்திரி அம்மாள், கௌரி அம்மாள், கமலா பத்மநாபன் போன்ற எண்ணற்ற பெண் எழுத்தாளர்கள் தங்கள் கட்டுரைகள், புனைகதைகளின் மூலமாகத் தமிழ் இலக்கியத்திற்குப் பங்களிப்புகளை நல்கியுள்ளனர். 1901ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டு வரை உருவான பெண் படைப்புகளைப் 'பெண் எழுத்து' என்னும் நூலில் இரெ.மிதிலா பதிவு செய்துள்ளார். மு.பழநியப்பன், இரா. ஸ்ரீவித்யா போன்ற இளைய ஆய்வாளர்களும் இன்று பெண் எழுத்துகள் குறித்து ஆழமான ஆய்வுகளைச் செய்து வருகின்றனர். எண்பதுகளில் 'நிறப்பிரிகை' என்னும் இதழ் பெண்ணியம் குறித்த உரையாடலைத் தொடங்கி வைத்ததன் விளைவாக இன்று இத்தகைய ஆய்வுகள், தொகுப்பு நூல்கள் யாவும் சாத்தியமாகியிருக்கின்றன என்று கருதுவதில் தவறில்லை. 1985ஆம் ஆண்டு வெளியான, 'பெண்கள் படைப்பில் பெண்கள்', காவ்யா சண்முகசுந்தரம் வெளியிட்ட 'பெண்ணியம்' என்னும் கட்டுரைத் தொகுப்பு போன்றவை இலக்கியங்களில் பெண்கள் குறித்த ஆழமான தேடலைத் தொடங்கி வைத்தன எனலாம்.

வெகுசனத் தளத்தில் இயங்கிய லட்சுமி, சிவசங்கரி, இந்துமதி போன்றவர்களையும் பெண்ணியம் பற்றிய சரியான புரிதலோடு எழுதிய அம்பை, காவேரி, ஆர்.சூடாமணி போன்ற எழுத்தாளர்களையும் ஆய்வதற்கான சூழலும் தேவையும் இன்று உருவாகியிருப்பது தற்செயலானதல்ல... இன்று புலம்பெயர்ந்த பல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் படைப்பாளர்களின் ஆக்கங்களும் தீவிரமாகப் பேசப்படுகின்றன.

இருபத்தியோராம் நூற்றாண்டில்தான் பல பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து ஆராயவேண்டும் என்ற சிந்தனை முகிழ்ந்ததாகத் தெரிகிறது. அவ்வகையில், அ.வெண்ணிலாவின் 'மீதமிருக்கும் சொற்கள்', இரா.பிரேமாவின் 'பெண்ணியக் கதைகள்', 'பெண்மையச் சிறுகதைகள்' முதலிய தொகுப்பு நூல்கள் சுட்டத்தக்கன.

1930ஆம் ஆண்டு தொடங்கி 2004ஆம் ஆண்டு வரை எழுதிய 45 எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகளை நூலாசிரியர்களின் குறிப்புரைகளுடன் அ.வெண்ணிலா 2007ஆம் ஆண்டு தொகுத்துள்ளார். இரா.பிரேமா, 2004ஆம் ஆண்டு, இருபத்தைந்து பெண் எழுத்தாளர்களின் பெண்ணியக் கதைகளைத் தொகுத்துள்ளார். இரா.பிரேமாவின் தொகுப்பில், ராஜம் கிருஷ்ணன், உமா சுப்பிரமணியன், திலகவதி, அம்பை, பாமா போன்ற தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் மட்டுமல்ல; ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், சுமதிரூபன் போன்ற புலம்பெயர்ந்த எழுத்தாளர்களும் இடம் பெற்றுள்ளனர். இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் யாவும், ஏதோ ஒரு வகையில் பெண்விடுதலைச் சிந்தனைகளைப் பேசும் சிறுகதைகளாக அமைந்துள்ளன.

இரா.பிரேமாவின் 'பெண்மையச் சிறுகதைகள்' என்னும் தொகுப்பு, பெண்களை மையமிட்ட ஆண் எழுத்தாளர்களின் சிறுகதைகளையும் உள்ளடக்கியது. இத்தொகுப்பில் உள்ள கதைகள் அனைத்தும் பெண் விடுதலையைப் பேசுவன என்று கூற இயலாது. ஆனால், பெண்களின் வாழ்க்கையையும் அவர்தம் உணர்வுகளையும் மையமிட்ட கதைகள் எனலாம்.

இத்தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கதைகளையும் மதிப்பிடுவது இங்கு சாத்தியமில்லை என்றபோதும், தமிழ்ச் சிறுகதைகள் உணர்த்தும் பெண்களின் இருப்பையும் (*Existence*), அவர்களுக்கிருந்த வெளியையும் (*Space*) சில சிறுகதைகளை மையமிட்டுப் பேசுவது இக்கட்டுரையின் நோக்கமாகும். அதாவது, பெண்களின் வாழ்நிலை எவ்வாறு சிறுகதையாசிரியர்களால் கட்டமைக்கப்பட்டன என்பதையும், பெண்களை மையமிட்ட சிறுகதைகள் பன்முகத்தன்மை வாய்ந்தன என்பதையும் வலியுறுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. 'தமிழில் சிறுகதையெனும் வரைபடம்' என்னும் முக்கியமான நூலை எழுதிய தி.சு.நடராசன் கூட, அம்பை, ஆர்.சூடாமணி, உமாமகேசுவரி ஆகிய மூன்று பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்களை மட்டுமே பதிவு செய்துள்ளார். இக்கட்டுரை முடிந்தவரை பல பெண் எழுத்தாளர்களின் படைப்புகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது.

## தமிழ்ச் சிறுகதைகளும் பெண்களின் வாழ்க்கையும்

தமிழ்ச் சிறுகதைகள் பிறந்து நூறாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், அவை சித்திரிக்கும் பெண்களின் வாழ்க்கை பல மாறுதல்களைச் சந்தித்துள்ளன. மாறிவரும் சமூக நிலைகளுக்கு ஏற்ப, தமிழ்ச் சிறுகதைகளும் பல்வேறு கோணங்களில் எழுதப்பட்டுள்ளன. உண்மையில், ஒட்டுமொத்தமான பெண்களின் வாழ்க்கைகளை இச்சிறுகதை ஆசிரியர்கள் பேசிவிட்டதாகக் கருதமுடியாது. ஒவ்வொரு சிறுகதைப் படைப்பாளியின் வாழ்க்கைப் புரிதல், உணர் நிலைகள், அனுபவங்கள், அழகியல், இலட்சியங்கள், இலக்கியப் பார்வை, சமூக உணர்வு முதலியவற்றுக்கு ஏற்ப, அவர்கள் படைக்கும் வாழ்க்கை குறித்த சித்திரங்களும் மாறுபடுகின்றன.

'தமிழகச் சிறுகதைப் போக்குகள்' என்னும் கட்டுரையை எழுதிய ராஜ்கௌதமன், பாரதி, வ.வே.சு.ஐயர், கு.ப.ரா., மௌனி, கல்கி, ராஜாஜி, புதுமைப்பித்தன் போன்ற எழுத்தாளர்களின் கதைகளை ஆராய்ந்துவிட்டு, ஒரு முக்கியமான பதிவைத் தன் முடிவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"நவீன சிறுகதையை நல்ல முறையில் அறிமுகம் செய்தவர் வ.வே.சு.ஐயர் என்றால், அதனை வளப்படுத்தியவர்களாக மணிக்கொடி எழுத்தாளர்களைச் சொல்லலாம். சிறுகதையின் அழகைக் காட்டியவர் கு.ப.ரா. என்றால், அதன் பல்வேறு சாத்தியப்பாடுகளை நடைமுறையில் செய்து காட்டியவர் புதுமைப்பித்தன் என்று சொல்லலாம்." (ராஜ்கௌதமன், ராஜ்கௌதமன் கட்டுரைகள், ப.123)

பாரதி முதல் புதுமைப்பித்தன் வரை உள்ள படைப்பாளர்களின் இலக்கிய நோக்கம், வாழ்க்கைப் பார்வை அதன் குறை நிறைகள் முதலியவற்றை அலசி ஆராய்ந்த பிறகே ராஜ்கௌதமன் இந்த முடிவிற்கு வருகிறார். ஆனால், அவருடைய கட்டுரையில் எந்தப் பெண் எழுத்தாளரும் இடம்பெறவில்லை. பெண்களை இந்தப் படைப்பாளிகள் எவ்வாறு சித்திரித்தார்கள் என்பதும் மிகுதியாக இடம்பெறவில்லை.

பிரேமாவின் தொகுப்பு நூலில், பல்வேறு வர்க்கங்களையும், சாதிகளையும் சேர்ந்த பெண்கள் இடம்பெற்றுள்ளனர். சாதிய அடையாளம் வெளிப்படையாகத் தெரியவில்லை என்றாலும், இக்கதைகளில் இடம்பெற்றுள்ள பெண்கள் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அடையாளம் காண இயலுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "நவீன சிறுகதையை நல்ல முறையில் அறிமுகம் செய்தவர் வ.வே.சு.ஐயர் என்றால், அதனை வளப்படுத்தியவர்களாக மணிக்கொடி எழுத்தாளர்களைச் சொல்லலாம். சிறுகதையின் அழகைக் காட்டியவர் கு.ப.ரா. என்றால், அதன் பல்வேறு சாத்தியப்பாடுகளை நடைமுறையில் செய்து காட்டியவர் புதுமைப்பித்தன் என்று சொல்லலாம்."

உஷா சுப்பிரமணியனின் 'அறிவு ஜீவிகள் காதலிக்கிறார்கள்' என்னும் கதை, உயர் நடுத்தர வர்க்கத்தை அல்லது பணக்கார வர்க்கத்தைச் சார்ந்த பெண்ணின் உணர்வுகளைப் பேசுகிறது.

இக்கதையில் இடம்பெறும் ரீதா, பள்ளியில் தன்னுடன் பயின்ற ஹரி என்னும் இளைஞனை நீண்ட நாட்களுக்குப் பிறகு, தற்செயலாக டில்லியில் சந்திக்கிறாள். ஹரி ஒரு ஸாப்ட்வேர் ஸ்பெஷலிஸ்ட். ரீதா விளம்பரக் கம்பெனியில் பணிபுரிந்து படப்பிடிப்பிற்காக ஊர் ஊராகச் சுற்றுபவள். தில்லியில் ஹரியைச் சந்திக்கும் ரீதா, அவள் வசிக்கும் மும்பைக்கும் அடிக்கடி செல்கிறாள். இருவரும் முத்தங்களையும் உடலையும் பரிமாறிக் கொள்கின்றனர். தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்கும் ஹரிக்கு மிகத் தெளிவான விடையைச் சொல்கிறாள் ரீதா. "ஒவ்வொரு விளையாட்டுக்கும் சில ரூல்ஸ் உண்டு. கல்யாணத்துக்கும் உண்டு. அந்த ரூல்ஸ் எதுவும் என்னைக் கட்டிப் போடறதை நான் விரும்பலை.

... என்னால் கல்யாணம் செய்து கொள்ளாமலே நானாக இருக்க முடியும். அன்னிக்குச் சமுதாய அங்கீகாரத்துக்காகப் பெண்களுக்குக் கல்யாணம் தேவைப்பட்டது" (இரா. பிரேமா (தொ.ஆ.), பெண்ணியக் கதைகள், ப.28)

என்று கூறி, மிகவும் திட்டவட்டமாகத் திருமணத்தை மறுத்துவிடுகிறாள் ரீதா.

திருமணம் செய்து கொள்ளாமல், ஒன்றிணைந்து வாழ்தலை (*Living together*) வலியுறுத்தும் இக்கதை, நட்பின் மூலமே காமத்தையும் பகிர்ந்து கொள்ளமுடியும் என்பதை வலியுறுத்துகிறது.

இக்கதையின் முடிவுகளோடு, ஒருவர் முரண்படலாம் அல்லது ஒன்றுபடலாம். ஆனால், தமிழ்ப் பண்பாட்டில் மிகுந்த சலனத்தை ஏற்படுத்தும் குரலாக ரீதாவின் குரல் உள்ளது. பொருளாதாரமும் தனிமை வாழ்வும் தந்த பலம்தான் ரீதாவின் சொற்களில் வெளிப்படுகிறது.

பாமாவின் 'பொன்னுத்தாயி' என்னும் கதையில் இடம்பெறும் 'பொன்னுத்தாயி' அடித்தட்டு வர்க்கத்தைச் சார்ந்தவள். ரீதாவைப் போல் 'பொன்னுத்தாயி' பேசுவது சாத்தியமில்லை. பொன்னுத்தாயி படிக்காதவள். கணவன் குடித்துவிட்டுச் செய்யும் வன்முறைகளை ஒரு கட்டம் வரை பொறுத்துக் கொள்பவள். ஆனால், மரபைக் கட்டிக் காக்க வேண்டும் என்பதற்காக மௌனமாக உடைந்து அழுபவள் அல்ல; குடித்துவிட்டு வந்து அடிக்கும் கணவனைக் காவல் நிலையத்தில் புகார் செய்கிறாள். கதையின் முதலில் கணவன் கட்டிய தாலியை அறுத்தெறிந்து, அதை விற்று, அதிலிருந்து கிடைக்கும் பணத்தில் வியாபாரம் செய்யத் தொடங்குகிறாள். பாமாவின் இயல்பான மொழிநடை, 'பொன்னுத்தாயி' கதையைச் சிறந்த கலைப்படைப்பாகச் செய்துள்ளது.

"தாலிய மடில வச்சுக்கிட்டுக் கூடைய எடுத்துக்கிட்டுப் போயிட்டா பொன்னுத்தாயி. மறுநாளு காலைலிருந்து ஊர்ச்சாவடிக்கு முன்னால ஒரு சின்னக்கூட போட்டு யாவாரஞ் செஞ்சா, பத்து வருசமா, அவ கழுத்துல கெடந்த தாலி கட பூராஞ் சாமாஞ்சட்டுகளா நெறஞ்சு கெடந்துச்சு" (இரா.பிரேமா, பெண்ணியக் கதைகள், பொன்னுத்தாயி, ப.118)

பொன்னுத்தாயி கதையில் ஒலிக்கும் குரல் அடித்தட்டு வர்க்கத்தைச் சார்ந்த தலித் பெண்ணின் குரல்.

நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பெண்களைப் பற்றிய படைப்பாக இருந்திருந்தால், இந்த விடுதலை, இந்த வெளி சாத்தியப்பட்டிருக்காது.

சிறுகதைப் படைப்பாளிகள் தங்கள் கதைகளில் எத்தகைய பெண் கதை மாந்தர்களைப் படைக்கின்றனர்; அவர்களுடைய வாழ்நிலை என்ன? அவர்களுக்கான வெளி அடைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது விடுதலை சாத்தியமாகியுள்ளதா? என்கிற கேள்விகளை வாசகர்களும் ஆய்வாளர்களும் தொடர்ந்து கேட்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பெண்களின் உணர்வுகளும் பல கதைகளில் வெளிப்பட்டுள்ளன. ஆனால் நடுத்தரப் பெண்களின் வாழ்நிலைகளும், சிந்தனைகளும், உணர்வுகளும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. இதற்கான எடுத்துக்காட்டாகத் திலகவதியின் 'வதம்' என்னும் கதையைக் குறிப்பிடலாம்.

## நடுத்தர வர்க்கத்துப் பெண்கள்

சிறுகதைகளைப் படைக்கும் பெண் படைப்பாளர்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால், அவர்களுடைய படைப்புகளில் நடுத்தர வர்க்கத்துப் பெண்களே பேரளவு சித்திரிக்கப்பட்டுள்ளனர். திலகவதி எழுதிய 'வதம்' என்னும் கதை, தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த கதை. பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, வேலைக்குச் செல்லும் பெண்களின் பிர்ச்சினைகளை மிகக் காத்திரமாகப் பதிவு செய்த கதை 'வதம்'.

டைரிக் குறிப்புகளின் மூலமாகவே இந்தக் கதை நகர்கிறது. கோமதி என்னும் பெண் *2.9.99* முதல் *7.11.99* வரை எழுதும் டைரிக் குறிப்புகளே கதைக்கான களம்.

லலிதா, கோமதி ஆகிய இரண்டு பெண்கள், அவர்கள் பணி புரியும் கம்பெனியில் மேனேஜர் மூலமாகச் சந்திக்கும் பிரச்சினைகளே 'வதம்' கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. இருவரும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் என்றபோதும், சிந்தனையால், உணர்வுகளால் மாறுபட்டவர்கள். மகாகவி பாரதி, மாய காவ்ஸ்கி, போதலேர், ஜென் தத்துவம், பெரியார், முனைப்பாடியார் என்று மிகுதியாகப் படிப்பவள் கோமதி. சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் கொண்டவள். எந்தவொரு தத்துவத்தையும் கேள்விக்குட்படுத்துபவள். தன்னிச்சையாக வாழ்பவள்.

இந்தக் கதையில் இடம்பெறும் மேனேஜர் தனக்கு இணங்க மறுக்கும் பெண்களைப் பற்றி வதந்திகளைப் பரப்புபவன். லலிதா யாருடனோ கன்னியாகுமரிக்குப் போய் வந்ததாக வதந்தியைக் கிளப்பி, அவளை ராஜினாமா செய்ய வைக்கிறான். இவை யாவும் கோமதியின் டைரிக் குறிப்புகள் மூலமாகவே வாசகர்களுக்குச் சொல்லப்படுகிறது.

"அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டாரடி - *Useless* பெண்களடி" *(இரா.பிரேமா, பெண்ணியக் கதைகள், வதம், ப.93)*

என்று கோமதி தன் டைரியில் எழுதுகிறாள். இதே பிரச்சினை கோமதியின் வாழ்க்கையிலும் இடம்பெற, மேனேஜரின் அறைக்குச் சென்று, நேரடியாக பிரச்சினையை எதிர் கொள்கிறாள் கோமதி.

பெண்களின் ஒழுக்கத்தைக் கேள்விக்குட்படுத்தும் ஆண்கள், என்னென்ன செய்கிறார்கள் என்று கேள்வி கேட்டு, மேனேஜரை நிலை குலைய வைக்கிறாள்.

"தீயே நின்னைப்போல, எமது உள்ளம் சுடர் விடுக,
தீயே நின்னைப்போல எமது அறிவு கனலுக"

என்னும் பாரதியின் வரிகளுடன் இந்தக் கதை நிறைவு பெற்றுள்ளது.

புதுமைப்பெண் குறித்த கருத்தாக்கங்களைப் பாரதி தன்னுடைய கட்டுரைகளிலும், கவிதைகளிலும் சித்திரித்து இருந்தாலும், கோமதி, ரீதா, பொன்னுத்தாயி போன்ற கதைமாந்தர்களை அன்றைய கதைகளில் காணமுடியாது. 'காந்தாமணி' *(1919)* என்னும் மிக முக்கியமான கதையில், திருமணமான காந்தாமணி தன் பழைய காதலனுடன் ஓடிப்போய் மறுமணம் செய்துகொள்வதாகப் பாரதி சித்திரித்திருப்பார். பழைய காதலனை ஒரு மலையாளியாகவும், அவர்களுடைய திருமணம் தேவாலயத்தில் நடைபெறுவதாகவும் பாரதியின் 'காந்தாமணி' கதை அமைந்திருக்கும். பாரதியின் காலத்தில் இது முற்போக்கான கதையென்றாலும், பெண்ணின் தனித்துவமான அடையாளங்கள் பாரதியின் காலத்தில் இடம்பெற்றுவிட்டதாகக் கருதமுடியாது. அதற்கான தேவையோ, சமூகச் சூழலோ சென்ற நூற்றாண்டில் இல்லை.

பெண்கள் பத்திரிகையில் எவ்வாறு செயல்பட்டனர் என்பதை வரலாற்றுப் புரிதலுடனும், வரலாற்று நோக்குடனும் எழுதிய இரெ.மிதிலாவின் 'பெண் எழுத்து' என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் வீ.அரசு ஒரு முக்கியமான பதிவை முன்வைத்துள்ளார்.

"பெரும்பாலான பெண்களின் ஆக்கங்கள், நிலவுடைமைக் கருத்து நிலையிலிருந்து விடுபட்டதாகக் கருத முடியாது. மதம் சார்ந்த கருத்துநிலைகள் பெண்களுக்கு விடுதலை வழங்கமுடியாது. இக்காலங்களில் செயல்பட்ட பெண்கள் மதமறுப்பு உடையவர்களாகச் செயல்படவில்லை. அவ்விதம் செயல்படுவதற்கான மனநிலையை அவர்கள் வளர்ந்த சூழல் அவர்களுக்கு வழங்க வாய்ப்பில்லை; இருந்தாலும் 'சுயப்பிரக்ஞை' உடையவர்களாகச் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம்." *(இரெ.மிதிலா, பெண் எழுத்து, வீ.அரசுவின் முன்னுரை, தமிழ்ப் பெண் ஆக்கங்கள் குறித்த புதிய வரவு, ப.12)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயப்பிரக்ஞை மிக்கவர்களான பண்டிதை விசாலாட்சி அம்மாள், சகோதரி பாலம்மாள் மற்றும் வை.மு. கோதைநாயகி அம்மாள் ஆகியோரால் நிலவுடைமை மற்றும் மதம் சார்ந்த கருத்து நிலைகளிலிருந்து ஏன் விடுபட முடியவில்லை; அவர்கள் பெற்ற எழுத்தறிவு ஏன் அவர்களுக்கு உதவவில்லை என்னும் வீ.அரசுவின் கேள்வி நியாயமானதே. இதே விமர்சனம் பெரும்பாலான ஆண் எழுத்தாளர்களுக்கும் பொருந்தும் என்றே தோன்றுகிறது. வடிவச் சோதனையில், அழகியல் உணர்வில், சிறுகதையெனும் உருவக் கட்டமைப்பில் எழுத்துப் பயிற்சியின் காரணமாகப் பெரும்பாலான ஆண் எழுத்தாளர்கள் சாதித்திருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், கருத்து நிலையில் இவர்கள் கட்டமைத்த/புனைந்த பெண் கதை மாந்தர்களின் 'வெளி' எப்படிப்பட்டதாக அமைந்துள்ளது என்பதைக் காரணகாரியங்களுடன் விவாதிக்க விரிவான ஆராய்ச்சி தேவை.

அவ்வகையில் புதுமைப்பித்தன் தொடங்கி கோணங்கி வரை இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதை எழுத்தாளர்களை அவரவர்களின் தளத்தைப் புரிந்து கொண்டு ஆராய்ச்சி செய்த தி.சு.நடராசன், புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், மௌனி, சி.என்.அண்ணாதுரை, த.ஜெயகாந்தன், இலங்கையர்கோன், லா.ச.ராமாமிர்தம், தி.ஜானகிராமன், பிரபஞ்சன், கு.அழகிரிசாமி, சுந்தரராமசாமி, ஜெயமோகன், ஆ.மாதவன், ஜி.நாகராஜன், அ.முத்துலிங்கம், மீரான்மைதீன், அம்பை, ஆர்.சூடாமணி, உமா மகேசுவரி, வண்ணதாசன், லட்சுமி மணிவண்ணன், கே.பி.சாணக்கியா, கண்மணி குணசேகரன், விழி. பா.இதயவேந்தன், சு.வேணுகோபால், கோணங்கி ஆகிய சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளை விரிவான ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார் தி.சு.நடராசன்.

சிறுகதையாசிரியர்களின் ஆழ்ந்த கதை உள்ளத்தைப் புரிந்துகொண்டு, அவரவர்களின் மன உலகங்களை உணர்ந்து எழுதப்பட்ட நூல் 'தமிழில் சிறுகதையெனும் வரைபடம்'. அதேபோல் க.பஞ்சாங்கத்தின் 'தமிழ்ச் சிறுகதைகளும் மனிதப் பெருவெளியும்' என்னும் நூலும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், தமிழ்ச் சிறுகதையாசிரியர்கள் பெண்களின் மனவுலகத்தைக் கட்டமைப்பதைக் காட்டிலும், தங்கள் உலகங்களைப் பிரதிபலிக்கும் மொழியாடலுக்கான ஊடகமாகவே சிறுகதைகளைப் பயன்படுத்திக் கொண்டனர் என்று தோன்றுகிறது.

தொடக்க காலத்தில் எழுதிய குமுதினி, பண்டிதை விசாலாட்சி அம்மாள், வை.மு.கோதைநாயகி அம்மாள், லட்சுமி, சிவசங்கரி, வாசந்தி போன்ற பெண் எழுத்தாளர்களோ பெண்களை மரபு சார்ந்த அடையாளங்களைச் சுமக்கும் பிம்பங்களாகப் படைத்துவிட்டனர் என்பது கண்கூடு. அ.வெண்ணிலாவின் 'மீதமிருக்கும் சொற்கள்' என்னும் தொகுப்பில் உள்ள பல கதைகள் இவற்றை உணர்த்துகின்றன. வேறு வார்த்தையில் கூறுவதென்றால், ரீதா, கோமதி, பொன்னுத்தாயி போன்ற பெண்கதைமாந்தர்கள் உருவாகத் தமிழ்ச் சிறுகதை உலகம் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது. 'மீதமிருக்கும் சொற்கள்' என்னும் தலைப்பில் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை அரும்பாடுபட்டுத் தொகுத்த அ.வெண்ணிலாவின் பதிவு இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

"தலித்துகளும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த பெண்களும் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இலக்கியத்தில் கால் பதிக்கவே இல்லை எனலாம். 1940களில் இஸ்லாமிய இனத்தைச் சேர்ந்த 'சித்தி ஜுனைதா பேகம்' முற்போக்குச் சிந்தனைகளை, தன் காலத்தை மீறி பதிவு செய்துள்ளார். அவருடைய நாவல், கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. கல்வியின்மையும், பொருளாதாரப் பின்னடைவும் பெண்களை, குறிப்பாகப் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களை, வயிற்றுப் பாட்டுக்கே போராட வைத்துள்ளது. இதில் இலக்கியம், கலை, சமூக வாழ்வு எல்லாம் கற்பிதங்களே. ஒரு நூற்றாண்டு காலம் நடுத்தர, கீழ்த்தட்டு மக்களைப் பற்றிய, பெண்களின் வாழ்வுலகங்கள் பற்றிய பதிவே நம் இலக்கியங்களில் பதிவு செய்யப்படவில்லை. குறிப்பாக அவ்வினத்தைச் சார்ந்தவர்களால்." (அ.வெண்ணிலா, மீதமிருக்கும் சொற்கள், பக்.xiv, xv) அதாவது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய குடும்பப் பெண்களின்/ உயர்சாதிப் பெண்களின் உலக அனுபவம் வரையறைக்கு உட்படுத்தப்பட்டதாக இருந்த காரணத்தால், அவர்களுடைய கதைகளும் குடும்ப எல்லையைத் தாண்டியதில்லை. ஆண் எழுத்தாளர்கள் உருவாக்கிய உலகங்களை மறு அச்சு அசலாக மறுபதிப்புச் செய்வதையே அவர்களுடைய எழுத்துகளும் தொடர்ந்து செய்ததற்கான காரணங்களை வரலாற்றுப் பின்னணியில் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

ஆண் எழுத்தாளர்கள் தங்கள் கதைகளைப் படைத்தபோது, பெண்களுக்கான வெளி என்பது குடும்பமாகத்தான் இருந்தது. வரதட்சனை, விதவை மறுமணம், கற்பு முதலிய கருத்தாக்கங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்களே தவிர, பெண்ணுக்கான சுய அடையாளத்தைச் சித்திரிப்பது அவர்களுடைய நோக்கமாக இருக்கவில்லை. திராவிட, பொதுவுடமை எழுத்தாளர்களுக்கும் இந்த விமர்சனம் பொருந்தும். மத்தியத் தர வர்க்கப் பெண் எழுத்தாளர்களும் அன்றைய சூழலில் இதையே பின்பற்றியது மிக இயல்பானது.

அம்பை, ராஜம்கிருஷ்ணன், ஆர்.சூடாமணி, உஷா சுப்பிரமணியன் போன்ற எழுத்தாளர்கள் உருவான பிறகே பெண் எழுத்திற்கான சூழல் மாறத் தொடங்கியது என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரை, ஆண் எழுத்தாளர்களுக்கும் பெண் எழுத்தாளர்களுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டும் நோக்கில் எழுதப்படவில்லை என்றபோதும், வரலாற்று ரீதியாகப் பெண் அடையாளங்கள் தமிழ்ச் சிறுகதைகளில் எவ்வாறு உருவாயின என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எழுதப்படுகிறது. அவ்வகையில் 'காவேரி' எழுதிய 'இந்தியா கேட்' என்னும் கதை, மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ்ச் சூழலில், விவாதிக்க வேண்டிய உரையாடலுக்கு உட்படுத்த வேண்டிய கதை. மத்திய தரப் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த 'பத்மினி' என்னும் பெண்ணுக்குப் பலராமன் என்பவனை மணமுடிப்பதுடன் கதை தொடங்குகிறது. இருவருமே வங்கியில் பணிபுரிபவர்கள் என்றபோதும், பலராமனுக்குத் தரும் முக்கியத்துவத்தை யாரும் பத்மினிக்குத் தருவதில்லை. பலராமனுக்குத் தில்லியில் பணி உயர்வு (பிரமோஷன்) கிடைக்கிறது. பத்மினி பலராமனை மணமுடிக்க வேண்டும் என்றால், அவளுக்குக் கிடைக்க இருக்கும் பணி உயர்வை அவள் ஏற்றுக் கொள்ளக்கூடாது; அல்லது வேலையை ராஜினாமா செய்ய வேண்டும் என்று பலராமனின் வீட்டைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்துகின்றனர். பத்மினி, தான் பணிபுரியும் வங்கியில் உள்ள மேலாளரிடம் பேசி, பணி உயர்வும் மாற்றலும் (*Transfer*) தில்லியில் அமையுமாறு பார்த்துக் கொள்கிறாள்.

மாப்பிள்ளை வீடு திருச்சியில் இருப்பதால், அங்கே சில காலம் தங்க நேரிடுகிறது. குடும்பத்தில் ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும் தலைவிரித்தாடுவதை ஒவ்வொரு நிகழ்விலும் காண்கிறாள். அவளுடைய அறிவையோ, படிப்பையோ அங்கீகரிக்கக் கணவன் பலராமனும் தயாராக இல்லை. வீட்டின் அமைப்பே தப்பிச் செல்லவியலாத சிறைபோல் இருக்கிறது. வீட்டைச் சார்ந்த அனைத்துப் பெண்களும் இந்த அடிமைத்தனத்தில் பழக்கமாகிப் போனதை உணர்கிறாள்.

தில்லிக்கு வந்த பிறகும், பலராமனுடன் நடத்தும் குடித்தனத்தில் பழைய நிலைமையே நீடிக்கிறது. தற்செயலாக, தில்லியில் இருக்கும் 'இந்தியா கேட்'டைப் பார்க்க நேர்கிறது. சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தியாகிகளின் பெயர்கள் இந்தியா கேட்டில் இடம்பெற்றிருப்பதைக் கேள்விப்படுகிறாள். இந்தியா கேட்டில் இருக்கும் திறந்த வெளிவழியே பறந்துவிட வேண்டும் என மனதுள் நினைத்துக் கொள்கிறாள்.

பத்மினி வசிக்கும் வீடு சிறியதாக இருப்பதால், பலராமனைக் கேட்காமல், வீடு கட்டுவதற்காக வங்கியில் கடனுக்கு விண்ணப்பிக்கிறான். தங்கள் வீட்டைச் சார்ந்தவர்களின் எண்ணங்களைக் கேட்காமல், கடனுக்கு விண்ணப்பித்ததை மாபெரும் குற்றமாக எண்ணி, பத்மினியிடம் வாக்குவாதம் செய்கிறான் பலராமன். பலராமனைப் பிரிந்து வாழ பத்மினி முடிவு செய்வதுடன் கதை நிறைவடைகிறது.

கதையின் இறுதியில் இடம்பெற்றுள்ள சில வரிகளைச் சுட்டுவது இங்கு பொருந்தும்.

*"நீ மட்டும் தனியே ஒரு ஃபிளாட்டில் இருப்பதாவது? என்ன சொல்றே நீ? இதற்கு என்ன அர்த்தம்?"*

"திருச்சியில் உங்கள் வீட்டுப் பின்கட்டில் புழக்கடைக் கதவு கடைசியில் திறந்துகொண்டு விட்டது என்று அர்த்தம்."

*"என்னது?"*

"அப்படியென்றால், திருச்சியில் உங்கள் வீட்டுப் புழக்கடை மிகப் பெரியதாக விரிவடைந்து, இன்னும் அகண்டு பிரம்மாண்டமான இந்தியா கேட்டின் திறந்த நுழைவாயிலாகி விட்டது என்று அர்த்தம்."

*"ஏய் பத்மினி, என்ன உளறுகிறாய்?"*

"உளறவில்லை. நான் என்ன சொல்றேன் என்று எனக்கு நன்றாகத் தெரியும். கூடிய சீக்கிரமே உங்களுக்கும் எல்லாம் புரியும். எனது வக்கீல் உங்களுக்கு விவரிப்பார்..." *(இரா.பிரேமா, (தொ.ஆ.), பெண்மையச் சிறுகதைகள், ப.322)*

பிராமணக் குடும்பப் பின்னணியிலிருந்து இக்கதை எழுதப்பட்டிருந்தாலும், மத்தியதரத் தமிழ்க் குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் வாழ்க்கையை இக்கதை விவரித்துள்ளது என்று புரிந்து கொள்வதில் தவறில்லை. இக்கதையில் இடம்பெறும் பத்மினி, தன்னுடைய இருப்பைப் பிரக்ஞை பூர்வமாக உணர்ந்து கொள்வதால்தான் தனக்கான வெளியைத் தானே தீர்மானிக்கிறாள்.

ஹென்றி இப்சன் எழுதிய 'பொம்மை வீடு' நாடகத்தை நினைவுகூரும் வகையில் எழுதப்பட்டுள்ளது இக்கதை. கணவனை விட்டுப் பிரியும் நோராவும், தன் சுயமரியாதை பாதிக்கப்படுவதால், கணவனை விவாகரத்துச் செய்யத் துணியும் பத்மினியும் ஏதோ ஓர் புள்ளியில் இணைகிறார்கள் எனலாம்.

## தொன்மங்களின்வழி பெண் அடையாளம்

தொன்மங்களின் வழியே நவீன பெண்ணின் இருப்பை அழுத்தமாக வலியுறுத்தும் கதைகளும் கவனத்திற் கொள்ளவேண்டும். சமீபத்தில் வெளியான அ.வெண்ணிலாவின் 'இந்திர நீலம்' தொகுப்பைச் சுட்டுவது இங்கு பொருத்தமாக இருக்கும். அதேபோல், தொன்மங்களின் வாயிலாகப் பெண்ணினுடைய இருப்பை வெளிப்படுத்தும் அனுராதாவின் 'வலி' கதையையும் குறிப்பிட்டாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதையாசிரியர்களின் ஆழ்ந்த கதை உள்ளத்தைப் புரிந்துகொண்டு, அவரவர்களின் மன உலகங்களை உணர்ந்து எழுதப்பட்ட நூல் 'தமிழில் சிறுகதையெனும் வரைபடம்'. அதேபோல் க.பஞ்சாங்கத்தின் 'தமிழ்ச் சிறுகதைகளும் மனிதப் பெருவெளியும்' என்னும் நூலும் குறிப்பிடத்தக்கது.**

இராமன் ஆணையிட்டான் என்பதற்காக இலட்சுமணன், சீதையை ஒரு மாலைப்பொழுதில், நடுக்காட்டில் நிராதரவாக விட்டுவிட்டு வரும்போது, சீதையின் உணர்வுகள் என்னவாக இருந்திருக்கும் என்பதை உணர்த்துகின்ற கதை 'வலி'. இராமாயணத் தொன்மம்தான் கதையின் அடிப்படை என்றாலும், சீதையின் உணர்வுகள் என்பது இக்கதையைப் பொறுத்தவரை இருபதாம் நூற்றாண்டின் நவீனப் பெண்ணின் உணர்வுகள்தாம்.

"ராமா... நீ வனவாசம் சென்றபோது துணைவனே கதியென்று துணைவரத் துணிந்தேனே... நீ போகும் பாதையே எனதென்று தொடர்ந்தேனே... உன் மூச்சுக் காற்றையே சுவாசித்திருந்தேனே... உனது ஒவ்வொரு சிறு அசைவின் உட்பொருளையும் உணர்ந்து வாழ்ந்து வந்த என்னைத் துளியும் ஈவுயிரக்கமின்றி இப்படிக் காட்டில் விடத் துணிந்தாயே... உனது சிசுக்களைச் சுமக்கும் என் மீது சிறிது கூடவா உனக்குக் கருணையின்றிப் போனது? ஒரு கல்லைப் பெண்ணாக்கிய பெருமையில் மிதந்தாயே... இன்று ஒரு பெண்ணைக் கல்லாக்கிய கொடுங்கதையை எவரிடம் சொல்வேன்" (இரா. பிரேமா, பெண்ணியக் கதைகள், வலி, ப.200) என்று வலியை உணர்கிறாள் சீதை. தனக்காக ஏங்கிய இராவணனை நினைத்துப் பார்க்கிறாள். நிர்க்கதியாய் விட்ட ராமனின் முகத்தை மறந்து, இறந்துபோன இராவணின் சாவிற்காக முதன்முதலாய் வாய்விட்டு அழுதாள் என்ற குறிப்புடன் இந்தக் கதை நிறைவு பெற்றுள்ளது.

தொன்மத்தின் வழியே இன்றைய பெண்ணின் உணர்வுகளும் இருப்பும் இவ்வாறுதான் புனைகதையில் கட்டமைக்கப்படுகின்றன.

பாரதி முதல் ஜெயகாந்தன் வரை வை.மு.கோதைநாயகி அம்மாள் முதல் லஷ்மி, சிவசங்கரி வரை, பெண்களை மையமிட்டுப் பல கதைகளைப் படைத்திருந்தபோதிலும், தன் இருப்பை உணர்பவளாகவும் வெளியைத் தீர்மானிப்பவளாகவும் பெண்ணைக் கட்டமைக்கும் சிறுகதைகள் அண்மைக் காலங்களில்தான் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அதாவது 'பெண்' தன்னைப் பெண்ணாக உணர்ந்து எழுதப்படும் கதைகள். தன்னைப் பெண்ணாக அடையாளம் கண்டு, பெண்ணாக உணர்ந்து, தேடலும் தேர்வும் கொண்டவளாக, தீர்மானம் செய்பவளாகப் பெண்ணை வரையறுத்ததில் அம்பைக்குத் தமிழ் நவீன இலக்கிய வரலாற்றில் தனித்த இடம் உண்டு. ஐயத்திற்கிடமின்றி அம்பை சிறுகதை வரலாற்றில் ஓர் அபூர்வ நிகழ்வு.

"பெண்ணை உணர்வும் ஆளுமையின் பல வடிவங்களும் கொண்ட ஒரு மனுஷியாகப் பார்க்க வேண்டுமே தவிர, வெறுமனே உடல் சார்ந்த ஒரு பொருளாகப் பார்க்கக்கூடாது; அப்படிப் பார்ப்பது, ஒரு வரலாற்றுப் பிழை; ஒரு சமூகப்பிழை" என்பதாக உள்ள பெண்ணியச் சிந்தனை எழுப்பும் இந்தக் கருத்தியல் அம்பையிடம் திடமாகவும் தீவிரமாகவும் ஒலிக்கிறது" (தி.சு.நடராசன், தமிழில் சிறுகதை எனும் வரைபடம், ப.225)

என்று மதிப்பிடும் தி.சு.நடராசனின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கது. அம்பையின் 'அம்மா ஒரு கொலை செய்தாள்', 'காட்டில் ஒரு மான்', 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்', 'சக்கர நாற்காலி' போன்ற பல கதைகள் பெண்ணின் இருப்பை ஆழமாக உணர்த்துகின்றன. பெண்ணுக்குரிய உடையைக் கூட ஆணாதிக்கச் சமூகம் வன்முறையான கருத்தியல்களால் எப்படித் தீர்மானிக்கிறது என்பதைக் 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்' என்னும் கதையில் பேசியிருப்பார் அம்பை. அம்பை அன்று எழுதிய காலகட்டத்தில், முற்போக்குச் சக்திகள் என்று இயங்கியவர்கள் கூட ஆணாதிக்கச் சிந்தனையைச் சுமந்திருந்தனர். பெண்ணியக் கருத்தாக்கங்களை வலிந்து திணிக்காமல், வாழ்க்கையை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்று இயல்பாக உணர்த்துகின்ற கதைகளாக அம்பையின் எழுத்துகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அம்பையைப் போல இல்லாவிட்டாலும், ஆண்-பெண் உறவை மென்மையாகவும் அழுத்தமாகவும் பேசியவை ஆர்.சூடாமணியின் கதைகள். எனக்குத் தெரியாது, நான்காம் ஆசிரமம், ஒரு மாலைப்பொழுதில் இரண்டு தோழிகள், தண்டனை போன்றவை ஆர்.சூடாமணியின் அற்புதமான கதைகள்.

மூன்று விதமான வயதுடையவர்களை வெவ்வேறு காலகட்டங்களில் திருமணம் செய்து, அவர்களோடு இறுதி வரை வாழாமல், சுதந்திரமாக வாழ முற்படும் 'சங்கரி' என்னும் கதைமாந்தரை ஆர்.சூடாமணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தார். தமிழ்ச் சூழலில் இப்படி ஒரு கதையைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத காலகட்டம் ஒன்று இருந்தது.

உஷா சுப்பிரமணியன், ஜோதிர்லதாகிரிஜா, திலகவதி, உமாமகேஸ்வரி, வெண்ணிலா, ஆண்டாள் பிரியதர்ஷினி, தமயந்தி போன்ற பல பெண் எழுத்தாளர்களுக்கு ஆதர்சனமானவர்களாக அம்பையையும், ஆர்.சூடாமணியையும் குறிப்பிட முடியும்.

தன் புதினங்களால் புகழ்பெற்றாலும் ராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகளும் இங்கே சுட்டத்தக்கன. 'தனிமை' என்னும் சிறுகதையில், தன் தந்தைக்கு அந்திமக் கிரியைச் செய்வதற்குத் தனக்கு உரிமை உண்டு என்று போராடுகிறாள் ரஜனி. மதச் சடங்குகளுக்குக் கட்டுப்பட்டு அவருடைய குடும்பமே இதைத் தடுக்கிறது.

"பெற்ற தகப்பனுக்கு அந்திமம் செய்யப் பெண்ணுக்கு உரிமை இல்லை என்று வந்த அந்தப் புரோகிதனின் கழுத்தை நெறித்திருப்பேன்!

என்ன சமூகம், என்ன விதி! எல்லாம் இந்த அம்மாவின் கண்டிப்பு இல்லாத கோழைத்தனத்தால் வந்தது. தன்மானம் இல்லை! என்று கத்தினாள்." (இரா.பிரேமா, பெண்ணியக் கதைகள், தனிமை, ப.7)

என்று இந்த நிகழ்வைப் பதிவு செய்திருப்பார் ராஜம் கிருஷ்ணன்.

பெண் உரிமைகளுக்காகப் பெரியாரும், பாரதியாரும், பாரதிதாசனும் இன்னும் பல பெண்ணுரிமைப் போராளிகளும் எவ்வளவோ போராடினாலும், இலக்கியத்தில் 'பெண் அடையாளம்' என்பது கடந்த ஐம்பது ஆண்டுகளாகத்தான் நிலைபெறத் தொடங்கியது. கேரளப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த விஜயலட்சுமி பெண்ணியம் பேசும்போது, புனைகதைகளில் பெண்களுக்கான இருப்பையும், வெளியையும் ஆய்வாளர்கள் நிதானமாகவும் கூர்மையாகவும் ஆராயவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

நவீன இலக்கியத்தில், பெண் கவிஞர்களையும், கவிதைகளையும் பேசிய அளவிற்கு, இன்னும் சிறுகதை எழுத்தாளர்களைப் பற்றி மிகுதியாக நம் ஆய்வுலகம் பேசவில்லை. சுமதி ரூபன், இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், தமயந்தி, இந்திரா, மாலதி, சிவகாமி, காஞ்சனா தாமோதரன், உஷா சுப்பிரமணியன், காவேரி போன்ற எண்ணற்ற பெண் எழுத்தாளர்கள் குறித்து ஆய்வுகள் தனித்தனியே பெருக வேண்டும்.

தங்கள் 'வெளி'யைக் கண்டறிந்து எழுதும் அத்தகைய எழுத்தாளர்களின் இருப்பைக் கௌரவம் செய்ய ஆய்வாளர்கள் மிகுதியான அளவில் முன்வர வேண்டும்.

## கட்டுரையின் கருத்துருவாக்கத்திற்கு உதவிய நூல்கள்


1. அம்பை, அம்பை கதைகள் (1972-2014) 42 ஆண்டுக் கதைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், ஆறாம் பதிப்பு, 2022.
2. அம்பை, சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, காலச்சுவடு பதிப்பகம், பதினொன்றாம் பதிப்பு 2022.
3. சிவத்தம்பி. கா., தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதல் பதிப்பு, 1980.
4. திலகவதி (தொ.ஆ.), முத்துக்கள் பத்து (ராஜம் கிருஷ்ணன்), அம்ருதா வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2007.
5. திலகவதி (தொ.ஆ.), முத்துக்கள் பத்து (இந்துமதி), அம்ருதா வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2015.
6. திலகவதி (தொ.ஆ.), முத்துக்கள் பத்து (பாமா), அம்ருதா வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2015.
7. நடராசன் தி.சு., திறனாய்வுக் கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, நான்காம் அச்சு, மே 2006.
8. நடராசன் தி.சு., தமிழில் சிறுகதையெனும் வரைபடம், நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு 2019.
9. பஞ்சாங்கம். க, பஞ்சாங்கம் கட்டுரைகள் II, இலக்கியத் திறனாய்வு, காவ்யா வெளியீடு, சென்னை - 24, முதற்பதிப்பு 2010.
10. பஞ்சாங்கம்.க., தமிழ்ச் சிறுகதைகளும் மனிதப் பெருவெளியும், பரிசல் புத்தக நிலையம், சென்னை, முதல் பதிப்பு, 2013.
11. பிரேமா. இரா., பெண்ணியக் கதைகள், காவ்யா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2004.
12. மிதிலா.இரெ., பெண் எழுத்து (1901-1950 காலத்தில் உருவான பெண் படைப்புகள் குறித்த உரையாடலும் ஆவணமும்), அடையாளம், திருச்சி, இரண்டாவது மீளச்சு 2020.
13. ராமசாமி.அ, கதைவெளி மனிதர்கள், நற்றிணை பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை, செப்டம்பர் 2016.
14. ராஜ் கௌதமன், ராஜ்கௌதமன் கட்டுரைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு 2021.
15. ராஜமார்த்தண்டன், காலச்சுவடு, பெண் படைப்புகள் (1994-2014), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், முதற்பதிப்பு 2008.
16. விஜய லட்சுமி.த, பெண் பெண்ணியம் பெண் நிலை, காலசகம் வெளியீடு, நாகர்கோயில், முதல் பதிப்பு, நவம்பர் 2020.
17. வெண்ணிலா அ., மீதமிருக்கும் சொற்கள், பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் (1930-2004), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, முதல் பதிப்பு 2007.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# விளிம்புநிலை வாழ்வின் சுடுமண் தகிப்பு

சா.தேவதாஸ்

சமூக அக்கறைகளுடன் எண்பதுகளிலிருந்து எழுதத் தொடங்கி இற்றைவரை தொடர்ந்தும் எழுத்தில் கால்பதித்து, தீவிரமாக இயங்கி வருபவர்களாக தேவிபாரதி, எஸ்.செந்தில்குமார், ஜே.பி.சாணக்யா, அழகிய பெரியவன் ஆகியோரைச் சொல்லலாம். இவர்களில் மூத்தவர் தேவிபாரதி. அடிநிலை மக்களின் வாழ்க்கைக்கான கருக்களைப் பல தளங்களில் இவர்களுடைய புனைகதைகள் தொட்டுச் சென்றாலும் இந்நால்வரையும் விளிம்புநிலை வாழ்வுப் பதிவாளர்களாகக் கொள்ளமுடியும்.

**தேவிபாரதியின் படைப்புகளை முன்வைத்து:**

தேவிபாரதியின் 'ஒளிக்கும் பிறகு இருளுக்கும் அப்பால்' 'சிகரெட் துண்டுகளும் உள்ளாடைகளும்' 'தாஸ் என்பவனும் தாஸ் என்பவனும்' முதலான கதைகள் ஆண் - பெண் உறவு, தகாக்காமம், குடும்பம் என்னும் நிறுவனத்தில், அன்பும் நேசமும் இல்லாது காமம் சார்ந்து மட்டுமே வாழும்போது உண்டாகும் நெருடல்களும், விரிசல்களும், குரூரங்களும் இக்கதைகளின் மைய நீரோட்டங்களாக இயங்குகின்றன.

காதலனின் ஒத்துழைப்புடன் கணவனைக் கொன்றுவிடும் மனைவி நின்று விட்ட கடிகாரத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு, காலமும் சம்பவங்களும் பின்னோக்கி நகர்வதான சாயலுக்கு ஆட்பட்டு தவிப்பதுதான் 'ஒளிக்கும் பிறகும் இருளுக்கும் அப்பால்' சிறுகதை. இச்சிறுகதையில் காலத்தைத் தலை கீழாகச் சுழற்றும் கடிகாரமும் ஒரு பாத்திரம். ஆண், பெண் உறவு, தகாக்காமம், அன்பு, கருணை, குற்றம், தண்டனை முதலான கருத்தியல்களின் தர்க்க ஒழுங்கைக் கலைத்துப் போடும் கடிகாரம் நிகழ்த்தும் குறுக்கீடுகள் மரபான கதைமுறையின் ஒழுங்கைத் தகர்க்கின்றன.

மனைவி மீது சந்தேகம் கொண்டு மனச்சிதைவுக்குள்ளான கணவனின் மனோநிலையிலிருந்த சில தருணங்களைப் பகிர்வதே 'சிகரெட் துண்டுகளும் உள்ளாடைகளும்'. இன்னொருவனை நேசித்து வந்த பெண்ணை, ஒருவன் மணம் முடித்த பின்பு, அக்காதலனே மனைவியின் நெஞ்சில் தொடர்ந்து இருக்கின்றான் என்று தெரியவர, பைத்தியமாகும் நிலைக்குப் போய்விடும் கணவனின் மனோநிலையை இச்சிறுகதை கூறிநிற்கிறது. 'தாஸ் என்பவனும் தாஸ் என்பவனும்' என்ற சிறுகதையில் சிதைந்து போவது ஆணோ பெண்ணோ என்று தெரிந்தாலும், உண்மையில் சிதைவு காண்பது குடும்ப நிறுவனமே என்பதைத் தத்ரூபமாகக் காட்டிச் செல்கிறார் தேவிபாரதி. வாழ்வின் நெருக்கடிகளும் உருக்குலைவுகளுமே இவருடைய கதையின் கருவி. ஜீவிதம், மீதி போன்ற கதைகளில் குறிப்பிட்டுச் சொல்ல ஏதுமில்லை.

'மறு எழுத்தாக்கம்' என்ற வகைமையில் தேவிபாரதியால் நிறையவே சாதிக்க முடிந்திருக்கிறது. வழக்கமாக மறு எழுத்தாக்கம்/மறுபரிசீலனையில் ஈடுபட்டிருப்பவர்கள் புராண இதிகாசக் கதைகளையே எடுத்துள்ளனர். தேவிபாரதியோ புராணம், வரலாறு, நாட்டார்கதை, காவியம் என விரிவான தளங்களுக்குள் போய், புனைவின் சாத்தியப்பாடுகளை விரிவுபடுத்துகிறார். செறிவான மொழியில் கணங்களின் தீவிரம் குன்றாமல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாடலைக் கொண்டு செல்கிறார். சமயங்களில் வரலாற்றுப் பாத்திரங்களைப் புனைகதைக்குள் கொண்டுவந்து நாடகத்திருப்பத்தையும் புதிய கனபரிமாணத்தையும் சேர்த்து விடுகிறார். ஆழ்மனத்தில் அகஉலகையும் யதார்த்த வாழ்வில் எதிர்கொள்ளும் சம்பவங்களையும் நெருக்கடிகளையும் இவருடைய சிறுகதைகள் விவரித்துச் செல்கின்றன.

இளமையிலேயே துறவு பூண்டுவிடும் மணிமேகலையைத் துரத்தி இம்சைக்குள்ளாக்கும் உதயகுமாரனின் காமத்தைச் சொல்லும் 'மணிமேகலை' காப்பியம் 'ஊழி'ச் சிறுகதையாக மீள்வடிவம் கொள்கிறது. காவியத்தின் மணிமேகலை என்ன எதிர்வினையாற்றினாள் என்பது தெரியாது. 'ஊழி' யின் மணிமேகலை, சுதமதியுடன் சேர்ந்து கபாலிகராய் வேடம் புனைந்து, பேய்க்கூத்தாடித் தப்பிக்கின்றாள். இந்திர விழாக்காலச் சூழலினை நுட்பமாகச் சித்திரித்து, துறவுப் பெண்களின் அகஉலக நெருக்கடிகளை வெளிப்படுத்தி, மாதவி, சித்ராபதிக்கு விடிவுகாலம் பிறப்பதையும், இந்திரனுக்கு இறுதிக்காலம் வருவதையும் விவரிக்கிறார் தேவிபாரதி.

அகலிகை நவீனகாலப் பதிவாக 'அழிவு'ச் சிறுகதையில் எழுத்துவடிவம் கொள்கின்றது. மனைவியால் எப்போதும் கொல்லப்பட்டு விடலாம் என்னும் பயத்தில் தவிக்கும் கணவனின் நிலையில் கதை நகர்கிறது. இந்த வகைக் கருத்திழைகள் பெண்ணின் பார்வையில் சொல்லப்பட்டால்தான் புனைவினைச் சாத்தியப்படுத்தமுடியும். ஆயினும் யதார்த்தத்தை மீறிய புனைவு இங்கு கதையாக மையங்கொள்கிறது. நாட்டார் கதையான நல்லதங்காள் கதையின் 'மறு எழுத்தாக்கமான உயிர்த்தெழுதலின் சாபத்திலும் இம்மைய இழையோட்டத்தைக் காணலாம். பெண்ணால் ஆணின் பழிப்பிலிருந்து மட்டும் விடுபட்டிட முடியாது என்பதைக் கூறும் இச்சிறுகதை உயிர்பிழைத்து நல்லதங்காள் வாழ்ந்திருந்தாலும் அபவாதத்திற்கு உள்ளாக்கி அவள் கூனிக் குறுகிப் போயிருப்பாள் என்பதையும் கூறிநிற்கிறது. கதைசொல்லியின் பார்வை பெண்ணுடையதாக இருந்திருப்பினும் இவ்விரு கதைகளும் இன்னும் தீவிரம் கொள்ளவில்லை என்பது வெளிப்படை.

தேவிபாரதியின் அரிய புனைவு 'பிறகொரு இரவு' டால்ஸ்டாயைக் குருவாகக் கொண்டிருந்த காந்தி, தனது வழிபாட்டுப் பிம்பத்தால் மூச்சுத்திணறி, டால்ஸ்டாயைப் போல ஊர் பேர் தெரியாது அலைந்து திரிந்து இறுதி மூச்சை விட்டுவிட முடியாது என்பதை உணர்ந்த கதைசொல்லி காந்தி திரும்ப வேண்டிய தருணங்களை நுட்பமான வேதனையின் கரைதலாக உருமாற்றி புனைவாக்கியுள்ளார். டால்ஸ்டாயின் ஆளுமையும் எழுத்தும் எப்படிப்பட்டதோ அவ்வெழுத்துக்கள் எத்தகைய முரண்களைக் கொண்டிருந்தனவோ அதுபோல காந்தியின் வாழ்க்கையும் முரண்பாடுகளைக் கொண்டது. அவ் முரண்பாடுகளே கதையில் வலிகளாக மாறி அவரை வதைக்கின்றது. விம்பத்தின் பிரதியாக்கமாக உருப்பெறும் இச்சிறுகதை வரலாற்று அடுக்குகளில் ஒளிந்திருக்கும் நிஜங்களை காரண காரியங்களுடன் நிகழும் சம்பவங்களை அழுத்தமாகவும் செறிவாகவும் நிஜமாக்கிச் செல்கிறது. இங்கே தாஸ்தாயெவ்ஸ்கியின் 'த டபிள்' மறு ஆக்கம் ஆகிறது என்பார் சொர்ணவேல். இதனை அறச்சிக்கல்களின் மீதான படைப்பியல் விவாதமாக பார்க்கிறார் சுகுமாரன்.

காந்தியின் காலத்திலேயே காந்தியத்திற்கு எதிரான போக்குகள் அரசியல் தளத்தில் தலை தூக்கத் தொடங்கின. காந்தியின் புனித பிம்பங்கள் போலி பிம்பங்களால் பரிகாசத்திற்கு உள்ளாக்காகப்படும் நிலையில் தன்பொறுப்பிலுள்ள சிறிய ரயில் நிலையத்தில் புகலிடம் தேட வந்த காந்தியிடம் ஸ்டேஷன்மாஸ்டர் பேசுவதுதான், வரலாறு பேசியிருக்க வேண்டிய வார்த்தைகள்:

“நீங்கள் உங்களுடைய சொந்த வாக்கியத்தைப் பேசுங்கள் பாபு! எங்களை உங்கள் சொந்த வழியில் எதிர் கொள்ளுங்கள். நாங்கள் உங்களை கொலை செய்வதற்காக காத்திருக்கின்றோம். ஒருவரை ஒருவர் பழி தீர்ப்பதற்கான யுத்தத்தை தொடங்க இருக்கின்றோம். வரலாற்றோடு எங்களுக்கு கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டும். தில்லியின் தெருக்களில் இன்னும் உலராமல் இருக்கின்றது ஆயிரம் ஆண்டுகளின் குருதி. எங்களுக்கு உங்கள் தத்துவங்களின் மேன்மையை கற்றுக் கொடுங்கள் அல்லது எங்களுடைய துப்பாக்கிகளில் இருந்து வெளிவரும் தோட்டாக்களை பரிசாக ஏற்றுக் கொள்ளுங்கள்”. (பக்கம் 117,பிறகொரு இரவு)

இன்னொரு குறிப்பிடத்தக்க எழுத்து 'வீடென்ப' சிறுகதை. 14 ஆண்டுகள் ஆயுள் தண்டனை முடிந்து மீண்டும் மனைவி மகேஸ்வரியுடன் வாழ்க்கையைத் தொடர முற்படுகிறான் சின்னு. சிதலமடைந்த வீட்டை சரிசெய்யத் தொடங்குகையில் சககைதிகளின் நிர்பந்தத்தால் தன்பால் காமத்திற்கு உள்ளான மனைவி மீதான நடத்தையில் சந்தேகம் எழுவதும் நீங்குவதும் என்பதே நினைவில் எழுகிறது. நீர் பிரிந்து விடுவதும் நிகழ்வாக இருக்கிறது. அவளும் குற்றவுணர்வின்றியே அவனை எதிர் கொள்கிறாள். தண்டனை வாழ்க்கைக்கும் முன்னர் தாங்கள் கூடுகையில் உணர்ந்த தாழம்பூ வாசனை அவர்களை இன்னும் நிறைவிப்பதாய் இருக்கிறது. என்ன குற்றம் என்பது கூட சொல்லப்படாமல் சமூக உருவாக்கத்திற்கு முற்பட்ட ஆண் பெண் உறவு நிலை போல தூயதாக உள்ளது அவர்களது உறவு நிலை.

நாடகம், சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்று இயங்கிவரும் தேவிபாரதி 'வீடென்ப...' என்ற தொகுப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரையில் கூறும் அடிகள் அவர் எழுத்தைப் புரிந்து கொள்வதற்குத் துணைநிற்கிறது. ''நண்பர்கள் சிலருக்கு ஏற்கனவே ஒரு கேலிச் சித்திரமாகத் தென்படத் தொடங்கி விட்ட போதிலும் எழுத்தோடு எனக்கு உள்ள உறவு இன்னும் வலுவானதாக இருக்கிறது. இன்னும் கூட எழுத்தையே எனது முதன்மையான அக்கறை என சொல்ல எனக்கு முடிகிறது'' என்கின்றார். அந்த அக்கறை தான் அவரை புதிது புதிதாக எழுதவைக்கிறது. 'பிரம்மனின் பட்டுப் பாவாடை உடுத்திய நான்காவது மகளின் தந்தையின் இறுதித் தருணங்களை மாண்டோ நிலைக்கு உருவாக்குகிறது. டால்ஸ்டாயின் புனைவை காந்தியின் வாழ்க்கை வரலாற்றுக்குள் பிரவேசிக்க வைக்கிறது. சமூக உருவாக்கத்திற்கு முந்தைய மனிதர்களாக சின்னுவையும் மகேஸ்வரியையும் காண வைக்கிறது.

**எஸ்.செந்தில்குமார் விளிம்புநிலை பதிவு:**

கவிஞராக, சிறுகதையாளராக, நாவலாசிரியராக, அறியப்பட்டுள்ள எஸ்.செந்தில்குமார் சமீபத்தில் சிறந்த நெடுங்கதையாளராக - குறுநாவலாசிரியராக விளங்கி வருகின்றார். இவர் தொண்ணூறுகளின் தொடக்கத்தில் இருந்து எழுதிவருபவர். எஸ்.செந்தில்குமாரின் பலம், ரிக்ஷாக்காரர், தரகர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உதிரித் தொழிலாளி, சிறு வியாபாரி என விளிம்பு நிலை மனிதர்களை பேசுவது. இவர்களது உலகை விவரிக்கையில் வசீகரம் குன்றாமல் அவரால் எழுத முடிகிறது. 'விலகிச் செல்லும் பருவம்' தொகுப்பில் இடம்பெறும் 'இரு நிறமுடைய காட்சிகள்' வடிவச் சிறப்புடன் நேர்த்தியாகச் சொல்லப்பட்டிருக்கும். 'ஜெயக்கொடியும்' 'பகலில் மறையும் வீடும்' ஒரு மாயம் சார்ந்து விவரிக்கப்படும் கதைகள். 'என் மரணத்திற்குப் பிறகு நீயும் இறந்துவிடுவாய்' என்ற தர்க்கத்தை வைத்து மாயத்தை நிகழ்த்த முற்படும். 'விலகிச் செல்லும் பருவம்', 'பூங்காவின் ஞாயிற்றுக் கிழமை', ', மூன்று காதல் சம்பவங்கள்' 'பொய் சொல்வதற்கே பிறந்தவர்கள்', மாலா சகோதரர்கள்- என்னும் கதைகளில் சிறப்பித்துப் பேசிட எதுவுமில்லை.

'அலெக்சாண்டர் என்ற கிளி' தொகுப்பு பெண்ணிய பிரதி ஆகுமளவுக்கு வலுவான கதைகளைக் கொண்டது. 'அசலூருக்குச் செல்பவர்கள்' 'ஞாபகங்களை உண்ணும் மீன்கள்', 'ஊஞ்சல் விதி' 'அவர்கள் ரயிலை பார்க்கவில்லை' 'இரவின் வழியாகவும் பகலின் வழியாகவும்', 'அலெக்சாண்டர் என்ற கிளி', 'நேற்று பார்த்த பெண்' 'போஜனகலா' அல்லது பூங்குழல்' ஆகிய கதைகளில் நேரமின்மையால் பெண் உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டு இருக்கின்றாள் அல்லது கரடுமுரடான வாழ்க்கைப் போக்குகளினால் காயப்படுகின்றாள் அல்லது வல்லுறவுக்கு உள்ளாக அல்லது தற்கொலைக்கு ஆளாகிறாள்.

'ஞாபகங்களை உண்ணும் மீன்கள்' கதை ஒரு யதார்த்தம் சார்ந்த பயணம். பயணத்தின்போது ஒரு கனவு, அப்புறம் அமானுஷ்ய நிகழ்வுகள் நடந்து, வரலாற்று அடுக்குகளுக்குள் ஊடுருவி, கொடூர நடப்புகளை வெளிப்படுத்துகின்ற இவ்வடிவம் புனைவின் சாத்தியங்களை விரிவுபடுத்தும் போதே, பெண் சார்ந்த நிஜத்தை கூர்மையாக எடுத்துக் காட்டவும் செய்கின்றது. கதையில் செண்பக ஊர் ஆறு நுண்மையாய் வெளிப்படுகிறது.

''ஆறு துயரத்தின் ஞாபகங்களை மட்டும் நம்மிடமிருந்து விலகிட செய்யும் அதிசய ஆறு. இந்த கிராமத்தில் வாழ்ந்த பெண்கள் பலரும் இந்த செண்பகனூர் ஆற்றில் விழுந்து தான் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். ஜமீனுக்கு பயந்து தங்களை காப்பாற்றிக் கொள்ளவும் காப்பாற்றிக் கொள்ளாமல் தங்களை இழந்துவிட்டு ஆற்றில் விழுந்து இறந்தவர்களுமாக ஏராளமானவர்களின் கண்ணீரைத் தான் தனக்குள் வைத்து ஓடிக்கொண்டிருக்கின்றது இந்த ஆறு. ஆற்றில் விழுந்து இறந்தவர்களின் கண்ணீர்தான் ஓடும் நீர் போல இந்த வன தேவதை செண்பகனாட்சியும் ஜமீனுக்கு பயந்து கொண்டு இந்த காட்டுக்குள் ஓடி வழி தெரியாமல் நின்ற இடத்திலேயே கற்சிலை ஆகிவிட்டவள் என்பது சிலருக்கு மட்டுமே தெரியும்''.

''அலெக்சாண்டர் என்ற ''கிளி'' கதை ஆசிரியரின் பார்வையில் அபூர்வமாகத் தொடங்குகின்றது. முத்துமாலை, அழகேசன், முத்து மாலையின் ஐயா ஆகிய மூவரின் பார்வைகளில் அடுத்தடுத்து நகர்கின்றது. ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஆசை, வேட்கை, நிராசை, நிராசை தருணங்களில் படும் அவதி – பதற்றம் - கையறுநிலை என பல்வேறு உணர்வுகளைக் கதை வெளிப்படுத்திச் செல்கின்றது. அலெக்சாண்டர் என்ற கிளியை பரிசளித்து ஒரு பெண்ணை மயக்கப் பார்க்கும் தந்திரத்திற்கு பின்னுள்ள அழகேசனின் அந்தரங்கமும், வேறு வழியின்றி பலியாக இருக்கும் பெண் மற்றும் சாட்சியங்களாக இருக்க நேரும் இரு ஆண்கள் ஆகியோரின் இயலாமையும் உணர்த்தப்படுகின்றன.

''ஒருவனை ஏமாற்ற ஒருவன் காத்திருக்கின்றான். ஒருவன் தானே ஏமாறுவதற்காக காத்திருக்கின்றான். நேசிக்கிற செயல் சந்தேகத்தின் பொருட்டே ஏதேச்சையாக நடக்கிறது'' என்னும் வாசகங்களுடன் வந்துள்ள இத்தொகுப்பில் 'நேற்று பார்த்தப் பெண்' என்னும் அபூர்வமான கதை இருக்கின்றது. கோயிலில் பார்க்கக் கிடைக்கும் பெண் சிறுமியாய் இருந்த போதும் பருவம் அடைந்த பிறகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனப்பூட்டி வசீகரித்து, திருமணமானதும் பார்க்க முடியாது பொலிவிழந்து விடுவதை இன்னொரு பெண்ணின் வேதனைக்கூடாகச் சொல்லிச் செல்கிறது இச்சிறுகதை. ஆணின் பார்வையில் சொல்லப்படாமல், இன்னொரு பெண்ணின் பார்வையில் சொல்லப்பட்டிருப்பது, கூடுதல் தீவிரத்தைக் கதைக்கு அளிக்கிறது. கோயிலின் தடாதகை பிராட்டியிடம் ஆழ்ந்து விடும் சிறுமியும், சிறுமியிடம் ஆழ்ந்து விடும் இன்னொரு பெண்ணும், இவர்களிடம் ஆழ்ந்து விடும் வாசகனுமாக இக்கதை உருவம் பெற்று விடுகிறது. மௌனியை நினைக்க வைக்கும் கதை எனலாம்.

அதிகாரத்தை எதிர்க்க முடியாமல் தங்களை ஏமாற்றிக் கொண்டு பலியாக்கிக் கொள்ளுகின்ற கடைநிலை ஊழியர்களும் ஏமாற்றுகிறார்கள் வஞ்சிக்கிறார்கள் எனத் தெரிந்தும் அதற்கு இணங்கிச் சென்று துயருறும் பெண்களும் ஒரு கட்டத்துக்கு மேல் சகியாது தன்னை மாய்த்துக் கொள்ளும் விளிம்புநிலை வாசிகளும் போலி நகையை அடகு வைத்து வாழும் ஆணும் அதற்கு துணை போகும் பெண்ணும், முரடர்களுக்குப் பலியாகும் பெண்களும் செந்தில்குமாரின் கதையில் வரும் நிகழ்நிலைப் பாத்திரங்கள்.

பதின்பருவ காதல், நிறைவேறாத காதல் சார்ந்து, ஆண் - பெண் உறவு நிலைகளை எழுதும்போது, செந்தில்குமார் சோபிக்கத் தவறிவிடுகிறார். அந்நிலையில் அவருடைய பாத்திரங்கள் பெரும்பாலும் தட்டையாகிப் போகின்றன. மாயம் புனைவுவழிச் சிறுகதையாக உருப்பெறும்போது வசீகரம் கூடாது போய்விடுகின்றது. ஆயினும் 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட பின்புலத்தில் அக்காலத்தில் துல்லியமான மொழியில் சீர்திருத்தவாதிகளின் எழுத்தாளர்களின் தேசபக்தர்களின் இல்லங்களில் பெண்ணின் வாழ்க்கையைப் பதிவு செய்யும் ''போஜன கலா'' அற்புத கதை ஆகிவிடுகின்றது.

விளிம்பு நிலை மனிதர்களின் அகங்களை துருவிப் பார்ப்பதாக எழுதும் செந்தில்குமாரின் கதைகள் வளமும் செறிவும் சேர்ந்தவை. இக்கதைகள் அழுக்கான மனிதனுக்குள் இருக்கும் தூய காதலைப் பேசுபவை. நடைமுறை வாழ்வின் நிர்பந்தத்திற்கு ஏற்ப சாமர்த்தியமும் சமயோசிதமும் கொண்டு துலங்கும் பெண்ணின் வாழ்வைத் தொட்டுச் செல்பவை இக்கதைகள். அதேசமயம் துணிச்சலும் நம்பிக்கையும் இல்லாமல் இருண்மையில் சிக்கி உழலும் பெண் குறித்த பதிவுகளாகவும் இச்சிறுகதைகள் விளங்குகின்றன.

'ஒரு புதிர் இருந்தது என்று சுட்டிக் காட்டுவதற்காக அல்லாமல் புதிரைத் தீர்க்க நான் ஒருபோதும் விரும்பியதில்லை'' என்பார் ஃபுயண்டஸ். செந்தில்குமாரின் கதைகளும் அத்தன்மையிலேயே கட்டுறுகின்றன. உத்தேசமும், புதிர்தன்மையுள்ள ஆளுமைகளையும் நிகழ்வுகளையும் வரலாற்றின் பக்கங்களுக்கூடாக முன்வைக்கும் இச்சிறுகதைகள் வாழ்வின் எல்லா ரகசியங்களையும் தமக்குள் ஒளித்து வைத்துக்கொள்கின்றன.

நெடுங்கதைகள் எழுதும்போது செறிவும் நுட்பமும் சேர்ந்த வாழ்க்கையின் இன்னொரு சாளரத்தையும் கதைவழித் திறந்து காட்டுகின்றார் செந்தில்குமார். தேவிபாரதியைப் போல இன்னும் சவால் மிக்க தருணங்களையும் இவ்வகைமையில் கையாளமுடியும் என்று தோன்றுகின்றது. ''அனார்கலியின் காதலர்கள்'' தொகுப்பு, செந்தில்குமாருக்கு பெருமை சேர்ப்பதாகும். முன்னைய கதைகளைப் போல் சர்வமும் அறிந்த பாத்திரங்களை இத்தொகுப்பு கொண்டிருக்கவில்லை, மறதியின் புதைச் சேற்றுக்குள் புதைந்திருக்கும் இப்பாத்திரங்கள் சமூகப்புறக்கணிப்புக்களையும் அவமானங்களையும் துடைந்து விட்டுக் கடந்து செல்கின்றன. ''மொழியின் எளிய கண்களைத் திறந்து அதன் வழியாக ஆகச்சிறந்த மனித மனங்களின் இயக்கங்களை எழுதிவிட முடியும் என்ற சாத்தியத்தை எனக்கு உணர்த்தியவை இக்கதைகள்'' என்கின்றார் செந்தில்குமார்.

### ஜே.பி.சாணக்யா எழுத்துகள் செல்லும் திசைவெளி:

தொண்ணூறுகளின் இறுதியிலிருந்து எழுதிவரும் ஜே.பி. சாணக்யாவுக்கு நீள்கதைகள் கைவந்த கலையாக இருக்கின்றது. இதுவரை மூன்று தொகுதிகள் கொண்டுவந்துள்ள இவருக்கு குறிப்பிட்ட நிலவியலை சரியாகப் பொருத்தி புனைவை முன்வைக்கும் அக்கறை இருக்கின்றது. உறவுகள் சார்ந்த மீறல்களும், வாழ்க்கை சார்ந்த ஆவேசங்களும் இவரிடம் பதிவாகின்றன.

பிளாக் டிக்கெட் விற்றுப்பிழைப்பதும் பாலியல் தொழிலுக்குப் போவதும், அங்கு கண்காணிப்புக்குள் சிக்கி நெருக்கடிக்குள்ளாவதும் காட்டிக் கொடுப்புக்களாலும் துரோகங்களாலும் அலைந்து உழல்தலுமான இருண்ட வாழ்க்கையின் கண்ணீர் சித்திரமே 'பிளாக் டிக்கெட்'. தியேட்டரின் பாதுகாப்புக்கு வரும் போலீஸ்காரரே சிறுவர்களை வைத்து பிளாக்டிக்கெட் விற்று சம்பாதிக்க நினைக்கின்றார்கள். தாதாவாக உருமாறுபவன் தன்னைச் சுற்றி வாழ்பவர்களை ஆட்டிப் படைக்கின்றான். நாம் அன்றாடம் காணும் அடிநிலைச் சமூகத்தின் ஒரு குறுக்கு வெட்டு முகத்தை இச்சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. 'என் வீட்டின் வரைபடம்' தொகுதியில் நிகழும் ஊரின் நிலவியல் காட்சியை சாணக்கியா விவரிக்கும் போதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஒருவன் எழுத்தாளனாவதற்கான முதன்மைக் காரணம் அகத்தூண்டலே. அதனோடு அம்மனிதனுக்கு அமையும் புறச்சூழலும் மற்றொரு காரணமாகிறது. எனக்கு இரண்டுமே இருந்தன." என்கிறார் அழகிய பெரியவன்.**

கதையில் வரப்போகும் அமானுஷ்ய தன்மையையும் மர்மத்தையும் வன்முறையையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

'தார் சாலையில்' இருமருங்கும் பம்பை, புளி மரம் நிழல் கூடாரம் போல் நீண்டு குகையாய்ச் செல்ல சாலை வழி நடந்தேன், வடகோடி மதகிற்கு. செங்கல் சூளைகள், நரி கடித்தான் சாமி கோயில், குயவர்கள் குடியிருப்புகள் தாண்டி நாகசுரம் கற்றுக்கொள்ளும் ஒருவரின் சப்தத்தைத் தாண்டிச் சென்றேன். மதகின் இறக்கத்தில் பேருந்து வளைவில் தான் ராயரைக் கொன்றார்கள். யாரென இதுவரை தெரியவில்லை. அதுவரை ராயரைக் கரித்துக் கொண்டிருந்த ஊர் அவர் இறப்புக்கு அழுதது''. (பக்கம் 35)

சாமியாடியின் இளவயது மனைவி கதை சொல்லியான மகனின் அப்பாவால் வல்லுறவுக்கு ஆளாகி கொல்லப்பட, தாங்கிக் கொள்ள முடியாத சாமியாடி தற்கொலை செய்து கொள்ள, பிரதான போக்கிரியும் குற்றவாளியுமான கதைசொல்லியின் அப்பா ஊராரால் கழுவேற்றப்படுவதாக கதை செல்கின்றது. ஊர்த் திருவிழாவின்போது இவை எல்லாம் அரங்கேற்றப்பட்டு விடுகின்றன. ஊமையாய் இருக்கும் அம்மா ஊமையாக்கப்பட்டது அப்பாவால் நாக்கறுபட்டு என்பதை தற்செயலாகக் கண்டறியும் போதுதான் மகனுக்கு அப்பாவின் சுயரூபம் ஓரளவுக்கு தெரியவருகின்றது. மகள் வாழாவெட்டியாக இரவில் வீடு வந்து சேர்ந்துள்ள போது, அம்மாவின் தவிப்பை கதைசொல்லி இப்படி பதிவு செய்கின்றான்.

''இரவும் அம்மாவும் தூங்காது இருந்தார்கள் சிம்னி விளக்கு உயிர்தீர்ந்த போது இருளைக் கட்டிக்கொண்டாள். விளக்கிற்கு உயிரூட்டும் எண்ணத்தை தொலைத்தப்படி இருளில் மின்னும் கண்களாய் நிலைக்க விட்டிருந்தாள்''. தட்டையான எதார்த்த நிகழ்வை தீவிரம் மிக்கதாக்கிட, சாணக்யாவின் புனைவுமொழியும் வளமான கதையாடலும் துணைபுரிகின்றன. காட்சியில் பரிமாணமும் சேர்ந்துவிடும். அப்பாவின் கனமான நிழலை அம்மாவின் மெல்லிய நிழல் முடிவில்லாமல் சுமக்க கடினப்பட்டு புலம்பி ஓடியது. அப்பாவின் தழைத்த நிழல் வெப்பத்தை வைத்திருக்கும் கரும்புத் தோட்ட சுனை, சவுக்கு மரத்தோப்பு வெளிகள் என நகர்ந்தது. வெயில் ஏற ஏற அப்பாவின் நிழல் பருத்து நீண்டு ஊர் எல்லைகளைத் தொட்டது. எல்லையில் முடுக்கு தெருவில் டங்ளான் பூசாரியின் சாம்பல் வண்ணக் குடிசை. டங்ளான் பூசாரி முதல் மனைவி ஓடி விட்ட பின் பரிகாரமாய் அவளின் தங்கை அருந்ததியை கொண்டுவந்து வைத்தான். தாத்தா பேத்தி வடிவத்தில் கணவனும் மனைவியும் உலவினார்கள். அப்பாவின் நிழல் சாம்பல் குடிசையை எட்டியபோது அருந்ததி இரண்டாம் முறையாக பூப்பெய்தினாள். (பக்கம் 48)

'ஊருக்கு செல்லும் வழியில் 'சாமர்த்தியம் இல்லாமல், வெகுளித்தனத்துடன் கிராமத்தில் வாழும் ஒருவனின் ஆளுமை பதிவாகின்றது. மனைவி நாவிதனுடன் சேர்ந்து வாழத் தொடங்குகிறாள். எது நடந்தாலும் இவனிடம் புகார்கள், கோரிக்கைகள் இல்லை. ஊரார் சொல்லும் வேலையை முடிக்க வேண்டியது, பழையது சாப்பிட்டு நிம்மதியாகிவிடுவான். வேலை செய்ய முடியவில்லை என்றால் இழவு செய்தி சொல்லி வருவான். சிறுவர்கள் தவற விடும் குண்டுகளையும் பந்துகளையும் கூட சரியாக எடுத்து வந்து தருவான். அப்போது அவன் மீது குழந்தைகளின் சாயைகள் படர்ந்து இருந்தன. வெகுளித்தனத்துடன் அவன் முகத்தில் நோய் தாக்கி சிகிச்சை பெறாது அது விஷக்கடியானதால் சருமம் பாதிக்கப்பட்டுவிட ஊரார் ஒதுக்கி விட முற்படுகையில் தான் அவன் பைத்திய நிலைக்கு உள்ளாகி விடுகின்றான்.

''உதிர்ந்து விழும் ஒதியமர இலைகள் ஆவலோடு அவன் மேல் படுத்துக் கிடந்தன. ஓதியமர வளைவில் திணறியபடி மேலே ஏறும் லோடு லாரிகள் அவன் மீது வெளிச்சத்தை வீசிப் பார்த்து ஓடின. புதிய எறும்புகள் விருப்பத்துடன் அவன் காயத்தில் ஊறிக்கொண்டிருந்தன. ஒதுக்கி கிடைபோட காத்திருக்கும் செம்மறி ஆடுகள் அவனைச் சுற்றிலும் நின்று கத்திக்கொண்டிருந்தன. ஓதியமர ஆட்டின் குரலில் கீழ்நோக்கி முறுக்கிக் கொண்டு இறங்குவதாகவும் அவன் அந்தரத்தில் மேலெழும்பி பறப்பதாகவும் நினைவும் தூக்கமும் அற்ற கனவுத் தன்மையில் புலம்பி புரண்டு படுத்தான்''. (பக்க 67)

நீண்ட காலத்திற்குப் பிறகு ஊர் திரும்பி தனக்கு பிடித்த வேணி அக்காவை பார்க்க வரும் போது மழை பிடித்துக் கொள்கின்றது. மிகு மழை அதற்கேற்ப ஞாபகங்கள் ஊறிக் கொண்டே இருக்கின்றன. தாம்பத்தியம் தாண்டிய உறவில் ஈடுபடும் பெண்ணான வேணி, பாலியல் சித்ரவதைக்கு ஆளாகும் போது நினைவுகளின் அடுக்குகளில் இருந்து வந்து தலைகாட்டுகிறது.

சாணக்கியாவின் 'தனிமையின் புகைப்படம்' ரயில் நிலையங்களில் திரியும் பிச்சைக்காரர்களைப் பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தவரை எடுபிடி வேலை செய்து பிழைப்பை ஓட்டுவது பின்னர் பிச்சை எடுப்பது. இது ஆண்களின் நிலை, நிராதரவான பெண்கள் பாலியல் தொழில் செய்து பிழைக்கிறார்கள், அது இயலாதபோது பிச்சைக்கு வந்துவிடுகிறார்கள். அங்கே அவர்களுக்கு பிடித்துப்போகும் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கிறார்கள். வட இந்தியாவில் இருந்து இங்கே வந்து, பிச்சை எடுத்து வாழ்வதும் இங்கேயே தங்கி விடுவதுமான நிலையிலும் கூட, போலீஸின் பொய் வழக்கில் பிடிப்பட்டு சிறை சென்று அவதிப்படுபவனை இக்கதையில் முன்வைக்கின்றார்; அவனது இறுதியை ஒரு துன்பியல் நாடக காட்சி என தீட்டுகிறார்;

''அன்று காலையில் குரு மஹராஜ் கிழவன் இறந்து விட்டான் என்று அந்த சிறிய ரயில்நிலைய பிராந்திய வாசிகளில் சிலர் பேசத்தொடங்கினார்கள். பழுப்பு நிற சால்வை போல் தெரியும் வெகு காலத்திற்கு முந்தைய வேட்டி ஒன்றினை நிறை முக்காடிட்டு ஒருக்களித்து சுருண்டு அவர்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் விதமாய் அவன் படுத்து இருந்தான். அவனுக்குள் உயிர் இருப்பதன் அதிர்வு அவன் மேல் தத்தி தத்தி விளையாடிக் கொண்டிருக்கும் இரு அண்டங் காக்கைகளுக்குக் கேட்டுக் கொண்டிருக்கும். அவன்மேல் விளையாடும் காகங்களை கண்ட சிலர் சில்லறைகளை அவன் படுத்திருந்த ஒற்றையடிப்பாதை ஒதுக்குப்புறத்தில் தூக்கிப் போட்டுவிட்டு சென்று கொண்டிருந்தார்கள். அவன் நேற்றுதான் சிறைச்சாலையிலிருந்து கருணை அடிப்படையில் விடுவிக்கப்பட்டு இருந்தான்''. (பக்கம் 80) பாலியல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது லிங்கனின் துணை கிடைத்தபின் அத்தொழிலை விட்டு, ரயில் நிலையத்தில் பூ விற்று பிழைத்து வருகிறாள் காளியம்மாள். ஒரு தடவை அசம்பாவிதம் ஒன்றில் அப்பாவி ஒருவனை வேண்டுமென்றே கலாட்டா செய்து அடித்துக் கொண்டிருக்கும் ரவுடி பசங்களை தயங்காமல் அடித்து துரத்தி விடுகிறாள். அதுவரை குண்டாக இருந்ததற்காக பாதிப்புக்கு உள்ளாகி வந்தவள் இனி உயர்திரு காளியம்மாள் என மதிக்கப்படுகிறாள்.

சாணக்யா கனவுகளை வைத்தே கதை எழுதிப்பார்க்கிறார். கனவை ஒத்தி அபூர்வக்காட்சியினை நிஜமாக நம்பி அவதிப்படுபவனை முன்வைக்கிறார். ஆவி மாதிரியான நம்ப முடியாத விஷயங்களில் ஒரு காதல் ஊடாட்டத்தை குன்னூர் பனிமூட்டப் பின்னணியில் சொல்லிப் பார்க்கிறார்.

''இவை எனது இருத்தலுக்கான சின்னஞ்சிறிய வெளிப்பாடுகள். பூனை மியாவ் விடுதலைப் போல, நாய்குரைப்பதைப் போல. ஒரு பெரிய வெளிப்பாட்டுக்குப் பிறகு கதைகளைப் படைப்பதில் நான் சீரடைவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது''

என்று தன்னை பற்றிக் குறிப்பிடும் சாணக்யா,

''சாதாரண எழுத்தாளனுக்கு தொழில் திறமை இருந்தால் போதும். வெற்றிகரமான எழுத்தாளனாகிவிட முடியும். அவன் எதனையும் யாரையும் கண்டறியத் தேவையில்லை'' என்றும் கூறுகிறார்.

தீவிர எழுத்தாளனுக்கு எழுத்து என்பது உயிர் போன்றது. எனவே தான் உயிரைக் கொடுத்து எழுதுகிறான். ''பிரக்ஞைக்கான மனிதனின் திறன் மட்டுமே அவனை மனிதனாக்குகிறது'' என்கிறார் யுங். 'பூமியெங்கும் சுற்றி வரும் ஏழு விழிகள் கடவுளுக்கு உண்டு' என்று ஒரு தொன்மத்தையும் ஓரிடத்தில் எடுத்துக் காட்டுகிறார். பிரஜையின் முழு வீச்சையும் உள்வாங்கி, இரண்டுக்கு மேற்பட்ட விழிகளால் பார்க்க முடிந்தவனே, நிஜத்தை ஊடுருவி எழுத முடியும். பனிமூட்டத்தை விலக்கி காட்சியை சரியாக காண்பது போல, ஆளுமைக்குள் ஒளிந்திருக்கும் அடுக்குகளை காணமுடியும். சந்தேகங்கள் ஊடாட்டங்கள் தாண்டி வாழ்வியல் போக்குகளை அறியமுடியும். சாணக்யாவின் எழுத்து இத்திசை வெளியில் சென்று கொண்டிருக்கிறது.

### அழகிய பெரியவன்: அவலம் நிறைந்த வாழ்வைக் காட்டும் அழகிய கதைகள்:

தொண்ணூறுகளின் இறுதியிலிருந்து எழுதிவரும் அழகிய பெரியவனின் உலகத்திலுள்ள மண்ணும் மனிதரும் இதுவரை எழுத்தில் பதிவு பெறாதவை. வறண்ட மணல் தகிக்கும் பாலாறு, தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் நிறைந்த வளமிழந்த பூமி, இவ்விரண்டு காரணங்களால் விளையாத பூமி. நிலத்திலிருந்து விரட்டப்படுபவன் கொள்ளும் சின்னஞ்சிறு நேசங்களும் நெகிழ்வுகளும், சமூகத்தால் சாதியக் கட்டமைப்பால் துரத்தியடிக்கப்பட்டு, பஞ்சை பராரியாய், சதா போதைக்கு ஆள்பட்டவராய் வீதியில் உழலும் மனிதர்கள், உதிரித் தொழிலாளர்களாகி குழந்தைப் பருவத்தை இழந்து தவிக்கும் சிறுவர்கள் எனவிரியும் அழகிய பெரியவனின் கதைகளின் உலகம் ஒடுக்கப்பட்டவர்களின் சமூகப் பிரச்சினைகளை அதன் பண்பாட்டு அழகியலோடு வெளிப்படுத்தும் ஆற்றல்கொண்டது.

குழந்தைத் தொழிலாளர் நிலையிலிருந்து மீட்கப்பட்டு தேன் கூடு பள்ளியில் படிக்கின்றவனின் தந்தை ஊருக்கும் சேரிக்குமான கலவரத்தில் சிறையிலிருக்க, வறுமையில் தள்ளப்பட்ட தாய் சிவந்த மணியுடன் படும் தவிப்பு மீனுக்கட்டாம் பொழுது, கதையாகிறது.

''கண்கொத்தி இரவு'' கதையில் மருதாணியும் துஷ்யேந்திரனும் சாதி மறுப்பு மணம் செய்து கொள்ள முடிவு செய்கின்றனர். ஊராரின் மிரட்டல் துஷ்யேந்திரனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தை வரவழைக்க, மருதாணியே துணிவு கொள்கிறாள், ''பூசணிப் பூகாலத்திலும் குமரய்யனை விடவும் கற்பகமே தைரியத்துடன் முடிவெடுக்கின்றாள். வறுமை பீடித்த வாழ்வில் ஒரு குழந்தையின் வயிற்றை நிறைப்பதே பெரும்பாடாக இருக்க, கணவன் திடீரென்று விபத்தில் இறந்து போக, நிர்பந்தங்கள் தந்திரங்கள் காமாட்சியை பாலியல் தொழிலில் சிக்க வைக்கின்றன.

தோல் தொழிற்சாலை மூடப்பட வேலையிழந்த அப்பன் வேறு வேலையின்றி சதா குடித்துவிட்டுத்திரிய அவனைத் தேடி அலையும் பிள்ளை திருநாவுக்கரசரை முன்வைக்கிறது 'கானலில் தவித்திடும் குரல்'. ''புளியம் பூக்கள்'' கதையின் கம்சலை ஆந்திரத்தின் நாகேந்திரனை விரும்ப, அவமதிக்கப்பட்டதால் தற்கொலைக்கு முற்பட்டு மீண்டு வரும் வேளையில் காலில் கட்டுடன் நாகேந்திரன் வருவதான ஒரு கதையிழை.

''தீவிரி'' யில் வட இந்தியாவிலிருந்து பிழைக்க வந்த சிறிய வியாபாரி ஒருவன் குழந்தைகளுக்கான துணிமணிகளை விற்க அலைந்து திரிகின்றான். தன் குழந்தை இறந்து விட்ட சோகம் வேறு அவனுக்கு. இப்போது அவன் திரிகின்ற கிராமத்தில் குழந்தைகளே கிடையாது. தொங்கும் ஏணைகூட நூலாம்படை சுற்றிக்கிடக்கிறது. பிள்ளைகள் இல்லாத பள்ளியில் வாத்தியார் பிரம்புடன் நடந்து கொண்டிருக்கிறார்.

உங்க குழந்தைகள் எங்கே என்று அவன் கேட்கும் போது, ''என் புள்ளைங்க என் வயத்துக்கே திரும்பிடுச்சிங்க, கொஞ்ச நாள்ளயே அதுங்க என் வயித்துலயே கரைஞ்சி போயிடுச்சுங்க'' என்கிறாள் ஒருத்தி. ''எல்லா பிள்ளைகளையும் கோழிக்குஞ்சுகளை போல கழுகுங்கதான்வந்து தூக்கினு போயிடுச்சிங்க'' என்கின்றாள் இன்னொருத்தி,

அலைந்து திரிபவன் ஒரு வேளையில் மயங்கி விழுகிறான், ''அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது சக்கரங்கள் உதிர்ந்த ஒரு நடைவண்டி. சிதைந்து குவியலாய் இருந்தது. நசுங்கிய பொம்மைகளும் வாய்நொறுங்கிய சோப்புகளும் வண்ணம் போன பந்துகளும் அந்த வேலியின் மூலையில் வீசப்பட்டிருந்தன. அவைகளில் ஒரு மரப்பாச்சி துக்கம் விசாரிக்கபடாத கண்களுடன் கை ஒடிந்திருந்தது. தீப்பெட்டி வீடுகள் திறந்து கொண்டிருந்தாலும், அறைகளை விட்டுப் போய் விடாதபடி சில பொன்வண்டுகள் அங்கிருந்தன''... பக்கம் 224

இனி வழியில்லை என்று திரும்புகின்றான். ''அவன் பால் கட்டிப் போனவளின் வேதனையுடன் ஓட்டமும் நடையுமாய் அவ்விடத்தைக் கடந்து கொண்டிருந்தான்''. (பக்கம் 226) உள்ளடக்கமும் வடிவமும் சரியாக இசைந்து காவியப்பரிமாணத்திலான துன்பியல் நாடகத்தின் வீச்சைப் பெற்றிருக்கும் அற்புதக் கதை இது.

சிறுகதைகள், நாவல், கவிதை என்று இயங்கி வரும் அழகிய பெரியவனின் தலித் எழுத்துக்கள் இதுவரையிலும் அறியப்படாத வாழ்க்கையை, தடம் படாத மண்ணை, கேட்டிராத வேதனையை வெளிப்படுத்தி நிற்பவை.

''ஒருவன் எழுத்தாளனாவதற்கான முதன்மைக் காரணம் அகத்தூண்டலே. அதனோடு அம்மனிதனுக்கு அமையும் புறச்சூழலும் மற்றொரு காரணமாகிறது. எனக்கு இரண்டுமே இருந்தன.'' என்கிறார் அழகிய பெரியவன், என்ன முயற்சி செய்தாலும் என்ன அல்லாடினாலும் நிராசை, விரக்தியை எதிர்கொள்ள வேண்டிய உலகம் அழகிய பெரியவனுடையது. வறுமையைச் சமாளிக்க முடியாமல், தலைநிமிர்ந்து நடக்க முடியாமல், சாதியக் கொடுமையால் அவமானப்படும் நிலையில், நேசமுமில்லாமல் கருணையும் இல்லாத சமூகத்தில் மனிதன் என்ன எதிர்வினையாற்றுவான்? என்பதைச் சொல்வதே அழகிய பெரியவன் கதைகள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வைப் பேசும் இச்சிறுகதைகள் வலிகளால் நிரம்பியவை. கிராமத்து மக்களின் வாழ்வினை அவர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளை அற்புதமான கணங்களைச் சித்திரிக்கும் இச்சிறுகதைகள் சமூகத்தில் புரையேறிப்போன சாதிய ஒடுக்குமுறைகளை விபரித்துச் செல்கின்றன. கண்ணீரோடு வலிகளைச் சுமந்துவரும் அடிநிலை மக்களின் வாழ்வியல் துயரங்களை வெளிப்படுத்தி நிற்கும் இச்சிறுகதைகள் தலித் மக்களின் விடுதலை சார்ந்த போராட்டக் குரலாகவும் ஒலிக்கின்றன.

**ஆதாரங்கள்:**

1. அலெக்ஸாண்டர் என்ற கிளி - எஸ். செந்தில்குமார் உயிர்மை, 2014

2. விலகிச் செல்லும் பருவம் - எஸ். செந்தில்குமார் காலச்சுவடு, 2009

3. வீடென்ப.... தேவிபாரதி காலச்சுவடு, 2013

4. பிறகொரு இரவு - தேவிபாரதி காலச்சுவடு 2009

5. முதல் தனிமை - ஜேபி சாணக்யா காலச்சுவடு, 2013

6. என் வீட்டின் வரைபடம் - ஜே. பி. சாணக்யா காலச்சுவடு, 2002 - முதல் பதிப்பு - மூன்றாம் பதிப்பு 2013

7. அழகிய பெரியவன் கதைகள் - நற்றிணை பதிப்பகம், 2013

8. *The Basic Writings Of CG Jung Ed With An Introduction By Violet Stub De Laszlo The Modern Library* 1959

9. *Namdev Dhasal , From Golipitha,* 1972

10. அனார்கலியின் காதலர்கள் - எஸ். செந்தில்குமார் உயிர்மை, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரத்துக்குப் பின்னர் ஈழத்துச் சிறுகதைகள்

சி.ரமேஷ்

சொற்செறிவும் வடிவ நேர்த்தியும் நெகிழ்சியான கதைப்பின்னலும் திருப்பத்தை மையமாகவும் கொண்டு இயங்கும் சிறுகதை புத்திலக்கிய வடிவங்களில் ஒன்று. தொன்மையான சமூக அமைப்புக்கூடாகக் காலத்துக்கு காலம் கிளர்த்தப்பட்ட வாய்மொழிப் பாரம்பரியத்தில் கதை சொல்லல், கதை கேட்டல் என்னும் மரபுகள் வலுவாக இருந்துள்ளன. சமூகப்புலத்தில் அறிவு மற்றும் அனுபவம் சார் கையளிப்புக்களில் கதை சொல்லிகளின் வகிபாகம் முக்கியமானதாக இருந்துள்ளன. வட இந்தியாவில் இவர்கள் 'கதகர்'', 'பட்'' என்றும் அழைக்கப்பட்டனர். அதே போல் இலங்கையின் வடபுலத்தில் இவர்கள் 'கதைகட்டிகள்'', ''நவசிகள்'' என்றும் அழைக்கப்பட்டனர். தமிழ் மொழியில் கதை என்பது கட்டு, குறிப்பு, கிளவி, புனைவு, கதானகம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது.

தொல்காப்பியத்தில் இடம்பெறும் 'பொருளோடு புணர்ந்த பொய்ம்மொழி'' (செய்யுளியல் நூற்பா.171) என்ற தொடர் அக்காலத்திலும் தமிழில் புனைகதை மரபொன்று இருந்துள்ளமையை எடுத்துக் காட்டுகிறது. புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் முதலான இலக்கியங்கள் பெருங்கதையாடலுக்கூடாகக் கிளைக்கதைகளையும் கூறிச் சென்றன. இக்கதைகள் குடும்பச் செல்வங்களாக வழிவழியாக சொல்லப்பட்டு வந்த வாய்மொழி இலக்கியங்களுக்கூடாகவே தம்மை நிலைப்படுத்திக் கொண்டன. பழந்தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றாகிய கலித்தொகையில் இடம்பெறும் பல பாடல்கள் சிறுகதை போன்றே காணப்படுகின்றன. ''சிறுகதைக்குரிய எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்பன முறையே தரவு, தாழிசை, சுரிதகம் ஆகியவற்றில் அமைந்திருப்பதைக் காணலாம்'' என்பார் பேராசிரியர் மா.இராமலிங்கம். தமிழ்ச் சிறுகதை இலக்கியத்துக்கு முன்னோடியாக அமைந்த கதைகளாக 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குருகதையையும் 19ஆம் நூற்றாண்டில் வீராசாமிச்செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரியையும், தாண்டவராஜமுதலியாரால் மொழிபெயர்க்கப்பட்ட பஞ்சதந்திரக் கதைகளையும் கூறலாம்.

மேனாட்டார் வருகையைத் தொடர்ந்து உரைநடை வாயிலாகத் தமிழில் புகுந்த புனைகதைகள் பாரம்பரியக் கதைகளில் இருந்து வேறுபட்டவை. ''புனைகதை (*Fiction*) எனப்படும் இலக்கியவகை மேனாடுகளில் நிலமானிய அமைப்புச் சிதையத் தொடங்கிய காலத்தில் எழுந்த இலக்கியமாகும். பொருளாதார நிமித்தம் தோன்றிய புதிய சமூக உறவுகளை எடுத்துக்காட்டத் தோன்றிய இலக்கிய வடிவமே புனைகதை'' என்பார் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

### ஈழத்து ஆரம்பகாலத் தமிழ்ச் சிறுகதைகள்

ஈழத்தில் சிறுகதை வரலாறு 'உதயதாரகை'' பத்திரிகையுடன் தொடங்குகிறது. இதன் ஆசிரியர்களில் ஒருவரான ஜே.ஆர். ஆனோல்ட் சதாசிவம்பிள்ளை அறக்கருத்துக்களை முன்னிலைப்படுத்தி இவ்விதழில் சிறுகதைகள் பலவற்றை எழுதினார். இவரெழுதிய சிறுகதைகள் 'நன்னெறிக்கதா சங்கிரகம்' என்னும் பெயரில் தொகுப்பாக வெளிவந்தது. பெ.கோ.சுந்தரராஜனுடன் சோ.சிவபாத சுந்தரம் இணைந்து எழுதிய 'தமிழ் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' என்னும் நூலில் தமிழ் சிறுகதை முன்னோடியாக ஆனோல்ட் சதாசிவம்பிள்ளையே கருதப்படுகிறார். இதனைத் தொடர்ந்து பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணம்பிள்ளை அவர்களால் கதாசிந்தாமணி(1875) என்னும் கதைத் தொகுதியும் தம்பிமுத்துப்பிள்ளை அவர்களால் ஊர்க்கதைகள் தொகுதியும் ஐதுருஸ் லெப்பை மரைக்கார் என்பவரால் 'ஹைதர்சா சரித்திரம்' என்னும் தொகுதியும் வெளிவந்தன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவப்பிரக்ஞையுடன் எழுதப்பட்ட ஈழத்துச் சிறுகதைகள் கடந்தகால வரலாற்றுச் சம்பவங்களை உணர்த்துவதுடன் புராண, இதிகாச சம்பவங்களுடன் தொடர்புபட்டதாகவும் காணப்பட்டன. இலங்கையர்கோனால் எழுதப்பட்ட மரிய மகதலேனா,. சி.வைத்தியலிங்கத்தினால் நெடுந்தீவுக் கடற்கோட்டையின் வரலாற்றுச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்ட பூதத்தம்பிக்கோட்டை, சம்பந்தனின் மராட்டிய மன்னனான வீரசிவாஜியின் படைவீரர்களில் ஒருவரான பிரதாப்ராவின் காதலியான தாராபாயின் நாட்டுப்பற்றைச் சித்திரிக்கும் தாராபாய் முதலான சிறுகதைகள் இத்தடத்திலேயே பயணிக்கின்றன. சமய கலாசாரநிகழ்வுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் எனப் பிரதேச மண்வாசனையுடனும் ஈழத்துச் சிறுகதைகள் எழுதப்பட்டன. இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன், நவாலியூர் சோ.நடராஜன், பவன், சுயா, சோ.சிவபாதசுந்தரம், ஆனந்தன், பாணன் முதலானோரின் கதைகளிலும் பிரதேசப்பண்புகள் நிறைந்திருந்தன.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றினை கருத்தியல்புகளை அடிப்படையாகக் கொண்டு 1930 -1949 வரையான காலப்பகுதியைச் சமுதாயச் சீர்திருத்தக் காலம் என்பர். சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை முதன்மைப்படுத்தி சிறுகதைகள் எழுந்த காலமாக இதனைக் கூறுவர். சாதியக் கொடுமை, மூடநம்பிக்கைக்கு எதிராகவும் அறக்கருத்துக்களை வலியுறுத்தியும் இலக்கியம் எழுந்த காலமாக இதனைக் கூறுவர். யாழ்ப்பாண பேச்சு வழக்கை முன்நிறுத்தி மண்வாசனையுடன் இக்காலத்தில் சிறுகதைகளை எழுதியவர்களாக அ.செ.முருகானந்தன், கனக.செந்திநாதன், அ.ந.கந்தசாமி, தாளையடி சபாரத்தினம், சு.வேலுப்பிள்ளை முதலானவரைக் கூறலாம். இக்காலப்பகுதியில் மலையக மக்களின் வாழ்வைத் தம் சிறுதைகளில் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களாக சி.வி.வேலுப்பிள்ளை, கோ.நடேசையர், கே.கணேஸ் போன்றோரைக் கூறலாம்.

1950-1960 காலப்பகுதியாகிய முற்போக்குக் காலத்தில் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு சிறுகதைகள் தோன்றின. சாதியம், வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றை ஒழிக்கும் வகையில் தம்படைப்புக்களை முன்நிறுத்திய படைப்பாளிகள் இனமுரண்பாடுகளை முன்னிறுத்தியும் சிறுகதைகளைப் படைத்தனர். மக்கள் அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் சமூகச் சிக்கல்களை உள்வாங்கியும் இக்காலப்பகுதியில் கதைகள் எழுதப்பட்டன. மு.தளையசிங்கம், எஸ்.பொன்னுத்துரை, கனக.செந்திநாதன், வ.அ.இராசரத்தினம், சொக்கன் முதலானோரால் எழுதப்பட்ட சிறுகதைகள் மக்களையும் மண்ணையும் குவிவுபடுத்துவதோடு நில்லாது தமிழ்தேசியத்துக்கு அணிசேர்ப்பனவாகவும் நின்றன. இனமுரண்பாடுகள் கூர்மை பெற்றநிலையில் அதனை முன்னிறுத்தி புதுமைப்பிரியையின் 'அப்பே லங்கா' (கலைவாணி -பொங்கல்மலர் 1957) சிறுகதை வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம் நிகழ்ந்தபோது அதன் வன்முறையை முன்னிறுத்தி அ.செ.முருகானந்தனின் 'தந்தைமொழி' ஈழகேசரி 1956 வெள்ளிவிழா மலரில் வெளிவர 1958



இனக்கலவரத்தால் தமிழர் எதிர்நோக்கிய அல்லற்பாடுகளை ஈழத்துச்சோமுவின் யாழ்நகர் நாகவிகாரையும் மாலதியின் அத்தானின் கண்ணீரும் சித்திரித்து நின்றன. தென்பகுதி இனக்கலவரத்தால் தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும் வட பகுதியில் சிங்களவர் பாதிக்கப்படவில்லை என்பதை நாகவிகாரையோடு தொடர்புபடுத்தி ஈழத்துச்சோமுவின் பண்டாவின் பேக்கரி கூறுகிறது. இதுபோல கலவரத்தில் பொலநறுவையில் மனைவிக்கு நிகழ்ந்த வன்கொடுமையை மாலதியின் சிறுகதை (1959.05.10)கூறி நிற்கிறது. நவத்தின் நந்தாவதி, பலாத்காரம், மாந்தோப்பு, வரதரின் கயமை மயக்கம், கற்பு, வீரம், முல்லைமணியின் அரசிகள் அழுவதில்லை முதலான சிறுகதைகள் இத்தடத்திலேயே தொடர்ந்தும் பயணித்தன. பெண்ணிய விடுதலைக் கருத்துக்கள் முதன்மை பெற்ற காலமாகவும் இக்காலத்தைக் குறிப்பிடலாம். பவானி ஆழ்வாப்பிள்ளையின் மன்னிப்பாரா கதை கலைச்செல்வியில் வெளியானபோது அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த ஒழுக்கவியல் கோட்பாட்டை இச்சிறுகதை தகர்க்கிறது. 1950களில் மலையக மக்களின் வாழ்வைப் பிரதிப்பலிக்கும் சிறுகதைகளை மாத்தளை அருணேசர், டீ.எம்.பீர் முஹம்மது, ஏ.எஸ்.வடிவேலு, ரபேல், பொ.கிருஸ்ணசாமி முதலானோரும் எழுதியுள்ளார்கள். 1961-1983 வரையான காலப்பகுதியில் ஈழத்துச் சிறுகதைகளில் சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்கள் ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றின. புரட்சிகரமான சிந்தனைகள் கோலோச்சிய புத்தெழுச்சிக்காலத்திலே தேசம், தேசியம் பற்றிய கருத்துநிலைவாதங்கள் முக்கியத்துவம் பெற்றன. சோசலிச சித்தாந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வர்க்க ஏற்றத் தாழ்வுகளை முற்றாகத் தகர்க்கும் நோக்குடன் இக்காலப் பகுதியில் எஸ்.அகஸ்தியர், டொமினிக்ஜீவா, நீர்வை பொன்னையன், செ.கணேசலிங்கன், காவலூர்ஜெகநாதன், பெனடிக்பாலன், சொக்கன் முதலியோர் கதைகளை எழுதினர். தனிமனித, குடும்ப, சமூக உறவுச் சூழல்களில் நிகழும் பிரச்சினைகள், முரண்பாடுகள், போலித்தனங்கள் முதலானவற்றை கதையம்சங்களாகக்கொண்டு நந்தி, வரதர், செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், துருவன் (க.பரராஜசிங்கம்), குந்தவை, அங்கையன் முதலியோர் சிறுகதைகளைப் படைத்தனர். யதார்த்த நோக்கும், முற்போக்குச் சிந்தனையும் மனிதநேயமும், நம்பிக்கை மனோபாவமும் கொண்ட சிறுகதைகளை வ.அ.இராசரத்தினம், நந்தினி சேவியர், என்.எஸ்.எம். ராமையா, முனியப்பதாசன், தெளிவத்தை ஜோசப், தெணியான், யாழ்நங்கை, சாந்தன், அ.யேசுராசா, கே.ஆர். டேவிட், கோகிலாமகேந்திரன், மு.சட்டநாதன், ப.ஆப்டீன், குப்பிளான் ஐ.சண்முகம், ச.முருகானந்தன், சுதாராஜ், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், க.தணிகாசலம், புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், செ.குணரத்தினம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முதலான பலர் எழுதினர். இனமுரண்பாடுகளை கூர்மைப்படுத்திக் கூறுகின்ற கதைகளும் இக்காலத்தில் தோன்றின. செ.குணரத்தினத்தின் உள்ளத்தால் கெடாதவன், முருகுவின் புத்தபிரான் ஏன் ஓடுகிறார், காவலூர் ஜெகநாதனின் புத்தனின் ஊர்வலம் முடிகின்றது, காவலூரனின் பட்ட காலிலே, வளவனின் சுமை தாங்கிகள் முதலான சிறுகதைகள் இலங்கையில் யுத்தம் காவு கொண்ட உயிரிழப்புக்களையும் பொருள் அழிவுகளையும் தமிழருக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகளையும் பேசிநிற்கின்றன. தனிப்பட்ட பகைமைக்காக சிங்களவரால் பழிவாங்கப்படுகின்ற தமிழரை மனிதாபிமானத்தோடு காக்கின்ற சிங்கள மக்களின் மனோநிலையை சாந்தனின் என் நண்பன் பெயர் நாணயக்கார சிறுகதையும் பயங்கரவாதத்தால் மனிதரின் இயல்பு நடத்தை மாறும் என்பதை போக்கு சிறுகதையும் எடுத்துரைக்கின்றன. மாத்தளை வடிவேலனின் அக்னி சிறுகதை மலையகத்தில் இனவன்முறையால் மக்கள் வாழும் லயம் எரிக்கப்பட்ட செய்தியைக் கூறிநிற்கிறது. போர்ச்சூழலில் மக்களின் வாழ்வில் பங்கர் பெறும் முக்கியத்துவத்தை நந்தியின் பதுங்குழி எடுத்துரைக்கிறது. சமூகத்தின் புறநிலையில் தோன்றுகின்ற முரண்பாடுகள், போலித்தனங்கள், ஆசாபாசங்களை வெளிப்படுத்தும் நோக்கிலும் இக்காலத்தில் சிறுகதைகள் எழுதப்பட்டன. நந்தியின் ஒரு இரவும் ஒரு பகலும் என்ற சிறுகதை உயர் பதவி வகித்து ஓய்வு பெற்ற ஒருவர் சமயப் போர்வைக்குள் தன் அந்தஸ்த்தைக் காப்பாற்றிக் கொள்ளும்நிலையை அங்கதமாகச் சித்திரிக்கிறது. மலையகத்தில் தோட்டத்தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை செந்தூரனின் உரிமை எங்கே? என்.எஸ்.எம். இராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து, பிஞ்சுக்குவியல், வேட்கை, தரிசனம் தெளிவத்தை ஜோசப்பின் படிப்..பூ, செந்தூரனின் நடுக்கடலில், நந்தியின் ஊர்நம்புமா முதலான சிறுகதைகளும் வெளிப்படுத்தி நின்றன. அதிகார வர்க்கத்தாலும் சமூகப் புன்மைகளாலும் சீரழியும் மலையக மக்களின் வாழ்வை இச்சிறுகதைகள் கூறிநிற்கின்றன. அன்றாட வாழ்வில் மனிதர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கும் குடும்பங்களின் வாழ்க்கைப் போக்குகளையும் இச்சிறுகதைகள் எமக்குணர்த்தி நிற்கின்றன. ஈழத்தில் கிழக்கு மாகாணப் படைப்பாளிகள் பலர் மண்வாசனையோடு சிறுகதைகளைப் படைத்தனர். மருதமுனைக் கிராமத்தையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் தம் படைப்புக்களில் சாத்தியப்படுத்தியவர்களாக மருதூர்கொத்தன், மருதூர்க்கனி முதலானவர்களைக் கூறலாம்.. பெரிய கட்டியத்துடன் தொடங்கப்படும் கொத்தனின் சிறுகதைகளில் விவரணைகள் அதிகம் இருக்கும். முற்போக்கு எழுத்தாளர் பண்ணையில் இருந்து உருவாகிய மருதூர்க்கனியின் இக்காலக்கதைகள் மனித வாழ்க்கையின் நம்பிக்கையின் ஒளியாக விளங்குகின்றன. ஆரையம்பதி தங்கராசுவின் கதைகளும் மட்டக்களப்பு மண்வாசனையோடு கூடியவை. எஸ்.பொவின் சிறுகதைகள் தனித்துவமாகத் துலங்குபவை. டொமினிக் ஜீவா, டானியல் கதைகளைப் போலன்றி உணர்திறன் கொண்ட செய்நேர்த்திமிக்க கதைகளை எழுதினார். காமமும் குரோதமும் நிறைந்த எஸ்.பொ.வின் சிறுகதைகள் மனிதனின் வற்றாத ஆசைகளைப் பிரதிபலிப்பவை. இக்காலப்பகுதியில் எழுந்த சண்முகம் சிவலிங்கத்தின் சிறுகதைகள் தன் அனுபவத்தில் கட்டுண்டவை. ஆயுதக் குழுக்களின் எழுச்சியையும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் விடுதலைக்கான உணர்வையும் கட்டியம் கூறும் திசைமாற்றம் சிறுகதை தமிழ்த் தேசியப்பின்னணியில் எழுதப்பெற்ற சிறுகதையாகும். மண்டூர் அசோகா, எம்.ஏ.நுஃமான், ஏ.இக்பால், வேதாந்தி, அன்புமணி, திமிலைத்துமிலன், எம்.எம்.பாரூக் முதலானவர்களின் சிறுகதைகளும் கிழக்கு மாகாண மக்களின் யதார்த்த வாழ்க்கையைச் சித்திரிக்கும் கதைகளாகும். மக்களின் வாழ்க்கையிலுள்ள மனித நேய ஒளிக் கீற்றுகளைத் தம் சிறுகதைகளில் நிகழ்தரிசனமாகச் சித்திரித்தவர்களில் ஒருவர் வ.அ.இராசரத்தினம். உலகில் உழைப்பவனுக்கு

**1983க்குப் பின்னருள்ள காலப்பகுதியை தமிழ்த் தேசியவுணர்வுக்காலம் என்று வரையறுப்பர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறுகதை என்பது ஒரேயொரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனிச் சம்பவத்தைப் பற்றியோ அல்லது ஒரு தனி உணர்ச்சி தரும் விளைவையோ எடுத்துக் கூறும் இலக்கிய வடிவம்" என்பார் பிராண்டர் மத்தியூஸ்.

எதுவும் சொந்தமில்லை என்பதை உணர்த்துகின்ற தோணி சிறுகதையும் பணத்துக்கு இருக்கிற மதிப்பு உறவுக்கில்லை என்பதை வலியுறுத்தும் தாய் சிறுகதையும் விடிவேயில்லாத வறிய விவசாயியைச் சித்திரிக்கும் அறுவடை சிறுகதையும் மனைவியைப் பிரிந்து வாழும் கணவனின் அவஸ்தைகள் தவிப்புக்களை வெளிப்படுத்தும் அவசரம் சிறுகதையும் வ.அ.வின் காலத்தால் அழியாத சிறுகதைகள் ஆகும்.

1983க்குப் பின்னருள்ள காலப்பகுதியை தமிழ்த் தேசியவுணர்வுக்காலம் என்று வரையறுப்பர். யூலைக் கலவரத்தை அடுத்து தமிழ் ஈழப்போராட்டம் முனைப்பு பெற்ற சூழலில் யுத்தத்தையும் யுத்த அவலங்களையும் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதைகள் எழுந்தன. உயிரழிவுகள், இடம்பெயர்வு, புலம்பெயர்ந்த மக்களின் துயரங்கள், காணாமல் போனோர், அங்கவீனம், உள, உடல் பாதிப்புக்கள் முதலான துயரங்களின் வடுக்களாகவே ஈழத்தில் சிறுகதைகள் முகம் பதித்தன. தமிழ், முஸ்லிம் மக்களின் ஆறாத ரணங்களை ஈழத்துச் சிறுகதைகள் சுமந்து வந்தன. சாந்தனின் 'கிருஷ்ணன் தூது', செ.யோகநாதனின் 'வீழ்வேனென்று நினைத்தாயோ' முதலான சிறுகதைத் தொகுப்புக்கள் இதனைச் சாத்தியமாக்கின.

தேசியவுணர்வு வலுப்பெற்ற நிலையில் எதனையும் பூடகமாகச் சொல்ல வேண்டிய தேவை இருந்தமையால் நவீன இலக்கிய உத்திகளை உள்வாங்கி புதிய புனைகதை மரபொன்று 1990களில் தோன்றலாயிற்று. மனிதப் பண்பினை மையமாகக் கொண்ட'கதையாடல்' புனைகதைவடிவமாகத் தன்னைத் தகவமைத்துக் கொண்ட நிலையில் வாசகப்புலம் - கருத்துமையம் முதலானவற்றைச் சிதைத்து கதைசொல்லும் புதியநிலை ஈழத்தில் உருவானது. சிறுகதை மொழிச்செயற்பாட்டினுடைய இயங்குதளமாக மாறிவரும் இன்றைய யதார்த்த இயங்கியலில் கதைசொல்லியால் புனைந்துருவாக்கப்படும் பொருண்மை, அமைப்பாக்கம் மற்றும் உருச்சித்திரிப்பு முறைகள் நவீன சிறுகதைகளை வடிவமற்ற வடிவமாக மாற்றியுள்ளன. கதைகளில் ஏற்பட்ட மாற்றமும் உணர்திறன் முறைமையால் கதைகளை உணர்ந்து கொள்வதில் ஏற்பட்ட மாற்றமும் எடுத்துக் கூறப்படும் மொழியில் ஏற்படும் மாற்றமும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் உருவ, உள்ளடக்க எல்லைகளை அகலிக்கச் செய்தன. தொடக்கம், மையம், முடிவு என வலிமையான ஒற்றை மொழி கிளைதலில் உருவாகும் யதார்த்தவகையான எழுத்துமுறை, வாசகர்க் கருத்துப் புலத்தில் ஈர்ப்பினை நோக்கியதொன்றாக அமையாதநிலையில் கதைப்படுத்தல், கதையாடல் முறைக்கூடான பொறிவழி எழுத்து முறையானது 'சொல்லுதலின் மொழியை'ச் சாத்தியமாக்கியது. புலம்பெயர் சூழலில் 1990களின் பிற்பகுதியில் கலாமோகனின் சலிப்பு, சக்கரவர்த்தியின் பிசாசுகளின் வாக்குமூலம் முதலானவை கதைகள் இத்தளத்தில் இயங்கின. அச்சுறுத்தல் மிகுந்த சூழலில் மக்கள் எதிர் கொண்ட போரையும் அதனால் ஏற்பட்ட வலியின் பாடுகளையும் பேசும் ஈழத்துச் சிறுகதைகள் சிதைந்து போன தமிழ் மக்களின் வாழ்வின் அழிவுகளை வெளிப்படுத்துபவையாக அமைந்தன. ரஞ்சகுமாரின் மோகவாசல், திருக்கோவில் கவியுகனின் வாழ்தல் என்பது உமாவரதராஜனின் உள்மன யாத்திரை, செங்கை ஆழியானின் யாழ்ப்பாணத்து ராத்திரிகள், சாந்தனின் கிருஷ்ணன் தூது, அ.யேசுராசாவின் 'தொலைவும் இருப்பும், சட்டநாதனின் மாற்றம் முதலான தொகுப்புக்கள் ஈழத்துச் சிறுகதையிலக்கியத்தின் சரித்திரத்தை புரட்டிப் போட்ட தொகுப்புக்கள் ஆகும். இக்கதைகள் சமூகமாந்தர்களை இயல்பான கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தும் இயல்பு கொண்டவை. ரஞ்சகுமாரின் மோகவாசல் தொகுப்பு கலாபூர்வமான கலைப்படைப்புகளில் ஒன்று. தமிழீழ விடுதலை இயக்கங்கள் எழுச்சி பெற்ற சூழலில் ரஞ்சகுமார் எழுதிய கோசலை சிறுகதை அம்மாவுக்கும் மகன்களுக்கும் இடையிலான அன்பையும், ஏக்கத்தையும் மிகக்கூர்மையாகக் கூறிச்செல்ல சிங்களத் தீவிரவாத இயக்கத்தின் செயற்பாட்டை கபரக்கொய்யாவும் எடுத்துரைத்தன. பெண்ணின் ஆளுமையை பலம் பலவீனத்துடன் வெளிப்படுத்திய சிறுகதையாக அரசி காணப்படுகிறது. தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஈழத்தில் வேரூன்றிய காலப்பகுதியில் எழுதப்பட்ட இவருடைய கோளறு பதிகம் இயக்கங்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டையும் அதனால் விளைய இருக்கும் ஆபத்துக்களையும் சுட்டி நிற்க காலம் உனக்கொரு பாட்டெழுதும் சிறுகதை யதார்த்த வாழ்வுக்கூடாக இயக்க வாழ்வுக்காய் தங்களை அர்ப்பணித்த இளைஞர்களின் மகத்தான தியாகத்தையும் வெளிப்படுத்திநிற்கின்றன.

வாழும் சூழலோடு தனக்கிருந்த ஆத்ம திருப்தியை, அதிருப்தியை வாழ்வியல் அனுபவங்களை சிறுகதைகளாக மாற்றிய ஆளுமைகளில் ஒருவர் உமாவரதராஜன். ஈழத்து அரசியலைக் கிண்டலும் கேலியுமாக சிறுகதைகளில் வெளிப்படுத்தியவர்களுள் உமாவரதராஜனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர். அதிகார வன்முறைக்குள் உழன்று தவிக்கும் மக்களின் பாடுகளைக் கூறும் 'அரசனின் வருகை' மிக நேர்த்தியான குறியீட்டு உத்தியை உள்வாங்கி எழுதப்பட்ட சிறுகதையாகும். நகர்ப்புற மத்தியதர மக்களின் வாழ்க்கை முறைகளையும் தனிமனித மனத்தின் உட்சிடுக்குகளையும் அது தரும் வேட்கையையும் எரிச்சலையும் அச்சத்தையும் நுண்ணுணர்வுத் தடத்தில் பதிவு செய்யும் வரதனின் சிறுகதைகள் கச்சிதமான வடிவ நேர்த்தியைக் கொண்டவை. ஆறுமாதம் கழித்து வீடு திரும்பும் கதைசொல்லியின் அகப் புறவயச் சம்பவங்களுக்கூடாக நகரும் தொலைவில் தெரியும் ஒற்றை நட்சத்திரம் சிறுகதை, சமூகத்தில் பொது மனிதர்களோடு ஒட்டி வாழ விரும்பாது மனதால் விலகி நிற்க விரும்பும் இளைஞனின் மனோநிலையைத் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கிறது. இதுபோல ஜெனி, அப்பா இல்லாத ஊரில், மாலைசூட்டிகள் முதலான சிறுகதைகளும் சம்பவங்களைக் கோவைப்படுத்தியே நகர்கின்றன. அப்பா இல்லாத ஊரில் சிறுகதை தகப்பனின் ஊரைப் பார்க்கச் சென்ற மகனின் நினைவோட்டத்தை நுண்மனவுணர்க்கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது. உமாவரதராஜனின் இக்கதைகள் பாசாங்கான மனிதர்களின் போலி முகங்களை நக்கலும் நையாண்டியுமாக வெளிப்படுத்துகின்றன.

வாழ்க்கை குறித்தான அனுபூதி நிலையில் கட்டுறும் திருக்கோவில் கவியுகனின் சிறுகதைகள் வாழ்வின் மீதான சலிப்பையும் அதிருப்தியையும் தருவன. காலச்சுழலில் அலைக்கழிக்கப்பட்ட மனத்தின் ஆறாத ரணங்களை, சோகத்தைப் பேசும் இச்சிறுகதைகள் மனித மனவோட்டத்தின்வழி அக்காலச்சூழலையும் பதிவு செய்கிறது. சகோதரப்படுகொலைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகள், கைதுகள் முதலானவற்றைப் பேசும் இவரின் வாழ்தல் என்பது என்ற சிறுகதைத் தொகுப்பு தனிமனித அநுபவங்களில் கட்டுண்ட சமூக வரலாற்று ஆவணப் பதிவாகும். பிள்ளைக்கால அநுபவச்சித்திரிப்பாக விரியும் செவ்வந்தி சிறுகதை தகப்பனைச் சுட்டதால் நிர்க்கதியான குடும்பமொன்றின் அல்லற்பாடுகளையும் தகப்பனை இழந்த அநாதரவாக விடப்பட்ட சிறுவனின் துயரத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது. வாழ்தல் என்பது விடுதலைப் போராட்டச் சூழலில் பரீட்சை எடுக்க வேண்டிய அண்ணாவை வழியனுப்பிவிட்டு வரும் தம்பியின் வலியைச் சித்திரிக்கிறது. ஆழமான உணர்வுச்சித்திரிப்புகளுக்கூடாக நகரும் இக்கதைகள் வாழ்வின் தரிசனத்தை பாடுகளுக்கூடாகக் காட்சிப்படுத்திச் செல்கின்றன.

முற்போக்கு சிந்தனாவாதியும் மனித நேயப் படைப்பாளியுமான ப.ஆப்தீன் 1960களில் மல்லிகையில் ஊன்றுகோல் சிறுகதை வாயிலாக அறியப்பட்டவர். இவருடைய சிறுகதைகள் சாதாரண முஸ்லிம் மக்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுபவை. இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு இரவின் இராகங்கள் சிறுகதைத் தொகுப்பு மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து நாம் பயணித்த புகை வண்டி, கொங்காணி முதலான தொகுப்புக்கள் வெளிவந்தன. ஏழை விவசாயிகள், மலையகத் தோட்டத் தொழிலாளர்களை மீனவர்களை என உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை முறைகளைத் தம் சிறுகதைகளில் காட்டிச் சென்றவர். இவருடைய பெரும்பாலான சிறுகதைகள் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பேசுகின்றன. சுரங்கப்பாதை, அந்த வண்டியின் ஓட்டம் முதலான சிறுகதைகள் மலையக முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை எமக்குணர்த்தி நிற்கின்றன. இவரது கொங்காணி எனும் சிறுகதைத் தொகுப்பு மலையக மக்களின் வாழ்வியலை அவர்களின் பேச்சுவழக்குச் சொற்களுக்கூடாக உணர்ச்சிபூர்வமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

பலாத்காரம் சிறுகதைத் தொகுப்பின் வாயிலாக கவனத்தைப் பெற்ற சுதாராஜ் தெரியாத பக்கங்கள், மனைவி மகாத்மியம், மனித தரிசனங்கள், உயிர்க்கசிவு, சுதாராஜின் சிறுகதைகள் தொகுப்புக்களின் வாயிலாகவும் அறியப்பட்டவர். நம்பிக்கையின் சுடரொளியாகத் துலங்கும் சுதாராஜின் சிறுகதைகள் வாழ்க்கையில் மனிதர்கள் எதிர்கொள்ளும் குடும்பச்சிக்கல்களைப் பேசுகின்றன. முதிர்கன்னியரையும் மனிதாபிமானமற்ற எஜமானர்களையும் இனவெறியின் கொடுமைகளையும் வரதட்சனை கொடுக்க வழியற்று இரண்டாம் தாரமாகச் செல்லும் பெண்களின் மனவோட்டங்களையும் முதியோர் இல்லங்களில் முதியோர் அநுபவிக்கும் மன நெருக்கடிகளையும் சித்திரிக்கும் சுதாராஜின் சிறுகதைகள் மனித அவலங்களை நிதர்சனமாக வெளிப்படுத்தி நிற்பவை. அழிவின் வலிகளையும் இனச்சுத்திகரிப்பினால் விளையும் துயரையும் காவிச்செல்லும் இச்சிறுகதைகள் மனித மாண்பையும் சமூகப் பண்பாட்டு விழுமியங்களையும் வாசகருக்கு விதைத்துச் செல்பவை. உயிரும் உணர்வும் மிக்க வாழ்க்கை அநுபவங்களைத் தம் சிறுகதைகளில் தந்தவர் சுதாராஜ்.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையுலகில் தனக்கெனத் தனி அடையாளத்தைப் பதித்த ஒருவர் சட்டநாதன் ஆவார். எழுபதுகளில் படைப்புலகில் அடியெடுத்து வைத்த அவர், அரை நூற்றாண்டுக் காலப்பகுதியில் எழுதியவை அதிகம். இவருடைய பலகதைகள் வடிவம் சார்ந்து கலைநேர்த்தியுடன் எழுதப்பட்டவை. ஆழ்ந்த மனித நேயத்தில் முகிழும் சட்டநாதன் கதைகள் மனித வேட்கையுடன் தொடர்புடையவை. இவருடைய உறவுகள், மாற்றம், இப்படியும் காதல் வரும், வித்தியாசமானவர்கள் ஆகிய சிறுகதைகள் சமூக அசைவியக்கங்களுக்கிடையே மனித உறவுகளில் நிகழும் பிரச்சினைகளை நுட்பமாகச் சித்திரிக்கின்றன. மனைவியிடம் கிட்டாத தாம்பத்திய சுகத்தைத் தாழ்த்தப்பட்ட குலப் பெண்ணொருத்தியிடம் எய்தும் தடிச்ச சாதிமான் ஒருவரின் கதையாக விரியும் மாற்றம் சாதியுணர்வு தொடர்பாக நிகழும் மாற்றத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தி நிற்க கிராமியக் களத்தின் இளைய தலைமுறையினர் கல்வி வளர்ச்சியின் உயர்வினை உறவுகள் சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. எதிலும் அவசரம் கொண்ட ஆணொருவனின் மனவக்கிரத்தை உறவுகள் எடுத்துரைக்க உலா, அரும்புகள் முதலான சிறுகதைகள் சிறுவர் உளநிலையில் ஏற்படும் மாற்றம் தாக்கத்தை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்திய அமைதிப்படையினர், சிங்கள ராணுவம் ஆகியவற்றின் ஆக்கிரமிப்புச் சூழலில் இலங்கையில் தமிழர்கள் எதிர்கொண்ட சிக்கல்களை கவளம், நகர்வு, பக்குவம், திருப்தி முதலான சிறுகதைகள் கூறிநிற்கின்றன. இந்திய அமைதிப்படையின் கொடுஞ் செயலுக்குப் பலியாகும் ஒரு அப்பாவி முதியவரின் அவலக்கதையே கவளம். போர்ச் சூழலில் அகால மரணத்தைத் தழுவிக் கொண்டவரின் இறுதி நிகழ்வுக்கு சென்று மீளும் ஒருவரின் மனப்பதிவை பக்குவம் சிறுகதையும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு அஞ்சிய தீவகமாந்தரின் இடம்பெயர்வை நகர்வு சிறுகதையும் உணர்த்தி நிற்கின்றன. மனிதநேயமிக்க ஏற்றத்தாழ்வற்ற சுபீட்சமான நல்வாழ்வை அவாவிநிற்கும் உலகை, சட்டநாதன் கதைகள் எமக்குணர்த்தி நிற்கின்றன. வர்க்கப்பாத்திரத்தின் பங்காளியான தெணியான் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். கதை மாந்தர்களை மனிதநேயத்தோடு படைத்து தன் சிறுகதைகளில் உலாவ விட்ட தெணியான் சாதியத்தின் பெயரால் தொடர்ந்து மக்கள் நசுக்கப்படுவதையும் அவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுவதையும் தன் சிறுகதைகளில் பதிவு செய்தவர். தெணியானின் இன்னுமா சிறுகதை இராணுவக் குண்டு வீச்சினால் மக்கள் வீடுகள் தகர்ப்பட்ட நிலையிலும் உயர்சாதியினர் தமது சாதித்தடிப்பை விட்டுக் கொடுக்கவில்லை என்பதை உணர்த்தி நிற்கிறது. எண்பதுகளின் நடுக்கூற்றில் வெளிவந்த தெணியானின் எழுத்துக்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்கள், வேதனைகள், மக்களின் கலகக்குரல்களைக் காணலாம். வாழ்வு மறுக்கப்பட்ட மக்கள் தம் உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டத்தையும் இவரின் சிறுகதைகள் உணர்த்தி நிற்கின்றன. அன்றைய காலகட்டத்தில் டானியல், டொமினிக் ஜீவா, கே.ஆர். டேவிட் முதலானோரின் சிறுகதைகளிலும் சத்திய ஆவேசத்தின் கலகக்குரலைக் காணலாம். சமூகத்தில் நிகழும் போலித்தனங்களையும் பொதுப் புத்தியற்ற மனிதர்களின் ஈனத்தனங்களையும் இவர்களின் கதைகள் சித்திரித்தன.

நீர்வைஞானி என்னும் புனைபெயரில் எழுதிய முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரான நீர்வை பொன்னையன் 1961 இல் மேடும் பள்ளமும் என்ற சிறுகதைத் தொகுப்பின் வாயிலாக நன்கறியப்பட்டவர். 1970களில் இவர் எழுதிய உதயம் சிறுகதைத்தொகுதி இவரை நாடறிந்த எழுத்தாளன் ஆக்கியது. இதனைத் தொடர்ந்து பாதை, ஜென்மம், காலவெள்ளம், நீர்வை பொன்னையன் சிறுகதைகள், நிமிர்வு, பாஞ்சான், நினைவுகள் அழிவதில்லை முதலான சிறுகதைத் தொகுப்புக்களில் முதலாளிகளுக்காய் ஓடாய் உழைத்து உருக்குலைந்த உழைப்பாளிகளை இயல்பாகக் காட்டியவர். ‘உதயம்’ ‘தவிப்பு’, ‘பனஞ்சோலை’ ஆகிய கதைகளில் தீர்க்கமான மொழிவளமும் புனைவுக்கான களமும் கருவும் பரந்தும் விசாலித்தும் காணப்படுகின்றன. இவரது கதைகள் ஒடுக்குமுறைக்கு எதிரான குரலாகவும் கஷ்டப்பட்ட நலிந்த மக்களின் வாழ்க்கைக்கான பதிவுகளாகவும் அமைந்தன. நீர்வை பொன்னையனின் உதயம் சிறுகதை உழைப்பாளிகள் சுரண்டப்படும்போது சுரண்டலுக்கு எதிராகப் போராடுவதே சிறந்தவழி எனக் கூறுகிறது. விவசாயக் கிராமங்களின் உழைப்பாளிகள், தொழிற்சங்கவாதிகள், போராளிகள் மற்றும் மனிதநேயங்கொண்டோர் என விரியும் நீர்வை பொன்னையனின் கதைமாந்தர்கள் பண்பாட்டுக்கோலத்துடன் தொடர்புபட்டவர்கள். உயர்ந்த இலட்சியத்தைப் பிரதிபலிப்பவர்கள். இவருடைய பிற்பட்ட காலச்சிறுகதைகள் சில வசனக் கவிதைப் பாங்கிலும் எழுதப்பட்டுள்ளன.

1980களில் தாகம் இதழின் ஊடாக அறியப்பட்ட சித்ரா நாகநாதன் கிராமத்து மண்கள் சிவக்கின்றன தொகுப்பின் வாயிலாக நன்கறியப்பட்டவர். இந்திய அமைதிப் படை கிழக்கிலங்கையில் நிலைகொண்ட நேரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை இத்தொகுதி பேசிச்சென்றது. போராளியின் மனைவி காத்திருக்கிறாள், வேதனையின் சுவடுகள், பெற்றமனம், மனிதம் இன்னும் மரணிக்கவில்லை, அடம்பன் கொடியும் புத்தாண்டு வெடியும், கிராமத்து மண்கள் முதலான சிறுகதைகள் யுத்த காலத்தில் தமிழர்கள் அனுபவித்த வன்கொடுமைகளைக் கூறுகின்றன. பெற்றமனம் சிறுகதை தாயக மீட்புக்காக விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குச் சென்ற மகனும் E.P.R.L.F இயக்கத்துக்குச் சென்ற மகனும் ஒருவர் மற்றவருக்கு எதிராக ஆயுதம் தூக்க முயன்ற சமயத்தில் மகன்மாரை நினைத்து தாய்படும் வேதனையைச் சித்திரிக்கிறது. கிராமத்து மண்கள் சிவக்கின்றன சிறுகதை காதலன் விட்டுச் சென்ற போராட்டத்தை அவனுடைய காதலி முன்னெடுப்பதைக் கூறிநிற்கிறது. சித்திராவின் சிறுகதைகள் நாட்டின் பொருளாதாரச் சீரழிவை, அரசின் மனித உரிமை மீறல்களை, போராட்டத்தில் பெண்களின் பங்களிப்புகளை தமிழ் சிங்கள மக்களின் ஒற்றுமைக்கான வழிகளைக் கூறிநிற்கின்றன.

## அண்மைக்கால ஈழத்து தமிழ்ச் சிறுகதைகள்

இருபத்தோராம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ்ச் சிறுகதைகள் யுத்தகால அநுபவங்களையும் யுத்தத்துக்குப் பின்னர் மக்கள் எதிர்கொண்ட வாழ்வையும் பேசின. வெறுமனே தமிழ்த் தேசியத்தையும் ஈழ விடுதலைப்போராட்டத்தையும் ஆதரித்து எழுதப்பட்ட சிறுகதைகள் அதிலிருந்து ஓரளவுக்கு விலகி பொருளாதார தாக்கம், அகதிவாழ்வு, வீடுகளுக்கு செல்ல முடியாதநிலை, சிறை அநுபவங்கள், பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடி. பெண்ணியவாதம், அரசியல், சிங்களப் பேரினவாதம் முதலானவற்றை உள்வாங்கிக் கொண்டு பயணித்தன. ஆயுதம் தாங்கிய வீரர்களின் நிழலின் கீழ் வன்னி நிலப்பரப்பு பதுங்கியிருந்த வேளையில் நிஜங்களின் நிழலுருவங்களாகத் தோன்றிய சிறுகதைகள் ஒருகாலகட்டத்தின் யுத்தப்பதிவுகள். தன்னையும் தான் சார்ந்த சமூகத்தின் பதிவையும் வெளிப்படுத்தும் இச்சிறுகதைகள் அழகியல் தன்மையுடையதும், காத்திரமான கலாசிருஷ்டியும் கொண்டவையல்ல. இவை சரித்திரபூர்வமான எல்லைக் கோட்டுக்குள் தம்மை உட்படுத்திக்கொண்டவை. ஈழத்தின் கடந்தகால சமூக, அரசியல் போக்குகளைக் கோடிட்டுக் காட்டும் வன்னிச்சிறுகதைகள் முடிந்துபோன, முடிக்கப்பட்ட குறிப்பிட்ட இனசார் வாழ்வியல் முறைகளை யுத்த அனுபவங்களுக்கூடாக வெளிப்படுத்துபவை. படைப்பார்வமிக்க படைப்பாளிகளைக் கொண்டு படைக்கப்பட்ட தொகுப்புக்களாக வில்லுக்குளத்துப் பறவை *(1995)*, அம்மாளைக் கும்பிடுகிறானுகள், வாசல் ஒவ்வொன்றும் *(2001)*, கனவுக்கு வெளியேயான உலகு *(2002)*, வேர்கள் துளிர்க்கும் *(2003)*, வழி *(2005)* முதலானவற்றைக் கூறலாம். பழைய கதையாடல் முறையை உள்வாங்கி எழுதப்பட்ட இச்சிறுகதைகள் பெரும்பாலானவற்றில் பிரச்சாரவாடையே விஞ்சிநிற்கிறது. போராட்ட காலச்சூழலில் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியை அம்பலப்படுத்தவும் போராட்டத்தை வலுப்படுத்தவும் வில்லுக்குளத்துப் பறவை, அம்மாளைக் கும்பிடுகிறானுகள் போன்ற தொகுப்புக்கள் தேவைப்பட்டன. நாட்டில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்கள் பதினைந்தை உள்வாங்கி எழுதப்பட்ட அம்மாளைக் கும்பிடுகிறானுகள் தொகுப்பு தமிழீழ - இந்தியப் போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இந்திய இராணுவத்தாலும் அவர்களோடு சேர்ந்து இயங்கிய குழுக்களாலும் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட வன்கொடுமைகளைக் கூறுகிறது.

போராட்டத்தின் இருண்ட காலமாகச் சித்திரிக்கப்படும் இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் அமைதிப்படையினரின் வன்முறைக்கு இரையான மக்களின் வாழ்வில் நிகழ்ந்தேறிய பதினேழு உண்மைச் சம்பவங்களின் தொகுப்பே வில்லுக் குளத்துப் பறவைகள். போராட்டத்தை மனதார நினைத்து அமைதிப்படையின் மனிதவேட்டைக்குப் பலியாகிப்போன அப்பாவி மக்களின் கதைகளாக இவை விளங்குகின்றன. போராளிகளை நேசித்து ஆபத்துச் சூழலில் தம்மையே விதையாக்கிக் கொண்ட அப்பாவி மக்களின் கதைகளை செந்நீரும் கண்ணீருமாகச் சொல்லும் வில்லுக்குளத்துப் பறவை நாம் வாழ்வில் அனுபவித்துக் கடந்து வந்த காலத்தின் உண்மைப் பதிவுகளாகும்.

யுத்தகாலத்தில் பெண்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளையும் அவர்கள் எதிர்கொண்ட களங்களையும் ஆண்மைய மனோநிலையில் பெண்ணுக்கு இழைக்கப்படும் வன்முறைகளையும் உள்வாங்கி வெளிவந்த தொகுப்பாக வேர்கள் துளிர்க்கும் தொகுப்பைக் கூறலாம். தமிழவளின் தென்னம்பிள்ளை தொடக்கம் பூமாதேவியின் அடையாளம் ஈறாக பதினைந்து சிறுகதைகளை உள்வாங்கி வெளிவந்தது. பதினைந்து பெண்களால் படைக்கப்பட்ட இச்சிறுகதைகள் பெண்ணுக்குள் கனன்று கொண்டிருக்கும் பெண்மையையும் வாழ்வின் நெருக்கடியால் விளையும் மனக்கசப்பையும் சிறுமை கண்டு பொங்கும் கோபத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

பதின்மூன்று தமிழீழப் பெண்களின் சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்த வழி தொகுப்பு பெண் மையவாத அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட சமூகவிடுதலையையும் போராட்ட உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. இத்தொகுப்பில் ஐந்து சிறுகதைகள் பெண்போராளிகளால் படைக்கப்பட்டவை. அமரர் சந்திராவின் வழி சிறுகதை போராளி ஒருவனுடன் தொடங்க இருக்கும் இல்லற வாழ்வை மென்னுணர்வுத் தடத்தில் பதிவு செய்கிறது. போராளி இருவருக்கிடையிலான நேசிப்பைக் கூறும் இச்சிறுகதை போராட்டத்துக்காக இயக்கத்தால் விட்டுக் கொடுக்கப்படும் சலுகைகளையும் மக்கள் போராட்டத்தால் அனுபவித்த இழப்புக்களின் வலிகளையும் எடுத்துரைக்கிறது. கிருஷ்ணவேணியின் பூ ஒன்று புயலானது தேசத்துரோகம் புரிந்த கணவனுக்கு தண்டனை வழங்கும் மனைவியின் உள்ளத்துணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கிறது. காந்தாவின் நெஞ்சுக்குள்ளே, மலைமகளின் புலிவாலைத்தேடி, அம்புலியின் உள்ளே எரியும் தீ முதலான சிறுகதைகள் போராளிகள் எதிர்கொண்ட கள அனுபவங்களைப் பேசுகிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடைமுறை போராட்ட வாழ்வனுபவமாகக் கொண்டு போர்க்களத்தையும், போரியல் இயங்கு நிலையையும் மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட அம்புலியின் உள்ளே எரியும் தீ களமுனையில் போராளிகள் படுகின்ற அவலநிலையை உணர்வின் தளத்தில் விபரிக்கிறது. இடம்பெயர்வின்போது காணாமல் போனவர்கள் நிரந்தரமாக வாழ்வதற்கான சுவடு அழிக்கப்பட்டு படுகொலை செய்யப்படுவதை பிஞ்சு உள்ளத்தின் அல்லல்படும் மனநிலைக் கூடாகத் தாட்சாயிணியின் மெட்டி துல்லியமாக் காட்சிப்படுத்துகிறது. குமுதினியின் பயணம் வைத்தியசாலையில் இருந்து வீடு நோக்கி குழந்தையோடு செல்லும்போது தாயார் எதிர்நோக்குகின்ற வலிகள் சிரமங்களை இச்சிறுகதை பதிவு செய்கிறது. பெண்மையின் உணர்வுகளைப் பேசும் வழி அன்றைய நெருக்கடி கால கட்டத்தில் மக்கள் குறிப்பாக பெண்கள் எதிர்கொண்ட வாழ்வியல் சிக்கல்களை எடுத்துக்காட்டுகிறது.

வன்னியில் இருந்து வெளிவந்த தனிநபர் தொகுப்புக்களாக முல்லைக் கோணேஸின் முல்லைக் கோணேஸ் சிறுகதைகள், இரண்டாவது காலம் *(2000)*, பிரதீபகுமாரனின் ஆரண்யக்கனவு *(2000)*, தாமரைச்செல்வியின் வன்னியாச்சி *(2005)*, ஒரு மழைக்கால இரவு, அழுவதற்கு நேரமில்லை, முல்லை யேசுதாசனின் நீலமாகி வரும் கடல், தூயவனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரும் மருத்துவமும் (2003), முல்லைக்கோணேஸின் அவர்கள் வருவார்கள், கருணாகரனின் வேட்டைத்தோப்பு (2014), தமிழ்க்கவியின் நரையன் (2022) முதலானவை காணப்படுகின்றன. வளநாடனின் சமவெளிநோக்கி (2001), சு.மகேந்திரனின் காலவெளி (2000), ஆதித்தநிலாவின் எங்கே மனக்கண்ணையும் திறவுங்கள் (2004) முதலான தொகுப்புக்கள் அவரவர் சிறுகதைகளையும் கவிதைகளையும் தாங்கி வெளிவந்த தொகுப்புக்களாகும். சு.மகேந்திரனின் காலவெளி, சிறை தவிர்ந்த வெளிச்சத்தில் வெளிவந்த நான்கு கதைகளின் தொகுப்பாகும். சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் அகலப்பிடிக்குள் அள்ளுண்டு கிடக்கும் காலவெளியின் சாட்சியாய் இச்சிறுகதைகள் விளங்குகின்றன.

தாட்சாயிணியின் ஒரு மரணமும் சில மனிதர்களும் என்னும் சிறுகதை குடும்ப உறவுகளுடன் சல்லாபித்துவிட்டு இறக்கப்போகும் கணங்களை எண்ணியபடி இலக்கை நோக்கி நகர்ந்து விதையாகிப் போன கரும்புலியான நயனியின் வாழ்வைப் பேசுகிறது. போராளியொருவர் இறந்தபோது அவருக்காக அவளது உறவினரால் வெளிப்படையாக அழமுடியாது உள்ளம் குமுறும் நிலையை இச்சிறுகதை உணர்வுபூர்மாகக் காட்சிப்படுத்துகிறது. இவரின் மற்றொரு கதையான வெடிக்காய் போரின் காரணமாக இடம்பெயர்ந்து பின்னர் தத்தம் சொந்த நிலங்களுக்குச் சென்றவர்கள் நிலத்தில் புதையுண்டிருக்கும் நிலக்கண்ணிகளால் தமது காலை இழக்கும் அபாயத்தைக் காட்டி நிற்கிறது. போர்க்கால அநுபவங்களை, மனித அவலங்களை பெண்ணிலையில் நின்று இலக்கியப் படைப்பாக்கியவர் என்னும் வகையில் தாட்சாயிணி குறிப்பிட்டு கூறத்தக்கவர்.

தமிழ்கவியின் கள அனுபவமாக வெளிப்படும் சாவை நோக்கி சிறுகதை அர்த்தமற்ற மனித இழப்புக்களைக் கேள்விக்குட்படுத்துகிறது. 1995 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையுள்ள 14 ஆண்டு காலப்பகுதியில் வன்னியில் எல்லா வழிகளும் போர்முனைப்புப் பெற்று முடங்குண்ட நிலையில் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக நெருக்குவாரப்பட்டு அல்லுண்ட சூழலில் எழுதப்பட்ட கதைகளே கருணாகரனின் ‘வேட்டைத்தோப்பு’. அரசியல் பொய்த்துப் போன சூழலில் நிர்ப்பந்திக்கப்பட்ட போரில் மக்கள் அனுபவித்த வலிகளையும் தாங்கொணா வேதனைகளையும் இத்தொகுப்பு பேசிநிற்கிறது. மனிதநேயம் மறைந்து, அரசியல் அறம் வழுவி, அறமே கூற்றாகிப் போன சூழலில் மனையிழந்து, ஊரிழந்து மக்கள் தம் உற்றார், உறவினர், மகவென பலரையும் இழந்து தெருக்களில் அலைந்து உழன்று வெம்பி வெதும்பிய கணங்களை வேட்டைத்தோப்பு ஆழமாக விபரித்துச் செல்கிறது. இராணுவத் தாக்குதல்களையும் மனிதசேதாரங்களையும் சொல்லும் இக்கதைகள் அகதி முகாம்களில் முடங்கிய மக்களின் அந்தரித்த வாழ்க்கையினையும் சித்திரித்துச் செல்கின்றன. அதே நேரத்தில், இயக்கங்கள் உருவான கதையைக் கூறும் வேட்டைத் தொகுப்பு, அந்த இயக்கங்களின் போராட்ட நிகழ் கணங்களையும் பதிவு செய்கிறது. விடுதலைப் புலிகளால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட மக்கள் போராட்டம் பொய்த்துப்போன நிலையில் அநாதரவாக விடப்பட்டு அவர்கள் வாழ்வு நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்ட கணங்களையும் வேட்டைத்தொகுப்பு கூறிநிற்கிறது.

தமிழினி ஜெயக்குமரனின் மழைக்கால இரவு தொகுப்பு கவுரவக் கவசம், மழைக்கால இரவு, சுதர்சினி, வைகறைக் கனவு, பாக்கியம்மா, எனது மகன் வந்திட்டான் ஆகிய ஆறு கதைகளை உள்ளடக்கி வெளிவந்தது. போராளிகளின் போர்க்காலச் செயற்பாடுகளை விரிவாகவும் அதே சமயம் வாழ்க்கையில் பெண்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகளை இயல்பாகவும் உணர்வின் தளத்தில் நின்று வெளிப்படுத்தும் தொகுப்பு இதுவாகும். இவருடைய சிறுகதைகள் போராளிகளின் அர்ப்பணிப்பையும் தியாகசிந்தனையையும்அவர்களுக்குள் இருக்கும் மானிடநேயத்தையும் கூறிநிற்கின்றன. காதல், பாசம், யுத்தமுனைப்பு, துயர், அழிவு என்னும் பல்வேறு தளங்களில் இயங்கும் இச்சிறுகதைகள் பெண் போராளிகளின் யுத்தகளச் செயற்பாடுகளையும் போராட்ட வாழ்வில் அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் எமக்குணர்த்தி நிற்கின்றன. போர்க்கால அழிவுகளைக் கட்டியங்கூறும் இச்சிறுகதைகள் களநிகழ்வுகள், வேவுநடவடிக்கைகள், போர்க்கால அநுபவங்கள் குறித்தும் பேசுகின்றன. மழைக்கால இரவு சிறுகதை பூநகரிச் சமர் குறித்த பெண் போராளிகளின் அனுபவங்களை, அவலங்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. பாக்கியம்மா என்னும் சிறுகதை இயக்கத்துக்குச் சென்ற தன்மகன் இறந்துவிட்டான் என்ற செய்தியறியாது மகனைத் தேடியலையும் தாயின் உள்ளத்துணர்வுகளைத் துல்லியமாகப் பதிவு செய்கிறது. எனது மகன் வந்திட்டான் சிறுகதை யதார்த்தத்துக்குப் புறம்பாகத் தன்னை முன்மொழியும் சிறுகதை. இலங்கைப்படையினரின் தாக்குதலில் தன் தாயை இழந்த மகன், நாட்டுக்காகப் போராட இயக்கத்தில் சேருகின்றான். பிறிதொரு புறத்தில் ஏழைச் சிங்களத் தாயொருத்தியின் மகன் இலங்கை அரச படையொன்றில் இணைந்து யுத்த களத்துக்குச் சென்று மாண்டு விடுகின்றான். அவனது வருகைக்காகக் காத்திருக்கும் அச்சிங்களத்தாய்க்கு மகனாகத் தமிழ் இளைஞனைக் காலம் வழங்குவதை இச்சிறுகதை கூறிச் செல்கிறது.

வன்னியில் ஏற்பட்ட போர் எவருமே எதிர்பார்க்காத திருப்பங்களுடனும் அவலங்களுடனும் நடந்து முடிந்தது. வாழ்வின் வலிகளைத் தாங்கிக் கொண்டு மீண்டெழுதலே வாழ்வாகிப்போன தருணங்களை இக்காலச் சிறுகதைகள் எடுத்துரைத்தன. இப்போரில் இறந்தவர்கள் சரித்திரமாகி விட உயிரோடு இருந்தவர்கள் தம் சிறுகதை வாயிலாகப் புதிய சரித்திரத்தை எழுதத் தொடங்கினர். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாத்தளன் கடற்கரைப் பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அம்பலவன் பொக்கணை, வலைஞன்மடம், முள்ளிவாய்கால் வரை, பாடுகளைச் சுமந்த இம்மனிதர்கள் தம் வலிகளை சிறுகதைகளாக எழுதினர். அலெக்ஸ்பரந்தாமனின் அனலெனவாகிய நினைவுகள் சிறுகதை போருக்கு முகங்கொடுத்த மக்களின் துயரங்களை மனவடுக்களைக் கூறுகின்ற சிறுகதையாகும். கடுமையான ஷெல்லடி நிகழ்ந்து கொண்டிருந்த வேளையிலே புலிகள் பாஸ் கொடுக்க மறுத்தமையால் அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்பட்டதை இச்சிறுகதை எமக்குணர்த்தி நிற்கிறது. இவருடைய 'நாயுண்ணி' சிறுகதை நல்ல நேரத்தில் ஒட்டிக் கொள்ளும் உறவுகள் துன்பகாலத்தில் கூடவருவதில்லை என்பதை எடுத்துரைக்கிறது.

செங்கைஆழியானின் குந்தி இருக்க ஒரு குடிசை யாழ் மக்களின் இடம்பெயர்வின் அவலத்தை வெளிப்படுத்தி நிற்கும் கதையாகும். ஒரு பிடியுணவுக்காக மக்கள் படும் துயர், தம் சொந்த இடங்களில் வாழ வகையற்று பிறிதொரு இடத்தில் வாழ முற்படும்போது மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் உணர்வுபூர்வமாக ஆசிரியரால் இக்கதையில் எடுத்துரைக்கப்படுகிறது. சமாதானக் காலப்பகுதியில் ஏ9 வீதியைக் கடக்க முற்படும்போது மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களை விவரணப்பாணியில் முன்மொழியும் கதையே செங்கை ஆழியானின் மனிதம். பாதையை மக்கள் உரிய நேரத்துள் ஆபத்தின்றிக் கடந்து விட வேண்டும் என்பதற்காக விடுதலைப் போராளிகள் எடுக்கும் முயற்சியை விளக்கி நிற்கும் இக்கதை ஆபத்துக் காலத்தில் மனிதம் செத்துவிடும் என்பதையும் உணர்த்தி நிற்கிறது. கடந்த கால யுத்தத்தையும் அந்த யுத்தத்தை எதிர்கொண்ட மக்களின் வாழ்வியற் பின்னணியையும் மையமாகக் கொண்டு எழுந்த ஈழத்துச் சிறுகதைகள் மனித வாழ்வியலை வரலாற்றுடன் இணைக்கிறது. மண்ணின் விடிவைக் கோரிநின்ற மக்களின் துக்கித்த வாழ்வை அவர்களின் சோக வரலாற்றை உதிரம் சொட்டச் சொட்ட தரும் இச்சிறுகதைகள் இருள் படிந்த கடந்த காலத்தின் குரூர முகங்களை விளக்கி நிற்கின்றன.

இராஜேஸ்கண்ணனின் தொலையும் பொக்கிசங்கள் முதுசங்களாக இருந்த வீடுகள் இராணுவ முகாம்களாக ஆக்கப்பட்டு உருக்குலைந்து போவதைச் சித்திரிக்கிறது. தம்பித்துரை என்பவர் கனடாவுக்குச் சென்று தனது மகனின் குடும்பத்தோடு ஆறு வருடங்கள் இருந்துவிட்டு சொந்த ஊருக்குத் திரும்புகிறார். அவரது வீடு இராணுவ முகாமாக ஆக்கப்பட்டு சீரழிந்து எழில் குலைந்து, சுடுகாடுபோல் கிடப்பதைக் கண்டு மனம் வெதும்புவதைக் கூறிநிற்கிறது. தமிழ் முஸ்லிம் உறவினைச் சித்திரிக்கும் இவரின் பூர்வீகபந்தம் என்ற சிறுகதை முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட சூழலை வெளிப்படுத்தி நிற்கிறது. இன ஐக்கியம், சமூக உறவு என்பவை பேணப்படவேண்டியவை என்பதை இக்கதை வெளிப்படுத்தி நிற்கிறது. என்ட அல்லாஹ் தொகுப்பில் இடம்பெறும் பெரும்பாலான சிறுகதைகள் தமிழருக்கும் முஸ்லிங்களுக்கும் இடையிலான நெருங்கிய உறவினை ஆழமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. முஸ்லிங்கள் முல்லைத்தீவில் இருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்வைக் கூறும் முல்லை முஸ்ரிபாவின் துயருறுதல் முஸ்லிங்களுக்கும் தமிழருக்கும் இருந்த ஆழமான நட்பினைக் கோடிட்டுக் காட்டுகிறது. குமார்மூர்த்தியின் ஹனீபாவும் இரண்டு எருதுகளும் சிறுகதை யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிங்கள் வெளியேற்றப்பட்ட துயரினைக் கூறிநிற்கிறது. ஓட்டமாவடி அறபாத்தின் ரெயில்வே ஸ்ரேஷன்' கதை ரயில்வேயில் விளையாடி வியாபாரம் செய்தவர்களைப் பற்றிக் கூறினாலும் அக்கதை தமிழ் – முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு நிலையை ஆழமாக விபரித்துச் செல்கிறது.

போருக்குள் சிக்குண்டு சின்னாபின்னப்பட்ட வன்னியைக் களமாகக் கொண்டு புனைகதைகளை படைத்தவர்களுள் ச.முருகானந்தன் முக்கியமானவர். தீபத்தில் இவரெழுதிய கதைகளில் ஒன்றாகிய மீன்குஞ்சுகள் இலக்கியச் சிந்தனைப் பரிசினைப் பெற்றது. இவரது ஆரம்பகாலச் சிறுகதைகள் வடமராட்சியைக் கதைக்களமாகக் கொண்டவை. இவரது வன்னேரி பென்னேரியாகிறது என்னும் கதை விவசாயக்களத்தில் மது விலக்கை வலியுறுத்தி எழுதப்பட்டது. வடமராட்சிப் பின்புலத்தில் மீள் நினைவுகளாக எமுதப்பட்ட 'இந்தமண்' ஆலயம், குளம் பனங்கூடல் என இப்பிரதேசத்தையும் அங்கு வதியும் மக்களையும் கண்முன் நிறுத்துகிறது. யுத்தம் வன்னி மண்ணை ஆக்கிரமித்த சூழலில் ச.முருகானந்தனால் எழுதப்பட்ட கதைகள் போரினால், போராட்டத்தால் சிதைவுண்ட அப்பாவி மக்களை, போராளிகளை, படையினரைக் கண்முன் நிறுத்துகின்றன. குறியீட்டு முறைமைக்கூடாக பேரினவாதத்தை மையப்படுத்தி எழுதப்பட்ட அலியன் யானை வன்னி விவசாயிகளின் பயிர்களை நாசம் செய்யும் குழுவன் யானைக்கூடாக போரியல் வாழ்வைப் பேசுகிறது. இறுதிக்கட்ட யுத்தத்தையும் அதன் பின்னரான முகாம் வாழ்க்கையையும் பின்னணிகாக கொண்டு எழுதப்பட்ட உச்சகட்டம், தாய்மடிமண், தண்ணீர் தண்ணீர், சுடலை ஞானம், முள்வேலி, வெறும் சோற்றுக்கே, என்று தணியுமிந்த முதலான கதைகள் வெளித்தொடர்பு மறுக்கப்பட்டு, அடையுண்ட வேலிக்குள் முடக்கப்பட்ட மக்களின் அவல வாழ்வை மனதை உருக்கும் வண்ணம் சித்திரிக்கின்றன. இவரின் முரண்பாடுகள் புதிய சொல்முறைக்கூடாகத் தனித்துவமான கதையாக உருப்பெறுகிறது. சிங்களப் பேரினவாதிகளால் இளைஞர்கள் கபடத்தனமாக போர்முனைக்கு அனுப்பப்படுகின்றனர். யுத்தநிலைக்கு வந்த பின்னரே அப்படைவீரர்கள் தம்நிலையை உணர்கின்றனர். இதனைப் பியதாசா என்னும் சிங்களயுத்தவீரனின் மனநிலைக்கூடாக ஆசிரியர் காட்சிப்படுத்துகின்றார்.

இயல்வாணனின் 'முடவன் நடை' வழிப்பயணங்களில் விளையும் அசௌகரியங்களைப் பேசுகிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்திதுறைக்குச் செல்லும் வழியில் பதினொரு தடவை இராணுவச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைச்சாவடியில் ஏறி, இறங்கிச் செல்லும்போது ஏற்பட்ட உளநெருக்குவாரத்தையும் சிரமங்களையும் இச்சிறுகதை பதிவு செய்கிறது. நந்தினி சேவியரின் தவனம் 1983 இல் கொழும்பில் இடம் பெற்ற யூலைக் கலவரத்தின் வன்கொடுமையினைக் கண்முன்நிறுத்துகிறது. தமிழர் ஒவ்வொருவரும் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஜீவமரணப் போராட்டம் கதையில் உயிர்த்துடிப்புடன் வெளிப்படுத்தப்படுகிறது. எவரையும் அஞ்ச வைக்கும் பதட்டம் நிறைந்த அபாயகரமான சூழல் கதைமுழுதும் நிறைந்து காணப்படுகிறது. நானறிந்த வரை யூலைக்கலவரத்தை விளக்கும் முதற்கதை இதுவாகும்.

மனிதநேயப் படைப்பாளியாகவும் சமூகப் போராளியாகவும் நன்கு அறியப்பட்ட உடுவில் அரவிந்தனின் சிறுகதைகள் போரையும் போருக்குப் பின்னரான வாழ்வையும் நிலைக்களனாகக் கொண்டவை. அரவிந்தனின் சிறுகதைகள் சம்பவங்களின் கோர்வையாக அமையாது சம்பவ நிகழ்வுகளின் காரணிகளைக் கண்டறிந்து கதை சொல்லியின் மனநிலைகளை உருவாக்கும் சூழ்நிலைகளை முன்னிலைப்படுத்தி இயங்குகின்றன. இவருடைய இருப்பு, அடையாளம், பேய்வளவு, பாழ்வெளி முதலான சிறுகதைகள் இத்தளத்தில் இயங்குகின்றன. மு.தளையசிங்கத்தின் இரத்தம், பிரமிளின் லங்காபுரி ராஜா, அங்குலிமாலா, குமார்மூர்த்தியின் பயணம் முதலான சிறுகதைகளைப் போன்று இச்சிறுகதைகளும் ஈழப்போராட்டத்தில் மனிதர்கள் எதிர்நோக்கிய இன்னல்களை எடுத்துரைக்கின்றன.

இயக்கம் பலவந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட காலப்பகுதியில் பிள்ளைப்பிடிக்கு பயந்து அவசரத் திருமணங்கள் நடைபெற்றன. இதனைச் சித்திரிக்கும் கதையே யதார்த்தனின் தீட்டுத்துணி. ஆண் துணையில்லாத ஒரு பெண்ணை சமூகம் எப்படிப் பார்க்கின்றது? என்பதையும் அவளது தெரிவுகளை சமூகம் எப்படி மதிப்பிடுகின்றது? என்பதையும் இச்சிறுகதை கூறிச் செல்கிறது. இவருடைய கோலியாத் சிறுகதை ஒருவர் விடுதலைப் புலி இயக்கத்துக்கு ஏன் போகின்றார் என்பதையும் அதனை புறச்சூழல் எவ்வாறு தீர்மானிக்கின்றது என்பதையும் எடுத்துரைக்கின்றது.

பரணீதரனின் மீளப்பிறந்தவர்கள் சிறுகதையும் போரினால் சிதைவுண்டவர்களின் வாழ்க்கைப்பாடுகளை பேசிச் செல்கிறது. போருக்குப் பின்னர் போராளிகள் தம் அடையாளத்தை மறைத்து தம் கடந்த கால ஆளுமைகளை மறந்து ஜீவனோபாயத்துக்காக மற்றவரை நாடிப் பிழைக்கும் அவலத்தை எடுத்துரைக்கிறது. கலைமுகத்தில் வெளிவந்த உடுவில் அரவிந்தனின் பயணம் சிறுகதையும் இப்பின்னணியைப் பேசுபொருளாகக் கொண்டது என்பதுவும் இங்கு நினைவு கூரத்தக்கது. சாத்திரியின் அலைமகள் சிறுகதையும் முன்னாள் போராளிகள் சமூகத்தால் அவமரியாதைக்குள்ளாவதைச் சித்திரிக்கிறது. நாட்டை மீட்பதற்கான போரில் கடல்பயணங்களை மேற்கொண்ட ஒரு கடல் பெண்புலியான அலைமகள், விடுதலைப் புலிகள் தோற்று போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் சரணடைந்து, வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுதலையாகி வீடு திரும்புகிறாள். அங்கு அவமானங்கள் பலவற்றை எதிர்கொண்டு ஈற்றில் மரணத்தை தேடிக்கொள்கிறாள். கடலில் எதிரிப்படையுடன் தாக்குப்பிடித்து தாயக மீட்புக்கான போரில் களமாடியவள், நாடு கடந்து தப்பி ஓடலுக்கான முயற்சியில் கடல் அலையோடு அள்ளுண்டு போகிறாள். ஜீவகுமாரனின் போராட்டம் சிறுகதை ஈழவிடுதலைப் போராட்டத்துக்காக தன் இளமையை அர்ப்பணித்துப் போராடிய பெண் போர் முடிவுற்றதும் தன் சமூகத்தாலேயே ஓரங்கட்டப்படுவதை எடுத்துரைக்கிறது. சாஸ்திரியின் கடைசி அடி என்ற சிறுகதை புலம்பெயர்ந்து வாழ்ந்துகொண்டு, நீடித்த போருக்காக நிதிவசூலித்து வாழ்ந்து கொழுத்தவர்களின் வரலாற்றைக் கூறிச்செல்கிறது.

பரணீதரனின் எழுதிச் செல்லும் விதியின் கை என்னும் சிறுகதை யுத்தம் நடந்து முடிந்த பின்னர் மனிதவேட்டைக்கு முகம் கொடுத்த பாஸ்கரனின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதையாகும். கடந்த காலங்களில் களையெடுப்பு என்னும் பெயரில் இராணுவத்தாலும் தமிழ்க் குழுக்களாலும் தமிழர்கள் எவ்வாறு வேட்டையாடப்பட்டனர் என்பதை எடுத்துரைக்கிறது.

நாட்டில் தொடரும் அசம்பாவிதச் சூழல் பலரை விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தும் எழுத வைத்தது. தம் வாழ்வைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் தப்பித்துக் கொள்வதற்காகவும் படைப்பாளிகள் பலர் தாயக விடுதலை குறித்த அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் எழுதினர். போராட்டம் திசைமாறிப் பயணித்த தருணத்தில் போரின் உக்கிரமும் பாதிப்பும் அதிலிருந்து விடுபட முடியாத சூழலும் நிஜமாகவே சில படைப்பாளிகளைக் கோபப்படுத்தியது. ஷோபாசக்தி, சக்கரவர்த்தி முதலானோர் ஆரம்பகாலங்களில் தம் படைப்புகளில் இதனை வெளிப்படுத்தி இருந்தனர். போராட்டத்தின் இயல்பு குலைதலையும் போராளிகளின் மனோநிலையில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் இக்கதைகள் வெளிப்படுத்தி நின்றன. சக்கரவர்த்தியின் யுத்தத்தின் இரண்டாம் பாகத்தில் இடம்பெறும் எண்ட அல்லாஹ், படுவான்கரை முதலான கதைகள் அக்கால இயக்கப் போராளிகளின் மனோநிலைகளையும் அரசியல் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்தன. அதேசமயம் ஷோபாசக்தியின் சிறுகதைகள் புனிதர்களாக நாம் உருவகித்துக் கொண்டவர்களையும் நாகரிகமற்ற பண்பாடாக நாம் வரித்துக் கொண்டவற்றையும் கேலியும் கிண்டலுமாக விமர்சித்தன. குறிப்பாக விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசினையும் விமர்சிப்பதற்காகவே ஆரம்பத்தில் இவர் கதைகளை எழுதினார் எனலாம். இவருடைய தேசத்துரோகி தொகுப்பு இக்காலத்தில் அதிகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்பட்டது. கூரிய எள்ளல்கள் வாயிலாக வரலாற்று அரசியலை கடுமையாகச் சாடும் இத்தொகுப்பு உறுதியாக நிறுவப்பட்ட பல இலட்சிய விம்பங்களையும் உடைத்தது. யுத்தகளத்தில் பொதுவெளியில் பேசப்படாத செய்திகளை கருணாகரன், தமிழ்க்கவி, யோ.கர்ணன், கருணைரவி முதலான படைப்பாளிகளின் கதைகளும் ஈழப்போராட்டத்தை மறுவாசிப்புக்குட்படுத்தின. விடுதலைப் போராட்டத்தின் அழிவுகளை பங்காளிகளாக நின்று பார்த்த இவர்கள் அதனை விமர்சித்தும் தம் அதிருப்தியை வெளிப்படுத்தியும் எழுதினர். கருணாகரனின் வேட்டைத் தொகுப்பு, யோ.கர்ணனின் தேவதைகளின் தீட்டுத்துணி, சேகுவேரா இருந்த வீடு, தமிழ்கவியின் நரையன் முதலான சிறுகதைத் தொகுப்புக்கள் இத்தளத்திலேயே இயங்குகின்றன.

உக்கிரமான போர்ச்சூழலில் நிகழ்ந்த மனிதஅழிவை வெறுமனே பார்வையாளராக இருந்து பார்த்துக் கொண்டிருந்த கர்ணன் வன்னி மண்ணிலும் முகாமிலும் மக்கள் எதிர் கொண்ட நெருக்கடிகளையும் அந்நெருக்கடியிலிருந்து விடுபடமுடியாத மனிதர்களின் கையாலாகாத் தனத்தையும் தேவதைகளின் தீட்டுத்துணி ஊடாக பேசவிளைகிறார். இவருடைய ஆதிரையும் நாற்பது ஆமிக்காரரும் சிறுகதை, அக்காலகட்டத்தில் வன்னிப் பகுதியில் நடைபெற்ற போராட்டத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளையும் அதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட தெருக்கூத்துகளையும் திரட்டப்பட்ட போராளிகளுக்கு வழங்கப்பட்ட நான்கு மாதப் பயிற்சிகளையும் கூறுகிறது. இச்சிறுகதை முன்னரங்கு நிலையில் குறுகிய காலப் பயிற்சியால் நிகழ்ந்தேறிய மனித அழிவுகள் குறித்தும் பேசுகிறது. அப்பண்ணா என்னும் முன்னாள் போராளியின் அனுபவங்களையும் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் வாழ வேண்டுமென்ற அவரின் அவாவினையும் மன்னிக்கப்படாதவனின் கைத்தொலைபேசி' சிறுகதை உணர்த்தி நிற்கிறது. இயக்கத்துக்கு ஆட்சேர்த்ததிலும் பயிற்சியளித்தலிலும் மும்முரமாக இயங்கிய போராளி ஒருவர் முகாமில் தங்கியிருந்த சமயத்தில் தலையாட்டி காட்டிக் கொடுத்ததை தேவதைகளின் தீட்டுத்துணி சிறுகதை எமக்குணர்த்தி நிற்கின்றன. இயக்கத்தில் இணைந்த மலையகத் தமிழ் இளைஞனொருவன் மீதான விசாரணையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சடகோபனின் விசாரணைக் குறிப்பு சிறுகதை இயக்கமுகாமில் நிகழும் கொடூரமான சித்திரவதைகளைக் கூறிநிற்கின்றது. கர்ணனுடைய இரண்டாவது தொகுப்பாகிய சேகுவேரா இருந்த வீடு தன் மீதும் மக்கள் மீதும் கட்டமைக்கப்பட்ட அதிகார அடுக்குகளைச் சாடுகிறது. தன் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கான வாக்குமூலமே கர்ணனின் இத்தொகுதி. இடம்பெயர்வின்போது மலங்கழிப்பதிலிருந்து உணவு தேடுவது வரையில் மக்கள் அநுபவித்த நெருக்கடிகளையும் இக்கட்டான சூழலில் மனிதன் அனுபவித்த வெந்துயர்களையும் இத்தொகுப்பு எமக்குணர்த்தி நிற்கிறது. அத்துடன் முன்னாள் போராளிகளின் சீர்குலைந்த வாழ்க்கையினையும் சகோதரப் படுகொலைகளால் நிர்க்கதிக்குள் தள்ளப்பட்ட குடும்பங்களின் அல்லற்பாடுகளையும் போராளிகளின் நடத்தைவாத முறைகளையும் இத்தொகுப்பு வெளிப்படுத்தி நிற்கிறது.

குரலற்ற மனிதர்களின் குரலாக ஒலிக்கும் கருணை ரவியின் கடவுளின் மரணம், தான் சந்தித்த கடந்து வந்த புரையேறிப்போன வாழ்க்கை குறித்த சம்பவப் பதிவுகளாகத் துலங்குகின்றன. கடவுளின் மரணம், பிரிகை, கப்பல் எப்ப வரும் முதலான கதைகள் போரின் வலி, அதனால் ஏற்பட்ட இழப்பு மற்றும் வாழ்வின் மீதான நம்பிக்கை என்பவற்றை நுண்ணுணர்வுத்தளத்தில் வெளிப்படுத்திச் செல்கிறது. இழந்தவர்கள் இனி இழக்க எதுவுமில்லா இருண்ட தேசத்தில் போரின் சுவடுகளை அது ஏற்படுத்திய மனிதவடுக்களை தன்னனுபவமாக இவருடைய சிறுகதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. காப்பாற்ற எவருமின்றி நிர்க்கதியான சூழலில் தம் சொந்த எஜமானார்களாலேயே புதுமாத்தளனில் வேட்டையாடப்பட்ட மக்களின் கதையே கருணை ரவியின் கடவுளின் மரணம். ஒவ்வொரு இடம்பெயர்வின் போதும் ஒவ்வொருவராக இழந்து இனி இழக்க எதுவுமில்லா பெண்ணின் கதையாக விரியும் முள்ளிவாய்க்காலும் முறைப்பாட்டுக் கடிதமும் சிறுகதை மகனை இழந்த தாய்படும் வேதனையைச் சித்திரிக்கிறது. போருக்குள் தள்ளப்பட்ட மக்களின் வாழ்வியல் அனுபவங்களை அகமுரண்பாடுகளை உளச் சிக்கல்களை கருணை ரவியின் இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் பதிவு செய்கின்றன. கடந்தகால அவல வாழ்வுக்கு முகம் கொடுத்த யாழ்ப்பாண மனிதனின் மன அவசங்களை வெளிப்படுத்தும் சிறுகதையே நாட்கள், காலங்கள்... நமது வாழ்க்கைகள் சிறுகதை. வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைக்கு கல்வி கற்பிப்பதற்காக அடையாள அட்டையின்றி வரும் ஆசிரியர், அபாயம் நிறைந்த இராணுவச்சூழலுக்குள் அகப்பட்டு மன அவஸ்தையுடன் வீடு திரும்ப முனைகையில் அவர் எதிர்கொள்ளும் ஆபத்தான கணங்களை மக்கள் எதிர்நோக்கிய அழிவுகளை இச்சிறுகதை எடுத்து விளக்குகிறது. ஆசிரியருக்கு உதவப்போய் ஷெல்லடிக்குள் அகப்பட்டுக்கொள்ளும் பங்கிறாற்றியஸ் பாத்திரம் உணர்வுபூர்வமாக வெளிப்படுகிறது. இக்கட்டான சூழலில் ஆசிரியரை பங்கிறாற்றியஸ் பஸ் ஏற்றி விட்டுச் சென்ற சமயத்தில் ஷெல் நாலாபுறமும் சிதறி வெடிக்கிறது. வான் ஒன்றினுள் ஏறிக்கொண்ட ஆசிரியர் தன்மகன் இச்ஷெல்லடிக்குள் அவன் அகப்பட்டு கொண்டானா, இல்லையா என்பது தெரியாது அவனை எண்ணிக் கவலை கொள்கிறார். அதேசமயம் காசிருந்த போதும் நோயுற்ற தன் குழந்தைக்கு மருந்து வாங்க முடியாத தன் இக்கட்டான சூழ்நிலையை எண்ணி மனம் வருந்துகிறார். இச்சிறுகதையில் ஆசிரியர் எதிர்கொள்ளும் ஒவ்வொரு கணங்களும் அச்சுறுத்தல் நிறைந்தவையாகவும் ஆபத்தானவையாகவும் ஆசிரியருக்கு துன்பம் விளைவிக்கக் கூடியவையாகவும் சித்திரிக்கப்படுகின்றன. துயரத்துக்குள் உழன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் படும்பாடுகள் கலைநேர்த்தியுடன் சிறுகதையில் வெளிப்படுகின்றன. யுத்தகளத்தில் பேரனை இழந்த அன்னம்மா கிழவியின் நிர்க்கதியான நிலையை விளக்கும் கதையே அவலம். மனிதனின் இயல்புவாழ்க்கையை போராட்டம் எவ்வாறு சிதைத்தது என்பதை இச்சிறுகதை விளக்கி நிற்கிறது.

களத்தில் நின்று போராடியவர்களும் போராட்டக்களத்துள் வாழ்ந்தவர்களும் தாயக விடுதலைப் போராட்டத்தில் இருந்து விடுபட முடியாத நிலையில் அதனை ஆதரித்தும் உள்வாங்கியும் தம் சிறுகதைகளைப் படைத்தனர். வெற்றிச்செல்வி, ஆதிலட்சுமி சிவகுமார், மலரன்னை முதலான படைப்பாளிகள் தொடர்ந்தும் இத்தளத்தில் இயங்கி வருகின்றனர்.

மலரன்னையின் கார்த்திகைப்பூக்கள் என்ற கதை கார்த்திகை இருபத்தேழாம் நாள் கிளர்த்தும் உணர்வுகளை வாழ்வின் வலிகளாகக் கூறிச்செல்கிறது. அப்பா இல்லாத வீடு, போரில் கணவனை இழந்த பெண்கள் நடைமுறை வாழ்வில் எதிர்கொள்கின்ற வாழ்வியல் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் உணர்த்தி நிற்கிறது. யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் சரக்க இக்கதவம் திறப்பிம்மினே சிறுகதை யாழ்ப்பாணத்திலுள்ள சிவன் கோவிலில் கும்பாபிஷேகத்தைக் காண தெற்கில் இருந்து பயணிக்கும் புவனமலர் படுகின்ற துன்பங்களை வெளிப்படுத்துகிறது. அரிச்சந்திர தொன்மத்தை போர்க்கால அவலத்தோடு இணைத்துப் பேசுகின்ற இவருடைய மயான காண்டம் பதுங்குகுழி வாழ்வு, கப்பற்பயணம் போன்ற பல்வேறு அவலங்களைப் பதிவு செய்கிறது. இன்றும் இன்னும் சிறுகதை இராணுவ ஆக்கிரமிப்பால் மயானங்களில் கூட பிணங்களை எரிக்க முடியாத நிலையைக் கணபதிப்பிள்ளையின் இறப்புக்கூடாக எடுத்துரைக்கிறது. பாதுகாப்பு வலயத்துக்குள் மக்கள் அனுமதிக்கப்பட்ட நிலையிலும் இராணுவ பொறுப்பதிகாரி அனுமதித்தால்தான் ஆலடிச் சுடலையில் பிணத்தை எரிக்கலாம் என்ற நிலையில் அவரின் அனுமதிக்காக மக்கள் காத்திருப்பதை யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் இன்றும் இன்னும் சிறுகதை விளக்கிநிற்கிறது.

விஷ்ணுவர்த்தினியின் விட்டில்கள் போர் குடும்பம் ஒன்றை சின்னாபின்னப்படுத்தி நிர்க்கதியாக்கிச் சென்ற வரலாற்றைக் கூறிச்செல்கிறது. நந்தினி கிளிநொச்சியில் வாழும் காலத்தில் போரினால் பாதிக்கப்பட்டு ஈற்றில் கணவனோடு வவுனியா அகதிமுகாமில் இருந்த சமயத்தில் இராணுவத்தால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போன சூழலில் யாழ்ப்பாணம் வந்து மூன்று பிள்ளைகளுடன் வாழ்வதற்காகப் போராடுகிறாள். அவள் கால் ஒன்றை இழந்து நின்ற நிலையில் மனிதவல்லூறு ஒன்று அவளை வேட்டையாடத் தயராவதை கதை கூறிச் செல்கிறது. பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் அனுபவிக்கின்ற வலியை விட்டில்கள் போன்ற ஈழத்து சிறுகதைகள் பல கூறிச் செல்கின்றன.

தேவராசா முகுந்தனின் கண்ணீரினூடே தெரியும் வீதி இனமுரண்பாடு கூர்மை பெற்றிருந்த காலப்பகுதியில் எழுதப்பட்டவை. 1992ல் இல் மரநாய்கள் சிறுகதை வாயிலாக தமிழ் இலக்கியத்திற்கு பிரவேசித்த தேவமுகுந்தன் நிர்மலன் என்ற பெயராலும் நன்கறியப்பட்டவர். இவருடைய பெரும்பாலான சிறுகதைகள் 2008 -2011 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. இவருடைய மரநாய் சிறுகதை. கோழி – மரநாய் என்னும் குறியீடுகளுக்கூடாக அக்காலப்பகுதியில் தமிழ் மற்றும் ஏனைய பகுதிகளில் இடம் பெற்ற பிள்ளை பிடித்தல், ஆட்கடத்தல் விடயங்களைப் பேசுகிறது. யாழ்ப்பாணத்தைக் கதைக்களமாகக் கொண்டு கதை பின்னப்பட்டாலும் ராணுவ முற்றுகைக்குட்பட்ட கிராமங்களில் தமிழர்களின் உரிமையும் சுதந்திரமும் மறுக்கப்படுவதைக் கதை சுட்டிக்காட்டுகிறது. கொழும்பின் நகர்ப்புறங்களில் குண்டுவெடிப்பும் தற்கொலைத்தாக்குதல்களும் அதிகம் இடம்பெற்ற சூழலில் கைது நடவடிக்கைகள் தீவிரம் பெற்றன. தமிழ் மக்கள் வகை, தொகையின்றி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறை சென்றவர்களில் பெரும்பாலானோர் சித்திரவதை செய்யப்பட்டு காணாமலும் ஆக்கப்பட்டனர். இப்பின்னணியில் எழுந்த சிறுகதையே சிவா. பல்கலைக்கழக மாணவனான சிவா சோதனைச் சாவடி ஒன்றில் கைது செய்யப்பட்டு ஆறு வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் வெளியில் வந்து மீண்டும் கைது செய்யப்பட்டு காணாமல் போகிறான். சிவாவின் நண்பன் முரளி என்ற கதைசொல்லியால் சொல்லப்படும் இக்கதை அக்காலத்தில் கொழும்பில் நடந்த சம்பவங்களைக் கண்முன் நிறுத்துகிறது. இடைவெளி சிறுகதை கொழும்பில் தமிழரும், சிங்களவரும் பணிபுரியும் அலுவலகத்தில் தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்த இளைஞன் ஒருவன் கொழும்பில் நிகழும் தொடர்குண்டு வெடிப்புகளாலும் காட்டிக் கொடுப்புக்களாலும் எவ்வாறான கொடூரமான சூழ்நிலைக்குள் தள்ளப்படுகிறான் என்பதை எடுத்துரைக்கிறது. ஒரு சுதந்திரநாள் சிறுகதை கொழும்பில் யுத்த நெருக்குவாரத்துக்குள் சிக்குண்டு வாடகை அறையில் வாழும் ஒருவன் சுதந்திரநாள் ஒன்றில் எதிர்கொள்ளும் சம்பவங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. எவ்வளவு தான் நண்பர்களாகப் பழகினாலும் சிங்களவர்களின் அடி மனத்தில் தமிழர்கள் மீதான விரோதமும் வன்மமும் நிலைகொண்டுள்ளதை இரட்டைக் கோபுரம் கதை உணர்த்தி நிற்கிறது. கண்ணீரினூடே தெரியும் வீதி மிகச் சிறந்த கதைகளில் ஒன்று. ஜயசிக்குறு படை நகர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கல்கிசைப் பகுதியில் வாடகை வீட்டில் தங்கி இருக்கும் பல்கலைக்கழக மாணவன் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நெருக்கடிகளைக் கூறும் சிறுகதையே கண்ணீரினூடே தெரியும் வீதி. தேவமுகுந்தனின் வழிகாட்டிகள், கூட்டத்தில் ஒருவன் முதலான சிறுகதைகளும் இனப்பிரச்சினையை மையப்படுத்தி எழுதப்பட்ட சிறுகதைகள் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், சிங்களவர்களுக்கிடையில் இனமுரண்பாடு கூர்மை பெற்றிருந்தாலும் மானிடநேசமும் மனிதாபிமானமும் உள்ளவர்கள் ஆங்காங்கே இருக்கவே செய்கிறார்கள் என்பதை இதயராசனின் ஜெயா சிறுகதை எடுத்துரைக்கிறது. நீண்ட காலமாக கூலி வேலை செய்து தமிழ்க்கிராமத்தில் தமிழராக வாழ்ந்த ஜெயரட்ண என்ற சிங்களவரை இனக்கலவரம் மூர்க்கம் பெற்ற சூழலில், அவரைப்பாதுகாத்து, மறைத்து வைத்துவிட்டு கலவரம் தணிந்த நிலையில் கதைசொல்லி கவனமாக அவருடைய வீட்டுக்கு அனுப்பி வைப்பதை இச்சிறுகதை கூறிச் செல்கிறது. இவருடைய முரண்பாடுகள் சிறுகதை வன்னிப்பகுதியில் எழுந்த யுத்தத்தையும் அந்த யுத்தத்தில் சுயநலத்துக்காக பலியிடப்பட்ட அப்பாவி இளைஞர்களின் வாழ்வையும் கூறிச் செல்கிறது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் முஸ்லிம் மக்களுக்கு அநீதியை இழைத்தது. இனங்களுக்கிடையில் விரோதத்தை வளர்த்தது என்பதை அறிந்து கொண்ட படைப்பாளிகள் சிலர் அவ்வன்முறைகளைக் கண்டித்தும் மனிதாபிமானத்தோடு பரஸ்பரம் தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களோடு இணைந்து வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தியும் சிறுகதைகளைப் படைத்தனர். முஸ்டீன் (ஹெராம்குட்டி), இளைய அப்துல்லாஹ் (துப்பாக்கிகளின் காலம்), ஓட்டமாவடி அறபாத்தின் (நினைந்தழுதல், ஆண்மரம், உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி) முதலானவர்களின் சிறுகதைகள் பல இத்தளத்திலேயே பயணிக்கின்றன. ஓட்டமாவடி அறபாத்தின் வெண்தாமரை, வன்மம், மறுபடியும் வெள்ளைக்கொடி, மண்ணோடு போய், பேயாட்சி, விருட்சம், காத்திருப்பு, நினைந்தழுதல், வேட்டை, போர்நிறுத்தம், நிகழ்வுகள், கப்பல் போன்ற கதைகள் போருக்குள் அலைந்து உலையும் வாழ்வையும் வலியையும் வெவ்வேறு கோணங்களில் பேசுபவை. கழுதைகளின் விஜயம், தேர்தல் காலக்குறிப்புகள், ஓணான்கள் போன்ற கதைகள் முஸ்லிம் அரசியல் தலைமைகளை சுயவிசாரணைக்கு உட்படுத்துகின்றன.

புலம்பெயர் எழுத்தாளர்களினாலும் போரை மையப்படுத்தி சிறுகதைகள் பல படைக்கப்பட்டன. முத்துலிங்கத்தின் 'சங்கல்ப நிராகரணம்' என்னும் கதை 1958ஆம் ஆண்டு இலங்கையில் கலவரங்கள் நிகழ்ந்த காலப்பகுதியிலே கணவனைப் பிரிந்து யாழ்ப்பாணத்திலிருக்கும் ஒரு பெண்ணின் மனதிலே ஏற்படும் சலனங்களைச் சித்திரிக்கிறது. இராணுவத்தில் சித்தார்த்தன் என்னும் சிறுகதை புலிகளில் சேர்ந்து மரணமுற்ற போராளியின் சகோதரி, புலம்பெயர்ந்த தேசத்தில் திருமணத்தின் நிமித்தம் நாட்டை விட்டு வெளியேற முற்படும்போது ஏற்படும் சிக்கலை எப்படி ஒரு இராணுவத்தளபதி தீர்த்து வைக்கின்றார் என்பதைச் சித்திரிக்கிறது. சிப்பாயும் போராளியும் சிறுகதை உரையாடல் வடிவில் நிகழும் கதை. கைது செய்யப்பட்ட போராளி ஒருவரைக் கொலை செய்யச் சிப்பாய் ஒருவன் தயாராகும்போது அவனின் துப்பாக்கியில் சிறுபிழை நடந்து விடுகிறது. அதனைச் சீர்செய்ய சிப்பாய் முயன்றுகொண்டிருக்கப் போராளி பேச்சுக்கொடுக்கின்றான். அவர்கள் இருவரின் உரையாடலே கதையாக விரிக்கின்றது.

சிங்கப்பூரிலுள்ள சிராங்கூன் சாலையில் இருக்கிற ஒரு அறை ஒன்றில் பேராசிரியருக்கும் துப்பரவு பணியாளராக வேலை செய்யும் பர்மாவை சேர்ந்த தமிழ்ப்பெண்ணுக்கும் இடையிலான உரையாடலே லதாவின் அரச மரம் சிறுகதை. சிங்கப்பூர் சவுத் பிரிட்ஜ் ரோட்டிலுள்ள மாரியம்மன் கோவில், தாய்லாந்திலுள்ள நான்குதலை புத்தர் குறித்து பேசும் இச்சிறுகதை இலங்கையில் உள்ள புத்தமதத்தின் தோற்றுவாய் குறித்தும் பேசுகிறது. அநுராதபுரத்தில் அசோக மன்னரின் மகள் சங்கமித்திரையால் வைக்கப்பட்ட வெள்ளரசுமரம், நீர்கொழும்பில் இருந்த அரச மரம் ஆகியவற்றின் கதைகள் கூறும் இச்சிறுகதை 1980, 1990 காலப்பகுதியில் இலங்கையில் நடந்த இன அழித்தொழிப்பு போர்பற்றியும், முள்ளி வாய்க்காலில் முடிவுற்ற இறுதியுத்தம் குறித்தும் பேசுகிறது. போர் முடிந்தபிறகு மதத்தின் பெயரால் இலங்கையில் நடக்கும் அநீதிகளையும் இச்சிறுகதை சாடுகிறது. இலங்கை அரசு, அரசமரம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் புத்தர் சிலைகளை அமைப்பதைப்பற்றியும் பேசும் இச்சிறுகதை இனவாதத்தின்பெயரால் தாய்லாந்திலும் தமிழர்கள் ஒடுக்கப்படுவதையும் பதிவு செய்கிறது.

சயந்தனின் மோட்டார் சைக்கிள் குரூப் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமில் நடக்கின்ற சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். பயிற்சிக் காலத்தில் இளைஞர்கள் எதிர்கொள்கின்ற மனோரீதியான உபாதைகளையும் உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் பகிடிக் கதைகளால் எதிர்கொள்ளும் மனச்சங்கடங்களையும் இச்சிறுகதை கதைசொல்லியின் வாய்மொழிக்கூடாக சொல்லிச் செல்கிறது. குறிப்பிட்ட காலப்பகுதியில் ஈழத்தில் நடந்தேறிய வன்முறைகளின் சாட்சியமாக விளங்கும் தர்மு பிரசாத்தின் பித்தளைத் தீர்வுகள் சிறுகதை இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை மிகைப்படுத்தலின்றி கூறுகிறது.

அகிலனின் மரணத்தின் வாசனை சிறுகதைத் தொகுப்பு ஒருவன் ஒரு தலைமுறையாக எதிர்கொண்ட மரணங்களின் வாசனைகுறித்துப் பேசுகிறது. பாம்புக்கடிக்கு அகப்பட்ட தந்தை இந்திய இராணுவத்தின் கெடுபிடியால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் மரணத்தை தழுவுகிறார். இதே போல் பாம்புக்கடிக்கு அகப்பட்ட சித்தி உரிய மருந்தின்மையால் மரணத்தைத் தழுவிக் கொள்கிறார். போரினால் இடம்பெயர்ந்த சூழலில் தான் வாழ்ந்த ஊரைப் பார்க்கச் சென்று மரணத்தை எதிர்கொண்ட அம்மம்மா என மரணங்களால் நிறையும் இத்தொகுப்பு கிளிநொச்சி எதிர்கொண்ட ஆக்கிரமிப்புக்களையும் ஆக்கிரமிப்பின் விளைவாக எழுந்த போர்களையும் தொடர்ச்சியான போர்களின் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வுகளையும் அவ்விடம்பெயர்வின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அகிலன் எதிர்கொண்ட இழப்புக்களையும் அதன் வலிகளையும் உணர்வுபூர்வமாகப் பேசிநிற்கிறது.

### மீபுனைவியல் நோக்கில் ஈழத்துச் சிறுகதைகள்

படைப்பிலக்கியவாதி நடத்தைவாதையில் எழும் முரண்களையும் முரண்வழி எழும் அகப், புறப்பிரச்சினைகளையும் மீளுருவாக்கம் செய்வதன் மூலம் புனைவைச் சாத்தியமாக்குகிறான். காணும் உலகின் நிஜமும் அறிவு வழியில் கட்டமையும் புனைவும் ஒன்றை ஒன்று கற்பிதம் செய்யும் நிலையில் பொருளுக்கும் சிந்தனைக்கும் இடையில் ஊடாடும் புனைவுகள் குறிப்பான்கள் வழி பொருண்மையைத் தக்க வைத்துக் கொள்கின்றன. குறிப்பான் வழி நிகழும் மீபுனைவுகளை உமாவரதராஜன், இராகவன், திசேரா, இ.சு.முரளி மலர்ச்செல்வன், அம்ரிதா ஏயெம், சித்தாந்தன், மஜித், மிஹாத் எனப் பலர் ஈழத்தில் சாத்தியமாக்கினர். சுபமங்களாவில் 1987 இல் வெளிவந்த எலியம் மூலம் இவ்வெழுத்து முறையை சாத்தியமாக்கிய உமாவரதராஜன் பிற்காலத்தில் அரசனின் வருகையை எழுதியதன்வாயிலாக ஈழத்துக்கு புதியபாதையை அமைத்துக் கொடுத்தார்.

கதையாடல்வழி மொழிக்கு அர்த்தம் கொடுக்கும் திசேராவின் கபாலபதி, வெள்ளைத்தோல் வீரர்கள், ராகவனின் வீட்டில், கலாவல்லி, சித்தாந்தனின் அம்ரிதாவின் புதிர் வட்டங்கள், அம்ரிதா ஏயெம்மின் 'விலங்கு தொகுதி ஒன்று அல்லது விலங்குகள் நடத்தைகள்' மலர்ச்செல்வனின் 'பெரிய எழுத்து' முதலான தொகுப்புக்கள் காலத்தின் பிரதிபலிப்பானாகவும் யதார்த்தத்தை மீறி எழும் புனைவுகளாகவும் காணப்படுகின்றன. சட்டகங்களை உடைத்து சாவகாசமான மொழிவழிச் சித்திரிப்புகளின் வழி இயங்கும் இப்பிரதிகள் ஆழ்படிமங்களாகவும் துலங்குகின்றன. பன்முகத்தன்மை கொண்ட மீபொருண்மையில் உருவாகும் இவ்வெழுத்துக்கள் ஒருமையற்ற வடிவத்தைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு காலகட்டத்திலும் படைப்பு மனம் மீது ஆதிக்கம் செலுத்துகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் மக்கள் கோரமாக வேட்டையாடப்பட்டார்கள். மரணபயத்துக்குள் உறைந்திருந்த கணப்பொழுதுகளை எலியம் எவ்வாறு வெளிப்படுத்தி நிற்கிறதோ அதற்கு சிறிதும் குறைவில்லாமல் தானா- விஷ்ணுவின் 'பூனையைக் கொல்பவனின் இரவு' சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது வீட்டுக்குள் வரும் பூனைகளை அச்சத்துடனும் பதட்டத்துடனும் கொல்ல முனைந்த ஒருவன் தொடர்ந்து பூனைகளை வேட்டையாடுகிறான். ஈற்றில் வீட்டுக்குப் பூனைகள் வராத நிலையில் பூனைகளைத் தேடிக் கொல்லும்நிலைக்கு உந்தப்படுகிறான். சட்டமும் அதிகாரமும் மக்கள் கொலைக்கு சோரம் போனதை 'பூனையைக் கொல்பவனின் இரவு' என்ற இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது.

ஈழத்து இலக்கிய உலகில் கபாலபதி, வெள்ளைத்தோல் வீரர்கள், தொகுப்பின் ஊடாக புதிய மொழிதலுக்கான புனைவுகளை உருவாக்கிய திசேரா யோவான் 14:2 என்ற சிறுகதை தொகுப்பின் வாயிலாக உணர்திறன் மற்றும் அறிவுத் தளத்தை விஸ்தரிக்கும் எழுத்துமுறைமையை உருவாக்கினார். சிங்களப் பேரினவாத ஆட்சியின் கீழ் தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகளையும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களையும் மறை குறிப்பாக (*Allusion*) தம்பிரதிகளில் வெளிப்படுத்தியவர். தமிழர்கள் ஆயுதக்குழுக்களால் வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டதையும் குரூரவன்முறையால் பாதிக்கப்பட்டதையும் இவரின் தொகுதிகள் வெளிப்படுத்தி நின்றன. மாண்டான் சரிதம் சிறுகதை குரூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு இறந்துபோன ஒருவனின் திவ்விய சரிதத்தை எழுதிச் செல்கிறது. அதிகார நீட்சிக்குள் வாழ்ந்த கொடூரமான வாழ்வை திசேராவின் சிறுகதைகள் பேசிச்செல்கின்றன. திசேராவின் யோவான் 14:12 சிறுகதைத் தொகுப்பு ஈழத்து அரசியல்வாதிகள், படைத்தளபதிகள், தேசிய தலைவர்களின் முகத்திரைகளைக் கிழித்து எறிவதுடன் கடந்த கால அரசியலின் வரலாற்றுப் போக்குகளையும் சுட்டிக்காட்டும் வரலாற்று ஆவணமாகவும் துலங்குகிறது. ஆழமும் அறிவும் விரிவும் கொண்ட திசேராவின் சிறுகதைகள் ஈழத்து இலக்கிய உலகைக் காத்திரப்படுத்தி செழுமைப்படுத்தின என்றால் அது மிகையில்லை.

கதாபாத்திரங்களை உருவாக்கி அதன் பின்னே நிகழ்ச்சிகளைத் தொடரச் செய்யும் சம்பிரதாய கதைசொல்லல் முறையைத் தகர்த்து மொழிக்குறியின் அர்த்த இயங்குமுறைக்கூடாக புதிய சாத்தியங்களை நிகழ்த்தியவர்களுள் ஒருவர் இராகவன். யதார்த்தம்- புனைவு என்ற வகைப்படுத்தல்களைக் கடந்து இயங்கும் ராகவனின் பனுவல்கள் சிறுகதை போர்க்கால ஈழத்து நடைமுறை வாழ்வியலைப் பேசுகிறது. சமூக அந்தஸ்துப் பெற்ற போலி மனிதர்களின் முகத்திரைகளை கிழிக்கும் இப்பிரதிகள் கருத்துப் புலப்பாட்டுடைய இலக்கிய உருமாற்றம் கொண்ட மீபொருண்மையில் இயங்குகிறது. மரபான கதையாடலை உடைத்து நூதனமான மொழிக்கூடாக அர்த்தச் செறிவுமிக்க கதைகளை எழுதியவர்களுள் இராகவனும் ஒருவர். கலாவல்லி முதலான கதைகள், விட்டில் - சமகால அரசியல் பகுப்பாய்வு முதலான தொகுப்புகளில் இடம் பெறும் சிறுகதைகள் ஈழத்து மக்களின் அரசியல் சூழ்நிலையையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் போலி மனிதர்களின் அந்தரங்கங்களையும் எமக்குணர்த்தி நிற்கின்றன. இவரின் வாமன அவதாரம், அணங்கு, அகலிகையின் தாகநதி முதலான சிறுகதைகள் நிஜமான வாழ்வின் அனுபவசாரத்தை கலாரீதியான புராணிகத் தொன்மங்களுடன் ஒன்றிணைத்து, உருமாற்றம் செய்கின்றன. ராகவனின் மனு புத்திரனின் படைப்புக்கள் என்னும் சிறுகதை சமூகத்தில் பெரிய மனிதர் என்னும் போர்வையில் நடமாடும் போலி மனிதர்களின் நிஜ முகங்களை உலகுக்கு வெளிச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக் காட்டுகின்றது. கலாவல்லியின் நெடுக்கு வெட்டு முகம் சிறுகதை ஐக்கிய தேசிய கட்சியினரால் 1981 இல் நூலகம் எரிக்கப்பட்டதையும் பின்னர் சந்திரிக்கா குமாரத்துங்க ஆட்சிக் காலத்தில் அந்நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டதையும் சுட்டி நிற்கிறது. ராகவனின் சாக்கோவின் சிந்தனை, கோட்பாடுகளின் மரணம், நே, தாவர இளவரசன் முதலான சிறுகதைகள் வடிவ நேர்த்திமிக்க உச்சபட்சமான படைப்புக்களாகும். இக்கதைகள் அதிகார அரசியலையும் போர் ஏற்படுத்தும் நெருக்கீடுகளையும் நாட்டின் நெருக்கடி நிலைகளையும் கோடிட்டுக் காட்டுகிறது.

பிரதிகளின் உருவம் உள்ளடக்கம் உணர்த்தும் முறைகுறித்துப் பேசும் சிறுகதைகளும் ஈழத்தில் எழுதப்பட்டுள்ளன. சித்தாந்தனின் நட்சத்திரங்களை மோகிப்பவன் சிறுகதையில் இடம்பெறும் அந்துவனுக்கும் கதைசொல்லிக்கும் இடையில் நிகழும் உரையாடல் படைப்பிலக்கிய சாத்தியப்பாடுகள் குறித்துப் பேசுகின்றன. இலக்கியத்தின் தரம், தரமின்மை குறித்து நிகழும் விவாதங்கள் உண்மைப் படைப்பைக் கண்டடையவும் பிரதியின் அகப், புறக் கட்டுமானங்களைச் சரியாக அணுகவும் உதவுகின்றன. ராகவனின் தேவேந்திரனுடன் உரையாடல் சிறுகதையும் புனைவிலக்கியத்தின் வடிவப்பிரக்ஞை குறித்துப் பேசுகிறது. புனைகதையின் வெளிப்பாடு வினைத்திறன் அற்றதாக உணரும்போது புனைவு பிறிதொரு வினைத்திறன் மிக்க வடிவத்தை உள்வாங்கிக்கொள்ளும் என்பதை இராகவனின் கதையில் நிகழும் வரைபடங்கள், குறியீடுகள் உணர்த்தி நிற்கின்றன. சிந்தனை ஆழமும் படைப்பு வீச்சும் நிறைந்த செய்நேர்த்திமிக்க சிறுகதைகளைக் கலாபூர்வமாகப் படைத்த சித்தாந்தன் புதிய சிந்தனை குறித்த அறிவுத் தேடலுடன் இலக்கிய உலகுக்கு நுழைந்தவர். ஆயுத வன்முறையால் அழிவுண்ட தேசத்தின் சிதிலங்களை புதிய கதை சொல்லல் முறைமைக்கூடாகத் தம்படைப்புக்களைச் சாத்தியமாக்கியவர். தர்க்கரீதியான முரண்வழி இயங்கும் அம்ருதாவின் புதிர் வட்டங்கள், கறுப்பு வெள்ளைப் பிரதி முதலான சிறுகதை அசாத்தியான மொழிவழிக் குறிப்பான்கள்வழி தன்னைத் தகவமைத்துக்கொள்கின்றன. காலங்காலமாக ஓடிக்கொண்டிருந்த நீரோட்டவேகத்தில் கலக்காது தனித்துலங்கும் சித்தாந்தனின் சிறுகதைகள் உருவ, உள்ளடக்கரீதியான சனாதன கட்டமைப்புக்களை தகர்க்கின்றன. அரசனும் குதிரைவீரனும் அழியும் காலத்தின் சனங்களும், வேட்டையன் முதலான சிறுகதைகள் ஈழப்போராட்டத்தின் அழிவையும் சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியையும் எடுத்துரைக்கின்றன. சித்தாந்தனின் மாமிசம் சிறுகதை விபரணப்பாங்கில் எழுதப்பட்ட சிறுகதை ஆகும். இந்திய இராணுவத்தின் சித்திரவதைகளைக் கோழி என்னும் குறியீட்டுக்கூடாக கூறும் இச்சிறுகதை அதிகார வன்முறைக்கு பலியாகும் மன்னுயிர்களை மனிதாபிமானத்தோடு அணுகுகிறது.

மகாபாரதத்தை மீள் வாசிப்புக்குட்படுத்தும் சிறுகதைகளில் ஒன்றே சித்தாந்தனின் யுகக்குருதி. அழகியல், கலைநுட்பம் என்ற இலக்கியக் குறியியல் செயல்பாடுகளையும் கதையாடல், கதைநிகழ்வு என்ற இலக்கியக் கட்டமைப்புச் செயல்பாடுகளையும் முன்களமாகக் கொண்டு இயங்கும் இச்சிறுகதை யுத்தத்தில் பலி கொள்ளப்பட்ட அப்பாவிச்சிறுவர்களான அபிமன்யுவின் மரணத்தையும் பாலச்சந்திரனின் மரணத்தையும் ஒரு புள்ளியில் இணைக்கிறது. உள்ளீடற்ற நிகழ்வுகளின் தோற்ற மாயையின் இன்மையிலிருந்து தொடங்கும் இச்சிறுகதை மொழிவழி கருத்தியல் தளத்தில் சிறுவர்கள் வேட்டையாடப்பட்ட மகாபாரத யுத்தத்தையும் முள்ளிவாய்க்கால் யுத்தத்தையும் கேள்விக்குட்படுத்துகிறது. ஒரு சமூகத்தின் அறவியலாக வடிவமைக்கப்பட்ட மகாபாரதத்தை மைந்தனை இழந்து தவிக்கும் சுபத்திரையின் ஆற்றாமைக்கூடாகவும் ஐவருக்கிடையில் அகப்பட்டு நரகவாழ்வு வாழ்ந்த பாஞ்சாலியின் மனோநிலைக்கூடாகவும் மீள்வாசிப்புக்குட்படுத்தும் இச்சிறுகதை தன் கணவரின் அசண்டையீனத்தால் யுத்தகளத்தில் வேட்டையாடப்பட்ட மகனை இழந்து தவிக்கும் மதிவதனியின் வேதனையும் அவளது கையறுநிலையையும் நுண்மனவோட்டவழி சித்திரித்துச் செல்கிறது. அழகியல், அறவியல், அரசியல் என்னும் தொடர் இணைப்பின் வழி வாழ்வின் விதிகளை சமூக உளவியலாகச் சித்திரிக்கும் யுகக்குருதி சிறுகதை அறிவறிதல் நிலையில் நின்று மகாபாரதத்தின் அறிவுருவாக்க நெறிகளை கேள்விக்குட்படுத்துகிறது.

மொழியாலும் அகவயப்பார்வையாலும் தனக்கான தனிப் பாணியை உருவாக்கிக் கொண்டவருள் சித்தாந்தனும் ஒருவர். தன்கதைகளில் மையமாக குறிவழிப்படிமம் ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் சித்தாந்தன் கதையில் அந்த குறிவழிப் படிமத்தை வந்தடைவதற்கான நிகழ்காட்சிகளை, புறப்பொருண்மை வாயிலாக இணைத்துக் கதை சொல்வார். இவரின் கதைகளில் மொழியின் ஒருங்கிசைவால் உருவாகும் நிகழ்காட்சிகள், உரையாடல்கள் தானாகவே ஒன்று சேர்ந்து ஒரு திருப்பத்தை உருவாக்கிக் கொள்ளும். கதையில் அமையும் இத்திருப்பம் நிகழும் சம்பவத்தைக் கதையின் முடிவாக்குவதுடன் நில்லாது கதையின் போக்கையும் மாற்றி அமைக்கிறது. இதற்கு தக்கசான்று மாசி 2022 ஜீவநதியில் வெளிவந்த ஆம்பி சிறுகதை. மனக்காட்சிப்பிரதிமைகளால் உருப்பெறும் ‘காலிங்கன் குறித்த கதையாடல் வழி இயங்கும் ஆம்பி, கோதையக்காவின் மரணத்துடன் வேகம் பெற்று மரணம் குறித்து ஐயங்களுடன் முடிவுக்கு வருகிறது. கதையின் திருப்பு முனையாக அமையும் கோதையக்காவின் மரணமே ஏலவே கதையில் போடப்பட்ட அத்தனை முடிச்சுகளையும் அவிழ்த்துச் செல்கிறது. அறிவுக்கு நிகரான புதிய அர்த்தத்தை குறிக்கும் சித்தாந்தனின் குறியீட்டு மொழி காலிங்கன் குறித்த கதையாடலுக்கு புதிய பரிமாணத்தைக் கொடுக்கிறது. பிரதியில் வெளிப்படும் காட்சிப் படிமங்கள் கதைக்களத்தின் கூர்மையை மேலும் ஆழப்படுத்துவதுடன் புறச்சூழலை வெளிப்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றன. ஜோர்ஜ் லூயிஸ் போர்ஜஸ் மற்றும் கேப்ரியல் கார்ஸியா மார்க்கஸ், குந்தர் கிராஸ். சால்மன் ருஷ்டி, பென் ஒக்ரி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ ராபர்ட் சுஸ்கின்ட் ஆகியோரால் கையாளப்பட்ட மேஜிக்கல் ரியலிசத்தை 'மனோ ராஜ்யவியல்', 'புதிய புராணவியல்' மரபுகளில் கையாண்டவர் சித்தாந்தன். சுற்றுப்புறச்சூழல் குறித்த புரிந்துணர்வின் விளைவாக எழுதப்பட்ட ''நவீன அசுரர்கள்' யதார்த்தவியலுக்குள் அடங்காத ஒன்று. ஆயினும் இதனை மனோவியல் அடிப்படையில் எழுந்த யதார்த்தமாகக் கூறலாம். ஏனெனில் கதை நடக்குமுலகு கனவுலகு. கனவு கனவாகவே கொள்ளப்படுமளவில் '''நவீன அசுரர்கள்' கதை யதார்த்தவியலின் அம்சங்களையே கொண்ட கதையாகவே மாறிவிடுகிறது. யதார்த்தத்துக்குட்பட்ட கதைசொல்லியின் நிஜவாழ்வும் கதைகாட்டும் யதார்த்தத்துக்குட்படாத இறையுலகும் முரண்வழிச் சித்திரிப்புக்கூடாக வெவ்வேறு தளத்தில் கற்பனையாகச் சிருஷ்டிக்கப்பட்டாலும் பூமியின் அழிவு மனிதர்களால் தொடங்கி விட்ட யதார்த்தத்தை கதை எமக்கு உணர்த்திச் செல்கிறது.

தொடரறு கதையாடலுக்கூடாக வெளிவந்த கதைகளில் மருதம் கேதீஸின் 'ஆண்களின் தீவு', 'ஹெல்மரும் நானும்10 மட்டைத்தேளும் நோறாவும் = ஒன்றுமேயில்லை', 'ஒளவை தரும் முகிலி' முதலான கதைகள் முக்கியமானவை. வடிவமைப்பாலும் சொல்லும் முறையாலும் வித்தியாசமான இச்சிறுகதைகள் சொல்லாடல்களின் வழி குறியீடுகள் மற்றும் அடுக்குகளை எழுத்தாக்கி இயங்குகிறது. ஒரு பாவையின் வீடு நாடக விமர்சனத்தை முன்னிறுத்தி நகரும் 'ஹெல்மரும் நானும் 10 மட்டைத்தேளும் நோறாவும் = ஒன்றுமேயில்லை' கதை மனைவியை தன் நுகர்வுப் பொருளாகவே கருதும் கணவனுக்கும் தன் பதி விருப்பமறிந்து நடக்கவிளையும் மனைவிக்கிடையிலான வாழ்வு குறித்தான புரிதல்களை அகமனவுணர்நிலைக்கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது. பிரதியையும் வாசகர்களையும் மையத்திலிருந்து வெளியேற்றுவதன் வாயிலாக இதனைச் சாத்தியப்படுத்தியுள்ளார் கதைசொல்லி. அர்த்தம், அர்த்தமின்மைக்கும் இடையிலான கதையாடல்களை உள்வாங்கி இயங்கும் 'ஆண்களின்தீவு' பேசப்படும் விடயத்தில் இருந்து விலகிச்செல்லும் புனைவுத்திக்கூடாகத் தன்னை முன்மொழிகிறது. எழுதப்படாத பிரதியை முன்வைத்துப் பேசும் இச்சிறுகதை எழுத்தின் போக்காலும் வித்தியாசமான நோக்காலும் அதீத புனைவாகத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது. கேதீஸின் 'ஒளவை தரும் முகிலி' தந்தைக்கும் மகளுக்கும் இடையிலான உறவுநிலைச் சிக்கல்களைத் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கிறது. தந்தை மீது மகள் வைக்கும் குற்றச்சாட்டுக்களை உபதலைப்பாகக் கொண்டு நகரும் பிரதி தாயைப் பிரிந்து தந்தையுடன் வாழும் மகளின் உள்ளத்தையும் அவளின் மனவடுக்குகளில் தாய் குறித்து விரியும் உணர்வுகளையும் நுட்பமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. சுயபிரக்ஞையுடன் கவனமிக்க அமைவுபடுத்தல் மூலம் வடிவம் கொள்ளும் இச்சிறுகதைகள் நுண்மன உணர்வுகளுடனும் விபரணமுறைச் சொல்லாடல்களுக்கூடாகவும் கட்டமைபவை.

## மீனவர் வாழ்வு

ஈழத்துச்சிறுகதைகளில் கடற்தொழிலாளர்களின் வாழ்வு உயிரோட்டமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீனவர்கள் பற்றிப் பல சிறுகதைகளை ஈழத்துப்படைப்பாளிகள் படைத்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் நவாலிப்பகுதி மீனவர்களைப் பற்றி அப்பச்சி மகாலிங்கமும் நாவாந்துறைப்பகுதி மீனவர்கள் பற்றி டானியல் அன்ரனியும் வல்வெட்டித்துறை கடற்கிராமங்களைப் பற்றி தெணியானும், ஆனைக்கோட்டை மீனவர்கள் குறித்தும் கொழும்புத்துறை மீனவர்கள் குறித்தும் செ.யோகநாதனும், தீவக மீனவர்கள் குறித்து மெலிஞ்சிமுத்தன், தமயந்தியும் மூதூர் கடற்கிராமம் பற்றி வ.அ.இராசரத்தினமும் மட்டக்களப்பு மீன்பிடித் தொழில் குறித்து செ.குணரத்தினமும் நீர்கொழும்பு கடற்கிராமம் குறித்து முருகபூபதியும் எழுதியுள்ளனர்.

முருகபூபதி நினைவுக் கோலங்கள் தொகுதியில் பதினான்கு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. கடற்கரை கிராமப்பின்னணியில் எழுதப்பட்ட நினைவுக்கோலங்களாக அச்சிறுகதைகள் உருப்பெறுகின்றன.

தமயந்தியின் ஏழுகன்னியர்கள் சிறுகதை அனலைதீவு தென்முனையும் புளியந்தீவு வடமுனையும் இணையும் மூக்கறுத்தான் குடாவை பிரதான களமாகக் கொண்டு படைக்கப்பட்டது. விபரணப்பின்னணியில் சித்திரிக்கப்படும் மீனவர்கள் தொழிற் களங்கள் நேர்த்தியான தொழில் நுணுக்கங்களுடன் கதையில் உணர்வுபூர்வமாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. ஏழுகன்னியர் குறித்த இச்சிறுகதை தமயந்தியின் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாச்சிக்குடா எழுபத்தேழு சிறுகதையும் மீனவர் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதை. முஸ்லிம் – தமிழர் மீனவன் வாழ்க்கைக் கூடாக நகரும் இக்கதையில் மீன்படும் இடங்கள் துல்லியமாக காட்டப்படுகிறன.

மனித வாழ்வின் அவலங்களை சமூகத்தில் வேர் கொண்டிருக்கும் குரூர முகங்களைக் கிராமிய வாழ்வின் உன்னதங்களுடனும் அதன் இயற்பியல்த் தன்மைகளுடனும் அழகுறக் காட்டும் படைப்புக்கள் நிறையவே வெளிவந்துள்ளன. அவ்வகையில் நந்தினி சேவியரின் சிறுகதைத் தொகுதிகளான 'அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்', 'நெல்லிமர பள்ளிக்கூடம்' இருதொகுப்பும் மண்ணின் மைந்தர்களின் வாழ்வை எழுதிச் சென்றவை. கடலோர வாழ்வியற் பின்னனியில் எழுதப்பட்ட 'மேய்ப்பன்', 'ஒற்றைத்தென்னை', 'கடலோரத்துக் குடிசைகள்' முதலான கதைகள் மீனவமக்களின் யதார்த்த வாழ்வினை அதனுடைய சமூகப் பிற்புலத்தில் வைத்துக் காட்சிப்படுத்துவதுடன் அம்மக்களின் வாழ்வியற் பிரச்சினைகளையும் கண்முன் நிறுத்துகிறது. ஆனந்தமயிலின் 'எழுது வினைஞனின் டயறி'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகளிலும் மீனவக்குடும்பங்களின் வாழ்க்கைநிலை உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கப்படுகிறது. சுய அனுபவத்தின் வெளிப்பாடுகளே இவரின் படைப்புக்கள். நாளாந்தம் நாம் காணும் நிகழ்வுகளை காட்சிப் படிமமாகத் தம் சிறுகதைகளில் சித்திரித்தவர். மீனவரின் வாழ்க்கையை தம் சிறுகதைகளில் கலாபூர்வமாகச் சித்திரித்தவர். இவரின் 'காக்காச்சி கரிமகளே' சிறுகதை அன்றைய சமூக நிலை, இடப்பெயர்வின் அவலம், அன்னிய ராணுவத்தின் வருகை, போர், இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகள் போன்றனவற்றை நகைச்சுவையுடன் வெளிப்படுத்தி நிற்கிறது.

மீனவர் களத்தை உயிர்ப்புடன் சித்திரித்தவர்களில் வ.அ.இராசரத்தினமும் ஒருவர். இவருடைய 'துணிச்சல்' சிறுகதை இலங்கைக் கடற்படையினர் கடலுக்குள் மீனவர்கள் செல்லக்கூடாது எனத் தடை விதித்த போது முஸ்லிம் மீனவர்கள் அதனை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பது குறித்துப் பேசுகிறது. வறுமையின் நிமித்தம் ஹராம் என்று கூறப்படுகின்ற நண்டைக்கூட பிடித்து விற்று வாழ்க்கை நடாத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலமைக்கு தள்ளப்பட்டதை இச்சிறுகதை எடுத்துரைக்கிறது.

கிராமப்புறவாழ்வியலையும் மீனவர் அவலத்தையும் செறிவும் துலக்கமுமான புனைவு மொழியில்அக்கறையுடன் வெளிப்படுத்தியவர்களில் முல்லை யேசுதாசனும் ஒருவர். இவருடைய 'ஒரு அகதியின் நாள்' சிறுகதை, ஈழத்தில் இருந்து தமிழ்நாட்டுக்குச் செல்லும் ஒருவன் அகதிமுகாமில் பிழைக்கவோ வாழவோ முடியாத இக்கட்டான சூழ்நிலையில் மீண்டும் இலங்கை வரும்போது அவன் எதிர்கொண்ட சிக்கல்கள், சிரமங்களைக் கூறுகிறது. கடலை நுட்பமாகச் சித்திரித்த சிறந்த படைப்புக்களில் இதுவும் ஒன்று. கடலை நம்பி வாழ்கின்ற மீனவர்கள் யுத்தத்தால் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களைச் சிரமங்களை அப்பட்டமாக ஆர்ப்பாட்டமின்றிக் கூறும் சிறுகதையே 'பாலன் பிறந்தார்'. கடல் பற்றிய நுட்பமான தகவல்களைத்தரும் இச்சிறுகதையை தேர்ந்த மொழியும் களச்சித்திரிப்பும் வளர்த்துச் செல்கின்றன.

## ஈழத்துச்சிறுகதைகளில் சமூக ஒடுக்குமுறை

சமூக ஒடுக்குமுறைக்கெதிராக குரல் கொடுத்த தெணியான் சொத்து, மாத்து வேட்டி, இன்னொரு புதிய கோணம், ஒடுக்கப்பட்டவர்கள் முதலான சிறுகதைத் தொகுதிகளினூடாக அறியப்பட்டவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான விவேகி இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை பிணைப்பு வெளியாகியது. அதனைத்தொடர்ந்து மல்லிகை, ஞானம், யாழ். முரசொலி, வீரகேசரி, தினக்குரல் உட்பட பல இதழ்களில் அயராமல் எழுதியவர். எல்லாம் மண்தான், கூரை ஒன்றுதான், தன்னிறைவுதேடுகிறார்கள், இவளின் கதை, இனியொரு விதி செய்வோம், மனிதம், மானங்கெட்டவர்கள், மாத்து வேட்டி, உள் அழுகல், பூதம் முதலான நல்ல சிறுகதைகளால் அறியப்பட்டவர். தெணியானின் இன்னுமா சிறுகதை சாதிச் செருக்கால் மனிதாபிமானம் இழந்து தவிக்கும் மனிதர்களின் கீழ்நிலை மனோபாவங்களை எடுத்துரைக்கிறது.

மனிதவாழ்வின் முன்னேற்றத்திற்கு சாதியம் தடையாக இருப்பதால் அதை இல்லாதொழிக்க வேண்டும்என்னும் உயர்சாதி ஆசிரியனின் அவாவைப் பிரதிபலிப்பதே குப்பிளான் சண்முகத்தின் 'விசித்திர உலகம்'. இதே போல் மனிதன் இன, மத, சாதி பேதமின்றி மனிதனாக வாழ்ந்தால் தெய்வமாகலாம் என்பதை குப்பிளான் சண்முகத்தின் 'மனிதன் தெய்வமாகிறான்' சிறுகதை எடுத்துரைக்கிறது.

அலெக்ஸ்பரந்தாமனின் அரோகரா சிறுகதை முற்றிலும் வித்தியாசமான முறையில் சாதிய ஏற்றத்தாழ்வுகளை எடுத்துரைக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் கோவிலுக்குச் சென்று தேர் இழுக்க முனைந்தால் கலவரம் ஒன்று வெடிக்கலாம் என்பதை உணர்ந்த இராணுவத்தினர் அந்த தேர் இழுப்பில் தாங்களும் கலந்து கொள்கின்றனர். அவர்களில் பலர் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டதுடன் மாமிசத்தை புசித்துவிட்டு தேர் இழுக்க வந்தவராகவும் காணப்பட்டனர். உயர்சாதியினரோடு சேர்ந்து ஒடுக்கப்பட்டவர்களும் இராணுவத்தினரும் தேர் இழுப்பதை அங்கதமாக இச்சிறுகதை கூறிச் செல்கிறது. அலெக்ஸ்பரந்தாமனின் சமூகமாறுதல்கள் எனும் சிறுகதை குருக்களின் மகன் இயக்கத்தில் பயிற்சி எடுக்கச்சென்று வீடு திரும்பும்போது அவன் பூசை செய்ய தகுதியற்றவன் எனக் கூறி விலக்கி வைப்பதையும் அதனால் விளையும் விளைவுகளையும் எடுத்துரைக்கிறது. உரிமை மறுக்கப்படும் போது குருக்களின் மகன் தடுப்பில் இருந்த சலவைத்தொழிலாளியின் மகளை திருமணம் செய்வதையும் சமூகமாறுதலாக இச்சிறுகதை கூறிச் செல்கிறது. இவருடைய மடத்துச்சோறு சிறுகதை மதத்தின் பெயரால் நடக்கின்ற சடங்காசார அனுட்டானங்களில் நேர்கின்ற பாகுபாடுகளை எடுத்துரைக்கின்றது. தமிழர் வாழ்வில் தொடர்கின்ற சாதிய முன்னெடுப்புக்களால் விளைகின்ற சமூக இழிவுகளை இவருடைய துஞ்சிடோம். இனி அஞ்சிடோம், இது போராடும் காலம் முதலான கதைகள் சித்திரித்து நிற்கின்றன. பெற்றோரின் கலப்புத் திருமணத்தால் ஓரங்கட்டப்படுகின்ற பெண்ணின் வாழ்வை அவள் வாழவேண்டியவள் சிறுகதையில் எடுத்துரைக்கும் அலெக்ஸ் பரந்தாமன் துஞ்சிடோம் - இனி அஞ்சிடோம், இது போராடும் காலம் முதலான கதைகளில் சாதிய முன்னெடுப்புக்களால் விளைகின்ற சமூக இழிவுகளையும் காட்சிப்படுத்தியுள்ளார்.

கோகிலா மகேந்திரனின் பூக்கள் நிறம் மாறுகின்றன சிறுகதையும் இத்தளத்திலேயே கட்டுறுகின்றன. ஒடுக்கப்பட்டவர்கள் செய்கின்ற இழிந்த வேலைகளைத்தான் புலம்பெயர் தேசத்திலும் தமிழர்களும் செய்கின்றனர் என்ற சேதியை உணர்த்தும் இச்சிறுகதை சாதி மாறி திருமணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் நடைமுறை விஷயங்கள் குறித்தும் பேசுகின்றது. சாதி மாறி திருமணம் செய்வதால் அது குடும்ப உறவுகளுக்கிடையில் விரிசல்களை உருவாக்குவதுடன் சமூகப்பிரச்சினையாகவும் மாறிவிடும் என்பதை இவரின் மனத்திருப்பம் என்ற சிறுகதை உணர்த்தி நிற்கிறது. சாதி தொடர்பாக இளைய தலைமுறையினரிடம் காணப்படும் மாற்றத்தை பரம்பரை இடைவெளிகள் என்னும் சிறுகதை எடுத்துரைக்கிறது. கோவில்களிலும் பொதுக்கிணறு, நீர்நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் தார்மீகவுரிமை மறுக்கப்படுவதுடன் நவராத்திரி பூசைக்கு நிவேதனப்பொருட்களைத் தயாரிக்கும் பணியிலும் இவர்கள் ஓரங்கட்டப்படுகின்றனர் என்பதை இச்சிறுகதை எமக்குணர்த்தி நிற்கிறது. அதேசமயம் சாதி ஏற்றத்தாழ்வின்றி அனைவரையும் பாடசாலையில் ஒன்றாக இருத்திக் கற்பிக்கும் ஆசிரியரின் ஈரமான மனோபாவத்தையும் இச்சிறுகதைகள் எமக்குணர்த்தி நிற்கின்றன. இவருடைய கலைகின்ற வேஷங்கள் சிறுகதை ஆசார சீலர்கள் என வெளியுலகுக்குத் தெரியும் உயர்சாதியினரின் அந்தரங்க வாழ்வில் வெளிப்படும் போலிமுகங்களை விமர்சித்து நிற்கிறது. கோகிலா மகேந்திரன் பலி, எங்கையோ ஒரு பிசகு, காலதரிசனம் முதலான கதைகளில் சாதி ஆசாரங்களையும் அவற்றினால் ஏற்படும் போலித்தனங்களையும் கண்டிக்கிறார்.

அநாதரட்சகனின் விகற்பம், வைராக்கியம் ஆகிய கதைகள் சாதிப்பிரச்சனை குறித்துப் பேசுகின்றன. வைராக்கியம் சிறுகதை சாதிய முரண்பாடுகளையும் தாண்டி எழும் காதல் சமூகத்தில் எவ்வாறு வெற்றி கொள்கிறது என்பதை மலையகத்தை புலமாகக் கொண்டு சித்திரிக்கின்றது. விகற்பம் என்ற கதை யாழ்ப்பாண சமூகத்தில் போருக்குப் பின்னர் நிலவக்கூடிய சாதிய உணர்வுகளை எடுத்துரைக்கின்றது.

சிவனுமனோகரனின் காமன்பொட்டல் சிறுகதை மலையகத்தில் ஆண்டுதோறும் ஆடப்படும் காமன்கூத்தை மையப்பொருளாகக் கொண்டு பின்னப்பட்டாலும் இச்சிறுகதை தோட்டங்களில் சாதிக் கொடுமையால் நிகழும் மரணங்கள் குறித்தும் பேசுகிறது. அடிநிலை மக்கள் எதிர்கொள்ளும் புதிய சவால்களை குவிவுபடுத்துவதில் பரணீதரன் எடுத்துக்கொண்ட சிரத்தையின் வெளிப்பாடே வெட்டியான் சிறுகதையாகும். குடிமை தொழில் செய்யக் கூடாது என்னும் வைராக்கியத்துடன் எழும் குடும்பத்தைப் போர் எவ்வாறு சிதைத்தது என்பதை எடுத்து விளக்கும் இச்சிறுகதை வெட்டியான் தொழிலில் ஈடுபடும் ஒருவனின் மனோநிலையை நுட்பமாகக் கூறிச் செல்கிறது. அடிநிலை மக்கள் எதிர்கொள்ளும் வன்கொடுமைகள், அவலங்களைப் பதிவு செய்யும் இச்சிறுகதை அடிநிலைமக்களின் வாழ்வில் வறுமையும் சாதியமும் ஒரு மனிதனை மேலெழ விடாது என்பதையும் வலியுறுகிறது.

புலம்பெயர் தேசத்துக்கு இடம்பெயர்ந்து சென்றாலும் சமூக அடுக்குகளில் புரையேறிப் போயிருக்கும் சாதி அங்கு மூர்க்கம் பெற்று நிற்பதைக் காணலாம். ஜீவகுமாரனின் சிறுகதைகள் சாதிய ஒடுக்குமுறைகளை அதிகம் வெளிப்படுத்தி நிற்கின்றன. இவருடைய விவாகரத்து சிறுகதை தன் மனைவி தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவள் என்பதை அறிந்த கணவன் தன் பன்னிரண்டு வருட திருமணபந்தத்தை முறித்துக் கொள்வதை எடுத்துரைக்கிறது. ஜீவகுமாரனின் கழிப்பு என்ற சிறுகதையும் சாதியை மையப்படுத்தி எழுந்த சமூக விலக்கினை எமக்குணர்த்தி நிற்கிறது. இச்சிறுகதையில் சாதியால் ஒடுக்கப்பட்டோர் தீண்டத்தகாதவராகப் புறக்கணிக்கப்படுகின்றனர்.

சுகனால் தொகுக்கப்பட்ட தீண்டத்தகாதவன் தொகுப்பு ஈழத்துச் சிறுகதைகளையும் புலம்பெயர் படைப்பாளிகளின் சிறுகதைகளையும் உள்ளடக்கி வெளிவந்தது. பதினைந்து சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்த இந்த தொகுப்பில் புகலிடப் படைப்பாளிகளின் மூன்று சிறுகதைகள் இடம்பெறுகின்றன. புலம்பெயர் தேசத்திலும் சாதியத்தின் அடிப்படையில் மக்கள் வன்முறைக்குள்ளாவதை தேவாவின் ஊசி இருக்கும் இடம்கூட என்ற சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. தமிழர்கள் இடம்பெயர்ந்தாலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டாலும் மனிதனோடு கூடப் பிறந்த சாதி மாறாது என்பதை தேவதாசனின் அசல் சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. அருந்ததியின் கேள்விகள் சிறுகதை புலம்பெயர் தேசத்திலும் சாதிகள் அழியாது என்பதைப் புலப்படுத்தி நிற்கிறது. ஒருவரை நோக்கி வினவப்படும் வினாக்கள் அவருடைய ரிஷி மூலத்தைக் கண்டறியவே என்பதை இச்சிறுகதை நன்குணர்த்தி நிற்கிறது. கருப்பி எழுதிய சைகையிற் பொருளுணர் சிறுகதை தமிழர்கள் எங்கு சென்றாலும் பழக்க வழக்கத்தை மட்டுமல்ல சாதியையும் கூடவே எடுத்துச் செல்கிறார்கள் என்பதை உணர்த்தி நிற்கிறது. நல்ல படிப்பு, நல்ல வேலையில் ஒருவன் இருந்தாலும் திருமணம் என்று வரும்போது சாதியே முதன்மைபடுத்தப்படுவதை விஸ்ணுவின் வாழ்க்கையினூடாக இச்சிறுகதை பதிவு செய்கிறது. உயிருக்குப் பயந்து, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நாடு விட்டு நாடு வந்தவர்களின் கதையே நானும் ஒகஸ்டீனாவும், ஒரு பந்தயக்குதிரையும். சக்கரவர்த்தியின் இச்சிறுகதை இங்கிலாந்திலுள்ள ஜார்ஜ் டவுனுக்கு அருகில் ஒரு மலை அடிவாரத்தை ஒட்டிய பகுதியில் நடக்கிறது. டானியலின் குதிரைப் பண்ணையில் வேலை செய்யும் பாபு தென்னாப்பிரிக்க அகதிப் பெண்ணான ஒகஸ்டீனாவைக் காதலிக்கிறான். பந்தயத்தில் குதிரை ஓடவில்லை என்பதற்கக் குதிரையைச் சுட்ட டானியல் பாபுவும் ஒகஸ்டீனாவும் ஒன்றாக இருப்பதைக் கண்டு சந்தேகப்பட்டு அவளையும் சுட்டுக் கொன்றுவிடுகிறான். அதேசமயம் பாபுவைப் பார்த்து காத்திரு. உன்னோடு பேசவேண்டும் என்று சொல்லிவிட்டு டானியல் போய்விடுகிறான். குதிரை, ஒகஸ்டீனாவின் கதை முடிந்த மாதிரி தன்னுடைய கதையும் முடியப்போகிறது என்ற கவலையில் பாபு காத்திருப்பதோடு கதை முடிகிறது. இனவெறி – நிறவெறி பற்றிய இக்கதை வாழ்வுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவுக்கும் இடையிலான ஜீவ மரணப் போராட்டத்தை நுட்பமாக எடுத்துரைக்கிறது. பாத்திபனுடைய சிம்மாசனம் சிறுகதை தமிழ்- சிங்கள உறவைப் பேதமின்றி காட்டுகிறது. இக்கதை சிங்களவர்கள் வாழும் சிறிய கிராமத்தில் மரக்காலை ஒன்றில் சிம்மாசனம் தயாராகும் விதத்தையும் சிங்களவரின் சாதியம் குறித்த மனோநிலைகளையும் விளக்கி நிற்கிறது.

சாத்திரியின் 'மல்லிகாவின் கதை', யாழ்ப்பாண வெள்ளாள மக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் எப்படி சாதியமைப்பை பாதுகாத்தார்கள் என்பதையும், அரசாங்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய காலத்தில்கூட தங்களருகே இருந்த அடிநிலை தமிழ்மக்களை எப்படி அந்நியமாக நடத்தினார்கள் என்பதையும் வெளிப்படையாகப் பேசிநிற்கிறது. சாத்திரியின் மல்லிகா சிறுகதை தான் வாழும் சமூகத்தில் சாதி அடிப்படையில் தனது குடும்பத்தினரால் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டாள் என்பதைச் சித்திரிக்கின்றது. புலம்பெயர்ந்து கொலண்டில் வாழும் அதே மல்லிகா போர் முடிந்த காலப்பகுதியில் ஊருக்குச்சென்று, ஆலயம் ஒன்றில் போரில் மடிந்த போராளி நந்தனின் பெயரில் பூசையும் செய்து அன்னதானமும் கொடுக்கிறாள். போருக்கு முந்திய பிந்திய காலகட்டங்களை இச்சிறுகதை பதிவு செய்கிறது. மக்களுக்கு, அதிலும் எமது சமூகத்தின் அடிநிலையில் வாழ்ந்தவர்களுக்கு உதவியவர்களுக்கு இயக்கங்கள் அளித்த அதிகப்பட்ச தண்டனைகளால் அவர்களுடைய குடும்பங்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பதை விநோதனின் வாழ்க்கைக்கூடாகவும் இச்சிறுகதை எடுத்துரைக்கிறது. சாத்திரியின் 'கைரி' என்ற கதை எளிய அடிநிலைப் பெண் ஒருத்தி, சமூக (சாதி) ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலிகொள்ளப்படுவதைக் கூறிநிற்கிறது. எந்தக் குற்றமும் செய்யாத, குற்றங்களையே விரும்பாத ஒரு முதிய கூலிப்பெண் எப்படி அரசியல் படுகொலையொன்றில், அநியாயமாகப் பலியிடப்படுகிறார் என்பதை சாத்திரி யதார்த்தபூர்வமாக இச்சிறுகதையில் விளக்கி நிற்கிறார்.

## ஈழத்துச்சிறுகதைகளில் தாய்மை

ஈழத்துச் சிறுகதைகளில் தாய்மைச் சித்திரிப்புக்கள் இயல்பாகவே வந்துவிடுகிறது. தன் குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சியையும் பார்த்து அகமகிழ்ந்து பூரிக்கின்ற தாய் தட்ட வேண்டிய நேரத்தில் தட்டியும், தட்டிக் கொடுக்க வேண்டிய நேரத்தில் தட்டிக் கொடுத்தும், தழுவ வேண்டிய நேரத்தில் தழுவியும் தாயாக நிற்கின்றாள். தாய்மையின் மேன்மையை சித்திரித்தவர்களில் மலரன்னையும் ஒருவர். அப்பாவின் தேட்டம் தொகுப்பிலுள்ள இவருடைய சிறுகதைகள் பலவற்றில் தாய்மை சிறப்பிக்கப்படுகிறது. கண்ணாடிச் சிதறல்கள், உதிரம் எழுதிய சரிதம், மனவிலங்கு முதலான சிறுகதைகளில் தாய் போற்றப்படுகிறாள். சிறை சென்ற கணவனை நினைத்தும் நோயில் வாடுகின்ற மகனை நினைத்தும் மனங் கலங்குகின்ற பெண்மையை இவரின் கோடைநதி சித்திரிக்கிறது. ஒரு புறம் தன் மகவையும் மறுபுறம் தன் கடமையையும் மதிக்கின்ற பெண்ணின் வாழ்வைப் பேசிச் சொல்லும் சிறுகதையே கடமையும் தாய்மையுணர்வும் கதை. மகனின் மறுபிறப்பாக நாயினைக் கருதி அதற்கு அன்பு காட்டுகின்ற தாய்மையை இது பிரமையா, கதையில் நுண்ணுணர்வின் தளத்தில் வெளிப்படுத்துகிறார். இவருடைய அனலிடைப்புழு தொகுப்பில் இடம் பெறும் வன்மம் சிறுகதை ஒருதாயை உயிரோடு இருக்கும் காலத்தில் தன் வீட்டில் வைத்துப் பார்க்காத உறவுகள் அவர் இறந்த பின் அவருக்கான இறுதிச் சடங்குகள் செய்வதில் ஆர்வம் காட்டுவதை இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது. யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் சிறுகதைகளிலும் தாய்மை உணர்வுத்தளத்தில் வெளிப்படுகிறது. எழுந்திரு கண்ணா சிறுகதை தாய் மனத்தை ஆன்மீகத்துடன் இணைக்கிறது. உள் மறைந்த உணர்வொன்று சிறுகதையில் போராளியை ஈன்ற தாய் லியனகே என்ற இராணுவவீரனில் தன் மகனைக் காண்கின்றாள். அவன் சிங்களவனாக இருந்தாலும் அவனின் மரணம் அத்தாயைக் கரையவைக்கிறது.

## ஈழத்துச்சிறுகதைகளில் அழகியல்

அழகியலுக்கும் அகநிலை உணர்வுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதியவர்களுள் குப்பிளான் சண்முகமும் ஒருவர். அழகியலை மொழி வழி வசமாக்கியவரும் இவரே. இயற்கையை மனிதனின் மன அவசங்களைத் தம் படைப்புக்களில் நுட்பமாகச் செதுக்கியவர். ஒரு மழை நாளின் அற்புத அனுபவங்களை பருவம் தப்பிய மழையைப் போலவே. சிறுகதையில் நுண்மையாகச் சித்திரித்தவர். மழையின் இதத்தையும் அது தரும் பரவச உணர்வையும் இச்சிறுகதையில் வெளிப்படுத்தியவர். இயற்கை வர்ணனைகள் இவருடைய ஆரம்ப கால கதை முதல் பிற்காலக் கதை வரை நீடித்தது. இவருடைய 'தடங்கள்' சிறுகதையில் பாறையில் முட்டிமோதிப் பிரவகிக்கும் நதியினை மொழிவழிக் காட்சிப்படுத்துவார்.

இயல்வாணனின் கதைகளிலும் களவர்ணனை மனித வாழ்க்கையோடு ஒட்டிச் சித்திரிக்கப்படும். இவருடைய புலர்காலையின் வலி பறவைகளின் வாழ்வை மனித வாழ்வோடு இணைத்துச் சொல்லும் கதை. குயில்கள், குருவிகள், சேவல்கள், செண்பகப் பறவையின் ஒலிகளோடு தொடங்கும் இச்சிறுகதை வசந்தகாலத்தின் இனிய நினைவுகளையும் இடப்பெயர்வால் அலைக்கழியும் மனித வாழ்வையும் பேசிநிற்கிறது. இவருடைய இன்னும் அதே சிறுகதையிலும் தம்பரப்பாவின் இயல்பான நடத்தைவாத முறைகள் காட்சிப்படிமங்களின் வாயிலாகவே தீட்டப்படுகின்றன. இச்சிறுகதை நடைமுறை யுத்தத்தை இரண்டாம் உலக மகாயுத்தத்தோடு இணைத்துச் சொல்வதாலும் வெவ்வேறு காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களை ஒரே மனோநிலையில் வைத்துப் பேசுவதாலும் தனித்துவமிக்க கதைகளில் ஒன்றாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறது.

## மாணவர் மனோநிலை

ஈழத்துச் சிறுகதைகள் பாடசாலை மாணவர்களின் பன்முகப்பட்ட மனோநிலைகளை வெளிப்படுத்தியுள்ளன. சாந்தனின் முளைகள் சிறுகதை பாடசாலை மாணவர்களின் உளவோட்டத்தை அதன் இயல்புநிலை குன்றாது அக்காலச்சூழலுடன் இணைத்துச் சொன்ன கதை. இதுபோல இலங்கையில் ஐந்தாம் ஆண்டில் நடக்கும் புலமைப் பரிசில் பரீட்சையால் நடக்கும் பரிசுகேடுகளை நுண்மனவோட்டத்தில் சித்திரிக்கும் சிறுகதையே இயல்வாணனின் பந்தயக்குதிரை. ஆசிரியரின் சுயகௌரவத்துக்காக மாணவர்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவதை இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது. அலெக்ஸ் பரந்தாமனின் தோற்றுப்போனவர்களின் வாக்குமூலம் சிறுகதையும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் தோற்றுப் போனவரின் வாக்குமூலமான கதையாக அமைகிறது. தோற்றுப் போனவரைக் குடும்பங்கள் தண்டிக்கும் காலத்தில் ஐந்தாம் ஆண்டில் நடக்கும் புலமைப் பரீட்சையில் சித்தியடையாத தன் பிள்ளைக்கு உறுதுணையாக நின்று ஆறுதல் சொல்லும் தந்தையின் மனோநிலையை இச்சிறுகதை பிரதிபலிக்கிறது.

கோகிலா மகேந்திரனின் அறிவியல் கதைகளில் வரும் பாத்திரங்கள் அறிவுபூர்வமானவர்கள். சாதாரண நிகழ்வுகளைக் கூட அறிவுபூர்வமாக அணுகும் பாத்திரங்கள். சிறுவர்களின் அகவய உணர்வுகளைப் புரிந்து அவர்களுக்கு எதைக் கொடுக்க வேண்டுமோ அதனை இத்தொகுப்பில் கோகிலா மகேந்திரன் அவர்கள் சாத்தியப்படுத்தியுள்ளார். பசுங்கிளி, டொல்பின், நரி, குருவி மாத்திரமின்றி மறைந்துபோன டைனோசர் உள்ளிட்ட விலங்குகளைச் சுற்றியும் கதைகள் பின்னப்பட்டுள்ளன. விஞ்ஞானத் தகவல்களும் அறிவியல் உண்மைகளும் கலந்தே கதைகள் பின்னப்பட்டுள்ளன.

சிவனுமனோகரனின் 'வகுப்பறைக் காவியங்கள்' செய்யாத குற்றத்துக்காக குற்றவாளியாக நோக்கப்படும் மாணவன் தன் அன்புக்குப் பாத்திரமான ஆசிரியருக்கு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு கொழும்புக்குச் செல்வதை உணர்த்தி நிற்கிறது.

சிவசேகரத்தின் பாடசாலை வாங்கு என்னும் சிறுகதை சிங்களவரிடம் காணப்பட்ட சாதிய நெறிமுறைகளைத் தமிழ்க் களத்தில் வைத்துக் கூறுகின்ற சிறுகதை. பாடசாலையில் தன் மகனுக்கு அருகில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மகன் கற்பதை விரும்பாத தந்தை அதனை முளையில் கிள்ளிவிடும் நோக்கில் பாடசாலையை அணுகுகிறார். அவரின் கோரிக்கையை ஏற்காத அதிபர் அவரிடம் கூறும் சமாதானம் ஆசிரியத்துறைக்கே முன்மாதிரியாக அமைகிறது. "அப்பையனுக்கு ஒரு பக்கத்தில் கற்பவன் உமது மகன் என்றால் அடுத்த பக்கத்தில் அவனுக்கு அருகில் இருந்து கற்பவன் என் மகன்" எனக் கூறி அதிபர் அவருக்கு முன்மாதிரியாகவும் விளங்குவதை இயல்பான உரையாடல் வழிக் காட்சிப்படுத்துகிறது இச்சிறுகதை. அநாதரட்சகனின் 'நிமிர்வு' தொகுப்பிலுள்ள பல கதைகள் பாடசாலை அனுபவங்களோடு தொடர்புபட்டவை. . 'சபலம்', 'நிமிர்வு' 'ஆறாத அவலம்', 'விகற்பம்', 'இழப்பு', 'தவிப்பு', 'பசித்த மனம்' முதலிய கதைகள் கல்விப் புலத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. கல்வி நடவடிக்கையில் காணப்படும் ஏற்றத் தாழ்வை, சமத்துவமின்மையை இவருடைய கதைகள் பேசிநிற்கின்றன. தம்பியின் மருந்துச் செலவுக்காக பாடசாலைச் சீருடையை விற்றதை இவருடைய சீருடை சிறுகதையில் கூறிச் செல்கிறார்.

## பெண்நிலைவாதம்

தற்காலச்சிறுகதைகளில் பெண்நிலைவாதம் முதன்மை பெறுகிறது. சமூகப் பண்பாட்டுச் சூழலில் ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தியும் பெண்மையை முதன்மைப்படுத்தியும் சிறுகதைகள் படைக்கப்படுகின்றன. உடல், உள ரீதியில் அடக்கப்பட்ட பெண் தன்னுணர்வை, சுயவிருப்பை வெளிப்படுத்தும் வகையில் இன்றைய சிறுகதைகள் படைக்கப்படுகின்றன.

அந்தனிஜீவாவினால் தொகுக்கப்பட்ட இருபத்தைந்து பெண் எழுத்தாளர்களின் தொகுப்பாகிய அம்மா, நிகழ்வாழ்வின் நடைமுறைச் சிக்கல்களை பெண்ணின் சுயம், வலி சார்ந்த இன்னோரன்ன உணர்வுகளுக்கூடாக வெளிப்படுத்தி நிற்கின்றது. வடிவமைப்பு, மொழி, பிரதேசம் என்னும் வகையில் இத்தொகுப்பில் இடம்பெறும் கதைகள் அனைத்துமே ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் பெண்புனைவு, பெண்ணுணர்வு, பெண்மொழி என்ற அடிப்படையில் அனைத்து சிறுகதைகளும் ஒன்றுபடுகின்றன. பெண்சார் சமூக உணர்வுப் பரிமாணங்களில் கட்டுறும் இக்கதைகள் தாய்மை, விரகதாபம், பிரிவு, உளவியல், சோர்வு, வறுமை, ஆணாதிக்கம், குடிபோதையால் சிதையும் வாழ்வு முதலான கருப்பொருட்களுக்கூடாகத் தன்னை முன்னிறுத்துகின்றன. குந்தவை, கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா முதலான மூத்த தலைமுறை எழுத்தாளர்களையும் உள்வாங்கித் தொகுக்கப்பட்ட தொகுப்பே இதுவாகும். பிள்ளைகளால் கைவிடப்பட்ட தாயின் மன உணர்வை வெளிப்படுத்தும் தாமரைச்செல்வியின் தாய்மையும், விவசாய சமூகப்பின்னனியில் தோன்றிய கீழ்நிலை மத்தியவர்க்கம் மேல்நிலை மத்தியவர்க்கத்துடன் தன்னை பிணைக்க முற்படும் வேளையில் அதன் ஆளுமைகள் முற்று முழுதாகச் சிதைக்கப்படுவதை விளக்கும் 'ஆளுமைகள் சிதைக்கின்றன' கதையும், மரணம் நிகழும்போது உயிர்ப்பொன்று உருவாக்கம் பெறுவதை விளக்கும் கோகிலா மகேந்திரனின் 'மரணிப்பிலும் உயிர்க்கும்' கதையும் தன்னளவில் சிறப்பான கதைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பில் முகம் கொள்கின்றன.

சமூக, கலாசார, அரசியல், பொருளாதார சூழலில் பெண் எதிர்நோக்கும் நெருக்கடிகள் மற்றும் சமத்துவமின்மையால் ஏற்படும் மனச் சங்கடங்களை முன்னிறுத்தியும் ஈழத்துச் சிறுகதைகள் தோன்றியுள்ளன. பெண் என்ற நிலையில் தாம் எதிர்நோக்குகின்ற அடக்குமுறைகளுக்கான எதிர்வினைகளாகவும் மன ஆதங்கங்களின் வெளிப்பாடாகவும் இச்சிறுகதைகள் தோன்றியுள்ளன. குந்தவை, பத்மா சோமகாந்தன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், தாமரைச்செல்வி, சந்திரகாந்தா முருகானந்தன். பவானி சிவகுமார். பிரமிளா செல்வராஜா, கெக்கிராவ சஹானா, லறினா ஏ ஹக், மஸீதா புன்னியாமின், வசந்தி தயாபரன், வட்டவளை புனிதகலா, மலரன்னை முதலான படைப்பாளிகள் இத்தளத்தில் தொடர்ந்தும் பயணித்து வருகின்றனர். அம்பை, குட்டிரேவதி, உமாமகேஸ்வரி முதலான படைப்பாளிகளிடம் இருக்கும் பன்முகச் சிந்தனை வீச்சையும் ஆற்றோட்டம் போன்ற தெளிந்த ஓட்டத்தையும் ஈழத்தில் சிறுகதைகளில் காண்பது அரிதாகவே உள்ளது. ஆயினும் புலம்பெயர் படைப்புக்கள் இதனைச் சாத்தியப்படுத்தியுள்ளன. பிரதீபா தில்லைநாதன், தமிழ்நதி, லதா உதயணன், நிருபா, சுமதிரூபன் போன்றோர் நல்ல சிறுகதைகள் பலவற்றைத் தந்துள்ளனர். புறவுலகை எதிர்கொள்வதில் ஏற்பட்ட மனச்சங்கடங்களையும் புதிய அனுபவங்களையும் வெளிப்படுத்தும் இவர்களது சிறுகதைகள் ஆணாதிக்கத்துக்கு எதிரான போர்க்குரலாகவும் ஒலிக்கிறது.

பெண்ணுணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட ‘புது உலகம் எமை நோக்கி’ என்ற தொகுதி 23 சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்தது. புகலிட இலக்கிய வரலாற்றில் இத்தொகுதி முக்கியமானது. சமூக அக்கறையும் பெண்ணியம் குறித்த விழிப்புணர்வும் கொண்ட பெண்களால் எழுதப்பட்ட இச்சிறுகதைகள் ஆண்மையவாத சமூகத்தில் பெண்படும் அவலங்களையும் சமத்துவமின்மையால் சமூகத்தில் பெண் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. வீட்டு வேலைக்குச் செல்லும் பெண்கள் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவதை தேவாவின் சுரண்டலின் கொடுக்குகள் சிறுகதையும் சாதி ஒழிப்பு, முற்போக்கு என்று மேடையில் பேசுபவர்கள் திருமணம் என வரும்போது தம் கொள்கைக்கு மாறாக நடப்பதை சுகந்தியின் பொய் முகம் சிறுகதையும் உணர்த்தி நிற்கின்றன. நிருபாவின் தஞ்சம் தாருங்கோ சிறுகதை இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு வருவதற்குப் புறப்படும் ஒவ்வொரு பெண்ணும் ஏஜென்சிக்காரர்களாலும் பிற ஆண்களாலும் கேவலமாக நடாத்தப்படுவதை எடுத்துரைக்க ஒரு பெண் தனது உரிமைகள் மறுக்கப்படும்போது அதற்காகப் போராடுவாள் என்பதை நளாயினி இந்திரனின் அடுத்த காலடிகள் சிறுகதையும் கூறிநிற்கின்றன.
பல்கலைக்கழகப் பத்திரிகையான வசந்தம் பத்திரிகையில் சித்திரத்தில் பெண் எழுதி சிறுகதைக்கூடாக அறியப்பட்ட ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் சாதி ஒடுக்குமுறைகளையும் வர்க்க பேதங்களையும் பொருளாதாரச் சுரண்டல்களையும் சீதனப்பிரச்சினையால் நிலைகுலையும் குடும்பங்களையும் தம் சிறுகதைகளில் ஆழமாக வெளிப்படுத்தியவர். மல்லிகையில் வெளியான ரத்தினம் அப்பா என்ற சிறுகதை யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலிருந்த கொடுமையான சாதியுணர்வை யதார்த்தமாக வெளிப்படுத்தி நின்றது. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் அரை குறை மனிதர்கள் தொகுப்பு சூழல் நெருக்கடியால் அல்லற்படும் மாந்தர்களையும் சிங்களப் பேரினவாதத்தால் நிலைகுலைந்து வாழும் தனிநபர்களையும் புலம்பெயர் சூழலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கூறிநிற்கிறது.

தமிழ்நதியின் சிறுகதைகள் தமிழ் இனத்தின் மேல் கவிந்திருக்கும் சமூக, பண்பாட்டின் வேர்களில் கட்டுறுபவை அன்பை முன்னிறுத்தி மானுட அறத்தைப் பேசுபவை. ஆழமான சொற்சேர்க்கைக்கூடாகவும் கவித்துவ மொழிதலுக்கூடாகவும் நகரும் இவருடைய சிறுகதைகள் வசீகரமானவை. தமிழ்நதியின் சிறுகதைகள் தாயகத்தில் வாழ்ந்த வாழ்வின் இனிய நினைவுகளை போரின் அவலங்களை இடப்பெயர்வுகளை புலம்பெயர் வாழ்வின் போலி முகங்களை, பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. மனித மனத்தினுள் உறைந்திருக்கும் நளினமான பெண்ணுணர்வுகளை நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது, மாயக்குதிரை என இருதொகுப்புகளில் இதமாகப் பதிவாக்கியுள்ளார். இவருடைய மாயக்குதிரை, தாழம்பூ, நித்திலாவின் புத்தகங்கள், மலைகள் முதலான கதைகளில் வாழ்வில் எதிர்கொண்ட சம்பவங்களை, நெருக்கடிகளை மனித மனத்தில் புதைந்திருக்கும் அனுபவங்களை நூதனமான முறையில் படைப்பாக்கியுள்ளார். நூற்றாண்டு தாண்டிய காலப்பிரதிமைகளை ஒரே நேர்கோட்டில் இணைக்கும் தாழம்பூச் சிறுகதை, பெண்கள் படும் துயரங்களையும் காலச்சுழலில் சிக்கி அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சமூகம் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் பேசிச்செல்கிறது. யதார்த்த வாழ்வில் கடனால் அல்லல்படும் ஆண்மகனின் வாழ்வில் நிகழும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்டதே இவரின் கடன் சிறுகதை ஆகும். புலம்பெயர் வாழ்வு மனிதனுக்கு திணிக்கப்பட்ட நரகமே என்னும் படிமத்தை இச்சிறுகதை உணர்த்தியுள்ளது. தமிழ்நதியின் சிறுகதைகளில் முக்கியமானதொன்று நித்திலாவின் புத்தகங்கள். புத்தகங்களை மோகிக்கும் பெண்ணின் கதையாக விரியும் இச்சிறுகதை பெண்ணுக்கும் புத்தகங்களுக்கும் இடையிலான மானசீக உறவைப் பேசுகிறது. இவருடைய போர்க்காலச் சிறுகதைகளில் போரின் அகோரத்தால் விளையும் பாதிப்பும் யதார்த்தத்திற்கு அப்பாலான அரசியல் சிந்தனைகளுமே மேலோங்கி நிற்கின்றன. இவருடைய காத்திருப்பு சிறுகதை இராணுவத்தால் பிடிக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாகி சிறை மீண்ட இளைஞன் இயக்கத்துக்குச் சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை இணைத்துக் கொண்டு பின்னர் வீரச்சாவைத் தழுவிக்கொள்கிறான். 32வருடமாக அவனைத் தேடிய தாய் ஒரு கட்டத்தில் பழைய செய்திப் பத்திரிகையின் வாயிலாக மகன் வீரமரணம் அடைந்த செய்தியறிந்து மனநிறைவடைகிறாள்.

பெண்மையின் எண்ணங்களை, உணர்வுகளை மடைமாற்றம் செய்யும் கோகிலாமகேந்திரனின் சிறுகதைகள் சமூகவாழ்வில் பெண் எதிர்நோக்கும் நெருக்கீடுகளையும் பாதிப்புக்களையும் பேசுகிறது. தமிழ் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பாரிய பிர்ச்சினைகளில் ஒன்று சீதன நடைமுறையாகும். கோகிலா மகேந்திரனின் வதை சிறுகதை காதலித்தவன் சீதனம் கேட்டதால் மணவறையில் திருமணநாளன்று பணத்தைக் கொடுத்து விட்டு பிரிந்த பெண் மாதாமாதம் ஒரு தொகைப் பணத்தை அனுப்பி அவனை வதைக்கிறாள். இச்சிறுகதை நடைமுறை வாழ்வை பிரதிபலிக்கவில்லையாயினும் பெண்ணிலை நோக்கில் கருத்தியல்வாதக் கதையாக நிலைபெறுகிறது. இவரின் அர்த்தமற்ற ஒரு வாழ்வு அர்த்தமுள்ளதாகிறது சிறுகதை மறுமணம் என்று கூறிக்கொண்டு வரும் ஆண்களுக்கு பொதுநோக்குக்கப்பால் நிறையச் சீதனம் வாங்கலாம் என்ற எண்ணமே மேலோங்கி இருப்பதைக் கண்டு பொங்கும் பெண்மையின் சீற்றத்தை வெளிப்படுத்துகிறது. தலைமுறைகள் முரண்படும்போது சிறுகதை ஆணுக்கு பெண் கொடுக்கும் சீதனத்தை கொடுக்கும் அப்பெண்ணே அனுபவிக்க வேண்டுமே தவிர அதில் கைவைக்க யாருக்கும் உரிமையில்லை என்பதைக் கூறிநிற்கிறது. ஆரோக்கியமான சமூக உருவாக்கத்துக்கு சீதனம் தடையாக இருப்பதை கோகிலாவின் சிறுகதைகள் விளக்கி நிற்கின்றன.

சந்திரகாந்தியின் தொடரும் தலைமுறைகள் தினமுரசில் வெளிவந்த பத்தொன்பது சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பாகும். இவரின் பிறிதொரு தொகுப்பான ஸ்திரி இலட்சணம் தினமுரசு, ஞானம், தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்த பன்னிரு சிறுகதைகளை உள்ளடக்கியது. மனிதநேயத்தையும் மனித உணர்வுகளையும் வெளிப்படுத்தும் கதைக்கருக்களாகக் கொண்டு சிறுகதைகளைப் படைத்த சந்திரகாந்தி புலம்பெயர் மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டும் சிறுகதைகளை எழுதியவர். இவருடைய வெளிநாட்டுக் குஞ்சுகள் புலம்பெயர் சூழல் மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய ஆடம்பரப் பகட்டையும் தாக்கத்தையும் துல்லியமாக வெளிப்படுத்துகிறது. தொடக்கம், மையம், முடிவு என்னும் எடுத்துரைப்பு முறைமைக்கூடாக விரியும் ‘உறவு, அன்புள்ள வாசகனே, கலாட்டா கல்யாணம், அத்தியாயங்கள், அது வேறு சமாச்சாரம் ஆகிய கதைகள் குடும்பப் பிணக்குகளை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டவை. பெரும்பான்மையான கதைகளில் ஆசிரியரே கதை சொல்லியாக இயங்குகிறார். சித்திரா நாகநாதனின் சிறுகதைகள் திருகோணமலையை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. பதினைந்து சிறுகதைகளை உள்வாங்கி வெளிவந்த கிராமத்து மண்கள் சிவக்கின்றன என்னும் தொகுப்பு தனிமனித அநுபவங்களுக்கூடாக போரையும் போரியல் வாழ்வையும் இணைக்கின்றன.

### ஈழத்துச் சிறுகதைகளில் புதிய இயங்கு தளங்கள்

அஜந்தகுமாரின் இனிப்புக்கதைகள் புதியவடிவத்தை உள்வாங்கி எழுதப்பட்ட பரிசோதனை முயற்சி எனலாம். இத்தொகுப்பில் வரலாறு தொடக்கம் அவரவர் பார்வை அவரவர் கோணம் ஈறாக பதினான்கு கதைகள் உள்ளன. தனிமனிதனின் அகத்தில் தோன்றும் எண்ணங்களின் சுயம்சார்ந்த வெளிப்பாடாக அமையும் ஒவ்வொரு கதைகளிலும் அ,ஆ,இ,ஈ என நான்கு பகுதிகள் உள்ளன. நான்கு பகுதிகளில் முதல் மூன்று பகுதிகளும் அவர் தன் வாழ்வில் எதிர்கொண்ட அனுபவங்களைப் பேசுகின்றன. ஈற்றுப்பகுதி அவ்வனுபவங்கள் எமக்கு போதிக்கும் படிப்பினைகளையும் கூறிநிற்கின்றன. ஈழத்து தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகளின் புதிய வடிவங்களைப் பரிசோதித்துப் பார்க்கும் முயற்சிகள் காலத்துக்கு காலம் தொடர்ந்த வண்ணம் உள்ளன. சாந்தனின் கடுகுக்கதைகள், செம்பியன் செல்வனின் குறுங்கதைகள் நூறு, இமாம் அத்னானின் மந்திரிக்கப்பட்ட சொற்கள் முதலான தொகுப்புக்கள் வடிவரீதியான மாற்றங்களை உள்வாங்கி வெளிவந்தன. இவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்ட வடிவமே அஜந்தகுமாரின் இனிப்புக்கதைகள். மகனாக, பேரனாக, பாடசாலை மாணவனாக, பக்தனாக, விளையாட்டு வீரனாக, ஆசிரியனாக, கவிஞனாக எனப் பலவகையான அநுபவங்களைப் பேசும் இத்தொகுப்பு படைப்பாக்கமும் கருத்துகளின் பிரதிபலிப்பானாகவும் விளங்குகிறது.

வைத்திய கலாநிதி எம்.எம்.நௌஷாத் வெளிச்சத்துக்கு வருவோம் சிறுகதை வாயிலாக தமிழ் இலக்கியத் துறைக்குள் காலடி எடுத்து வைத்தவர். இவருடைய சொர்க்காபுரிச் சங்கதிகள் என்ற நூல் கச்சிதமான வடிவமைப்பையும் செழுமையான மொழிநடையையும் கொண்டது. புதிய மொழிதலுக்கூடாக தன்னை முன் மொழியும் இப்பிரதி வாசிப்பவன் மனோநிலைக்கேற்ப புதிய பிரதிமைகளை உருவாக்கவல்லது. மக்களின் வாழ்க்கை குறித்தான எண்ணப்பதிவுகளை அவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் நெருக்கடிகள் முதலானவற்றை சிறுகதையாகப் படைத்தார். அதிதுடிமைக் குணாம்சம் வைத்தியனுக்கும் நோயாளிக்கும் இடையிலான உறவுமுறையில் ஏற்படும் சிக்கலை எடுத்துரைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நோயாளியின் உடல் மீது ஒரு வைத்தியன் செலுத்தும் அதிகாரத்தையும் அதேநேரம் அவ்வுடல்மீது வைத்தியனுக்கிருக்கும் பொறுப்புணர்ச்சியை பற்றியும் பேசுகிறது இச்சிறுகதை.

காலத்தை ஒப்பனைகளால் கடந்து தேவதைக்கதைகள் வாசகனின் மனதில் புதிய விதைப்புகளை சிந்தனைகளாய் தருகின்றன. கதையில் இடம்பெறும் தலைப்புக்களும் புதுமையானவைகளே. அதிதுடிமைக் குணாம்சம், அன்டிலோப்பின் நளினநடை, சின்ன மனிதர்கள் வாழும் தீவு, நைல் நதிக் குழந்தை, மெர்ஸலீனாக்கு மோட்சம், ஜன்னலில் குடியிருத்தல் முதலான தலைப்புக்கள் தமிழ் சிறுகதை உலகுக்கும் புதியனவே.

அகமது பைசலின் வானத்தை முகர்ந்து பார்ப்பவன் தொகுப்பு நவீன உத்திகளை உள்வாங்கி எழுதப்பட்ட தொகுப்பாகும். சாதாரண வாசிப்புக்கு எட்டாத இக்கதைகள் ஆழ் அர்த்தங்கள் நிறைந்தவை. இத்தொகுப்பில் எழுத்தில்லா புத்தகங்கள் தொடங்கி மாயம் ஈறாக நாற்பத்தொன்பது சிறுகதைகள் உள்ளன. உணர்வுத்தளத்தை விடுத்து கருத்தியல் தளத்தில் மையங்கொள்ளும் இச்சிறுகதைகள் சமகால வாழ்வின் மீதான கேள்விகளை தமதாக்கிக் கொள்கின்றன. இவருடைய எழுத்தில்லா புத்தகங்கள் எழுத்துக்களை நிராகரித்த புத்தகங்கள் குறித்து கதைக்கின்றன. நேரடி வாசிப்புக்குட்படாத எழுத்துக்கள் குறித்து பேசும் இக்கதை யதார்த்த பாணியில் எழுதப்பட்டதல்ல. வலிந்து உருவாக்கப்பட்ட இக்கதைகளை மேலெழுந்தவாரியாகப் படிப்பது அவ்வளவு எளிதன்று. இவ்வெழுத்துக்கள் வாசிப்பவர் மனோநிலைக்கமைய மாறும்தன்மை கொண்டவை.

இமாம் அத்னானின் மந்திரிக்கப்பட்ட சொற்கள் என்ற புனைவுப்பிரதி ஜெமோசுவின் அடையாளம் முதல் ஆசிரியர் வராத போது ஈறாக முப்பது கதைகளைக் கொண்டது. கதை சொல்லுதல் என்ற வரையறைக்குள் அடங்க மறுக்கும் இப்புனைவுகளை ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்குள் அடக்க முயன்றபோது புனைவுருவாக்க கதைகளாக கட்டமைகின்றன. ஆடு ஒரு இயந்திரத்திடம் தன் அடையாளத்தை நிறுவ முயலுதலே ஜெமோசுவின் அடையாளம் என்ற சிறுகதை. பிழுக்கையிட்டு தன் அடையாளத்தை நிறுவ முனையும்போது போதியளவு பிழுக்கைகளை இட அதனால் முடியாமல் போகிறது. இதற்கு காரணம் உணவின்மை. ஆயினும் அதன் அடையாளம் மறுக்கப்படுகிறது. இதனால் அடையாளமிழந்த ஆடு அவ்வியந்திரத்தை தாக்குகிறது. அத்தோடு கதை முடிவுக்கு வருகிறது. சூறத்துல் நானும் என் எதிர்த்தலும் நானும் என்ற பிரதி பைபிள், திருக்குறானில் கூறப்படும் வாக்கியங்கள் போல் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனை றியாஸ் குரானா அல்குர்ஆனின் நெரேடிவ் ஃபோம் என வரையறுப்பார். புனைவுக்கு முற்றிலும் மாறான வடிவத்தை உள்வாங்கி இங்கு கதை சொல்லப்படுகிறது. நிர்பந்திக்கப்பட்ட கதைசொல்லுதல் முறையில் இருந்து விலகி கருத்தியலை தர்க்கபூர்வமாக அணுகி அதீத சாத்தியங்களை நிகழ்த்தும் இமாம் அத்னானின் புனைவுகள் சம்பவங்களின் கட்டமைப்புக்களால் ஆனது. முப்பது தலைப்புக்களை உள்ளடக்கி எண்பத்தேழு பக்கங்களில் வெளிவந்த இத்தொகுப்பினை றியாஸ் கவிதைச் சம்பவமாக நோக்க மல்லியப்புசந்தி திலகர் சிந்தனா மொழியை எழுத்துப்பிரதிகளாக்கும் முயற்சி என்பார். மரபுசார்ந்த வடிவமைப்பிலிருந்து வேறுபடும் இப்பிரதி கதையாகவும் அதேசமயம் கவிதையாகவும் இயங்கும் ஆற்றல் கொண்டது.

## இலக்கிய கர்த்தாக்களை பாத்திரங்களாகக் கொண்ட சிறுகதைகள்

இன்றைய ஈழத்துப் புனைகளங்கள் புதிய கருப்பொருட்களுக்கூடாக தம்மை மீள் உருவாக்கம் செய்கின்றன. அண்மைக்காலத்தில் இலக்கியவாதிகளைப் பிரதான பாத்திரமாகக் கொண்டும் சிறுகதைகள் படைக்கப்படுகின்றன. இலக்கியவாதிகள் மீது கொண்ட காழ்ப்புணர்வின் காரணமாகவும், சமூகத்தில் நடமாடும் இலக்கியவாதிகளின் முகத்திரைகளை கிழித்தெறிவதற்காகவும் இப்புனைவுகள் உருவாக்கப்படுகின்றன. அதேசமயம் ஒருவரை நோக்கி கைநீட்டமுடியா சூழலில் அவர் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் விமர்சனம் என்ற போர்வையில் அவர்மீது சேற்றினை அள்ளி வீசுவதற்குமுரிய புனைகளனாக சிறுகதைகள் விளங்குகின்றன. வக்கிர நோக்குடன் இவ்வாறு உருவாக்கப்படும் படைப்புக்களில் படைப்பாளியின் பெயர், உடல், ஊர், தொழில், அமைப்புக்கள் நேரடியாகவின்றி அவர்களை இனங்காட்டும் குறிப்புக்கள் ஊடாக வெளிப்படுத்தும்போது இதயசுத்தியுடன் இயங்கும் உண்மையான படைப்பாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். படைப்பாளியின் வாழ்வில் நிகழும் சம்பவங்களை பொய்மை கலந்த குறிப்புக்களுடன் நேரடியாக வெளிப்படுத்தும்போது அப்படைப்பாளியை என்றுமே அறியாத வாசகன் திட்டமிட்டு பழிவாங்கும் நோக்குடன் படைக்கப்படும் இப்படைப்புக்களை உண்மையென்றே நம்புவான். என்.கே.ரகுநாதன் பேராசிரியர் க.கைலாசபதியை மையப்படுத்தி எழுதிய நிலவிலே பேசுவோம், அ.யேசுராசாவின் விம்பத்தைச் சிதைக்கும் முகமாக ராகவனால் எழுதப்பட்ட 'யேசுகாவியம்', நந்தினி சேவியரின் நன்நடத்தை மீது சகதியை அள்ளி வீசுமாறு மலர்ச்செல்வனால் எழுதப்பட்ட 'மனக்கால்' முதலான கதைகள் உண்மைச் சம்பவங்கள் ஒரு சிலதை அடிப்படையாகக் கொண்டு மெய்மை மீது கட்டியெழுப்பப்பட்ட புனைவுகளே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தவையின் யோகம் இருக்கிறது, பரணிதரனின் விட்டு விடுதலையாகி நிற்பாய், செ.யோகநாதனின் மூன்றாவது பக்கம் முதலான கதைகளும், வெடியரசனின் சின்ன மாமா போன்ற கதைகளும் இலக்கியப் பாத்திரங்களை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதைகளாகும். தற்புதுமையற்ற ஒற்றைத்தன்மையான சிறுகதைகள்.

"சிறுகதை என்பது ஒரேயொரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனிச் சம்பவத்தைப் பற்றியோ அல்லது ஒரு தனி உணர்ச்சி தரும் விளைவையோ எடுத்துக் கூறும் இலக்கிய வடிவம்" என்பார் பிராண்டர் மத்தியூஸ். இக்கருத்தியலுக்கமைவாகவே இன்றளவும் ஈழத்தில் பெரும்பாலான சிறுகதைகள் எழுதப்படுகின்றன. அவ்வகையில் நானறிந்த வகையில் வெளிவந்த தொகுப்புக்களாக ஆரையம்பதி ஆ.தங்கராசாவின் யுகமொன்று உடைகிறது, படிக்கம், எஸ்.நஸீறுதினின் மறைத்தலின் அழகு, டொமினிக் ஜீவாவின் கதைகள், வே.தில்லைநாதனின் இடரும் உறவும் யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் ஈன்ற பொழுதில், கண நேர நினைவலைகள், எண்ணிலாக்குணமுடையோர், தாலி, மனம் விந்தையானதுதான், நந்தினி சேவியரின் அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்கள், நெல்லிமரப்பள்ளிக்கூடம், சிறீரங்கனின் திக்கற்றவர்கள், அலெக்ஸ் பரந்தாமனின் அழுகை நிரந்தரமில்லை, தோற்றுப் போனவனின் வாக்குமூலம், ஒரு பிடி அரிசி, தேவிபரமலிங்கத்தின் உள்ளே இருப்பது நெருப்பு, கொ.பாபுவின் அவள் புறப்பட்டு விட்டாள் முதலான பல தொகுப்புக்கள் இவ்வகையில் வெளிவந்தன. வாழ்வின் அநுபவங்களை உயிர்த்துடிப்புள்ள பாத்திரங்களின் உணர்ச்சிநிலைகளை இப்பிரதிகள் நுண்மையாகச் சித்திரித்துச் செல்கின்றன. ஆனால் இப்பிரதிகள் சொல்லுதலை அடிப்படையாகக் கொண்ட இயற்பியல் புனைவாகத் தன்னை கட்டமைத்துக் கொள்கின்றதேயன்றி வடிவ உத்திகளையோ சொல்முறையில் மாற்றத்தையோ கொண்டிருக்கவில்லை. புதுமை என்பது வடிவத்தைக் கலைத்துப் போடுவதோ வாக்கிய அமைப்பை மாற்றியமைப்பதோ இல்லை. மரபான கதை வடிவுக்குள் கதை இயங்கினாலும் கச்சிதமான சித்திரிப்பைக் கதை கொண்டிருக்கவேண்டும். உணர்ச்சிப் பெருக்கும் கதையின் அசைவுகளும் வாசகரை நெகிழ்ச்சி கொள்ளச் செய்ய வேண்டும். எளிமையான மொழியும் இயல்பான கதைச் சித்திரிப்பும் கொண்டு நேர்த்தியான கதையை ஒருவர் எழுதியிருந்தாலும் அக்கதை மனித வாழ்வின் நிகழ் தரிசனங்களைப் பிரதிபலிப்பதாகவும் தனிமனிதனுக்குள் திரட்டி வைத்திருக்கும் உணர்வை அதிரசமாகவும் தருவதாக அமையவேண்டும். கதையில் திட்பமும் ஒருமையும் நிறைந்திருக்க வேண்டும். பொதுவான குணாம்சங்களோடு பாத்திரங்களைப் படைப்பது கதையை சிதைத்துவிடும். தனித்துவமான குணாம்சங்களைப் பொருத்தி பாத்திரங்களை சமூக உறவுகளுடன் சேர்த்து வெளிப்படுத்தும்போது கதை துலக்கம் பெறும். நுண்ணிய மனித உணர்வுகளை நுண்மையாகச் சித்திரிப்பனவாக சிறுகதைகள் அமையவேண்டும்.

இவ்வகையில் வெளிவந்த தொகுதிகளே கௌரிபாலனின் ஒப்பனைநிழல் மற்றும் காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல். கிழக்கு மாகாண மக்களின் வாழ்வை உணர்வுபூர்வமாகச் சித்திரித்தவர் கௌரிபாலன். பாசாங்கற்ற இவருடைய எழுத்துக்கள் சிக்கலும் சிடுக்கும் நிறைந்தவை. காட்டாறு போல் பாய்ந்து செல்லும் தன்மை கொண்டவை. விரிவான காட்சிப்புலத்தையும் நேரடித்தன்மையும் கொண்ட இவர் எழுத்துக்கள் கணத்துக்குக் கணம் வெவ்வேறு களங்களைக் காட்சிகளை உருவாக்கக்கூடியவை. வாழ்க்கை புறக்கணித்த மக்களின் வாழ்வை அதன் இயல்பு குலையாதபடி சித்திரித்தவர் கௌரிபாலன். இவரது பெரும்பாலான கதைகளில் துன்பங்களே நிறைந்து நிற்கின்றன. பிளைக் & வைட் மொழி ஆடுகளுடன் வார்த்தையாடுதல், கதையில் தேர்ந்த கலைஞனுக்குரிய தன்மையுடன் பாத்திரங்களை செதுக்குகிறார். கதையில் வரும் களங்கள் வாசகனுக்கு ஓவியமாய் மனத்தில் படியும் தன்மை கொண்டவை. மூக்கணாங்கயிறும் கோணல் மொச்சைகளும் கதையில் இயல்பு நடத்தை மாறாது பரமேஸ்வரன் வாத்தியாரைக் கொண்டு வருகிறார். அரண்களுக்கு இடையே அவருணரும் அச்சம் மனிதவுணர்வோடு யதார்த்தமாக பொருந்திப்போகிறது. புளூலேபிள் சிறுகதை வாழ்வில் படுகிற வேதனைப்பாட்டை புலப்படுத்தி நிற்கிறது. கௌரிபாலன் போர்க்கால வாழ்வின் புறத்தாக்கங்களையும் மனித மனத்தின் அகவயவுணர்வுகளையும் தன் கதைகளில் நுண்மையாகச் சித்திரித்தவர். இவருடைய கதைசொல்லல் மொழி அலாதியானது. ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்கு புதியது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களால் வெளியிடப்பட்ட பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்(2008), பேராதனைப் பல்கலைக் கழக ஒன்பது மாணவர்களால் வெளியிடப்பட்ட முகிழ் ஆகிய தொகுப்புக்கள் மக்களின் நடைமுறை வாழ்வையே பிரதிபலித்தன. இத்தொகுப்பில் இடம்பெறும் பெரும்பாலான சிறுகதைகள் சம்பவங்களின் கோவையாகவும் தனிமனித உணர்வின் வெளிப்பாடாகவும் வாழ்க்கை குறித்தான அருட்டுணர்வாகவும் அமைகின்றதேயன்றி இச்சிறுகதைகள் உடல் ஒருமை கொண்டதாகவோ புதுமைத்தன்மை கொண்டதாகவே அமையவில்லை.

நேர்கோட்டுப் பொதுமையிலான தற்புதுமையற்ற ஒற்றைத்தன்மையான சிறுகதைகளே ஈழத்தில் அதிகம் படைக்கப்படுகின்றன. அவையே பேரளவில் வாசகரால் நினைவு கூரப்படுகின்றன. உணர்வுநிலைப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சித்திரிப்பு முறை எளிமையானது. மூலக்கருவை மையமாகக்கொண்டு எழும் நிகழ்வுநிலையில் பாத்திரங்களின் இயங்குநிலைக்கூடான மனித உணர்வுகளுக்கு அழுத்தம் கொடுத்து எழுதப்படும் இச்சிறுகதைகள் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்னும் இழைகளுக்கூடாகவே மையம் கொள்கின்றன. இவ்வகையில் இரண்டாயிரத்துக்குப்பின் வெளிவந்த பெண்சிறுகதைத் தொகுப்புக்களான மாதுமையின் தூரத்து கோடை இடிகள், தாட்சாயணியின் இளவேனில் மீண்டும் வரும், ஒரு மரணமும் சில மனிதர்களும், அங்கையற் கண்ணியும் அவள் அழகிய உலகமும், வெண்சுவர், ராணியம்மா நிருபாவின் சுணைக்கிறது, யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் கணநேர நினைவலைகள், பிரமிளா பிரதீபனின் பாக்குப்பட்டை, லறீனா ஹக்கின் எருமைமாடும் துளசிச்செடியும் மலரன்னையின் அசை, ஒரு பிடிச்சாம்பல் முதலானவை இயல்பான அநுபவத்தில் இருந்து எழுகின்ற சொல் முறையால் கட்டமைக்கப்பட்டவை. இயல்பும் நேரடித்தன்மையும் கொண்ட யதார்த்தமான கதைகளாக இவை அமைகின்றன.

நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து திருகோணமலையை மையமாகக் கொண்டு பெரும்பான்மையான சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின. க.அருள் சுப்பிரமணியம், சாண்டிக்கோ சுப்பிரமணியம், கா.இரத்தினலிங்கம், மு.ராஜ்கபூர், பத்மாசனி கணபதிப்பிள்ளை, திருமலைநவம், திருமலைசுந்தா, கா.இரத்தினலிங்கம், தாரிணி, அசனார், மு.வே.யோகேஸ்வரன், இராஜா தர்மராஜா, மலைமதி சந்திரசேகரம், ந.திருச்செல்வம் எனப் பல ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தோன்றினர். சமூகத்தை நிகழ்களமாகக் கொண்டு எழும் அருள் சுப்பிரமணியத்தின் கதைகள் முதல், மையம், முடிவு என நேர்கோட்டுத் தன்மையில் இயங்குவன. அம்மாச்சி என்னும் இவரின் தொகுப்பு முப்பத்தொன்பது கதைகளை உள்ளடக்கி வெளிவந்தது. தர்மலிங்கத்தின் தூர விலகும் சொந்தங்கள் என்ற சிறுகதைத் தொகுதி 2004 இல் மணிமேகலைப்பிரசுரமாக வெளிவந்தது. தூர விலகும் சொந்தங்கள், சத்திய தரிசனம், ஆணின் தேடல், நோயாளிகள், புரியாத புதிர், தாம்பத்தியம் ஒரு தவம், நிறைவு, பாவத்தின் தீர்ப்புகள், தாய், வாழ்த்துக்கள், வாலிபத்தீயிலே, இப்படி எத்தனை சுமைகள் ஆகிய பன்னிரண்டு கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சமூக வாழ்வியற் புலங்களை இச்சிறுகதைகள் மண்வாசனையோடு வெளிப்படுத்துகின்றன.

சமகால சமூக அரசியல் பிரச்சினைகளை மையப்படுத்தி போரையும் போரியல் வாழ்வையும் பேசிய தொகுப்புக்களில் ஒன்று வே.தில்லைநாதனின் இடரும் உறவும் ஆகும். ஆண்களின் சபலபுத்தியை குறியீட்டுமுறைமைக்கூடாக வெளிப்படுத்தும் பாயாக்கள் கதையும் ஆதிக்கச் சக்தியை சிறுவியாபாரிக்கூடாக முன்நிறுத்தும் சுறாக்கள் கதையும், பாடசாலை நிர்வாக மட்ட ஊழல்களைக் கண்முன் நிறுத்தும் சுறாக்களும் சிறிய மீன்களும் கதையும் நடைமுறை வாழ்க்கைமுறைகளை யதார்த்தப் பின்னணிகளோடு சித்திரிக்கும் கதைகளே.

## ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தில் முஸ்லிம்கள்

ஈழத்து சிறுகதை வளர்ச்சிக்கு முஸ்லிம் இலக்கிய கர்த்தாக்கள் பெரும் பணி ஆற்றியுள்ளார்கள். ஈழத்து முஸ்லிங்களின் சிறுகதை சரித்திரம் ஐதுருஸ் லெவ்வை என்பவருடன் தொடங்குகிறது. கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த ஐதுருஸ் லெவ்வை மரைக்கார் என்பவர் 1898ஆம் ஆண்டில் ஹைதர்ஷா சரித்திரம் என்ற பெயரில் ஆறு கதைகளைக் கொண்ட நூலொன்றை வெளியிட்டிருக்கிறார். 1964இல் ஈழத்தில் முஸ்லிம் 'கதைமலர்' என்ற தொகுப்பு வெளிவந்தது. பித்தன் (கே.எம்.ஷா), அப்துல்சமது (அ.ஸ), ம.மு.உவைஸ், அண்ணல் (எம்.ஸாலிஹ்), யுவன்(எம்.ஏ.கபூர்), மருதூர்க்கொத்தன் (வி.எம். இஸ்மாயில்), ஏ. இக்பால், எம்.ஏ.நுஃமான், எம்.எம். மக்கீன், செய்னுல் ஹுஸைன், எம்.ஏ.எம்.சுக்ரி, மருதமுனைமஜீத், அபூஷானாஸ் (அபூஉபைதா), யூ.எல்.தாவூத் முதலானோரின் 14 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றன. 21.6.1967 தொடக்கம் 4.7.1969 வரை இலங்கையில் வெளிவந்த வாரப் பத்திரிகை 'இன்ஸான்' பத்திரிகையும் முஸ்லிம் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தது. பன்விலை – பாரூக், எ.எல்.எ லத்தீஃப், எம்.எம்.எம். நஸ்றுத்தீன், எம்.எஸ்.ஏ. மொஹிதீன், பாணந்துறை மொயீன் ஸமீன், எம்.எச்.எம். ஷம்ஸ், கலைவாதி கலீல், எஸ். டி.அபூபக்கர் முதலான பலர் இன்ஸானில் எழுதினார்கள். 1962 ஆம் ஆண்டு நெஞ்சின் நினைவினிலே சிறுகதை மூலம் ஈழத்து இலக்கியத்தில் காலடி பதித்த எஸ்.எல். எம்.ஹனீபா தேர்ந்த கதை சொல்லி. இவரின் 'மக்கத்துச் சால்வை', 'அவளும் ஒரு பாற்கடல்' ஆகிய இருநூல்களும் இன்றளவும் பேசப்படுபவை. இவரைப் போலவே அலை சஞ்சிகையூடாக நன்கறியப்பட்டவர் எம்.எல்.எம். மன்சூர். யதார்த்த பாணியில் கட்டமையும் மன்சூரின் சிறுகதைகள் மனித வாழ்வின் அகப்புற வாழ்வைக் காட்சிப்படுத்துபவை. முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட வாழ்வியல் நெருக்கடிகள், பொருளாதாரப்பிரச்சினைகள், வறுமை, அறியாமை முதலானவற்றை தம் சிறுகதைகளில் வெளிப்படுத்தியவர் எம்.ஏ.நுஃமான். இதுவரை ஏழு சிறுகதைகளை எழுதியுள்ளார்.

(தொடரும்....)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் எப்போதும் சமகாலத்தில் உலவும் எழுத்தாளன்"

**நீங்கள் பிறந்த ஊர் திருச்செங்கோடு. இந்த ஊரின் பெயரிலேயே ஒரு சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறீர்கள். ஆனால், நெடுங்காலமாக நீங்கள் நாமக்கல்லில்தான் வாழ்ந்து வருகிறீர்கள். இன்று உங்களுக்குத் திருச்செங்கோடு என்பது என்னவாகப் பொருள்படுகிறது?**

நாமக்கல்லுக்கும் திருச்செங்கோட்டுக்கும் எட்டிப் பிடிக்கும் தூரம்தான். ஒருமணி நேரப் பேருந்துப் பயணம். சேலத்திலிருந்து பிரித்து 1997இல் தனி மாவட்டம் உருவாக்கப்பட்டது. திருச்செங்கோடு புதுப்பாளையத்தில் ராஜாஜி உருவாக்கிய 'காந்தி ஆசிரமம்' இன்றுவரை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மகாத்மாகாந்தி வந்து தங்கியிருந்த ஆசிரமம். அப்படித் திருச்செங்கோட்டோடு பெரிதும் தொடர்புடைய சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பெயரால் 'ராஜாஜி மாவட்டம்' என்று நாமக்கல் மாவட்டத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது. அப்போது தலைநகர் நாமக்கல்லா திருச்செங்கோடா என்னும் விவாதம் நடைபெற்றது. 'நாமக்கல் லாரி உரிமையாளர்கள் சங்கம்' முன்வந்து ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட நிர்வாக அமைப்பு உருவாகப் பெரிதும் நிதியுதவி செய்த காரணத்தால் நாமக்கல் தலைநகராயிற்று. திருச்செங்கோடு அதில் கொஞ்சம் பின்தங்கிப் போய்விட்டது. அந்த வருத்தம் என்னைப் போன்றவர்களுக்கு இன்றுவரை இருக்கிறது. மற்றபடி இரு ஊர்களும் ஒன்றாகவே எனக்குத் தெரிகிறது. நில அமைப்பு, ஊர் இயல்பு, சாதிகள் எல்லாம் ஒன்றேதான். பேச்சு வழக்கில் சிறுவேறுபாடுகூடக் கிடையாது. இரண்டும் கோயில் நகரங்கள். கோயில் நகரங்களுக்கே உரிய பிசுக்குகள் அண்டாமல் நவீனத் தொழில் நகரங்களாக வளர்ந்து நிற்பவை. நாமக்கல் என்னும் பெயர்கொண்ட திருச்செங்கோட்டில்தான் வாழ்கிறேன். ஒரே வேறுபாடு சொல்ல வேண்டும் என்றால் திருச்செங்கோடு சைவத்தலம். நாமக்கல் வைணவத் தலம். திருச்செங்கோட்டில் முருகனாக இருந்தேன்; நாமக்கல்லில் பெருமாளாகவும் இருக்கிறேன் என்று வேண்டுமானால் சொல்லலாம்.



**ஒரு கலைஞராக உலகம் முழுதும் சுற்றிவரும் நற்பேறு இன்று உங்களுக்கு வாய்த்திருக்கிறது. உங்களை முப்பதாண்டுகளாக அறிந்தவன் என்ற வகையில், "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்பதுதான் உங்கள் மனநிலை என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் நில வரைவியலுக்கும் உங்கள் படைப்பில் முக்கிய இடமிருப்பதை அறிவேன். சொந்த ஊர்ப் பாசம் என்பது, உங்களைத் தூண்டி இயக்கும் படைப்பாற்றலாக, இன்றும்கூட உங்கள் நனவிலியில் நீடிக்கிறதா?**

என் பிறப்பு தொடங்கி இன்று வரையிலும் ஒரே நிலப்பரப்பில்தான் வாழ்ந்து வருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவு, நனவிலி எல்லாவற்றிலும் இந்த நிலமும் வாழ்வும்தான். இடையிடையே கல்வியின் பொருட்டு அவ்வப்போது வெளியே சென்று வந்திருக்கிறேன். இப்போது எழுத்தாளனாக வெளியூர்களுக்கும் சில வெளிநாடுகளுக்கும் சென்று வருகிறேன். கல்வி முடித்து அரசு பணி பெற்றபோது வேறு ஊரில் வாழ வாய்ப்பு அமைந்தது. ஆனால் என் அம்மாவின் பொருட்டுச் சொந்த ஊரிலேயே என் வாழ்வை அமைத்துக்கொள்ள நேர்ந்தது. குடும்பச் சூழலும் சொந்த ஊரை விட்டு அகல முடியாதபடி ஆக்கிவிட்டது. அப்படியே நிலைகொண்டேன். ஓரிடத்தில் இருந்து வாழும்போதுதான் நிலப்பரப்பும் அதனுடன் தொடர்புடைய வாழ்வும் மனதில் ஆழ இறங்கும். படைப்பாற்றல் குறையாமல் இருக்கவும் தூண்டப்படவும் இந்த நிலைகொள்ளல் அவசியமானது. அது எனக்கு இயல்பாகவே வாய்த்தது. மற்றபடி செல்லும் இடமெல்லாம் பார்வையாளனாகவே இருக்கிறேன்.

**இப்போதெல்லாம் வட்டார இயல்புகளைத் தவிர்த்துவிட்டு எழுதுவதைப் படைப்பு உத்தியாகவே நீங்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டீர்கள். இதற்கு மாதொருபாகனுக்குப் பின் நீங்கள் சந்தித்த சிக்கல்களைக் காரணமாகக் காட்டினாலும், கொங்கு வட்டாரத்தின் ஆன்மாவைப் பெருமாள்முருகனே பிரதிபலிக்கத் தயங்குவது சரியான இலக்கிய நிலைப்பாடாகுமா?**

சாதிப்பெயர்களையும் அடையாளங்களையும் விட்டுவிடும் போது வட்டார இயல்புகளைத் தவிர்ப்பது போலத் தெரிகிறது. அது தோற்ற மயக்கம்தான். நானே தவிர்க்க முயன்றாலும் இயலாது என்பதே உண்மை. 1990ஆம் ஆண்டு ஈரான் – ஈராக் போர் நடந்த போது மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு கடுமையாக இருந்தது. அப்போது முக்கியமான எரிபொருள் மண்ணெண்ணெய். சென்னையில் 'மனஓசை' அலுவலகத்தில் தங்கிச் சுயசமையல் செய்து வாழ்ந்து கொண்டிருந்தேன். மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டுப் பாதிப்பை வைத்து 'முடக்கம்' என்றொரு சிறுகதை எழுதினேன். 'கொங்கு நாட்டை விட்டு வெளியே வந்து விட்டீர்கள் போல' எனத் தோழர்கள் கேலி செய்தனர். அச்சில் வந்த பிறகு பார்த்தால் 'வட்டல்' என்னும் சொல் கதைக்குள் இருக்கிறது. சாப்பாட்டுத் தட்டை 'வட்டல்' என்பது கொங்கு வழக்கு. சென்னையில் நடக்கும் கதையில் எப்படிக் கொங்கு வழக்கு? தோழர்களின் கேலி தொடர்ந்தது. 'கொங்கு நாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சென்னையில் வாழும் குடும்பத்தின் கதை இது' என்று சொல்லிச் சமாளித்தேன். இப்படித்தான், நானே தவிர்க்க முயன்றாலும் ஏதேனும் அடையாளம் வந்து சேர்ந்துவிடும். இப்போதைய எழுத்துக்களிலும் வட்டார ஆன்மாவே இருக்கிறது. கொஞ்சம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அவ்வளவுதான்.

**நீங்கள் எழுதிய பத்துக்கும் மேற்பட்ட நாவல்களில் 'சமகாலத்தின் சித்திரிப்பு' என்பது குறைவாகவும், 'இறந்தகாலத்தின் எச்சங்களே' மிகுதியாகவும் வெளிப்பட்டுள்ளன. இந்த அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா?**

காலப் பின்னணி வேண்டுமானால் அப்படித் தெரியலாம். நாவல் பேசும் பிரச்சினைகள் சமகாலத்தவையே. 1991இல் ஏறுவெயில் நாவல் வெளியாயிற்று. அதன் மையம் நகர்மயமாதல். அது சமகாலப் பிரச்சினைதானே? மாதொருபாகன் நாவலின் காலம் இருபதாம் நூற்றாண்டின் முன்பகுதியாக இருக்கலாம். அது பேசும் குழந்தையின்மைப் பிரச்சினை இன்றைக்கு இன்னும் வலுவாக இருக்கிறது. செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள் இன்று மருத்துவ உலகில் பெரும்பொருள் ஈட்டுபவை. 1990கள் வரை முதிர்கன்னிகள் பிரச்சினையை இலக்கியம் பேசியது. அதற்குப் பின் அது என்னவாயிற்று? பெண்சிசுக் கொலையால் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்து முதிர்கண்ணர்களாக ஆண்கள் இருக்கும் நிலை தோன்றியது. இலக்கியத்தில் 'கங்கணம்'தான் அதைப் பேசியது. 2020இல் வெளியான 'கழிமுகம்' கல்வி சார்ந்து தலைமுறைப் பிரச்சினையை மையமிட்டது. நான் எப்போதும் சமகாலத்தில் உலவும் எழுத்தாளன். அதனால்தான் கடுமையாக எதிர்கொள்ளவும் படுகிறேன்.

**உங்களின் பல கதைகளில் 'பூவரச மரம்' உயிருள்ள ஒரு பாத்திரம் போலவே உலவுகிறதே! பூவரச மரத்துடன் உங்களுக்கு அந்தரங்க உறவேதும் உண்டா?**

கொங்கு வட்டாரத்தின் முக்கியமான மரம் பூவரசு. அடர் இலைகள் கொண்ட மரம் அது. பெரும்பாலான கட்டுத்தறிகளில் பூவரசைப் பார்க்கலாம். ஒரு பூவரசு இருந்தால் போதும், பத்துப் பதினைந்து ஆடுகளை வளர்த்துவிடலாம். நிழலாகும்; உணவாகும். மாடுகளை அதனடியில் கட்டுவது வழக்கம். கூரையாகப் பூவரசு நிற்கும். உழவர்களைப் பொறுத்தவரையில் அது வீட்டு மரம். வீட்டில் ஒருவர் போலத்தான் கருதுவர். என் திருச்செங்கோட்டு வீட்டில் இப்போதும் பெரிய பூவரசு நிற்கிறது. அதனுடைய மூலம் எத்தனை ஆண்டுகளுக்கு முந்தையது எனத் தெரியாது. எங்கே நிலைகொண்டாலும் பூவரசின் ஒரு கிளையை வெட்டிக் கொண்டு போய் நட்டுவிடுவோம். விதை முளைக்காது; போத்து வளர்ப்புத்தான். காந்தள் போல இதன் பூவும் பல வண்ணக் கோலம் கொள்ளும். வீட்டுச் சிறுவர்கள் விளையாட வேறெந்தப் பொருளும் தேவையில்லை, பூவரசு ஒன்றே போதும். பூவரசைப் பற்றி விரித்தெழுத எத்தனையோ வாழ்க்கைச் சம்பவங்கள் இருக்கின்றன. ஆகவே இயல்பாகப் பூவரசு என் கதைகளுக்குள் வந்துவிடுகிறது. அது உருவகமாகவும் குறியீடாகவும் அமைவதும் தானாக நடக்கிறது.

**தொடக்கத்திலிருந்தே அழகியலையும் கருத்தியலையும் இணைப்பதில் ஒரு முதிர்ச்சியை உங்களிடம் காணமுடிகிறது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**(எ.டு. 'ஏறுவெயில்' என்று வினைத்தொகையில் தலைப்பிட்டு, அதையே வாழ்வின் வெக்கையாகவும் சூசகப்படுத்துவது). இது எழுபதுகளில் தமிழில் நிலவிய உருவ - உள்ளடக்க வாதங்களை உள்வாங்கியதன் விளைவாகலாம் என்றெண்ணுகிறேன். இதை நீங்கள் அறிவுபூர்வமாகச் செய்கிறீர்களா? யதேச்சையாக இது இப்படி உருக்கொண்டுவிடுகிறதா?**

நான் கற்று வளர்ந்து வந்த விதம் அப்படி. கோவை பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரியில் முதுகலை படித்த காலத்தில் நவீன இலக்கியம் தொடர்பாகத் தொடர்ந்து வாசித்தும் விவாதித்தும் செழுமைப்படுத்திக் கொள்ள உதவியவர் என் ஆசிரியர் ப.மருதநாயகம் அவர்கள். 'படைப்பில் எதையும் சொல்லலாம்; அழகியல் முக்கியம்' என்பது அவர் பார்வை. 1930கள் தொடங்கி 1970 வரையான தமிழ் நவீன இலக்கியப் பரப்பை எனக்கு அறிமுகப்படுத்தியவர் அவர்தான். ஏராளமான புத்தகங்கள், பத்திரிகைகள் அவர் சேகரத்தில் இருந்தன. எல்லாவற்றையும் வாசிக்க எனக்கு வாரிக் கொடுத்தார். அவ்வளவையும் அவர் வாசித்திருந்தார். ஒவ்வொன்றையும் வாசித்த பிறகு அவரிடம் தாராளமாக விவாதிக்க முடிந்தது. என் கேள்விகளை, ஐயங்களை உள்வாங்கிப் பொறுமையாக எடுத்துச் சொல்லும் ஆசிரியர் அவர். என் அவதானிப்புகளை ஏற்றுக்கொண்டு பாராட்டும் மனமும் அவருக்கிருந்தது.

1980களின் இறுதியில் ஆராய்ச்சிப் படிப்புக்காகச் சென்னை வந்தபோது என் கருத்தியலை மார்க்சியம் நோக்கிச் செலுத்தியவர்கள் இருவர். எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் ஒருவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் ஆசிரியராக இருந்த ந.தெய்வசுந்தரம் இன்னொருவர். இருவருமே அந்தக் காலத்தில் கருத்தியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பார்வையைக் கொண்டிருந்தனர். அவர்களுடன் தொடர்ந்து உரையாடும் வாய்ப்பைப் பெற்றேன். தொடக்க காலத்தில் வட்டார வாழ்க்கையை அழகியலோடு எழுதிய பா.செ. 1980களில் கருத்தியல் சார்ந்த கதைகளையே எழுதினார். அவர் கதைகளைக் 'கருத்து விளக்கக் கதைகள்' எனக் கோ.கேசவன் வகைப்படுத்தினார். அவற்றில் செயற்கைத்தனம் மிகுந்திருந்தது. ஈழத்து எழுத்தாளர் செ.கணேசலிங்கனின் நாவல்களை விதந்து பேசி அவற்றை வாசிக்கச் செய்தவர் ந.தெய்வசுந்தரம். மார்க்சியக் கருத்து ஒன்றை எடுத்துக்கொண்டு அதை விளக்கும் வகையில் நாவல் எழுதுவது செ.கணேசலிங்கனின் வழக்கம். அவர்களின் கருத்தியலில் இயைந்த போதும் இலக்கியப் பார்வை எனக்கு ஒத்து வரவில்லை.

அதே சமயத்தில் 'மனஓசை' ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்தவர் சுரேஷ் என்கிற சீனிவாசன். அவர் அரசு கல்லூரியில் பொருளியல் பேராசிரியராக இருந்தவர். அப்போது 'மூலதனம்' நூலை முழுமையாகப் படித்த தமிழ்நாட்டு மார்க்சியர்களின் எண்ணிக்கை பத்துப் பேர் இருக்கலாம் என்பார்கள். அந்தப் பத்துப் பேரில் ஒருவர் சீனிவாசன். நவீன இலக்கியத்திலும் விமர்சனத்திலும் பெரும்புலமை கொண்டவர் அவர். அவரோடு இணைந்து பல எழுத்தாளர்களின் படைப்புகளை வாசித்தேன். சிலரது படைப்புகளைக் குறித்து இருவரும் இணைந்து கட்டுரை எழுதினோம். கருத்தியலையும் அழகியலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கும் பார்வை அவருடையது. கருத்தியல் உள்ளடங்கி இருந்தால் போதும் என்பார். அவர் பார்வைதான் எனக்கு இணக்கமாகவும் பொருத்தமாகவும் இருந்தது. அப்போது என் படைப்புகளின் முதல் வாசகராகவும் அவரே இருந்தார். அவர் சொல்லும் கருத்துகளை உள்வாங்கிச் செழுமைப்படுத்துவேன். அவரிடமிருந்து உருவாகி வந்ததே என் படைப்புப் பார்வை.

**'மாதொருபாகன், ஆலவாயன், அர்த்தநாரி' என்ற முக்கோண நாவல்களில், உங்களுக்குப் பிடித்த படைப்பு எது? இம்மூன்றிலுமே ஆண் கோணம் வலுவாக விழுந்துள்ள அளவிற்குப் பெண் கோணம் குவிமையம் பெறாததற்குக் காரணமென்ன?**

ஆலவாயன் எனக்கு மிகவும் பிடித்தது. ஆண் இல்லாத போது விரிவாகும் பெண் உலகம் அந்நாவலில் சிறப்பாக உருவாகி வந்திருப்பதாக ஒரு திருப்தி எனக்கு ஏற்பட்டது. அதுதான் காரணம். 'அர்த்தநாரி'யில் காளி யாத்திரை சென்று திரும்பும் நாட்களுக்குள் பொன்னாவும் அவள் மாமியாரும் சேர்ந்து நிலத்தில் செய்திருக்கும் மாற்றங்களும் உழைப்பும் அவன் இருப்பைக் கேள்விக்கு உட்படுத்துவதைப் பார்க்கலாம். மூன்றிலுமே பெண் கோணம் அபரிமிதமாக வந்திருப்பதாகவே நினைக்கிறேன். அதனால்தான் ஆண்களிடம் இருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்தன எனப் புரிந்துகொள்கிறேன். ஆண் நோக்குநிலையில் விவரிப்பு இருப்பினும் பெண் நோக்கு நேரடியாகவும் உட்பொதிந்து வெளிப்படுவதும் என் படைப்பு உத்திகளில் ஒன்று.

**கிராம வாழ்வின் பல்வேறு நுண்கோணங்கள் உங்கள் சிறுகதைகளிலும், சுதந்திர இயக்கத்திற்கான ஏக்கம் உங்கள் கவிதைகளிலும், மனிதனுக்கும் வாழ்வெளிக்குமான போராட்டம் உங்கள் நாவல்களிலும் பிரதானப்பட்டுள்ளன. கட்டுரைகளில் தமிழ்ச் சமூக வெளியில் பலரும் பார்க்கத் தயங்கும் அல்லது தவறும் அதிகாரப் படிநிலைகளைக் கேள்விக்குட்படுத்துகிறீர்கள். (சமீபத்திய உதாரணம்: மாணவர் வளர்க்கும் மயிர் பற்றிய உங்கள் நவீனப் பார்வை). பீக்கதைகள் எழுதியிருக்கிறீர்கள். 'கெட்ட வார்த்தை பேசுவோம்' என்பது, உங்களின் புகழ்பெற்ற ஓர் அல்புனைவு. தாயைப் பற்றி எழுதினாலும் விமர்சனமின்றி உங்களால் எழுத முடிவதில்லை. இந்தக் கலகப் பார்வை அல்லது எதிர்மரபு நோக்கு, உங்கள் எழுத்தில் எப்படிச் சுவர்மையடைந்தது?**

அது எனக்கு இயல்பாக அமைந்த பார்வை என்றே நினைக்கிறேன். ஒவ்வொன்றிலும் பிறர் பார்வையில் படாத ஒருபக்கத்தில் என் கவனம் குவியும். அதுதான் என் இயல்பு. எப்போதும் அதிகம் பேர் செயல்படாத துறை ஒன்றைத் தேர்வு செய்துகொள்வதும் பலர் இயங்கினாலும் அவர்கள் ஒதுக்கும் பகுதியில் கால்கொள்வதும் எனக்கு வசதியாக இருக்கிறது. மனிதர்களைக் கருப்புவெள்ளையாகக் காண்பது ஒருபோதும் என்னால் முடியாது. அவர்களின் பல வண்ணங்களைக் காண்கிறேன். அதை நீங்கள் எதிர்மரபு, கலகப் பார்வை என்றெல்லாம் சொல்கிறீர்கள். தமிழைப் போலப் பேரிலக்கிய மரபு கொண்ட மொழியில் பல களங்கள் இருப்பது இயல்பு. அத்தகையவற்றில் கைபடாத துறைகள் உள்ளன. பதிப்பும் மூலபாட ஆய்வும் அவ்வகையில் முக்கியமானவை. கம்பராமாயணத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் இருக்கின்றன. அவற்றில் பாட வேறுபாடற்றவை என்று எடுத்தால் ஒற்றைப்படை எண்ணிக்கைதான். பல பாடல்களில் ஒவ்வொரு சொல்லுக்கும் பாட வேறுபாடு உண்டு. ஆனால் அது சார்ந்த ஆய்வுகளில் நாம் கவனம் கொள்ளவேயில்லை. அரிதாக ஓரிரு நூல்கள் வந்திருக்கின்றன. சில கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு வாசகர்கள் இல்லை. விற்பனை வாய்ப்பு இல்லை. தமிழ் இலக்கியம் பயின்றவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும் போதும் இதுதான் நிலை. பதிப்புகளில் என் கவனம் சென்றபோது தவிர்க்கவியலாமல் மூலபாட ஆய்வுப் பகுதிக்குள் நுழைந்தேன். அந்த ஈடுபாடுதான் 'கெட்ட வார்த்தை பேசுவோம்' நூலை நோக்கிச் செலுத்தியது.

**பன்றியைக் கூறுபோடுவதைப் பற்றியெழுதினாலும் சரி, மலமள்ளுவதைக் குறித்தெழுதினாலும் சரி, அது வயசாளிகளின் சாவானாலும் இளசுகளின் கலவியானாலும் ஓர் ஆவணப் பதிவின் நம்பகத்தன்மையோடு உங்கள் எழுத்து இயங்குகிறது. பார்ப்பதும் கேட்பதும் நுகர்வதுமான அனுபவங்களைத் தாண்டிச் சலசலக்காத ஒரு நிதானமான மனதின் எழுத்து உங்களுக்கு வசப்பட்டிருப்பதன் சூட்சுமமென்ன?**

எதையும் உடனடியாக எழுதுவதில்லை. எனக்குள் ஊறுவதற்குக் கால அவகாசம் தருகிறேன். முழுமையாக மனதில் உருப்பெறாத ஒன்றை ஒருபோதும் எழுதுவதில்லை. என்னுடைய எழுத்துமுறை யதார்த்தவியல். அதற்கு ஆவணமாக்கமும் நம்பகத்தன்மையும் முக்கியமானவை. ஆகவே எனக்குள் இருப்பவற்றைத் தொகுத்துக் கொள்கிறேன். வெளியே இருந்து கற்றுக்கொண்டு விரிவாக்குகிறேன். மையப்படுத்தும் உணர்வுகளுக்கு இவை அவசியமாகின்றன. அதற்காக உழைக்க வேண்டும். எழுத்துக்குப் பின்னாலும் உழைப்பிருக்கிறது. எழுதும் போதும் உழைப்பிருக்கிறது. மாதொருபாகனில் காளியும் பொன்னாவும் கலவி கொள்ளும் காட்சிக்குத் தொண்டுப்பட்டியும் நிலவொளியும் அத்தனை தேவையாக இருக்கின்றன. அந்தப் பின்னணி இல்லாமல் அந்தக் காட்சியை யோசித்தால் ஒன்றுமே இருக்காது.

தொண்டுப்பட்டியின் சித்திரத்தை உருவாக்கக் கடுமையான முயற்சி எடுத்தேன். சிறுவயதிலிருந்து நான் கண்ட தொண்டுப்பட்டிகள் பலவற்றை மனதில் கொண்டுவந்து மீளப் பார்த்தேன். இன்றும் சிதிலங்களோடு வாழும் சில தொண்டுப்பட்டிகளை நேரில் சென்று கண்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுமே அழகான பயணங்கள். என் மனம் தவறவிட்ட சிலவற்றைக் களப்பார்வை எடுத்துக் கொடுத்தது. இன்று கிட்டத்தட்ட அழிந்துபோன தொண்டுப்பட்டியைப் படிப்படியாக உருவாக்கினேன். எதுஎது எப்படி அமைய வேண்டும் என்று காளி விரும்பினானோ அப்படி ஒரு தொண்டுப்பட்டியை அவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்தேன். அதில் அவன் மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது. துக்கங்களைக் கொட்ட முடிந்தது. அங்கே நின்ற ஒரு பனை உயிர்வளர்ச்சிக்கே காரணம் ஆயிற்று. நாவலுக்கு முதலில் 'தொண்டுப்பட்டி' என்றுதான் பெயர் வைக்க விரும்பினேன். அந்த அளவு என்னை ஈர்த்தது அது. நான் உருவாக்கிய ஒன்றிற்குள் நானே சிக்கிக் கொண்டேன்.

**பாரம்பரிய மரபுவெளிக்கும் இன்றைய நவீனப் போக்குகளுக்குமான தவிர்க்கவியலாத ஊடாட்டத்தைக் கவனப்படுத்தும் சமகாலப் பதற்றங்களின் சாட்சியமாகப் பெருநாவலொன்றை எழுதும் எண்ணம் உங்களுக்குண்டா? அத்தகைய நாவலொன்றின் உடனடித் தேவையை நீங்கள் உணரவில்லையா?**

இது பெருநாவல் காலம் அல்ல என்று தோன்றுகிறது. இருநூறு பக்கத்தைக் கடந்தாலே ஒரு நூலுக்கு 'நோக்கு நூல்' தன்மை வந்துவிடும் காலம் இது. எனினும் முழுமையான கிராமம் ஒன்றைச் சித்திரிக்கும் வகையில் பெருநாவலாக அல்லாமல் தொடர் நாவலாகச் சிலவற்றை எழுதலாம் என்று எண்ணமிருக்கிறது. என் நேரத்தைச் சேமித்து அதற்கென ஒதுக்க முடியவில்லை. வேளாண் குடும்பப் பின்னணியில் வந்த என்னிடம் அவ்வாழ்வின் முதன்மைக் கூறாகிய லௌகீக அம்சம் கூடுதலாக இருக்கிறது. அதை உதறி வெளிவரும் துணிவு இல்லை. எழுத்து சார்ந்தும் படைப்பல்லாத காரியங்களில் நிறைய ஈடுபட வேண்டியிருக்கிறது. எதையும் கறாராகத் தவிர்க்கும் கடுமை எனக்குக் கைகூடவில்லை. படைப்புக்கான என் நேரத்தை யார்யார் கைகளிலோ அள்ளிக் கொடுத்துவிட்டுப் புலம்பி நிற்பதே என் வாடிக்கையாக இருக்கிறது. வயதும் போய்க் கொண்டிருக்கிறது. நேரத்தை எனதாக்கிக் கொள்ள முயல்கிறேன். மீள்வேன் என்றால் அந்தத் தொடர்நாவலை எழுதிவிடுவேன்.



**இடப்பெயர்வின் இடர்ப்பாடுகளையும் நகர்மயமாதலின் நெருக்கடிகளையும் உங்கள் எழுத்து திறம்படச் சித்திரிக்கிறது. பொருளாதாரப் போட்டிகள் மனித உறவுகளைச் சீரழிக்கும் அவலத்தைப் பதிவுசெய்வதில் நீங்கள் முன்நிற்கிறீர்கள். இந்த அவலமே, உங்கள் புனைகதைகளின் முதன்மையான பாடுபொருளாகியுள்ளது. வெளியேற வழியின்றி இதிலேயே தீர்வற்றுச் சிக்கிச் சாதாரண மனிதர்கள் காலவெளியில் காணாமல்போவதையே நீங்கள் திரும்பத் திரும்ப உயிர்ச்சலிப்புடன் எழுதுகிறீர்கள். 'இற்றுத் தேய்ந்து தொலைதல்' என்பதற்கு மேல், இந்த வாழ்வில் ஒன்றுமேயில்லையா?**

என்ன இருக்கிறது என்று தேடுவதற்காகவே எழுதுகிறேன். ஏதேனும் பிடிபட்டிருக்கிறதா எனத் தெளிவில்லை. பிடிபடுமா என்றும் தெரியவில்லை. இருந்து வாழும் பேறு பெற்ற சமூகமாக நாம் இல்லை. அடிப்படைகளுக்கே அலைக்கழிய வேண்டியவர்களாக இருக்கிறோம். இடம்பெயர்தல் இங்கு இயல்பானதோ மகிழ்வானதோ அல்ல; நிர்ப்பந்தமாக இருக்கிறது. புதிய இடத்தில் வேர் பிடிக்க முடியவில்லை. எங்கும் சாதிக் குழுக்கள் இருக்கின்றன. அவை இறுகியவை. தாமல்லாத ஒருவரை உள்ளேவிட ஒருபோதும் அவை சம்மதிப்பதில்லை. சாதாரண வாழ்க்கைக்கே போராட வேண்டியிருக்கிறது. இதில் சென்று தேய்ந்து இறுதலும் இற்றுத் தேய்ந்து தொலைதலுமே நடக்கின்றன. இவற்றிலிருந்து என் படைப்புகளை எப்படி மீட்டெடுப்பது என்று தெரியவில்லை. காலம் தான் ஏதேனும் செய்ய வேண்டும்.

**உ.வே.சா. பற்றிப் பத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதியிருக்கிறீர்கள். அவரின் புலமை வாழ்வையும் அக்காலச் சமூக நிலைமைகளையும் நுட்பமாக எடுத்துக்காட்டும் பதிவுகள் அவை. இத்தகைய உ.வே.சா. ஈடுபாடு உங்களுக்கு முதலில் எப்படி ஏற்பட்டது? உ.வே.சா.வின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைகள் எவை? அவரின் ஆளுமையில் நீங்கள் காணும் விமர்சனத்திற்குரிய அம்சங்கள் எவை?**

நான் பத்தாம் வகுப்பு படித்தபோது 'என் சரித்திரச் சுருக்கம்' நூலை வாசித்தேன். அப்போது ஏற்பட்ட உ.வே.சா. ஈடுபாடு இன்றுவரை தொடர்கிறது. தினமும் ஒருபக்கமாவது உ.வே.சா. எழுத்தை வாசிக்காமல் என் நாள் கழிந்ததில்லை. பல பகுதிகளைத் திரும்பத் திரும்ப வாசிக்கிறேன். மனம் சோர்வுறும் நேரத்தில் உ.வே.சா.வின் எழுத்துகள் துணை. எதை எடுத்தும் வாசிக்கலாம்; எங்கிருந்தும் வாசிக்கலாம். தொடர்வாசிப்பு இருந்தது எனினும் எழுதும் தைரியம் ஏற்படப் பல காலம் ஆயிற்று. உ.வே.சா.வின் எழுத்துகள் மாபெரும் சமூக ஆவணம். அவற்றிலிருந்து ஏராளமான கட்டுரைகளை எழுதலாம். ஆய்வுகள் செய்யலாம். தொடர்ந்த வாசிப்பும் பார்வையும் தேவை. கட்டுரைகள் எனக்குப் போதவில்லை. சில நூல்களை எழுதும் எண்ணம் இருக்கிறது.

உ.வே.சா.வின் நிறைகுறைகளைக் காணும் நோக்கில் என் வாசிப்பு அமையவில்லை. ஒருவரைப் புகழ்வது அல்லது இகழ்வது என்பதுதான் விமர்சனம் என்கிற பார்வை எப்படியோ நம் சமூகத்தில் ஊடாடி நிற்கிறது. என் பார்வை அப்படியானதல்ல. அவரையும் அவர் காலத்தையும் புரிந்துகொள்ளும் நோக்கில் என் வாசிப்பை அமைத்துக் கொண்டிருக்கிறேன். என் புரிதலில் தோன்றும் வியப்புகளையும் ஆதங்கங்களையும் விவரிக்கும் வகையில்தான் கட்டுரைகள் எழுதுகிறேன். பதிப்பாசிரியராகவும் கட்டுரையாளராகவும் ஆவணப் பதிவாளராகவும் உ.வே.சா. என்னைப் பெரிதும் வசீகரிக்கிறார். 'கருமமே கண்ணான' செயல்திறன் அவர் இறுதிக்காலம் வரையிலும் குறையாமல் இருந்தது. அதனால்தான் அவரைப் 'புலமைத் திருவுரு' என்று சொல்கிறேன். லௌகீகம் சார்ந்த சில செயல்பாடுகளை மட்டுப்படுத்திக் கொண்டு அவர் பதிப்பிக்க விரும்பிய அகநானூறு, கம்பராமாயணம் முதலிய நூல்களைப் பதிப்பித்துக் கொடுத்திருக்கலாம்; என் சரித்திரத்தை முழுமையாக எழுதியிருக்கலாம் என்பவை என் ஆதங்கங்கள்.

**"வான்குருவியின் கூடு" என்ற தலைப்பில் நீங்கள் எழுதியுள்ள நூல், உங்களின் 'தனிப்பாடல்கள்' மீதான பேரார்வத்தைக் காட்டுகிறது. குறிப்பாகக் 'காளமேகம்' பாடல்கள் மீதான உங்களின் ரசனை அலாதியானது. தமிழிலக்கியத்தின் செழுமையான பகுதிகளில் ஒன்றாகிய இந்தத் தனிப்பாடல்கள், இன்றைக்கும் பரவலான வாசிப்புக் கவனம் பெறாமலிருப்பது ஏன்? பாடப் புத்தகங்களில்கூட இவற்றுக்குப் போதிய கவனம் தரப்பட்டிருப்பதாகத் தெரியவில்லையே!**

தனிப்பாடல் உலகத்தில் விழுமியங்கள் மட்டுமல்ல; மீறல்களும் விதிவிலக்குகளும் ஏராளமாக இருக்கின்றன. கலகங்களும் எதிர்மரபுகளும் பிணைந்து கிடக்கின்றன. அவற்றை ரகசியமாக ரசிக்கும் புலமை உலகம் பொதுவெளிக்குக் கொண்டுவர அஞ்சுகிறது. தனிப்பாடல்களை அறிமுகப்படுத்தினால் அதன்வழி அந்த உலகத்தை நோக்கி மனம் சென்றுவிடும் என்னும் பயம் கல்விப் புலத்திற்குள் நிறைந்திருக்கிறது. ஆகவே அதை ஒரு ஓரத்தில் தள்ளி வைத்துவிடுகிறார்கள். அதைப் பற்றிப் போகிற போக்கில் பட்டியலிடுவதோடு சரி. காளமேகம் ஒரு சூறைக்காற்று. அவரை எதற்குள்ளும் அடக்க முடியாது. எல்லாவற்றையும் தூக்கி எறிவார்; கேலி பேசுவார்; வசை பாடுவார். நீங்கள் கொண்டிருக்கும் விழுமியங்கள் எதுவும் அவருக்குப் பொருட்டல்ல. அவரிடம் பாவனைகள் கிடையாது.

காளமேகத்தைக் கற்பித்தால் தமிழ் இலக்கியக் கல்வி ஆர்வமூட்டுவதாக மாறும். அவரைப் போல இன்னும் பல புலவர்கள் தனிப்பாடல் உலகத்தில் இருக்கிறார்கள். அவற்றைக் கற்பித்தால் மரபுக்கு எதிராக மாணவர் மனம் போய்விடக் கூடும் என்னும் அச்சமே தனிப்பாடல் புறக்கணிப்புக்குக் காரணம். ஒரு பல்கலைக்கழகத்திற்குப் பாடத்திட்டம் உருவாக்கும் வாய்ப்பு எனக்கு வந்தபோது முதல் பருவத்தில் 'தனிப்பாடல்கள்' என்பதைத் தனித்தாளாக வைத்து அலகுகள் பிரித்தேன். அதில் காளமேகத்திற்கு ஓரலகு; ஔவையாருக்கு ஓரலகு. இலக்கியக் கல்விக்குள் நுழையும் மாணவரைத் தனிப்பாடல்கள் சிரித்த முகத்துடன் வரவேற்று அழைத்துச் செல்லும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. அப்பாடத் திட்டத்தை வல்லுநர் குழு புறந்தள்ளிவிட்டது. கண்ணுக்கு முன்னால் செல்வத்தை வைத்துக்கொண்டு யாருக்கும் ஈயாத கருமியாகத் தமிழ்ப் புலமையுலகம் இருக்கிறது. இந்த அவலத்தை என்னவென்று சொல்வது?

**ஒரு கல்லூரித் தமிழாசிரியராக நீங்கள் பெற்றிருக்கும் வெற்றியின் அடையாளமாக, 'எங்கள் ஐயா' நூலை குறிப்பிட்டுச் சொல்லலாம். உங்களைப் பற்றி உங்கள் மாணவர்கள் வியந்தெழுதியிருப்பதைப் போலவே நீங்களும் உங்கள் மாணவர்களைப் பற்றி நெக்குருகி எழுதியுள்ளீர்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் தலைமுறை இடைவெளி நிலவும் ஒரு சமூகத்தில், இந்தப் பரஸ்பர நன்மதிப்பு எப்படிச் சாத்தியப்பட்டது?**

ஆசிரியர் என்பதால் உருவாகும் அதிகாரத்தை நான் பயன்படுத்துவதில்லை அல்லது மிகவும் குறைவாகப் பயன்படுத்துகிறேன் என்பதுதான் காரணமாக இருக்கும். வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்களோடு உரையாடுகிறேன், அவர்கள் சுகதுக்கங்களில் பங்கேற்கிறேன் என்பதும் காரணமாகலாம். அவர்கள் நவீன காலத்தைப் பிரதிபலிப்பவர்கள்; அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள எனக்கு நிறைய இருக்கிறது. மாணவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விழையும் ஓர் ஆசிரியருக்கு அவர்கள் மனதில் நிச்சயம் இடம் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மாணவர்கள் சமூகத்தின் அடித்தட்டிலிருந்து வருபவர்கள். பொருளாதாரத்திலும் சமூகப் படிநிலையிலும் ஒடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்குச் சிறுமதிப்பைக் கொடுத்தாலே உருகிப் போவார்கள். அவர்களை ஈர்க்கச் சிறுசிறு விஷயங்கள் போதும்.

ஆசிரியப் பணியில் நான் சேர்ந்தபோது மாணவர் வருகையைப் பதிவு செய்வதற்கு அச்சிட்ட சிறுபடிவம் இருந்தது. சுழல் எண் வரிசையில் மாணவர்களை அழைத்து, வராத மாணவர் எண்களை அதில் குறித்துக் கொடுக்க வேண்டும். மாணவர்களை எண்ணிட்டு அழைப்பது எனக்கு என்னவோ போலிருந்தது. சிறையில் கைதிகளுக்கு எண்ணிடுவதுண்டு; காவல்துறையில் எண்ணைக் குறிப்பிட்டு அழைக்கும் காட்சிகளைத் திரைப்படத்தில் கண்டிருக்கிறேன். மாணவர்களை ஏன் எண்களால் அழைக்க வேண்டும் என்னும் கேள்வி எனக்கு வந்தது. எனக்கென ஓர் வருகைப் பதிவேடு தயார் செய்துகொண்டேன். அதில் மாணவர் பெயர்களை எழுதி வைத்துக்கொண்டேன். பெயரைச் சொல்லி அழைத்து வருகைப் பதிவு எடுத்தேன். ஓய்வு நேரம் கிடைக்கும்போது படிவத்தை நிரப்பித் துறையில் ஒப்படைத்தேன். அது எனக்குப் பிடித்திருந்தது.

எதற்கு இரட்டை வேலை செய்கிறீர்கள் என்று சக ஆசிரியர்கள் கேட்டார்கள். என்னைக் கேலியும் செய்தார்கள். ஆனால் பெயர் சொல்லி அழைப்பதை மாணவர்கள் விரும்பினார்கள். தொடர்ந்து அழைப்பதால் அவர்களின் பெயர்கள் என் மனதில் பதிந்தன. வெளியிடத்தில் ஒரு மாணவரைப் பெயர் சொல்லி அழைக்கும்போது அவர் கொள்ளும் பரவசத்தைக் கண்ணாரக் கண்டேன். தமிழிலக்கியம் அல்லாத பாடம் பயிலும் மாணவர்களுக்குப் பொதுத்தமிழ்ப் பாடம் நடத்திய போதும் அங்கும் இதே முறையைக் கையாண்டேன். அம்மாணவர்களைப் பெயர் சொல்லி அழைக்கவும் அடையாளப்படுத்திக் கொள்ளவும் என்னால் முடிந்தது. அத்துறை சார்ந்த ஆசிரியர்களுக்கு என் மேல் பொறாமை ஏற்பட்டது. மாணவர் விருப்பம், என் வசதி, சக ஆசிரியர்களின் பொறாமை ஆகியவை இதைத் தொடர என்னைத் தூண்டின. இது போன்ற சிறுசிறு விஷயங்களை அனுபவத்தில் கண்டுணர்ந்து நடைமுறைப்படுத்தியது மாணவர் உலகத்தில் எனக்கு ஓர் இடத்தைக் கொடுத்தது.

இப்படித்தான் என்று திட்டமிட்டு எதையும் செய்வதில்லை. என் இயல்புப்படி இயங்குகிறேன். அந்த அனுபவத்தில் அறிந்த சிலவற்றை நடைமுறையாகக் கொள்கிறேன். கோட்பாட்டு அடிப்படையில் இப்படிச் சொல்லலாம்: மார்க்சிய இயக்கம் ஒன்றில் இணைந்து செயல்பட்ட காலத்தில் அதிகாரம் குறித்து எனக்குக் கிடைத்த புரிதலும் பெரியாரைக் கற்றுக்கொண்ட போது ஏற்பட்ட பிம்பச் சிதைவும் என்னை வழிநடத்துகின்றன. அதிகாரமற்ற ஆசிரியரை உருவாக்க வேண்டும் என்பதே என் எண்ணம்.

**தொல்காப்பியமும் நன்னூலும் எழுத்தெண்ணிக் கற்று - யாப்பிலும் அணியிலும் துறைபோகிய நீங்கள், 'கொங்குவட்டாரச் சொல்லகராதி'யை உருவாக்கி ஓர் அகராதியியலாளராகவும் தமிழுக்குப் பங்களித்துள்ளீர்கள். 'சாதியும் நானும்' என்ற சமகாலச் சமூக ஆவணமொன்றைத் தொகுத்துள்ளீர்கள். இவற்றுடன் அமையாது, பாடபேத ஆய்விலும் பதிப்பிலும் தனிக்கவனம் செலுத்துகிறீர்கள். இத்தகைய பல்துறை ஈடுபாடு தமிழில் மிகவும் அரிதானது. இதற்குப் பின்னிருக்கும் பல்லாண்டுக் காலத் தொடருழைப்பு மலைக்க வைக்கிறது. உங்கள் ஆளுமையை எப்படி நீங்கள் இப்படிச் செதுக்கிக்கொண்டீர்கள்?**

படைப்பிலக்கிய ஈடுபாடு எனக்கு இயல்பாக அமைந்தது. மற்றவை எல்லாம் தமிழ் இலக்கியக் கல்வியின் மூலமாக வந்து சேர்ந்தவை. இலக்கணத்தைப் பொறுத்தவரை நன்னூலிலும் யாப்பிலும் ஓரளவு பயிற்சி உண்டு. தொல்காப்பியத்தில் அவ்வளவு புலமையில்லை. அது எளிமை காட்டி மயக்கும் ஆழ்கடல். இந்தப் பிறவியில் அதற்குள் இறங்கும் பாக்கியம் எனக்கு இல்லை. இலக்கியம் சார்ந்த எதையும் புதிதாகக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் உண்டு. சுயகற்றலே என்னைச் செதுக்கியது. சுயகற்றல் என்பது சுதந்திரத் தன்மை கொண்டது. என் ரசனைக்கு ஒத்து வருபவற்றைத் திரும்பத் திரும்பக் கற்கலாம்; ஒத்து வராதவற்றை ஒதுக்கிவிடலாம். முறைசார் கல்வி கொடுத்த அடிப்படை அறிவைப் பற்றிக்கொண்டு சுயகற்றலில் ஈடுபட்டேன்.

கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் சில விஷயங்களைச் செய்யத் தோன்றும். அதற்குச் சூழலும் இயைந்து வந்தால் செய்துவிடுவேன். 'சாதியும் நானும்' தொகுப்பைப் போலச் சாதி குறித்து எத்தனையோ விஷயங்களைக் கொண்டுவர வேண்டும். நம் சமூகத்தை ஆட்டிப் படைக்கும் சாதி குறித்துக் குறிப்பிடத்தக்க நூல்கள் மிகவும் குறைவு. சாதியைப் பற்றி எழுதுவதில் பெருந்தயக்கம் இருக்கிறது. தயக்கத்தை உடைத்து நிறைய எழுதினால்தான் சாதியைப் பற்றிய புரிதல் பொதுவெளியில் உருவாகும். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் சாதியை எதிர்கொண்ட அனுபவங்களைப் பதிவுசெய்ய விரும்பினேன். கட்டுரைகள் வாங்கவே முடியவில்லை. தலித் சாதிக்குள்ளேயே ஒரு சாதி இன்னொரு சாதியை ஏற்றுக்கொள்வதில்லை. அதைப் பற்றிய கட்டுரைகளைத் தொகுக்கலாம் என முயன்றபோது கடும் எதிர்ப்பைச் சந்தித்தேன். தலித் ஒற்றுமையைப் பிளவுபடுத்த முயல்கிறேன் என்று என் மாணவர்களே சந்தேகப்பட்டார்கள். உண்மையில் ஒற்றுமையில்லை. அதற்கான காரணங்களைப் பொதுவெளியில் எடுத்துப் பேசும்போதுதான் ஒற்றுமையை நோக்கி நகர முடியும். 'பிற்படுத்தப்பட்ட சாதிகளிலும் ஒருசாதியை இன்னொரு சாதி ஏற்றுக்கொள்வதில்லை. ஏன் நீங்கள் அதைப் பற்றிப் பேசவில்லை?' என்று கேள்வி வந்தது. அதைப் பற்றியும் பேச எனக்கு எந்தத் தடையுமில்லை. சூழல், முன்னுரிமை, தேவை எனப் பல விஷயங்கள் இருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் விளக்கி அதை மேலெடுத்துச் செல்லும் தெம்பு எனக்கு இல்லை.

இப்படி எனக்குள் தோன்றி இயலாமல் புதைந்து கிடப்பவை இன்னும் எத்தனையோ. ஏதாவது ஒரு குச்சியை நீட்டி, சிறுகல்லைப் போட்டுச் செயலைத் தடுத்துவிடுவதில் நம் சமூகம் உற்சாகமாக ஈடுபடும். செயல்பாட்டை அங்கீகரிக்காது என்பதோடு செயல்படவே விடாது. இந்தத் தடைகளை எல்லாம் மீறித்தான் சிலவற்றைச் செய்ய முடிகிறது. பழந்தமிழ் இலக்கியத்திலும் சரி, நவீன இலக்கியத்திலும் சரி செய்ய வேண்டியவை பல. யாரும் தொடாத துறைகள் அல்லது வெகுசிலர் மட்டுமே இயங்குபவை எனப் பலவற்றைச் சொல்லலாம். அவற்றில் சிறுதுரும்பை எடுத்துப் போட்டாலும் பெரிதாகத் தெரிகிறது. அது தமிழ்ச் சமூகத்தின் பலவீனம்; அதுவே என் பலம்.

**இன்றைக்குப் பெரும்பாலான இந்திய மொழிகளிலும், பத்துக்கும் மேற்பட்ட மேலைமொழிகளிலும் உங்கள் எழுத்துகள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. உலகம் சுற்றி வரும் ஒரு தமிழ் எழுத்தாளராகப் புகழேணியின் உச்சியில் இன்று நீங்கள் உயர்ந்து நிற்கிறீர்கள். இந்த மாபெரும் உயரம், உங்களுக்குத் தந்ததென்ன? ஒரு சாதனையாளராக நிறைவுறாமல், இன்னுமின்னும் படைத்துக்கொண்டேயிருக்க உங்களைத் தொடர்ந்து எது உந்துகிறது?**

புகழேணி, உச்சி, உயரம் என்று நீங்கள் சொல்லும் சொற்கள் எனக்குக் கூச்சத்தைத் தருகின்றன. அவ்வளவு உயரத்தை எல்லாம் நான் அடையவில்லை. உலக இலக்கியம் என்பது பெரும்பரப்பு. அதற்குள் தமிழ்ப் படைப்புகள் இன்னும் வலுவாகச் சென்று சேரவில்லை. அங்கே கோலோச்சும் எழுத்தாளர்களோடு ஒப்பிட்டால் என் சிறுபுகழ் ஒன்றுமேயில்லை. எனக்குத் தோன்றுபவற்றை எழுதிக் கொண்டிருக்கிறேன். எழுதுவது எனக்குப் பிடித்திருக்கிறது. அவ்வளவுதான். அதைத் தவிர எப்போதும் எங்கும் பார்வையாளனாக இருப்பதே என் விருப்பம்.

2004ஆம் ஆண்டு முதலே என் படைப்புகள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் வெளியாகத் தொடங்கின. மாதொருபாகன் பிரச்சினை மொழிபெயர்ப்பு வாய்ப்புகளைக் கூட்டின. காலச்சுவடு கண்ணன் ஏற்கனவே தமிழ் நூல்களைப் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்லும் முயற்சியில் ஓரளவு தூரம் சென்றிருந்தார். எல்லாம் இயைந்து வந்த காரணத்தால் என் படைப்புகள் பல மொழிகளில் செல்லும் வாய்ப்பு அமைந்தது. என் படைப்புகள் மட்டுமல்லாமல் பல எழுத்தாளர்களின் படைப்புகள் இப்போது மொழிபெயர்க்கப்படுகின்றன. பிற மொழிகளில் எடுக்கப்படும் முயற்சிகளை ஒப்பிட்டால் நம்முடையது வெகுகுறைவு. அருகிலிருக்கும் மலையாள இலக்கியம் ஆங்கிலத்தில் பரவலாகச் செல்கிறது. பெரும்விருதுகளை எல்லாம் பெறுகிறது.

உலக இலக்கியப் பரப்புக்குள் நாம் வலுவாகச் செல்ல இன்னும் எத்தனையோ முயற்சிகள் தேவை. நமக்குள்ளே பழங்கதைகள் பேசிப் பெருமைப்பட்டுக் கொண்டு கிடக்கிறோம். ஒருவரை ஒருவர் அங்கீகரிப்பதில்லை; முன்னிறுத்துவதில்லை. பொறாமையும் குறுங்குழு மனப்பான்மையும் பெருகியுள்ளன. தமிழ்நாட்டுக்கு வெளியே இருக்கும் இலக்கிய உலகம், பதிப்புலகம் பற்றிய அறியாமை பெரிது. இவற்றை எல்லாம் உடைத்துக்கொண்டு தமிழ் நவீன இலக்கியம் வெளியே செல்ல வேண்டும்.

**இடதுசாரிப் பத்திரிகையான 'மன ஓசை' மூலம் அறிமுகமானவர் நீங்கள். அங்கிருந்து வெகுதூரம் நகர்ந்து வந்துள்ளீர்கள். உலகம் போற்றும் மார்க்சியக் கருத்தியல், தமிழ் மண்ணிலும் நவீனத் தமிழ்ப் படைப்புலகிலும் ஏன் காத்திரமாக நிலைபெற இயலவில்லை? சாதிமத பேதமற்ற சமுதாயத்தையும் ஆண்பெண் சரிநிகர் சமானத்தையும் வலியுறுத்தும் 'சமூக மாற்றம்', இங்கு போதுமான அளவிற்குச் சாத்தியப்பட்டிருப்பதாக நினைக்கிறீர்களா?**

சமூக மாற்றம் அத்தனை எளிதானதல்ல. அது சிறுகச் சிறுக நிகழ்வது. நாம் எதிர்பார்க்கும் மாற்றம் வந்துசேரப் பல நூற்றாண்டுகள் தேவைப்படும். முதலீட்டியமே இன்னும் பல நூற்றாண்டுகள் கோலோச்சும். சாதியச் சமூகங்கள் முதலீட்டியத்தின் வாய்ப்புகளைப் பெற இன்னும் எவ்வளவோ முன்செல்ல வேண்டும். நம் சமூக மாற்றங்களை எல்லாம் தடுத்து நிறுத்துவதும் மென்மைப்படுத்துவதும் தாமதமாக்குவதும் சாதியமே. சாதி ஒழிப்பில் மார்க்சியர்கள் பெரிய கவனம் செலுத்தவில்லை. சாதி ஏற்கனவே அமைப்பாக இருக்கிறது. அதற்கு மாற்றாக வர்க்கத்தை வைக்கும் முயற்சி அத்தனை எளிதானதல்ல.

சாதி ஒழிப்பில் மார்க்சியர்கள் கவனம் செலுத்தியிருந்தால் இன்னும் காத்திரமாக இங்கே நிலைபெற்றிருக்கலாம். இருப்பினும் மார்க்சியக் கருத்தியல் இன்று இலக்கியத்தின் போக்கை மாற்றியிருக்கிறது. பார்வையை வடிவமைத்திருக்கிறது. அதற்கு மார்க்சிய இயக்கங்களும் விமர்சகர்களும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் செய்த பங்களிப்பு மகத்தானது. இன்று நேரடியாக மார்க்சியத்தை ஏற்றுக்கொண்டு எழுதும் எழுத்தாளர்கள் குறைவாக இருக்கலாம். ஆனால் அதன் தாக்கமற்ற எழுத்தாளர்களைக் காண்பது அரிது.

**உங்கள் மாதொருபாகனுக்கு முன்னோடி தி.ஜானகிராமனின் 'நளபாகம்' என்பது என் கருத்து. நீங்கள் 'நளபாகம்' படித்திருக்கிறீர்களா? அதில் வரும் மாமியார், தன் மருமகளுக்குக் குழந்தை பிறக்க வைப்பதற்காக ஒரு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமையல்காரனை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வருகிறாள். மாதொருபாகனில் வரும் மாமியார், தன் மருமகளைக் கோயில் திருவிழாவுக்கு அனுப்பிக் குழந்தை பெற்றுவரச் சொல்கிறாள். உங்களுக்கு முப்பது வருடங்களுக்கு முன்பே தி.ஜானகிராமன் நளபாகத்தை எழுதியிருக்கிறார். அவருக்கு வராத பிரச்சனை, உங்களுக்கு மட்டும் ஏன் வந்தது?**

மகாபாரதம் தொடங்கி நவீன இலக்கியம் வரைக்கும் மாதொருபாகனுக்கு நிறைய முன்னுதாரணங்கள் இருக்கின்றன என்று காட்டலாம். மாதொருபாகனுக்குப் பிரச்சினை வந்தபோது இத்தகைய இலக்கியங்களைப் பலர் எடுத்துக்காட்டினர்; எனக்கு அனுப்பிவைத்தனர். 'சூரியனின் முதல் கிரணம் முதல் இறுதிக் கிரணம் வரை' என்னும் இந்தி நாடகம் ஒன்றைக்கூட முன்னுதாரணம் என்றனர். எனக்குள் அப்படி எதன் செல்வாக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. கோயில் சார்ந்த வழக்கத்தை இனம் கண்டுகொண்ட பின்னணியில் மாதொருபாகன் உருவாயிற்று. இளங்கலை படித்த காலத்தில் ரங்கராஜுலு என்று எனக்கு ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் தி.ஜானகிராமனின் தீவிர வாசகர். ஒவ்வொரு வகுப்பிலும் தி.ஜா.வைப் பற்றி ஒரு நிமிடமேனும் பேசாமல் இருக்கமாட்டார். அவர் வழியாகவும் பேராசிரியர் மருதநாயகம் மூலமாகவும் தி.ஜா.வின் நாவல்களையும் வாசித்தேன். நளபாகத்தையும் வாசித்தேன் என்றுதான் நினைவு.

மாதொருபாகனுக்கு வந்த பிரச்சினை மதம், கோயில், கடவுள், ஊர், சாதி எனப் பல தளப் பரிமாணம் கொண்டது. அதற்கேற்ற அரசியல் சூழல் உருவானதுதான் முக்கியமான காரணம். பிற எழுத்துக்கள் தனிப்பட்ட பாத்திரங்கள் சார்ந்தவை. மாதொருபாகன் ஒரு வழக்கத்தை, விதிவிலக்குச் சமூகம் ஏற்படுத்தி வைத்திருக்கும் வழிமுறையை மையமாகக் கொண்டது. பிறப்புத் தூய்மை பற்றிய கேள்வியைச் சமூகத்திற்குள் மாதொருபாகன் வீசிவிட்டான். அந்த வித்தியாசமே பிரச்சினைக்குக் காரணமாக இருக்கலாம்.

**வளரிளம் பருவத்துச் சிறார்களின் உணர்வுகளை நுணுக்கமாகச் சித்திரிப்பதில் உங்கள் எழுத்து பெரிய வெற்றி பெற்றிருக்கிறது. இதை 'நிழல் முற்றத்திலும்', 'கூளமாதாரியிலும்' மிகத் துல்லியமாகக் காண்கிறோம். உங்கள் குழந்தைப்பருவம் எப்படிப்பட்டது? அது ஒரு வற்றாத ஊற்றுப்போல் உங்களுக்குப் பயன்படுவதாக எனக்குத் தோன்றுவது உண்மைதானா? அந்தக் குழந்தைமை, இன்னும் உங்களிடம் உயிர்த்திருக்கிறதா?**

ஆம். என் குழந்தைப் பருவம் அள்ளக் குறையாத அமுதசுரபி. அந்த வாழ்வின் சில கண்ணிகளை எழுதியிருக்கிறேன். எழுத எழுத ஏதேதோ நினைவில் வந்து கொண்டேயிருக்கின்றன. வயதாக ஆகக் குழந்தைமையின் நினைவுகள் கூடுகின்றன. 'மேட்டாங்காட்டில் ஒடக்கான் அடித்துக் கொண்டிருந்த பையன்தானே நீங்கள்?' என்று என் நண்பர் ஒருவர் அடிக்கடி கேட்பார். அது உண்மைதான். எனக்குள் அந்தப் பையன்தான் முழுமையாக ஆக்கிரமித்திருக்கிறான். அவனை ஒருபோதும் இழக்கமாட்டேன்.

என் குழந்தைப் பருவம் மகிழ்ச்சிகளையும் துக்கங்களையும் ஒருசேரக் கொண்டது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த கடைசித் தலைமுறை நான் என்று சொல்லலாம். நவீனங்கள் எட்டிப் பார்க்காத கிராமம் எனது. முக்கியமாக மின்சாரம் கிடையாது. மின்சாரத்தின் வருகைதான் நவீனங்களை வாரிக்கொண்டு வந்து சேர்க்கிறது. மின்சாரமற்ற என் பால்யத்தில் இயற்கையின் பல்வேறு நுட்பங்களை அறிய வாய்த்தது. எங்கள் வீடுகள் பெயரளவுக்கு இருந்தவை. வெட்டவெளிதான் எங்கள் புழக்கத்திற்குரியது. இரவில் விண்மீன்களை எண்ணுவதும் நிலவின் பரிமாணங்களைக் காண்பதும் வழக்கம். நிலா நாட்களில் இரவிலும் வேளாண் வேலைகளில் ஈடுபடுவோம். உணவுத் தேவை எளிதாக நிறைவேறிவிடும். உடையின் தேவை மிகக் குறைவு. எல்லாம் விளையாட்டு; எந்நேரமும் விளையாட்டு. துயரங்களும் இருந்தன; இப்போதும் இருக்கின்றன. ஆனால் அப்போதைய மகிழ்ச்சி இப்போது இல்லை. அக்காலத்தில் பிறந்து மேட்டாங்காட்டு வாழ்க்கை வாழ்ந்ததை எனக்குக் கிடைத்த பேறு என்று கருதுகிறேன்.

**இன்றைய தமிழ் வாசக உலகத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்? நீங்கள் எழுதவந்தபோது இருந்த வாசக உலகத்திற்கும் இன்றைய நிலைக்குமிடையில் ஏதேனும் வேறுபாட்டைக் காண்கிறீர்களா? மாதொருபாகனை விட்டுவிடுவோம். உங்களின் பிற பல படைப்புகளுக்குத் தீவிரமான 'வாசக எதிர்வினை' இங்கிருக்கிறதா? இது பற்றிப் பிரத்தியேகமாகக் குறிப்பிடக்கூடிய, இதுவரை நீங்கள் வேறு எங்கும் பகிராத நினைவேதும் உங்களிடமிருந்தால், அதை இலக்கியவெளி வாசகர்களுக்காகக் கூறமுடியுமா?**

எழுதவந்த காலத்தில் வாசகர்கள் யார், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதெல்லாம் தெரியாது. வாசகப் பரப்பு என்பது புதிர். இன்று அப்படியில்லை. வாசகர்கள் எழுத்தாளரோடு உரையாடப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. ஓரளவு ஆர்வம் உள்ளவர்களையும் இலக்கியத்திற்குள் ஈர்க்கும் அளவுக்கு ஊடகப் பரப்பு விரிந்திருக்கிறது. அப்போது ஒரு நூலை வாங்குவதற்கு வழியில்லை. கையில் பணம் இருந்தாலும் நூல் எங்கே கிடைக்கிறது என்று தெரியாது. பாடப் புத்தகங்கள் விற்கிற கடைகளே இருந்தன. இலக்கிய நூல்களுக்குக் கோவையில் விஜயா பதிப்பகம் இருந்தது. சென்னையில் சில பதிப்பகங்களின் அலுவலகங்களுக்கு நேரடியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனால் வாங்கலாம். இன்று வாசகரை நோக்கி நூல்கள் செல்கின்றன. எத்தனையோ புத்தகக் கண்காட்சிகள். இணையத்தில் பதிவு செய்தால் அடுத்த நாள் கைக்கு வந்து சேர்கிறது. அன்றைய வாசகர்களைவிட இன்றைய வாசகர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

என்னுடைய ஒவ்வொரு படைப்புக்கும் உரிய வகையில் வாசக எதிர்வினைகளைப் பெறுகிறேன். குறையேதும் இல்லை. பொதுவெளியில் எதையும் சொல்லிப் பெருமை பீற்ற விரும்பவில்லை. ஆங்கிலத்தில் வாசிக்கும் வாசகர்களும் மலையாள வாசகர்களும் தமிழ் வாசகர்களை விடவும் அதிகமான எதிர்வினை புரிகின்றனர். மாதொருபாகன் வரிசையை அடுத்துக் கூளமாதாரிக்கும் கங்கணத்திற்கும் நிறைய எதிர்வினைகள் வருகின்றன. பூக்குழி நாவலுக்குத் தனித்த வாசகர் கூட்டம் இருக்கிறது. வாசகர் செய்யும் சில செயல்கள் கிறுக்குத்தனத்தின் உச்சமாகவும் இருக்கும். உணர்ச்சிவசமும் அறிவுபூர்வமும் கலந்தவையும் உண்டு. சமீபத்தில் வந்த எதிர்வினை ஒன்றுக்குச் சிறுசான்று: கோவிட் காலத்தில் வாசகர் ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க அவருடன் இணையம் வழியாகக் 'கூளமாதாரி' நாவலைப் பற்றி மட்டும் ஒருமணி நேரத்திற்கு மேலாக உரையாடினேன்.

**கொங்கு வாழ்வைக் கவுண்டர் - சக்கிலியர் பின்னணியில் வைத்து உங்கள் கதைகள் ஆராய்கின்றன. வர்க்க முரண்களில் நீங்கள் போதுமான கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. கவுண்டர்களின் ஆதிக்கச் சாதி மனநிலையைப் புனைவில் நீங்கள் உடைக்க முனைவதாகவும் சொல்ல முடிவதில்லை. சொந்தச் சாதி பற்றிய விமர்சன உணர்வு உங்கள் எழுத்திலிருந்தாலும், அது அனுமதிக்கப்பட்ட எல்லைகளுக்குள்ளேயே சுழல்வதன்றித் திமிறிக் கட்டுகளையறுத்துச் சுதந்திரவெளியைச் சாத்தியப்படுத்துவதில்லை. மனக்குமுறல்களுக்கும் உணர்வுக் கேவல்களுக்கும் அப்பாலான அடுத்தகட்ட சமூக நகர்வுகளுக்கு இடந்தராத மரபின் மறுநிர்மாணமே உங்கள் கதைகளில் உள்ளன. இவற்றில் பெண் பெரிதும் பேசப்பட்டாலும், ஆண்களே இயங்குசக்திகளாகத் தொழிற்படுகின்றனர். இப்படிச் சொல்லலாமா? இறுகிய இந்த அமைப்பை உங்கள் எழுத்து எதிர்க்கத் துணிந்தாலும், ஒருகட்டத்தில் அமைப்போடு உருத்தெரியாது கலந்துவிடுவதே நீங்கள் புனைந்த மாந்தர்களின் யதார்த்தமாகிறது. இந்த 'அமைதி காணல்'தான், உங்கள் படைப்பின் இறுதி அழகியலா?**

இத்தகைய விமர்சனக் கருத்துக்களுக்கு எழுத்தாளனாக நான் பதிலேதும் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். உங்கள் பார்வை; உங்கள் அனுமானம். எனினும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம் சமூகத்தில் வர்க்க முரண் இருக்கிறது; அது அமைப்பாக இல்லை. அம்முரண் கூர்மைப்படுவதற்கான சந்தர்ப்பம் பெரிதாக இல்லை. சாதி முரண்தான் எல்லா நிலையிலும் துருத்தி நிற்கிறது. சிறு உரசலில் அம்முரண் கூர்மைப்பட்டு எரிய ஆரம்பித்துவிடுகிறது. என் படைப்புகள் சாதி முரணை மையமிட்டவை. எல்லாவற்றிலும் சாதி படிந்திருப்பதை வெளிப்படுத்துபவை. உங்கள் கோட்பாட்டின்படி பார்த்தால் 'அம்பலப்படுத்துதல்' என்று சொல்லலாம். அம்பலப்படுத்துதல் மட்டும் போதுமா என்று கேட்டால் என்னால் இயன்றது அதுதான் என்பேன். நான் ஒரு வாழ்க்கையை உங்கள் முன் வைக்கிறேன். அதில் உங்கள் விருப்பங்களை நீங்கள் தேடுகிறீர்கள். உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற உகந்த ஆள் நானல்ல.

**உங்கள் பாத்திரங்களின் உரையாடலிலும் அவர்களின் செயல்பாடுகளிலும் ஒருவிதக் கெட்டிக்காரத்தனம் அதாவது எப்படியும் தம் வாழ்வை எச்சூழலிலும் காப்பாற்றிக் கொண்டுவிடும் ஓர் உலகியல் ஞானம் இயல்பாகப் பளிச்சிடுகிறது. உங்கள் பிராந்தியத்தின் தனிப்பட்டதொரு நிலவியல் பண்பாகவே இதை உங்கள் புனைவுகளில் வரைகிறீர்கள் என்றுகூடச் சொல்வேன். அந்நியமாதலைவிடப் பிணங்காமல் இணங்கிப்போகும் ஒத்திழைவையே நீங்கள் மையப்படுத்துகிறீர்கள். ஓரங்களும்கூட உங்களிடம் ஒருங்கிணைந்துவிடுகின்றன. ஒரு தர்க்க ஒழுங்கு உங்கள் புனைவுலகைக் கண்காணித்தபடியே ஆடாது அசையாது விறைத்து அமர்ந்திருக்கிறது. அநிச்சைகள் இல்லை; நொடி வரிசை மாறாத கடிகார ஓட்டம்! பிம்பங்களின் சிதைவைக் கூட்டிச் சேர்த்து நிறுத்தும் பொறுப்புணர்வு! பெருமாள்முருகன் எழுத்தின் வலிமை இதுதான். பகுதிகளின் ஒருங்கிணைவு! சிதிலங்களின் காலத்தில் இது உங்களுக்கு எவ்வாறு கூடிவந்தது?**

உங்கள் கருத்து நிலைகளிலிருந்து படைப்பைக் காணும்போது அடையும் முடிவுகளைப் பற்றி நானென்ன சொல்வது? நான் முன்பே சொன்ன உழவுச் சமூகத்தின் லௌகீகம் எனக்குள் ஆழ வேரோடியிருக்கலாம். எல்லோருக்கும் முதல் ஆசை உயிரோடு இருப்பதுதான். அது லௌகீகத்தோடு முழுமையாகத் தொடர்பு கொண்டது. உயிரைக் காப்பாற்றிக் கொண்ட பிறகுதானே வாழ முனைதல்? மனிதர் மட்டுமல்ல, அனைத்து உயிர்களின் இயல்பும் இதுதான். அதுஅதற்கு, அவரவருக்கு உரிய நாட்களை முறைப்படி வாழ்ந்து தீர்க்க வேண்டும் என்பது என் அவா. அதுதான் நீங்கள் சொல்லும் இந்தத் தர்க்க ஒழுங்கைச் சாத்தியப்படுத்துகிறதோ என்னவோ? வடிவமைப்பில் ஒழுங்கைப் பேணுவதற்குச் சில முயற்சிகளைச் செய்வதுண்டு. அது புனைவுலகச் சித்திரிப்பிலும் வெளிப்படலாம்.

**புன்னை மரத்தின் கீழ்நின்று எங்கள் பெண் காதலனுடன் பேசமாட்டாள். முலை என்பதை முல்லையின் இடைக்குறை என்று சொல்வதில்தான் எங்களுக்கு மகிழ்ச்சி. சீதையைக் கைப்படாமல் இராவணன் தூக்கியதாகவே இந்த மரபில் வரும் கம்பனால் எழுத முடியும். பாரதியின்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணன் பாட்டுக்கு வ.வே.சு. ஐயர் எழுதிய அபாரமான முன்னுரையில்கூடக் கவி சிருங்கார வர்ணனையில் கொஞ்சம் எல்லை மீறிவிட்டாரோ எனக் கவலைப்பட்டிருப்பார். வள்ளிப் பாட்டைப் புதுமைப்பித்தனும் சதையுணர்ச்சியைத் தூண்டுவதாகத்தானே குறைப்பட்டுக்கொள்கிறார்? நவீனத் தமிழ் விமர்சனத்தின் இரண்டு பிரதான ஆளுமைகளே பாரதியை இப்படிக் காணும்போது, மரபார்ந்த தமிழ்ப் புலவர்களின் பொதுவெளிக் கூச்சம் சார்ந்த சில சொல் மாற்றங்கள் குறித்து நீங்கள் இவ்வளவு சீறியெழுத வேண்டுமா?**

“கெட்ட வார்தை பேசுவோம்” நூலில் சில சொல் மாற்றங்களைக் குறித்துப் பேசுகிறேன் என்பது குறுகிய பார்வை. ஒரு சொல் மாற்றத்திலும் விடுபாட்டிலும் விழுமியம் தொழிற்படுகிறது. உ.வே.சாமிநாதையர் தம் ஒவ்வொரு பதிப்பிலும் விரிவான அரும்பத அகராதியைத் தருவார். அதற்குச் செலுத்தும் உழைப்பு மிகுதி. தொழில்நுட்ப வசதிகளே இல்லாத காலத்தில் அவர் செயல் பெரிது. ஆயிரக்கணக்கான சொற்களை நிரல்படுத்தித் தருபவர் ‘அல்குல்’ என்னும் சொல்லை விட்டுவிடுவார். நூலின் உள்ளே பல இடங்களில் வந்தாலும் அது தேவையில்லை என்று ஒதுக்கும் பார்வைக்குப் பின்னே செயல்படும் விழுமியப் பார்வையை எடுத்துக்காட்ட வேண்டியது அவசியம். ஓலையில் எழுதிய காலத்துப் பழந்தமிழ்ப் புலவர்களுக்கு இயல்பாக இருந்த ஒன்று அச்சுக் காலத்துப் புலவர்களுக்கு ஏன் ஒவ்வாமை ஆகிவிடுகின்றது என்பதுதான் என் கோணம். எங்குமே நான் சீறி எழுவதில்லை. மாற்றங்களை வெளிப்படுத்துகிறேன். ஏன் இப்படி என்று கேட்கிறேன். காரணத்தைச் சொல்ல முடிந்தால் தெரிவிக்கிறேன். சிலசமயம் கேலி செய்வதுண்டு. கொஞ்சம் கோபமும் காட்டுவேன். இவையெல்லாம் இல்லாமல் எப்படித்தான் எழுதுவது? கல்வியும் ஓலைச்சுவடி வாசிப்பும் குறுங்குழுவுக்குள் இருந்த போது எதையும் சொல்லும் சுதந்திரம் இருந்திருக்கிறது. அச்சு வசதியும் பரவலான வாசகத் திரளும் உருவாகும் போது அச்சுதந்திரம் பறிபோகிறது. காலங்காலமாகக் காப்பாற்றி வந்த இலக்கியங்களின் தொனி மாறுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இதையெல்லாம் பொருட்படுத்திப் பேச வேண்டும் என்கிறேன். அவ்வளவுதான்.

**இங்கே ஒரு பண்பாடு இருக்கிறது முருகன். கொஞ்சம் இடக்கரடக்கலாகத்தான் எதையும் அது பேசும். இதில் ஊறியவர்கள் ‘பண்பாட்டுத் தணிக்கை மனம்’ பெற்றிருப்பதும் இயல்புதானே! அவர்களை நீங்கள் புரிந்துகொள்ளக்கூடாதா?**

நமது ‘சான்றோர் மரபோடு’ நெருங்கி நாம் உடன்பட்டாலும், சீவகசிந்தாமணியும் பின் கூளப்பநாயக்கன் காதலும் விறலிவிடு தூதும் நாயக்கர்காலச் சிற்றின்பச் சிற்றிலக்கியங்களும் இங்குதான் எழுந்தன என்பதையும் மறுப்பதற்கில்லை. பாலியல் சுதந்திரமற்ற ஒரு சமூகத்தில் வாழ்ந்துகொண்டு, பண்பாட்டுத் தணிக்கைக்கு எதிராகக் குமுறும் உங்களின் சுதந்திர மனத்தையே ‘கெட்ட வார்த்தை பேசுவோம்’ நூலில் காண்கிறேன். கல்விப் புலத்தில் இதனால் வந்த எதிர்ப்புகளை எப்படிச் சமாளித்தீர்கள்?

பண்பாட்டுத் தணிக்கையைப் புரிந்துகொள்ளத்தான் எழுதுகிறேன். அதில் ஈடுபட்டவர்களின் மனநிலை என்ன என்பதே என் ஆராய்ச்சி. மாசுமறுவற்று நீங்கள் துலக்கி வைத்திருக்கும் உருக்களின் மேல் புழுதி வாரியிறைப்பது என் வேலையல்ல. பாலியல் சுதந்திரமற்ற சமூகம் என்று நாம் சொல்வதற்குள் என்னவெல்லாம் இருந்திருக்கின்றன, எவையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன, எவையெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன எனக் காண்பதே என் பார்வை. நூலில் இதைத் தெளிவாகவே சொல்லியிருக்கிறேன். இவற்றைப் பற்றி நிறையப் பேச வேண்டும். பேசிப்பேசித்தான் பலவற்றைக் கரைக்க முடியும். இறுகிய சமூகத்தின் இளகல்களையும் நெகிழ்வுகளையும் கண்டு சொல்வது இறுக்கத்தைத் தளர்த்துமே.

கல்விப்புலம் இந்த நூலைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. என் நெருங்கிய நண்பரும் ஆசிரியருமான ஒருவர் ‘உங்கள் நூல்கள் எல்லாம் என்னிடம் இருக்க வேண்டும் என்னும் ஆசையில் வாங்கி மறைத்து வைத்திருக்கிறேன். வாசிக்க விருப்பமில்லை’ என்று சொன்னார். ‘வாசித்துப் பாருங்கள். இத்தனை நாள் வாசிக்காமல் விட்டுவிட்டோமே என்று வருத்தப்படுவீர்கள்’ என்று சொன்னேன். அப்புறம் வாசித்து நெடுநேரம் பேசினார். மாநிலக் கல்லூரிக்கு இடமாறுதலில் நான் வந்தபோது ‘புலி வருது, புலி வருது’ என்று பயமுறுத்தல் நடந்திருக்கிறது. பெண் பேராசிரியர் ஒருவரிடம் ‘கெட்ட வார்த்தை பற்றிப் புத்தகம் எழுதியவர் அவர்’ என்று அறிமுகம் செய்திருக்கிறார்கள். ஒரு மேடையில் சிறப்பு விருந்தினராகப் பேசப் போனால் என்னை அறிமுகப்படுத்துபவர் பீக்கதைகள், கெட்ட வார்த்தை பேசுவோம் ஆகிய நூல்களின் பெயர்களைச் சொல்லமாட்டார்.

ஆனால் கல்விப்புலத்தில் இப்போது தீவிரமாகச் செயல்படும் ஆய்வாளர்கள், மாணவர்கள் பலர் நூலை வாசித்து ரசித்திருக்கிறார்கள். தீவிரமான உரையாடலை என்னுடன் நிகழ்த்தியிருக்கிறார்கள். எப்போதும் போலக் கல்விப்புல இளையோர் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்தக் காலத்துக்கு ஏற்றதை, இப்போது பேச முடிவதை நான் பேசுகிறேன் என்பதை அவர்களின் எதிர்வினைகள் காட்டுகின்றன. இந்தத் துறையில் மேலாய்வுகள் செய்து கட்டுரைகள் எழுதும் உத்வேகத்தையும் அவை தருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.வேணுகோபால்

# இரை

எந்தப் பக்கம் படுக்கலாம் என்று பார்த்தாள் பஞ்சவர்ணம். பையன் கைகளை விரித்துப்போட்டுத் தூங்குகிறான். தை வந்தால்தான் முருகனுக்கு நான்கு வருடம் முடிகிறது. ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி விரல்விட்டு எண்ணியபடி அதற்கு இன்னும் ஐந்து மாதங்கள் இருப்பதை நினைத்தாள். நாலுகாசைப் பிடித்து பெரியகுளத்திற்கே போய்விடலாம் என்று ஒரு சமயம் நினைத்ததெல்லாம் உண்டு. அந்த ஆசையெல்லாம் மங்கிப்போய்விட்டது. அழுக்குத் தலையணைக்கு மேல் வலது கையைத் தலைக்கு வைத்து உடலைச் சரித்து ஒரு பக்கமாக சாய்ந்து கால்களை மடக்கித் தூங்குகிறாள் ஈஸ்வரி. மகள் பக்கமே படுக்கலாம் என்று இடது பக்கம் படுத்தாள், ஈஸ்வரி பனிரெண்டு வயது முடிந்து ஆறாவது மாதத்திலேயே வயதிற்கு வந்துவிட்டாள். பதினான்கு நடக்கிறது. வைகையில் விட்டெறிந்த பழைய போர்வைகளில் நல்ல போர்வைகளாக இரண்டை எடுத்து அலசி வைத்திருந்தாள்.

மூன்று நாட்களுக்கு முன் நட்ட நடு இரவில் கதவைத் தட்டினான் ஒருவன். ஈஸ்வரி வந்திருப்பதால் கதவைத் திறக்காமல் இருந்தாள். தொடர்ந்து தட்டியபடி “நான்தான்டி சேகர்” என்று குழறினான், போதையில் வருவான், சையதுபுரோட்டா ஸ்டாலில் சப்பளையராக இருக்கிறான். வைகை ஆற்றுக்குள் சீமைக் கருவேல மரத்தடியில் சில முறை ஒதுங்கியதுண்டு. வைகையின் இரு கரைகளில் இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி கரைகளையே இருபுற சாலைகளாக மாற்றிக்கொண்டிருந்தார்கள். ஆரப்பாளையம் தென்கரையில் இருந்த ஆக்கிரமிப்பு வீடுகளை ஜே.சி.பி. கொண்டு கொத்தி, முட்டி, தட்டி இழுத்துத் தரைமட்டமாக்கினர். நடுவீடுவரை கொத்தியெடுத்த இடத்தில் ஏழுவீடுகளில் ஒரு அறை, இரண்டு அறைகள் மட்டும் தப்பின. ஒற்றைக்கல் செங்கல் வரிசையில் சிமிண்ட் பூச்சோடு உள்ளறைச் சுவர்கள் நீட்டிக்கொண்டு நிற்கின்றன.



இடித்து வீழ்த்தப்பட்ட சுவர்திண்டுகள் மீது ரோடு ரோலரை ஏற்றி உருட்டி அரைகுறையாக சமப்படுத்தினர். இறுகிய சிமெண்டோடு நொருங்கிய செங்கற்கள் வீடுகள் இருந்த இடத்தில் கிடந்தன. தள்ளுவண்டியில் கோரிப்பாளையம் பக்கம் வாழைப்பழம் வியாபாரம் செய்து வந்த வசந்தா வீடு இது. இடித்து எடுத்ததுபோக ஒரு அறைமட்டும் “பூட்டியபடி இருந்தது”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தா குடும்பத்திற்கும் மாப்பாளையத்தில் தொகுப்புவீடு கிடைத்ததால் அவளிடம் கேட்டு 500ரூபாய் வாடகைக்கு சம்மதிக்க வைத்தாள். மிஞ்சிய இந்த ஒற்றை அறைக்கு மேற்குப்பக்கம் இடித்து எடுக்கப்பட்ட வேறொருவன் வீட்டு அறையில் மூன்று பக்க சுவர்கள் மட்டும் மூன்றடி நீளத்தில் நீட்டிக்கொண்டு இருந்தன. அதன் முன் ஒரு போர்வையை போட்டு விடிவதற்கு முன்போ, இருட்டிய பின்போ குளிப்பதற்குப் பயன்படுத்திக்கொண்டாள்.

சேகர் கெட்ட வார்த்தைகளால் வசைபாடி ஓங்கி ஓங்கி அறைந்தான். கதவைத் திறந்ததும் "தேவடியா சிறுக்கி ஒனக்கு அவ்வளவு கொழுப்பாடி" என்று முதுகில் ஒரு வைப்பு வைத்தான். தூக்கம் கலைந்த ஈஸ்வரி சுவர் ஓரம் ஒண்டி பேந்தப் பேந்த விழித்தப்படி அம்மாவையும் அவனையும் பார்த்தாள். சவரம் செய்யாத நான்கைந்து நாள் தாடி, இடுங்கிய கண்கள், கலைந்த தலை, நைந்த காலர், வளைந்த முதுகு இந்த உருவத்தோடு தள்ளாட்டத்தைப் பார்க்க வெறுப்பாகவும் பயமாகவும் இருந்தது. புரண்டு படுத்த முருகன் எழவில்லை "அவள அனுப்புடி" "செருப்பு பிஞ்சுபோயிடும், ஒழுக்கமா போயிடு, ராத்திரியில வந்து ரகளை செய்யாதே" "தேவடியா சிறுக்கி தொழிலுக்குத்தானடி கொண்டு வந்திருக்க, சையது கோலுக்கும், டி.எம்.டெய்லர் பிரகாசு தடிக்குந்தான் சேர்த்துவிடுவயோ, அந்த மயிராண்டிய விட 200ரூபா எச்சா தர்ரேண்டி" தள்ளாடியபடி உள்பாக்கெட்டில் கைவிட்டான். "டேய் தேவடியா பயலே, உன் நாக்குல புழு வைக்க, எம்பிள்ள பச்ச மண்ணுடா ஒழுங்கு முறையா வெளிய போயிடு, அப்புறம் நான் எதையும் செய்வேன்". "என்னடி செய்வ அவுசாரி நாயே" "அறுத்துப்போடுவேன்" ஒரு மூர்க்கத்துடன் சேகர் பஞ்சவர்ணத்தைத் தள்ளிவிட்டு ஈஸ்வரியின் கையைப் பிடித்தபோது அவள் விசும்பி, விழுந்தடித்து அம்மாவின் பின்னாள் ஓடிவந்து தொட்டுக்கொண்டு நின்றாள். திரும்பியவனின் கால்பாதம் தூங்கிக்கொண்டிருந்த சிறுவனின் உள்ளங்கையை மிதித்ததுதான் தாமதம் வீல்லென கத்தியபடி எழுந்துபார்த்தான். சுவரில் புரளும் நிழல்களைப் பார்த்து மிரண்டு கத்தியபடி அம்மாவைத் தேடினான் சிறுவன்.

பாதையில் விரைந்து வந்த ஆட்டோவின் ஓசை நின்றது. "டேய் யார்ரா இந்த அர்த்த ராத்திரில்ல வந்து அலும்புறது" மூன்றடி நீளமுள்ள கனத்த குச்சியை எடுத்துக்கொண்டு வந்தான். வெளியில் வந்த சேகர் "நான் இவள வச்சிருக்கேன், ஒன் சோலி மயித்தப் பார்த்து போடா" என்றான். ஆட்டோக்காரன் "போட்டேன்னா மண்டைய ரெண்டா பிளந்து போடுவேன் பொறுக்கி நாயே" தலையில் போடாமல் புட்டத்தில் ஓங்கி ஒரு போடுபோட்டான். அவன் முறைத்துக்கொண்டு வைகை ஆற்றின் கரைச்சரிவில் இறங்கும் இடத்தில் நின்று "ஒன்ன வச்சுக்கிறேன்டா" என்றான். ஆட்டோக்காரன் "வாடா இப்பயே வச்சுக்கிருவோம்" ஒரு எட்டு வைத்ததும், மோசமான வார்த்தையை உதிர்த்தபடி இறங்கி ஆற்றுக்குள் ஓடினான்.

பஞ்சவர்ணம் கும்பிட்டபடியே "தெய்வந்தாண்ணா உன்ன அனுப்பி இருக்கு" நடுக்கமும் பதட்டமுமாகச் சொன்னாள். "இந்தா பாரம்மா இப்பிடி தொறவியா இருக்கிற இடத்தில குடியிருக்காதே. அதுவும் பொட்ட புள்ளைய வச்சிகிட்டு, நல்ல வீடு பார்த்து போ" ஆட்டோவை எடுத்துக் கிளம்பினான்.

தோப்புக்காரர் வைரவர் வீடு பாதுகாப்பாக இருக்கும் என்றுதான் ஈஸ்வரியை வீட்டுவேலைக்கே விட்டாள்.. பெரிய மனுஷியான ஒரு மாதத்திலிருந்தே அவள்அண்ணன்காரன் அவர்கள் வீட்டில்போய் எங்க பிள்ளைய அனுப்பு என்று தகராறு செய்ய ஆரம்பித்தான். "கைகால் ஊறாத பிஞ்சு பிள்ளையை அந்தக் குடிகாரனுக்குக் கட்டிவச்சு நாசமாக்கமாட்டேன். நீங்கதான் எனக்கும் எம்பிள்ளைக்கும் பாதுகாப்பு. என் அண்ணன் தம்பிக எம் பிள்ளைய பாழாக்கிடுவான்க. என்ன ஒரு திருட்டு பயலுக்குக் கட்டிவச்சான் அண்ணன்காரன், வேணாம்னு கெஞ்சினேன். அடிச்சு உதைச்சு சம்மதிக்க வச்சான்க. மூணு பிள்ளைக, இந்தக் கைப்பிள்ளை வகுத்தில இருக்கிறப்பவே விட்டுட்டு வண்ணாத்திய கூட்டிட்டு ஓடிப்போயிட்டான். நீங்கதான் ஐயா எம்பிள்ளைகளுக்கு எல்லாம்" என்று சொல்லி விட்டுதான் வந்தாள். சந்தைக்கு வந்த இடத்தில் தகராறு செய்து விரட்டவும்தான் வந்துவிட்டாள். தோப்புக்காரரர் 'வர்றத நான் பாக்கிறேன்' என்றுதான் சொன்னார். என்னமோ ஒரு முடிவெடுத்து வந்துவிட்டாள். சின்னவளை அனாதைப் பள்ளியில் சேர்த்துவிடவும் தோப்புக்காரர்தான் உதவினார். ஒரு நன்றி இல்லாமல் இவள்பாட்டுக்கு வந்துவிட்டாளே என்று வருத்தப்பட்டாள்.

மெழுகுவர்த்தி முக்கால் பங்கு கரைந்துவிட்டது. மகனையே பார்த்தாள். இஞ்சினியர் வீட்டு அம்மா, "உன் நடத்தை சரியில்லை, நீ வீட்டு வேலைக்கு வராதே, நாங்க வேற ஆள பாத்துக்கிறோம்" என்று கறாராக சொல்லிவிட்ட பின் நல்லவீடே அமையவில்லை. இஞ்சினியர் வீட்டு ட்ரைவர் ஜெயராமன் ஆயிரம் ரூபாய் கைமாத்து தந்திருந்தான். ஒரு நாள் கார்செட்டில் வைத்து சேர்ந்து வாழலாம் என்றான். உனக்கு குடும்பம் இருக்கு குழந்தைக இருக்கு, இது தோதுபடாது என்றாள். அதை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று மருகி மருகி பேசினான். என் புத்தியைத்தான் செருப்பால் அடிக்கவேண்டும்.

ஒரு பெரிய வீட்டில் வேலையோ, ஒரு தோட்டி வேலையோ கிடைத்தால் கூட போகவேண்டும் என்பதில் உறுதியாகத்தான் இருக்கிறாள். பத்துநாட்களுக்கு முன் செல்வபுரம் இங்கிலீஸ் பள்ளிக்கூடத்தில் கூட்டுகிற வேலைக்குக் கேட்டுப் போனாள். இப்போது ஆள் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஈஸ்வரி வந்த நாளில் இருந்தே இந்த இடம் தோதுப்படாது என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துவிட்டது. வேலைகிடைக்காமல் இதைவிட்டு எங்குதான் போகமுடியும்.

'தாயே மீனாட்சி எங்கள கரையேத்திவிடுதாயி'' வேண்டிக்கொண்டாள். ஆட்டோக்கள், கார்கள், பைக்குகள் செல்லும் ஓசை கேட்டது. வந்துபோவோர்களுக்கு வைகை ஆறு வசதியாக இருந்ததால் வேலை தேடுவதில் அக்கறை இல்லாமல் போய்விட்டது. அதைவிட இதில் பெற்ற சுகம் எங்கெங்கோ இழுத்துச் சென்று மூழ்கடித்து, இடது குடங்கையில் தலையைவைத்து, தூங்கும் மகளையே பார்த்தபடி இருந்தாள். தலையைத் தடவினாள்.

கதவு தட்டுவது கேட்டது. எழுந்து ஓடிப்போய் நாதாங்கி சரியாக பூட்டியிருக்கிறதா என்று பார்த்தாள். பூட்டியிருந்தது, முருகன் நெளிந்து கதவுப்பக்கம் பார்த்துப் புரண்டான். கதவை இருவர் தட்டுவதுபோல் தெரிந்தது, ஒரு பைக் வண்டி ஓசை சாலையில் கேட்டது. தட்டுவதும் நின்றது. ''தெறடி பஞ்சு. நான் சங்கரபாண்டி, பால்காரன்'' என்றான். ஆனால் உடன் யாரோ நின்று பேசுவதும் கேட்டது. சேகர் என்பது உறுதியானது. பிள்ளையை வேட்டையாடிவிடுவார்கள் என்ற பயம் தொற்றிக்கொண்டது. மெழுகுவர்த்தியை எடுத்து ஏதாவது வசமான பொருள் இருக்கிறதா என்று பார்த்தாள். பெரிதாக ஒன்றும் இல்லை ''அம்மா'' பயந்தாள். கதவை நைசாக தட்டினார்கள். அம்மாவின் பின் வந்து நின்றாள். சாக்கு இருந்த இடத்தில் அரிவாள்மனை இருந்தது. எடுத்துக்கொண்டாள்.

மெழுகுத்திரியைப் பழையபடி இருந்த இடத்தில் வைத்தாள். கார் ஒன்று வேகமாக ஒலியெழுப்பி வருவது கேட்டது. வண்டிகள் நிறைய வந்தால் பாதுகாப்பாக இருக்கும் என்று தோன்றியது. பால்காரன் ''உன் பிள்ளையை நான் கட்டிக்கிறேன் தெற பஞ்சு'' என்றான். பிள்ளையைக் குறிவைத்து வந்திருப்பது தெரிந்துவிட்டது, திடுதிடுவென தட்டினான், சின்னவன் எழுந்து அழவும் ஈஸ்வரியும் அழத்தொடங்கினாள். தட்டுவது நின்றது.

அழுவது நின்றதும் தட்டினார்கள். இரண்டாம் ஆட்டம் சினிமா முடிந்திருக்கும் போல கரைபாதையில் வண்டிகளின் சத்தம் கேட்டது. சத்தம் ஓய்ந்தபின் மறுபடியும் கதவைத் தட்டுவது தொடங்கியது. திடீரென பெரிய பெரிய கற்கள் கதவில் வந்து மோதி விழுந்தன. கதவு உடைந்து வந்துவிடும் போல புடைத்து புடைத்து ஓய்ந்தது. வைகை ஆற்றுக்குள் இருந்து யாரோ கத்துவது கேட்டதும் கல்லெறிவது நின்றது. தட்டுவதும் நின்றது.

இருவரும் தூங்கவில்லை. பையன் மடியிலிருந்து தூங்கிவிட்டான். ஆட்டோக்கள் ஓடும் சத்தம் கேட்டது, ஆம்புலன்ஸ் ஒன்று 'விய்ங்ங் விய்ய்ங்' என கத்திக்கொண்டு போனது. அவர்கள் இடித்துத் தள்ளியபோது நாதங்கி பெயர்ந்து வந்துவிடுமோ என்று பயமாக இருந்தது. அது தன் உறுதியைக் காட்டியது. இரும்பு கொண்டியால் ஆனதால் தாக்குப்பிடித்தது. போலிஸ் ரவுண்டப் விசில் வந்தபின் தட்டுவது முழுதாகவே நின்றுவிட்டது.

மெழுகுதிரியை ஏற்றினாள். கட்டைப்பையில் மகளின் துணிகளை எடுத்து வைத்தாள். ''தோப்புக்காரர்கிட்ட இப்படி வந்தது தப்புதான்னு சொல்லு, ஏத்துக்கிடுவாங்க. நான் அடுத்த மாசம் வர்றேன்''. ''சரிம்மா'' அம்மாவுடன் இங்கு இருக்க முடியாது என்பதை உணர்ந்தாள். இரண்டு நூறுரூபாய், ஒரு ஐம்பதுரூபாய், மூன்று பத்துரூபாய் மணி பர்சில் இருந்தன. முப்பது ரூபாயை மட்டும் அவள் காலை இட்டிலிவாங்க எடுத்துக்கொண்டு இருநூற்று ஐம்பது ரூபாயை அவள் கையில் தந்தாள், ''சரிவா ஆத்துப் பள்ளத்தில கொல்லைக்குப் போயிட்டு வந்திரலாம்''.

கதவைத் திறந்தாள், வாசலடியில் சிமிண்டோடு ஒட்டி செங்கல் துண்டுகள் கிடந்தன. கதவில் கல்பட்ட இடங்களில் குழிவிழுந்து தூசியோடு ஒட்டி இருந்தன. அக்கரையில் சோடியம் விளக்குகள் இளம்மஞ்சள் நிறத்தில் தெரிந்தன. வண்டி ஒன்று மேற்கால் போனது. நட்சத்திரங்கள் குளிர்ந்து மின்னுகின்றன. முதலில் இருகரையோரம் இருந்த மாட்டுக்கொட்டகைகளைத்தான் இடித்து காலிசெய்தார்கள். பகலெல்லாம் வைகையாற்றில் அங்கங்கே இருக்கும் புல் மேட்டில் பசுக்கள் மேயும். சீமைக்கருவேல மரங்களைத் தோண்டி எடுத்தார்கள். மறுபடியும் அங்கங்கே முளைத்து அடர்ந்து நிற்கின்றன. வையை ஆற்றிலிருந்து யானைக்கல் பாலம் தெரிந்தது.

தூங்கும் பையனை எழுப்பாமல் வெளியே பூட்டிவிட்டு நடந்தார்கள். ''நாலு காசை சம்பாதிச்சிடலாமன்னு வந்தேன். இப்படி சீரழிஞ்சு போயிட்டேன். இவன இடுப்பில வச்சிருக்கிருதாலதான் இங்க இருக்கவும் முடியுது. ஊருல ரொம்ப கெட்டபேராயிடுச்சு. நீ என் அண்ணன்காரன் பையனை கட்டிக்கிடுறயா''. ''இல்லம்மா எனக்கு இந்த சீரழிவே வேணாம். கல்யாணமே பண்ணமாட்டேன்'' ''அப்படியெல்லாம் பேசாத, அவன் குடிகாரனா போயிட்டானே, இல்லையன்னா நானே கெட்டிக்க சொல்வேன்''. ''எனக்கு இந்த பிழைப்பு வேணாம்மா''.

பேசாமல் நடந்தார்கள். நான்கைந்து நாய்கள் ஆற்றுக்குள் ஓடுவது தெரிந்தது. அங்கங்கே சில பேட்டரி வெளிச்சத்தோடு காலைக் கடனுக்கு ஒதுங்குவதும் தெரிந்தது. இரண்டு பசுமாடுகள் பாதையோரம் படுத்தபடி வாயில் எச்சில் வடிய கண்மூடி தூங்கிக்கொண்டிருக்கின்றன. பேருந்து நிறுத்தம் தூரத்தில் வெளிச்சத்துடன் தெரிந்தது. மூத்திரவாசம் வந்தது. தோளில் பையைத் தொங்கவிட்டபடி பாதையோரம் அந்தப்பக்கம் திரும்பி இரண்டுபேர் ஒன்றுக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். பெரிய நீர்த்தொட்டி தெரிந்தது.

பெரியகுளம் செல்லும் பேருந்தின் ஜன்னலோரம் ஈஸ்வரியை உட்காரவைத்தாள். டீக்கடைகளில் கூட்டம் இல்லை. பேருந்துக்கு வருவோர்களை டீ, காப்பி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கிறார்கள். கிளம்பப்போகும் வண்டிமுன் டிரைவர், கண்டக்டர் செல்லும் வழியில் உள்ள ஊர்ப்பெயர்களைச் சொல்லி அழைக்கிறார்கள். இருக்கைகளில் விட்டுவிட்டு அமர்ந்திருந்தார்கள். முழுமையாக நிரம்பவில்லை. பலரின் முகம் தூக்கக்கலக்கத்துடன் இருந்தது. பின்னால் ஒருவர் சால்வையைப் போர்த்தி தூங்குவதற்குத் தலையைக் கண்ணாடி ஜன்னலில் சாய்த்தார். ஒரு பெண் பளிச்சென கல்யாணத்திற்குப் போவதுபோல கைக் குழந்தையோடு முன்னால் வந்து அமர்ந்தாள். அவளது தந்தை பையை முன்னால் வைத்தார்.

“தோப்புக்காரர் கேட்டா அம்மா இஞ்சினியர் வீட்டு வேலைக்குப் போறதாவே சொல்லு''. ஈஸ்வரி பதில் ஒன்றும் சொல்லவில்லை. வண்டி சற்று நகர்ந்ததும் “சரி பார்த்துபோ''. “நான் பாத்துப்போறேம்மா, நீ பாதை மாறிபோயிட்ட” மற்றவர்கள் கேட்டுவிட்டார்களோ என்று முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். “நீ நல்ல பேரு எடுத்துக்கொடு என் கெட்டபேரு என்னோட போகட்டும்''. “இந்த வாழ்க்கையை நீ வாழனுமா” சட்டென குனிந்து, மகளுக்கு வந்ததும் வாங்கித்தந்த புதிய செருப்பை இடக்காலில் இருந்து உருவி தன் கன்னத்திலும் தலையிலும் போட்டாள். வண்டியில் இருந்தவர்கள் இவர்களைச் சட்டென திரும்பிப்பார்த்தார்கள். ஈஸ்வரி அம்மாவின் கையில் இருந்த செருப்பை வெடுக்கெனப் பிடுங்கி தன் காலில் மாட்டினாள். “நீ நல்லா இருந்தாதானே எனக்கு கௌரவம், பெருமை” விசும்பினாள் ஈஸ்வரி. “ஆமாடா” தலையை ஆட்டினாள் அம்மா. “ஊரவிட்டு எப்படி போனயோ அப்படி ஒரு அம்மாவா நீ ஊர் வந்து சேரு. நான் உன்னையும் பார்த்துக்கிறேன், தம்பிய ஒரு மகனா வளத்து நான் படிக்க வைக்கிறேன்.” அவள் மகளை அள்ளி கன்னங்களில் மாறிமாறி முத்தம் வைத்தாள்.

அவள்முன் மண்டியிட்டு மெல்லிய குரலில் “ஊரே காரிதுப்புமேடி''. “ஊருதுப்பும்மா, நான் துப்புனா தீந்திடுமா. நீ என் அம்மாதானே, உன் தொப்புள் கொடி இல்லேன்னு அறுக்க முடியுமா?” “நீ எங்க குலதெய்வம்டி. ஐயோ எம்பிள்ளை விரும்புற மாதிரி என்ன ஊருக்கு அனுப்பிவச்சிரு மீனாட்சி” எழுந்து மீனாட்சியம்மன் கோயில் இருக்கும் கிழக்கு பார்த்து கும்பிட்டாள்.

வண்டியை எடுக்கவும், பஞ்சவர்ணம் இறங்கி ஜன்னல்பக்கம் பார்க்க ஓடினாள். மற்றொரு வண்டி ஏறிவரவும் அந்த வண்டியைச் சுற்றி இந்தப் பக்கம் வந்தாள். வண்டி கடந்து போய்விட்டது.

பையனைத் தூக்கிக்கொண்டு பழக்கார வசந்தா சொன்ன வாத்தியார் வீட்டுக்கு நரிமேடுக்கும், போலிஸ்காரர் வீட்டுக்குத் தந்தனேரிக்கும் போனாள். அவர்கள் பதினைந்து பதிமூன்று நாட்களுக்கு முன்னமே வீட்டு வேலைக்கு ஆளெடுத்துவிட்டதைச் சொன்னார்கள். அவர்களிடமே “உங்களுக்குத் தெரிஞ்சவங்களுக்கு ஆள் வேணுமன்னு சொன்னா சொல்லுங்க, வசந்தா அக்காகிட்ட சொன்னா, எனக்கு சொல்வாங்க” சொல்லிவிட்டு வந்தாள். வசந்தா சொல்லி ஒரு மாதம் இருக்கும், இந்த ஆட்டத்தில் அதை கவனமில்லாமல் விட்டாள்.

பசி எல்லா வைராக்கியங்களையும் தள்ளிப்போடச் செய்துவிடுகிறது. காலையில் ஆளுக்கு இரண்டு இரண்டு இட்லிக்குத்தான் வகை இருந்தது. மதிய பசியில் பையன், ஊமையன் போல “அம்மா” என்று வாயருகில் விரல்களைக் குவித்து உண்ணுவதைப் போல காட்டினான். இடுப்பிலிருந்து இறக்கி இரண்டு காலைப் பிடித்து அப்படியே தரையில் சுழற்றிப் போடலாமா என்று ஒரு கனம் தோன்றியது. ‘ச்சீ என்ன குரூரபுத்தி இப்படி வந்து தொலைத்ததே’ என்று தன்னையே திட்டிக்கொண்டாள். “வாங்கித்தர்றேன்” என்றாள். அவன் தலையாட்டினான். பிச்சை எடுக்க நினைத்ததுண்டு. ஏனோ அது அவமானமாகத் தோன்றியதால் அவளால் அதைச் செய்ய முடியவில்லை. எல்லா இழிவுகளுக்குள்ளும் இழுக்கிறது பசி. பசியை மட்டும் கடவுள் இல்லாமல் பண்ணியிருந்தால் எவ்வளவோ சுகமாக இருந்திருக்கலாம் என்று பஞ்சவர்ணம் நினைத்ததுண்டு.

மாலையில் குளித்து, இருப்பதில் நல்ல சீலையைக் கட்டிக்கொண்டு பையனை இடுப்பில் அணைத்து தவுட்டுச் சந்தை நோக்கி நடந்தாள்.

நகரம் அடங்கிக்கொண்டிருந்தது. இந்த இடத்தில் இருந்து வருகிறேன் என்று சொல்லித்தான் போலிசிடமிருந்து தப்பித்துக்கொண்டிருந்தாள். பையன் தோளில் தலைசாய்த்து பற்றியிருக்கும் ஆதரவைக் கண்டதும் “போ” என்று மிரட்டலோடு அனுப்புகிறது உண்டு.

பையன் பசியால் சோர்ந்திருந்தான், விசாலாட்சி வடைகடையில் தண்ணீர் வாங்கிக் கொடுத்தாள். முருகனை வைத்துக்கொண்டு பழக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுவது உதவிகரமாகவே இருந்தது.

பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுக்கொண்டிருந்தன. இரண்டு பிளாட் பாரங்களிலும் ஆள் நடமாட்டம் குறைந்தது. கடைக்குள் எரியும் டியூப்லைட்டுகளை பையன்கள் அணைத்தார்கள். நவீன் டீ சர்ட் மார்ட் கடை முன் கேங்கரில் தொங்கும் பனியன்களைக் கொக்கியில் அலாக்காகத் தூக்கி இறக்கினான் ஒருவன். தந்தி தபால் ஆபீசிற்கு இரவு சிப்ட் மாற்றப் போனவர்கள், சிப்ட் முடிந்து வெளியே வந்தவர்களிடம் நின்று பேசிவிட்டுக் கலைந்தார்கள். பாதையின் கிழக்கு பிளாட்பாரத்தின் வழியாகவும் மேற்குப் பிளாட்பாரத்தின் வழியாகவும் இரண்டு இரண்டு முறை அங்கங்கே நின்று கடந்துவிட்டாள்.

அவளது கருமை நிறம், புஷ்டியில்லாத மெலிந்த உடம்பு, அடர்த்தியில்லாத சன்னமான சடை, சிரித்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுக்குமாறாக இருக்கும் கீழ் பல்வரிசையை பலரும் விரும்புவதில்லை.

கொஞ்சமேனும் ஆள் நடமாட்டம் இருக்கும்போது கிடைத்தால்தான். நடமாட்டமே அடங்கிவிட்டால் கடைகள் முன்னோ, கம்பத்தின் முன்னோ நிற்கமுடியாது. பேருந்து நிறுத்தும் இடத்தில் நிற்கலாம். யாரும் அணுகிவரமாட்டார்கள், தள்ளி நிற்கவேண்டும். கூச்சத்தவிட்டு வர சுற்றி ஆள் இருக்கக்கூடாது. போகிற போக்கில் முடிவாகும்படி நிற்கவேண்டும்.

வளலையான இளம் கருப்பு நாயைத் துரத்திக்கொண்டு செவலைப்போர் வந்தது. நடைபாதையில் நடந்து கொண்டிருந்தவர்கள் பயந்து குதித்து ஒதுங்கினர். ஒரு எலும்புத்துண்டைக் கவ்வியபடி நாலுகால் பாய்ச்சலில் உயிரைக் காலில் சுருட்டிக் கொண்டு ஓடிவருகிறது. இருவரையும் தாண்டி, கவ்வியிருந்த எலும்புத் துண்டை கீழே போட்டுவிட்டு மின்னலென மறைந்தது. துரத்தி வந்த செவலை விட்டுச் சென்ற எலும்புத்துண்டை கவ்வி சம்பத் மளிகைக்கடை திரும்பும் இடத்தில் அமர்ந்தது இளம் கருப்பு நாய். முன்னங்காலால் பற்றி எலும்பில் ஒட்டியிருந்த பிசிரான கறியைக் கடித்து தின்னத் தொடங்கியது. பிளாட்பார கடைகள் ஏகதேசம் அடங்கி சற்று பதட்டமானது. மேற்குப் பிளாட்பாரத்தில் நின்றபடி விக்னேஷ் பேக்கரி கடையைப் பார்த்தாள். ஒரு கிறுக்கன் அழுக்குச் சட்டை, தூசிபடிந்த தாடி மீசையுடன் அவள் பின்னால் கடந்து போனான். சட்டைக்குப் பொத்தான்கள் இல்லை. திட்டுத்திட்டாக அழுக்கேறிய மார்பில் கருத்த மயிர்கள் தெரிந்தன.

அம்மா மெஸ்ஸைத் தாண்டிப் போனால் அது வெறுக்கென்று இருக்கும். பால் பாத்திரத்திலிருந்து ஈயச் செம்பில் முகர்ந்து கையுயர்த்தி அருவி இறங்குவது போல ஊற்றி கலக்குவதைப் பார்த்தாள். இவள் நிற்கும் இடத்திற்கு இடது பக்கம் சற்றுத்தள்ளி மின் கம்பம் வெளிச்சத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது. வண்டியில் வந்த இருவர் காப்பியை அருந்திவிட்டுச் செல்கிறார்கள்.

இந்தப் பக்கமிருந்து விக்னேஷ் பேக்கரியையே பார்த்தாள். கடையில் இருந்த மூவரும் இவளைப் பார்த்த சமயம் சட்டென பையனை பிளாட்பாரத்தில் அமர வைத்தாள். அவன் 'அம்மா' என்று கையைக் காட்டினான். ''இரு'' என்றாள். அவர்களைக் குனிந்தபடி பார்த்தாள். அவர்கள் பார்ப்பது தெரிந்தது. அவள் நிமிர்ந்ததும் பையன் எழுந்து குதித்து தூக்கும்படி இருகைகளை அவள் முகம் நோக்கி நீட்டினான். அவனுக்கு அவசரமாக ஒரு முத்தம் வைத்து ''இரு வந்திடுறென்'' மறுபடி அமர வைத்தாள். விடுவிடுவென நடைபாதையில் நடந்தபடி தன் மகனைப் பார்த்தாள். பையன் தான் போகும் பாதையில் அமர்ந்தபடி தன்னைப் பார்ப்பது தெரிந்தது.



லேசாக வாலை ஆட்டிக்கொண்டு சிறுவனைப் பார்த்தது இளம்நாய். அதற்குமேல் மேலேறிச் செல்லத் தயங்கியது. துரத்திவந்த செவலைநாயின் அதிகார எல்லை பயமுறுத்துவதால் சிறுவன் அருகில் கால்நீட்டிப்படுத்தது. சிறுவன் சற்று பயந்து சாய்ந்தான். அது தரையில் பட வாலாட்டியது. சின்ன அன்பான முணகல் அதனிடமிருந்து வந்ததும் நிமிர்ந்தான்.

மூடியிருந்த கரிகாலன் மெக்கானிக்கடை ஒட்டி ஒருவன் அரவாணியை இறக்கி விட்டான். பின்னால் வண்டியில் வந்த இருவர் வண்டியை நிறுத்திவிட்டு, அரவாணியை மூர்க்கமாகத் தாக்கத் தொடங்கினர். ஒருவன் சீலையை உருவப்பார்த்தான். அவள் விடாமல் சுருட்டி இழுத்தாள், ஒருவன் இடுப்பில் ஓங்கி உதைத்தான். சிறுவன் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகில் விழுந்தாள். படுத்திருந்த இளம்நாய் திடுக்கென குதித்து எழுந்து வாலை பின்னங்காலில் நுழைத்தபடி குறைத்தது. என்னவென்று விளங்காமல் அரைத்தூக்கத்தில் லம்பிக்கொண்டிருந்த பையன் மிரண்டு வாய்கோண மெல்ல சிணுங்கினான். நாய் மீண்டும் மீண்டும் அவர்களைப்பார்த்து குறைத்தது. மூவரும் சட்டென வண்டியை எடுத்துக்கொண்டு வேகமாக மறைந்தனர்.

அரவாணி மூக்கை உள்ளங்கையால் தொட்டுப்பார்த்தாள், உள்ளங்கையில் ரத்தம் அப்பியது. மூக்கு உடைந்து உதடு, தாடையெல்லாம் ரத்தமாகிவிட்டது. உள்ளங்கையை வியாபாரிகள் சங்கம் ஒட்டிய விளம்பர போஸ்டரில் இழுகினாள். அதன் ஓரம் பசை ஒட்டாமல் எழுந்திருந்த பகுதியைக் கிழித்து உள்ளங்கையையும் மூக்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்தாள். "தேவடியா பசங்க இவன் கொடுத்த இருநூறு ரூபாய்க்கு ராத்திரியெல்லாம் இருக்கணுமாம். புதுசா ரெண்டு பசங்கள கூட்டிட்டு வருவானுங்களாம். உங்க அக்கா தங்கச்சிய இருக்கச் சொல்லுடா தேவடியா நாயே. எங் கையில ஒவ்வொருத்தனா சிக்குங்கடா, கடிச்சு துப்புறேனா இல்லையான்னு பாரு" இரு உள்ளங்கையை சாலையோர மண்ணைத் தொட்டுத் தேய்த்து சுவரில் துடைத்தாள். சீலையில் ஒட்டிய மண்ணைத் தட்டினாள். முந்தானையை உதறி கிழிந்துவிட்டதா என்று பார்த்தாள். முறுக்கிப்பிடித்ததால் சீலை கிழியவில்லை. உதறி இடுப்பில் சொருகினாள். தோள்பட்டையில் ஒட்டிய தூசியைத் தட்டியபடி சிறுவனைப் பார்த்தாள். அலங்காரம் துறந்து ஆலிலை அழிபசி கண்ணன்போல சோர்ந்து வாடிய சிறுவனின் முகத்தைப் பார்த்ததும் அவசரமாக அவன் தலையில் உள்ளங்கையை வைத்து ஆசீர்வதித்துவிட்டு நடந்தாள். ஜலுக் ஜலுக் நடைபாதையில் கொலுசு ஒலிக்க வேகமாக தெற்கு முகமாகச் சென்றாள். எதிர் நடையில் நேசனல் புத்தகக்கடை படிக்கட்டில் ஒருவன் அமர்ந்து பீடியைப் பற்றவைத்து இழுத்தான். வெக்கையெல்லாம் அடங்கி குளிர்ந்த காற்று சட்டென வீசியது. மழை வருமோ இல்லை கலைந்துவிடுமோ. காற்று இதத்தை நிரப்பிக்கொண்டு போனது.

நேரம் ஒன்றிற்கு நெருங்கிக் கொண்டிருந்தது. ஓட்டமும் நடையுமாக அம்மா வந்தாள். நடைபாதை ஓரம் அனாதைகள், பிச்சைக்காரர்கள் தங்கள் மூட்டைகளின் மேல் தலைவைத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். மீந்த புரோட்டா பார்சலும் சால்னாவும் சிந்திக்கிடந்தன. நீர் புட்டியில் கால்பங்கு தண்ணீர் இருந்தது. தண்ணியைப் போட்டிருந்த கிழவி அவள் முதுகிற்கு பின் அமர்ந்திருந்த கிழவனைக் கெட்டவார்த்தைக்கு உகந்தபடி கையசைப்பு செய்து திட்டுகிறாள். அந்தக் கிழவன், "உன் பல்ல உடைப்பேன்" என்றார். ஏற்கனவே ஒருபக்கம் பல் இல்லாத கிழவி "உன் கூதி நரம்ப அருப்பேன்" என்றாள். "திருட்டுச் சிறுக்கி உன் வாயில பீய கரைச்சு ஊத்துவேன்" "எடுபட்ட பயலே, எங்காசில ஓசி சாராயத்த குடிச்சிட்டு என்னயவாடா கேட்ட, எம் புருஷன் ஒரு நாள் இப்படி கேட்டிருப்பானா" திரும்பி அவன் முதுகில் ஒருபோடு போட்டாள். நடைபாதையில் வயதான காலத்தில் ஜோடி சேர்ந்தவர்கள் போல. டி.எம். டெய்லர்கடை படிக்கட்டில் இரண்டு வெற்று பிராந்தி புட்டிகள் இருந்தன. பிளாட்பாரத்தில் ஒரு இளைஞன் குப்புறபடுத்து தூங்கிக்கொண்டிருக்கிறான்.

அன்று மூன்று மணி இருக்கும். ஆட்டோக்காரன் ஆரப்பாளையம் புதுபாலம் திரும்பும் இடத்தில் இறக்கிவிட்டு, மற்ற சவாரியை இறக்கிவிட பரவை பக்கம் போனான். இக்கரைக்கும் அக்கரைக்கும் குறுக்கே புதுப்பாலம். சடசடவென நடந்துவிடலாம் என்று தோன்றியது. காற்று இதமாகவீசியது. பாலம் மேலேறியது, முருகனை தோளில் சாய்த்து வேகமாக நடந்தாள். நடுப்பாலத்தில் நடைபாதையை விட்டு சாலையில் மூட்டைபோல ஒன்றுகிடந்தது. நெருங்கியபோது கிழவி ஒருத்தி சுருண்டுபடுத்தபடி முணகினாள். இழுத்து நடைபாதையில் போடலாம் என்று பார்த்தபோது சுற்றிலும் ரத்தம் கொட்டிக்கிடந்தது. மூட்டைத்துணிகள் சிதறிக்கிடந்தன. அனத்தியபடி தலையைத் தூக்கினாள். இடது கண் துருத்தியபடி ரத்தக் குழும்பாக கசிந்தபடி இருந்தது. கத்தியால் குத்தியிருக்க வேண்டும். உதடுகள் கிழிந்து வீங்கியபடி இருந்தன. பயந்து வேகமாக நடந்தாள். ஐந்து ரூபாயும் சில்லரையும் கிடந்தன. இந்தப்பக்கம் இறங்கி நடந்திருக்கக்கூடாது. விளக்குக் கம்பத்தில் ரத்தம் இழுகிய தடம் இருந்தது. கிழவியை அந்தக் கோலத்தில் விட்டுவிட்டு வந்தது பகலெல்லாம் அடித்துக்கொண்டது.

பையன் என்ன ஆனானோ, வேகமாக நடந்தாள். தூங்கி உருண்டு ரோட்டில் கிடக்கிறானோ, வண்டி ஏதும் ஏற்றியிருக்குமோ, அடித்துப்போட்டிருப்பார்களோ, கடத்திக்கொண்டு போயிருப்பார்களா, கிறுக்கன், நாய் ஏதாவது கடித்து வைத்திருக்குமோ விரும்பாத எண்ணங்களாகத் தோன்றத் தோன்ற கொஞ்சம் ஓடவும் செய்தாள்.

கருப்பு நாய் பையன் பக்கம் முன்னங்கால்களை நீட்டி சாலையைப் பார்த்தபடி படுத்திருக்கிறது. இளம் பருவத்தின் மினுமினுப்பு, சன்னமான உடலமைப்பைப் பார்ப்பவர்கள் அதை வளர்க்க ஆசைப்படுவார்கள். சிறுவன் அதைப் பார்க்கும்போது அதுவும் முகம்தூக்கி சிறுவனைப் பார்த்து புன்னகைத்தப்படி வாலைத் தாளம் போல தரையில் பட ஆட்டியது.

பஞ்சவர்ணம் தூரத்தில் வருவதைப் பார்த்த பையன் இரண்டு கைகளை பறவை இறக்கைப்போல அடித்துச் சிரித்தான். தூங்காமல், தாய்போன திசையைப் பார்த்துக்கொண்டே இருந்திருக்கிறான். என்ன நம்பிக்கை. கூட்டில் விட்டுச் சென்ற பறவைக் குஞ்சுபோல ஒரு நம்பிக்கை. நெருங்க நெருங்க சிரிப்பும் உற்சாகமுமாக இரு கைகளை வேகமாக அடித்தான். எழுந்து இருகால்களையும் மாற்றி மாற்றிவைத்து நடனம்போல ஆடினான். வந்தவள் அள்ளித் தூக்கி முத்தமிட்டாள். அவன் மேற்பற்கள் தெரிய சிரித்தான். நான்கு எட்டு தள்ளி அமர்ந்திருந்த இரு முதியவர்கள் இவர்களையே பார்த்தனர். கருப்பு நாய் அந்தத் தாயையும் சிறுவனையும் தலைதூக்கிப் பார்த்தபடி வாலாட்டியது.

சாலையைக் கடந்து விக்னேஷ் பேக்கரிக்குப் போனாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தட்டில் தேங்காய்பன், சமோசா வாங்கி பக்கவாட்டில் போட்டிருந்த மேசையில் வைத்தாள். பையனை மடியில் வைத்தபடி நாற்காலியில் அமர்ந்து பன்னை பிய்த்து ஊட்டினாள். அவளும் ஒரு வாய் போட்டுக்கொண்டாள். தலையைத் தூக்கி பேக்கரி ஆட்களைப் பார்த்து புன்னகைத்தாள். நன்றியைச் சொல்வதுபோன்ற பார்வை. இரண்டு கட்லட் கேட்டு வாங்கினாள். அப்புறமாக இரண்டு பால் போடச் சொன்னாள். அவள் ஊட்டினாலும் பையன் கையில் எடுத்து சாப்பிட்டான்.

பணத்தைக் கொடுத்துவிட்டு இந்த நடைபாதைக்குப் பையனைத் தூக்கிக்கொண்டு வந்தாள். மணி ஒன்றரையைத் தாண்டியிருந்தது. கிழவி அந்தக் கிழவனுக்குச் சரிந்த போர்வையை எடுத்து நன்றாகப் பொத்தி அணைத்தாள். அவர் முணகிக்கொண்டிருந்தார். வலியால் முணகுவது தெரிந்தது. மனிதர்கள் அங்கங்கே நடைபாதையில் வந்து இருக்கிறதுகூட எவ்வளவு பாதுகாப்பு.

அவர்களைத் தாண்டிப் போகப்போன பஞ்சவர்ணம், நின்றபடி "அம்மா நீங்க யாரு" என்று கேட்டாள். "தேவகோட்டை பக்கம் கல்லல்ல இருந்து ஆசுபத்திரிக்கு வந்தோம். இங்க பெட்டு வசதி இல்ல, மருந்து மாத்திரை தர்றோம். இங்கனகாட்டி கோயம்புத்தூருக்கு புதுசா மிஷினெல்லாம் வந்திருக்கு. அங்க போங்கன்னு சொல்லி அனுப்பிச்சாங்க, ஊருக்கு இப்ப பஸ் வசதி இல்ல, நடுராத்திரியில எங்க போறதுன்னு தெரியல, சரி காலையில போகலாமன்னு இங்க வந்தோம், உன் மகனா" "ஆமா" "கொள்ள நேரமா தவிச்சுக்கிட்டிருந்தான். எங்க போன". "இங்கதான் பக்கம்மா".

பையனை நடைபாதையில் அமரவைத்துவிட்டு விக்னேஷ் பேக்கரிக்குச் சென்று தேங்காய் பன்னும், பிளாஸ்டிக் பையில் டீயும் வாங்கி வந்தாள். இரண்டு பிளாஸ்டிக் கப்புகளில் டீயை ஊற்றித் தந்தாள்.

பையனைத் தூக்கிக்கொண்டு நடந்தாள். போக்கு ஆட்டோ வந்தால் ஏறிச் செல்லலாம் என்று திரும்பிப் பார்த்தாள். இரவு நேர நகரப்பேருந்து நிறுத்தும் இடத்தில் மூன்றுபேர் நின்றிருந்தார்கள். பேருந்து வந்தால் ஏறலாம் என்று அந்த இடத்திற்கு நடந்தாள், இரண்டு மார்பகங்களில் நோவு எடுத்தது. சிவந்து வீங்கிவிட்டது. பன்னிப் பயல் கடித்துவிட்டான். வீட்டிற்குப் போனதும் வேப்பெண்ணை தடவவெண்டும், பின்னால் கருப்புநாய் வாலாட்டிக்கொண்டு வந்ததை அவள் கவனிக்கவில்லை, அம்மாவின் தோளைத் தொட்டு "அம்மா நாயி" என்றான். அவள் "ம்ம்" சொல்லிக் கொண்டு சாலையை வேகமாகக் கடந்தாள். நாய்க்கு டாட்டா காட்டினான். அது வாலை ஆட்டிக்கொண்டு இந்த நடைபாதையிலேயே நின்றுவிட்டது.


**வெயில் நீர்**

ஆசிரியர்:
பொ.கருணாகரமூர்த்தி

விலை : ரூ.225

காலச்சுவடு பதிப்பகம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஏ.சுசீலா

# நின்ற சொல்

தினமும் சொல்லிவைத்தாற்போல ஐந்தரை மணிக்குக் கலையும் தூக்கம் இன்று அரை மணி முன்னாலேயே கலைந்து விட, எழுந்து கொள்ள மனமில்லாமல் புரண்டு கொண்டிருந்தபோதுதான் அது திலகாவின் ஞாபகத்தில் எட்டிப்பார்த்தது. நேற்று வாசல் தெளிக்கும்போது திண்ணையோரத்தில் முக்கோண வடிவத்தில் விடாப்பிடியாக ஒட்டிக்கொண்டிருந்த ஏதோ ஒரு கறை. எப்போது முதல் அது அங்கே இருக்கிறதென்பதோ, எப்படி எதனால் வந்தது என்பதோ அவளுக்கு நினைவில்லை; அதைப் பற்றி யோசித்துப் பார்க்கவும் தோன்றவில்லை. அவள் கண்ணில் அது பட்டதென்னவோ நேற்றைக்குத்தான். சலவை சோடா, சோப்புப்பொடி என்று ஏதாவது ஒன்றை வைத்து இன்று அதை அகற்றியே தீர்வது என்று நேற்றே செய்திருந்த தீர்மானத்தை அமல்படுத்திவிடும் நோக்கத்தோடு சுறுசுறுப்பாக எழுந்து கொண்டாள். காலைக் கடன்களை முடித்து விட்டு வாசல் கதவைத் திறந்தபோது தலை முதல் கால்வரை போர்த்திக்கொண்டிருந்த உருவம் ஒன்று திண்ணையில் உட்கார்ந்திருப்பது, புலர்ந்தும் புலராத அரையிருட்டு வேளையில் மங்கலாய் நிழலாட அவளுக்குள் மணியடித்தது. அடுத்த கணம் சட்டென்று பின்வாங்கிக்கொண்டு நடுக்கூடத்தின் பெரிய மரக்கதவை இறுகத் தாளிட்டுவிட்டு அதன் மீது முதுகைச் சாய்த்து நின்று கொண்டாள். ஒரு கணம் இழுத்து மூச்சு விட்டுக் கண்களை மூடி தியானிப்பவள் போல நின்றாள். தொடர்ந்து செய்ய வேண்டியவை மனதுக்குள் படமாக விரிந்து கொண்டேபோக, தலை வாரிப் புடவை மாற்றிக் கைப்பையில் தேவையான பணத்தையும் செல்பேசியையும் எடுத்து வைத்துக்கொண்டாள். இடைகழி வழியாகப் பின்கட்டுக்குச் சென்று கொல்லைப்புறக் கதவைத் திறந்து அங்கிருந்த உள்பக்கப் பூட்டை வெளிப்பக்கக்கதவில் பூட்டினாள்.

கிராமத்திலோ நகரத்திலோ சேர்க்க முடியாத ஒரு இரண்டுங்கெட்டான் ஊரின் பழங்காலத்து வீடு அது. கூடத்துக் கதவைத் திறந்தால் இரண்டு பக்கத் திண்ணை வைத்த நடுவாசல் படியோடு நேராகத் தெருவில் போய் இறங்க வேண்டியதுதான். அங்கே வெளி முற்றமென்று எதுவும் இல்லாத குறையைப் போக்கும் வகையில் கிணற்றடியோடும், துவைகல்லோடும், துளசி மாடத்தோடும் புழக்கடையில் ஓரளவு இடம் வாய்த்திருந்தது. அப்போது அதிருஷ்டம் என்று தோன்றாத அது இப்போது திலகாவுக்குப் பேரதிருஷ்டமாகப் பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாதாரண சிமெண்ட் தரை போட்ட., நாட்டு ஓடுகள் வேய்ந்த மிக மிக சராசரியான அந்த வீட்டை, பாகத்துக்கு வந்த பங்காளிகளுக்கு ஏதோ சொற்பத் தொகையைக் கொடுத்து ஒதுக்கி விட்டு அவளது தந்தை தனக்கு மட்டும் என்று ஆக்கிக்கொண்டிருந்தார். இப்போது வாழ்க்கையின் எல்லாக் கடமைகளும் முடிந்தபிறகு வீட்டை மராமத்து செய்து, வண்ணம் பூசிக் கொஞ்சம் புதுப்பித்திருந்தாலும் முன் பக்கத்தில் இடம் இல்லாமல் போனதற்கு எதுவும் செய்ய முடியவில்லை. வெளிப்புறக்கம்பிவேலியின் மூங்கில் படலைத் திறந்து அதையும் வெளிப்பக்கமாகப் பூட்டி விட்டுப் பின்பக்கத்து வீதியில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள் திலகா.

********************

தெருவை வேகமாய்க் கடந்து அடுத்த திருப்பத்தை எட்டும்போது எதிரே வந்த காலியான ஆட்டோ அவள் கை காட்டாமலே அருகில் வந்து நின்றது. தெரிந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டோக்காரர் துரைதான்.

''எங்கேம்மா இப்படி வெளுக்கும் முன்னாலே கிளம்பிட்டீங்க''

''நல்ல வேளை வந்தீங்க துரை, பூமா வீட்டுக்குத்தான் போகணும், சவாரி ஒண்ணும் இல்லையே''

''சவாரி எதுவும் இல்லை, கால்வாயிலே வண்டி கழுவிட்டு வரேன். அவ்வளவுதான்..நீங்க ஏறுங்கம்மா.. ஆமாம்.. பூமா அம்மாவுக்கு எதுவும் உடம்பு சரியில்லையா என்ன''

''நேத்து ராத்திரி வயறு ஏதோ சரியில்லைன்னு சொன்னா. காலையிலேயே போய் என்னன்னு பார்த்திட்டா அவளுக்கு உதவியா இருக்குமேன்னுதான் கிளம்பினேன்''

ஆட்டோ வேகத்தில் அதிகாலைக் குளிர்காற்று முகத்தில் வீசியடிக்க, மீண்டும் சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டாள் திலகா.

வங்கி மேலாளராக இருந்து ஓய்வு பெற்றிருந்த பூமாவுக்கும், ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றில் மருத்துவத் தாதியாகப் பணியாற்றி முடித்திருந்த திலகாவுக்கும் ஆரம்பப் பள்ளிப்பருவத்தில் அரும்பிய நட்பு, சமூக அந்தஸ்து, பணபலம், படிப்பு ஆகிய அகழிகளையும், நடு வயது வாழ்க்கையில் நேர்ந்த தவிர்க்க முடியாத கால இடைவெளிகளையும் மீறி, மூப்பு நெருங்கிக்கொண்டிருந்த இந்தப் பருவத்திலும் அதே பிணைப்போடும் நெருக்கத்தோடும் தொடர்ந்து கொண்டிருந்தது.

எஸ் எஸ் எல் சி படிப்பு பாதியில் நிறுத்தப்பட்டுத் திலகாவின் கல்யாணப்பேச்சு தொடங்கியபோது அதைத் தடுக்க பூமாவின் பெற்றோர் நல்லெண்ணத்தோடு எடுத்த முயற்சிகளையெல்லாம் நிர்த்தாட்சண்யமாக நிராகரித்து விட்டு எங்கோ ஆந்திரக் குக்கிராமம் ஒன்றின் போஸ்ட் ஆஃபீஸில் வேலை செய்து கொண்டிருந்த சுப்பையாவை வரதட்சிணை குறைவாக இருக்கும் ஒரே காரணத்துக்காகப் பிடித்துக்கொண்டு வந்தார் திலகாவின் அப்பா.

''இன்னும் கொஞ்சம் நல்லா விசாரிச்சுப் பார்க்கலாமே'' என்று தன் காதுக்கே கேட்காத குரலில் திலகாவின் அம்மா மெள்ள முனகியதைத் தன் ஒரே பார்வையால் தள்ளி நிறுத்தி விட்டு அவர் தன் கடனைக்கழித்துக் கொள்ளத் திருமணம் முடிந்த ஐந்தே வருடங்களில் இரண்டு குழந்தைகளோடு பிறந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் திலகா. தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மேல் வீட்டுப்பக்கமே எட்டிப்பார்க்காத கணவன்: அலுவலகத்தில் கேட்டாலும் அதே பதில். குடும்பப் பராமரிப்புக்குப் பணமில்லை, ஊருக்குள்ளும் எவர் கண்ணிலுமே அவன் பட்டிருக்கவில்லை, அதற்கு மேல் திலகாவுக்கு உதவவோ துணைவரவோ அங்கே எவருமே இல்லை. தனித்து நின்று போராடுவதற்கான உலக அனுபவமோ, வாழ்க்கை அனுபவமோ.. அவளுக்கும் அப்போது இல்லை.

இந்த ஐந்து வருடங்களுக்குள் அவளது ஒரே சகோதரன் இராணுவ வேலையில் சேர்ந்திருக்க, அம்மா காச நோய் கண்டு இறந்திருந்தாள். தனித்து விடப்பட்டிருந்த தந்தையும் பக்க வாதத்தின் தொடக்க நிலையில் இருந்தார். அந்தக் குடும்பத்தின் விவரம் தெரிந்த ஒரே நபரான அவளது சித்தப்பா ஆந்திரச் சிற்றூரில் அவர்கள் இருந்த பகுதிகளிலெல்லாம் அலைந்து துருவி விசாரித்து விட்டுச் சில தகவல்களோடு வந்து சேர்ந்தார்.

''அண்ணே..சுப்பையாவைப் பத்திக் கேள்விப்பட்ட விஷயம் ஒண்ணு கூட சரியில்லை. என்னென்னவோ சகவாசம், பழக்க வழக்கம். அதையெல்லாம் என் வாயாலே சொல்லக்கூடப் பிடிக்கலைன்னா பார்த்துக்கங்களேன். அதிலே இனிமேல் எந்தப் பிரயோசனமும் இல்லை. இத்தனை நாள் இவ அவன் கூட எப்படி இருந்தாங்கிறதே எனக்கு ஆச்சரியமாத்தான் இருக்கு. இதுக்கும் மேலே அவங்களை சேத்து வைக்கணும்னு பார்த்தா நீ உன் மகளை இழந்திட வேண்டியதாத்தான் இருக்கும். திலகாவுக்கு இதுவரைக்கும் நீ பண்ணின பாதகமெல்லாம் போதும், அதுக்குப் பரிகாரம் இனிமே அவளை நீ பத்திரமா பார்த்துக்கிறதுதான்.''என்று அவள் தந்தையிடம் முடிவாகச்சொல்லி விட்டுப் போனார்.

உள்ளூர் மருத்துவ மனையில் டாக்டராக இருந்த பூமாவின் தந்தை உதவி செய்ய, மிட்வைஃப் பயிற்சி எடுத்துப் பிறகு அங்கேயே வேலையிலும் சேர்ந்து குழந்தைகளையும் ஓரளவு கரை சேர்த்து முடித்திருந்தாள் திலகா. தான் பார்த்த வங்கி வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கணவரும் இறந்தபின் பூமாவும் இந்த ஊருக்கே நிலையாக வந்து தங்கிவிட அவர்களது பாலிய கால பந்தம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருந்தது.

..............................................

புறநகர்ப்பகுதியில் சற்று நவீனமான பகுதி ஒன்றில் இருந்த பூமா வீட்டின் முன் ஆட்டோ ஒரு குலுக்கலோடு வந்து நின்றது. பணம் கொடுத்து துரையை அனுப்பி விட்டு பஸ்ஸரை அழுத்தினாள் திலகா. இரண்டு முறை தொடர்ந்து அழுத்திய பிறகு தூக்கம் தொலைந்திராத விழிகளைக் கசக்கி விட்டுக்கொண்டே வந்து வாசல் கிரில்லைத் திறந்தாள் பூமா. அந்த வேளையில் திலகாவை எதிர்பார்த்திராததால் அவளிடம் ஒரு சின்ன திடுக்கிடல் தெரிந்தது.

''நான் கனவு கினவு காணலியே? நல்ல நாளிலேயே வருந்தி வருந்திக்கூப்பிட்டாலும் அதிசயமாத்தான் இங்கே வர்றவ நீ..''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘பூமா, முதல்லே உள்ளே போகலாம் வா’’ என்று சொன்ன திலகாவின் குரலிலிருந்த கனம் ஏதோ ஒரு தீவிரத்தை உணர்த்த, பேச்சை அதோடு நிறுத்திக்கொண்டாள் பூமா.

வாசல் வராந்தாவைத் தாண்டி ஹாலுக்குள் இருவரும் நுழைந்தபின்

‘‘என்ன திலகா ? எதுவும் பிரச்சினையா என்ன? சாந்தி, சதீஷ் எல்லாரும் நல்லா இருக்காங்கதானே’’ என்று அவள் கேள்விகளை அடுக்கிக்கொண்டு போக, அங்கிருந்த சோஃபாவில் அமர்ந்தபடி..

‘‘எனக்கு முதல்லே சூடா ஒரு காஃபி கொண்டு வா பூமா..அப்றம்தான் மத்த எல்லாம்’’ என்ற திலகாவை வினோதமாகப்பார்த்துக்கொண்டே உள்ளே சென்றாள் பூமா.

அவள் கொண்டு வந்து தந்த காப்பியை மிடறு மிடறாக மெள்ள உறிஞ்சிக் குடித்து விட்டுக் காலி டம்ளரை டீப்பாயின் மேல் வைத்த பின் அதன் மீதே காலை நீட்டிக்கொண்டாள் திலகா. தன் காப்பிக் கோப்பையைக் காலி செய்து விட்டு எதுவுமே பேசாமல் அப்போதுதான் வந்து விழுந்திருந்த செய்தித் தாளைப் பிரித்து வைத்துக்கொண்டாள் பூமா.

‘‘வீட்டுத் திண்ணையிலே திடீர்னு சுப்பையா வந்து உக்காந்திருக்கார் பூமா’’

என்றபடி அங்கே நிலவிய கனத்த மௌனத்தைத் திலகாவின் குரல் கலைத்துப்போட பூமாவின் கையில் பிடித்திருந்த செய்தித்தாள் அநிச்சையாய்க் கீழே நழுவி விழுந்தது.

‘‘என்ன திலகா இது, என்ன சொல்றே நீ? சுப்பையாவா?’’

‘‘வாசல் கதவைத் திறந்து பார்த்தப்ப எனக்கும் முதல்லே கொஞ்சம் திக்குன்னுதான் இருந்தது. ஆனா..ஒரு செகண்ட்..ஒரே ஒரு செகண்ட்தான் அப்படி இருந்தது. இனிமேலும் இது தொடராம இருக்கணும்னா என்ன செய்யலாம்னு கொஞ்சம் அமைதியா யோசிக்கத்தான் இப்ப உன் வீட்டிலே வந்து உக்காந்திருக்கேன்’’

நிறுத்தி நிதானமாகப் பேசி முடித்தாள் திலகா.

இப்படி அவன் வருவது இது ஒன்றும் முதல் தடவை அல்ல, ஆனால் அப்படி அடிக்கடி என்றும் அதைச் சொல்லிவிட முடியாதுதான்.

திலகா வீடு வந்து சேர்ந்து மருத்துவச்சிக்கான பயிற்சியை எடுக்கத் தொடங்கியிருந்த புதிதில் தன் தூரத்து உறவுக்காரர் ஒருவரையும் அழைத்துக்கொண்டு அதே வீட்டு வாசற்படியில் ஏறியவன்தான் அவன். அப்போதும் இதே மாதிரி திண்ணையில் உட்கார்ந்து கொண்டு தன் ஒன்றுவிட்ட மாமாவான அந்த உறவினரை மட்டும் உள்ளே அனுப்பி வைத்தான்.

‘‘ஐயா, நான் சொல்றதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்க. எங்க பையன் இப்ப நிஜமாவே மனசு மாறி வந்திருக்கான், ஏதோ காலக்கோளாறுன்னு வச்சுக்கங்களேன். இந்த வயசிலே கொஞ்சம் அப்படி இப்படி இருக்கிறது ஊர் உலகத்திலே நடக்கறதுதானுங்களே? என்ன இருந்தாலும் இது உங்க மகளோட வாழ்க்கை. வீண்பிடிவாதம் பிடிக்காம நல்லா யோசிச்சுப்பார்த்து சொல்லுங்க’’

முதலில் அவசரக்கோலத்தில் முடிவெடுத்திருந்த திலகாவின் தந்தையை இப்போது காலம் நிதானப்படுத்தியிருந்ததது.

‘‘படிக்கணும்..வேலை பாக்கணும்னு ஆசையா இருந்தவளோட வாழ்க்கையைக் கெடுத்தவன் நான். இப்ப நான் அவளோட கூட இருக்கேனே தவிர அவ சம்பந்தமான எந்த முடிவையும் அவதான் எடுக்கணும். நீங்க நேரா அவ கிட்டேயே கேட்டுக்கலாம்’’என்றார்.

அந்த மனிதரும் ‘‘நீ என்னம்மா சொல்றே’’ என்று பேச்சைத் தொடங்க அதற்குள் சற்று தைரியமடைந்திருந்த சுப்பையாவும் திண்ணையிலிருந்து உள்ளே தலை நீட்டி ‘‘திலகா’’ என்றான்.

அதுவரை உள்ளறையிலிருந்து நடந்ததையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த திலகா, கூடத்துக்கு வந்து அப்பாவை மட்டுமே பார்த்துப் பேசினாள்.

‘‘அப்பா! ஆள் எங்கே இருக்கார்னே தெரியாம அலைக்கழிஞ்சு பச்சைப் பிள்ளைங்களோட எப்ப இங்கே வந்தேனோ அதிலேயிருந்தே அந்த பந்தத்திலிருந்து என் மனசு முழுசா துண்டிச்சுப் போச்சு. அஞ்சு வருஷ அனுபவத்திலேயே அவரைப் பத்தின எல்லாம் எனக்குப் புரிஞ்சு போச்சு. ஒருவேளை அம்மா உயிரோட இருந்திருந்தா என் மனசிலே இருந்ததையெல்லாம் - நடந்த உள் விஷயத்தையெல்லாம் - உங்ககிட்டே சொல்ல முடியாததையெல்லாம்- சொல்லியிருப்பேனா இருக்கும், சித்தப்பா சொன்னதையெல்லாமும் நீங்க கேட்டீங்கதானே.? எந்த வகையிலேயும் ஒத்து வராத ஒரு உறவுக்குள்ளே மறுபடியும் போக , மனசுக்கு ஒட்டாத ஒரு வாழ்க்கையை ஒப்புக்கு வாழ எனக்கு விருப்பமில்லை. ஒரு வகையிலே இது எனக்குக் கிடைச்சிருக்கிற விடுதலைன்னு நெனக்கிறேன். அவரோட வாழ்க்கையிலே நான் நிச்சயம் குறுக்கிட மாட்டேன், எங்கே இருக்கார், என்ன செய்றார்னு தெரிஞ்சுக்கறது கூட எனக்குத் தேவை இல்லாத விஷயம். அதே மாதிரி அவரும் என்னை எந்த வகையிலேயும் தொந்தரவு செய்ய வேண்டாம்.அவ்வளவுதான். சரி, நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப ஆஸ்பத்திரிக்குக் கிளம்பியாகணும்,போய் ரெடி ஆகறேன்'' என்றபடி உள்ளே சென்றாள்.

அவர்கள் வீட்டை விட்டு வெளியேறும்போது,

''என்ன இருந்தாலும் இத்தனை திமிர் ஆகாது'' என்று யாரோ முணுமுணுத்தது இலேசாகக் காதில் விழுந்தது.

சதீஷும் சாந்தியும் பள்ளிப்பருவத்தின் முடிவை நெருங்கிக்கொண்டிருந்தபோது இன்னொன்று..

சிக்கலான பிரசவ கேஸ் ஒன்றில் உதவி செய்து விட்டு ஆசுவாசப்படுத்திக்கொண்டிருந்த திலகாவை நோக்கி வந்த இளம் ஸ்டாஃப் நர்ஸ் ஒருத்தி

''அக்கா..பேஷண்ட்ஸ் வெயிட் பண்ற இடத்திலே யாரோ சுப்பையான்னு ஒரு ஆளு வந்து உக்காந்திருக்கார், உங்களை உடனே பாக்கணும்ங்கிறார்.ஆஸ்பத்திரி நேரத்திலே அப்படியெல்லாம் பாக்க முடியாது, அவங்களும் வேலையா இருக்காங்க அப்புறமா வாங்கன்னு எவ்வளவு சொல்லிப் பார்த்தாலும் எழுந்து போகமாட்டேங்கிறார்'' என்றாள். பின்னணியிலிருந்த ஏதோ ஒரு விஷயத்தைத் துருவும் ஆர்வம் அவள் கண்களில் தெரிந்தது.

''நீங்க போங்க சிஸ்டர், நான் பார்த்துக்கறேன்''என்று அவளை அனுப்பி விட்டு வார்ட் பாய் ராமுவைத் தேடிக்கொண்டு போனாள் திலகா. ராமுவின் தந்தை குடும்ப நண்பர் என்பதால் அவன் விஷயம் அறிந்தவன்.

''இதோ பாரு ராமு, வெயிட்டிங் ரூமிலே யாரோ ஒருத்தர் என்னைப் பார்க்க வந்து உட்கார்ந்திருக்கறதா சிஸ்டர் சொன்னாங்க. நீ என்ன சொல்லுவியோ எனக்குத் தெரியாது, இன்னும் அஞ்சு நிமிஷத்திலே அந்த இடத்தைக் காலி பண்ண வச்சிடு, இனிமே இந்தப்பக்கமே வராத மாதிரி பக்குவமாப் பேசி அனுப்பிடு''

புரிந்து கொண்ட பாவனையில் தலையாட்டி விட்டுச்சென்றான் ராமு.

அதற்குப் பிறகும், சிறியதும் பெரியதுமாய்த் தவணை முறையில் விஷத்தை எப்படியாவது செலுத்திவிடும் முயற்சிகள் தொடர்ந்துகொண்டுதான் இருந்தன.

''மகள் திருச்சியிலும்,மகன் சென்னையிலுமாய் அவரவர் குடும்பத்தோடு காலூன்றிக்கொண்டபின் விடுமுறைக்கு வந்திருந்தபோது, தன் மனைவி கவிதாவும் மகளும் இல்லாத நேரம் பார்த்து அம்மாவிடம் பேச்சை ஆரம்பித்தான் மகன்.

''அம்மா, நீங்க என்னைத் தப்பா நெனைக்கக் கூடாது. இதைப் பேசவே எனக்குப் பிடிக்கலைதான், ஆனாலும் உங்களுக்கு விஷயம் தெரிஞ்சிருக்கணுமேங்கிறதுக்காக சொல்றேன். எங்க அப்பா....ஹ்ம்....அப்டி சொல்லவே கூச்சமாதான் இருக்கு, ஆனா வேற எப்டி சொல்றதுன்னும் தெரியலை. அவரு எப்டியோ எங்கேயோ வச்சு கவிதா அப்பாவைக் கண்டுபிடிச்சுப் பேசியிருக்கார். என் மாமனாருக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டினாலும் மத்த விஷயங்கள் ஒத்துப்போற மாதிரி இருந்திருக்கு, ஆனாலும் நான் முன் கூட்டியே அவரைப்பத்தி சொல்லி வச்சிருந்ததாலே பிடி கொடுக்காம தட்டிக்கழிச்சு அவர் கிட்டேயிருந்து தப்பிச்சுப் போகத்தான் பார்த்திருக்கார். ஆனா கையைப் பிடிக்காத குறையா 'ஒரே ஒரு தரம் உங்க சம்பந்தி அம்மாவை நேரே பார்த்து மன்னிப்பு கேக்கணும்,அதுக்கு மட்டும் உதவி செய்யுங்க'ன்னு அவர் விடாம கேட்டிருக்கார். இவரும் அப்போதைக்கு ஏதோ சொல்லிட்டு அவர்கிட்டேயிருந்து விலகி வந்திட்டார். அப்புறம் மெள்ள என் கிட்டே வந்து விஷயத்தை சொன்னார். 'அடிமட்ட நிலையிலே இருந்து எங்க ரெண்டு பேரையும் வளர்த்து இன்னிக்கு ஒரு ஆளா நடமாட வச்சிருக்காங்க எங்கம்மா. இப்படி ஒரு பேச்சு நடந்ததை நான் காதாலே கேக்கறது கூட அவங்களுக்கு செய்யற துரோகம்தான். இனிமே அவர் எது பேசவும் நீங்க இடம் கொடுக்காதீங்க மாமா..இல்லேன்னா உங்களோட பேசறதுக்கே நான் யோசிக்க வேண்டியிருக்கும்'னு அவர் கிட்டே முடிவா சொல்லிட்டேன்''

பழைய நினைவுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட பூமா,

''அன்னிக்கு சதீஷ் மாமனார் வழியா நடந்த முயற்சிக்கு அடுத்தது இதுதான் இல்லியா? இப்ப இதை உன் பசங்க கிட்டே சொல்றதா வேண்டாமா ? நீ என்ன நெனக்கிறே?'' என்றாள்.

''அவங்கவங்க தங்களோட குடும்பத்தோட நிம்மதியா இருக்கும்போது இதை வேற அவங்க தலையிலே ஏத்தி ஏன் கவலைப்படுத்தணும் பூமா, அவங்க ரெண்டு பேரும் என்ன நெனக்கிறாங்க,இதிலே எப்படி என்னை விட்டுக்கொடுக்காம இருக்காங்கங்கிறது தெரிஞ்சதுதானே? எப்படியோ இது என் சொந்தப்பிரச்சினை, எனக்கு மட்டுமே உரிய தனிப்பிரச்சினை, இதிலே முடிவெடுக்கிற உரிமையும் எனக்கு மட்டும்தான்''

''நீ இப்படிப் பேசறது எனக்கு நிம்மதியா இருக்கு திலகா. இத்தனை நாள் இதைத் தள்ளிப்போட்டுக்கிட்டுப் போனதெல்லாம் போறும், இனிமேலாவது இதை வேரோட கிள்ளிப்போட்டு இதையே கடைசி முயற்சியாக்கிடணும்ங்கிறதைத்தான் நான் உனக்கு சொல்ல நினைக்கிறேன். எப்படியும் இந்தச் சுமையை நீ சுமக்கப்போறதில்லைன்னாலும், தன்னை ஏத்துக்காத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலே கண்ணைக்குத்தற மாதிரி ஏன் இப்படி திடீர் திடீர்னு காட்சி கொடுக்கணும்? ஒருவேளை 'மதியாதார் தலை வாசல்' ங்கிறதெல்லாம் தெரியாதோ என்னவோ? சரி, அதை விட்டுத்தள்ளு. நம்ம என்ன செய்யலாம்னு பார்ப்போம். இந்த மாதிரி ஊகாமுள் உறுத்தல் கூட உனக்கு இல்லாம சரியான சேஃப்டி பின்னை வச்சு ஒரே உருவா உருவிப் போட்டுடு. ,அப்பதான் உனக்குப் பூரணமா நிம்மதி கிடைக்கும்''

''நானும் அதேமாதிரிதான் நெனக்கிறேன் பூமா, ஆனா,அதை எப்படி செய்யப் போறேன்,அதுதான் கேள்வி. அதைத்தான் இப்ப யோசிச்சுக்கிட்டிருக்கேன். இத்தனை நாளும் நம்ம மனசுதானே முக்கியம், மனசாலேதான் என்னிக்கோ தொலைதூரம் விலகியாச்சே அப்படி என்ன நடந்திடும்னுதான் நெனச்சுக்கிட்டிருந்தேன். இதோட எத்தனை தரம் மூஞ்சியைக்கூடப் பாக்காமப் பலவிதமா திருப்பி அனுப்பியாச்சு...?''

''அதுதான் தப்போன்னு தோணுது, திலகா, இதோ பாரு..,சுய பரிசோதனையோட உச்ச பட்சம் எது தெரியுமா, நமக்கு சுத்தமா ஒவ்வாத ஒண்ணை நேருக்கு நேரா சந்திச்சு அதைத் தாண்டிப்போறது மட்டும்தான். அப்படி நேருக்கு நேர் பாக்காம ஓடி ஒளியற அளவுக்கு நீ என்ன தப்பு செஞ்சே''

திலகா பூமாவை நிமிர்ந்து பார்த்தபோது அவளது கைபேசி ஒலித்தது.

''திலகா ஆண்ட்டி, நான்தான் சங்கர் பேசறேன்,பாட்டி உங்களோட அவசரமா பேசணுமாம்''

எண்பத்தைந்து வயதின் தள்ளாமையைக் காட்டியபடி காமாட்சிப் பாட்டியின் நடுங்கும் குரல்''திலகா'' என்றது.

திலகா வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் பல காலமாகக் குடியிருந்து வரும் காமாட்சிப் பாட்டி அவளது அம்மாவுக்கு நெருக்கமான தோழி என்பதால் பெரியம்மா என்று அவரைக்கூப்பிடுவதுதான் அவளுக்கு வழக்கம். ஆரம்பம் முதல் திலகாவின் திருமணத்துக்கு எதிர்ப்புக் காட்டியபடி பூனையிடம் மாட்டிக்கொண்ட கிளியின் கதையைச் சொல்லிக்கொண்டே இருந்தவரும் அவர்தான்.

''பூமாவோட இருக்கியா, சரி ஃபோனை அவ கிட்டே கொடு''

பூமா ஃபோனை வாங்கிக்கொண்டாள்.

''பூமா, காலையிலே பேத்தி வாசல் தெளிக்கப்போனபோது 'அடுத்த வீட்டுத் திண்ணையிலே யாரோ உக்காந்திருக்காங்க பாட்டி'ன்னா. யாருன்னு எட்டிப்பார்த்தா அங்கே சுப்பையா உக்காந்திருந்தான், இடி விழுந்தாப்பிலே இருந்தது. விஷயத்தை திலகா கிட்ட சொல்லலாம்னு போனா அவ கதவையே திறக்கலை. அப்றம் ஏதோ பொறி தட்டிக் கொல்லைப் பக்கம் போனா அங்கே பூட்டு தொங்கிக்கிட்டிருந்ததைப் பார்த்தேன், உன் வீட்டுக்குத்தான் வந்திருப்பான்னு புரிஞ்சது. அதுதான் கூப்பிட்டேன்''

''சரி பெரியம்மா, திலகாகிட்டே சொல்லிடறேன்'' என்று சொல்லி முடித்து அவள் நிமிர்வதற்குள் கைப்பையை எடுத்துக்கொண்டு தயாராக இருந்த திலகா, ''ஆட்டோவைக் கூப்பிடு பூமா''என்றாள்.

************************

ஆட்டோ திலகா வீட்டின் முன் வந்து நின்ற சத்தம் கேட்டுத் தன் வீட்டிலிருந்து எட்டிப்பார்த்த பாட்டி, அவர்கள் இரண்டு பேரோடு சேர்ந்து தானும் திலகா வீட்டுக்குள் நுழைந்தாள். சுப்பையா இன்னும் திண்ணையில் அப்படியேதான் உட்கார்ந்திருந்தான்.

உள்ளே நுழைந்ததும் பாட்டி திலகாவின் கையைப் பற்றிக்கொண்டாள்.

''பெரியம்மா! கவலைப்படாதீங்க. நான் இன்னிக்கு ரொம்ப தெளிவா இருக்கேன். சின்ன வயசிலே நீங்க எனக்கு சுந்தர காண்டம் சொல்லித் தந்தீங்களே, அதிலே சொல்லாலே சுடுவேன்னு அன்னிக்கு சீதை சொன்ன மாதிரி இப்ப நான் சொல்லப்போற சொல்லும் கூட என்னைப் பிடிச்ச எல்லாத்தையும் சுட்டுப்பொசுக்கி என்னையும் எல்லாத்திலே இருந்தும் விடுவிக்கட்டும்''

பாட்டியும் பூமாவும் வியப்போடு பார்த்தபடி இருக்க, திலகா திண்ணைக்கு வந்து சுப்பையாவை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள்.

''இதோ பாருங்க, உங்களுக்கும் என்னோட வாழ்க்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லைன்னு ஆகி நாப்பது வருஷத்துக்கு மேலே ஆச்சு. அதுக்கப்புறம் உங்களைப் பத்தின எதையும் நான் கேட்டுக்கலை,கேட்டுக்கவும் விரும்பலை. ஆனா, நீங்க தொடர்ந்து செஞ்சுக்கிட்டிருக்கிற இந்தக் காரியம் நாகரிகமா இல்லை, அவ்வளவுதான். அன்னியிலே இருந்து இன்னிக்கு வரைக்கும்...என்னிக்கா இருந்தாலும் நான் சொல்லப்போற ஒரே வார்த்தையும் இது மட்டும்தான்'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றாள் திலகா.

ஒரு மணி நேரம் கழித்து பூமாவை வழியனுப்ப வெளியே வந்தபோது புலர்ந்திருந்த காலைப் பொன்னொளியில் அவள் வீட்டுத் திண்ணை, கறைகள் ஏதும் இல்லாமல் சுத்தமாகப் பளிச்சிட்டது. காமாட்சி பெரியம்மாதான் யாரையோ வைத்துக் கழுவி விட்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரம்போவின் இறுதி நாட்கள்

## உகாண்டா குடியரசு சிறுகதை

இன்றைய தினம் நன்றாகத்தான் தொடங்கியது என்று கருதியிருந்தேன். அதனால், நான் மகிழ்ச்சியாக இருந்தேன். தொலைக்காட்சி மற்றும் பேருந்து நிறுவனங்களிடமிருந்து இப்போதுதான் எனக்கான கொடுப்பனவுகளைக் கிடைக்கப் பெற்றேன். கிட்டத்தட்ட இருநூற்றைம்பது அமெரிக்க டாலர்கள் பெறுமதியான ஒரு மில்லியன் உகாண்டா ஷில்லிங் பணத்தொகை என்னிடமிருந்தது. நீண்ட நாட்களாக எனது கையிலிருக்காத ஒன்று இது. பழைய டாக்சி நிலையத்தில் ஒரு வாகனத்தை வாடகைக்கு எடுத்த நான் எனது மனைவியும், இரண்டு பிள்ளைகளும் வசித்து வந்த கம்வோக்யாவுக்கு வந்தேன். பணத்துக்காக யாராவது என்னைப் பின் தொடர்ந்து வரக் கூடும் என்று நான் பயந்தேன். மக்கள் கூட்டம் அதிகமில்லை என்பதால் யாராவது என்னைப் பின்தொடர்ந்து வந்தாலும் என்னால் அதைக் காண முடியும். கம்பாலாவிலுள்ள திருடர்கள் பணத்தை வெகு தொலைவிலிருந்தே மோப்பம் பிடித்து விடுவார்கள்.

எம்மைத் தெரிந்தவர்கள் எம்மிடம் முயங்கொ அல்லது கொலோலோ நகரங்களில் வசிக்கலாமே என்று அறிவுறுத்தும் விதத்தில் நாங்கள் ஒரு குப்பத்தின் சிறந்த பகுதியில் வசித்து வந்தோம். லிஸாவும், நானும் கம்வோக்யா பகுதியிலிருந்து வெளியேறி விட வேண்டும் என்று எப்போதும் கனவு கண்டு வந்தோம் என்றாலும் எம்மிடம் ஒருபோதும் அந்தளவு பணம் இருக்கவில்லை. எம்மிடம் எப்போதாவது கொஞ்சம் பணமிருக்கும் ஒவ்வொரு தடவையும் அதில் எமக்கு கடன்களை அடைக்க வேண்டியிருக்கும், பாடசாலைக் கட்டணங்களைக் கட்ட வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் வீட்டில் எதையேனும் மாற்ற வேண்டியிருக்கும். நாங்கள் எமக்கென சொந்தமாக ஒரு வீடு கட்ட வேண்டும் என்றும் கனவு கண்டு வந்த போதிலும் அதுவும் நீண்ட நெடுங்காலமாக கனவாகவே இருந்து வருகிறது. இந்தப் பணமும் வீட்டை மாற்றப் பயன்படாது.



இன்று பிற்பகல் வேளையில், எனக்குள் மேலும் மேலும் வேலை செய்ய வேண்டும் என்ற உத்வேகம் பிறந்தது. '*Men in Black*' எனும் ஆங்கிலத் திரைப்படத்தை மொழிபெயர்க்க நான் மிகவும் விரும்பினேன். நான் ஏன் அப்படி நினைத்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. அதைச் செய்தால் எனக்கு நிறைய பணம் கிடைக்கும் என்பது நிச்சயம். நான் எதிர்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குறித்து மிகுந்த நம்பிக்கையோடு இருந்தேன். மொழிமாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்களுக்கான சந்தை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே வந்தது. புதிய தொலைக்காட்சி நிறுவனங்கள், புதிய பேருந்து நிறுவனங்கள் போன்றவற்றுக்கு அவ்வாறான திரைப்படங்கள் தேவையாக இருந்தன. வழமை போல உகாண்டாவின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவருமான நடிகர் பாபி வைன், ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித் கதாபாத்திரத்துக்கு பின்னணிக் குரல் கொடுப்பார். நான் அதைப் பற்றியெல்லாம் யோசிக்கத் தேவையில்லை.

'*Men in Black*' திரைப்படத்தில் வரும் ஒரு மனிதன் போல நானும் நடந்து போனேன். இரண்டு கிலோ இறைச்சியும், கீரையும் வாங்கிக் கொண்டு வந்தேன். லிசா வேலைக்குப் போயிருந்ததோடு பிள்ளைகளும் பாடசாலைக்குப் போயிருந்தார்கள். அவர்கள் இன்று வீட்டுக்கு வரும்போது நல்ல உணவும், அவர்களது பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்தத் தேவையான பணமும் வீட்டில் காத்திருக்கும். குறைந்தபட்சம் அடுத்த தவணை வரும்வரைக்கும், இந்தத் தவணைக்கான பாடசாலைக் கட்டணம் குறித்த கவலை தீர்ந்திருந்தது. லிசா வீட்டு வாடகையைச் செலுத்தி விட்டாள். பாலினம், தொழிலாளர் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சில் அவள் காரியதரிசியாக பணி புரிந்து வந்தாள். அதில் சம்பளமாகக் கிடைத்த பணமே அதற்குப் பயன்பட்டது. அமைச்சர் தனக்குக் கிடைத்த வருமானத்தில் அவர் மாத்திரம் பயனடையவில்லை. சில சமயங்களில் அவளுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது உதவித் தொகை கிடைக்கும். அவள் தனக்கு சம்பளமாகக் கிடைக்கும் பணம் மற்றும் உதவித் தொகையாகக் கிடைக்கப் போகும் பணம் இரண்டிற்குமாக இரண்டு தடவை கையொப்பம் இடுவாள். அவளுக்கு அதைப் பற்றியெல்லாம் கவலையில்லை. சம்பளத்திற்கு மேலதிகமாக மேலும் பணம் கிடைக்குமென்றால் அவள் சந்தோஷப்படுவாள்.

பிற்பகல் வேளை சூடாகவும், வெக்கையாகவும் இருந்ததால் கொஞ்சம் காற்று வரட்டும் என்று நான் வீட்டின் ஜன்னல்களைத் திறந்து விட்டேன். வீட்டிலிருந்து பணி புரிந்து வருவதையே நான் விரும்பினேன். இருந்தாலும், விருந்தாளிகள் யாரேனும் வந்தால், எனக்கு வீட்டிலிருந்து செய்ய நிறைய வேலையிருக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் யோசித்துக் கூடப் பார்க்காமல் வீட்டிலேயே வெகுநேரம் தங்கி விடுவார்கள். அயலவர்கள் கூட நான் மனைவியின் சம்பளத்தில் தங்கி வாழ்கிறேன் என்று குற்றம் சாட்டிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறான கதைகளையெல்லாம் நான் பொருட்படுத்துவதேயில்லை. காரணம், வீட்டில் இயல்பாக இருந்து கொண்டே எனது பணியைத் திறம்பட செய்து முடிக்க முடியுமென்பது எந்தளவு நிம்மதியைத் தரும் என்பதை நான் அறிவேன். நான் வழமை போலவே எனது குட்டைக் காற்சட்டையையும், வெண்ணிற மேற்சட்டையையும் அணிந்து கொண்டேன். தானியக் கஞ்சியைத் தயாரித்து, இரவுணவை சமைக்கும்வரை கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கலாம் என்று போத்தலில் ஊற்றி வைத்துக் கொண்டேன்.

திடீரென்று யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. நான் ஒரு கணம் தயங்கி நின்றேன். சில சமயங்களில் நான், அயலவர்கள் யாரும் என்னைத் தொந்தரவு செய்வதைத் தவிர்க்க ஜன்னல் திரைகளை இழுத்து மூடி விட்டிருப்பேன். ஆனால் இப்போது ஜன்னல்களும் திறந்து கிடப்பதைக் கவனித்தேன். திருடர் பயம் காரணமாக, கம்வோக்யாவில் எவரும் இப்படி ஜன்னல்களைத் திறந்து போட்டு விட்டு எங்கும் செல்ல மாட்டார்கள். ஜன்னல்கள் திறந்திருந்ததென்றால், வீட்டில் யாராவது இருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் விலைவாசிகள் அதிகம் என்பதால் இங்கு எவரும் இவ்வாறான விடயங்களை மறப்பதேயில்லை. கதவைத் தட்டுதல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. எனது எவ்விதப் புறக்கணிப்பும் அதைத் தடுக்கப் போவதில்லை என்று தெரிந்தது. நான் நடந்து சென்று புன்னகைத்தவாறே கதவைத் திறந்தேன். ஏன் அவ்வாறு செய்தேன் என்று எனக்கே தெரியவில்லை.

நான் இதற்கு முன்பு கண்டேயிருக்காத உயரமானவன் ஒருவன் என்னைத் தள்ளிக் கொண்டு வந்து சோபாவில் அமர்ந்து கொண்டான். அவனிடமிருந்து மக்கிய வியர்வை நாற்றம் எழுந்தது. ஒருவேளை அவன் வெகு தொலைவிலிருந்தே நடந்துதான் எனது வீட்டுக்கு வந்திருக்கக் கூடும். நான் அவனைப் பிடித்து வெளியே, வீட்டுக்கு முன்னால் இருக்கும் சாக்கடையில் தள்ளியிருக்க வேண்டும். சில சமயங்களில் சாக்கடையிலிருந்து கடுமையான நாற்றம் வரும். ஆனால் இப்போது அவனிடமிருந்து வரும் நாற்றத்தைத் தவிர வேறு எந்த வாடையையும் என்னால் உணர முடியவில்லை.

“நீங்க வீடு தவறி வந்துட்டீங்கன்னு நினைக்கிறேன்” என்றேன் நான்.

“உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டான்.

“இதுக்கு முன்னாடி உங்களை எங்கேயும் சந்திச்சதா எனக்கு நினைவில்ல” என்றேன்.

உண்மையிலேயே நான் அவனது முகத்தை நினைவுபடுத்திப் பார்க்க முயற்சித்தேன். இல்லாவிட்டால் இப்படிப்பட்ட ஒருவன் ஏன் எனது வீட்டுக்குள் வலுக்கட்டாயமாக நுழைய வேண்டும் என்றும் திகைத்துப் போனேன். ‘ஒருவேளை லிஸாவுக்கு ஏதேனும் கள்ளத் தொடர்பு இருக்குமோ?’ என்றும் கூட சந்தேகப்பட்டேன். அவ்வாறு ஏதும் இல்லாவிட்டால் எவரும் இவ்வாறு உரிமையோடு உள்ளே வந்து உட்கார மாட்டார்கள்.

பகலிலும், இரவிலும் இங்கு பல திருட்டுகள் நடப்பதாக செய்திகள் வந்தனதான். இருந்தாலும் திருட வருபவன் இவ்வாறு ஆறுதலாக சோபாவில் உட்காந்திருக்க மாட்டானே. கூழையாகிப் போயிருந்த எமது சோபாவை அவன் கேவலமாகப் பார்ப்பதை நான் அவதானித்தேன். அந்த சோபா பதினைந்து வருடங்களுக்கு முன்பு எமக்கு திருமணப் பரிசாகக் கிடைத்த ஒன்று. நிச்சயமாக நாங்கள் புதிய சோபா ஒன்றை வாங்க வேண்டும். லிஸா அந்த சோபாவிலிருந்த துளைகளையும், கறைகளையும் மறைக்க பழைய துணியொன்றை அதன் மீது விரித்திருந்தாள். அவன் வசதியாக உட்கார முயன்ற வரவேற்பறை இப்போது சிறியதாக இருப்பதாகத் தோன்றியது.

“வழமையா யாராவது விருந்தாளிகள் வந்தா அவங்களுக்கு குடிக்க குளிர்ந்த தண்ணீரும், ஒரு கோப்பைத் தேநீரும் கொடுப்பாங்க” என்றான் அவன்.

“வழமையா காலை நேரத்துல வர்ற விருந்தாளிக்குத்தான் அப்படி கொடுப்போம்” என்று எனது பதற்றத்தைக் குறைக்க வேடிக்கையாகப் பேச முயற்சித்தேன்.

அத்தோடு அவனுக்கு தன்னைப் பற்றி ஏதேனும் கூறும் வாய்ப்பை வழங்க எனக்குத் தேவையாகவிருந்தது. நிச்சயமாக அவன் ஒரு ஏமாற்றுப் பேர்வழியாக இருக்க மாட்டான் என்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தது. காரணம், அவ்வாறு அவன் என்ன சொன்னாலும் நான் நம்பப் போவதில்லை. ஏமாற்றுப் பேர்வழிகள் எப்போதும் நம்பிக்கையூட்டும் விதமாகத்தான் இருப்பார்கள். அத்தோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வழமையாக பெண்களோடுதான் வருவார்கள். அப்போதுதான் அவர்கள் மீது மக்களுக்கு மேலும் நம்பிக்கை பிறக்கும். அவன் அவ்வாறு என்னிடம் போலித் தங்கம் விற்க வந்தவன் போலவோ, பிரமிட் வியாபார மோசடியில் என்னைச் சேர்த்துக் கொள்ள வந்தவனாகவோ எனக்குத் தெரியவில்லை. நான் அவ்வாறான விடயங்களில் ஏற்கனவே ஏமாந்து விட்டிருந்தேன். அவனது கைகளில் பைபிளோ, சிலுவையோ இருக்காத காரணத்தால் அவன் மதப் போதனைக்காக வந்திருப்பான் என்றும் கூற முடியாது.

"ஓஹோ, அப்போ நான் காலையில வந்திருக்க வேணும்னு சொல்றீங்களா? நான் காலையிலும் வந்தேன். வீட்டுல யாருமே இருக்கல. இப்ப உங்களைக் காணக் கிடைச்சதுல சந்தோசம். இந்த சூட்டை என்னால தாங்க முடியல. இதுல திரும்பத் திரும்ப உங்களைத் தேடி வர்றத நினைச்சுக் கூட பார்க்க முடியல."

"நீங்க என்னைத் தேடி வந்தீங்களா இல்ல என்னோட பொஞ்சாதியையா?"

"நான் எப்பவும் உங்களைத்தான் தேடிக் கொண்டிருந்தேன்."

"இந்த விளையாட்டை நிறுத்திக்கலாம். உங்களுக்கு என்னிடமிருந்து என்ன வேணும்? நிஜமாவே எனக்கு உங்களைத் தெரியாதே."

"இன்னும் கொஞ்ச நேரத்துல தெரிஞ்சுப்பீங்க. பிறகு என்னை வாழ்நாள்ல ஒருபோதும் மறக்கவும் மாட்டீங்க. அதுக்கு நான் உறுதியளிக்கிறேன்."

"இப்போதான் எனக்கு கடுமையாகப் பயம் தோணுதுன்னு நினைக்கிறேன். எனக்கு யார்னே தெரியாத ஒருத்தரை நான் எப்படி மறக்கவே மாட்டேன். எனக்கு இப்போ ஒரே பதற்றமா இருக்கு" என்றேன்.

நான் அவ்வாறு கூறியிருக்கக் கூடாது என்று இப்போதுதான் உணர்கிறேன். ஒருவேளை அவ்வாறு கூறி என்னைத் தாக்க நானே அவனுக்கு ஊக்கமளித்திருக்கக் கூடும். இல்லாவிட்டால் வெறுமனே எச்சரித்து விட்டு அவன் போயிருப்பான் என்று இப்போது எனக்குத் தோன்றுகிறது. அப்போது எனக்குப் புரியவில்லை. அவன் வெளியேறியதுமே கதவை மூடி தாழ்ப்பாளிட வேண்டும் என்ற எண்ணத்தில் நான் கதவின் அருகிலேயே நின்று கொண்டிருந்தேன்.

நான் ஒரு பெண்ணாக இருந்திருந்தால், அவன் என்னை வல்லுறவுக்கு உட்படுத்துவானோ என்றும் பயந்திருப்பேன், கத்திக் கூச்சலிட்டிருந்தால் ஆட்களும் ஓடி வந்திருப்பார்கள்.

"நீங்க இப்ப போகலாம். நமக்கிடையில இனியும் பேச எதுவுமில்லன்னு நினைக்கிறேன்" என்றேன். அவன் சிரித்தவாறே என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நாங்க நிறையப் பேச வேண்டியிருக்கே."

"அப்படீன்னா அதைச் சொல்லிட்டுக் கிளம்புங்க. எனக்கு செய்றதுக்கு நிறைய வேலையிருக்கு" என்று எரிச்சலடையத் தொடங்கினேன். அந்த உயரமானவன் எனது வீட்டில் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தது என்னை எரிச்சலடையச் செய்தது. நான் கண்ணியமானவன். தற்போதைய அரசியலில் நேர்மையில்லை என்று நான் கருதாமல் இருந்திருந்தால், உள்ளூர் தேர்தலில் நின்று வெற்றி பெறவும் என்னால் முடிந்திருக்கும்.

"ஒக்கெல்லோ டேனியல் நீங்கதானே? சில பேர் உங்களை ஓகேன்னும் கூப்பிடுவாங்க, இல்லையா? நீங்கதான் நிறைய திரைப்படங்களை அகோலி மொழிக்கு மொழிபெயர்த்துக் கொடுக்குறீங்க. சரியா?"

"நான் பிரபலமானவன். நீங்க அமெரிக்கர்களுக்கு கீழ வேலை பார்க்கலைன்னா, நான் செய்றதுல எந்தத் தவறும் இல்லன்னு உங்களுக்குப் புரியும். நான் அமெரிக்கத் திரைப்படங்களை மட்டும்தான் மொழிபெயர்த்து வர்றேன். என்னோட குடும்பத்துக்கு நான் உணவளிக்க வேணுமே" என்றேன். இறுதி வரிகளை ஏன் சொன்னேன் என்று எனக்குத் தெரியவில்லை. எல்லோருமே அவர்களது குடும்பத்திற்காகத்தான் வேலை பார்க்கிறார்கள். இல்லாவிட்டால் அவ்வாறு சொல்லிக் கொள்கிறார்கள்.

பதிப்புரிமை தொடர்பான சிக்கல்களைக் குறித்து யாரோ என்னிடம் எப்போதோ எடுத்துக் கூறியிருந்தார்கள்தான். அதற்காகத்தான் இவன் வந்திருக்கிறானா? இல்லாவிட்டால் என்னிடமிருந்து சில திரைப்படங்களை வாங்கிக் கொள்ள வந்திருக்கிறானா? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். அவன் அகோலி மொழியை சரளமாகப் பேசுவது போலத் தெரியவில்லை. மாடுகளை மேய்த்து விட்டு நேரடியாக இங்கு வந்தவன் போலவே அவன் தென்பட்டான். மாடுகளினதும், பசுப்பாலினதும் வாடை அவனிடமிருந்து வீசுவதையும் என்னால் உணரமுடிந்தது. ஜனாதிபதியின் ஆதரவு அவர்களுக்கு இருப்பதால், அவர்கள்தான் எல்லா இடங்களிலும் ஆணவத்தோடு நடந்து கொள்கிறார்கள்.

"உங்க குடும்பத்துக்கு உணவளிக்கத்தான் வேறு நல்ல வழிகளிருக்கே. நம்ம ஜனாதிபதி முத்தேனிக்கு, ரம்போ கதாபாத்திரத்தை நடிக்கக் கொடுத்து அவரை இந்தத் தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாக்கவும் உங்களால முடியும்" என்று கூறி கண்ணடித்தான். நான் நினைத்தது போலவே அவன் ஜனாதிபதியைக் குறிப்பிட்டான். ஏதோ ஜனாதிபதி அவர்களது சொந்தத் தந்தை போல கதைக்கிறார்கள்.

"என்ன சொல்றீங்க?"
அவன் என்ன சொல்ல வருகிறான் என்று எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது என்றாலும் தெரியாதது போலக் கேட்டேன். ஒருவேளை எனது கணிப்பு தவறாக இருக்கக் கூடும்.

"நான் என்ன சொல்ல வருகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்" என்று கூறி மீண்டும் கண்ணடித்தான்.

அவன் ஒரு அறுவை என்று தோன்றியது. எமது உரையாடல் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்றோ, அவனுக்கு என்ன வேண்டுமென்றோ எனக்கு விளங்கவில்லை. எனக்கு அதைத் தெரிந்து கொண்டால், சமையலைத் தொடரலாம். இல்லாவிட்டால் எனது மொழிபெயர்ப்பு வேலையைச் செய்யலாம். எனக்குப் பணம் தேவை. அவனுக்கோ பாலும், மாடுகளும், ஜனாதிபதியும் கூடவே இருப்பதால் பாடுபட்டு வேலை செய்ய வேண்டிய அவசியமேயில்லை. ஆனால் எனக்கு, எதுவுமே சரி வரவில்லை. மகேரேரே பல்கலைக்கழகத்தில் இசை, நாடகத் துறையில் பட்டப்படிப்பை முடித்து விட்டு வேலை கிடைக்காமல் அலைந்து திரிந்து, பிறகுதான் லிஸாவின் உதவியோடு இதனைத் தொடங்கியிருக்கிறேன். அவன் போகும் வரைக்கும் நான் கதவருகிலேயே காத்துக் கொண்டிருந்தேன்.

அவன் சோபாவிலிருந்து எழுந்து ஜன்னலருகே வந்து நின்று கொண்டான். கைத்துப்பாக்கி போல ஏதோவொன்று அவனது காற்சட்டையில் துருத்திக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு நான் மாட்டிக் கொண்டேன் என்று என்னையே கேட்டேன். இதிலிருந்து விடுபட எனக்கு ஏதாவது வழியிருக்கிறதா? எனது சடலத்தை யார் கண்டுபிடிப்பார்கள்? எனது மகன் லூக்கா இந்த வீட்டுக்கு முதலாவதாக வரக் கூடாது. அவனுக்கு இப்போதுதான் பன்னிரண்டு வயது. இரத்தத்தைக் கண்டால் பயந்து விடுவான். அவனை மருத்துவத்துறையில் படிக்கச் சொல்லி நான் அழுத்தம் கொடுத்தாலும் கூட அவனால் ஒருபோதும் ஒரு வைத்தியராக ஆகவே முடியாது. ரெபேக்கா என்ன செய்வாள்? அவள்தான் மூத்தவள். விரைவில் பதினான்கு வயதை அடைய இருப்பவள். சடலத்தைக் கண்டு அலறிக் கூச்சலிட்டு அயலவரைக் கூப்பிட முன்பு அவள் எனது உடலை துணியொன்றால் மூடி விடுவாளா? எனது பிள்ளைகள் இன்னும் சிறியவர்கள். நான் அவர்களது பாடசாலைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருக்கிறது. நான்தான் அவர்களோடு பட்டப்படிப்பு முடியும்வரை கூடவேயிருந்து திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நடிகர் பாபி வைனை எனக்குப் பிடிக்கும் என்பதற்காக ஏன் இவன் எனது வாழ்க்கையை சுருக்கப் பார்க்கிறான்? அவன் திடீரென்று திரும்பி என்னைச் சுட்டு விடுவானோ என்று நான் பயந்து போயிருந்தேன்.

"என்னோட பிள்ளைகள் இன்னும் சின்னப் பிள்ளைகள். அவங்களுக்கு நான் தேவை. என்னோட வேலை ஏன் உங்களுக்குப் பிடிக்கலன்னு எனக்குத் தெரியல. எல்லோருக்குமே என்னோட வேலைகள் பிடிச்சிருக்கு. நான் அதை ஒழுங்காகச் செய்றேன்னு அவங்க நினைக்கிறாங்க. நீங்க அந்தப் படங்கள்ல ஒண்ணையாவது பார்த்திருக்கீங்களா?" என்று நான் புலம்பினேன்.

நான் ஏற்கெனவே சிக்கலில் மாட்டியிருந்தேன். எனவே சில கேள்விகளைக் கேட்பது எதையும் மாற்றி விடாது. அவன் அமைதியாகவே இருந்தான். அவன் என்ன யோசித்துக் கொண்டிருந்தான் என்பது எனக்கு உறுதியாகத் தெரியவேயில்லை. திண்ணையில் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சத்தம் போட வேண்டாம் என்று நான் எப்போதும் அவர்களிடம் சொல்வேன். ஆனால் அவர்கள் கேட்கவே மாட்டார்கள். அவர்களை இப்போது அமைதிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இப்போது பார்த்து ஏன் அயலவர்கள் எவரும் உப்போ, தக்காளியோ கேட்டு வரவில்லை? ஏன் இந்த உலகம் என்னை விட்டுவிட்டு சுழன்று கொண்டிருக்கிறது? இனியும் அது இப்படித்தான் நான் இல்லாமலும் சுழன்று கொண்டிருக்குமோ? லிஸா உடனடியாக மறுமணம் செய்து கொள்வாளா?

அவன் என்னை நோக்கித் திரும்பியதும், அவனது கையில் துப்பாக்கியையோ வேறேதும் ஆயுதங்களையோ காணாதபோதும் நான் திடுக்கிட்டுப் போனேன். இந்தக் காலத்தில் எல்லோரும் ஒரு வீட்டுக்குள் நுழைந்து விட்டு, அங்கிருக்கும் காலம் முழுதும் கைபேசியையே நோண்டிக் கொண்டிருப்பது போல இவன் ஏன் செய்யவில்லை என்று நான் ஆச்சரியப்பட்டேன்.
"ஏன் பயந்து போயிருக்கிறீங்க? நமது அன்பிற்குரிய ஜனாதிபதியை விட்டுட்டு பாபி வைனைத் தேர்ந்தெடுத்ததுக்காக நான் உங்களுக்கு ஒரு சின்னப் பாடத்தைக் கற்பிக்கப் போறேன்."

"அவர் எங்க ஜனாதிபதியில்ல. உங்க ஜனாதிபதி. அவர்தானே கடந்த முப்பது வருஷத்துக்கும் மேலாக ஜனாதிபதியாகவே இருக்கார். சரியா?"
எனது மூளை அவனைக் கோபப்படுத்தாமல் இருக்குமாறு சொல்வதை ஏன் எனது வாய் கேட்பதில்லை என்று எனக்கு விளங்கவில்லை. எனக்கு என்ன நேர்ந்திருக்கிறது? ஏன் வாயை மூடிக் கொண்டிருக்க என்னால் முடியவில்லை? பெரும்பாலும் நான் ஒரு திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறேன் என்றும் படம் முடியும்போது எல்லாம் சரியாகிவிடும் என்றும் நினைத்துக் கொண்டிருந்திருப்பேனோ?

"பாபி வைனுக்கு என்னோட பெயர் கூட தெரியாது."

"அவர் உங்க பெயரைத் தெரிஞ்சுக்குவார்."

"அவர் எனக்காகவும், எல்லோருக்காகவும் போராடிட்டிருக்கார்.
அவர்தான் எங்க ஆள்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“திரும்பத் திரும்ப அதையே சொல்லிட்டிருக்கீங்க. உங்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கத்தான் வேணும்” என்றான்.

பிறகு என்னை நோக்கி நடந்து வந்தான். நான் நகரவேயில்லை. நகர்ந்திருக்க வேண்டும் என்று இப்போது தோன்றுகிறது. அவன் என்னைக் கட்டியணைத்துக் கொண்டான். சில கணங்கள் அவன் அப்படியே இருந்தான். எனது உடல் தளர்ந்து போயிருந்தது. எந்த உடலும் என்னை அதுவரைக்கும் அது போல அருவெறுப்பூட்டியிருக்கவில்லை. எனது அயலவர்கள் அவர்களது வீட்டு ஜன்னல் திரையை இலேசாக விலக்கி இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இவன் என்னை என்ன செய்யப் போகிறான்?
அவன் என்னை கதவருகிலிருந்து சோபாவுக்கு இழுத்துக் கொண்டு வந்து சோபாவில் தள்ளி விட்டான். பிறகு வாசற்கதவை அடைத்தான். தாழிடவில்லை. ஒருவேளை அவன் தாழிட்டிருந்தால், அவன் என்ன செய்யப் போகிறான் என்பது எனது மூளைக்கு விளங்கியிருக்கும். அவன் தனது நீல நிற காற்சட்டையின் பொத்தான்களை அவிழ்க்கத் தொடங்கியிருந்தான்.

“ஹேய் ஹேய் ஹேய்… என்ன செய்றாய்?”

“நீயே இதையெல்லாம் கழட்டி விட்டாய்னா வசதியா இருக்கும்.”

“நான் ஒரு ஆம்பளை. இன்னொரு ஆம்பளை முன்னாடி இப்படி உடுப்பெல்லாம் கழட்ட மாட்டேன்.”

“இன்னிக்கு கழட்டப் போறாய்” என்றான்.

அவன் தனது கைத்துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

“துப்பாக்கியோடுதான் என்னோட வீட்டுக்கு வந்திருக்கியா?” என்று அவனிடம் கேட்பது போல முணுமுணுத்தேன்.

“இனியும் நான் உன்னைக் கட்டாயப்படுத்த வேணுமோ?”

நான் சோபாவில் எப்படி விழுந்தேனோ அப்படியே கிடந்தேன். நான் அந்த சூழ்நிலையில் கத்திக் கூச்சலிட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எழுந்து வீட்டை விட்டு ஓடியிருக்க வேண்டும். ஆனால் எதுவும் செய்ய இயலாமல் எனது உடல் அசைவற்றுப் போயிருந்தது.

“இதை லேசா முடிச்சுக்குவோம்” என்று கூறி ஒரு கையால் துப்பாக்கியை எனது வாயில் திணித்தவன், மறு கையால் எனது குட்டைக் காற்சட்டையின் பொத்தான்களைக் கழற்றினான். சோபாவின் கைப்பிடியில் என்னைக் குப்புறக் கிடத்தியவன் என் மீது இயங்கத் தொடங்கினான். முடிந்ததும் சோபாவைப் போர்த்தியிருந்த துணியை இழுத்தெடுத்துத் தன்னைத் துடைத்துக் கொண்டு துணியைத் தரையில் எறிந்தான். குற்றுயிராக நான் அங்கேயே கிடந்தேன். அவன் கிளம்பினான்.

“பாபி வைனுக்கு ரம்போவாகுற வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது. புரிஞ்சுதா உனக்கு?” என்று கூறியவாறே கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான். நான் எனது காற்சட்டையை மாட்டிக் கொண்டு ஓடிப் போய் கதவை மூடித் தாழிட்டேன். அவன் திரும்பி வரக் கூடும் என்று கருதிய நான் கதவை அடைத்துக் கொண்டு அங்கேயே நின்றேன்.

எவருமே இங்கு நடந்ததை அறிய மாட்டார்கள். நான் இதை எனது மனைவியிடம் கூட கூற மாட்டேன். கூறவே மாட்டேன். பெரியளவு வலியொன்றும் இல்லை. நாளைக் காலை எல்லாம் சரியாகி விடும். எல்லாம் நல்லதற்குத்தான். அவன் என்னைச் சுடவில்லை. அவன் என்னை அடிக்கவில்லை. எல்லாமே சரியாகி விடும். இது இன்னும் மோசமாக நடந்திருக்கக் கூடும். இவ்வளவோடு முடிந்தது போதும். இருந்தாலும், நான் ஏன் நடுங்கிக் கொண்டிருக்கிறேன்? நான் ஏன் அழ வேண்டும்? ஆனாலும் கொஞ்சம் அழுவேன். அழுவது நல்லதுதான், தெரியுமா? கவலை எல்லாம் வெளியேறி விடும். நான் கண்ணீரை வழிய விடுகிறேன்.

நான் குளிக்கத் தொடங்கினேன். இதமான இந்த நீர் அவன் விட்டு விட்டுப் போன அவனது மிச்சங்களைக் கழுவி அகற்றட்டும். போலிஸுக்கு அறிவிக்க வேண்டுமா? என்ன செய்ய வேண்டுமென்று அவர்களுக்குத்தான் தெரியும். எனக்கு அவனைத் தெரியும். தெருக்களில் வைத்து என்னால் இனிமேல் அவனை இனங்காண முடியும். அவன் உயரமாகவும், கருப்பாகவும் இருந்தான். உயரம் நிச்சயமாக ஆறடி இரண்டங்குலமாவது இருக்கும். அவனது இடது கன்னத்தில் ஒரு தழும்பு இருந்தது. அவனால் வாசனைத் திரவியங்களை வாங்க முடியுமாக இருந்தாலும் கூட அவன் எதையும் பூசியிருக்கவில்லை. அவனது வியர்வை நாற்றத்தை இப்போதும் என்னில் உணர முடிகிறது.

****

கதவு மீண்டும் தட்டப்படும் ஓசை கேட்டது. நான் கதவைத் திறக்கவில்லை. எனது அயலவரான முகாசா ஜன்னலினூடாக எட்டிப் பார்த்தார்.

“இங்க வந்துட்டுப் போனவனுக்காக கொஞ்சம் பேர் வெளியே கார்ல காத்துட்டிருந்தாங்க. அந்தக் காரோட ஜன்னல்கள் எல்லாம் மறைக்கப்பட்டிருந்துச்சு. உங்களுக்குத் தேவைன்னா என்னால அந்தக் காரோட நம்பரைத் தர முடியும்” என்றார். நான் பதிலேதும் அளிக்காமல் குளித்துக் கொண்டேயிருந்தேன்.

பின்னர் இரவுணவைச் சமைத்தேன். முன்பு திட்டமிட்டிருந்த,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படத்தை மொழிபெயர்க்கும் வேலையைச் செய்யவில்லை.

****

அன்று இரவு ஜனாதிபதி வேட்பாளர் பாபி வைன் தொலைக்காட்சியில் உரையாற்றினார். நான் எனது மனைவியுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். பிள்ளைகள் காலையில் சீக்கிரமே பாடசாலைக்குப் போக வேண்டியிருந்ததால் நேர காலத்துடன் உறங்கச் சென்றிருந்தார்கள்.

''இதோ உங்க ஆள்'' என்றாள் லிஸா.
''ஆமா. என்னோட ஆள்தான்'' என்று உற்சாகமேயின்றி பதிலளித்தேன்.

''எங்க உங்க குறிப்பேடு? அவரோட உரையை இன்னிக்கு எழுதி வச்சுக்க மாட்டீங்களா? உங்களுக்கு அவரை ரொம்பப் பிடிக்கும்னு நெனச்சேன்.''

''அவர் எப்போ இந்த ஆட்சியைப் பிடிப்பார்னு ஆசையாக் காத்துட்டிருக்கேன். அப்போதான் வாழ்க்கை சிறப்பா அமையும்.''

''எல்லாரும் ஒண்ணுதான். ஆட்சியைப் பிடிச்சுட்டாங்கன்னா அதுல இருக்குற ஏதோ ஒண்ணு அவங்க மூளையையும், அவங்ககிட்ட இருக்கிற அன்பையும் தின்னு தீர்த்திடும்.''

''இவர் வித்தியாசமானவர். நம்ம எல்லோருக்காகவும்தான் இவர் போராடிட்டிருக்கார்.''

''நமக்காகவா? அவங்க எல்லோருமே அவங்களுக்காகவும், அவங்க குடும்பங்களுக்காகவும், கூட்டாளிகளுக்காகவும்தான் எல்லாம் செய்றாங்களே தவிர நமக்காக இல்ல. நாமதான் நமக்காக போராடணும்'' என்றாள் லிஸா.

நான் அவனுடன் போராடியிருக்க வேண்டும், அவனை அடித்திருக்க வேண்டும் இல்லாவிட்டால் ஏதேனும் செய்திருக்க வேண்டும் என்று ஒரு கணம் எனக்குத் தோன்றியது. என்னை ஒரு உதவாக்கரையாகவும், அற்பனாகவும் உணர்ந்தேன். நான் ஒரு ஆணே இல்லை. இனி ஒருபோதும் ஆணாகவும் மாட்டேன். நான் பெண்ணுமில்லை. என்னாலே அடையாளம் கண்டு கொள்ள முடியாத ஒருவன் நான்.

தொலைக்காட்சியில் பாபி வைன், அவர் சாமான்ய மனிதனுக்காகவும், நாட்டு மக்கள் அனைவருக்காகவும் எப்படியெல்லாம் போராடிக் கொண்டிருக்கிறார் என்பதை சொல்லிக் கொண்டிருந்தார். நாங்கள் மீண்டும் மக்கள் பலத்தைப் பெற வேண்டும் என்றார். ''நான் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்துக்காகவும்தான் போராடிக் கொண்டிருக்கிறேன்'' என்று தொலைக்காட்சித் திரை வழியே என்னைச் சுட்டிக் காட்டி கூறிக் கொண்டிருந்தார்.

பிற்பகல் வேளையில் நடந்தவை எனது ஞாபகத்தில் வந்து கொண்டேயிருந்ததால், அவரது குரல் தெளிவற்றதாகத்தான் எனக்குக் கேட்டது. நான் அவனை ஏதேனும் செய்திருக்க வேண்டும். அவனது முகத்தில் ஓங்கிக் குத்தியிருக்க வேண்டும். அவனை உதைத்திருக்க வேண்டும். அவனை ஏதாவது செய்திருக்க வேண்டும்.

''இவருக்கு என்னோட பெயர் கூடத் தெரியாது'' என்றேன்.

''இவர் உங்க பெயரை கூடிய சீக்கிரம் தெரிஞ்சுக்குவார்'' என்ற லிஸா என்னை நோக்கிக் குனிந்து ஆவேசமாக முத்தமிட்டாள்.

''படுக்கைக்குப் போய் நம்ம போராட்டத்தைத் தொடரலாம், வாங்க'' என்று புன்னகைத்தவாறே எனது கையைப் பிடித்து படுக்கையறை நோக்கி இழுத்தாள்.

''இன்னிக்கு வேணாம். என்னோட நாட்டுக்காகவும், எனக்காகவும் போராடுற இந்த மனுஷனோட பேச்சை எனக்கு முழுசா கேட்கணும்.''

''ஆச்சரியமா இருக்கு. இன்னிக்கு வேணாம்னு நீங்க ஒருபோதும் சொன்னதில்லையே. என்னாச்சு உங்களுக்கு?''

நான் அங்கேயே அமர்ந்திருந்தேன். தொலைக்காட்சிதான் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது. லிஸாவின் குறட்டையொலி சத்தமாக எழும் வரை அங்கேயே காத்திருந்த நான், பிறகுதான் படுக்கைக்குச் சென்றேன்.

****

என்னிடம் ஏதோ சரியில்லை என்பதை எனது மனைவி விரைவிலேயே உணர்ந்து கொண்டாள். காலையில் வெகுநேரம் படுக்கையிலேயே கிடந்தேன். எனது அலுவலகம் குறித்தோ, எனது வேலை குறித்தோ, எதையும் குறித்தோ எவ்வித ஆர்வமுமின்றிக் கிடந்தேன்.

''நான் வேலைக்குப் போய் பாடுபடுறேன். நீங்க படுக்கையிலேயே இருக்கீங்க. நாங்க இன்னும் இளமையானவங்க இல்லன்னு உங்களுக்கு விளங்குதா? நம்மகிட்ட இருக்குற கொஞ்ச நஞ்ச சக்தியையும் பாவிச்சு இப்போ ஒண்ணாச் சேர்ந்து பாடுபட்டாத்தான் நமக்குன்னு ஒரு வீட்டைக் கட்டிக்கலாம்'' என்றாள் லிஸா.

''சீக்கிரம் எழுந்துடுறேன்.''

''சரி. என்ன பிரச்சினை? என்கிட்ட சொல்லுங்க. நான் கல்யாணம் பண்ணப்போ இருந்த ஆளில்ல இது. என்னை எப்பவும் உற்சாகப்படுத்துற, என்கிட்ட ரொம்ப அன்பு காட்டுற அந்த ஓகேஸ் எங்க? பிள்ளைகளும் அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவைத்தான் தேடுறாங்க.''

எனக்கு நடந்ததை லிஸாவுக்குத் தெரியப்படுத்த எனது நாவை அசைக்க என்னால் ஒருபோதும் முடியாது. என்னால் லிசாவின் மீதோ, வேறு எந்த மனிதர் மீதோ நம்பிக்கை வைக்க முடியவில்லை. எனது அனுபவத்தை எழுதி வைக்கவும் நினைத்தேன். ஆனால் நான் மோட்டார் சைக்கிளில் போகும்போது ஏதேனும் விபத்தில் இறப்பேனானால், லிஸா நான் எழுதியதைக் கண்டுபிடித்து விடுவாளோ என்றும் கவலைப்பட்டேன்.

"எனக்கு மலேரியா காய்ச்சல்னு நினைக்கிறேன். உடம்பெல்லாம் ஒரே சோர்வா இருக்கு. மூட்டுகளெல்லாம் வலிக்குது'' என்று நான் கூறியதும்தான் லிஸாவின் கண்களில் ஒரு ஆறுதலைக் காண முடிந்தது. அவள் தனது கைப்பையை எடுத்து அதில் பணத்தையும், சாவியையும் தேடியெடுத்துத் தந்தாள்.

"மலேரியா மாத்திரைகளைக் குடிக்கிறதுக்கு முன்னாடி மலேரியாதானான்னு பரிசோதிச்சுப் பாருங்க, சரியா?'' என்றவாறே அவள் வீட்டை விட்டு வெளியே சென்றாள்.

நான் படுக்கையிலேயே சிறிது நேரம் கிடந்தேன். மனப்பாரம் கொஞ்சம் குறைந்தது போல இருந்தது. நானே தேநீர் தயாரித்து, ஊற்றிக் குடித்தவாறே ரம்போ கதாபாத்திரத்தை ஜனாதிபதி முத்தேனி செய்வது போல கற்பனை செய்து பார்த்தேன். அந்த யோசனையே சலிப்பைத் தந்தது. அதைச் செய்ய என்னால் ஒருபோதும் முடியாது.

மேசையில் தலைசாய்த்து அழுதேன். இனி, நான் ஏதேனும் வியாபாரத்தைத் தொடங்கலாம். குழந்தைகளின் பழைய ஆடைகளை சேகரித்து விற்கலாம். ஆண்களின் பழைய சப்பாத்துக்களை சேகரித்து விற்கலாம். இல்லாவிட்டால் ஒரு உணவு விடுதியைத் தொடங்கலாம். அவ்வாறு ஏதேனும் எனக்கு சொந்தமாக ஒரு தொழில் இருந்தால் வில்ஸ்மித் நடித்த 'Agent J' திரைப்படத்தை பாபி வைனுக்குக்காக நான் மொழிபெயர்ப்பேன். தொடர்ந்தும் மொழிபெயர்த்துக் கொண்டேயிருப்பேன். மொழிபெயர்த்தவாறே எனது கதையையும் ஒருநாள் சொல்வேன்.



எழுத்தாளர் பற்றிய விபரம்
பியட்றிஸ் லம்வாகா

ஆபிரிக்காவின் நவீன தலைமுறை எழுத்தாளர்களில் உள்ளடங்கும் உகாண்டா குடியரசைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் பியட்றிஸ் லம்வாகா, உகாண்டா மெகரேரே பல்கலைக்கழகத்தின் ஆங்கில இலக்கிய சிறப்புப் பட்டதாரியும், மனித உரிமைகள் கற்கையில் முதுகலைப் பட்டதாரியும் ஆவார்.

2009 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க *PEN/Studzinski* இலக்கிய விருதுக்கான இறுதிப் போட்டியாளராக இருந்த இவர் 2011 ஆம் ஆண்டு இளம் சாதனையாளர் விருதை வென்றதோடு, அதே ஆண்டு ஆபிரிக்க எழுத்தாளர்களுக்கான *Caine* சர்வதேச விருதையும் வென்றார். 2015 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மோர்லாந்து எழுத்தாளர் புலமைப்பரிசுக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, *Stiftung Kunstlerdorf Schoppingen (Germany), Rockefeller Foundation's Bellagio Center Residency (Italy), Le Chateau de Lavigny International Writers' Residence (Switzerland), Art of Resilience - Salzburg Global Seminar (Austria)* ஆகிய அமைப்புகளில் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

தற்போது சர்வதேச ஊடக நிறுவனமான குளோபல் ப்ரஸ் ஜேர்னலில், பணி புரிந்து வருகிறார். இவர் *PEN – Uganda* எனும் அமைப்பின் பிரதித் தலைவராகவும் இருப்பதோடு, விருதுகள் வென்ற அமெரிக்கப் புகைப்படக் கலைஞரான டேன் நெல்கனுடன் இணைந்து உகாண்டா பெண்களின் கதைகளை ஆவணமாக்கி வருகிறார். அதற்கு முன்பு இவர் உகாண்டா சிறைச்சாலைகளில் இலக்கியப் பயிற்சிப் பட்டறை வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்திருப்பதோடு, சிறைக் கோவையைத் திருத்தியிருக்கிறார். 2018 இல் இவர் அதுவரை மேற்கொண்டிருந்த இலக்கிய பங்களிப்புகளுக்காக *Uganda Registration Service Bureau* அமைப்பினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்காலத்தில் உகாண்டா மக்கள் எதிர்கொண்டு வரும் வாழ்க்கைச் சிக்கல்களையும், யுத்தங்களும், கலவரங்களும் மக்களிடையே ஏற்படுத்தும் தாக்கங்களையும் தமது படைப்புகளின் கருவாகக் கொண்டு ஆங்கில மொழியில் சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றை எழுதி வருகிறார். இவரது சிறுகதைகள் சமகால உகாண்டா சமூகத்தின் இருண்ட பகுதிகளை அப்பட்டமாக வெளிப்படுத்துவதாக விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வோடு விளையாடும் பறவைகள்

நான் வீடு தேடிக்கொண்டிருந்தேன். வீடு அம்சமாக அமைந்திருந்தால் அது என் பணியிடத்துக்குத் தொலைவில் இருந்தது. அணுக்கத்திலும் பொதுப்போக்குவரத்து வசதிகளுடனும் அமைந்தவை சுமாரானவையாகவும், மின்னுயர்த்தி வசதிகள் இல்லாமல் 3வது/4வது தளத்திலும் இருந்தன. கடைசியில் ஹன்னா என்றொரு பெண் தன்வீட்டை பகுதியாக வாடகைக்குக் கொடுக்கவிருப்பதை *Zweitehand* பத்திரிகையின் சிறு விளம்பரப்பகுதியில் பார்த்தேன். அநேகமாக வீட்டைப் பகுதியாக வாடகைக்குக் கொடுப்பவர்கள் ஆண்களுக்குத் தரமாட்டார்கள். இருந்தும் ஒரு வெளிநாட்டு ஆணுக்கு வாடகைக்குத்தருவியாவென்று ஹன்னாவுக்கு மின்னஞ்சல் எழுதினேன். அன்றே பதில் வந்தது. ஒரு குடியிருப்பாளர் இயைந்து அனுசரித்துப்போகக்கூடிய ஒருவராக இருப்பதுதான் முக்கியம். ஆண்/பெண், சுதேசி/விதேசி, கருப்பு/வெளுப்பு இவையெல்லாம் எனக்குத் தடைகளில்லை. அடுத்தநாள் அவள் தந்திருந்த நேரத்தில் வீட்டைப் போய்ப்பார்த்தேன். அதையும் நிராகரித்துவிடக் காரணங்கள் எதுவுமிருக்கவில்லை. வீட்டின் பிரதம குடியிருப்பாளரின் ஒப்பந்தம் அவளிடமே இருந்தது. ஒருமாத மனைப்பகிர்வில் இருவருக்கும் ஒத்துவரவில்லையானால் எம் பகுதிவாடகை ஒப்பந்தம் ரத்தாகிவிடும் என்பதைத் தவிர அவள் வேறெதையும் நிபந்தனையாக விதிக்கவில்லை. மிகவும் புரிதலுள்ள பெண்ணாகத் தெரிந்தாள். அவ்வீட்டுக்கே குடிபோனேன்.



அது முதலாம் உலகமகாயுத்தம் முடிந்தவுடன் 1925 இல் கட்டப்பட்டதும் புராதன கட்டிடங்களைக் கண்காணிக்கும் திணைக்களத்தின் (*Landesdenkmalamtes Berlin*) இன்னும் 100 - 150 வருடங்கள் தாக்குப்பிடிக்குமென உத்தரவாதம் பெற்றதுமான பழைய பார்க்கல்லிலான உறுதியான அடுக்ககம். பழையவீடுகளில் வாழ்வதிலுள்ள அனுகூலம் நவீன அடுக்ககங்களை விடவும் ஒப்பீட்டளவில் வாடகை குறைவாக இருக்கும். சிலவற்றில் மின்னுயர்த்தி வசதிகள் இருக்காது. எமது வீடு முதலாவது தளத்தில் இருந்ததால் எமக்கு அதைப்பற்றிய கவலையில்லை, அறஞ்சார்ந்து விசாரஞ் செய்தால் இவ்வகைச் சிந்தனை கொஞ்சம் சுயநலந்தான், ஆனாலும் தனியொரு மனிதன் மானுடம் நிரற்படுத்தி வைத்திருக்கும் துயர அடுக்குகளில் எதுக்கென்றுதான் வருந்துவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருவருக்கும் பொதுவான பிரதான வெளிவாசலுக்கு சித்திரவேலையுடனான மரக்கதவு. அதுவே *Rolls Royce* கதவின் மென்மையுடன் திறந்து பூட்டும். அதன் திறப்புக்கள் நம்மிருவரிடமும் இருந்தன. எங்கள் இருவர் படுக்கை அறைகளையும் ஒரு நீண்ட இடைக்கழி பிரித்தது. அதன் முடிவில் “*L*” வடிவிலமைந்த பொதுவான சமையலறை, அதன் ஒரு புயத்தில் நீண்டதொரு சாப்பாட்டுமேசையும் அதைச்சுற்றிக் கதிரைகளும் இடப்பட்டிருந்தன. எனக்கு யாராவது விருந்தினர்கள் வந்தால் அம்மேசையைச் சுற்றி அமரவைத்தே உபசரிப்பேன்.

ஒரு முறை ஹன்னாவின் பள்ளித்தோழியென்று ஒருத்தி தென்மாநிலத்திலுள்ள *Augsburg* என்றொரு நகரத்திலிருந்து வந்து இரண்டுநாட்கள் தங்கிப்போனாள். மற்றும்படி அவளுக்கும் விருந்தினர்களென்று எவரும் வீட்டுக்கு வருவதோ தங்குவதோ இல்லை. அவரவருக்கு அவரவர் வாழ்வியல்த்தோரணைகள் (*Life Styles*). அவளோ நானோ ஆரம்பத்தில் சமையலறைக்குள் அதிகம் வினைக்கெடமாட்டோம், ஆதலால் எங்கள் சமையல்கள் மற்றவரால் தாமதமாவதுமில்லை. அவள் ‘பஸ்டா’ வகைகளை வெள்ளை-வைன், அடர் கிறீம் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து அலாதியான சுவையுடன் சமைப்பாள். அப்படி அவள் பஸ்டா சமைக்கும் வேளைகளில் எனக்கும் கிடைக்கும். நான் எப்போதாவது இறால் அல்லது சிக்கன் இறைச்சிபோட்டுச் செய்யும் இடியப்பப்பிரியாணியும், *Fried – Rice* உம் அவளுக்கும் நிரம்பப்பிடிக்கும்.

ஆரம்பத்தில் எங்கள் இருவருக்கும் சமையலைறையில் தனித்தனியான குளிர்ப்பதனப்பெட்டிகள் இருந்தன. அவளுக்கு *Chianti Classico, Famiglia Barbera d'Asti* போன்ற சிவப்புவைன் வகைகள் மிகவும் பிடிக்கும். சிவப்பு வைன்வகைகளைக் குளிர்பதனப்பெட்டிகளுக்குள் வைத்துப்பாதுகாக்க வேண்டியதில்லை, கெட்டுவிடாது. விரும்பினால் அருந்தமுதல் கொஞ்ச நேரத்துக்கு அவற்றைக் குளிரில் வைத்தாலே போதும்.

ஒருநாள் அவளாகவே சொன்னாள்: '' ஜீவன் எதுக்கு உனக்கு தனியாகவொரு குளிர்பதனப்பெட்டி...... கொஞ்சம் ஜூஸும், பியரும், முட்டைகளும், மீனும், கோழியுந்தானே வைத்திருக்கிறாய்....... உன்னுடைய பெட்டியை நிறுத்திவிட்டு அதிலுள்ளவற்றை என்னுடையதுக்குள் வைத்துவிடேன், மின்சாரப் பாவனையும், சூழலுக்கும் நல்லது'' என்றாள்.

சூழல் பிரக்ஞை உள்ள பெண்ணானபடியால் அடுத்தவர்களைப் பற்றியும் சிந்திக்கத் தெரிந்திருக்கிறாள், நல்லபெண்ணாகத்தான் இருக்கவேண்டும். சம்மதித்தேன். அவள் *Femina, Freundin, Flow, Brigitte, Gala, Cosmopolitan, Vogue,* போன்ற மாதர் இதழ்கள் சிலவற்றையும் விரும்பி வாங்கிப்படிப்பாள். இன்னும் திறில்லர்கள், கிறைம் நாவல்கள் வாசிப்பதிலும் ஆர்வம். ஆனால் அவற்றை பொதுப்புத்தகப் பெட்டிகளிலிருந்தோ, நூலகத்திலிருந்தோ, படித்துவிட்டு யாரும் தெருவில் வைத்திருந்தாலோ எடுத்துவருவாளேயன்றி, அவ்வகை நூல்களுக்காக பென்னி செலவுசெய்யமாட்டாள்.

நமக்குப் பொதுவான மற்றொரு வதியுமறையும் அதற்குள் தொலைக்காட்சியையும் இரண்டு மென்னிருக்கைகளும் வைத்திருந்தோம். நாளடைவில் எம்மிடையே புரிதலும் நெருக்கமும் அதிகமாக சமையலறையிலிருந்தே எமக்கிடையேயான வாழ்வியல், தத்துவங்களை விசாரஞ்செய்வதோடு பழமைபாடுகளையும் நாட்டு நடப்புகளையும் அலசிக்கொள்வோம். ஒருநாள் இரவு இருவரும் சாப்பிட்டபடியே நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அவளும் பேசிக்கொண்டே கொஞ்சங்கொஞ்சமாக அவளது பிரிய *Chianti* வைனை வழமையைவிட அதிகமாகவே மாந்திவிடவும் போதையில் மெல்ல மிதக்கலானாள். ''சாராயம்போனால் பூராயம் வருமா''....... அன்றைக்குத்தான் முதன்முதலாக தனது குடும்பம், இளமைக்காலங்கள். பணிபற்றியெல்லாம் மேலோட்டமாக என்னிடம் பகிர்ந்துகொண்டாள்.

*DHL* விநியோக சிற்றுந்துகளில் பொதிகளை விநியோகம் செய்துகொண்டிருந்த என்னிடம் அவளிடம் பீற்றிக்கொள்ள அத்தனை உத்தியோக மஹாத்மியங்கள் இருக்கவில்லை. ''ஹன்னா திருமணம்பற்றி என்ன நினைக்கிறே'' என்றதுக்கு உடனே '' நான் நிறைய பெண்ணியம்பற்றி வாசிப்பவள், அதனால் எனக்கு அதில எல்லாம் அத்தனை நம்பிக்கையில்லை' என்று சொல்வேனென்று ஒருவேளை நீ எதிர்பார்த்திருப்பாய், ஆனால் திருமணமும் குறிப்பாகப் பெண்களுக்கு நல்லதென்றே நினைக்கிறேன் '' என்றாள். '' ஏன் ஆண்களைவிடப் பெண்களுக்கு நல்லதெங்கிறாய்........ பெண்ணோடு ஒரு ஆணும் இருந்தால்த்தானே திருமணம்....... கொஞ்சம் விஷயத்தை இந்த மத்தனுக்கும் புரியும்படியாய்த்தான் சொல்லேன்.''

''சொல்றன் பொறு'' என்றவள் தன் கிளாஸில் மேலும் வைனை வார்த்து ஒரு தரம் அதில் வாயைவைத்து மிடறிவிட்டு 'மௌனமாக' இருந்தாள். அம்மௌனத்தை இதை இவனிடம் சொல்லத்தான் வேண்டுமா எனும் தயக்கமாக நான் பொருளுணர்ந்தேன்.

பின் பேசினாள்:
''நான் பிறந்தபோது என் பெற்றோர்கள்கூடத் திருமணமாகாமல் சேர்ந்தே வாழ்ந்திருந்தனர். ஒருமுறை என்னுடைய குடும்பப்பெயர் எங்கிருந்து வருகிறது என்று நான் அம்மாவிடம் கேட்டபோது ''நீ பிறந்தபோது என்னுடன் சேர்ந்து வாழ்ந்த *Jonas* ஸே உன் அப்பாவென்று நான் நம்பியதாலும் அவருடைய *Meyer* என்கிற குடும்பப்பெயர் முதற்குடிமகன் என்கிற நல்ல அர்த்தத்தைக்கொண்டிருந்ததாலும் அப்பெயரையே உனது குடும்பப்பெயராகப் பதிவு செய்தேன். என்றார் அம்மா.'' இதைச்சொல்லிமுடிக்கையில் அவள் குரல்கம்மிக் கண்கள் பனித்துக் கொண்டன. அவளது மனதைத் திசைதிருப்பலாமென்ற எண்ணத்தில்,

''ஜெர்மனியில் ஒரு தாய் விரும்பினால் அவர் தன்னுடைய குடும்பப்பெயரையும் தன் பிள்ளைக்குத் தரமுடியுமல்லவா...........'' என்றேன்.

அவள் மேலும் மேசையில் கொஞ்சநேரம் மௌனமாக அமர்ந்திருந்துவிட்டு எழுந்து ''குட்நைட்'' சொல்லிவிட்டு லேசான உலாஞ்சலுடன் நடந்துபோய் படுக்கையறைக்குள் புகுந்தாள்.

ஒருமுறை அவளுக்குக் காய்ச்சல்வந்தது, குலைப்பன்கண்டவள்போல் உதறிக்கொண்டிருந்தாள். *Novaminsulfon. 500mg* வில்லை ஒன்றைக் கொடுத்துவிட்டு பாண்டேஜ் நறுக்கொன்றை நனைத்து அவளின் நெற்றியில் ஒட்டிவிட்டிருந்தேன், இரண்டுமணி நேரத்தின்பின் உடல்வெப்பத்தை அளந்துபார்த்தால் 39 இலிருந்து 37 ஆகத்தணிந்துவிட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இரண்டே பாகை மட்டும் குறைந்திருக்கு” என்றேன்.

“என்னைக் கொஞ்சநேரம் கட்டிப்பிடிப்பாயானால் இன்னுமொரு பாகை குறையும்” என்றாள் வீறமைவாக (seriously).

“அப்புறம் அந்தவெப்பம் எனக்குள் ஏறத்தொடங்கிவிட்டால் என்ன செய்ய.”

“இலேசான Knutchen (Cuddling/Kissing) செய்வதால் எவருக்கும் பெரிய சேதாரங்கள் வந்திடாது மெஸூயூ..... வழக்கத்தில் உடல் வெம்மையானால் எதைச்செய்வியோ.... அதைச்செய்யேன்” என்றாள். கண்ணைச் சிமிட்டிக்கொண்டு..

“வழக்கத்தில் என்ன செய்வேங்கறதை உனக்கு நான் சொல்லியிருக்கிறேனா.”

என்றேன் பொய்க்கோபத்துடன்.
(மெஸூயூ › Mister ஃப்ரெஞ் வழக்கு)

மறுநாள் பொதுஅங்காடிக்கு என்சீருந்தில் போயிருந்தேன். ஹன்னா பலவீனமாக இருப்பது நினைவில்வரவும் எனக்கான பொருட்களோடு அவளுக்கும் வைன்கள், கோதுமைமாவு, கிழங்கு, சமையலெண்ணெய், தண்ணீர், பாலன்ன பாரமானவற்றை வாங்கிவந்துகொடுத்தேன்.

“வாவ்....... இதையெல்லாம் நீ என்னைக்கட்டிக்கிட்ட பின்ன பண்ணலாமே, எதுக்கு மெஸூயூ இப்பவே இத்தனை சிரமப்படுறே” என்றாள்.

“சும்மாவொரு சமூக சேவையென்றே வைச்சுக்கோயேன்......”
”நாம கட்டிக்கிட்ட பின்னாலும்..... நிஜமாய் இதே மாதிரி எனக்குச் சாமான்களைச் சுமந்துவந்து கொடுப்பியா Schatz (அன்பே).....” என்றாள் கண்களில் குறும்பு தவழ.
” Warum nicht? ” (Why not)

என் கையை இழுத்துவைத்து முத்தமிட்டு மிருதுவாக அதைத் தடவிக்கொடுத்தாள்.

எங்கள் அடுக்ககத்தின் தரைத்தளத்தின் கிழக்குச்சுவரில் ஒரு பக்கக்கதவு இருக்கிறது, அவ்வாசலால் வெளியேறி வளவின் பின்கொல்லைக்கும் குடியிருப்பாளர்களின் வாகன நிறுத்திடத்துக்கும் வரலாம். எங்கள் வீடமைந்த வீதியின் ஓரமாக ஒரு ‘டிராம்’ பாதையுமுண்டு. அது கிழக்கு நோக்கிபோய் மேலும் இரண்டோ மூன்று தரிப்பிடங்கள் கடந்து Herzberge எனும் தரிப்பிலுள்ள பிரபலமான Queen Elisabeth இதயநோய் மருத்துவமனையில் முடிவுறும்.

ஒரு நாள் ஹன்னா பக்கக்கதவால் பூனைபோல் ஓசைப்படாமல் இறங்கி ஒருவனின் அணைப்போடு டிராமில் ஏறிப்போனாள். அதே இளைஞன் ஒரு நாள் வீதியில் பார்த்த என்னிடம் “ மெஸூர் இங்கே பாலியல் விடுதிகள் ஏதும் இருக்கா” என்று விசாரித்தவனைப் போலிருந்தான். நான் அதிகமாகக் குடித்துவிட்டிருந்தேனோ தெரியவில்லை. அந்த இளைஞனையே ஹன்னா ஒருநாள் வேறொரு பெண்ணுடன் வீட்டுக்குக்கூட்டிவந்து ஏதேதோவெல்லாம் சமைத்து விருந்துபோட்டு அனுப்பியதாக ஞாபகம். அவ்விரவின் சம்பவங்கள் கனவிற்போலும், பனிப்புகாருக்குள்ளால் தெரிவதுபோலவும் தெளிவற்றும் ஞாபக அடுக்கில் கலங்கியுந்தெரிந்தன. அவனையோ கூடவந்த பெண்ணையோ ஹன்னா அறிமுகப்படுத்தியதான ஞாபகம் வரவில்லை.

‘ஜீவன் எதுக்குப்பா கல்யாணங்கட்டிறான்........ அதுதானே நிரந்தரமாய் Mistress ஒருத்தியை (Mistress › Concubine) வைத்திருக்கிறானே’ என்று நட்புக்குழுவுக்குள் சிலர் என் காதுபடப்பேசினார்கள்.

அதற்குள்ளும் இன்னும் நெருக்கமான நண்பர்கள் என்று வாய்த்தவர்கள் என்மீதான கரிசனைமீறி “அடே.......... நீயொரு கூத்தியோட குடியிருக்கிறியாமே........ செய்திகள் வருகுது உண்மையாடா, உன்னுடைய பெயர் கெட்டுபோகாதா” என்றெல்லாம் அனுதாபத்தைச் சொரிந்ததோடு “உனக்கு யாரும் பெண்தர மாட்டார்கள்” என்றெல்லாம் பயமுறுத்தினர், ஏதோ நான் யார்வீட்டிலோ போய் ‘உங்க பெண்ணைக்கொடுங்க’ என்று முட்டிபோட்டு நிற்பதைப்போல.

இவ்வாறெல்லாம் என் நட்புப்பிஸாசுகள் ஹன்னாவை என் வைப்பாட்டியே என்று குறைமதிப்பீடு செய்வதற்கு அவள் பண்ணும் விவகாரமான தொழிலும் ஒரு காரணம்.

ஒருமுறை ஹன்னாவே
“நான் என்ன தொழில் பண்ணுறேன் என்பதை அறியும் ஆர்வம் உனக்கும் இருந்திருக்கும் இல்லாமலுமிருக்கும், ஆனாலும் நாம இவ்வளவுகாலம் நெருங்கி இருந்தும் அதுபற்றி என்னைக்கேட்காமல் இருக்கிறாய் பாரு........... உன்னுடைய அந்தப் பண்பு எனக்குப் பிடிச்சிருக்கு.” என்றாள்.

பெர்லின் ஜெர்மனியின் தலைநகரமாகிய பின்னால் (1990) நாம் குஷியாக இருந்து பேசிக்கொண்டிருந்த ஒரு மாலையில் பெர்லினின் வேலைவாய்ப்புகள் பற்றிய பேச்சுவரவே அதையும் அலசினோம்.

பெர்லின் தலைநகரமாக மாறியதால் இங்கேயுள்ள (Short-term) அமையத்துக்கான செகிரடேறியல் சேர்விஸ் செய்யும் குழுமங்களின் தேவையும், அவ்வகைக் குழுமங்களில் வேலைவாய்ப்புகள் அதிகரித்திருப்பதையும் அவ்வகைக் குழுமங்களின் சேவை வகைகள் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரித்துச் சொன்னாள். வெளிநாடுகளிலிருந்தோ, ஜெர்மனியின் இதர நகரங்களிலிருந்தோ வியாபார நிமித்தமாக பெர்லின் நோக்கிவரும் வணிகர்களுக்கு (*Business Personals*) அவர்களின் தேவைகள் தொடர்பான தகவல்கள் குறைவாகவே இருக்கும். அவ்வாறானவர்களின் வியாபாரவாய்ப்புகளை ஆய்வுசெய்வதற்கும், புதிய வியாபாரமொன்றை இங்கு ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கு நுகர்வோர்களின் ஊடாட்டங்களை, பரம்பலை ஆய்வுசெய்து பரிந்துரைப்பது, அவ்வவ் வணிகக்கேந்திரங்களை அடைவதற்கான வசதிகளை ஆராய்ந்து களநிலமைகளை அவர்களின் மேலிடத்துக்கு அறிக்கையளிக்கவும், புதிய வியாபார ஒப்பந்தங்கள் செய்வதற்கும் வணிகத்துறையினரும் அவர்களது முகவர்கள்/பிரதிநிதிகளும் வருவார்கள். வாடிக்கையாளர்களின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உகந்த உள்ளூர் வணிகமுகவர்களை அறிமுகப்படுத்துவது, அதற்கான சந்திப்புகளை சிலவேளைகளில் விருந்துகளையேற்படுத்துவது அவர்களின் தேவைகளில் ஒத்தாசைகள் புரிவதென்று இக்குழுமங்களின் சேவைகள் விரியும்.

ஒருவர் ஓரிடத்தில் ஒரு காலணிநிலையத்தை/ உணவகத்தை அமைக்க விரும்பினால் அதை அமைக்க உத்தேசித்திருக்கும் இடத்தைத்தாண்டி ஒரு நாளைக்கு எத்தனை சிற்றுந்துகள், விசையுந்துகள், மிதியுந்துகள், கடந்து செல்கின்றன, எத்தனை பாதசாரிகள் கடந்து செல்கிறார்கள் என்பதைக்கூட கணிப்பீடு செய்வார்களாம். அதுபோன்றவற்றுக்கும் செக்கிரேறியல் சேர்விஸ்களின் பங்களிப்பு/உதவிகள் தேவைப்படுமாம். அவ்வகை செக்கிரேறியல் குழுமங்களில் பணிபுரிபவர்களுக்கு பன்மொழியறிவும், *Management/Bookeeping/ Translations/interpretatons* போன்றவற்றிலும் விஷயங்களைக் காலவிரயமின்றி முடித்துக்கொடுக்கவல்ல சாதுரியமும் இருக்கவேண்டும் என்று விபரித்த ஹன்னா, தானும் அப்படியாக *Sophitha Consultings & Secretarial Service* எனும் குழுமத்தில் பணிபுரிவதாகவும் சொன்னாள். சில வியாபார ஒப்பந்தங்கள் வெற்றிகரமானதாக அமையும்போது தங்கள் ஒத்துழைப்புக்கான ஸ்பெஷல் போனஸாக விலை உயர்ந்த பரிசுகளைக்கூடச் சில வணிகர்கள் தருவார்களாம்.

ஒருமுறை *Berlin - Prenzlauerberg* இல் பலபிள்ளைகளையும் பங்குதாரர்களையுங்கொண்ட ஒரு ஜூதக்குடும்பத்துக்குச் சொந்தமான, காலிமனையாக இருந்த 4,600 சதுர மீட்டர் காணியை அவர்கள் குடும்பத்தின் ஒவ்வொருவருடனும் தனித்தனி சந்திப்புகளை ஏற்படுத்திப்பேசிச் சம்மதிக்கவைத்து *Cuxhaven* இன் ஒரு கட்டிட ஒப்பந்தக்குழுமத்துக்கு வாங்கிக்கொடுத்ததற்காக அக்குழுமம் தனிப்பட்டமுறையில் தனக்கு ஒரு இலக்ஷம் ஜெர்மன் மார்க்குகளைப் பரிசளித்ததாகச் சொன்னாள். வேண்டிய இடத்தில் தன்பணியை வெற்றிகரமாகச் சாதிக்க தான் ஒரு தேர்ந்த நடிகையைப்போல நடிக்கவும் வேண்டியுமிருக்குமாம். *USA (Nevada)* இல் *Las Vegas* போலவும் *Brazil* இன் *San Paulo* போலவும் *Spain* இன் *Ibiza* போலவும் ஜெர்மனியின் *Berlin* நகரத்தின் கேளிக்கைகள் மிகுந்த இரவுவாழ்க்கை உலகப்பிரசித்தமானது. பெர்லினுக்கு வியாபார நிமித்தமாக வருபவர்களும் உல்லாசிகளாக இருந்துவிட்டால் அவர்கள் விரும்பும் கிளப்புகள், பார்களன்ன கேளிக்கை ஸ்தலங்களுக்கெல்லாம் அவர்களை இட்டுச்செல்ல வேண்டியுமிருக்குமாம்.

ஒருநாள் தமது செக்கிறரேறியல் சேர்விஸில் ஹொட்லைன் போன் அடித்ததாம். ஜெர்மனியின் தென்பகுதியான *Baden-Wurttemberg* இன் *Stuttgart* நகரிலிருந்தொரு புதுவாடிக்கையாளர் பேசினாராம். அவருக்கான வியாபாரம்/ஒப்பந்தம் எல்லாம் பேசியபிறகு தயங்கித்தயங்கி மெதுவான தொனியில் கேட்டாராம் "டோக்கியோவில், லாவோஸிலெல்லாம் செகிரிடரீஸ் கட்டில்வரை ஒத்தாசையாக இருப்பார்கள், உங்க ஸ்டாஃப் எப்படி, அவர்களுடன் நான் செக்ஸ் வைத்துக்கொள்ளமுடியுமா..." என்றாராம். அதெல்லாம் தனிமனிதர் சமாச்சாரம், உங்களிடையேயான ஊடாட்டத்தைப் (*interaction*) பொறுத்த சாங்கியம், அதில் எல்லாம் மனேஜ்மெண்ட் தலையிடமுடியுமா" என்றதும் குதூகலத்தில் குதித்துப்போனை வைத்தாராம்.

ஒரு இரவு சுரங்கத்தொடரியில் என் எதிரில் அமர்ந்திருந்த என்னைவிடப் பத்துவயதாவது அதிகமாக இருக்கக்கூடிய பெண்ணொருத்தி என்னிடம் உரிமையெடுத்துக்கொண்டு "மெஸுயூ......... எதுவரை பயணம்" என்றாள்.

'*Moritplatz*' என்று நான் இறங்க வேண்டிய தரிப்பைச் சொன்னேன்.

"அப்படியே....... அதிலிறங்கி இருவரும் காற்றாட நடந்துபோய் ஒரு அருந்தகத்துக்குப் போவோமா..." என்றாள்.

"அதுவும் இன்ரெறெஸ்டிங்தான்...... ஆனால் அம்மணி மன்னிக்கணும், நான் அதுக்கான ஆயத்தத்தில் இன்றைக்கு இல்லையே" என்றேன்.

" மெஸுயூ நிரம்பக்கூச்சப்படறாப்பல........ *Then what do you do for Sex?*"
என்றாள் இயல்பாக.

"*Never with strangers* என்று சொல்லத்தான் வந்தது, எதுக்கு அவளை நோகடிப்பானென்று பிரயத்தனப்பட்டு விழுங்கிக்கொண்டேன், அன்றைக்கு சுரங்கத்தொடரியிலேற்பட்ட அனுபவத்தை ஹன்னாவிடம் விபரித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அழகான பெண்ணை அறைக்குள்ள உன் கட்டிலலயே படுக்க வைச்சிட்டு இரவு முழுவதும் இடைகழியில் மடுப்புமெத்தையில (விருந்தினர்களுக்கான) படுத்துத்தூங்கிய உன்னைப் பார்த்ததாலதான் உனக்கு உறுப்பில ஏதும் பிரச்சனையாக இருக்குமோவென்றுதான் முதல்ல யோசித்தன் சொறி..........

“எந்த ‘மெஸையா’வானாலும் அவர்களின் ‘ஈர-இரவுகளில்’ வந்தணைக்கும் மோகினிகளிடமிருந்து தப்பமுடியாது என்கிறது உளவியல். ”

“நான் ஒன்றும் விதிவிலக்கான ‘ஏலியன்’ கிடையாதே........ அவ்வப்போ புறவயமாகப் பார்த்து மோகித்த அப்ஸரஸ்கள் வரத்தான் செய்வார்கள் ”

“அப்போ அவர்களை என்ன செய்வே..... மோகிப்பியா போகிப்பியா விரட்டிவிடுவியா...”

“அது கனவுதானே...... எதுவும் என் கட்டுப்பாட்டிலிருக்காது, பலமாதிரியும் அமையும் மாம்”

“எப்படிமனிதா உன் காமத்தை ஒளித்து வைக்கிறே..... மனிதனுக்கு இயல்பாய் இருக்கிற காமத்தை ஒளித்துவைக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கு....... உன் உறுப்புகளிலே ஒன்றும் பிரச்சனையில்லையே.”

“உறுப்புகளுந்தேவைதான் மனுஷனுக்கு. ஆனால் காம இந்திரியங்களே என்னைக் கொண்டுலைக்க என் வழியைத்தீர்மானிக்க அனுமதிப்பதில்லை. அதால அவைதரும் உந்தல்கள், உசுப்பல்கள் இல்லாமலில்லை, ஆனால் எப்படியும் வென்றிடுவேனாக்கும்.”

“உன் தத்துவச்சரடுகளாலே என்னை வறுத்தெடுக்காத...... மெஸூயூ, ஆளைவிடு” என்றுவிட்டு போய்ப் படுத்துக்கொண்டாள். ஹன்னா தன் படுக்கையறையை ஒருபோதும் தாளிடுவதில்லை.

தேனருவி என்று அவளுக்குப்பெயர். நம்மவூர்ப்பெண் ஒருத்தி, சுற்றுவழியில் என் உறவுக்குள்ளும் வருவாள், அப்போது மொஸ்கோவில் படித்துக்கொண்டிருந்தாள். அது அவர்களுக்கு கோடைகால செமஸ்டர் விடுமுறை. விடுமுறை காலங்களில் அநேகமான மொஸ்கோ, பெலாறுஸ், கிறீமியாவில் படிக்கும் மாணவர்கள் லண்டன், மான்செஸ்டர், கிளாஸ்கோவுக்கோபோய் ஏதாவது கியோஸ்க்/பூக்கடைகளில் பதிப்பகங்களில் அருந்தகங்களில் உதவியாளராக சில்லறைவேலைகள் செய்து கொஞ்சம் பணம் சம்பாதிப்பார்கள். அப்படி அவளும் லண்டன் போகிறவழியில்த்தான் இங்கே என்னிடம் 2 நாட்கள் தங்கிச்செல்வதற்காக வந்தாள். என்னிடமிருந்த வவுச்சர் ஒன்றைக்கொண்டு நான்தான் அவளுக்கு லண்டன் சென்று திரும்பிவர தொடரிச்சீட்டும் எடுத்துக்கொடுத்தேன். அவள் லண்டனுக்குப்போக முதல்நாள் இரவு ஹன்னா நம் எல்லோருக்குமாக *Sea Foods* அனைத்தும்போட்டுப் பஸ்டா சமைத்து அசத்தினாள்.

“ஒருத்தி என்னிடம் வந்திட்டாள் என்பதற்காக அவளிடம் நான் செக்ஸ் வைப்பதா?”

“நீங்கள் செக்ஸ் வைத்துக்கொள்ளவில்லையென்பது எனக்குத்தெரியும்.”

“ஏன் காதுகளை என் அறைக்குள் எறிந்துவிட்டுத்தான் கிடந்தியா?”

“உன் தனிப்பட்ட வாழ்க்கைக்குள் புகுந்துபார்க்கிறேன் என்று நினைக்காதே..... பக்கத்து அறைக்குள் செக்ஸ் நடந்தால் குறைந்தபக்ஷம் பூனைகளின் அனுங்கல்போல ஹஸ்கியாய்க் கொஞ்சம் கீசல்கள், சிணுங்கல்களாவது வந்திருந்திருக்குமே, அப்படி ஒன்றும் வராததுதான் அதிசயமாயிருந்திச்சு.”

“கிடைக்கிற பெண்களோடகூட செக்ஸ் வைச்சுக்கிறேல்லயென்று ஏதேனும் விரதமா.......... நீ தியோலொஜிபடிச்சு ஏதாவதொரு மிஷன்ல போய்ச்சேர்ந்திருக்கலாம், விரைவில பிஷொப்பாகியிருப்பாய்.”

“ம்ம்ம்..... செய்திருக்கலாம், தோணலையே........”
“இப்போதும் லேட் ஆகல்ல.”

“ம்ம்ம்........ சிந்திக்கிறேன்.”

“திருமணம் என்பது ஒவ்வொருவருக்கும் முக்கியமான விடயமல்லவா?”

“அவரவருக்கு இருக்கலாம், ஆனால் ஒவ்வொருவருக்கும் என்பது பொருத்தமாக இல்லை.”

“உன்னிடம் ஈடுபாடுகொண்டுள்ள ஒருபெண் இதைக்கேட்டிருந்தாலும் உனது பதில் இதுதானா?”

“நான் வித்தியாசமான பதிலைச்சொல்லியிருக்கக்கூடிய பெண்கள் எவரையும் இதுவரையில் சந்திக்கலையே.”
“நிஜத்தைச்சொல்லு நீ எவள்மீதாவது எப்போதாவது காதல்வசப்பட்டிருக்கிறாயா”

“சும்மா கொஞ்சம் அவ்வப்போ ஆசைப்பட்டிருக்கேன், அதைத்தான் காதல் என்று தீர்மானித்து ஒருபோதும் ஏமாந்ததில்லை.”

“நான் காதலிக்கக்கூடியமாதிரிப்பெண் எவளையும் நான் இதுவரை சந்திக்கல்ல அதேபோல் நான் சந்தித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவளுக்கும் நான் காதலிக்க லாயக்கற்றவனாகவும் பட்டிருக்கலாமில்லையா...''

"அவனவன் பெண் வாசம்பிடித்தாலே போதுமென்று தவிக்கிறான் ராத்திரிகளில, குளிரில, தனிமையிலகூட உனக்கு ஒரு பெண்கூட இருந்தால் நல்லாயிருக்குமேயென்று தோணாதா....''

"நீ தசை ஆசையைச் சொல்றியா.........''

"அது தசையை உரசிறது மட்டுமில்லே, அதுக்கு மேலயுமிருக்கு, சரி இப்போதைக்கான அர்த்தப்படுத்தல்ல தசை ஆசை என்றேவைப்போம்.''

"அதெல்லாம் தாராளமாகவே உண்டு. இல்லேன்னா...... அது படைப்புத் தவறென்றாகிடும்.''

"அப்போ வாழ்வில் காதல் திருமணம் இவை எதுக்கும் முக்கியத்துவமே இல்லையா''

"உனக்கு எங்களுடைய சமூகம்பற்றிக் குறைவாகத்தான் தெரியும், அங்கே ஒருவன் காதலித்து அதைக்கல்யாணம் வரையில் நகர்த்தி வருவதற்கிடையில் பல தடைகளைத்தாண்டி வரவேண்டும். புரியற மாதிரி மேலோட்டமாய்ச் சொல்றேன், கஷ்டமாயிருந்தால் வேறொரு சமயத்தில வைச்சுக்கலாம்''

"மேலோட்டமாய்த்தான் கொஞ்சம் சொல்லேன், புரிய முயற்சிக்கிறேன்.''

"முதல்ல... அங்கே ஜாதியென்று ஒரு பூதமிருக்கு, அதையடுத்து சமூகநிலை, உன் பாஷையில 'வர்க்கம்' எளிமையா சோஷியல் ஸ்டேடஸ் என்று இப்போதைக்கு வைச்சுப்போம், அழகு கவர்ச்சி கம்பீரம் தாண்டி முன் சொன்னதையெல்லாம் கணித்துத்தான் ஒரு பெண் காதலிக்கவே சம்மதிப்பா, உடன்படுவா.

சிலர் காதலிப்பதில் காதலிக்கப்படுவதில் சந்தோஷம் கிடைக்கிறது என்கிறார்கள். சிலருக்கு அது ஒரு கண்ணாம்பூச்சி விளையாட்டாகவும் சமயத்தில் கால்க்கட்டாகவும் படுகிறது.

20 வயதில உதைபந்தைத்தூக்கிக்கொண்டு ஓடறவன் 60 வயதிலயும் அப்படியே ஓடிடமுடியுமா... எல்லாம் ஒரு சீசனுக்கேற்ற விளையாட்டுக்கள்போலதான் காதலும்.

உடம்பு ஓயும் கட்டத்தில் இருக்கையில "அட இது துடிப்பின் உச்சத்தில் இருக்கும்போதே இதைவைச்சு இன்னுங்கொஞ்சம் விளையாடியிருக்கலாமே'' என்கிற எண்ணம் வருமாம்.''

"நீ ஒரு உலோகாயதவாதியில்லை என்று தெரியும், ஆனால் ஒரு துறவிமாதிரிப்பேசற, யாருக்காகவோ ஒரு சாதுவின் வாழ்வை வாழுற ஒரு பாவனை உங்கிட்ட இருக்கு... யாருக்கோ அதிர்ச்சி அல்லது வியப்பு மதிப்பீட்டைத் தரவேண்டுமென்று வாழுறமாதிரியும்படுது. உனது தமிழ்ச்சமூகம் மூடுண்டது, கட்டுப்பாடுகள், ஜாதிகளன்ன வரையறைகள் மிகுந்தது என்றெல்லாம் அப்பப்போ பூச்சாண்டியும் காட்டுறே... ஆனால் அவை எதையும் கட்டுடைத்து வெளியேறும் தற்றுணிபில்லாத 'கோழை'யாகத்தான் நீயும் தெரிகிறாய். நீ ஒரு 'இடியட்' டாகவும் இல்லையே. (சமூக Norms) பொதுநிகரநிலைகளை விடுத்துவிலகி நடக்கக்கூடிய கிளர்சிக்காரனாகவும் இல்லை. அப்போ நீ எந்த உயிரினத்தில் சேர்த்தி...'' என்றாள்.

ஹன்னா உணர்ச்சிவசப்படும்போது அவளது லேசான மாறுகண்கள் (நடிகைகளில் அமலா போல், ரஞ்ஜினிக்கு இருப்பதைப்போல்) துலக்கமாகப் புலப்படும். இப்போதும் அவை அழகாகப்புலப்பட்டன. வேண்டுமென்றே மார்புகளை முன்தள்ளி, உடம்பை எஸ்ஸாய் வளைத்து ஒரு சிருங்காரக்கரணம் (செக்ஸிபோஸ்) தந்து விட்டுத் தன் அறைக்குள் போனாள்.

"வாழ்க்கை முழுவதும் மறந்துபோகாதபடி அத்தனை பிணக்குகளையும் பிரச்சனைகளையும் அவளாகத் தந்துகொண்டிருப்பாள், கவனம்'' என்று பெண்கள்பற்றி தத்துவக்கவிஞர் ஷினிசி சூஸுகியின் வரிகள் நினைவில் வந்தன.

நான் போய்த்தூங்கிவிட்டேன். என் அறைக்குள் ஹன்னாவுக்குப் பிரீதியான *Black Opium Perfume* வாசனாதியின் வாசம் வந்ததைப் போலிருந்தது, "உனக்கான பெண் நானில்லையென்று நினைக்கிறாய். ராஸ்கல்'' என்று அவள் சொல்வதும் கேட்டது. பின் கட்டிலின் விளிம்பில் யாரோ அமர்வதைப்போலொரு மென்னதிர்வலை படர்வதான உணர்வு. திடுக்கிட்டெழுந்து பார்த்தேன், அப்படி எவரது சலனத்தையும் காணேன், அனைத்தும் வெறும் பிரமை.

அன்று அதிகாலையில் எனக்கும் ஒரு கோஃபியை நீட்டியபடி கேட்டாள்:

"மெஸுயூ.... இந்த மே 06ந்தேதி உனக்குப் பணியில விடுப்பு எடுக்க முடியுமா.....?''
"அடடா உனக்கில்லாத விடுப்பா. அன்று என்ன விஷேசமோ......''

"அன்று எனக்கும் லியோனுக்கும் பதிவுத்திருமணம், என்பக்கக் கல்யாண சாட்சி நீதான். "
நான் லியோனை யாரென்று உசாவவில்லை, அன்று ஹன்னாவை வீட்டின் பக்கக்கதவால் அணைத்தபடி டிராமில் கூட்டிச் சென்றவனாகவோ, இல்லை வேறொருவனாகவோ இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மூலம்: பியசீலி விஜேமான்ன | தமிழில்: லறீனா அப்துல் ஹக்

# நோனாச்சி

கூட்டுறவுச்சங்க விற்பனை உதவியாளினியிடம் தேவையான பொருட்களின் அளவை ஒவ்வொன்றாகச் சொல்லி வாங்கிக்கொண்டிருந்தேன். திடீரென நன்கு பழக்கமான குரலில், 'மேடம்' என்ற அழைப்பைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அங்கே உடபேராதனை ஜயவதி நின்றிருந்தாள்.

"மேடம், அந்த நோனாச்சி செத்துப் போய்ட்டாவாம், பாவம்!" ஜயவதி என் கையைப் பற்றிக் கொண்டபடி சொன்னாள். அந்தச் செய்தி அதுவரை நான் செய்து கொண்டிருந்த வேலையில் இருந்து என் கவனத்தை வேறுபுறமாகக் கலைத்துப் போட்டுவிட்டது. விற்பனை உதவியாளினியோ வேறொரு வாடிக்கையாளரைக் கவனிக்கலானாள். என் எண்ணங்கள் கடந்த காலத்தை நோக்கி விரைந்தன. அச்சோகச் செய்தி என்னுள் கவலையுணர்வைத் தோற்றுவித்துவிட்டது. நோனாச்சி மீண்டும் என்னிடம் வருவாள் என்கிற என் எதிர்பார்ப்பையும் சுக்குநூறாக்கிவிட்டது. என்னிடம் இருந்து போகும்போது நல்ல ஆரோக்கியமாக இருந்த பொம்புளை! ஐயோ! என்ன நடந்திருக்கும்?
"போன மாசம்தான்... விஜே தான் என்னிட்ட சொன்னார். உங்களிட்ட வந்து சொல்லத்தான் இருந்தேன் மேடம். உங்களிட்ட இருந்து போய் ஒரு... ஆறு மாசமாச்சும் இருக்காது இல்லையா? அண்டைக்குக்கூட, 'உங்குங், நீ போயேன். நான் கொஞ்ச நாளில் வாறன்' எண்டு ஜெயகுமார்கிட்ட சொல்லுறது எனக்குக் கேட்டிச்சு. அவன் அவளை 'நொய் நொய்' எண்டு ஏசிக்கிட்டுத்தான் இருந்தான். 'நோனாச்சி, மகனோட வீட்டுக்குப் போகச் சொல்லி மேடம் சொல்லுறாங்க' எண்டு நான் சொல்லவும் தான் போறதுக்கே ஆயத்தமானா. உங்களுக்கிட்ட இருந்த அவட ஐடி கார்டையும் பேங்க் புத்தகத்தையும் குடுத்ததுக்குப் பொறவுதானே தூக்கியடிச்சிட்டு போறது போல காம்பராவுக்குப் போய் அழுதழுது அவட தட்டுமுட்டுச் சாமானையெல்லாம் தேடித்தேடிக் கட்டினா." ஜயவதி அவ்விதம் சொன்னபோது என் மனக்கவலையோடு பச்சாத்தாபமும் சேர்ந்துகொண்டது.



"அப்பிடிப் போனதுக்குப் பொறவு நோனாச்சிக்குத் தன்பாட்டுல இருக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவுமில்லையாம். சின்னவன் ஒருத்தன இடுப்புல இடுக்கிக்கிட்டு மரக்கறித் தோட்டங்கள்ல வேலை செய்யிறதையும், இருமி இருமி கூனிக் குறுகி தலைக்கி மேல மூட்டையத் தூக்கிக்கிட்டு பள்ளத்துல இருந்து மேடேறி ரோட்டுக்கு வாறதையும் விஜே கண்டிருக்கிறார். அவவுக்கு நியுமோனியா வந்துச்சாம் எண்டு த்ரீவீல்கார மகன் விஜேக்கு சொல்லி இருக்கான். மேடம், நீங்க பேங்க் புத்தகத்துல சல்லி போட்டதுக்கென்ன, அதனால நோனாச்சிக்கு எந்தப் பிரயோசனமும் இல்ல. கரைச்சல் பொறுக்கேலாம அவன்களுக்கு அந்தக் காசையும் எடுத்துக் கொடுத்திருக்கா.''

விஜே ஜயவதியின் புருஷன். அவன் தலவாக்கலையில் லொரி ட்ரைவராக இருக்கிறான். நோனாச்சியின் மரணத்தை விரைவுபடுத்தியதில் எனக்கும் ஏதோ ஒருவகையில் பங்கிருந்ததாக உணர்ந்தேன். 'மகனோடு போ' என்று நான் ஜயவதி ஊடாக அவளிடம் முழுமனதோடு சொல்லி விடவில்லை. தன்னோடு வராட்டால் 'இனிச் செத்தாலும் பார்க்க மாட்டேன்' என்ற அவளது மகனுடைய மிரட்டல் ஒரு குத்துக்கதை போல என்னைத் தாக்கியது. அவளுடைய பணிவிடைகளை இழந்ததால் எனக்கேற்பட்ட இழப்பை விட அவள் இல்லாததால் எனக்கேற்பட்ட வெறுமை உணர்வு என்னை வாட்டியெடுத்தது. நோனாச்சி என்மீது காட்டிய நேசத்துக்கும் கரிசனைக்கும் மட்டுமின்றி அவளது வாய் ஓயாத பேச்சுக்கும் நான் எந்தளவு தூரம் பழக்கப்பட்டுப் போயிருந்தேன் என்றால், அவள் என்னை விட்டுப் போனபின் என்னால் என் மனதை ஒருமுகப்படுத்தி எந்தவொரு வேலையைச் செய்யவும் கஷ்டமாக இருந்தது. நீண்ட காலத்தின் பின்னர் சமன் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பி இருந்ததாலேயே என்னுடைய மனக்கவலை பெருமளவு குறைந்தது.

என்னுடைய வீட்டு வேலைகளுக்காக விஜே தான் நோனாச்சியைத் தேடித் தந்தான். சுமார் மூன்று வருட காலமாக என் வீட்டில் வேலைக்கு இருந்த கருணாவின் அம்மாவுக்குத் திடீரென்று பக்கவாதம் ஏற்பட்டதால், அவள் விலகிச் செல்ல நேர்ந்தது. அக்காலத்தில் சுமார் ஒருவருடகாலப் புலமைப்பரிசில் ஒன்று கிடைத்திருந்ததால், சமன் வெளிநாட்டில் இருந்தார். வீட்டு வேலைக்கு ஒரு ஆளைத் தேடித் தருமாறு ஜயவதி மூலம் விஜேக்கு அறிவித்து சுமார் இரு வாரங்களின் பின்னர் ஜயவதி நோனாச்சியை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்திருந்தாள். அந்த மெலிந்த வயோதிபப் பெண்ணைக் கண்டதுமே என் எதிர்பார்ப்பு பொய்த்துப் போன ஒருணர்வே எனக்குள் எழுந்தது. 'சரி, எனக்குத் தனிக்குத் துணையாக இருக்கவாச்சும் நல்லதுதானே!' என்று என் மனதைத் தேற்றிக் கொண்டேன்.

''விஜே சொன்னாரு... நாலுமே மகன்கள் தானாம்... யாருமே கவனிக்கிறதில்லையாம்... இண்டைக்குக் காலமையே விஜே போய் பஸ்ஸுல கூட்டிக்கிட்டு வந்தாரு. வந்த உடனேயே விஜே திரும்ப மாத்தளைக்குப் போய்ட்டாரு. நான் நோனாச்சிய விடிஞ்சதும் கூட்டிக்கிட்டு வரத்தான் இருந்தேன். இரவு காத்துக்கு பிலாக்கொப்பு ஒண்டு வீட்டுக்கு மேல சாய்ஞ்சிடிச்சி. நானும் நோனாச்சியும் சேர்ந்து தான் அதை இழுத்துக் கீழே போட்டோம். நோனாச்சி எண்டா மகன்களைப்பற்றி எந்தக் குறையும் சொல்லல்ல. தன் கையால் எவ்வளவு சரி சம்பாதிச்சி யாருக்கும் பாரமில்லாம இருக்கணும் எண்டுதான் ஆச்சி நினைக்கிறா. வயசானதால தோட்டத்துல வேலையோ கூலி வேலையோ யாரும் கொடுக்கிறதில்லையாம். மெடம், நீங்க செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் நோனாச்சிக்கிட்ட சொல்லுங்களேன்... நான் ஸ்கூல்ல இருந்து மகனை எடுக்கப் போகணும்...'' என்று சொல்லியவளாக ஜயவதி சட்டென்று கிளம்பிப் போய்விட்டாள்.

ஊதிப் புடைத்திருந்த பொலிதீன் பையொன்றைக் கையில் தூக்கிக்கொண்டு அப்பாவியாக என்னையே பார்த்தபடி இருந்த நோனாச்சியை நான் குசினிக்கு அழைத்துப் போனேன். அவள் அணிந்திருந்த 'ஒஸரி' யின் நிறம் மங்கிப் போயிருந்தது. அவள் அணிந்திருந்த சட்டையின் நிறம் சேலையின் நிறத்தோடு பொருந்தவில்லை. அவள் சிங்களமா, தமிழா? அவளின் உச்சரிப்பில் ஒருவிதத் தமிழ்ச் சாயலும் தொனித்தது. அவளுக்கு 'ஹ' உச்சரிப்பு வரவில்லை. நான் அவளுக்கு ஏதாவது சொல்கையில், அதைச் சிங்களத்தில் ஆமோதிக்கும் போது, ''அரி அரி (சரி, சரி) நோனா'' என்றே சொன்னாள்.

நான் அவளுடைய வயதைக் கேட்டபோது, ''அ(ஹ) தலிஸ் பாய்'' – நாற்பத்தைந்து – என்று சொன்னவளாக தன்னுடைய அடையாள அட்டையை என்னிடம் தந்தாள். அவளின் பெயர் பபாநோனா. பிறந்த தினத்தின்படி பார்த்தால், அவளுக்கு ஐம்பத்தி ஒன்பது வயது. ஆனால், அவளுடைய தோற்றம் அறுபத்தைந்து அல்லது அறுபத்தெட்டு வயதை ஒத்திருந்தது. முகவரி, 'லைன் அறை 08, ஹொலிரூட் எஸ்டேட், தலவாக்கலை' என்பதாக இருந்தது. லயம்?

''நோனாச்சி தமிழா?''

நான் கேட்ட கேள்வி அனாவசியமானது என்பதை உணர்த்துமாப்போல அவள் கையால் சைகை செய்தாள். ''புத்தாலம அ(ஹ)த்தரய். ஒக்கொம பெந்தலா. ஒ(ஹொ) ந்தட்ட இன்னவா –நாலு பேருமே மகனுங்க. எல்லாரும் கலியாணம் கட்டி நல்லா இருக்காங்க.''

நான் கேட்காத கேள்வி ஒன்றுக்கு நோனாச்சியிடம் இருந்து பதில் வந்தது. நான் அவளுக்குக் குசினியையும், பணியாள் அறை, பணியாள் மலசலகூடம் என்பவற்றையும் காட்டினேன். செய்ய வேண்டிய வேலைகளை விளக்கும் போதே, அவள் சம்பளமாக எவ்வளவு எதிர்பார்க்கிறாளாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருக்கும் என்றறியும் ஆர்வம் எனக்கேற்பட்டிருந்தது. ''இப்பெல்லாம் தோட்டத்துப் பொம்புளயள் கூடச் சம்பளம் கேக்குறாங்க'' என்று என் தோழி ஒருத்தி ஒருமுறை சொன்னது நினைவுக்கு வந்தது. இந்தப் பலவீனமான மனுசியால் தான் எதிர்பார்க்கும் 'கூடச்' சம்பளத்துக்கு ஏற்ற மாதிரி வேலை செய்யக்கூடியதாய் இருக்குமா? காலதாமதம் செய்யாமல் இப்போதே சம்பளத்தைப் பற்றி ஒரு தீர்மானத்துக்கு வருவதுதான் நல்லது என்று கருதினேன். கருணாவுக்கு நான் மாதாந்தம் மூவாயிரம் ரூபாய்கள் கொடுத்து வந்தேன். என் மாதாந்த வருமானத்தைப் பொருத்தவரையில் அதைவிட அதிகச் சம்பளமொன்றைக் கொடுப்பது கஷ்டம். தண்ணீர், மின்சார, தொலைபேசிக் கட்டணங்கள், வாகனப் பராமரிப்புத் தொகை எல்லாம் சேர்ந்து தலைக்குள் நெளிகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நோனாச்சி, சம்பளம் எவ்வளவெண்டு...'' என என் கேள்வியை முடிப்பதற்கு முன்பே,

'பாத்துக் குடுங்கம்மா. அது அவ்வளவு முக்கியமில்லை' என்பதாகவோ, 'அதப் பெறகு பாத்துக்கேலாதா' என்பதைப் போன்றோ கையால் சைகை செய்தவளாக அவ்விடத்தை விட்டகன்றாள்.
நோனாச்சி அறைக்குப் போய் சீத்தைத் துண்டொன்றைக் கட்டி, சட்டை அணிந்துகொண்டு திரும்ப வந்தாள். நான் அவளுக்கு சோஸ்பேன், பீங்கான் – கோப்பைகள், மிளகாய் – மசாலா தூள், சீனி, தேயிலை, அரிசி, பருப்பு, மா ஆகியவற்றை வைத்திருக்கும் இடங்களையெல்லாம் காட்டிக் கொடுத்தேன். இன்னும் போதிய நேரம் இருந்த போதிலும், இரவுணவைச் செய்வதற்கான அறிவுறுத்தல்களையும் கொடுத்து விட்டேன். நான் அடிக்கடி அங்கே வந்து எட்டிப் பார்த்து அவளுக்கு இடையூறு செய்யாமல், அவளாகவே நிம்மதியாக அந்தச் சூழலுக்குப் பழக்கப்படுவதற்கான அவகாசத்தை வழங்குவதுதான் என் நோக்கமாயிருந்தது.

நான் என்னுடைய படுக்கையறைக்குப் போய் கட்டில் தலைமாட்டில் சாய்ந்தமர்ந்த வண்ணம் புத்தகமொன்றை வாசிக்கத் தொடங்கினேன். சற்றைக்கெல்லாம் குசினியில் இருந்து தண்ணீர் கொட்டும் சத்தமும், க்ரீஸ்... க்ரீஸ் ... என்ற சத்தத்தோடு நிலத்தை 'மொப்' செய்யும் சத்தமும் வரவே புத்தகத்தில் பதிந்திருந்த என்னுடைய கவனம் கலைந்து ஆச்சரியத்தோடு குசினிப் பக்கம் ஓடிற்று. ஆச்சரியத்துக்கான காரணம், 'மொப்' பண்ணுவதல்ல; நோனாச்சி யாரோடோ பேசுவது கேட்டதுதான். 'ஜயவதி மறுபடியும் வந்துவிட்டாளோ?' நான் மெல்லப் போய் நோனாச்சிக்குத் தெரியாமல் எட்டிப் பார்த்தேன். அங்கே நோனாச்சியைத் தவிர வேறு யாருமில்லை.

நோனாச்சி குழாயில் இருந்து வாளிக்குத் தண்ணீர் நிரப்பி நிலத்தில் ஊற்றி, இளம் பெண்ணொருத்தியின் சுறுசுறுப்போடு தேய்த்துக் கழுவியபடி தனியே கதைத்துக் கொண்டிருந்தாள். கோபமடையும் போதோ என்னவோ அவளின் குரலின் தொனி அவ்வப்போது உயர்ந்தது. குசினியைத் துப்புரவாக வைத்துக் கொள்ளாமைக்கு முன்னர் இருந்த வேலைக்காரிக்கு அவள் திட்டுகிறாளாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. கருணா போன பின்னர் குசினியைப் பாவித்தவள் நான்தான் என்பதால் அவளுடைய ஏச்சு என்னைத் தாக்கியது. நிலத்தை 'மொப்' பண்ணுவது எப்படிப் போனாலும் சரியாக கூட்டிப் பெருக்கக்கூட எனக்குப் போதிய ஓய்வு இருக்கவில்லை. பின்வாசல் கதவால் கானை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த சேற்று நீரைக் கண்டபோது எனக்குள் ஒருவித வெட்க உணர்வு தோன்றியது. தண்ணீரைக் கொட்டி 'மொப்' செய்யப்படும் சத்தத்தினால் பொருள் கொள்ளக்கூடிய எதுவும் என் காதில் விழவில்லை. ஸ்டோர், உக்குங், அழகான, இருக்கு, கள்ளு, மாடு என்பன போன்ற சில சொற்களும் அவனுக, இவனுக என்கிற படர்க்கைப் பன்மையில் அமைந்த உயர்திணைச் சொற்களும் மட்டும் சிலசமயம் தெளிவாகக் கேட்டன. அவள் பன்மைச் சொற்களில் சுட்டுவதெல்லாம் என்னைப் பற்றியல்ல என்பது மட்டும் எனக்குத் தெளிவாயிற்று. அவள் யாரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள் என்பதைக் குறித்தெல்லாம் நான் அவளிடம் எதுவும் கேட்கவில்லை. நான் நோனாச்சியோடு தொடர்ச்சியாக உரையாடத் தொடங்கியது இரவுணவின் பின்னர் தான். பொதுவாக நான் இரவுணவின் பின்னர் சுமார் ஒரு மணி நேரம் டிவி பார்ப்பது வழக்கம். நோனாச்சி சமையலறையை ஒழுங்குபடுத்தி விட்டு கை, கால், முகம் கழுவிக்கொண்டு வந்து என் காலடியருகே தரையில் உட்கார்ந்து கொள்வாள். அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் கதிரையைக் கொண்டு வந்து உட்காருமாறு நான் சொன்னாலும், தரையில் அமர்வதில்தான் அவளுக்கு அதிக விருப்பம் இருந்தது. டிவி நிகழ்ச்சிகளைப் பற்றி அவளுக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. ஆரம்பத்தில் ஓரிரு நாட்கள் நான் தொலைக்காட்சியை அணைத்து விட்டு நோனாச்சியின் குடும்ப விவரங்களைப் பற்றி விசாரித்தேன். அவள் தன்னுடைய கணவனை அப்பா என்றுதான் குறிப்பிட்டாள். அவனின் பெயர் நாதன். ''ஆ! தமிழா?'' என்று என்னை அறியாமலேயே அச்சொற்கள் என் வாயிலிருந்து வெளிப்பட்டு விட்டன. எனக்கு அது முக்கியமானதாக இருந்தாலும் நோனாச்சிக்கு அது எந்த வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாக இருக்கவே இல்லை.

''நீங்க அவரப் பாக்கணுமே! அவரு என்னப் போல இல்லைங்கம்மா. பாக்க ரெம்ப நல்லாருப்பாரு. ஸ்டோருல தொரை அவரோட ரெம்ப எரக்கம். களவுபொய் இல்ல. ஏமாத்து வேல இல்ல.''

என்னுடைய கேள்விக்கு அவள் அப்படித்தான் பதிலளித்தாள்.

''உன்னை அன்பா பார்த்துக்கிட்டாரா?''

''இல்லாட்டி? முந்தி லயத்துப் பொம்பளைங்களுக்கு அம்புட்டுப் பொறாம. ஐயோ எனக்குத் தாங்கேலாத துக்கம் நோனா. நா மாரியம்மா கோயில்ல பூசையும் செஞ்சி வாறேன்...''

''சுகமில்லாம இருந்து தான் செத்தாரா?''

''இல்ல நோனா. நல்ல சொகத்தோடு தா இருந்தாரு. வேலை வுட்டு வாற வழியில எக்சிடென்ட் ஆயிரிச்சி. அவரு வாற வரைக்கும் நாங்க காத்துக்கிட்டிருந்தோம். இருக்கோம்... இருக்கோம்... வரவேயில்ல. மறுநாள் காலமை தான் தெரியும். எல்லா மாசமும் சம்பளக் காச மொத்தமா எங்கையில குடுத்திடுவாரு. அட்வான்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தாலும் எங்கிட்டத்தான் தருவாரு. தங்கமான மனுசன்.'' நோனாச்சி அவ்வப்போது சொன்ன தகவல்களின்படி அவளுடைய மூத்த மகன் ஜேம்ஸ் கட்டட வேலை, தச்சுவேலை, பைப் வேலை என்று எல்லா வேலைகளும் தெரிந்த ஒருவன். அவனின் மனைவி லீலா. அவர்களுக்கு ஒரு மகனும் மூன்று மகள்களும் உள்ளனர். அந்தப் பிள்ளைகள் படிப்பில் கெட்டிக்காரர்கள். இரண்டாவது மகன் மையா. அவனின் முழுப் பெயரோ சரியான பெயரோ அவளுக்கு நினைவில்லை. மையா டவுனில் ஒரு கடையில் வேலை செய்து வருகிறான். அவனின் மனைவி லட்சுமி கொழுந்து பறிக்கச் செல்வாள். அந்தத் தம்பதிக்கு இரண்டு மகன்மார் உள்ளனர். ஆச்சியின் மூன்றாவது மகன் ரஞ்சனுக்கு ஆட்டோ ஒன்று இருக்கிறது. ரஞ்சன் சந்திராவின் வீட்டில்தான் வசிக்கிறான். அந்த வீட்டில் சந்திராவின் அம்மா, அப்பா, பாட்டி, அக்கா, இரு தங்கைகள் என எல்லோரும் வசிக்கிறார்கள். ரஞ்சனுக்கு சுட்டித்தனமுள்ள இரு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். நோனாச்சி நாதனோடு வாழ்ந்த லயன் வீட்டில் அதாவது, எட்டாவது வீட்டில் கடைக்குட்டி உக்குங் மஹத்தையா இருக்கிறான். அவனின் மனைவி ரம்யா. உக்குங் மஹத்தயா ஒலிருவத்தையில் (அந்த முகவரியில் இருந்த ஹொலிரூட் எஸ்டேட் ஆக இருக்கலாம்) ஸ்டோரில் வேலை பார்க்கிறான். அந்தத் தம்பதிக்கு ஒரு மகனும் மகளும் இருக்கிறார்கள். பேரப்பிள்ளைகள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று பார்ப்பதற்கு கைவிரல்களை மடக்கி மடக்கி நோனாச்சி சிங்களத்திலும் தமிழிலும் மாறி மாறிக் கணக்குப் பார்த்த போதிலும் கணக்கு சரியாக வரவே இல்லை.

''சரி பரவாயில்லை. மகன்மாரும் பேரப்பிள்ளைகளும் நிறையப் பேர் இருக்கிறாங்க தானே? நோனாச்சி, நீ சரியான அதிர்ஷ்டக்காரி தான். மகன்மார் உன்னோட அன்பா இருக்கிறாங்க தானே?'' என்று நான் கேட்டபோது பதில் அளிப்பதற்கு முன் அவள் ஒரு கணம் தாமதித்தாள். ''அப்பா! எல்லாரும் உசுரு மாதிரி. வீட்டு வேலைக்குப் போகவும் விடமாட்டாய்ங்க. எனக்குத்தான் சும்மா இருக்கேலாது. பிள்ளைங்களுக்குக் கரைச்சல் குடுக்குறது சரி இல்ல தானே? எனக்கு இந்தக் கைகாலுல சீவன் இருக்கிற வரைக்குமாவது...'' அவள் தன்னுடைய குச்சிக் கைகளைத் தூக்கிச் சிரித்தபடி சொன்னாள்.

''என்ட மகன்மார் கெட்டிக்காரனுக. அழகாப் பாட்டுப் பாடுவானுக. எஸ்டேட்டுல இருக்கிற எல்லாரும் மிச்சம் எரக்கம். என்னோட மகனுங்களுக்கு அந்தா... அதப்போல ஐஸ் பெட்டி இருக்கு. டிவி இருக்கு. டெலிபோன் இருக்கு. பெரியவனுக்குத் தனி வீடும் இருக்கு. பெரிய வீடு. கரண்ட் இருக்கு. எல்லா மகன்மாரும் எனக்கு ஸாரி வாங்கித் தருவானுங்க. நாலு சூட்கேஸ் நெறைய புதிய உடுப்பு...'' அவள் சொன்னவற்றிலிருந்து அவளுடைய மகன்களுக்குக் காசு பணத்தில் எந்தக் குறையும் இல்லை என்றும், மகன்மாரும் மருமகள்மாரும் அவளை அன்போடு பராமரிக்கிறார்கள் என்றும் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. ஆரம்ப நாட்கள் ஓரிரண்டில் நோனாச்சியுடனான வம்பளப்பில் நள்ளிரவு வரை சுவாரசியமாகக் கழிந்தது. புத்தக வாசிப்பு வேலைகள் எதுவும் செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

மூன்றாவது நாள் இரவுணவு உண்ட பின்பு நான் என்னுடைய படிப்பறைக்குள் நுழைந்து நூலகத்திலிருந்து கொண்டு வந்து வைத்திருந்த புத்தகம் ஒன்றை வாசித்து முடிப்பதில் முனைந்தேன். நோனாச்சி கதவருகில் நின்றபடி கண்ணும் வாயும் விரிய என்னுடைய புத்தக ராக்கையைப் பார்த்துக்கொண்டே இருப்பதை நான் காணும் போது புத்தகம் படிக்கத் தொடங்கி சுமார் ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். கதவுக்கு நேரே தெரியும் விதத்தில் இருந்த புத்தக ராக்கையில் அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் மற்றும் வேறுசில பெரிய புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நான் புத்தகம் வாசிப்பதை நிறுத்திவிட்டு நோனாச்சியை ஏறிட்டேன். ''அப்பனே! தெய்வமே! முருகா! மாரியம்மனின் கிருபை! புத்தரின் ஆசீர்வாதம் எங்கட நோனாவுக்குக் கிடைக்கட்டும்! நோனா நீங்க பெரிய உத்தியோகம் ஒண்டு பாக்குறீங்க எண்டு ஜயவதி சொன்னா. அது டீச்சர் உத்தியோகம் இல்லையா?''

''டீச்சர் உத்தியோகம் தான். பெரிய பிள்ளைகளுக்கு... நாட்டுல இருக்கிற ஆகப் பெரிய ஸ்கூல் அது. அதுல படிச்சவங்க தான் அரசாங்கத்துல பெரிய பெரிய உத்தியோகத்துக்கெல்லாம் போவாங்க.''

''ஹ்ம்ம்...'' அவள் ஆச்சரியம் மிகுந்த தொனியில் அதைச் சொன்னாள்.

''எங்கட நோனாவுக்கு முக்கோடி தேவ தேவியர்களும் ஆசீர்வாதம் செய்யட்டும்!'' என்று சொல்லி நான் இருந்த திசையை நோக்கிக் கைகளால் ஆசிர்வதித்துவிட்டு அவள் கதவருகில் இருந்து அகன்று சென்றாள். ஓரிரு நிமிடங்கள் கழிய முன்னர் நோனாச்சி தனியே ஏதேதோ பேசிக்கொண்டிருக்கும் சத்தம் படிப்பறைக்கு முன்னால் இருந்த கொரிடோர் பக்கமிருந்து என் காதில் விழுந்தது. ''நோனாச்சி, நீ போய்த் தூங்கு.'' நான் சொன்னேன். அவள் திடுக்கிட்டு என்னைப் பார்த்தாள்.

''இல்லை... ஏலாது.'' அவள் வாயாலும் கையாலும் பதிலளித்தாள். ''நோனா, நீங்க கண்முழிச்சி பொஸ்தக வேலை பாக்குறீங்க. நீங்க தூங்கப் போன பெறவு நானும் தூங்குறேன்.''

''எனக்கு அப்பிடி ஒண்டும் தனி இல்லை'' என்று எவ்வளவுதான் சொன்ன போதிலும் அவள் அவ்விடத்திலிருந்து அசையவில்லை. என்னைப் பற்றித்தான் ஏதாவது சொல்லிக் கொண்டிருக்கிறாளோ என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்தினால் நான் கதவு மூலையிலிருந்து அவளுடைய பேச்சுக்குக் காது கூர்ந்தேன். என்னிடம் தனது குடும்ப விபரங்களைச் சொல்லும் போது அவளுடைய குரலில் இருந்த மென்மை இந்தப் புலம்பலில் இருக்கவில்லை. அவளுடைய புலம்பலில் இருந்து இடைக்கிடை நான் அறிந்துகொண்ட விடயங்களிலிருந்து அவளுடைய வாழ்க்கையின் இன்னுமொரு பக்கம் பற்றித் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

''ஜேமிஸ் பொடியன் இப்பிடியே இருந்தா தகப்பனுக்கு நடந்த கெதி தான் அவனுக்கும் நடக்கும். கள்ளு கசிப்பு நரகல்! அப்பா! நரகல்! தகப்பன்காரன் செஞ்சத மகனும் செய்யணுமே! தகப்பனைப் போலவே தான். தகப்பன் அவெங் கண்ணுக்கு முன்னால குடிச்சான். நல்லா குடிச்சிட்டு நாலு கால்ல வந்தான். அப்பன்காரன் எண்டால் ரெண்டு மூணு வாய் ஊத்திக்கிட்டு ஆடியாடி வீட்டுக்கு வந்துதான் ஆட்டமெல்லாம் போட்டான். எந்த நாளும் சண்டை... அதுக்கு இந்த ஜேமிஸ் பொடியன்! கொஞ்சம் வாய்க்கு ஊத்திக்கிட்டா வழியெல்லாம் வலிச்சண்டை. அப்பனாச்சும் கும்மிருட்டுல வரக்குள்ள லொறியில அடிபட்டு செத்துப்போனான். நாயைப்போல கானுக்குள் இழுத்து போட்டிருந்தானுங்க. மறுநாள்தானே வெசயமே தெரியும். ஜேமிஸ் பொடியன் எண்டால் ஆக்களிட்ட அடிவாங்கியே சாகப் போறான்.''

''ராஜுகிட்ட எடுத்த கடனைக் கொடுக்காம ராஜுட வீட்டுக்கு முன்னால நடந்து வாற நேரம் அவனுக்கே தூஷணத்தால ஏசி இருக்கான். வயசுக்கு வந்த ரெண்டு குமருகள் வீட்டுல இருக்குதுகள். வெக்கம் தாங்க முடியல்லை எண்டு ராஜு என்கிட்ட சொல்லுறான். ஜேமிஸை எப்பிடியாவது திருத்துங்க எங்கிறான். அவனுக்கு எவ்வளவு புத்தி சொன்னாலும் சண்டைதான் புடிக்கிறான். அவனுக்குப் பொறந்த ரெண்டு பேய்க்குட்டிங்களும் அவனுக்கு அப்பன் ... பிசாசுங்க! பிசாசுங்க! ஸ்கூலுக்கு வாங்க எண்டு வாத்திமார் வந்து சொல்லிட்டுப் போறாங்க. எங்க இனி? அவங்க அம்மாக்காரி... அவளும் சரியான ராட்சசிதான்!'' இவை எல்லாம் அவளுடைய புலம்பலில் இருந்து நான் அங்குமிங்குமாகத் திரட்டி எடுத்த சில தகவல்கள். இடைக்கிடை சொல்லப்பட்ட சில தமிழ்ச் சொற்களின் அர்த்தமோ அவற்றுக்கிடையிலான தொடர்போ எனக்கு மிகக் குறைவாகவே விளங்கின. நோனாச்சி என்னிடம் சொன்னதெல்லாம் அவளுடைய பிள்ளைகளைப் பற்றி அவள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளாக இருக்கலாம். அவள் தனியாக இருக்கும்போது புலம்புவதன் மூலம் வெளித்தெரிவது அவளுடைய உண்மையான உலகமா? அல்லது உண்மையான விடயமாக அவளுக்குத் தெரியும் விடயங்களா? அவள் தனியாகப் பேசிக் கொண்டிருப்பது தன்னுடைய மனதைத் தேற்றிக் கொள்வதற்குத் தானா? நான் படிப்பறையில் இருந்து என்னுடைய எழுத்து, வாசிப்பு வேலைகளை நிறைவு செய்துகொண்டு படுக்கைக்குச் செல்லும் வரை நோனாச்சி எனக்குக் காவல் நிற்பதை வழக்கமாக்கிக் கொண்டாள். கூப்பிடு தொலைவில் அவள் இருப்பது எனக்கும் மகிழ்ச்சி அளித்தது. சிலவேளைகளில் அவள் தனியாகத் தனக்குள் பேசிக்கொண்டிருப்பது மிகத் தணிந்த குரலில் தான். எனக்கு அவ்வப்போது கேட்ட, விளங்கிய விஷயங்களுக்கு அமைவாக, இரண்டாவது மகன் மையா மனைவியையும் பிள்ளைகளையும் கைவிட்டுப் போய் இன்னொரு பெண்ணோடு வசித்து வருகிறான். லக்ஷ்மிக்கு இழுப்பு நோய். அவள் மூச்சை இழுத்து இழுத்து தேயிலைக் கொழுந்து பறிக்கப் போகிறாள். ''அவள் கேபி தொரையோடு படுக்கிறாள். கெட்ட பொம்புள.''

பிள்ளைகள் யார் யாருடையதோ வீட்டுத் திண்ணைகள் வழியே திரிந்து அங்கு கிடைக்கும் ரொட்டித் துண்டுகளாலேயே தமது வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்கிறார்கள். மரக்கறி விற்றுக் கிடைத்த காசில் அவர்களுக்கு நோனாச்சி பனிஸ் வாங்கிக் கொடுப்பாள். வீட்டில் இருந்து கொஞ்சம் சோறு எடுத்துப் போவதற்கு உக்குங் உடைய வீட்டுக்காரி நக்கல் அடிப்பாள். லக்ஷ்மி நோனாச்சியிடம் அந்த வீட்டோடு இருந்து பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ளச் சொல்கிறாள். அதுகளுக்குப் பின்னால் ஓடுவதற்கு நோனாச்சிக்கு சீவன் இல்லை. ''அவள்ட கள்ளப்புருஷன் கணக்கப்புள்ள அங்ஙன வந்து பூந்து கொள்ளாட்டி... இருந்து நிண்டு எப்பவாச்சும் போக இருந்திச்சி தான்...''

நோனாச்சியின் விஷயத்தில் கொஞ்சமாவது கரிசனை எடுப்பவன் ரஞ்சன் மட்டும்தான். ரஞ்சன் அவளுக்கு ஏதாவது கொடுத்ததைப் பற்றிக் கேள்விப்பட்டால் சந்திரா அவனைத் தின்னப் பார்ப்பாள். முழுக் கூட்டம் குடும்பமும் ரஞ்சன் ஆட்டோ ஓட்டிச் சம்பாதிக்கும் பணத்தில் தான் வயிறு வளர்க்கிறது. இவர்கள் எவராலும் நோனாச்சிக்கு எந்தவோர் ஆறுதலும் இல்லை. உக்குங் உடைய மனைவி நோனாச்சியின் தாலிக்கொடியைக் களவாடி விட்டாள். ''அவளுக்கு வேலையே வயித்துப் புள்ளைய கரைக்க மருந்து குடிக்கிறது தான்.''

ஒரு முறை சாகவே போனாள். அந்தநேரத்தில் அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது நோனாச்சிதான். அவளிடம் கொஞ்சங்கூட நன்றி உணர்ச்சி இல்லை. காலையிலிருந்து இரவு வரைக்கும் 'மோஸ்தர் குருவி' தான். அவள் எப்போதும் உக்குங் இடம் சல்லி கேட்டுக் கரைச்சல் கொடுப்பாள். இவர்கள் யாரிடமிருந்தும் நோனாச்சிக்கு உடுக்க ஒரு துண்டுத் துணியாவது கிடைத்ததில்லை.

நோனாச்சி நாள் முழுவதும் உடுத்திருக்கும் உடுப்பை இரவில் கழுவி, மேல் கழுவியதன் பிறகு வேறொரு சீத்தையையும் சட்டையையும் உடுத்துக் கொள்வாள். அவள் மூன்றே மூன்று சீத்தைத் துணியும் இரண்டு சட்டைகளும் கொண்டு வந்திருந்தாள். நோனாச்சியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நினைக்கையில் எனக்கு மிகுந்த துக்கமாக இருந்தது. நான் அவளுக்குச் சில சீத்தைத் துண்டுகளையும் அதற்குப் பொருந்தும் சட்டைகளையும் தைத்துக் கொடுத்தேன். என்னுடைய புதிய ஸாரிகள் இரண்டையும் கொடுத்தேன். ''அப்பா! என்ன இது? நான் மிச்ச காலம் வேலை செய்யவுமில்லையே நோனா!'' அவள் வேறு ஏதோ சொல்வதற்கும் வாயைத் திறந்தாள். உதடுகள் நடுங்கியதாலோ விழியோரம் கண்ணீர் துளிர்த்ததாலோ என்னவோ தெரியவில்லை, அவள் சொல்லத் தொடங்கிய வார்த்தைகளைச் சொல்லாமலேயே தன்னுடைய அறைக்குள் நுழைந்து கொண்டாள். நான் வேலைக்கோ வேறெங்கோ வெளியே சென்று திரும்பும்போது தனக்காகக் கொண்டு வருமாறு அவள் கேட்டுக் கொண்டதெல்லாம் வெற்றிலை பாக்கு போடுவதற்குத் தேவையானவற்றைத்தான். பகலில் சமையல் முதலான வேலைகளை முடித்த பின்பும் சாப்பிட்ட பிறகும் அவள் வெற்றிலை மெல்லுவாள். வெற்றிலை மென்றபடி ஓய்வாக அமர்ந்து இருப்பதற்கு அவள் வீட்டுக்குப் பின்னாலுள்ள மரத்தடியில் ஓர் இடத்தைத் தேர்வு செய்திருந்தாள். அங்கு அவள் உட்காருவதற்கு ஓரளவு பெரிய கல்லொன்று இருந்தது. அதன் முன்னால் உள்ள கல்லின் மீது வைத்து மற்றொரு சிறிய கல்லால் இடித்து அவள் பாக்கைத் துண்டு துண்டாக்கிக் கொள்வாள். வெற்றிலையை மெல்லும்போது பக்கத்தில் இருக்கும் கூண்டில் உள்ள 'பிளக்கி'யிடம் அவள் ஏதேதோ சொல்வாள். என்ன காரணமோ தெரியாது, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவள் 'பிளக்கி'யை நாய் என்று சொல்வதில்லை. அவள் அதனைக் கலு - கறுப்பு என்றோ, கறுப்பானது என்றோதான் சொல்லுவாள்.

வாரம் ஒருமுறை தோட்ட வேலைக்கு வரும் பெருமாளோடு அவள் தமிழில் கதைப்பாள். பகல் சாப்பாட்டின் பின்னர் நோனாச்சியும் பெருமாளும் மரத்தடியில் அமர்ந்து வெற்றிலை மென்றபடி சுமார் அரை மணித்தியாலம் வரை கதைத்துக் கொண்டிருப்பார்கள். மீண்டும் போவதற்கு முன்பு பெருமாள் மண்வெட்டி, ரேக்க, சவல் முதலானவற்றைக் கழுவி ஒழுங்காக அடுக்கி வைக்காமல் போவது மட்டும் நோனாச்சிக்குப் பிடிப்பதே இல்லை.

நான் அவளுடைய எஜமானி என்பதாலும், நான் ஒரு பெரிய வேலையில் இருப்பதாலும் நோனாச்சி என்மீது மிகுந்த மரியாதை காட்டுகிறாள் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவளுடைய உள்ளத்தில் என் மீதான நேசமும் இருப்பதை ஒருநாள் புரிந்து கொண்டேன். அன்று நான் செடியொன்றை நடுவதற்காகக் குழி ஒன்றை வெட்டும்போது, மண்வெட்டி என்னுடைய வலது கால் பெருவிரல் மீது பட்டு எனக்குக் காயம் ஏற்பட்டு விட்டது. அப்போது அவள் கலவரமுற்று நடந்துகொண்ட விதத்தில் அவளுடைய நேசம் எனக்குப் புரிந்தது. என்னுடைய விரலில் இருந்து இரத்தம் கொட்டுவதைக் கண்டு, ''அப்பனே! ஐயையோ ஆண்டவனே! முருகா! மாரியம்மா!'' என்று சொன்னபடி இரண்டு கைகளாலும் தன் தலையில் அடித்துக்கொண்டு மண்வெட்டியைத் திட்டித்தீர்த்த நோனாச்சி, அதைத் தூர எறிந்தாள்.

''இதெல்லாம் பெருமாள் செய்வான் தானே? நோனா, நீங்க இனிமேல் இந்த வேலைக்கெல்லாம் போகவே கூடாது'' என்று சொன்னவாறு அவள் தண்ணீர் கொண்டுவந்து என் கால் விரலைக் கழுவினாள். வேலியால் புகுந்து போய் அடுத்த தோட்டத்தில் இருந்த கோப்பி மரமொன்றிலிருந்து கோப்பிக் கொழுந்தைப் பறித்துக் கொண்டுவந்தாள். அதை நசித்து என் விரலின் மீது பூசினாள். அவள் என் கையைப் பற்றி வீட்டுக்குள் அழைத்துப் போய், கோப்பித் தூள் வைத்து விரலைத் துணித் துண்டால் சுற்றிக் கட்டினாள். காயம் பட்டது விரலின் மேல் உள்ள நகத்தருகே என்பதால் எனக்குக் கடும் வலியாக இருந்தது. இதற்கு முன்பு நான் தனியாக வேலை செய்யும்போது காயம் ஒன்று ஏற்பட்டால், அந்த நேரத்தில் தோன்றும் கழிவிரக்க உணர்வு இம்முறை எனக்கு ஏற்படவில்லை. அப்போதிலிருந்து எனக்கே விளங்காத ஒரு காரணத்தினால் நான் என்னை அறியாமலேயே நோனாச்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுவிட்டேன்.

''அந்தி நேரத்துல தலைக்குக் குளிக்காதீங்க.''

''வெளிய பனி கொட்டுது. நோனா வெளிய போகாதீங்க.''

''இப்ப வந்துட்டுப்போன கூட்டாளிமார் அன்னாசி கொண்டுவந்திருக்காங்க. ஆனா, நீங்க அதைத் தின்னாதீங்க. தடிச்சிப் போட்டுடும்.''

இப்படியானதொரு பாதுகாப்பும், அன்பும், அக்கறையும், கவனிப்பும் என்னுடைய மனதுக்கும் தேவையாக இருந்திருக்க வேண்டும். அந்தப் படிப்பறிவற்ற, பலவீனமான முதிய பெண்மணியின் கட்டளைகளுக்கு, படித்த இளமையான, பலசாலியான நான் பணிந்து போனேன். ஒருமுறை நோனாச்சியின் புலம்பலில் இருந்து என் காதில் விழுந்த ஒரு விஷயம் என் நினைவுக்கு வந்தது.

''ஒரு மக இருந்திருந்தா நா சொல்லுறத எல்லாம் செய்வாள் தானே? எங்கட நோனா மாதிரி ஒரு புள்ள...'' நோனாச்சி என்னுடைய வீட்டு வேலைக்கு வந்து சுமார் ஆறு மாத காலத்துக்குப் பின்னர் பேராதனை டவுனில் என்னை சந்தித்த விஜே இப்படிச் சொன்னான்.

''மேடம், ஜேமிஸ் பாஸும் ஜெயக்குமாரும் அம்மாவப் பற்றி அடிக்கடி விசாரிச்சுக் கொண்டிருக்கிறாங்க. பார்க்க வரணும் எண்டு என்கிட்ட வழி கேக்குறாங்க. இப்ப தான் அவங்களுக்கு அம்மாட பெறுமதி தெரியத் தொடங்கி இருக்கு. நான் சொன்னேன், அவ மேடம் கிட்ட நல்லா இருக்கிறா எண்டு. அம்மா இப்போ தேவைப்படுறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொண்டுக்குமில்ல. புள்ள பார்த்துக் கொள்ளத்தான். மரக்கறித் தோட்டத்துல வேலை செய்விக்கத்தான். அந்த மருமகள்களோடு இந்த மனிசிக்கு இருக்கிறது கஷ்டம். ஜெயக்குமார், பொம்பளை ரெண்டு பேருமே அந்திக்குக் கள்ளுக் குடிச்சிட்டு ஒரே சண்டை. ஜேமிஸூம் அந்திக்கு டோப். நான் சொன்னேன், கிட்டடியில் மேடத்தின் புருஷன் வருவாரு. அப்ப அம்மா வருவா எண்டு.''

நோனாச்சியை நான் இழந்துவிடுவேன் என்ற பயம் எனக்கேற்பட்டது. விஜே சொன்னவை எப்படிப் போனாலும், அவனைச் சந்தித்ததைப் பற்றிக்கூட நான் நோனாச்சியிடம் சொல்லவில்லை. நான் அவளை 'கெட்டம்பே' விகாரைக்கு அழைத்துச் சென்றேன். அவள் நீண்ட நேரம் எதையோ ஜெபித்தபடி வணங்கினாள். அவள் புத்தர் சிலையையும் விஷ்ணு தெய்வத்தையும் வணங்கி வழிபட்டுக் கொண்டிருக்கும்போது நான் அவளைச் சுற்றி அங்குமிங்கும் உலாவியபடி அவள் என்ன வேண்டிக்கொள்கிறாள் என்று மெதுவாகக் காதுகொடுத்துக் கேட்க முயன்றேன். அவள் சொன்ன அனைத்தும் எனக்கு விளங்கவில்லை. என்றாலும், அவள் புத்தரிடமும் விஷ்ணு தெய்வத்திடமும் தன் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் ராஜபோக வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டாள் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது. ஜேமிஸ், மையா, ரஞ்சித், உக்குங் போன்ற இதுவரைக்கும் நான் அறிந்திருந்த பெயர்களுக்கு மேலதிகமாக குட்டி - சுத்தா – ஜயந்த, தம்மி, பட்டி (சுட்டி), புஷ்பன், தேவன் போன்ற சில பெயர்களை அவள் உச்சரிப்பது என் காதுகளில் விழுந்தது. அவளுடைய வேண்டுதல் ஒரு வாய்ப்பாட்டைப் போல் இருந்தது.

அவள் ஊரில் இருக்கும்போது கோயிலுக்கும் விகாரைக்கும் போய் வழக்கமாகப் பிரார்த்தனை செய்பவளாக இருந்திருப்பாள் என நினைத்துக் கொண்டேன். காரணம், எந்தக் குழப்பமோ இடையிடையே எவ்விதத் தாமதமோ நினைவுகூர்தலோ இன்றி அவள் சொல்லிக்கொண்டுபோன விதம் அதை எனக்கு உணர்த்தியது. புத்தர் சிலைக்கு முன்னால் மௌனமாக இருந்து வழிபட்டவர்கள் நோனாச்சியைச் சற்று முறைத்துப் பார்த்தபடி கடந்து சென்றனர்.

''எங்கட நோனாவுக்கு இன்னுமின்னும் செல்வத்தைத் தரணுமெண்டு தெய்வத்தை வேண்டிக்கிட்டேன். உங்களுக்கு நான் புண்ணியம் தந்தேன். தெய்வம் உங்களுக்குக் கிருபை செய்யும்.'' திரும்பி வரும் வழியில் நோனாச்சி சொல்லிக்கொண்டே வந்தாள். அவளுடைய புலம்பலைச் செவிமடுத்ததன் மூலம் நான் தெரிந்துகொண்ட விடயங்களைப் பற்றியோ எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விடயங்களைப் பற்றியோ நான் ஒருபோதும் அவளிடம் எந்தக் கேள்வியும் எழுப்பியதில்லை.

ஆனால், 'தெய்வம்' என்னில் கரிசனை கொள்ளவில்லை என்பதை விரைவிலேயே உணர்ந்தேன். ஒரு நாள் பகல் இரண்டு மணியளவில் நான் வேலைவிட்டுத் திரும்பி வரும்போது, ஜயவதி எனக்கு அறிமுகமற்ற ஓர் இளைஞனோடு வீட்டுக்கு வந்திருந்ததைக் கண்ணுற்ற தருணத்தில் நான் அதை அறிந்துகொண்டேன். குசினியிலிருந்த வாங்கில் அமர்ந்திருந்த அந்த இளைஞன் என்னைக் கண்டதும் எழுந்து நின்று கூச்சத்தோடு வேறெங்கோ பார்த்தான். நோனாச்சி மேசையில் சாப்பாடு எடுத்துவைக்க ஆயத்தமாக இருந்தாள்.

''இது நோனாச்சிட இளைய மகன் ஜெயகுமார். அம்மாவைப் பார்த்துட்டுப்போக வந்திருக்கிறான்.'' ஜயவதி இளைஞனை எனக்கு அறிமுகப்படுத்தினாள்.

''உட்காரு ஜெயக்குமார்'' என்று சொல்லிவிட்டு நான் என் அறைக்கு போகத் திரும்புகையில் ஜயவதி என் பின்னாலேயே வந்தாள்.

''காலையில் விஜேயோடுதான் வந்திருக்கிறான். கரைச்சல் பொறுக்க ஏலாமத்தான் விஜே கூட்டிக்கிட்டு வந்திருக்காரு. அம்மாவைக் கூட்டிக்கொண்டு போகப் பார்க்கிறான். நோனாச்சிக்குப் போக விருப்பமில்ல. தமிழிலும் ஏதேதோ பேசிக்கொண்டாங்க. ஐயோ மேடம், தகப்பன்காரன் இவனுங்க சின்னதா இருந்த காலத்துல இருந்தே குடிச்சி சீரழிஞ்சதால இவனுங்க எல்லாரும் தான்தோன்றித்தனமா வளர்ந்துட்டானுங்க எண்டுதான் விஜே சொல்லுவாரு. அந்த ஆட்டோக்காரன்... அவன்தான், த்ரீவீல் வெச்சிருக்கிற ரஞ்சித்துக்கு மட்டும் அம்மாவைப் பற்றி கொஞ்சம் அக்கறை இருக்கிறமாதிரி தெரியிதாம். ஆனால், அவன்ட பொண்டாட்டி - அவ தமிழ் எண்டுதான் சொல்லுறாங்க. ரஞ்சித் பொண்டாட்டிட வீட்டுலதான் இருக்கிறான். அவன் ஆட்டோ ஓட்டி சம்பாதிக்கிற சல்லியால்தான் முழுக்குடும்பமும் ஓடுதாம். ஜெயக்குமார்ட பொண்டாட்டி மறுவாலும் புள்ள கெடைக்க இருக்கிறாளாம். என்னைக் கூட்டிக்கிட்டுப் போக யாரும் வரத்தேவல்ல. என்னால் தனியாப் போகேலும் எண்டு நோனாச்சி சொல்லுறா...''

ஜெயக்குமார் திரும்பிப் போக ஆயத்தமான போது நான் அவனுக்கு 500 ரூபாயும் ஒரு டீசேர்ட்டும் கொடுத்தேன். அவன் என்ன சொன்னான், அதற்கு நோனாச்சியின் பதில் என்ன, நோனாச்சி வீட்டுக்குப் போக விரும்பாமைக்குக் காரணம் என்ன என்றெல்லாம் அறிந்து கொள்ளும் ஆர்வம் எனக்குள் ஏற்பட்டாலும், நான் நோனாச்சியிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. வழமையாக நோனாச்சியிடம் வெளிப்பட்டுத் தோன்றும் சுறுசுறுப்பும் அமைதியும் அன்று சற்றே அடங்கிப்போயிருந்தன. மாலையில் பூப்பாத்திகளுக்குத் தண்ணீர் ஊற்ற மறந்துபோய்விட்டது போல அவள் அனோதா மரத்தடியில் அமர்ந்து வெற்றிலை மென்றபடி எங்கோ தொலைதூரத்தை வெறித்துப் பார்த்தபடியே இருந்தாள். நான் தண்ணீர் ஊற்றுவதற்கு ஆயத்தமாகி நீர்க்குழாயை இழுத்தெடுக்கும் ஒலிகேட்டு அவள் ஓடோடி வந்து, தண்ணீர்விடத் தொடங்கினாள். நோனாச்சியை வீட்டுக்கு வருமாறு மகன்மார் தொடர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் அனுப்பிக்கொண்டே இருந்தனர். நான் வீட்டில் இல்லாத ஒரு நேரத்தில் ஒரு முறை விஜே வீட்டுக்கு வந்து நோனாச்சிக்கு ஒரு தகவல் கொடுத்திருந்தான். ''மேடம் நோனாச்சிய அனுப்பிடுங்க. எனக்கும் தாங்கேலாத கரைச்சல். நான் லொறியை நிறுத்திட்டு கடையில் தேத்தண்ணி குடிச்சிட்டு இருக்கிறதைக் கண்டு கடைக்குள்ள பூந்து, தனக்கும் ஒவ்வொண்டு சொன்னான். அடுத்தாக்கள அடிமையா வெச்சி வேலை வாங்காம வீட்டுக்கு அனுப்பட்டாம் எண்டான்.'' என்ற செய்தியை ஒரு கடதாசித் துண்டில் விஜே எழுதி வைத்துவிட்டுச் சென்றிருந்தான்.

''நோனாச்சி வீட்டுக்குப் போய் மகன்களையெல்லாம் பார்த்துட்டு வர விருப்பமா?'' என்று நான் இரவில் டிவி பார்க்கும்போது அவளிடம் கேட்டேன். அதற்குக் காரணம், மாலையில் வேலைகளைச் செய்து கொண்டிருக்கும்போது அவள் மற்ற நாட்களை விட சற்று ஆவேசமாய் தனக்குள் பேசிக் கொண்டிருப்பதைக் காணவும், கேட்கவும் நேர்ந்தமைதான்.

''நா ஐயா வந்ததுக்குப் பொறவு போய்ட்டு வாறன். சம்பளச் சல்லிய கையில தாங்க நோனா. பொடியனுங்களுக்கு சல்லி தேவைப்பட்டிருக்கும்.'' அவள் சற்று நேரத்தின் பின் சொன்னாள். விஜேயிடமிருந்து தகவல் வந்து நான்கு நாட்களின் பின் ஜெயக்குமார் ஜயவதியை அழைத்துக்கொண்டு நான் வேலை செய்யும் இடத்துக்கே வந்திருந்தான்.

''ஐயோ மேடம், இது ஒரு பெரிய கரைச்சல். அம்மாவைக் கூட்டிட்டுப்போகவே வந்திருக்கான். இண்டைக்கு நோனாச்சி வராட்டி, இனிச் செத்தாலும் பார்க்க மாட்டானாம். ஜெயக்குமாரின் பொண்டாட்டிக்கு சுகமில்லையாம். புள்ள கிடைக்க இருந்தவளுக்கு ரத்தப் போக்காகிட்டாம். இப்ப ஆஸ்பத்திரியிலாம். ரெண்டு புள்ளைங்களும் மிச்சம் சிறிசுதானே? ஒப்பரேசன் செய்ய வேண்டி இருக்காம். மேடம், நாங்க இதோட நோனாச்சியை அனுப்பிடுவோம். அவ நிச்சயம் உங்களுக்கிட்ட திரும்பி வருவா மேடம்.'' ஜயவதி தாழ்ந்த குரலில் சொன்னாள்.

நான் ஜெயக்குமாரையும் ஜயவதியையும் காரில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குப் போனேன். என்னுடைய காரை தூரத்தில் கண்டவுடனே நோனாச்சி தன் வழமையான புன்னகையுடன் ஓடோடி வந்து கேற்றைத் திறந்தாள். ஜெயக்குமாரைக் கண்டவுடனேயே முதலில் அவள் முகத்தில் ஒருவித ஆச்சரியம் தோன்றியது. அதன் பின் ஒருவிதத் துயரத்தின் சாயல் படிந்தது.

காரிலிருக்கும் பார்சல்கள் போன்ற பொருட்களை எடுப்பதற்கு மற்ற நாட்களிலென்றால் அவள் காருக்கு அருகே வருவாள். இன்று உடனே குசினிப் பக்கம் போய்விட்டாள். அம்மாவுக்கும் மகனுக்கும் இடையில் பேச இடமளித்துவிட்டு நான் உடைமாற்றிக் கொள்வதற்காக என்னறைக்குள் சென்றேன்.

ஜயவதி என் அறைக்கு வெளியே கொறிடோரில் இருந்த கதிரையில் உட்கார்ந்து கொண்டாள். இன்னும் சற்று நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு நான் குசினிப் பக்கம் போகையில் ஜயவதியும் என் பின்னாலேயே வந்தாள். நோனாச்சி பின்கதவு நிலையில் சாய்ந்தபடி முற்றத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நோனா, அம்மாவுக்கு வீட்டுக்கு வரச் சொல்லுங்க. சந்திரா ஆஸ்பத்திரியில. சின்னவனுக்கும் காய்ச்சல். சந்திராவுக்கு சுகமான உடனேயே அம்மா வந்திடுவா.'' என்று என்னைக் கண்டவுடன் எழுந்து நின்றவனாக ஜெயக்குமார் சொன்னான். நோனாச்சியிடம் 'போ' என்று சொல்வது எனக்குச் சங்கடம். அதைச் சொல்லுமாறு நான் ஜயவதியிடம் தலையால் சைகை காட்டினேன்.

''இந்தா நோனாச்சி, நீ மகனோட இண்டைக்குப் போய் கரைச்சலெல்லாம் முடிஞ்சதுக்குப் பொறவு வரட்டாம் எண்டு மேடம் சொல்லுறா.'' நோனாச்சி சட்டென்று திரும்பி என்னை நேராகக் கூர்ந்து பார்த்தாள். நானென் அறைக்குள் நுழைந்தேன். நோனாச்சியின் அடையாள அட்டை, வங்கிப் புத்தகம், 3000 ரூபா காசு என்பவற்றைக் கையிலெடுத்தேன்.

''மேடம் கிட்ட முந்தி வேலை செஞ்ச புள்ள வருதாம்'' என்று ஜயவதி சொல்வது என் காதில் விழுந்தது. அவள் அப்படிச் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. அது ஜயவதி சொன்ன பொய். ஜயவதி சொன்ன செய்தியால் நோனாச்சியின் மனதில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிழையான புரிதலைச் சரி செய்வதற்கோ, நோனாச்சியின் மனம் ஆறுதலடையும் விதம் எதையும் சொல்வதற்கோ இயலாமல் நான் அவளின் வங்கிப் புத்தகம், அடையாள அட்டை, காசு என்பவற்றை நோனாச்சியின் பக்கமாக நீட்டியவாறு நின்றிருந்தேன். நோனாச்சி அதை ஒரு பார்வை பார்த்துவிட்டு உடனே தன்னறைக்குள் நுழைந்தாள்.

''இது இந்த மாசச் சம்பளம். மற்றதெல்லாம் பேங்கில் போட்டிருக்கு. நோனாச்சிட விரலொப்பத்தை வைச்சு காசு எடுக்கேலும்'' என்று சொன்னவாறு ஜயவதி அதை ஜெயக்குமாரிடம் கொடுத்தாள். புறப்பட ஆயத்தமாவதற்கு நோனாச்சி தாமதமாவதால், ஜயவதியும் அவளுக்கு உதவி செய்யப் போனாள். நோனாச்சி விசும்பியபடி ஆடைகளை அடுக்கும் சத்தம் கேட்டது.

''ஜெயக்குமார் சாப்பிட்டுட்டான். நோனாச்சி நீயும் சோறு சாப்பிட்டுட்டே போ. பஸ் எத்தன மணிக்கு வருமோ, யாரு கண்டா? இந்த மாசத்துச் சம்பளத்த பேங்க் பொஸ்தவத்துல போட ஏலாமப் போய்ட்டு, அதனால அத மகன்ட கையில கொடுத்திருக்கு, சரியா? மேடம்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதாசிரியை பற்றிய அறிமுகம்:



பேராதனைப் பல்கலைக்கழகச் சிங்களத்துறைப் பேராசிரியையாகக் கடமையாற்றித் தற்போது ஓய்வுபெற்றுள்ள பியசீலி விஜேமான்ன இலங்கையின் புகழ்பெற்ற சிங்களச் சிறுகதையாசிரியர்களில் ஒருவராவார். அவரது சிறுகதைகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் மூன்று நாவல்களும் இரு மொழிபெயர்ப்பு நூல்களையும் பத்து சிறுவர் இலக்கிய நூல்களையும் இரண்டு ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளார். தமது சிறுகதைத் தொகுதிகளுக்காக நான்கு முறையும், ஆய்வு நூலுக்காக ஒருமுறையும் தேசிய சாகித்திய விருதுகளைப் பெற்றுள்ளார்.

புருசனும் கிட்டத்துல வருவாருதானே... அதுவரைக்கும் அப்பப்ப நா வந்து பார்த்துக்கொள்ளுறன். இதென்ன, இந்த பெற்சீட்டையும் தலவாணி உறையையும் கழுவவா போறாய்? இப்ப அதுக்கெல்லாம் நேரமில்ல. நா கழுவிப் போட்டுட்டு போறன். நோனாச்சி, கொஞ்சம் சீக்கிரம்......"

ஜயவதியின் குரல் மட்டும்தான் எனக்குக் கேட்டது. நோனாச்சியின் மௌனம் என் துயரத்தை அதிகப்படுத்தியது. ஜயவதி அறையிலிருந்து வெளியே வந்து பயணப் பையை ஜெயக்குமாரின் கையில் கொடுத்தாள். நோனாச்சி அழுதுகொண்டே வந்து, என்னைக் கும்பிடக் குனியும்போது நான் அவளைத் தடுத்து, இழுத்து அணைத்துக்கொண்டேன். எசமானிக்கும் வேலைக்காரிக்கும் இடையிலான வழக்கமான உறவு நிலையைக் கட்டுடைத்துக் கொண்டு பீறிட்டுக் கிளம்பிய அந்த அன்பைக் கண்டோ என்னவோ ஜயவதியும் ஜெயக்குமாரும் வியப்பில் ஆழ்ந்து எங்களையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.



## தேவகாந்தன்

திண்ணையில் கிடந்திருந்த நல்லதம்பி கண்விழித்தான். கிழக்கு மூலையில் இருட்டு மங்கத் துவங்கியிருந்தது, மறைப்புத் தட்டி மேலாகத் தெரிந்தது. வீட்டுக்குள் சென்று பயணத்தில் கொண்டுசெல்லும் மருந்துப் பையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். சங்கமத்தில் கலைந்த கோலத்துடன், இன்னும் உடம்பலுப்புத் தீராதவளாய் திண்ணையிலே சாரல் கிடந்திருந்தாள். அவளை அருட்டி தான் புறப்படுவதைச் சொல்லிக்கொண்டு முற்றத்தில் இறங்கினான்.

பின்னால் சாரலின் குரல் எழுந்தது. 'இனி எப்ப? ரண்டு மாசம் கழிச்சா, நாலு மாசம் கழிச்சா?'

அவன் திரும்பி இருட்டில் அவள் வெளிர் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். 'இடைத்தூரம் பெரிசில்லை; நடைத்தூரந்தான். அங்க மினக்கெடுறது ரண்டாளுக்கு வைத்தியம் பாத்தா நாலு காசு கிடைக்குமெண்டுதான.'

'வேறயொண்டுக்குமில்லையே?'

அவளுக்கு அவனது முதல் சம்சாரம்பற்றித் தெரியும்.

அவன் அவளது காதோரம் வளைந்து இன்னும் லேசாய்க் கூந்தலில் இழைந்த பயறு வெந்தயம் எலுமிச்சைகளின் வாசத்தை முகர்ந்தபடி, 'கெதியில வருவ'னென்றுவிட்டு நடக்கத் துவங்கினான்.

அந்த நேரத்துக்கு அங்கிருந்து புறப்பட்டால்தான் தொட்டம் தொட்டமாய் இருக்கும் கிராமங்களை ஊடறுத்துச் சென்று, இருள் விழும் நேரத்தில் அவனூர் சென்றுசேர முடியும். வெயில் கொளுத்தும் பகலாயிருந்தும் நிழல்வழி தேர்ந்து அந்த முப்பது கட்டை தூரத்தையும் பயணிப்பது அவனுக்குச் சிரமமில்லை. அந்த வனவழிப் பயணத்தை தன் பத்தாவது வயதிலிருந்து அவன் செய்துகொண்டிருக்கிறான்.

சிறுவயதிலே தந்தையை இழந்த நல்லதம்பிக்கு தாய்வழிப் பாட்டனான சரவணைதான் ஆதாரமாகயிருந்தார். ஊர் அடியுண்ட மனிதர். விஷ கடி வைத்தியத்திற்கும், பார்வை பார்த்தலுக்கும் யாரும் நிகரில்லையென்று அவரது கொப்பாட்டன், கோந்துறு, மாந்துறுகளின் தலைமுறையிலிருந்தே ராஜ காரிய வட்டாரத்திலேயே அந்தப் பரம்பரைக்கு பெரிய பேரிருந்தது. அதை சரவணை தன் காலத்தில் தக்கவைத்தார் என்றுதான் சொல்லவேண்டும். கரைச்சி, கிராஞ்சியென வன்னிப் பெருநிலம் முழுக்கவலைந்து தொழில் செய்தவர். தொழிலென்பது, அதிலிருந்தே அவருக்கான ஜீவனோபாயம் கிடைத்தது என்பதினாலேயாகும். அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகமணி

தன் முன்னோர்கள்போல் சேவையாகவே கருதி வாழ்ந்தவர் அவர். பாம்பு, திருநீலகண்டன், மட்டத் தேள், புலுமைச்சிலந்தி என்று மட்டுமில்லை, நாய் கடிக்கும் வைத்தியம் செய்ததோடு உளுக்கு சுளுக்குகளுக்கு 'பார்வை பார்த்து' குணமளிக்கவும் அவர் தெரிந்திருந்தார்.

ஆண்டில் ஆறேழு தடவைகளாவது வீட்டிலிருந்து வன்னி சென்று நாட்கணக்கில் தங்கி மீள்வார். மன்னாரில் தொழில் நிமித்தம் நின்றிருந்தபோது ஏற்பட்ட வாந்திபேதியில் மகளின் கணவன் 'மோசம்' போய்விட, கிறித்தவ குருமாரின் பள்ளிக்கூடத்தில் நாலாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த நல்லதம்பியை, படிப்பு போதுமென்று நிறுத்திவிட்டு தனக்குத் துணையாக வைத்துக்கொண்டார். நல்லதம்பி பெரும் புளுகத்துடன் விஷகடி வைத்தியம் பயிலத் தொடங்கினான். பெரும்பாலான பாட்டனின் வன்னிப் பயணங்களில் நல்லதம்பியும் உடனிருந்திருக்கிறான். பயண வழியெங்கும் கதை கதையாய்ச் சொல்வார் பாட்டன். அவற்றில் பாம்புக் கதைகளே அதிகமாயிருந்தன. நாகம், பறநாகம், வெங்கிணாந்தி, கண்டங்கருவிடலை, புடையன், கொம்பேறி மூர்க்கன், மலைப்பாம்பு, நீர்ப் பாம்பு, சாரை, கோடாலி, பச்சிலைப் பாம்பென பல வகைப் பாம்புகளுக்கும் வகைவகையான குணமும், அவற்றின் விஷங்களுக்கு வகைவகையான மருந்துகளும் இருந்ததை ஆச்சரியத்தோடு அவன் அவரிடம் கேட்டறிந்தான்.

அவன் பேரதிசயப்பட்டது நாகமணிபற்றி அவர் சொன்ன அபூர்வமான கதைகளில்தான். நாகமணியைக் கண்டவர்களுண்டு, அடைந்தவர்கள்தான் யாருமில்லையென்றும், அதை அடைகிறவன் உலகத்திலேயே மிகப்பெரும் அதிர்ஷ்டக்காரன் ஆகிவிடுவானென்றும் கண்களில் ஒரு மின்னல் அலையடிக்கச் சொன்னபோது, நல்லதம்பியின் மண்டைக்குள் நாகமணி ஏறிவிட்டது. கதையாய், நினைவாய் பல வடிவங்களில் அது அவனுள் ஜொலிக்கவாரம்பித்தது.
'ஆராலயும் ஏன் எடுக்கேலாமப் போச்சுது, அப்பு?' அவன் பாட்டனிடம் கேட்டிருக்கிறான்.



'நாகமணியைக் கண்ணால காணுறதே அருமை. கண்டாலும் எடுக்கிறது அதைவிட அருமை. அதை எடுக்கிறதுக்கெண்டு சில வழிமுறையளிருக்கு. அதோட... பலனும் இருக்கவேணும். இல்லாட்டி கையில கிடைச்சாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியாய்ப் போயிடும். காலம் நல்லமில்லையெண்டா... கிணத்துத் தண்ணியும் உப்புத் தண்ணியாய்ப் போறத ஊரில பாக்கிறமெல்லோ?' என்றவர் அந்த வழியையும் அவனுக்குச் சொல்லிக்கொடுத்தார்.

ஒருமுறை நல்லூரின் பெரும் பணக்காரர் ஒருவருக்கு பெறுமதியான ஓர் இரத்தினம் வேண்டியிருந்தபொழுது தனது தேப்பன் நாகமணி தேடியலைந்ததையும் தன் கதையில் பேரனுக்கு சரவணை கூறியிருக்கிறார்.

அவர் நாகமணியை எடுத்தாரா இல்லையா என்ற விபரம், கதை எது காரணத்தாலோ இடையறுந்துபோனதில், நல்லதம்பிக்குத் தெரிந்திருக்கவில்லை. நாகமணிபற்றிய எண்ணமும் பாட்டன் இல்லாமல் போனதோடு நினைவின் புழுதியில் மூடுண்டு போயிற்று.

இளமை மீண்ட சரவணையாக நல்லதம்பியும் பேரோடு ஊரிலும், அயலூர்களிலும் விஷகடி வைத்தியம் பார்க்கத் துவங்கினான்.

ஊரின் பற்றைகளுள்ளும், புற்றுகளுள்ளும், மூங்கில் காடுகளுள்ளும் குடியிருந்த விஷ ஜந்துகள், குடிமனைகள் பெருகிவர பெருங்கானகங்களை நோக்கி புலம்பெயருமொரு காலமாகயிருந்தது அது. உளுக்கு சுளுக்கு பார்ப்பதில்மட்டும் அடங்கியிருக்க நேர்ந்த நல்லதம்பிக்கு, இரண்டு குழந்தைகளோடிருந்த தன் குடும்பத்தை பராபரிக்க இயலாத நிலை ஏற்பட்டபோது, வன்னி நினைவு எழுந்தது. புதிய புதிய குடியேற்றங்களால் அவ் வனப் பகுதியின் சனப் புழக்கம் வெகுத்துக்கொண்டு இருப்பதில், அதுவொரு சரியான முடிவெனத் தீர்மானித்து ஒருநாள் மருந்துகள் அடங்கிய பையை எடுத்துக்கொண்டு வன்னி புறப்பட்டான்.

கிராஞ்சிக்கு அவன் வந்தபோது அங்குள்ள ஒரு வீட்டில் பாம்பு கடித்த ஒரு பெண்ணை மரணித்தாளெனக் கணித்து, பாடையிலேற்றி சுடலைக்கு எடுத்துச்செல்ல உறவினர் தயாராகிக்கொண்டு இருந்தார்கள். நெருங்கிச் சென்று சடலத்தின் முகத்தைப் பார்த்த நல்லதம்பி திடுக்கிட்டுப்போனான். முகத்தில் இன்னும் ஜீவத் துடிப்பு இருந்திருந்தது. 'ஆள் சாகேல்லை இன்னும்' என்று கத்தினான். பின் உயிர் அடக்கத்திலிருக்கிறதென்றும், அதற்கான ஔஷதம் தன்னிடமுண்டுவென்றும் சொல்ல, அதுவரை வைத்தியம் பார்த்து அவளின் மரணத்தை அறிவித்த ஊர் விஷகடி வைத்தியன் போதையில் அவனோடு சண்டைக்கு வந்தான்.

நல்லதம்பியை விஷகடி வைத்தியர் சரவணையின் பேரனென்று அடையாளம் கண்டதும், அவனது பேச்சுக்குச் செவிசாய்க்க சில உறவினர் முன்வந்தனர். அவன் வைத்தியம் தொடங்கினான்.

முதலிலேயே அவனுக்குத் தெரிந்திருந்தது, மந்திரத்தில் அந்த விஷத்தை இறக்கமுடியாதென்று. பாம்பு கொத்தியதாயிருந்தால் 'பார்வை' ஒருவேளை பயன் தரலாம். ஆனால் அவளையோ அது வெட்டியிருந்தது. பெண்ணின் காலிலிருந்த கடிதடத்தால் அதை இலகுவில் கண்டுணர்ந்தான் அவன்.

வெட்டுவதென்பது மரத்தைத் தறிப்பதற்கு ஓங்கி கோடரியை இறக்குவதற்கு ஒத்ததாகும். ஒரு சினத்தோடு பாம்பு செய்யும் அச்செயலில் நச்சுப் பையிலுள்ள அதன் விஷம் முழுக்க இறக்கப்படுகிறது. பாட்டன்தான் அந்த வித்தியாசங்களை அவனுக்கு விபரித்தவரும்.

அவ்வாறான உயிரடக்க நிலையில் செய்வதற்கு ஒரேயொரு முறைதான் இருந்தது. ஆனால் பெண்ணுடலில் அதை என்றுமவன் பிரயோகித்ததில்லை. அதனால் தயங்கினான். பாதிக்கு மேல் நிர்வாணமாக்கும் அந்த விஷவிறக்க முறையை ஊரும் உறவும் சுலபத்தில் அனுமதித்துவிடாது. அதனால் முடிந்தவரை பெண்களை வைத்து அந்த சருமம்மூலமான விஷவிறக்கத்தைச் செய்ய அவன் முற்பட்டான்.

அதற்கு இணங்கிவந்த இரண்டு அயல் பெண்களுக்கு சிகிச்சை விபரத்தை விளக்கிவிட்டு, முதலில் அவளது நெற்றி கன்னங்களென கழுத்துவரை மருந்துப் பசையை சருமத்தில் பூசினான். மேல்நெஞ்சிலிருந்து வயிறு பெருந்தொடைவரை அப் பெண்களை பூசவைத்தான். எக் காரணம்கொண்டும் மேல்நோக்கித் தடவிவிடக்கூடாதென்பதை அடிக்கடி வலியுறுத்தினான். ஒரு மணத்தியாலமளவான முயற்சியிலும் எதுவித பயனும் காணக்கிடைக்கவில்லை. நல்லதம்பிக்கு பயம்வரத் துவங்கியது.

சூழவிருந்தவர்களின் முகத்தில் அதிருப்தி மெதுமெதுவாகப் படர்ந்து சிறிதுநேரத்தில் புறுபுறுப்புகளாய் வெடித்தது. ஊர் வைத்தியன் இன்னும் போதையோடு நின்று அவர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்தான். அதில் உந்துதலாகிய ஒருவன் தன்னைநோக்கி வருவதைக் கண்ட நல்லதம்பி தளர்ந்தான். அந்த நெடுத்த மனிதன் தான் சொல்ல வந்ததைச் சொல்ல வாயைத் திறந்த கணத்தில் இறந்ததுபோல் கிடந்த பெண்ணின் இமைகளில் அசைவு தெரிந்தது. பெண்கள் கூச்சலிட்டனர். 'இஞ்ச... இமை துடிக்கிது.'

சிறிதுநேரத்தில் கை காலென மற்ற அங்கங்களும் மெல்லசைவு காட்டின. மூச்சும் ஒழுங்கீனமாய்த் தொடங்கி சீர்படவாரம்பித்தது. ஆயினும் இன்னும் எழும்ப இயலாதவளாயே அந்தப் பெண் கிடந்திருந்தாள். நல்லதம்பி மேலே வைத்திய முறையை மாற்றி குடிமருந்தில் கவனம் செலுத்தினான். அவளும் அபாய கட்டம் நீங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறிதுநேரத்தில் இறந்தவள் பிழைத்தாளென ஓர் அதிசயத்தை நேர்கண்ட குதூகலத்துடன் ஒவ்வொருவராய் வீடு திரும்பினர்.

அவளுக்கு மூன்று நாட்கள் அங்கேயே தங்கிநின்று வைத்தியம் பார்த்த நல்லதம்பி, மேலும் சில குடிநீர் மருந்துகளைத் தொடர்ந்து குடிக்க அறிவுறுத்திவிட்டு அவர்கள் பொத்திய கையில் கொண்டுவந்து கொடுத்த சில்லறைப் பணத்துடன் திரும்பினான்.

இரண்டு வாரங்களின் பின் அவளை மறுபடி பார்க்க வந்தபோது விஷ கடியில் தப்பிய அந்தப் பெண் ஓடிவந்து அவன் முன்னால் வீழ்ந்து, 'என்னைக் காப்பாத்தின கடவுள் நீர். இந்த உசிர், உடம்பெல்லாம் உம்மட பிச்சை' என்றழுதாள்.

சிவந்த, மெலிந்த, தந்தையற்ற இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான அந்தப் பெண்ணை வெகுவாஞ்சையோடு எழுந்திருக்க வைத்து, 'பேரென்ன?' என்றான் நல்லதம்பி.

'சாரல்.'

பொருத்தமான பெயர்தான், கிட்ட வரவே சாரலடிக்கிது என்று நினைத்துக்கொண்டு, 'வீட்டில ஆச்சி ஓராள் இருந்தாவே?' என்றான்.

'அவ எங்க போறது? நடக்கமாட்டா. உள்ளதான் படுத்திருக்கிறா.'

'எனக்கு இண்டை ராவைக்கு எங்ஙனயெண்டான்ன படுக்க இடம்வேணும்....'

'வேற எங்ஙனயுமேன்? இஞ்சயே படுக்கலாம்' என்றாள். அப்போது அவள் எதையோ எண்ணி வெட்கப்பட்டாள். அதுவே அவளை அவனும், அவனை அவளுமாய்ப் புரிந்துகொள்ள ஏலுமாக்கிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் விடிந்தபோது நல்லதம்பி சொன்னான், தனக்கு கல்யாணமாகி இரண்டு பிள்ளைகளும் இருப்பதாக.

'கட்டினது.'

கொஞ்சம் அதை எதிர்பார்த்ததுபோல் அவள் விரைவில் தன்னைச் சுதாரித்தாள். 'அப்பிடியெண்டாலும்... இஞ்சயும் வருவிரோ இனிமேல?'

'தொட்டிட்டன், இனி விடமாட்டன்' என்றான் அவன்.

விடிந்ததும், சூரியன் மேலே ஏறியதும் எல்லாம் கரிசனையற்றவனாய் நினைவுள் ஆழ்ந்தபடி சென்றுகொண்டிருந்தான் நல்லதம்பி.

இரண்டாண்டுகளாய்த் தொடரும் அந்த உறவுக் காலத்தில் அவளுக்காக எதுவும் தான் செய்திருக்கவில்லை, சூரியக் கதிரொழுகும் அந்த மண்வீட்டின் கூரையைக்கூட வேய்ந்து கொடுக்கவில்லையென அந்த வீட்டை அணுகும் ஒவ்வொரு தருணத்திலும் எண்ணங்கள் அவனைக் கலங்கச் செய்திருக்கின்றன.

தனது வருமானத்தில் கட்டிய மனைவி பிள்ளைகளுக்கு சோறு போடவே திணறுகிற நிலைதான் அவனுக்கு என்றும் இருந்துகொண்டு இருக்கிறது. கொடுத்ததை கண்ணை மூடிக்கொண்டு வாங்கிவருகிற வைத்தியனின் நிலை வேறேதாகவும் இருக்கமுடியாது.

ஆறு பரப்பு காணி, அதில் குடியிருக்க வீடு, காதுத் தோடும் மூக்குமின்னியும் கழுத்துச் சங்கிலியுமென தான் கொண்டுவந்ததுபோல், கிராஞ்சியாளுக்கு என்ன சீதனம் தந்தினமென அவனது சம்சாரம் கேலி செய்கிறாள். அவனுக்குத் தெரியும் அது கேலிமட்டுமேயல்லவென. அவளது நெஞ்சின் ஆழத்தில் கிடக்கும் நெருப்பு. அது பிள்ளைகளின் பசி முகம் காணும்போதெல்லாம் அவ்வாறு கேலியாய் எகிறவே செய்கிறது. அவளுக்குக்கூட அந்த ஏழெட்டு வருஷ கால குடும்ப வாழ்க்கையில் ஒரு பொட்டு தங்க நகை அவன் செய்து போட்டதில்லை. அதற்காகவும் அவன் இரக்கமே படுகிறான்.

காலம் வழியடைத்திருக்கையில் எதைத்தான், யாருக்குத்தான் அவனால் செய்துவிட முடியும்? உப்பு புளி அரிசி வாங்கக்கூட அவனிடத்தில் காசு கேட்காததாலேயே சாரலிடத்தில் ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் இல்லையெனக் கருதிவிட முடியுமா? எல்லார் எதிர்பார்ப்பையும், தன்னதையும்கூட, தனக்கு புதையல் கிடைத்தால்தான் நிறைவேற்றச் சாத்தியப்படுமென ஒரு சோர்வோடு எண்ணினான் நல்லதம்பி.

அப்போது, எப்போதோ புதையுண்டுபோன நாகமணியின் பிரபை நினைவுகளின் கால இருட்டிலிருந்து பளீரிட்டது. ஆனால் ஏதொரு நாகமணியையும் எவரும் அதுவரை அடைந்ததில்லையென்ற பாட்டனின் வாசகம் கூடவெழுந்து அதை ஒதுக்கித் தள்ளப் பார்த்தது. 'நாகதம்பிரானே, எதாவது வழிகாட்டும்' என்று கிளர்ந்த கனவைத் தக்கவைத்தான்.

வயல்கள், வெளிகள், பறுகுப் பற்றை நிலங்களைக் கடந்து பெருவனத்தின் எல்லையை அணுகினான் நல்லதம்பி.

அந்த வனவோரத்தில் ஒரு ஐதான கிராமம் இருந்தது. அதன் வடதிசை எல்லையில் குடாநாடு செல்லும் ஒற்றையடிப் பாதையொன்று வனத்தை ஊடறுத்து ஓடுகிறது. ஒரு காலத்தில் பெருவழியாக அது இருந்திருக்கலாம். வர்த்தக, ராஜரீதியான போக்குவரத்துக்கள் இருந்திருப்பதற்கு, அதன் ஓரத்தில் பயணிகள் தங்குவதற்காய்க் கட்டப்பட்டு அப்போது அழிநிலையிலிருந்த ஒரு கல்மண்டபம் சாட்சியமாய் இருந்தது.

அப்போது கிராமத்திலிருந்து பாதசாரிகளாய் வந்த இருவர் எதிர்ப்பட்டனர். ஒரு நல்ல விஷகடி வைத்தியர் இப்ப இருந்தாலும் பாம்பு கடித்த சிறுவனைக் காப்பாற்றியிடலாமென்ற அவர்களது உரையாடலை நல்லதம்பி கேட்க நேர்கிறான். விஷயமென்னவென்று விசாரிக்க, கமக்காரன் ஒருவனது மகனை பாம்பு கடித்துவிட்டதென்று கூறுகிறார்கள். தானொரு விஷகடிப் பரிகாரியென்று கூற, சிறுவனின் வீட்டுக்கு அவனைக் கூட்டிச்செல்கிறார்கள்.

சிறுவன் மோசமான நிலைமையில் இல்லை. யாரோ விஷயம் தெரிந்தவர்கள் கடித்த இடத்தின்மேல் கட்டுப்போட்டிருந்தார்கள். வாய் வழி மருந்தின்மூலமாகவே சிகிச்சையைத் தொடங்கினான் அவன். பலனும் விரைவிலேயே கிடைத்தது.

அவன் புறப்பட்ட நேரத்தில் பொழுது சாய்ந்திருந்தது. அங்கே தங்கி மறுநாள் காலையில் பயணம் தொடங்க அந்த கமக்காரன் வற்புறுத்தவே செய்தான். இரவிலே நடைச் சுகமிருக்கிறதென்றும், விஷகடி வைத்தியனான தானே விஷ ஜந்துகளுக்கு பயந்துவிட முடியாதென்றும் கூறி புறப்பாட்டை நல்லதம்பி தொடங்கினான். சில ரூபா நாணயங்களுடன் ஒரு நல்ல பாளைச் சூளையும் கொளுத்தி அக் கமக்காரன் கொடுத்தனுப்பினான்.

ஒரு மனக் கிளர்ச்சியில் பயணத்தைத் தொடக்கியிருந்தாலும் இரவின் தனி வழிப் பயணம் அவனைச் சிறிது சஞ்சலப்படவே செய்தது. அவசியமாய் இருந்தால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்மண்டபத்தில் தங்குகிற திட்டத்தை அவன் யோசித்தான். சாமத்துக்கு மேலாகியிருந்த ஒருபொழுதில் கல்மண்டபம் எதிர்ப்பட, அத் தனி மண்டபத்தை சூளின் உதவியுடன் கவனித்துப் பார்த்தான். காட்டெருமையின் வாசஸ்தலம்போல் பச்சைச் சாணாகங்கள் அதன் முன்னால் நிறைய இருந்திருந்தன. எனினும் கொஞ்சம் வெளிப்பான இடமாய் நீர்நிலையோடு அண்டியிருந்ததில் அங்கே தங்க அவன் முடிவுசெய்தான்.

தூணோடு சாய்ந்திருந்தபடியே நித்திரையாகிப் போன நல்லதம்பிக்கு ஒருபோது திடீரென விழிப்பு வந்தது. அப்போது எதிர்ப் பக்கப் புதரிலிருந்து அவன் வரும்போது இருந்திருக்காத வெளிர்நீலப் பிரகாசமொன்று கிளர்வதை அவனால் காணமுடிந்தது. என்ன அது? நாகமணியோ? ஆரம்பத்தில் அவன் திகைத்தாலும், பின்னர், ஆம், நாகமணியேதானென நிச்சயப்பட்டான்.

நீண்ட காலத்துக்குப் பின் அன்றுதான் அவனும் நாகமணிபற்றி எண்ணியிருந்தான். நாகமணிக்காக நாகதம்பிரானை வேண்டிய நாளும் அதுவாகவே இருந்தது. அவனது வேண்டுதலுக்கு தெய்வம் அந்தளவு சுறுக்காகவா அருள் செய்துவிட்டதென அவனுள் புளகிதம் பொங்கியது.

அக் கணத்தில் அவனிடத்தே இரண்டு உணர்வுகள் கிளர்ந்தெழுந்தன. ஒன்று, தன் பஞ்சமெல்லாம் பஞ்சாய்ப் பறந்திடப்போகும் பரவசம். மற்றது, நாகமணியைக் கக்கிவிட்டு அதன் வெளிச்சத்தில் இரை தேடப்போன நாகம் அந்த வெளிச்ச எல்லையிலேயே அரைந்துகொண்டிருக்கக் கூடியதான பயம்.

பாளைச் சூளை மெல்லவெடுத்து கங்குகள் தூரமாய்ப் பறந்துவிடாத அவதானத்துடன் தீயெழுப்ப அதை விசிறினான். சூளும் மெல்லத் தீப்பிடித்து தன் செம்மஞ்சள் ஒளிக் கதிரைச் சூழ வீசியது.

நீலவொளி பாய்ந்து வரும் இடத்துக்குச் சமீபத்தில் நாகத்தின் பிரசன்னம் இல்லையென்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, கல்மண்டபத்தின் முன்னால் இருந்த பசுஞ்சாணத்தை ஒரு பெரிய திரணையாகத் திரட்டியெடுத்தான். நீலவொளி சிந்தியபடியிருந்த நாகமணி அதனுள் பொதியும்படி அச் சாணித் திரணையை அதன்மேல் எறிந்தான்.

பூரணை நிலா மேகத்தால் கவிபடும்பொழுதில் உடன் விரியும் இருள்போல் சூழவெங்கும் இருட்டானது.

இனி அந்தப் பகுதியிலேயே அவன் நின்றுவிடக்கூடாது. அவ்விடத்தை எதிர்ப்படும் மனிதர்க்கும் அது பேரபாயம் விளைக்கும் இடமாகிப்போனது. அது, நாகம் நாகமணியை இழந்த அவலத்தில் தன்னையே வருத்தி அழிந்துபோகும்வரை தீராததாயிருக்கும்.

பையை எடுத்த நல்லதம்பி விரைவாக நடக்கத் தொடங்கினான். நாகமணியை இழந்த நாகம் தன்னைத் துரத்துவதான பிரமையில் ஓட உந்தும் மனத்தை, எவ்வளவு தூரத்தைத்தான் ஓடுவதென்ற நினைப்பில் அடக்கிக்கொண்டு, மேலும் விரைவாய் நடந்து விடிகிற நேரத்தில் வீட்டை அடைந்தான்.

ஒரு நாளாயிற்று. இரண்டு நாட்களாயின. நல்லதம்பிக்கு வீட்டில் இருப்புக்கொள்ளவில்லை. அவன்படும் அந்தரத்தைப் பார்த்த அவனது மனைவிக்குப் பெரிய அதிசயமாகயிருந்தது. கேட்டபோதும் தக்க பதில் அவன் சொல்லவில்லை. நாகமணி விவகாரம், அதைக் கையிலே எடுக்கும்வரை இரண்டாம்பேருக்குத் தெரியக்கூடாதென பாட்டன் எச்சரித்திருந்தார்.

நாகம்பற்றியும் அவர் சொல்லியிருந்தார். நாகமணியை இழந்த இடத்திலிருந்து வெகுதூரம் நாகம் போய்விடாது. இரவு பகலாக, சாப்பாடு தூக்கமின்றி அது தன் மணியைத் தேடிக்கொண்டேயிருக்கும். நாகமணியை இழக்கும் நாகத்தின் சோகமானது தாங்கமுடியாதது. சில நாகங்கள் தாங்களாகவே தங்கள் தலையைக் கல்லிலே மோதி மோதிச் செத்துப்போகுங்கள்; சில பசி தூக்கமின்றி அலைந்து அலைந்தே இறந்துபோகுங்கள்.

மூன்றாம் நான்காம் நாட்களில் அவனது அந்தரம் பெருமளவு குறைந்திருந்தது. ஐந்தாம் நாள் மேலும் தெளிவடைந்த நல்லதம்பிக்கு, மேலே நாகமணியினால் அடையப்போகும் பெருஞ்செல்வக் கனவுகள் பிறக்கத் துவங்கின.

இரண்டு மனைவியரும், நான்கு பிள்ளைகளும் வாழ்ந்துகொள்ள ஒரு பெரிய வீடு. வேண்டிய அணி மணிகள். மீதியில் கொஞ்சத்தை சொந்தங்களுக்கு உதவலாம். இன்னும் கொஞ்சத்தை ஊருக்கும் உதவமுடியும். ஆம், எவ்வளவோ பேருக்கு அவன் உதவலாம்!

அவன் யோசனையோடிருந்தாலும் முந்திய நாட்களைவிடத் தெளிவாயிருப்பதில் நிம்மதியடைந்து மனைவி ஒதுங்கினாள். ஆனால், ஏதோவொரு பொழுதில் யோசனையொன்று வர, 'புதிசாய்த்தான் ஒருத்தரும்வைத்தியத்துக்கு வரேல்ல, பழைய ஆக்களையாச்சும் ஒருக்காப் போய் பாத்திருக்கலாமே' எனக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நினைவிலிருந்தானோ, 'இன்னும் கொஞ்ச நாளில அதுவொண்டுக்கும் தேவையிராது' என்றான் நல்லதம்பி. 'விளங்கேல்லை.'

அவன் சமாளித்தான். 'ஆர் பாம்பு கடிச்சு சாகக் கிடக்கினமெண்டு காத்துக்கொண்டிருக்கிறதும் ஒரு பிழைப்போ எண்டதைச் சொன்னன்.'

'பிழைப்புக்கு எதாச்சும் வழி பண்ணவேணுமே அப்ப. எனக்கொரு யோசனையிருக்கு...'

'அப்பிடியே இருக்கட்டும். ஒருக்கா வன்னி போட்டுவந்தாப்பிறகு எல்லாம் விளக்கமாய்ச் சொல்லு.' சரியாக ஒரு வாரத்தின் பின் நாகமணியெடுக்கும் பெருங்கனவோடு ஊரிலிருந்து வெளிக்கிட்டான் நல்லதம்பி. நாகமணியைக் கொண்டுவந்து, அதை தனக்குத் தெரிந்த பத்தரின் மூலம் விலைபேசிக் காசாக்கும்வரை எங்கே, எவ்வாறு மறைத்து வைப்பதென்று அவன் யோசிக்கத் துவங்கினான். நிலமாகவும் பவுணாகவும் அந்தத் தொகையை மாற்றிவிடும் எண்ணம் அவன் கொண்டான். அவ்வளவு பெரிய தொகையை, எவ்வளவு பெரிய இரும்புப் பெட்டிக்குள்ளும் வைத்துவிட முடியாதென்று அவனுக்குத் தெரிந்திருந்தது. கொஞ்சத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பதானாலும், தான் முதன்மையான பணக்காரனாக இருக்குமளவை வைத்துக்கொள்ள வேண்டுமெனவே திட்டமிட்டான்.

தன் சகோதரங்களிலும் பார்க்க குஞ்சாச்சியின் மகள் அழகிக்கு கூடுதலான சலுகை செய்யவேண்டுமென அவன் விரும்பினான். அது குஞ்சாச்சி வாழ்ந்த காலத்தில் தன் தந்தையும் பிற உறவுகளும் செய்த கொடுமைகளுக்கான ஒரு சரியான பரிகாரமாயிருக்கமுடியுமென்பது அவனது நம்பிக்கை. குஞ்சாச்சியின் ஆவிவிட்ட சாபமே தன் குடும்பத்தின்மீதான தீராத இடும்பையாய் விழுந்திருக்கிறதென அவன் பலகாலும் கருதிவந்திருக்கிறான்.

சாணித் திரணையுள் நாகமணியை விட்டுவந்த கல்மண்டப பிரதேசத்தை அடையாளம் கண்டுகொண்டு, நாகத்தின் தேடலை நல்லதம்பி தொடக்கினான். ஈச்சம் புதர், கருங்கல்பாறைகளென அது செத்திருக்கக்கூடிய எந்த இடத்தையும் அவன் தவறவிட்டுவிடவில்லை. நல்லதம்பி வெகுநேரமாகத் தேடினான். நாகம் காணக்கிடைக்கவில்லை. இனி அங்கே தான் நிற்கக்கூடாதெனத் தோன்றியது அவனுக்கு.

அவன் அவசரமானான்.

தான் என்ன செய்வதென்பது குறித்து அவன் உடனடியான முடிவுக்கு வந்தாகவேண்டிய தருணமது. பாம்பு அந்த ஒரு வார காலவெளியில் எங்காவது செத்திருக்கும், அல்லது சாந் தறுவாயில் எங்காவது கிடந்திருக்கும் என்ற திண்ணத்தில் சாணித் திரணையுள் பொதிந்து வைத்த நாகமணியிருந்த இடத்தை ஆவலோடு அணுகினான்.

சாணித் திரணையுள்ளிருந்து நாகமணியின் நீலச் சுடர் அந்தப் பகல் வெளிச்சத்திலும் மின்னிக்கொண்டிருப்பதாகத் தோன்றியது அவனுக்கு. அவன் சாணித் திரணையை மனமும் உடம்பும் சிலிர்க்க எடுத்தான். காய்ந்திருந்த சாணியை கைகளுள் நொருக்கி நீலச் சுடர் தெறிக்கிறதாவென பார்த்தான்.

இல்லை. நீலச் சுடர் மட்டுமில்லை, எச் சுடரும் தெறிக்கவில்லை.

காய்ந்த சாணியுருண்டையை கைகளுக்குள் பொடியாக்கி நோக்கினான். அங்கே புன்னைக் கொட்டை அளவில் முருகுக் கல்போன்ற ஒன்றுதான் கிடந்திருந்தது.

நல்லதம்பியின் நெஞ்சுக்குள் முறுக்கியது. தலை கிர்...ரென சுறையாய்ச் சுழற்றியது. அவன் தன் பிரக்ஞையைத் தக்கவைக்க பெரிதும் போராடினான்.

தெளிவு சற்றுத் தெரிந்தது. அப்போது பாட்டனின் வைர வரிகள் பொருத்தமாய் ஞாபகமாயின. 'எதுக்கும் பலனிருக்கவேணும். காலம் நல்லாயில்லையெண்டா... கிணத்துத் தண்ணியும் உப்புத் தண்ணியாய்ப் போகும்!' ஒரு நீண்ட பொழுதின் உறைவிலிருந்து தன்னைத் தேற்றிக்கொண்டு உள்ளங்கையிலிருந்த அந்த முருகுக் கல்போன்ற பொருளை எடுத்துப் பார்த்தான். அவனது கண்களின் திரண்ட ஏமாற்றத்தின் நீர்த் திரையினூடாகவும் அவ்வுருண்டையிலிருந்த சிறு சிறு துவாரங்கள் புலனாகின. பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையே அவ்வுருண்டையைப் பிடித்து நெரித்தான். அது மாவுருண்டைபோல் தூளாயுதிர்ந்தது. கடவுளே, கடைசியில் உறுதியான திண்மமாய்க்கூட அவனது நாகமணி எஞ்சவில்லையே!

கையிலிருந்த பொடியை காற்றில் விசிறிவிட்டு அருகிலிருந்த நீர்நிலையில் கையைக் கழுவினான். நாகத்தின் அச்சமற்றவனாய் ஒற்றையடிப் பாதையில் ஏறி கிராஞ்சித் திசையை நோக்கி நின்றான். உயிர்மூச்சாய் ஒரு மூச்சை நீள உள்ளிழுத்தான். விஷகடி வைத்தியன் நல்லதம்பியாய் சுயம் உருவாகிற்று.

அவன் நடக்கத் துவங்கினான். இடைவழி சென்றுகொண்டிருக்கையில் சாரலின் பிய்ந்து கிடக்கும் கூரையைக்கூட தன்னால் வேய்ந்துகொடுக்க முடியவில்லையே என்ற துயர் வழக்கம்போல் அவனுள் எழுந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுமதிகள்

2005ல் வெளியான The Values என்ற
தனது கதையினை
ஆசிரியரே மொழி பெயர்த்தது.



அத்தையை வீட்டிற்குள் எங்கும் காணவில்லை. அப்பன் உரத்துக் குரல் கொடுத்தான்.

"அப்பன், நீயா?", அத்தையின் பதில் கேட்டது. "நான் பின் தோட்டத்தில இருக்கிறன், இங்க வா."

அப்பன் அங்கு போனான். அத்தையுடன் இன்னொரு பெண்ணும் இருந்தாள். அப்பன் அந்தப் பெண்ணை அடிக்கடி அத்தையின் இடத்தில் பார்த்திருக்கிறான். முப்பது, முப்பத்தைந்து வயதிருக்கும். அவள் அத்தையிடம் கிடுகுகளை வாங்கி வேறு இடத்தில் விற்பவள். இன்றும் அவர்களுக்கு முன்னால் ஒரு பெரிய கட்டுக் கிடுகுகள் இருந்தன. அத்தையால் நேர்த்தியாகப் பின்னப்பட்ட நீண்ட கிடுகுகள். அப்பன் அங்கு வரும்போது இருவரும் அமளியாக விலை பேசிக் கொண்டிருந்தனர்.

"நீ ஒரு நிமிஷம் பொறு, அப்பன்," என்று அவனிடம் சொல்லிவிட்டு மீண்டும் அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பினா, அத்தை.

"இந்தா பார் பொன்னி, நீ என்னட்டைத் தொடர்ந்து வாங்கிறதாலதான் இந்த விலை சொல்றன். மற்றப்படி ஒரு கிடுகு ஆறு ஐம்பதுப்படிதான் என்னால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க ஏலும். நேற்றுக் கூட அந்த அன்னம் வந்து அந்த விலைதான் கேட்டது. இந்த நாசமாப்போன சண்டைக்குப் பிறகு கிடுகுகளுக்குச் சரியான தட்டுப்பாடு, தெரியுந்தானே?... பளைப் பக்கங்களிலை இருந்த தென்னைகளில முக்கால்வாசி குண்டுகளால அழிஞ்சு போச்சுது அதுக்கு முதல் பதுங்கு குழிகளுக்காக அரைவாசி போச்சு... இப்ப வரத்து, ஊர்க் கிடுகு மட்டுந்தான்...''

''அம்மா, அஞ்சு ஐம்பது போடுங்கோ அம்மா.''

''இல்லைப் பொன்னி, கோவியாதை,'' தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தா அத்தை. ''அப்படியெண்டால் அன்னத்தைக் கூப்பிட்டு எடுத்துக் கொள்ளச் சொல்றன்.'' அத்தை பேசும் விதத்தில் அப்பனுக்கு அவவில் கொஞ்சம் அதிருப்தியும், பொன்னியின் மீது சற்றுப் பரிதாபமும் ஏற்பட்டன.

பொன்னி தயக்கத்துடன் சம்மதிக்க நேர்ந்தது.

''சரி, அப்ப எண்ணிப் பார்,'' என்று சொல்லிவிட்டு அப்பனைக் கூப்பிட்டா அத்தை ''அப்பு, நீ சைக்கிளிலதானே வந்த நீ?'

''ஓம், அத்தை. ''

''தயவுசெய்து டக்கெண்டு ஒருக்கால் கடைக்கு ஓடிப் போட்டு வாறியா?'

அவன் உடனடியாக ஒப்புக்கொண்டான். அவனுக்கு அப்போது வகுப்புகளோ, டியூஷன்களோ இல்லை, பிற்பகல்தான் கூட்டாளிமார் மைதானத்தில். காத்திருப்பார்கள். அத்தை பணமும் பையும் கொண்டு வர வீட்டிற்குள் போனா. மாமரத்தடியில் இருந்த சிறிய வாங்கில் அப்பன் அமர்ந்தான்.

அத்தை உண்மையில் அவனுடைய அத்தை அல்ல, அவனுடைய அம்மாவின் அத்தைதான் அவ. அவனுடைய பாட்டாவின் இளைய சகோதரி. அப்பனும் தன்னுடைய தாயாரைப் போலவே அழைத்துப் பழகி விட்டான்.

''மூண்டு, மூண்டு, மூண்டு... நாலு, நாலு, நாலு..'' என்று ஒரு பாடலைப் பாடுவது போல எண்ணுவதில் மும்முரமாக இருந்தாள், பொன்னி. அந்தப் பெரிய வளவின் அடர்ந்த பசுமையை முற்பகல் வெயில் ஊடுருவ முயன்று கொண்டிருந்தது. இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தென்னைகளும், மா, பலா மரங்களும், அத்தையின் கவனத்தால் நன்றாகச் செழித்திருந்தன. நடுவிலிருந்த பெரிய பழைய வீட்டில் அவளுடன் தங்கியிருந்த தங்கம்மாச்சி, மற்றும் வயதான தூரத்து உறவினர் ஒருவர் - இவர்களிருவரின் உதவி மட்டுமே அத்தைக்கு இருந்தது. கொத்துதல், வெட்டுதல் போன்ற கடினமான வேலைகளுக்குக் கூலி ஆட்களை அமர்த்தினாலும், மற்றப் பாடுகளை எல்லாம் அத்தை தானே பார்த்துக் கொண்டா. வயது எழுபதை எட்டப்போகிற இவ் வேளையிலும் குறையாத சுறுசுறுப்பும் ஆரோக்கியமும் இருந்தன. அத்தையைப் பார்க்க வந்த எல்லோரும் அவ வளவைப் பராமரிக்கிற விதத்தைப் பாராட்டாமல் விட்டதில்லை.

மாமா அரசு சேவையில் இருந்து ஓய்வு பெற்றபோது, அவர்களின் மூத்த மகன் ஏற்கனவே பட்டம் பெற்றிருந்தான், இரண்டாவது மகன் பொறியியல் பீடத்தில் படித்துக் கொண்டிருந்தான். பல தலைமுறைகளாக அந்தக் குடும்பம் நன்றாகவே இருந்தது. அத்தைகூட அந்தக் காலத்தில் சீனியர் ஸ்கூல் சர்டிபிகேட்டில் தேர்ச்சி பெற்றிருந்ததாக, அப்பனின் அம்மா அவனிடம் சொல்லியிருக்கிறா. நரைத்த தலைமுடியும், சுருங்கிய முகமும் கொண்ட இந்த வயதான பெண்மணியைப் பள்ளிப் பெண்ணாகக் கற்பனை செய்வது அப்பனுக்கு எப்போதும் கடினமாக இருந்தது.

அத்தை திரும்பி வந்த போது பொன்னி எண்ணி முடித்துவிட்டு, வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொண்டு அமர்ந்திருந்தாள். ''எண்ணியாச்சா, பொன்னி?' அத்தை கேட்டா.

''ஓம், அம்மா. இருபது துண்டு,'' என்று வெற்றிலையை மீண்டும் சரையில் வைத்துவிட்டு, சேலையின் நுனியில் இருந்த முடிச்சை அவிழ்த்தாள் பொன்னி. ''இந்தாங்கோ, நூற்றி இருபது இருக்கு,''

அத்தை பணத்தை எண்ணி இடுப்புச் சேலையில் சொருகிக் கொண்டா.

''அம்மா,'' பொன்னி மீண்டும் உட்கார்ந்து, வெற்றிலை பாக்கை மடித்து வாய்க்குள் வைத்தபடி மெதுவாக அழைத்தாள். ''நான் கேட்ட விஷயத்தை மறந்திட்டியோ?' ஒரு கணம் புருவங்களைச் சுருக்கிய, அத்தை, ''ஐயோ, பொன்னி,'' என்று, நெற்றியை உள்ளங்கையால் லேசாகத் தட்டிக் கொண்டா. ''உண்மையில நான் மறந்திட்டன்...!'' பொன்னி அவள் முகத்தை எதிர்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இண்டைக்குச் சனிக்கிழமைதானே அப்பு, இல்லையா? என்று நிச்சயம் செய்து கொள்வது போல் அப்பனிடம் கேட்டாள் அத்தை.

''ஓ.''

'அப்பிடியெண்டாச் சரி,'' அத்தை தனக்குள்ளேயே பேசிக் கொண்டா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“நீ பொறு, இப்பவே தாறன்.” என்று பொன்னியிடம் சொல்லியபடி மீண்டும் வீட்டிற்குள் போனா.

கடைக்குப் போக வேண்டிய அலுவலை அத்தை மறந்து விட்டாவா என்று நினைத்தபடி அப்பன் திரும்பவும் வாங்கில் அமர்ந்தான்.

நாட்டில் இனக்கலவரம் வெடித்ததாலும், அதனைத் தொடர்ந்து வடக்கில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையாலும் அத்தையின் பிள்ளைகள் ஒவ்வொருவராக வெளிநாடுகளுக்குச் சென்று இறுதியில் அங்கேயே குடியேறினார்கள். மாமாவும் அத்தையும் தங்கள் மூதாதையர் வீடு, சொத்துக்கள், பழகிய வாழ்க்கை முறை, எல்லாவற்றையும் விட்டு எங்கும் செல்ல மறுத்தனர். பெற்றோரின் மறுப்பால் மகன்கள் கோபமடைந்தாலும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதியில் வயதான காலத்தில் அவர்கள் தனியாக இருப்பதைப் பற்றிக் கவலைப்பட்டாலும், அவர்களால் அதைத் தடுக்க முடியவில்லை. இடப் பெயர்விலிருந்து திரும்பி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மாமா காலமானார். தந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்ய மூத்த மகன் கனடாவில் இருந்து கஷ்டப்பட்டு வந்து சேர்ந்தான். திரும்பிப் போகும்போது அம்மாவையும் தன்னுடன் அழைத்துச் செல்ல எவ்வளவோ தெண்டித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ உன்ர அப்பாவைப்போல இந்த மண்ணில்தான் நானும் இறுதி மூச்சு விடுவேன்,” என்று அத்தை அவனிடம் உறுதியாகச் சொல்லிவிட்டா.

இரண்டாவது மகன் அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தபோதும் தாயிடமிருந்து அதே பதில்தான் கிடைத்தது. எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அத்தை தனது விதவை ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருந்தா, ஆனால் அப்போதைய தரத்தின்படி அவ்வளவு பெரிய தொகையாக அது இல்லை. என்றாலும் இந்த நிலை கூட அவளை எந்த உதவிக்கும் பிள்ளைகளின் பக்கம் திரும்ப வைக்க முடியவில்லை, அதற்குப் பதிலாக அவ சொன்னா, “என்னிடம் இருக்கிறது எனக்குப் போதும். ஏதாவது தேவைப்பட்டால் கட்டாயம் நான் உங்களிடம் கேட்பேன். அதுவரை தயவு செய்து எனக்கு எதுவும் அனுப்ப வேண்டாம்.”

வளவில் இருந்த மரங்கள், மாத வருமானத்திற்குத் துணை புரிய ஆரம்பித்தன. வாழ்க்கை சிரமமின்றி நடந்தது.

அத்தை கையில் ஒரு சிறிய ஷொப்பிங் பையுடன் வெளியே வந்து பொன்னியிடம் போனா. கிடுகுகளைப் பிரித்து இரண்டு கட்டுகளாகப் பொன்னி கட்டி வைத்திருந்தாள். “இந்தா, இதை வைச்சிரு.”

பொன்னி நன்றியும் முறுவலுமாய் அதைத் தன் இரு கைகளாலும் வாங்கி உள்ளே இருந்ததைக் கவனமாக வெளியே எடுத்தாள்.

அழகான ஒரு சேலை வழுகி வருவதை அப்பன் பார்த்தான். பொன்னியின் முகம் முழுதாய் மலர்ந்தது. “நல்ல சேலை, அம்மா,”

பொன்னி அத்தைக்கு நன்றி சொல்லிவிட்டுப் பார்சலைத் தன் மடியில் இறுக்கமாகப் பத்திரப்படுத்தினாள்.

“இதை ஒரு கை பிடியெணை, அம்மா... கொண்டு போய் வைச்சிற்று வந்து மற்றக் கட்டு எடுக்கிறன்.” பொன்னி தலையில் கிடுகுக் கட்டுடன் வெளியே போனதும் அத்தை கேற்றைக் கொழுவி விட்டுத் திரும்பி வந்தா. “அது நல்ல விலையானது போல இருக்கு அத்தை... அதைக் கொடுத்திட்டீங்களா? “ என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அப்பன்.

“ஓம், அப்பு,” என்று அமைதியாகச் சொன்னா அத்தை. அப்பன் ஏறிட்டுப் பார்த்தான்.

“என்னட்டை வேறை கிடக்கு. அதை நான் வச்சிருந்து என்ன செய்ய? அவளுக்குப் பிரயோசனமாயிருக்கும், கொண்டு போய்க் கட்டட்டும்.”

**சிறுகதை** | **தாட்சாயணி**

## 1

“இருபது லட்சம் உங்களால ஒழுங்கு பண்ண ஏலுமோ...?” வன்னியசிங்கம் கேட்டார்.

அருணகிரி திரும்பி சரஸ்வதியைப் பார்த்தார். அவளது கண்கள் திகைத்திருந்தன. மெல்ல விழியசைத்தாள். அவர் திரும்பி வன்னியசிங்கத்தைப் பார்த்தபடி,

“ஓம், நான் எப்பிடியாகிலும் ஒழுங்குபடுத்துறன்” என்றார்.

“சரி நான் புரோக்கரிட்டைக் கதைச்சுப் பாக்கிறன். அங்காலை இன்னொரு பகுதியார் இருபத்தைஞ்சு தாறதாய் சொன்னவையாம். ஆனால், அவையள் எங்களிட்டைச் செய்யிறதிலை கொஞ்சம் விருப்பமாய் இருக்கிறதால தான், புரோக்கர் அறுதியாய் ஒரு முடிவைக் கேட்டு வரச் சொன்னவர்...”

சரஸ்வதி கரைத்துக் கொடுத்திருந்த தேசிக்காய்த் தண்ணீரை உறிஞ்சிக் கொண்டே வன்னியசிங்கம் சொன்னார்.

“எங்கத்தையத் தேசி இது? நல்ல இனிப்பாய்க் கிடக்கு...”

“இஞ்சை எங்காலை தேசி? பயிர், பச்சை வைக்கவே இடமில்லை, உது சந்தேலை வாங்கின தேசிக்காய்” அருணகிரி அலுத்தபடி சொன்னார்.

“நாலுசந்தியிலை கிடக்குற எங்கட காணிக்கை தான் பயிர்பச்சை அந்த மாதிரி வரும். அங்கை தேசி என்ன மாதிரி காய்ச்சுக் கொட்டினது அப்ப...”

“மாப்பிள்ளை என்ன வேலையெண்டு தெரியுமோ...?” சரஸ்வதி குறுக்கிட்டாள்.

“அவன் ஒரு இன்சூரன்ஸ் கம்பனிலை வேலை செய்யிறானாம். சேர்ந்து ரெண்டு வருஷமாம். பெர்போர்மன்ஸ் காட்டினா,போகப்போக போனஸ் அது, இதெண்டு கூடக் கிடைக்குமாம். வெளிநாடுகளுக்கும் போய் வரலாமாம்.கொஞ்ச நாளிலை காரும் வாங்கிப் போடுவானெண்டு சொன்னவையாம்...”

“எங்களுக்கு அவ்வளவெல்லாம் ஆசை இல்லை. பிள்ளையைக் கவனமா வைச்சுப் பாத்தாக் காணும்.” சரஸ்வதி சொன்னாள்.

“மூண்டு குமர்ப்பிள்ளையளை வச்சுக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தி

வருஷக்கணக்கா அலைஞ்சு திரிஞ்சம். இப்ப ரெண்டைக் கரை சேர்த்தாச்சு. மூண்டாவதைக் கரை சேர்க்க இவ்வளவு அல்லாட்டமாக் கிடக்கு" அருணகிரி பெருமூச்சு விட்டார்.

"என்னட்ட விட்டிட்டீங்கள் எல்லோ, இனி அதைப் பற்றிக் கவலைப்படாதேங்கோ, எல்லாம் சரி வரும்" அவர்சொல்லிக் கொண்டிருந்த போது தேவசக்தி, படலையைத் திறந்து உள்ளே வந்தாள். இவரைக் கண்டு ஒரு முறுவலைச் சிந்தி விட்டு உள்ளே போனாள். கசந்த முறுவல். அவள் அறிந்திருந்தாள், தன்னைப் பற்றிய கவலைகளும், அங்கலாய்ப்புகளுமே அவரிடமிருந்து வெளிப்பட்டிருக்குமென்று.

"இப்ப எங்க பிள்ளை பள்ளிக்கூடம்?"
சொன்னாள்.

"ஓ... இருபது மைல் இருக்கும் என்ன? பஸ்சிலையோ போறனீர்?"

"'"ஓமோம்," அவள் நின்று தலையசைத்து விட்டு,

"கதையுங்கோ, மாமா," என்றவாறே உள்ளே போனாள்.
மேலும் சற்று நேரம் இருந்து கதைத்த பிறகு,

"ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ, காசை மட்டும் ஒழுங்கு பண்ணுங்கோ, மிச்சத்தை நான் பாக்கிறன்..." என்றவாறு வன்னியசிங்கம் விடை பெற்றார்.

சேலையிலிருந்து கவுணிற்கு மாறி வெளியே வந்த தேவசக்தியின் காதில் அவரது வார்த்தைகள் விழுந்தன. அவர் தெருவில் இறங்கியது உறுதியானவுடன்

"காசு ரெடி பண்ணுறது தானை உள்ளதுக்குள்ளையே சிக்குப் பிடிச்ச வேலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை நாங்கள் செய்தாப் பிறகு அவர் என்ன பாத்துக் கொள்ளப் போறாராம்...'' என்றாள் சரஸ்வதியைப் பார்த்து.

''நீ உந்த வாயை வச்சுக் கொண்டு சும்மா இரு...'' என்றாள் சரஸ்வதி.

## 2

அருணகிரி கொல்லைப்புறத்தில் மாட்டிற்கு வைக்கோல் இழுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்.

''கலியாணத்தை ஒப்பேத்திப் போட வேணுமெண்டு ஓமெண்டு சொல்லியாச்சு. இப்ப இருபது லட்சத்துக்கு என்னப்பா செய்யுறது?''

''மூத்ததுகளிண்ட கலியாணங்களுக்குக் கிடந்த காணிகளையெல்லாம் வித்தாச்சுது. இப்ப விக்கிறதுக்கும் காணி இல்லை...''

''நாலு சந்தியிலை கிடக்கிற என்ரை சீதனக்காணி, இப்ப இருந்தும் பிரயோசனம் இல்லாத நிலை...''

''அவங்கள் அந்தக் காணியை விட்டு எழும்புவாங்கள் எண்டு பாத்துப் பாத்து நாங்களும் காத்திருந்தது தான் மிச்சம். இருபத்தைஞ்சு வருஷம் ஆச்சுது, இனியெங்கை விடப் போறாங்கள்...?''

''பிள்ளைக்கும் முப்பத்திரண்டு வயசாப் போச்சுது. கலியாணத்தைத் தள்ளிப் போட்டுக் காணியைப் பிடிச்சுக் கொண்டிருந்து என்ன செய்யுறது...?''

''அவங்கள் இருக்கத்தக்கபடி நாங்கள் காணியை விக்கவும் ஏலாது. ஒருத்தரும் வாங்கவும் வர மாட்டினை...''

''அப்ப, என்ன தான் செய்யுறது...?''

அருணகிரி மாட்டுக் கொட்டிலுக்குள்ளிருந்து வெளியே வந்தார். சரஸ்வதிக்கருகே வந்து அவளைத் தயங்கியபடி பார்த்தார்.

''அரசாங்கம் சுவீகரிக்கக் கேட்டது தானை. ஓமெண்டு சொன்னமெண்டா நட்ட ஈடு கிடைக்கும்...'' சரஸ்வதி ஒன்றும் பேசாமல் இருந்தாள். பின்னர்,

'' சின்ன வீடெண்டாலும் நாங்கள் பிறந்து வளந்து, விழுந்து எழும்பின வீடு அந்தக் காணிக்கை தான் கிடக்குது. கடைசி வரைக்கும் நான் அங்கை தான் இருக்க வேணும் எண்டு நினைச்சுத்தான் என்ரை அம்மா, அப்பாவை அந்தக் காணியையும், வீட்டையும் எனக்கு எழுதி வைச்சவை. எங்கடை தலையெழுத்து அங்கை இருக்க ஏலாமல் இடம்பெயர்ந்து ஆர், ஆர்ரையோ வீடுகளிலை வாடகைக்கு இருக்க வேண்டிக் கிடக்கு. சரி, அது தான் எங்கட விதியெண்டால் என்ன செய்யிறது. அவளுக்கு ஒரு வாழ்க்கை வேணும் தானை. அரசாங்கம் காணியை எடுத்திட்டு நட்ட ஈடு தரட்டுக்கும்''

அருணகிரி எதுவும் பேசவில்லை. இதுகாலவரை அறியாத விடயமெதையும் அவள் பேசி விடவில்லை. எல்லாம் அவரும் அறிந்தது தான். அவர் உள்ளே வந்த போது தேவசக்தி சேலையிலிருந்து மெல்லிய நிற கவுணொன்றிற்கு மாறியிருந்தாள்... பக்கத்தில் அவள் அலைபேசி பாடிக் கொண்டிருந்தது.

'பார்வை கற்பூரதீபமா ஸ்ரீவள்ளி, பேச்சு கல்யாணி ராகமா?' என்று சித் ஸ்ரீராமின் குரல் உச்சாஸ்தாயியில் எழுந்த போதும், அவ்விடத்தில் மென்மையான இசையின் ஸ்பரிசம் தோய்ந்திருந்ததாய் எண்ணும் அளவிற்கு மெதுவான சத்தத்தில் அலைபேசியை வைத்திருந்தாள். இசை தவிர்ந்த வேறேதும் சத்தமற்ற மௌனத்தில் அவள் விரல்கள் வேலையில் ஆழ்ந்திருந்தன. அருணகிரி ஒரு பெருமூச்சோடு உள்ளே நகர்ந்தார்.

சற்றுப் பொறுத்து வெளியே வந்தவர்,

''ஒரு கடிதமொண்டு எழுத வேணுமம்மா...'' என்றார்.

'' என்ன கடிதமப்பா...?''

''எங்கட நாலு சந்தியடியிலை கிடக்கிற காணி, அந்தப் பத்துப் பரப்புக் காணியையும் அரசாங்கத்துக்குக் குடுக்கிறதுக்குச் சம்மதம் எண்டு எழுதிக் குடுக்க வேணும்...''

''அரசாங்கத்துக்கெண்டா, அது ஆமிக்குத் தானையப்பா...'' அவர் தலை குனிந்து கொண்டது.

''ஏனப்பா திடீரெண்டு? எப்பவெண்டாலும் அவங்கள் எழும்பத்தானே வேணுமெண்டு சொல்லுவீங்கள்''

''நாங்கள் சாவுப்படுக்கைக்குப் போகும் மட்டும் அவங்கள் எழும்ப மாட்டாங்கள்''

''இதென்னப்பா கதை?''

''உண்மைதானே, சொல்லாட்டி மட்டும் நடக்காம விடப் போகுதே...?''

''அம்மா, என்ன சொல்லுறா...?'' அவள் எழுந்து கைப்பைக்குள்ளிருந்து பேனாவையும், தாளையும் எடுத்தவாறே கேட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பேருக்கு மட்டும் காணியை வச்சிருந்து என்ன செய்யிறது...?” அடுக்களைக்குள்ளிருந்து சரஸ்வதியின் குரல் வெளிப்பட்டது.

“எனக்கு அந்தக் காணியே ஞாபகமில்லை. அந்தப்பக்கத்தாலை போகேக்கை ஆமிக்காரன் சென்றிக்கு நிக்கிறதைத்தான் பாத்திருக்கிறன். சில வேளைகளிலை உள்ளை ‘மார்ச்சிங்’ சத்தம் கேட்கும். ஆனா ஆமிக்காரன் அங்கை நிறைய அகத்தி வச்சிருக்கிறான். வாசலுக்கு வெளிலையே வேலிக்கரையிலை வரிசையா அகத்தி வளந்து பூத்திருக்கும்...” என்றாள் அவள். எழுதத் தொடங்கியபோது அவளது மெல்லிய சாய்வான எழுத்துக்கள் தாளில் பதிந்தன.

“என்ரை சீதனக்காணி. அதை உனக்குச் சீதனமாத் தர வேணுமெண்டது தான் எங்கட விருப்பம். சீதனக் காணியாத் தர ஏலாமல் போனாலும் அதாலை வாற நட்ட ஈட்டுக் காசை உனக்குச் சீதனமாத் தருவம் எண்டு இப்ப யோசிக்கிறம்.”

“ம்ம்...” உலர்ந்த பெருமூச்சோடு அவள் கடிதத்தை எழுதி முடித்து அருணகிரியிடம் நீட்டினாள்.

“இந்தக் கடிதத்தைக் குடுத்து, அரசாங்கம் சுவீகரிப்புச் செய்து நட்ட ஈடு தர வருசக்கணக்கு ஆகுமாம். என்னோடு படிச்ச பிள்ளை ஒருத்தி காணி சுவீகரிப்புப் பகுதில வேலை செய்யுறாள், அவள் சொல்லுறவள்”

“அது வாற நேரம் வரட்டும். எப்பிடியும் வருமெண்டால் நம்பி ஆரிட்டையேன் காசு கைமாறலாம்தானே...”

“அப்ப கடன் எடுக்கிறதுக்கு உத்தரவாதமாத் தான் இந்தக் கடிதமோ...?” அவள் சிரித்தவாறே அலைபேசியைக் கையிலெடுத்தாள்.

## 3

ஊர்ப்புறத்தில் பொது இடங்களில் அந்த அறிவித்தல் ஒட்டப்பட்டிருப்பதாகக் கிராம அலுவலர் கூறியிருந்தார். இவர்களது வீட்டிற்கு அந்த அறிவித்தலைக் கொண்டு வந்த போது சொன்னார்.

“உங்கட அலுவல் இனிச் சரி வந்திடும். அடுத்த திங்கள் உங்கட காணி அளக்கிறதுக்கு சேவயர் டிபாட்மெண்ட்காரர் வரீனை. அவையள் அளந்திட்டீனமெண்டால், பிறகு எல்லா அலுவலும் கெதிலை நடக்கும்...”

அருணகிரியின் முகத்தில் ஆறுதலான புன்னகையொன்று பரவியது. வன்னியசிங்கம் திருமண அலுவல்களை இனி, ஓடியாடிப் பார்த்துக் கொள்வார். கடன் விஷயத்தை மட்டும் இவர் பார்த்துக் கொள்ள வேண்டும். சீதன விஷயங்கள் சரியாகிற்றென்றால், மகளை அழைத்துக் கொண்டு ஒரு கோயிலுக்குப் போய், அவனையும் குடும்பத்தோடு அழைத்து இருவருக்கும் ஆளையாள் பிடிக்கிறதா எனப் பார்க்க வேண்டும். பட்டணத்திலிருக்கின்ற இரண்டாமவளையும் ஒரு தரம் ஊருக்கு வந்து போகச் சொல்ல வேண்டும் என நினைத்தார்.

## 4

காணியளக்கும் தினத்திற்கு முதல் நாளன்று அருணகிரிக்கு மனம் முழுக்கப் பரபரப்புச் சூழ்ந்து கொண்டது. சரஸ்வதியையும் காணி அளக்கும்போது கூட வருமாறு கேட்டார்.

“காணிக்குள்ள போய் எவ்வளவு காலம்? எல்லை காட்டுற சாக்கிலை நாங்கள் காணிக்குள்ள போய்ப் பாப்பம்” என்றார்.

“நீங்களே போய் எல்லைகளைக் காட்டிப் போட்டு வாங்கோப்பா. ஒரேயடியாக் காணி போகப் போகுது, இனிமேல் இது எங்கட காணி இல்லை எண்ட நினைப்போட, என்னாலை அந்தக் காணியுக்க நிக்கேலாதப்பா...”

“நான் வரட்டோப்பா...?” தேவசக்தி ஆர்வமாய்க் கேட்டாள். “உண்மையாத்தான் கேட்கிறியோ...?” அருணகிரி ஆச்சரியமானார்.

“பின்ன விளையாட்டுக்கோ கேக்கிறன்? இது வரைக்கும் நான் அந்தக் காணிக்கை போனதில்லை. இனியும் போகப் போறதில்லை. அம்மா பிறந்து திரிஞ்ச வளவை ஒருக்காலாவது பாப்பம்.”

“குமர்ப்பிள்ளை, கலியாணத்துக்குத் தயாராய் ஆளை வச்சுக் கொண்டு, ஆமி இருக்கிற இடத்துக்கு ஏனப்பா கூட்டிக் கொண்டு போறீங்கள்?”

சரஸ்வதிக்கு மகள் போவதில் கொஞ்சமும் இஷ்டமில்லை. “அவளுக்கு உரித்தான காணியை அவளும் ஒருக்காப் பாக்கட்டுமன். தனியாவே போறாள். நானும் கூடப் போறன் தானே....”

அருணகிரி அவளுக்குச் சார்பாகத்தான் நின்றார்.

தேவசக்தி பாடசாலைக்கு விடுப்பு அறிவித்தாள்.

## 5

நாலுசந்திக்கருகே இவர்கள் போனபோது என்றுமில்லாதவாறு சிறு திரளாய் மக்கள் கூடியிருந்தார்கள். ஆங்காங்கே பச்சைச் சீருடைகள் தெரிந்தன. இவர்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்த முகங்களென்று யாரும் இருக்கவில்லை. கிராம அலுவலர் எங்காவது தென்படுகிறாராவென அருணகிரி நோட்டமிட்டார். தேவசக்தி வேலிக்கரையோரம் வரிசையாக உயர்ந்து வளர்ந்திருந்த அகத்தி மரங்களை நிமிர்ந்து பார்த்தாள். நீள்வட்ட இலைகளுடன், வெண்சிறகு போலும் மென்மையான பூக்களும் காற்றில் அசைந்தன. இராணுவ வீரன் ஒருவன் சிறு கொக்கியொன்றினால் கிளைகளை வளைத்து இலைகளை ஆய்ந்து கொண்டிருந்தான்.

"பாத்தீங்களேயப்பா, நான் சொன்ன அகத்தி மரங்கள்..." அவள் அருணகிரியிடம் சொன்னாள்.

"ம்ம், முறையா வச்சுப் பராமரிச்சிருக்கிறாங்கள். மதியச் சமையலுக்கு ஆயிறாங்கள் போல..." என்றார்.

" வீட்டிலை அகத்தி உண்டாக்கினால் எவ்வளவு நல்லம்...." என்றாள் தேவசக்தி.

"அகத்தி ஆயிரம் காய் காய்ச்சாலும், புறத்தி புறத்தியே எண்டொரு பழமொழி இருக்கு "என்றார் அருணகிரி.

"அப்பிடியெண்டால்...?"

"எப்பிடித்தான் அகத்தி ஆயிரமாய்க் காய்ச்சாலும் அதுண்டை காயைச் சமையலுக்கு எடுக்கிறேல்லை...."

"இலையைச் சமைக்கிறம் தானை..."

"இலையைச் சமைக்கிறம் தான், ஆனா அகத்தியை ஒருத்தரும் வீட்டிலை வளக்கிறதில்லை. வெறும் வளவுகளிலை தான் வளப்பீனை..."

"அதேன் அப்பிடி...?"

"ஏனோ தெரியாது, அப்பிடி ஒரு வழக்கம் எங்கட சனத்திட்ட வந்திட்டுது"

கிராம அலுவலர் அடையாளம் கண்டு கொண்டு இவர்களை நோக்கி வந்தார்.

"இன்னும் டிபார்ட்மென்ட்காரர் வரேல்லை. வரட்டும், வெயிட் பண்ணுவம் "என்றார்.

சற்றுத்தள்ளி நின்றவர்கள் கிராம அலுவலரிடம் வந்து ஏதோ பிரச்சினை பண்ணிய போது அவர் அவர்களை அழைத்துக் கொண்டு அப்பால் போனார். இன்னும் சிலர் இவர்களை நோக்கி வந்தார்கள்.

"நீங்களோ காணிச் சொந்தக்காரர்...?" என்றான் அவர்களில் ஒருவன்.
அருணகிரி ஆமெனத் தலை அசைத்தார்.

"சனங்களிண்டை குடியிருப்புப் பகுதில ஆமிக்காரனுக்குக் காணி குடுக்க என்னெண்டு ஓமெண்ணுவீங்கள்...?" என்றான் இன்னொருவன் சத்தமாக.

திகைத்துப் போன அருணகிரி "அது என்ரை காணி தம்பியவை..." என்றார்.

"உங்கட காணி எண்டாப்போலை, நீங்கள் நினைச்சபடி குடுக்கேலாது, இன்டைக்குக் காணி அளபடப் போகுது எண்டு அறிஞ்சு தான் வந்தனாங்கள்... எங்கட மண்ணிண்டை ஒரு அடியும் சிங்களவனுக்குக் குடுக்க நாங்கள் விட மாட்டம்..." என்றான் முதலாமவன்.

"நீங்கள் உங்கடையெண்டால் குடுக்கத் தேவையில்லை. இது எங்கட..." தேவசக்தி தனக்குள் முணுமுணுத்தாள். உரக்கத் தொடங்கிய குரல்களைக் கேட்டு விட்டுக் கிராம அலுவலர் இவர்கள் பக்கம் திரும்பினார்.

"காணிச்சொந்தக்காரர் குடுக்கிறதுக்கு ஓமெண்டால், நீங்கள் ஒண்டும் செய்யேலாது..."

"ஒண்டும் செய்யேலாதோ, அதையும் ஒருக்காப் பாப்பம்..." சற்றுத் தள்ளி ஒரு ஹயஸ் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு கட்சியின் பிரதிநிதியும், தொண்டர்களும் இறங்கினர். அந்தக் கட்சிப் பிரதிநிதியை அடையாளம் கண்டு கொண்ட தேவசக்தி 'இவங்கள் வேறை...' எனத் தனக்குள் முணுமுணுத்தாள். வெறுப்பு அவள் உதடுகளில் இழையோடியது. ஊடகவியலாளர்கள் போலத் தோன்றிய சிலர் ஒளிப்பதிவு உபகரணங்களோடு அவர்களின் பின் ஓட்டிக் கொண்டு திரிந்தனர். அப்பால் ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்திற்குக் காணி கொடுக்க விட மாட்டோம் என்று சத்தமிட்டுக் கொண்டிருக்க அங்கே ஊடகவியலாளர்கள் நகர்ந்தனர். அந்தக் கட்சிப் பிரதிநிதி இவர்கள் அருகில் வந்தார்.

"எங்கட மண்ணிலை ஆமியை இருக்க விட்டால், என்னென்ன பிரச்சினை வருமெண்டு உங்களுக்குத் தெரியாதே...? கிருஷாந்தி, வித்தியாவெண்டு எத்தினை இளம் பிள்ளையள் அழிஞ்சு போனதுகள். ஒரு பொம்பிளைப் பிள்ளையைப் பக்கத்திலை வச்சுக் கொண்டு ஆமிக்குக் காணி குடுக்க நினைக்கிறீங்கள் என்ன...?"

அருணகிரி குறுகிப் போய் நின்றார்.

"என்னம்மா, என்ன துணிச்சலோடை ஆமி இருக்கிற காணிக்கை போகலாம் எண்டு நினைச்சனீர்...? இப்ப நாங்கள் இதிலை இல்லையெண்டால், நீர் திரும்பி வந்திருப்பீரோ என்னவோ...?" ஆபத்பாந்தவன் போன்ற அவனது கதையைக் கேட்கப் பிடிக்காமல்

"அப்பா, வாங்கோ போவம்..." என்றவாறு அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ந்தாள்.

"போக முதல் உங்களுக்குக் காணியைத் தர விருப்பமில்லை எண்டு கையெழுத்துப் போட்டுத் தந்திட்டுப் போங்கோ..." கட்சித் தொண்டன் ஒருவன் ஒரு தாளையும், பேனாவையும் நீட்டினான். கிராம அலுவலர் ஒன்றும் செய்ய இயலாதவராய் அவர்களைப் பரிதாபமாகப் பார்த்தார்.

அருணகிரிக்கு அவ்விடத்தில் மேலதிகமாய் ஒரு நிமிடம் கூட நிற்கப் பிடிக்கவில்லை.

அவர்கள் நீட்டிய கடிதத்தில் கையொப்பமிட்டார்.

அவர்கள் அங்கிருந்து நகர்ந்த போது, நிலவளவைத் திணைக்கள அதிகாரிகள், வந்து இறங்கினார்கள். அவர்களைக் கண்டவுடன் அங்கு கூடியிருந்தவர்கள் உரக்கக் குரல் எழுப்பினார்கள்.

"அரசாங்கமே எங்கள் நிலத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்று..."

"சிங்கள இராணுவத்திற்கு எமது ஒரு துண்டு நிலத்தையும் விட்டுத்தர மாட்டோம்..."

கமெராக்களின் பளிச்சிடலோடு அந்த இடம் ஒரே களேபரமாயிருந்தது.

அந்தக் கட்சிப் பிரதிநிதி சிங்கள இராணுவத்தின் அராஜகம் பற்றிப் பேசிய சிறு உரையை ஊடகவியலாளர்கள் பதிவு செய்து கொண்டார்கள்.

உள்நுழைய முடியாத திணைக்கள அதிகாரிகள் சற்று நேரம் நின்று பார்த்து விட்டுத் திரும்பிப் போனார்கள். அவர்கள் போனவுடன் அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் கிளம்பிப் போனார்கள். சனங்களும் ஒன்றொன்றாய்க் கலைய ஆரம்பித்த பின் அருகிலிருந்த ஒழுங்கைக்குள் ஒதுங்கி நின்றிருந்த இவர்கள் வெளியே வந்தார்கள். காணி இருந்த திசையைத் தேவசக்தி நோக்கினாள். சற்று முன்பிருந்த களேபரங்கள் நீங்கி அமைதி பூத்துக் கிடந்தது. அகத்தி மரங்கள் காற்றில் அசைந்தன.

"காணிக்குள்ள தான் போக ஏலாமல் போச்சு, வெளீலயாவது கொஞ்சத் தூரம் நடந்திட்டு வருவம்." அவள் அருணகிரியோடு அந்த அகத்தி மரச்சாலையில் கொஞ்ச தூரம் நடந்தாள்.

கீழே உதிர்ந்து கிடந்த அகத்தி மலரை எடுத்து மெல்ல முகர்ந்தாள்.

அகத்தி மரத்தை வீட்டில் வைக்கக் கூடாது என்பது ஏனோ நினைவுக்கு வந்தது.



மகிழினி தன்னுடன் வந்துகொண்டிருந்த கலிராவை இடையிடையே கவனித்துக் கொண்டுவந்தாள்... கலிராவோ எதையுமே கவனிக்காமல் தன் காலடியில் விலகிச் செல்லும் பூமியைப் பார்த்தவண்ணம் வநதுகொண்டிருந்தாள். ஆனால்; மனதை எங்கோ பறக்கவிட்டுவிட்டு, தன் நினைவற்றவளாய் அவள் நடப்பதாகவே மகிழினிக்குத் தோன்றியது. சுற்றுச் சூழலைப் பார்த்து, அவளது மனம் சிறிதேனும் அதில் ஈடுபாடு காட்டினால் கவலைகள் சற்றேனும் விலகக்கூடும் என்ற நம்பிக்கையில்தான் தன் அம்மா மகிழினி வந்திருப்பதை காரணங்காட்டி, தம்முடன் வெளியே வருமாறு வற்புறுத்தியே ரமி கலிராவை அழைத்துவந்திருந்தாள். அதில் பலனேதும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை.

கலிராவின் மொழி அவர்களுக்குப் புரியாவிட்டாலும், அவளது வேதனை மகிழினிக்கும் ரமிக்கும் நன்கு விளங்கியது. அது அவர்களும் அநுபவித்த துயர்தானே. ரமி ஆதரவுடன் கலிராவை அணைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினாள். ரமியின் அணைப்பு கலிராவின் கண்களை ஊற்றெடுக்க வைத்தது. ரமியின் மேல் சாய்ந்து கலிரா அழுவதை வீதியில் சென்றோர் கவனிப்பது மகிழினிக்கு சங்கடமாகவிருந்தது. இலங்கையைப்போல் இங்கு எவரும் அவர்களைச் சுற்றி குழுமிநின்று விசாரிக்கத் தொடங்கவில்லை.

கலிராவுக்கு ஆறுதல் கூறி தேற்ற தாயினதும் மகளினதும் மனங்கள் ஆவலுற்றபோதும் அதற்கு மொழி இடையூறாய் நின்றது... ரமியின் மொழி அவளுக்கு விளங்காது. அவளது பாஷை ரமிக்குப் புரியாது. இருவருக்கும் தெரிந்த ஆங்கிலத்தில் பேசிப் பழகினார்கள். அதற்கு அந்த அறிவு போதுமானதாக இருந்தது. இப்படியான உணர்வுபூர்வமான தருணங்களிலேதான் மனந்தொட்டு உறவாட மொழியறிவு தேவைப்பட்டது. மனதை வருடிக்கொடுக்கும் இதமான வார்த்தைகளைக் கொண்டுதான் வேதனையைத் தணிக்கவேண்டும். மகிழினியின் நிலையோ ரமியைவிட மோசம். அவள் கலிராவுக்கு ஆறுதல் கூற மார்க்கம் தெரியாமல் தவித்தாள். இத்தனைக்கும் ரமி தன் வீட்டில் கலிராவைக் குடியிருத்தப் போவதாக அறிவித்ததும் எதிராகக் கருத்துத் தெரிவித்தவள் மகிழினிதான்.

கலிராவை வீட்டில் குடியிருத்தத் தீர்மானித்தபோது இப்படியெல்லாம் நடக்குமென ரமி எதிர்பார்க்கவில்லை. ரஷ்யா உக்கிரேன் மீது தாக்குதல் ஆரம்பித்து சில நாட்களின் பின்னர் ஒரு நாள் ரமி பி.பி.சி. செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அதில், போர் காரணமாக நாட்டிலிருந்து வெளியேறிய உக்கிரேனிய மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# அதே. அதே.

வதிவிட வசதிகள் செய்துகொடுக்க வேண்டியுள்ளதால் விரும்புவோர் தமது வீடுகளில் அந்த மக்கள் தங்கி வாழ உதவுமாறு பிரித்தானிய அரசு தன் பிரசைகளுக்கு விடுத்த கோரிக்கை ரமியை சிந்திக்க வைத்தது. இலங்கையில் நடந்த போரின் அகோரப் பிடியிலிருந்து தப்பி ஓடிவந்த அவளது தந்தை ஆரமுதனின் குடும்பத்திற்கு அன்று பிரித்தானியா ஆதரவு தந்தது. இன்று ரமி என அழைக்கப்படும் ரம்யா இந்த நாட்டின் பிரசை. படித்து, கணக்காளராக பதவி வகித்து சிறப்பாக வாழ்ந்துகொண்டிருக்கிறாள்.

உக்கிரேனியருக்கும் அதேபோல் அன்புக்கரம் நீட்ட பிரித்தானியா முன்வந்திருக்கிறது. இதற்கு உதவுவது தனது கடமை என ரமி கருதினாள். இது அவளது சொந்த வீடு. விருந்தினர் வந்தால் தங்குவதற்கென குளியலறையுடன் இணைந்த அறையொன்று அவ்வீட்டில் இருக்கிறது. அதனைக் கொடுப்பதென ரமி தீர்மானித்தாள்.

கலிராவும் தந்தை ஆர்ற்றினும் வந்து தங்குவதாக முடிவாகி அதற்கு ஆவன செய்யப்பட்டுக்கொண்டிருந்த வேளையிலேதான் அதைப் பற்றி தன் அம்மா மகிழினியிடம் ரம்யா தெரிவித்தாள். சொல்லக்கூடாது என்ற எண்ணமெதுவும் அவளுக்கு இருக்கவில்லை. தன் குடும்பத்தினர் எல்லோருமே இதை தம் கடமை எனவே எண்ணுவார்கள் என்பது அவளது நம்பிக்கையாக இருந்தது. ஆனால் மகிழினியோ "உக்கிரேன் ஆட்களுக்கு ஏன் கொடுக்கிறாய்? எங்கடை ஆட்கள் கஷ்டப்படுகினம். அப்படிக் கொடுக்கிறதெண்டால் அவைக்குக் கொடுக்கலாமே." என தன் விருப்பமின்மையை வெளிப்படுத்தினாள்.

"அப்போ நாங்கள் ஓடி வந்தது போலை சண்டையாலை நாட்டைவிட்டே உக்கிரேனியரும் ஓடி வருகினம். அவைக்கு உதவி செய்ய வேணும்தானே?"

"அந்த நேரம் எங்களைக் கொல்ல அரசாங்கத்துக்கு உதவின நாடுகளிலை இவையும் ஒண்டெண்டு கேள்விப்பட்டனான். அதாலை அந்த நாடெண்டால் எனக்கு வெறுப்பு."

மனதுள் இருந்ததை மகிழினி வெளியிட்டபோது ரமி திகைத்துவிட்டாள். அம்மா இப்படிக் கூறுவாள் என அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதற்காக தனது முடிவை மாற்றவும் ரமி விரும்பவில்லை. தான் செய்வது சரியானது என்று மட்டுமன்றி தனது கடமை எனவும் அவள் நம்பினாள். அதனால் தாயின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவெறுப்பை எவ்வாறேனும் நீக்குவது எனத் தீர்மானித்து செயற்படத் தொடங்கினாள் ரமி.

"என்னம்மா சொல்லுறீங்கள்? அப்படி அந்த அரசாங்கம் செய்திருந்தாலும் மக்களை நாங்கள் வெறுக்கிறதோ தண்டிக்கிறதோ தவறம்மா."

ரமி பல்வேறு காரணங்களை எடுத்துச் சொல்லி, தாயின் மனதை மாற்ற முயன்றாள்.

மகிழினியின் மனம் மகள் சொல்லியவற்றை அச்சந்தர்பத்தில் ஏற்க மறுத்தது. ஆனால் மகள் தொடர்ந்து வந்த நாட்களில் உரையாடிய வேளைகளிலெல்லாம் எடுத்துக் கூறிய நியாயபூர்வமான காரணங்களை ஆராய்ந்த போது, ரமி செய்வது சரியானதே என்ற முடிவுக்கு மகிழினி வந்தாள். அதேவேளை கலிராவிற்கு விசா காலந்தாழ்த்தியே கிடைத்ததால் தாமதமாகவே ரமியின் வீட்டிற்கு வந்து சேர நேர்ந்தது. அவளின் தகப்பனார் உடன்வரவில்லை. வியாபார அலுவலாக அவர் வேறிடம் போயிருந்த வேளையில் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. அதனால் அவரைச் சந்திக்கமுடியவில்லை. தகவல் அனுப்பிவிட்டு தான் வந்திருப்பதாக கலிரா தெரிவித்தாள். அவர் வந்துசேர்வார் என்ற நம்பிக்கையுடன் கலிரா புறப்பட்டுவந்திருந்தாள்.

இரண்டு மூன்று நாட்கள் செல்ல கலிராவுக்குள் கலக்கம் உருவாகியது. தந்தையிடமிருந்து எந்தத் தகவலும் வராததால் உருவான கலக்கம் இன்றுவரை நீடிக்கிறது.

"இது வீதி. எல்லோரும் பார்க்கிறார்கள். அழவேண்டாம்." என பலவாறு கூறி அவளைச் சூழலை உணர வைத்து, ரமியும் மகிழினியும் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

"இதென்ன பிள்ளை, பெரிய பிரச்சனையாய் வரப்போகுது போலை கிடக்கு."

கலிரா அருகாமையில் இல்லை என்பதை உறுதிசெய்துகொண்டு, மகிழினி மகளைக் கேட்டாள். அம்மாவிடம் தன் கலவரத்தைத் தெரிவிப்பது மேலும் அதனைக் கூட்டும் என்பதை ஊகித்தவளாக ரமி "அவள் செய்திகளைக் கேட்டுவிட்டு தேவையில்லாமல் கவலைப்படுகிறாள். யுத்தம் நடக்கிற நேரம் ஒருத்தரை ஒருத்தர் தொடர்பு கொள்ளுறது கஷ்டம். அவர் வருவார். நீங்களும் ஏன் கவலைப்படுகிறீங்கள்?" என்று தாயாரை ஆறுதற்படுத்தினாள். ஆனால் மனம் 'இவவுக்கு இனி கதை சொல்லுறது அடுத்த பிரச்சனை.' என அலுத்துக்கொண்டது. வீட்டிற்கு வந்திருப்பவர்களை பார்ப்பதற்கு தானும் வரப்போவதாக அம்மா தெரிவித்தபோதே ரமிக்கு அதில் விருப்பம் இருக்கவில்லை.

"அப்பாவும் வாறாரோ?"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த மனிசனை அசைக்கிறது கஷ்டம் ரமி. நான் மட்டும் வந்து, இரண்டு நாளிலை திரும்பிடுவன். அப்பாவை விட்டிட்டு நிக்கேலாது. அக்காவும் அண்ணையும் கலியாணம் கட்டி போகேக்கை அப்பா அசையேல்லை. நீ, கடைக்குட்டிச் செல்லம். உன்னுடைய கலியாணம் முடிஞ்சு நீ போனதோடை அப்பா இடிஞ்சு போனார்."

அம்மா சொல்லியதை வைத்தே அவளது வரவைத் தடுக்க முற்பட்டாள் ரமி.

"அதுதான் அப்பாவை விட்டிட்டு வரவேண்டாம் எண்டு சொல்லுறன். இவையைப் பாக்கிறது ஏதும் முக்கியமே? அவர் வரேக்கை வாருங்கோ."

"நல்ல கதை சொல்லுறாய். அப்பிடியெண்டால் இந்த சென்மத்திலை உன்ரை வீட்டை வரேலாது."

"அப்பாவுக்கு என்னிலை என்ன கோபம்? என்னுடைய வீட்டுக்கு ஏன் வரமாட்டார்? இரண்டு மணித்தியால ஓட்டத்திலை வரக்கூடிய இடம்."

"அவருக்கு உன்னிலை ஒரு கோபமுமில்லை. உன்ரை வீட்டை வாற எண்ணம் வரவேணும். அது வந்து எப்ப வாறாரோ? அதுமட்டும் நான் பார்த்துக்கொண்டிருக்கேலாது."

ரமியின் முயற்சி தோல்வி கண்டது. கலிரா, ஆர்ற்றின் இருவரும் வந்திருப்பார்களாயிருந்தால் அம்மா வந்து அவர்களைச் சந்திப்பதில் ஒரு பிரச்சனையும் இல்லை. தன் அப்பா வராததற்கு கலிரா சரியான காரணத்தை கூறமுடியாமல் தவித்தாள். அவர் எங்கு போனார் என்பதை சொல்லாது மறைக்கிறாளோ என்ற சந்தேகம் ரமிக்கு ஏற்படத் தொடங்கியது. மீண்டும் மீண்டும் கேட்டபோது கலிரா சொன்ன பதில் ரமியை திகைக்க வைத்ததுடன் நீள சிந்திக்கவும் வைத்தது. அதைக் கூறியதும் ரமியின் கணவன் சுகுணன் அவள் தேவையில்லாது பிரச்சனையை தலையில் போட்டுக்கொண்டிருப்பதாக தனக்குத் தோன்றுகின்றது என்றான்.

தன் தந்தை ஆர்ற்றின் ரஷ்யாவிற்கு போயிருந்ததாக கலிரா கூறினால் வேறு என்ன தோன்றும்? ரமியே இடம் கொடுப்பது எனத் தொடங்கியதால் கணவன் மனைவிக்கிடையில் வாக்குவாதங்களும் ஏற்பட்டன. ரமியின் வெளிக்காட்டவியலாத கலக்கம் கலிராவுடனான உரையாடல்களினால் மேலும் அதிகரித்தது.

ஆர்ற்றின் ரஷ்யாவில் நிற்கும்போது யுத்தம் ஆரம்பித்ததால் அங்கு தடுத்துவைக்கப்பட்டோ கைது செய்யப்பட்டோ இருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் ரமிக்கு இப்போது ஏற்பட்டது. கலிராவிடம் அதைத் தெரிவித்தவேளை அவள் அதற்கு சாத்தியமே இல்லை என மறுத்தபோது தெரிவித்த காரணந்தான் ரமியின் சந்தேகத்தை வலுக்கச் செய்தது. ரஷ்யாவில் பெரு மதிப்புப் பெற்ற வர்த்தகரான அவருக்கு அங்கு எதுவும் நேர்ந்திருக்காது என உறுதிபடக் கூறினாள் கலிரா.

அவளது குரலில் கோலோச்சிய நிச்சயத் தன்மை எதனால் அவளுள் உருவாகியது? எவ்வளவு பிரசித்தி பெற்றிருந்தாலும் எதிரி நாட்டில் ஒருவன் பாதுகாப்பாக இருப்பான் என்று எவ்வாறு துணியமுடியும்? கலிராவின் மனத்துள் ஆழ வேரூன்றியுள்ள ஏதோ ஒன்றை ரமியின் மனம் தேடியது.

ரஷ்ய ஆதரவுடன் தீவிரவாதிகள் உக்கிரேனில் இயங்கிவந்ததாக செய்தியொன்று காதில் விழுந்தது. இரவு உறக்கம் வராது ரமியின் மூளை சுற்றியலைந்தபோது அந்த நினைவும் வந்து, தன்னைப் பற்றி சிந்திக்க வைத்தது. ஆர்ற்றினுக்கு அவர்களால் ஏதும் நேர்ந்திருக்கலாமோ? என்றொரு ஐயம் பளீரிட்டது. மறுநாள் காலையில் கலிராவிடம் இது குறித்து வினவினாள் ரமி.

"அவர்கள் அப்பாவிடம் நிறைய உதவிகள் பெறுபவர்கள். அவர்களால் எதுவும் நடந்திருக்காது" என உடனடியாக மறுதலித்தாள் கலிரா. அவளின் அந்தப் பதிலிலும் அதே உறுதி! ரமியின் கலக்கத்தை அது உச்சமடைய வைத்தது. மனம் நிறைய சந்தேகங்கள், குழப்பங்கள் எல்லாம் குவிந்து கிடந்தன. இத்தருணத்தில் மகிழினி வந்து இவற்றை அறிந்து, கதை மற்றவர்களுக்கும் பரவினால் என்னாகுமோ என்பது அவளது மனப்பயம். எவ்வளவு முயன்றும் அம்மா வந்துவிட்டாள்.

கலிராவுக்கும் மகிழினிக்கும் தெரிந்த ஆங்கிலத்தில் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பின் ரமியிடம் வந்தாள் மகிழினி.

"அந்தப் பிள்ளையின் தகப்பன் ஆர்ற்றின் எங்கே போயிருந்தார் எண்டு உனக்குத் தெரியுமே?"

"அம்மா, சோவியத் ஒன்றிய நாடுகள் பிரிந்துசெல்லாமல் இருந்த காலத்தில், உக்கிரேன் ரஷ்யாவுடன் சேர்ந்தே இருந்தது. ஆர்ற்றின், அந்தக் காலத்திலே தொழிற்சாலைகளைத் தொடங்கி நடத்திவந்தார். அவருடைய தொழில் மையங்கள் ரஷ்யாவிலும் உக்கிரேனின் துறைமுக நகரான மரியுபோலிலும் இருந்ததால் அவர் இரண்டு இடங்களிலும் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். மரியுபோல் கெதியாக முன்னேறினபடியால் அங்கை வீட்டைக் கட்டி குடியிருந்திருக்கிறார். கலிரா எல்லாக் கதையளும் சொன்னவள்."

"ஓ . . .! அப்பிடியே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தப் பிள்ளையின்ரை மூத்த சகோதரிமார் இரண்டு பேர் கலியாணம் முடிச்சு ஒராள் ரஷ்யாவிலும் மற்றவள் உக்கிரேனிலும் இருக்கினம். தாய் காலமாகிவிட்டா."

"இப்ப தகப்பன் எங்கையாம்?"

"என்னம்மா கேக்கிறியள்? ஊரிலை சண்டை நடக்கேக்கை பட்டதுகள் மறந்திட்டீங்களோ? நான் அப்ப சின்னப்பிள்ளை. உங்களுக்குத்தானே நிறைய அனுபவம். யுத்தம் நடக்கிறபோது எல்லா நாடுகளும் ஒரே மாதிரிதான் செயல்படுகின்றன."

"ஐயையோ! அதுகளை நினைப்பூட்டாதை."

துப்பாக்கி ரவையொன்று இதயத்தைத் துளையிட்ட வேதனை மகிழினியின் முகத்தில் குடி வந்தது. கண்கள் கலங்கின.

"ஆசையண்ணைக்கு என்ன நடந்ததெண்டு இண்டுவரை தெரியேல்லையே. கிளாலிப் பாதையாலை போய் யாழ்ப்பாணத்துக்கு வராத பொருள்களை கொழும்பிலை அல்லது வவனியாவிலை வாங்கிக்கொண்டுவந்து வித்தவர். ஆபத்தான வேலை எண்டு சொல்லச் சொல்ல, செய்தார். நல்ல வருமானம் போலை. ஒரு நாள் போனவர் வரவேயில்லை. எப்படி எப்படியெல்லாமோ விசாரித்தும் பலனில்லை." என பழைய நினைவுகளில் அமிழ்ந்துகொண்டிருந்த மகிழினி, திடீரென துடித்து நிமிர்ந்தவளாக ஐயையோ! இந்தாளுக்கும் அப்பிடி ஏதும் நடந்திருக்கும் எண்டு நினைக்கிறியோ?' என்று கேட்டாள். பயத்தினுள் வீழ்ந்துகிடந்து அவளது கண்கள் தவித்தன.

"அம்மா, நீங்கள் தேவையில்லாமல் ஏதேதோ கற்பனை செய்து கவலைப்படுறீங்கள். என்ன நடந்ததெண்டு தெரியாமல் எதையாவது சொல்லி கலிராவையும் கவலைப்பட வைச்சிடாதேங்கோ."

"அவளோடை கதைச்ச பிறகு எனக்கு பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்து மனம் கவலையாக இருக்குது. அவள் தங்கடை நாடு போராலை பட்டிருக்கிற அவலங்கள் பற்றின செய்திகளும் படங்களும் வந்த பத்திரிகைகளை சேர்த்து வைச்சிருக்கிறாள். தன்ரை சொந்தக்காரருடைய வீட்டுக்குப் பக்கத்திலை ஷெல் விழுந்து வெடிக்காமல் கிடக்கிற படம் ஒண்டைக் காட்டினாள். உனக்கு நினைவிருக்கே? எங்கடை எலுமிச்சைக்குப் பக்கத்திலை செம்பாட்டு மண் கொண்டுவந்து கொட்டி குவியலாய் கிடந்தது. அந்த மண்ணை பரவவெண்டு மண்வெட்டியாலை வெட்டின குமாரவேலு மண்ணுக்குள்ளையிருந்த ஷெல் வெடிச்சுச் செத்துப்போனான்... மண்ணுக்குள்ளை விழுந்ததாலை ஷெல் வெடிக்காமல் கிடந்திருக்கு. கிளறுப்பட்ட மண்ணுக்கு மேலை மழை பெய்ய அதுவும் இறுகி ஷெல் உள்ளுக்கு மறைஞ்சு கிடந்திருக்கு. மண்வெட்டி அதை வெட்ட, சரி. அந்தப் படங்களை, கொண்டுவந்து காட்டச் சொல்லுறன்."

"அதுகளை இப்ப பார்த்து உங்களைப் போலை கவலைப்படவே? சும்மா இருங்கோ"

ரமியின் சொற்கள் காதில் விழாதவள் போல மகிழினி கலிராவைத் தேடிச் சென்றாள். 'மற்றவையின்ரை சொல் எப்பவாவது கேட்கிறவவே?' ரமி தனக்குள் புறுபுறுத்துக்கொண்டாள். சிறிது நேரத்தில் ஒரு கட்டு பத்திரிகையுடன் கலிராவை அழைத்துக்கொண்டு மகிழினி வந்தாள்.

"கலிராவை ஏன் கஷ்டப்படுத்திறியள், அம்மா? தீ சுட்ட புண்ணைக் கிளறிப் பார்க்கக்கூடாதம்மா."

ரமி மனப்பூர்வமான கவலையுடன் கூறியபடி கலிராவை ஆதரவுடன் பார்த்தாள். அவளோ இருவருக்குமிடையில் என்ன கருத்து முரண்பாடென்பதைப் புரிந்துகொள்ள முடியாது மாறிமாறி இருவரையும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"உங்களுடைய ஊரின் பெயர்..." என கலிராவின் பிறப்பிடத்தின் பெயரைத் தேடி, பேச்சை ஆரம்பித்தாள் மகிழினி. அவள் ஊர் என்று கூறியது கலிராவிற்குப் பிடிக்கவில்லை.

"மரியுபோல். அது பெரிய துறைமுக நகரம். உக்ரைனின் தென்கிழக்குப் பகுதியில் இது அமைந்துள்ளது. அசோவ் கடலின் வடக்கில் கல்மிய்ஸ் நதி முகத்துவாரத்தில் வளமும் முக்கியத்துவமும் கொண்ட இடத்தில் இருப்பதால் அது வளர்ச்சியடைந்து பிரசித்திபெற்றுவிட்ட நகரம்"

கலிராவின் கண்களில் பெருமை ஒளிர்ந்தது.

"நல்ல பல தொழிற்சாலைகள், வர்த்தக மையங்கள் முதலியன மரியுபோலில் அமைந்து வளர்ச்சியுற, வகைவகையான வாழிடங்கள் உருவாகின. கடல், நதிமுகத்துவாரம் இரண்டும் பல்வகை வளங்களையும் குவித்தன. இப்போது எந்த ஊடகத்தைப் பார்த்தாலும் கேட்டாலும் உக்கிரேன் குறித்தும் மரியுபோல் பற்றியுந்தானே சொல்கின்றன. அப்படி இருப்பதால் ரஷ்யாவின் முக்கிய இலக்காகவும் அது இருக்கிறது."

ரமி கூறிக்கொண்டிருக்க கலிராவின் விம்மல் சத்தம் ரமியின் நாவை தடுத்து நிறுத்தியது. கலிராவின் கை ஓர் அடுக்கு மாடி கட்டடத்தில் ஓங்கி, சுவாலை விட்டெரியும் தீயின் படத்தை அவர்களுக்குக் காட்டிக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எங்களுடைய தொழிற்சாலை எரிகிறது. குடியிருப்புகள், மாளிகைகள், வியாபாரத் தொகுதிகள், வர்த்தக மையங்கள் முதலிய எல்லாமே இடிந்து, நொருங்கிச் சிதைந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் மீண்டும் கட்டியெழுப்ப எவ்வளவு காலமாகும்?”

எவ்வளவு காலம்? கலிராவின் கேள்வி, காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை முதலிய பல இடிந்துகிடக்கும் அவளது நாட்டு தொழிற்சாலைகளை கரகரவென மகிழினியின் மனக்கண்களின் முன் இழுத்து வந்தது. போர் முடிவுற்றது என 2009இல் ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்தது. இன்றுவரை எத்தனையோ முக்கியஸ்தர்கள் எவ்வளவோ தடவைகள் அந்தத் தொழிற்சாலைகளை மீள ஆரம்பிக்கப்போவதாக ஆசை காட்டிவிட்டனர். எந்த நளாயினியின் சாபமோ? அவற்றின் வாழ்வோட்டத்தில் என்றோ வந்த இலையுதிர்காலம் நகராது நிலைத்து நிற்கிறது. எமக்கும் உக்கிரேனுக்கும் மட்டுமல்ல யுத்தபூமி எங்குமே இதுதான் விதி. இதன் பலன் மனிதர்களுக்கு ஏற்படும் இழப்புகள்தான்.

“நீயும் நானும் அழுது இதைத் தடுக்கமுடியாது. உயிர் தப்பியதே பெரிது என்று திருப்திப்படு.”

“நான் தப்பினாலும் அங்கே பலவிதமாக இடைவிடாது தாக்குதல்கள் நடக்கின்றன. நாளாந்தம் எமது உறவுகள் நூற்றுக் கணக்கில் செத்துக்கொண்டிருக்கிறார்கள். உக்கிரேனுக்கு வந்து என்னுடைய அப்பாவும்...”

ரமிக்கு பதில் கூறிய கலிரா நினைத்ததை அதற்கு மேல் சொல்ல முடியாது கதறினாள்.

“அப்படி எதுவும் நடந்திருக்காது. மனதை வீணான கற்பனைகளில் அலைய விடாதே. கடவுள் அவரைக் காப்பாற்றுவார்.”

இவ்வாறு ரமி அவளைத் தேற்றிக்கொண்டிருக்கையில் மகிழினியின் நினைவில் அவளது பெறாமகள் குமுதினி வந்து நின்றாள். அன்று அவர்களது ஊரை நோக்கி இராணுவம் வந்துகொண்டிருந்தது. அவர்கள் ஓடத்தொடங்கினார்கள். அகோர எறிகணை வீச்சு. ஷெல் எங்கு விழுகிறது? யாருக்கு என்ன நடந்தது என்பதையெல்லாம் கவனிக்க இயலாது ஓடிய அவர்கள் சென்று முடிவில் நின்ற இடத்தில் உறவுகளைத் தேடத்தொடங்கினர். பலர் மருத்துவமனையாக இயங்கிக்கொண்டிருந்த பாடசாலையில் காயங்களுடன் கிடந்தனர். மற்றும் பலர் சவங்களாகிப் போயிருந்தனர். அவர்களையெல்லாம் அடையாளங் கண்ட பின்னரும் காணாமற்போனோருள் குமுதினியும் சேர்ந்திருந்தாள். அவள் ஓடி வருகையில் கண்டவர்கள் சொன்ன தகவல்களின்படி எறிகணை விழுந்த இடமொன்றில் தேடிப்பார்த்தனர். எதையும் கண்டுகொள்ள முடியவில்லை. தான் விழுந்த இடத்தில் இருந்த அனைத்தையும் அரைத்துக் கரைத்துவிட்டது ஷெல். நடந்த கொடூரத்திற்கு சாட்சியாக அருகே ஓர் உயரமான மரம். தன் கொப்புகள் சிதறுண்டு கிடக்க, தசைத் துண்டங்களை அப்பியவாறு அது நின்றது. அதன் சிதைந்த வேரில் விழுந்த பார்வையை உயர்த்தியபோது உயரத்திலிருந்த கிளையில் தொங்கிய சல்வார் துண்டு!... அது குமுதினி அன்றைக்குப் போட்டிருந்ததைப் போலவே இருந்தது. மகிழினி அதைக் காட்டியபோது அது தனது மகளுடையதென ஒப்புக்கொள்ள மறுத்த அக்கா இன்று வரை மகளைத் தேடிக்கொண்டிருக்கிறாள்.

யுத்தம் நடக்கும்போது நவீன ஆயுதங்கள் மனிதர்களை கொத்துக்கொத்தாகக் குழம்பாக்கிவிடுகின்றன. அவர்கள் இருந்ததற்கான அடையாளமே தெரியாது. அப்படி ஏதாவது ஆர்ற்ரினுக்கும் நடந்திருக்குமா?

நாநுனியில் வந்து நின்ற வினாவை மூளை தடுத்த அதே வேளையில் கலிரா

“அங்கே சடலங்கள் சகல இடங்களிலும் சிதறிக் கிடக்க மேலே பனிபொழிந்து உறைந்துபோயிருக்கிறதாம். பனி உருகும்போதுதான் அவை வெளியே தெரியும்.” எனக் கூறியதைக் கேட்டு திகைத்தாள் மகிழினி. இது அவளுக்கு புதிய செய்தி. ஸ்ரீலங்காவில் அவள் கண்டவை வெயிலும் மழையுமே. எம்மவர் அவற்றுள் மூழ்கி மண்ணுள் புதைந்து என்புகளாகியதையே அவள் கண்டுள்ளாள். ஆனால் இங்கே?

“வைத்தியசாலையில் இருக்கிறாரா? என்று தேடிப் பார்த்தீர்களா?”

“இல்லை. அப்பாவுக்கு ஒன்றும் ஆகியிராது. காயங்கூட பட்டிருக்காது. அவர் வருவார்”

தன் மனதின் குரலை மறுத்து கதறிக் கதறி அழுதாள் கலிரா. இந்த நம்பிக்கையுடன் இந்த உலகில் யுத்தப் பேய் கூத்தாடி, கும்மாளமிட்ட நிலத்தைச் சேர்ந்த பல்லாயிரம் மனிதர்கள் காலங்காலமாய் காத்துக் கிடக்கின்றனர்.

மகிழினி மகள் வீட்டில் இனியும் இருக்க இயலாது என்பதால் கலிராவை கட்டியணைத்து ஆறுதல் கூறி விடைபெற்றுக்கொண்டு தனது வீட்டுக்குத் திரும்பினாள்.

நாட்கள் நகர்ந்தன. அன்று கலிராவிற்கு ஒரு செய்தி கிட்டியது. ரஷ்யாவிலிருக்கும் அவளது அக்கா, தன் தந்தை அவரது நண்பருடன் உக்கிரேனுக்குச் சென்றதாகத் தெரிவித்ததாக அச்செய்தி சொல்லியது. ஆர்ற்ரின் நண்பர் பொடஷ்கா. இவரும் வர்த்தகர். இவரது மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலோனா தன் தந்தையைத் தேடியபோது இச்செய்தி கிடைத்திருக்கிறது. அதைக் கேள்விப்பட்ட ஒருவர் தனக்குத் தெரிவித்ததாக கலிராவின் தோழி தொலைபேசி மூலம் அறிவித்தாள்.

இத்தகவல் எவ்வளவு சரியானதாக இருக்கும் என்பதைக் கணிக்க இயலாமல் கலிராவும் ரமியும் தவித்தனர். தொடர்புகள் அற்றிருக்கும் ரஷ்யாவிலிருந்து வந்தது என்பதே அந்தத் தகவல் நம்பகரமானதா என இருவரையும் சிந்திக்க வைத்தது. இச்சந்தேகத்தை கலிராவிடம் கூறி அவளைக் கலங்க வைக்கவும் ரமியின் மனது மறுத்தது. கலிராவின் மூளையிலும் இச்சந்தேகம் ஏற்பட்டாலும் மனம் அது உண்மையாக இருக்கவேண்டுமென இறைவனை யாசித்தது. உண்மையாயிருக்காது என்றெண்ணிய ஒரு தகவல், எவ்வாறோ யாராலோ உருவாக்கப்பட்டு வந்து சேர்ந்து மனங்களை குளம்பச் செய்தது. ஆனால் ஆர்ற்றினோ பொடஷ்காவோ இருக்கும் இடம் யாருக்கும் தெரியவில்லை.

ஊடகங்கள் அன்று ஒரு பரபரப்புச் செய்தியை காவிவந்திருந்தன. மரியுபோலுள் அகப்பட்டிருக்கும் மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்காக யுத்த நிறுத்தமொன்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதைக் கேட்டது முதல், அப்பா தங்கள் நகரிலிருந்து வெளியேறி வந்துகொண்டிருக்கும் செய்தியை கலிரா எதிர்பார்க்கத் தொடங்கினாள். கைபேசியை கை விட்டுவிலக மறுத்தது. மக்களின் பாதுகாப்பைப் பற்றிய அக்கறையின்றி யுத்தம் அவசரப்பட்டு ஆரம்பமாகிவிட்டது. எனினும் கலிரா நம்பிக்கையை இழக்கவில்லை.

"என்னுடைய தகவல் கிடைக்காதுபோனதால் வேறு ஒரு நாட்டில் தஞ்சமடைந்து, அப்பா என்னைத் தேடிக்கொண்டு இருப்பார். சிலவேளை ஒரு அக்காவின் வீட்டில்கூட இருக்கக்கூடும். எப்படியும் அப்பா வருவார்." கலிரா முணுமுணுத்தாள்.

கலிரா காத்திருக்கிறாள்.





காலத் தடத்தில் பெண்கள்

உள்நகர்ந்த
கலகக் குரல்

ஆசிரியர்:

முனைவர் ஏ.இராஜலட்சுமி

நூலைப் பெற: 9841374809

முரண்களரி படைப்பகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புரை: உடுவில் அரவிந்தன்

# தேவகாந்தனின் 'லவ் இன் த ரைம் ஓஃப் கொரோனாவும் சில கதைகளும்'

– ஒரு பார்வை




சிறந்த நாவலாசிரியராக நன்கு அறியப்பட்ட தேவகாந்தன் அண்மையில் வெளியிட்ட 'லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனாவும் சில கதைகளும்' என்ற சிறுகதைத்தொகுப்பைப் பற்றிய மனப்பதிவுகள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளலாமென்று நினைக்கிறேன். இந்தத்தொகுப்பு ஜீவநதி பதிப்பகத்தின் 172வது வெளியீடாக வந்திருக்கிறது. அழகான அட்டைப்படமும், நேர்த்தியான வடிவமைப்பும் கவர்கின்றன.

தேவகாந்தன் 2001-2002 காலப்பகுதியில் வாசிப்பின் மூலமாகவே எனக்கு அறிமுகமானார். அக்காலத்தில் ஆரியகுளம்சந்தியிலிருந்த தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் கட்டடத்தில் நாங்கள் இலக்கியக்கூட்டங்களை நடாத்தியதுண்டு. செம்பியன்செல்வன் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் நான் செயலாளராகவும் செயற்பட்டகாலம். நாங்களிருவரும் அங்குள்ள கதிரைகளின் தூசிகளைத் துடைத்தபின்னர், வழக்கமாக வருகின்ற இலக்கிய ஆர்வலர்களுக்காகக் காத்திருப்போம். அந்தச் சிறுபொழுதுகள் இலக்கியஅனுபவம் சார்ந்த உரையாடல்களில் இனிமையாகக் கழியும். அப்படியான ஒரு காத்திருப்பிலேதான் தேவகாந்தன் எழுதிய யுத்தத்தின் முதலாம் அதிகாரம் நாவலைப்பற்றிச் செம்பியன்செல்வன் சிலாகித்துச்சொன்னார். அந்த நாவலின் பெயர் என்னை வெகுவாகக் கவர்ந்தது. அந்த மண்டபத்தில் நடைபெற்ற நூலின் அறிமுகவிழாவில் அதை வாங்கியதாக நினைவு. அதைத்தொடர்ந்து வினாக்காலம், உதிர்வின் ஓசை என்று வாசிப்புத் தொடர்ந்தது. அவை என்னுடைய வாசகமனதில் அழுத்தமாகத் தடம்பதித்த நாவல்கள்.

தேவகாந்தன் படைப்பு முயற்சிகளில், குறிப்பாக நாவல்களில் தொடர்ச்சியாகவும் நிறைவாகவும் ஈடுபட்டுக்கொண்டிருப்பது ஈழத்து இலக்கியத்துக்கு வளம் சேர்க்கிறது. அவருடைய படைப்புமொழி கச்சிதமானது. நிகழ்களத்தைச் சிறப்பாகக் காட்சிப்படுத்துவது. அவர் தனக்கு வாலாயமான நடையில் கதையை இலாவகமாக நகர்த்திச்செல்வார். அந்தவகையில் இங்கு ஒவ்வொரு சிறுகதையும் தனித்துவமாகச் செதுக்கப்பட்டிருப்பதை அனுபவித்து உணரமுடிகிறது.

இந்தத்தொகுப்பில் இறங்கிவந்த கடவுள், ஊர், மனம், எம்மா, உட்கனல், முற்றுத்தரிப்பு, பாம்புக்கமம், புற்றுச்சாமி, மலர் அன்ரி, சொல்லில் மறைந்தவள், லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனா ஆகிய பதினொரு சிறுகதைகள் உள்ளன.

பொதுவாக, தொன்மங்கள் ஊடாடும் படைப்புகள் சுவையான வாசிப்பனுபவத்தைத் தருபவை. நாங்கள் சிறுவயதிலிருந்து பிரமிப்பின் இழையோட்டத்தோடு வாசித்தும் கேட்டும் அறிந்த இதிகாசங்களை யதார்த்தவாழ்வியலோடு பொருத்திப்பார்ப்பது அலாதியானது. அவற்றுள் பொதிந்திருக்கும் அறமும் ஆன்மீகமும் வீரமும் எங்களை வசீகரித்து வளப்படுத்தியவை. அந்தவகையில் இறங்கிவந்த கடவுள், பாம்புக்கமம், புற்றுச்சாமி ஆகிய சிறுகதைகள் அமானுடத்தின் கனதியான கூறுகளை வாசிப்பவர்கள்மீது கவியச்செய்யும் தன்மை வாய்ந்தவையென்று கூறலாம். 'இறங்கிவந்த கடவுள்' சிறுகதையானது மதக்கோட்பாடுகளையும் மதம்சார்ந்த வியாபார அரசியலையும் விமர்சனத்துக்குள்ளாக்குகின்றது. எட்டாத உயரத்தில் சாதாரணமக்களுக்குக் கிட்டாத பரம்பொருள் ஒருபக்கம். ஆன்மீகத்தின் பெயரால் அற்புதசாகசங்களை அநாயாசமாக நிகழ்த்துகின்ற அருளாளர்கள் இன்னொருபக்கம். அவர்களில் சிலர் கடவுளின் கட்டளைக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதால் சாத்தான்களென்றே கருதப்படுகிறார்கள். இன்றைய அவசர உலகில் ஆசாபாசங்கள் நிறைந்த பக்தர்களின் அகச்சாய்வுகளை விமர்சனரீதியாகச் சுட்டுவதாக இந்தச் சிறுகதையை எடுத்துக்கொள்ளலாம். தன்னை நாடுகின்ற பக்தர்கள் குறைந்துவிட்டதை உணர்ந்த கடவுள் அதற்கான காரணத்தையறிய மலையிலிருந்து இறங்கி வருகிறார். தன்னைத் தவிர வேறு கடவுளர்கள் இருக்கிறார்களாவென்று தேடுகிறார்.

தேவகாந்தன் அந்த அருளாளர்களைப்பற்றி இப்படிச் சொல்கிறார்.

'பக்தரை நாடிச்சென்று வரமளிப்பவர்களாய் அக்கடவுளர் இருப்பதை அங்கு வந்த சில பக்தர்கள் தம்முள் கதைப்பதில் அறிந்தார் கடவுள். ஜனசமூகம் கடவுளிடம் யாசித்துப்பெற்ற காலம்போய், காணிக்கை கொடுத்து சௌபாக்கியங்கள் பெறும் நவீன உலகம் தோன்றியிருப்பதையும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிச் சிரிப்பது கேட்டார்'

'சிலர் காணிக்கைகளின் மூலம் நோய்களிலிருந்து தவிர்ந்துகொண்டிருப்பதைக் கடவுள் கண்டார். அவர்களெல்லாம் பல வர்ணங்களில் கையிலும் கழுத்திலும் அவர்போலப் பாம்புகளைக் கட்டியிருந்தார்கள். பாம்புகளின் நிறங்கள் அவர்களின் கடவுளர் யாரென்று அடையாளப்படுத்துவனவாக இருந்தன'

'அப்போதுதான் தெரிந்தது அவர்கள் தன்னைவிட மிகுந்த காட்சிப்பரவசத்தைத் தம் பக்தர்களுக்கு அளிக்கக்கூடியவர்களாய் இருந்தார்களென்று. அப்போது தன் கோலம் அவருக்கே பிடித்திருக்கவில்லை'

'அவர் மறுபடி மலைமேல் ஏறவேயில்லை'

இவ்வாறு சிறுகதை முடிகிறது. தன்னைத்தானே விமரிசனஞ்செய்த கடவுள் மீண்டும் ஏன் மலையில் ஏறப்போகிறார்? என்ற கேள்வி இயல்பாக எமக்குள் எழுகின்றது. இங்கு 'காட்சிப்பரவசம்' என்ற சொல்லாடல் கனதியானது. மதத்தின் பெயரால் சாமானியமக்களின் இறைநம்பிக்கையையும் அகநெருக்கீட்டில் ஆறுதலைத்தேடும் அவாவினையும் துஸ்பிரயோகஞ்செய்யும் ஆன்மீக வியாபாரிகள் சிலர் மழைக்காளான்களாகப் பெருகிக் காட்சிப் பரவசங்கொடுக்கின்ற சூழ்நிலையில், கழுத்திலும் கைகளிலும் கட்டுகின்ற நூல்களின் வண்ணங்களே கட்சிக் கொடிகளைப்போலக் கருதப்படுகின்ற அரசியலில், இன்றைய நவீன உலகம் எந்தப்புள்ளியில் வந்து நிற்கிறது என்பதைச் சுட்டுகின்ற சிறுகதையென்று இதனைக் குறிப்பிடலாம். கடவுள் தானாக விரும்பினாலும் மீண்டும் மலைமேல் ஏறமுடியாதென்பதே முடிவான உண்மையாகிறது.

இந்தத்தொகுப்பில் வித்தியாசமான சிறுகதைகளாக பாம்புக்கமம் மற்றும் புற்றுச்சாமி ஆகியவற்றைச் சொல்லமுடியும். தொன்மங்களுடன் ஊடாடுவதில் தேவகாந்தனுக்குள்ள பெருவிருப்பினை இந்தக் கதைகள் அற்புதமாக வெளிப்படுத்துகின்றன. அரூபங்களின் அலைவுகளும் 'பழியின்சுழலாகப்' பரவுகின்ற வன்மமும் மாந்திரீக மாயங்களாக வாசகர்களின்மீது விழுகின்றன. மகாபாரதத்தில் அர்ச்சுனனும் கிருஸ்ணனும் பாண்டவர்களின் பூமியான இந்திரப்பிரஸ்தத்தை உருவாக்குவதற்காக காண்டாவனத்தை அஸ்திரங்கொண்டு தகனஞ்செய்ததும், அந்த நெருப்பில் அங்கிருந்த சர்ப்பங்கள் அழிந்ததும், அனலிடையே உயிர்தப்பிய தட்சகன் வெகுகாலத்துக்குப் பிறகு பாண்டவர்களின் வழித்தோன்றலான பரீட்சித்து மன்னனைப் பழிதீர்த்ததும் 'பழியின் சுழல்' என்ற புதினமாகக் கதைசொல்லியால் சித்திரிக்கப்படுகிறது.

அதைப்போன்றதே பாம்புக்கமமும். கமலநாதனின் தாத்தா தன்மனைவியைத் தீண்டிய சர்ப்பத்தைப் பழிதீர்க்க பாம்புக்கமத்தையும் நாகதம்பிரான் கோவிலையும் அழிக்கிறார். சாமியாரின் மரணம் அவலமாக நிகழ்கிறது. அதற்குபிறகு அந்த நிலத்தைச் சொந்தமாக்குகிறார். பாம்புக்கமத்தின்மீது வீட்டைக் கட்டுகிறார். இரண்டு தலைமுறைகளுக்குப்பிறகு அவருடைய பேரன் கமலநாதன் நாகசர்ப்பத்தினால் கடியுண்டு இறந்துபோகிறான். இவ்வாறான பழிதீர்த்தல்கள் இக்காலத்தில் சாத்தியமா? என்றெல்லாம் யோசிக்கவேண்டியதில்லை. இங்கு சர்ப்பத்தின் தீண்டுகையென்பது ஒரு குறியீடுமட்டுமே. அது தீவினைகளுக்காக வழங்கப்படுகின்ற தீர்ப்பு. அறமற்ற எதிர்மறைச் சம்பவங்களுக்கும், துர்மரணங்களுக்கும் காலத்தினால் போடப்படுகின்ற பெருமுடிச்சு. அவ்வளவுதான்.

அதைப்போன்றதே புற்றுச்சாமி என்ற சிறுகதையும். பனங்காட்டில் புற்றுகளிடையே உறைந்திருக்கும் சாமியார் ஓர் ஆசிரியரின் வீட்டில் பரிகாரம் செய்யச்செல்கிறார். அமாவாசைகளில் மட்டும் அவரோடு சங்கமிக்கின்ற அவிநாசியென்னும் பெண்சக்தியைத் திருப்தி செய்யவேண்டிய தேவையும் அவருக்கிருக்கிறது. முன்னர் கீரிமலைக்கேணி துஸ்ட ஆவிகளால் உப்பாவதும், அவர் தன்னுடைய சக்தியைப் பிரயோகித்து அதை நன்னீராக்குவதும் அதன் விளைவாக ஆவிகள் அவருக்கு வசியமாவதும் சம்பவங்களாகச் சொல்லப்படுகின்றன. அந்த ஆவிகளின் உதவியால் பரிகாரம் நிறைவுபெறுகிறது. பரிகாரத்தின்போது நிகழ்ந்த தந்திரத்தினால் அவருடைய காலமும் சர்ப்பங்களின் தீண்டுகைகளுடன் சமாதிநிலையில் முடிகிறது. இச்சிறுகதையானது மொழியைக் கையாள்வதில் உச்சமான அடைவினைக் கொண்டுள்ளதாகக் கருதமுடிகிறது. ஜெயமோகனின் அரூபமான சில சிறுகதைகளிலும் இவ்வாறான மொழிச்சிறப்பைக் காணமுடியும்.

அடுத்ததாக, 'ஊர்' மற்றும் 'உட்கனல்' ஆகிய இரு சிறுகதைகளையும் எடுத்துக் கொள்ளலாம். இந்த இரண்டு சிறுகதைகளும் நீண்டகாலத்துக்குப் பிறகு வெளிநாட்டிலிருந்து ஊரைப்பார்க்க வந்தவர்களின் அனுபவங்களாக விரிகின்றன.

ஊரிலேற்பட்டுள்ள மாற்றங்களை வளர்ச்சியின் அடையாளங்களாகக் கொள்ளத் தயங்கும் மனம் அவனுடையது. போரும் புலப்பெயர்வும் உறவுகளை, உணர்வின் நெருக்கங்களை உடைத்துவிட்ட அவலம் தேங்கிக் கிடக்கிறது. அயல்வீடுகளில் அறிமுகமில்லாதவர்களின் பிரசன்னங்கள். ஆபத்துக்கு ஓடிவராத அல்லது இங்கிருந்து ஓடிச்செல்லாத அலட்சியங்கள்.

'ஊர் அவனளவில் விழுங்கப்பட்டாயிற்று. இப்போதிருப்பது தனிமனிதர்களின் வசிப்பிடங்கள்' என்று ஏமாற்றந்தொனிப்பதாகச் சிறுகதை முடிகிறது.

உண்மையில் வேலிகள் வெட்டப்பட்டு சுற்றுமதில்கள் எழும்பியபோதே வேலிப்பொட்டுகள் அடைபட்டுப்போயின. அகவுணர்வுகலந்த பண்டமாற்றுகள் அருகிவிட்டன. மானுட உறவுகளில் இடைவெளிகள் உருவாகிவிட்டன. குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்துபோனதால் உறவுப்பின்னலும் ஒன்றுக்கொன்று துணையாதலும் அற்றுப்போனதான உணர்வுமட்டுமே வியாபித்திருக்கிறது. அதேபோன்று, 'உட்கனல்' என்ற சிறுகதைகூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்பார்க்க வந்த இடத்தில் பழைய நினைவுகளின் மீட்டுதலாயிருக்கிறது. அது எண்பதுகளில் நடந்த சம்பவம். மிளகாய் வியாபாரத்துக்காகப் போன இடத்தில் நவநீதம் என்பவருக்கேற்பட்ட பெண்தொடர்பும், அந்த வசியத்தை முறிக்க அவருடைய மனைவி வள்ளிநாயகி நாயன்மார்க்கட்டு பசுபதி ஐயரை நாடியதும், புலம்பெயர்ந்து போனபின் எல்லாம் சுமுகமானதாக நம்பப்படுவதும் இரசனையாகச் சொல்லப்படுகின்றன.

வள்ளிநாயகி எல்லாவற்றையும் மறந்திருப்பாளென்றே நவநீதம் ஆறுதலடைகிறார். ஆனால், அக்காலத்தில் அவளுக்குள் தகித்த நெருப்பின் வெம்மையை அவள் மறக்கவில்லையென்பதை அவர் அறியமாட்டார். மன்னித்தல் வேறு மறத்தல் வேறு. அதுவே ஒழுக்கமும் ஓர்மமும் கொண்ட பெண்ணின் பெருங்குணம். மிக இயல்பான நடையில் வாசிப்பவர்களை வசீகரிக்கின்ற சிறுகதையென்று இதனைக் கூறலாம்.

மனம், எம்மா ஆகிய சிறுகதைகள் புலம்பெயர்தேசத்தின் அனுபவங்களாக விரிகின்றன. ஆழமான வாசிப்பின்போது எம்மால் அந்தக் களங்களை உள் வாங்கிக்கொள்ளமுடிகிறது.

'கறுப்பர்களெல்லாம் கள்ளக்கூட்டமென்று ஓர் இனக்குழுமத்தை ஒதுக்கிவைக்கின்ற சூழ்நிலையில், வெளிப்படையான சொற்களையும் இயல்பான நடத்தைகளையுங்கொண்ட பணிப்பெண்ணான குரூமி. பேரனுடன் படிக்கும் கறுப்பினச் சிறுவனான நிக்கலஸ். மனம் சிறுகதையில் இவர்கள் இருவரும் தனித்துவமான பாத்திரங்கள். எது எம்மிடம் தேவைக்கு அதிகமாக இருக்கிறதோ அது மற்றவருக்கானது என்ற மனப்பாங்கு. அனுமதியின்றி எடுப்பது எம்மால் களவாகப் பார்க்கப்படும்போது, அவர்களால் உரிமையாகக் கருதப்படுகின்றது. இதுவே சிறுகதைக்கான அடிப்படையெனலாம். நைஜீரியப் பணிப்பெண்ணான குரூமி ஒரு விதவையுங்கூட. அவளுடன் இராஜலிங்கம் நிகழ்த்தும் உரையாடல் பல்வேறு உணர்வுகளை விரிக்கின்றது. குரூமி சொல்கிறாள்,

"எனது மகனுக்குப் போடுவதற்கு சேர்ட் இல்லை. உங்களிடமோ இரண்டு நீல சேர்ட்கள் இருந்தன. அதனால் ஒன்றைக் கொண்டுபோனேன்"

"அப்போ, உனக்குத் தேவையானால் எதையும் நீ எடுத்துக்கொண்டு போய் விடுவாயா?"

"அதெப்படி முடியும்? உங்களிடம் அது இரண்டாக இருக்கவேண்டும். அப்போதும் அது எனக்கு மிகமிகத் தேவையானதாக இருக்கவேண்டும். அப்போதுதானே எடுத்துச்செல்லமுடியும்!"

அதைப்போலவே பேரனின் ஜாக்கற் தொலைந்துபோகிறது. சகபாடியான நிக்கலஸ் "இது நான் வாங்கியதில்லை. இங்கேதான் எறிந்துகிடந்து எடுத்தேன்" என்று அவனிடம் திருப்பிக்கொடுத்துவிட்டு இயல்பாக நடந்துபோகிறான். இவ்வாறாக அந்த நிலத்துக்கேயுரிய அபூர்வமனிதர்களின் வாழ்வியல்சார்ந்த உளவியலை ஆச்சரியமாகத் தொட்டுச்செல்லும் சிறுகதையாக இதனைக் கொள்ளலாம். இந்தத் தொகுப்பிலுள்ள 'எம்மா' என்ற சிறுகதை 2018 தீராநதியில் வெளியானபோதே என்னைக் கவர்ந்திருந்தது. பணியிடத்தில் ஏற்படுகின்ற எதிர்ப்பாலின ஈர்ப்புகளும், அவற்றால் விளைகின்ற பிரச்சினைகளும் கதையின் மையமாகின்றன.

வெவ்வேறு காரணங்களால் தங்கள் கணவர்களைப்பிரிந்த இலங்கைப் பெண்ணான லட்சுமி மற்றும் ஆர்மீனியாவைச் சேர்ந்த எம்மா ஆகியோர் கனடாவில் ஒரேயிடத்தில் வேலைசெய்கிறார்கள். எம்மா பணியிடத்தில் சண்முகநாதன் என்ற சானிடம் உளரீதியான ஊடாட்டங்களை எதிர்கொள்கின்றாள். அவளைப் பொறுத்தவரை அது காதலாகவே இருக்கிறது. ஆனால், சண்முகநாதனின் வேட்கை உடல்ரீதியாக இருப்பதையும் அவள் உணர்கிறாள். அதேபோல மேற்பார்வையாளனொருவனுடனும் எல்லைமீறாமல் பழகவேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு. ஏனென்றால் முன்னைய பணியிடங்களில் முரண்பாடுகளின் காரணமாக வேலைகளை இழந்து துன்பப்பட்டிருக்கிறாள். எனவே தன்னையுங் காத்து வேலையையும் நிரந்தரமாக்குந்தேவை அவளுக்கிருக்கிறது. ஆதரவற்ற ஓர் இளந்தாய் தனித்து வாழ்வதன் தற்காப்பாக அதைக்கருதலாம்.

இந்த இரண்டுபெண்களினதும் கலாசாரப்பின்னணிகள் இவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற தன்மையும் அவர்களின் கண்ணோட்டங்களும் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இறுதிப்பகுதியில் கோப்பி அருந்தியபடி நிகழும் நீண்ட உரையாடல் சிறுகதைக்கு வலுச்சேர்த்துள்ளன.

இந்தத் தொகுப்பிலுள்ள முற்றுத்தரிப்பு, சொல்லில் மறைந்தவள், லவ் இன் த ரைம் ஓஃப் கொரொனா ஆகிய மூன்று சிறுகதைகளையும் உள்ளுடன் அடிப்படையில் ஒரே புள்ளியில் வைக்கமுடியும். ஆனால், இந்த மூன்று சிறுகதைகளும் வெவ்வேறு களங்களில் நிகழ்பவை. சம்பந்தப்பட்ட பெண்களின் இசைவுகள். அவர்களிடம் நெருப்பாகத் தகிக்கும் காமத்தினால் நெறிபிறழக் கூடிய புள்ளிகளை அந்த ஆண்கள் 'இலாவகமாகக்' கடந்துசெல்லும் மனப் பாங்கு அல்லது அந்த வாய்ப்பினை இயல்பாக நழுவவிடுகின்ற காலம். தேவகாந்தனின் வார்த்தையில் சொல்வதானால் மானுடவிழுமியங்களில் ஒன்றான 'ஒழுகலாற்றின் பெரும்பக்குவம் அல்லது வேர்கொண்ட பண்பாடு'.

அதுவே இந்த மூன்று கதைகளிலும் சாரமாகச் சுவறுகின்றது. முற்றுத்தரிப்பு கதையில் வருகின்ற பெயர்குறிப்பிடப்படாத அந்தப் பெண்ணாகட்டும், சொல்லில் மறைந்தவள் கதையின் அமரசுந்தரியாகட்டும் லவ் இன் த ரைம் ஓஃப் கொரொனாவில் வருகின்ற சந்திராவாகட்டும் தலையைச் சாய்த்து கண்களை நிமிர்த்திப்பார்க்கின்ற நிர்ச்சலன வசிகரத்துக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் ஏறக்குறைய தேவமாந்தர்களாகவே சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். இலகுவில் எவரிடமும் வசப்படாதவர்களாக, அகவுணர்வுகளை எல்லோரிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தாது தங்களுக்குள்ளேயே குமைந்து போராடுபவர்கள். அவர்களுக்குக் குழந்தைகளிருக்கின்றன. தனிப்பட்ட குடும்பவாழ்வு குலைந்துபோயிருக்கிறது. அவர்கள் மனம் சாய்கின்ற ஆண்களின் வாழ்விலும் ஏதோவொரு சிக்கலிருக்கிறது. ஆனால், அந்தப்பெண்கள் தங்கள் மனதுக்கு உகந்தவர்களிடம் வெளிப்படுத்துகின்ற இசைவுகள் – அது பெரும்பாலும் ஒருவரிடம் மட்டுமேயிருக்கிறது, கடைசியில் வெறுங்கனவாகவே முடிகின்றன.

குறிப்பாக, 'லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனா' கதையில்வரும் சந்திரா பாத்திரம் மிகுந்த இரக்கத்தினை அவாவுவதாகப் படைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும். முன்னர் குறிப்பிட்டதுபோல தனிமனித ஒழுக்கத்தில் பிறழக்கூடிய எல்லைக்கோட்டில் அந்தப்பெண்களின் ஏக்கங்கள் அமுங்கிப்போய்விடுகின்றன. அந்த வரங்கள் அவர்களுக்குப் பிரியமானவர்களுக்கு மட்டுமன்று, அதற்கு மேல் எவருக்குமே கிடைக்கப்போவதில்லை. பதிலாக, எஞ்சியகாலத்தில் உணர்வுகளற்ற வெறுமையைமட்டுமேதுணையாக வைத்திருக்கின்றன. இத்தகைய பொதுத்தன்மையே அந்தச் சிறுகதைகளின் உச்சமான அடைவு எனலாம்.

மேற்சொன்ன மூன்று கதைகளுக்கும் ஏறக்குறைய எதிர்மறையான சிறுகதையாக 'மலர் அன்ரியைக்' கருதலாம். மலர் அன்ரி, சகாயம், கதைசொல்லியான ஏழுவயதுச் சிறுவன் ஆகிய மூன்று பாத்திரங்களே கதையில் வருகின்றன. இருபது வயதான மலர் அன்ரியின் நடத்தைகள் பருவவயதில் சிலருக்கு விளைகின்ற பலவீனங்களுக்கான உதாரணங்கள். காதலா? காமமா? என்ற தடுமாற்றத்தின் வசப்பட்டவையாகவே அந்த உறவுகள் சித்திரிக்கப்படுகின்றன.

மலர் அன்ரிக்கும் சகாயம் என்ற இளைஞனுக்கும் இடையிலுள்ள நெருக்கம். சிறுவனான அவனைக் 'காறாத்தல்' சீனிவாங்கக் கடைக்கு அனுப்பிவிட்டு அவர்களிருவரும் ஏற்படுத்திக்கொள்ளும் தனிமை. இவையாவும் அவனை எரிச்சற்படுத்துவதால் சகாயத்தை வெறுக்கிறான். கடைசியில் மலர் அன்ரிக்கு வாய்த்த சிங்களமாப்பிள்ளையைக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அது சிறுவனிடமுள்ள பால்யப் பருவக்கவர்ச்சியின் பக்கவிளைவுகளென்று கருதத்தக்க இடங்கள் சிறுகதையில் வருகின்றன. இவ்வாறான அனுபவங்கள் நிச்சயமாகப் பலருக்கு இருக்கக்கூடும். அவை இயல்பானவை. இங்கு ஏழெட்டு வயதுச் சிறுவனின் பார்வையில் மலரன்ரியைப்பற்றிய சம்பவங்கள் மிகுந்த அவதானத்துடன் கையாளப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக தேவகாந்தனின் பதினொரு சிறுகதைகளையும் படித்தபோது எனக்கேற்பட்ட உணர்வுத்தொற்றலை பகிர்ந்துகொள்வது புதியவர்களுக்குத் தூண்டுதலாக அமையக்கூடும். அந்த வாசிப்பனுபவம் அவருடைய ஏனைய படைப்புகளை நோக்கி அவர்களை நகர்த்துமாயின், படைப்புமொழியின் கட்டுமானச் சிறப்பினைக் கண்டுகொள்வார்களென நிச்சயமாக நம்பலாம்.

ஆனாலும், இங்கு மனதை இலேசாக நெருடிய விடயமொன்றைக் குறிப்பிடுவதில் தவறில்லையென்றே நினைக்கிறேன். தேவகாந்தனின் படைப்புகளில் அவருடைய தலைப்புகளே என்னை முதலில் ஈர்க்கும். படைப்பினுள் நுழைந்து, மொழியின் செழுமையில் தலைப்பின் பொருத்தப்பாட்டினைச் சிலாகித்துக்கொண்டே பயணிப்பது அற்புதமான அனுபவத்தைப் பரிசளிக்கும். யுத்தத்தின் முதலாம் அதிகாரம், நிலாச்சமுத்திரம், திருப்படையாச்சி, உதிர்வின் ஓசை, பெருந்தொகுப்பான கனவுச்சிறை, கதாகாலம், காலக்கனா, ஆதித்தாய், நதிமேல் தனித்தலையும் சிறுபுள், கலிங்கு, கந்தில்பாவை என்று எல்லாமே கவித்துவமாக வசீகரித்தவை. ஒரு படைப்பின் தலைப்பினைத் தெரிவு செய்வது படைப்பாளியின் உரிமை. அந்தவகையில் 'லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனா' என்ற தலைப்பு தற்காலச்சூழ்நிலையைக் கவனத்திற்கொண்டு தெரிவுசெய்யப்பட்டிருக்கக் கூடும் இந்நூல்பற்றி தேவகாந்தன் 'கபிரியேல் கார்சியா மார்க்கோஸின் 'லவ் இன் த ரைம் ஒப் கொலரா' என்ற நாவலின் பாதிப்பில் இத்தலைப்பினைத் தெரிவுசெய்ததாகக் குறிப்பிட்டமையும் கவனத்திற்குரியது.

ஒரு சிறுகதை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் கச்சிதமாக அமைவதுடன், தேர்ந்த வாசகர்களின் மனதில் அழுத்தமாகத் தடம்பதிக்குமென்றால், அது தன்னுடைய நோக்கத்தினை நிறைவுசெய்கின்றதெனலாம். அவ்வாறான சிறுகதைகள் வாசிப்பின்முடிவில் தங்களுடைய எல்லைகளைத் தாமாகவே விரித்துக் கொள்ளும் வல்லபம் வாய்ந்தன. இடைப்படுகின்ற ஒவ்வொருகணத்திலும் புதிய சிந்தனைகளை உற்பவிப்பவை. அறம்சார்ந்த வாழ்வியலை அழகாகக் கட்டமைப்பவை. அந்தவகையில் தேவகாந்தனின் சிறுகதைகள் இலக்கிய உலகில் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன என்று உறுதியாகச் சொல்லலாம்.

இந்தத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் ஒவ்வொன்றும் விரிவாக ஆராயப்படுவதற்கான தாற்பரியங்களைக் கொண்டுள்ளவை. மாறுபட்ட தளங்களை வகுத்துக்கொண்ட வாசகர்களின் இரசனைகள் வித்தியாசமான கோணங்களில் இருக்கக்கூடும். ஆனாலும், அந்த இரசனைகள் அறம்சார்ந்து பொதுவான ஒரு புள்ளியைநோக்கி நகருமாயின் குறித்த படைப்பு தரமான பிரதியென்ற அடையாளத்தினைப் பெற்றுக்கொள்ளும்.

இந்தத் தொகுப்பிலுள்ள சிறுகதையொன்றின் நிறைவுப்பகுதி, தேவகாந்தனின் அநேகமான சிறுகதைகளின் பொதுப்பண்பாக அமைவதை உணரமுடிகிறது. மனதுக்கு மிகவும் நெருக்கமான அந்தப்பகுதியுடன் இக்கட்டுரையை நிறைவு செய்யலாம்.

'எல்லாவற்றிற்குமாய் காலப்பெரும்பரப்பில் நிஷ்டூரம் ஆடிக்கொண்டிருக்கும் அவ்வூழியின்மேல் ஒரு பழியைப் போடலாம்தான். ஆனால் மனங்களின் சாட்சியாய் உருவாகும் உறவுகள் சிதைவதில் அது எந்தப்பயனையும் செய்வதில்லை. அந்தக் குறிப்பிட்ட காலத்தில் அது நடந்ததென்பதுமட்டுமே அடையாளமாய் எஞ்சுகிறது'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம் குறித்த தேடல்

**வ.ந. கிரிதரனின்**
**'கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள்'**
**ஒரு பார்வை**




வ.ந.கிரிதரன் கனடாவில் வாழ்ந்து வருகிறார். புலம்பெயர்ந்த ஈழப்படைப்பாளிகளில் ஒருவர். இலக்கியத்துறையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறார். பதிவுகள் இணைய இதழின் ஊடாக உலகில் வாழும் தமிழ்ப்படைப்பாளர்களின் படைப்புக்களை குவிமையப்படுத்தி வருகிறார். அவர் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான 'கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள்' பற்றி இக்கட்டுரை நோக்குகின்றது.

மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த ஈழப்படைப்பாளிகள் 80களிலிருந்து தாயகம் சார்ந்தும் போரால் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள் சார்ந்தும் இதுவரை அதிகமாக எழுதி வந்தார்கள். அந்தப் பொருண்மையில் அண்மைய புலம்பெயர் படைப்புக்கள் கணிசமான அளவு மாற்றங்களைக் கண்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஈழத்தமிழர்களின் வாழ்வனுபவங்கள் அந்த மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. வ.ந.கிரிதரனின் இத்தொகுப்பு, அடையாளம் குறித்த கேள்விகளையும் ஈழத்தமிழர் மாத்திரமன்றி ஒடுக்குதலுக்குள்ளாகிய வேற்று நாட்டவர்கள் அகதிகளாக வாழ்வது பற்றியும் புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்பங்கள் மத்தியில் இருக்கக்கூடிய உளவியற் சிக்கல்கள் பற்றியும் அதிகம் கவனத்தில் கொண்டிருக்கின்றது. இந்தப் பொருண்மை மாற்றங்களைப் படிப்படியாக ஏனைய எழுத்தாளர்களும் பதிவு செய்து வருகின்றனர். இவ்வகையில் கிரிதரனின் கதைகள் சர்வதேசியத் தளத்தில் நிற்கும் மனிதன் ஒருவனின் புகலிட வாழ்வனுபவம் சார்ந்த பார்வையாக விரிவடைந்துள்ளது.

## அடையாளம் குறித்த கதைகள்

அடையாளம் குறித்தவற்றில் மனிதமூலம், *Where are you from?*, நீ எங்கிருந்து வருகிறாய், ஆபிரிக்க அமெரிக்க கனேடியக் குடிவரவாளன், யன்னல் ஆகிய சிறுகதைகளை இனங்காணலாம். நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எனது உணர்வுகள் மதிக்கப்படுகின்றனவா? நானும் மனிதனாக மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றேனா? முதலான வினாக்கள் இக்கதைகளில் இழையோடுகின்றன. இற்றைக்கு மில்லியன் கணக்கான மக்கள் உலக நாடுகளில் நாடிழந்து அகதிகளாகவும் நாடோடிகளாகவும் வீடற்றவர்களாகவும் வாழ்கின்றனர். அவர்களின் உணர்வுகளைப் பதிவு செய்யும் விதமாக மேற்கூறிய சிறுகதைகள் அமைந்துள்ளன.

*Where are you from?* என்று தலைப்பிட்ட சிறுகதையானது, புகலிடத்தில் அகதிகளாக வந்து சேர்ந்தவர்களை அந்நாட்டவர்கள் முதலில் கேட்கும் கேள்வியாக அமைகின்றது. இந்தக் கேள்வியினை எதிர்கொள்ளும் நபர் இதனால் அடையும் மன உளைச்சலை யாரும் பொருட்படுத்துவதில்லை. தமிழர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போதும் இவ்வாறு கேட்பதோடு அடுத்தடுத்த வினாக்களையும் தொடுப்பார்கள் 'அண்ணை ஊரில எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்?' என்பார்கள். இவர்களின் வினாக்களில் தொக்கி நிற்பது சாதியத்தை அறியவேண்டும் என்பதே!

மேலைத்தேயத்தவர்கள் நிறவாத அடிப்படையில் பிரித்துப் பார்க்கிறார்கள். நம்மவர்கள் சாதிய அடிப்படையில் பிரித்துப் பார்க்கிறார்கள் என்று இச்சிறுகதையின் தொடக்கமும் முடிவும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இது தனிக்கதையாக எழுதப்பட்டாலும் ஏனைய கதைகளிலும் இதன் உணர்வோட்டம் வெவ்வேறு விதமாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம்.

வெளிநாட்டில் அறிமுகமில்லாத இருவர் சந்தித்தால் முதலில் காலநிலையினைப் பற்றிப் பேச்சைத் தொடங்குவார்கள். அடுத்து *Where are you from?* என்று கேட்பார்கள். அவ்வாறு கேட்பவரை நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்று பதிலுக்குத் திருப்பிக் கேட்கிறார். அதற்கு அவர்கள் கோபப்படுகிறார்கள். அதேபோல் வயதில் குறைந்த இளைஞர் ஒருவர் *Where are you from?* என்று கேட்கும்போது உமக்கு வயது *20* எனக்கு வயது *30*. ஆகவே, நீ எங்கிருந்து வந்தாய் என்பதைச் சொல் என்கிறார். இக்கதையிலும் எங்கிருந்து வந்தாய் என்று அவனிடம் மட்டுமே இதுவரை கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எங்கள் பிள்ளைகளிடமும் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். உன் மூலம் என்ன? ஆதியில் உன் குடும்பத்தவர் எங்கிருந்து வந்தார்கள்? உன் தாத்தா பாட்டி அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? என்று நான் திருப்பிக் கேட்கும்போது 'இந்தக் கேள்வி மூலம் நீ என்னை அவமதிக்கிறாய் ... கனடியக் குடிமகனொருவனை நீ அவமதிக்கிறாய்' என்று கோபப்படுகிறார்கள்.

ஆபிரிக்க அமெரிக்கக் கனேடியக் குடிவரவாளன் என்ற சிறுகதையில் இன்னுமொரு மண்ணில் வேரூன்றுவதற்கு முயன்று தோற்றுப்போன கலிபோர்ணியாவில் வாழும் நைஜீரியன் ஒருவன், தன் மண்ணே சொர்க்கம் எனக் கூறுகின்ற மனநிலையைக் காட்டுகிறார். அந்த நைஜீரியன், கனடா ஒரு நாடா? என வெறுத்துப் பேசுகிறான். அதற்கு அவன் கூறும் காரணம் தனது நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகமில்லை என்பது. புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் அதிக குடும்பச் சுமையைத் தாங்கவேண்டியுள்ளது. அவற்றுக்காக இரவு பகல் பாராது மாடாக உழைக்கவேண்டியுள்ளது. எனவேதான் விரைவில் கலிபோர்னியா சென்றுவிடுவேன் என்கிறான்.

யன்னல் என்ற மற்றுமொரு சிறுகதையில் கறுப்பு மனிதனும் வெள்ளை மனிதனும் ஒருவருக்கொருவர் முரண்படுகிறார்கள். ஒருவரையொருவர் ஏளனம் செய்கிறார்கள். ஆனால் அவர்களது செல்லப் பிராணிகள் தங்கள் மகிழ்ச்சியை சிநேகித்தைத் தெரிவிக்கின்றன.

மனித மூலம் என்ற கதை 'நான்' என்ற பாத்திரம் தன்னைப்பற்றிக் கூறுகின்ற ஒரு விபரணமாக அமைந்துள்ளது. மனிதர்கள் நிறத்தாலும் குணத்தாலும் வேறுபட்டு நிற்கிறார்கள். அவன் நடந்து கொண்டேயிருக்கிறான். எதிரே வருபவர்கள் ஏளனம் செய்கிறார்கள்.

இவ்வாறாக அடையாளம் தொடர்பான கதைகள் நான் யார் என்பதையும் நான் எங்கிருந்து வந்தேன் என்பதையும் வினாக்களாக எழுப்புகின்றன. அதேநேரம் நிறத்தாலும் பண்பாட்டாலும் மொழியாலும் வேறுபட்டு இருப்பவர்கள் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து வரும் மனிதர்களை நிறத்தின் அடிப்படையில் வேறுபடுத்திப் பார்க்கிறார்கள். ஏளனப்படுத்துகிறார்கள். இவர்களும் மனிதர்கள்தான் என்பதை ஏற்க மறுக்கிறார்கள். இவ்வாறு நூற்றாண்டுத் துயரமாகத் தொடர்கின்ற கதைகளை கிரிதரன் கூறுகிறார். புலம்பெயர் தமிழ் எழுத்துக்களில் இவ்வாறான கதைகளை ஆரம்பகாலங்களில் பார்த்திபன், கருணாகரமூர்த்தி ஆகியோரும் பதிவு செய்திருக்கின்றனர். கவிதைகளில் மிக அதிகமாகப் பதிவாகியுள்ளன. அடையாளம் இழத்தல் என்பதும் அடையாளத்தைத் தக்க வைப்பதற்கு புலம்பெயர்ந்த மக்கள் படும்பாடுகளும் புகலிடக்கதைகளில் வலிமையாகப் பதிவாகியுள்ளன.

## தனித்து விடப்பட்டோர் மற்றும் அகதிகள்

தனித்து விடப்பட்டோர், அகதிகள் என்று கூறப்படுபவர்கள் ஒரு வகையில் அதிகாரத்தின் ஒடுக்குமுறைக்குள்ளாகியவர்களாகவே அமைகின்றனர். இந்த வகைப்பாடும் உலகப் பொதுவான போக்காகவுள்ளது. யமேய்க்கனுடன் சில கணங்கள், மான் ஹோல், சொந்தக்காரன், புலம்பெயர்தல், வீடற்றவன், கலாநிதியும் வீதி மனிதனும் முதலான சிறுகதைகளை இந்த வகைப்பாட்டுக்குள் அடக்கலாம்.

முழு யமேய்க்க சமூகத்தையும் சமூக விரோதக் கும்பலாகப் பார்ப்பது, அவர்களை இழிவுபடுத்துவது போன்றவற்றை மேற்குலகத்தினர் செய்து வருகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக மேற்குலகச் சூழலைத் தாங்கள் அசுத்தமாக்கிக் கொண்டும் காடுகளை அழித்துக் கொண்டும் மூன்றாம் உலக நாட்டவர்கள் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இது எவ்வகையில் நியாயமானது என யமேய்க்கனுடன் உரையாடும்போது வினாவெழுப்புகிறார். நடைபாதையில் வசிப்போர் மற்றும் வீடில்லாதவர்களைப் பற்றிய கதைகளாக மான்ஹோல், சொந்தக்காரன், புலம்பெயர்தல் ஆகிய மூன்று சிறுகதைகளையும் கூறலாம். ஆசிரியரின் சூழலியல் சார்ந்த நுண்மையான அவதானிப்பை இக்கதைகளில் வரும் பாத்திரங்களுக்கிடையிலான தொடர்பு நமக்கு உணர்த்துகிறது.

மான்ஹோலின் நடைபாதையில் இருந்து தன் பொழுதைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்துக் கொண்டிருக்கும் ஒருவன் சிகரெட் பிடிப்பது, யாரிடமாவது வாங்கிச் சாப்பிடுவது, அதிகநேரம் தியானத்தில் இருப்பதுபோல அசையாமல் இருப்பது, நேரே தெரியும் பாராளுமன்றக் கட்டடத்தைப் பார்த்து 'அங்கிருந்து அவர்கள் சட்டங்கள் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். காலத்தின் கூத்தில்லாமல் வேறென்ன' என ஒரு சித்தன் போல் பேசிக் கொண்டிருப்பது முதலானவற்றை மிக அநாயாசமாகக் காட்டுவார்.

இதேபோல் சொந்தக்காரன் சிறுகதையில் இருப்பிடமில்லாமல் பாதாளக் கட்டடத்தில் தங்கும் அமெரிக்க பூர்வீக அகதி ஒருவனைப் பற்றி கதையில் கூறும்போது 'நானோ அந்நிய நாட்டிலொரு அகதி. இவனோ சொந்த நாட்டிலேயே அகதியாகிப் போனவன்.' என்று அகதி வாழ்விற்கு கதியாகிப்போன சுதேசிகளைக் குறிப்பிடுவார்.

புலம்பெயர்தல் என்ற சிறுகதையில் மனநிலை பாதிக்கப்பட்ட வீடற்ற வாசிகளில் ஒருவன் ஒரு கட்டடத்தின் இரண்டாவது மாடியின் மூலையில் படுத்திருப்பான். அவனைக் கண்ட வெள்ளையன் ஒருவன் 'பாம்' இருக்கிறது என ஏளனமாகக் காவலாளியிடம் கூறுகின்றான். வீடற்றவன் என்று தலைப்பிட்ட மற்றொரு சிறுகதையில் வந்தேறு குடிகள், சிறுபான்மையினர் அனைவரும் இங்கு பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்காக வீடற்ற புதிரான மனிதன் ஒருவன் நகர மேயராகப் போட்டியிடுகிறேன் என்கிறான்.

கலாநிதியும் வீதி மனிதனும் என்ற கதையில் வீடற்ற வெள்ளையன் ஒருவன் மூன்றாம் உலக நாட்டவர்களைப் பார்த்து உங்களால் எங்களுக்கு வேலை இல்லை. எங்களுக்குக் கிடைக்க வேண்டியவற்றையெல்லாம் நீங்கள் களவாடிவிட்டீர்கள் என்று வசைச்சொற்களை வீசுகிறான்.

புகலிடத்தில் வாழ்கின்ற வீடற்றவர்கள், தனித்து விடப்பட்டோர், மனநிலை பாதிக்கப்பட்டோர் முதலானவர்களின் வாழ்நிலையையும் அவர்களின் மனநிலையையும் இக்கதைத் தொகுதியில் காணமுடிவது ஒரு வகையில் தமிழ் அனுபவச் சூழலில் புதிய களங்களையும் புதிய வாழ்க்கை நெருக்கடிகளையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

பொற்கூண்டுக் கிளிகள் என்ற கதை முதுமையின் தனிமை பற்றிக் கூறுகிறது. முதிர்ந்த வயதில் ராஜரத்தினத்தார் தனித்து விடப்பட்டமை இக்கதையில் சொல்லப்படுகிறது. கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள் என்ற சிறுகதை மிக நாசூக்காகச் சொல்லப்பட்டதாகும். கட்டடங்களில் தனித்து வாழும் மனிதர்களின் ஆசைகள் நிராசையாகிப் போகின்றமை, தற்கொலை முயற்சிகள் முதலானவை பற்றி சிந்திப்பதற்கு இடமிருக்கிறது. முயல்களை இக்கதையில் உருவகமாகக் கொண்டு பார்த்தால் அவையுங்கூட மனித வாழ்வையே சொல்வதாக அமைகின்றது.

## தமிழர் மனநிலை

புலம்பெயர்ந்த தமிழர் மனநிலையையும் பெண்களின் மாற்றங்களையும் மனோரஞ்சிதம், சீதாக்கா, கணவன், மனைவி, சாவித்திரி, ஒரு சிறீலங்கன் ஆகிய கதைகள் ஊடாகக் காட்டுவார். இவை உளவியல் ரீதியிலும் அணுகப்படவேண்டிய கதைகளாக உள்ளன.

மனோரஞ்சிதம் என்ற சிறுகதையில் பெண்ணுக்கு தாலி ஒரு வேலி எனவும், நடை உடை பாவனையில் புதுமையை விரும்புவதுமாக தாயகத்தில் வாழ்ந்த இளம்பெண் ஒருத்தி, திருமணமாகிப் புகலிடம் வந்தபின்னர் முழுவதுமாக மாறி விடுகின்ற சந்தர்ப்பத்தைக் காட்டுவார். பொ. கருணாகரமூர்த்தியின் 'மாற்றம்' குறுநாவலில் இது போன்றதொரு பாத்திரத்தை அவதானிக்கலாம். பெண் திருமணமாகி வந்தபின்னர் கணவனுக்கு ஏற்றாற்போல மாற்றமுறுவதையும் குடும்ப நெருக்கடிகளால் தனது இலட்சியத்தை கைவிடும் அவலத்தையும் கிரிதரனின் இக்கதையும் சித்திரிக்கின்றது. இன்று பெண்சார்ந்த விடுதலையுணர்வை வெளிப்படுத்தும் படைப்புக்கள் அதிகம் வெளிவருவதையும் இத்தருணத்தில் நினைவுகொள்ளலாம். தமிழர் மனநிலையை சீதாக்கா, கணவன் ஆகிய சிறுகதைகள் காட்டுகின்றன. ஊரில் அறிமுகமான சீதாக்கா புலம்பெயர்ந்து வந்தபோது அவளுக்கு மற்றுமொரு தெரிந்த ஆண் உதவி செய்வதை தவறான பார்வையில் நோக்கி குடும்ப உறவில் விரிசலை ஏற்படுத்தும் சக மனிதனின் இழிநிலையை கிரிதரன் காட்டுகிறார். நாம் புலம்பெயர்ந்தோம் புலன் பெயர்ந்தோமா? என்ற கேள்வியையும் கூடவே எழுப்பி சிந்திக்கத் தூண்டுகிறார். கணவன் என்ற சிறுகதை ஏஜென்சி மூலம் சிங்கப்பூர் ஊடாக அழைத்து வரப்பட்ட பெண்ணின் ஒழுக்கம் மீது கணவன் சந்தேகம் கொள்ளுதலும், ஏனைய கதைகளான மனைவி, சாவித்திரி, ஒரு சிறீலங்கன் ஆகியவற்றில் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படும் குடும்ப முரண்பாடுகள் அவர்களின் பிள்ளைகளை எவ்விதம் பாதிக்கின்றது என்பதையும் காட்டுகின்றன. எனவே, தமிழர் மனநிலை அதிகமும் பெண்கள் தொடர்பான குடும்ப உறவு நிலையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் தொடர்பானவையாக அமைந்துள்ளன.

புகலிட வாழ்நிலை அனுபவங்கள் குறித்த கதையினையும் இதனுடன் இணைத்துப் பார்க்கலாம். ஆசிரியரும் மாணவனும் என்ற கதையில் பொறியியலாளராகப் படித்த ஒருவன் புகலிடத்தில் துப்பரவுத் தொழிலாளியாகப் பணிபுரிய வேண்டிய நிலை ஏற்படுவதை நினைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்துகிறான். அதேநேரம் அவனுக்குக் கற்பித்த ஆசிரியர் தானும் வேலை தேடும் படலத்தில் ஈடுபடுகிறார். இருவரும் தத்தமது நிலையை மறைத்து உரையாடுகின்றனர். இவ்வாறான அவலமான வாழ்நிலை அனுபவங்களும் இத்தொகுப்பில் உள்ளன. அந்நியர்களாக இருந்தாலும் ஆபத்து வேளையில் உதவி செய்யும் மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதை பொந்துப் பறவைகள் கதை கூறுகிறது. புலம்பெயர்ந்தோரின் நெருக்கடியான வாழ்வை கட்டடக்காடுகள் என்று காலம் செல்வம் உருவகித்ததுபோல் கிரிதரனும் அந்தக் கட்டடங்களில் வாழும் மனிதர்களைப் பொந்துப் பறவைகளாக உருவகித்துள்ளார்.

## சூழலை வாழ்வியலுடன் ஒப்பிடுதல்

சூழலை வாழ்வியலுடன் ஒப்பிடும் சுண்டெலிகள், தப்பிப் பிழைத்தல், காங்ரீட் வனத்துக் குருவிகள், ஒரு மாநாட்டுப்பிரச்சினை ஆகிய நான்கு கதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

சுண்டெலிகளின் தொல்லையால் அதனை அழிப்பதற்காக அதன் ஒவ்வொரு அசைவையும் அறியக் காத்திருக்கிறார் ஒருவர். ஒருவேளை உணவுக்கான எலியின் தேடுதல், உயிர்வாழ்வதற்கு அது எடுக்கும் பிரயத்தனம் ஆகியன எலியின் மீது இரக்கத்தை வரவழைக்கிறது. இக்கதையை மனித வாழ்வுடன் ஒப்பிடலாம் என்று சொல்லத் தோன்றுகிறது. அதனால்தான் செ. கணேசலிங்கம் இக்கதை பற்றிக் குறிப்பிடும்போது 'சுண்டெலி ஒன்றின் மூலம் உயிர்வாழ்வின் மனித அடித்தள இருத்தலியலின் தாற்பரியத்தை கூறுகிறது' என்று எழுதுகிறார்.

தப்பிப் பிழைத்தல் என்ற கதையில் உணவுக் கழிவுகளைக் கொட்டும் பெட்டியில் சிறிய துவாரம் ஒன்று உள்ளது. அது ஏன் என்ற வினா எழுகிறது. இங்கும் ஓர் அணிலை மனித வாழ்வுடன் ஒப்பிட்டு எந்தச் சூழலிலும் உயிரினம் தப்பிப் பிழைப்பதற்கு வழியொன்று இருக்கும் என்பதை கதாசிரியர் உணர்த்துகிறார்.

காங்ரீட் வனத்துக் குருவிகள் என்ற கதையில் அதிக பனி நாள்களில் ஏனைய குருவிகள் தமக்கு ஏற்ற இடத்திற்கு பறந்து போயிருக்க ஒரு மரத்தில் வாழும் சில குருவிகள் தங்கள் இடத்தை மாற்றாமல் பனியில் உறைந்து சிலையாகி விடுகின்றன. எதற்காக இந்தக் குருவிகள் இந்த முடிவைத் தேர்ந்தெடுத்தன என தாயக வாழ்நிலையோடு ஆசிரியர் ஒப்பிட்டுப் பார்த்து வினா எழுப்புகிறார்.

ஒரு மாநாட்டுப் பிரச்சினை என்ற சிறுகதை டொராண்டோ வீதியொன்றில் 'மூஸ்' என்னும் மானினத்தை ஏற்றிச் சென்ற ட்ரக்டர் டிரெயில'ரிருந்து தப்பிய மிருகத்தின் கதை. இதை இலங்கைச் சிறைக்கூடத்தில் அடைபட்டுக் கிடக்கும் தமிழர் மனநிலையுடன் ஒப்பிடுகிறார். 'ஊரில் இருப்பவர்களின் நினைவுகளும் எழாமலில்லை. இந்த மாட்டைப் போன்ற நிலையில் இருப்பவர்கள் எத்தனையோ? அரைகுறையாகத் தப்பி மீண்டும் அகப்பட்டவர்கள். தப்புவதற்கு முடியாமல் சமாதியாகிப் போனவர்கள்' என்ற கூற்று இலங்கைச் சிறையில் வாடுபவர்களையும் அங்கிருந்து புலம்பெயர்ந்து வந்து வாழக்கூடியவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறது. மேற்காட்டிய கதைகள் சூழலியல் அனுபவங்கள் குறித்தனவாக அமைந்துள்ளன. தொடர்புபட்ட உயிரினங்களை மையமாக வைத்து எழுதப்பட்டாலும் அக்கதைகளில் இருப்பது மனித வாழ்விலும் ஏற்படக்கூடிய நெருக்கடிகள்தான். இக்கதைகள் புதிய கதைக்களங்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

## நிறைவாக

கிரிதரனின் இக்கதைகள் புலம்பெயர்ந்த காலத்தில் இருந்து இன்றுவரை எழுதப்பட்ட கதைகளின் தொகுப்பாக அமைந்துள்ளன. அதனால் 90களின் ஆரம்பகாலக் கதைகளும் இதற்குள் அடங்கியிருக்கின்றன. தாயக வாழ்வு சார்ந்த கதைகளையும் அதனுடன் இணைந்த கதைகளையும் அதிகமான படைப்பாளிகள் எழுதியிருக்கின்றனர். ஆனால் கிரிதரனின் இக்கதைத் தொகுப்பு அதிகமும் புலம்பெயர்ந்த மனிதன் ஒருவனின் புகலிட வாழ்வியல் அனுபவங்களின் திரட்டாக அமைந்துள்ளது. குறிப்பாக மூன்றாம் உலக நாட்டவர்கள் சுதேச நாட்டவரால் எவ்வாறு ஒதுக்கப்படுகிறார்கள், ஒடுக்குதலுக்கு உள்ளாகிறார்கள் என்பது மிக அதிகமான கதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் சூழலியல் அனுபவங்களுடன் தனிமனித வாழ்வனுபவங்களை ஒப்பீடு செய்வதும் முக்கியமானது. ஆரம்பகாலக் கதைகள் சிலவற்றில் தன்னுணர்வு சார்ந்த வெளிப்பாடும் விபரணத் தன்மையும் தலைகாட்டுவதைத் தவிர்க்க முடியாதுதான். ஆனால் பிற்காலத்தில் எழுதப்பட்ட கதைகளில் அந்தக் குறைகள் களையப்பட்டுள்ளன. வ.ந.கிரிதரனின் ஒவ்வொரு கதைகளில் வருகின்ற கதைசொல்லியும் ஒரு பார்வையாளனாக, ஒரு நடைபயணியாக கனேடியத் தெருக்கள் முதல் ஒடுங்கலான பாதைகள் வரை வாசகரையும் கூடவே அழைத்துச் செல்கிறார்.

புலம்பெயர்ந்த தமிழரின் மனவுணர்வுகளை சூழலியல் அனுபவத்துடன் இணைத்துக் கதை கூறுகின்ற கிரிதரனின் கதைசொல்லும் நேர்த்தி வரவேற்கத்தக்கதாகும். கிரிதரனின் எழுத்துக்கள் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் எழுத்துக்களுக்கு வளம் சேர்க்கக்கூடியவை என்பதற்கு இத்தொகுப்பும் சான்றாக அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புரை: நா.நவராஜ்

# புத்தரின் நிழல்

## வலிந்து அறையப்படும் ஆணிகளின் சாட்சியம்




### முன்நிழல்

இந்நிழல், இளைப்பாறும் மனிதர்களின் மனோநிலைக்கும் உணர்வுநிலைக்கும் அறிவுத்திறத்திற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப இனிமை செய்யவும் இன்னல் செய்யவும் கூடும் என்பதால் இங்கே குறிப்பிடப்படுபவை எனது கருத்துக்களே அன்றி பொதுவானவையாக இருக்கமுடியாது என்றே நான் கருதுகின்றேன். இளைப்பாறுபவர்களுக்கு இது சமர்ப்பணம்.

'புத்தரின் நிழல்' என்ற சிறுகதைத் தொகுதியைத் தந்த அறபாத் அவர்கள் 1970களில் ஓட்டமாவடியில் பிறந்தவர். அவர் அரபு மொழியிலும் இஸ்லாமிய மார்க்க ஞானத்திலும் தேர்ச்சி பெற்றவர். ஆரம்பத்தில் அல்குர்ஆனை தனது தாயாரின் சிநேகிதியான அலிஃபே ராவியத்தும்மா என்பவரிடம் கற்கத்தொடங்கி பின்னர் வாழைச்சேனை ஹனீபா மௌலவியிடத்தில் முழுமையாக அதனைப் பயின்று முடித்தவர். ஓட்டமாவடி முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக் கற்கத்தொடங்கி அக்கரைப்பற்று அரபுக்கல்லூரி, அட்டாளைச் சேனைக் கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி போன்றவற்றில் இணைந்து கற்றார். அட்டாளைச்சேனை அரபுக்கல்லூரியில் இணைந்த 1985ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே தனது எழுத்துமுனை கூர்மையாக்கப்பட்டது என இவர் குறிப்பிடுவது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. அதற்கு அங்கிருந்த நூலகமும் அக்காலப்பகுதியில் இவருக்குக் கிடைத்த பௌசர், மஜீது, ஆத்மா, றஷ்மி போன்ற இலக்கிய நண்பர்களின் நட்பும் எழுவெட்டுவான் மைதானத்தில் மாலை நேரத்தில் நிகழ்ந்த சந்திப்புக்களும் முக்கிய காரணமாக இருந்துள்ளன. 1991களில் பாலமுனை ஸஹ்வா அரபுக்கல்லூரியில் மௌலவி அல் ஆலிம் பட்டம் பெற்றார். அதேயாண்டில் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியிருந்தாலும் அன்று நிலவிய தமிழ் முஸ்லிம் பிரச்சினைகளால் அங்கு சென்று கல்வியைத் தொடரமுடியவில்லை. 1993இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கல்வியைத் தொடர அழைப்பு விடுத்தது. குடும்பத்தின் பொருளாதார நிலைமை செல்லவிடவில்லை. பின்னர் பேராதனையில் வெளிவாரியாக இணைந்து பட்டப்படிப்பை நிறைவுசெய்து அபிவிருத்தி உத்தியோகத்தராகத் தனது கடமையை ஆற்றிவருவதோடு 1999 இல் சுஹா என்ற பெண்ணைத் திருமணம் முடித்து நான்கு குழந்தைகளின் தந்தையாகவும் தனது வாழ்வியலை நடத்திவரும் இவர் 1985களில் எழுத்துத் துறையில் ஈடுபடத்தொடங்கினார்.

### புத்தரின் நிழல்

இச்சிறுகதைத் தொகுதி தன்னகத்தே பதினாறு சிறுகதைகளைக் கொண்டிருக்கின்றது. கவிதை, சிறுகதை, சுயசரிதை, பதிவுகள், சமய ஆய்வுகள் எனப் பன்னிரண்டு நூல்களை வெளியிட்டுள்ள அறபாத்தின் நான்காவது சிறுகதை நூலாக இது அடையாளப்படுத்தப்படுகின்றது. இத்தொகுதியில் 'நிழல் வசியம்' என்ற தலைப்பிலான அவரது சிறிய முன்னுரையில் அவர் குறிப்பிடுவது போல (நினைந்தழுதல், ஆண்மரம், உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி போன்ற) அவரது 'முதல் மூன்று தொகுதிகளிலும் தவறவிடப்பட்ட சில கதைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன'. இத்தொகுதி 'அறபாத்தின் இலக்கிய முதிர்ச்சியைக் காட்டும் பல கதைகளைக் கொண்டுள்ளது. கிழக்கிலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் பல்வேறு வாழ்க்கைக் கோலங்களையும் யுத்தத்தின் வடுக்களையும் பதிவு செய்துள்ளன. பின்நவீனத்துவச் சோதனையிலும் அக்கறை காட்டியுள்ளன' என எம்.ஏ.நுஃமான் அவர்கள் குறிப்பிடுகின்றார். இத்தொகுதியினுள் ஆழ்ந்து செல்கின்றபோது இத்தொகுதியில் உள்ள கதைகளை

1. பின்நவீனத்துவச் சோதனைக் கதைகள்

2. பெண்களை முன்நிறுத்திச் சொல்லப்படும் கதைகள்

3. யுத்தச்சார்புடைய கதைகள்

4. பொதுவான சமூகப்பிரச்னைகள் பற்றிய கதைகள்

என வகைப்படுத்தி நோக்கலாம். காலச்சுவட்டில் அறபாத்தின் 'உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி' என்ற சிறுகதைத் தொகுதி பற்றி எழுதிய அனார் 'எந்தவொரு சட்டகங்களுக்குள்ளும் நுழைந்து பிதுங்காமல், கிராமத்து ஆற்று நீரோடை போன்று அறபாத்தின் கதை வெளிப்பாடுகள் மிக மிக இயற்கையானவை' என்கிறார். ஆனால் புத்தரின் நிழல் தொகுதியைப் பொறுத்தவரையில் அறபாத் சில சட்டகங்களுக்குள் நுழைந்து பார்த்திருக்கின்றார். எனினும் அவரது கதை வெளிப்பாடுகள் இயல்பானவையாக மிகை உணர்ச்சி அற்றவையாக இருக்கின்றன என்பதைக் கண்டுகொள்ள முடிகிறது. அனார் சொல்வதற்கு மறுதலையாக அறபாத்தின் கதைகள் சட்டகத்திற்குள் உள்ளடங்காதது என்பதையே ஒரு சட்டகமாகக் கொள்வதற்கும் வாய்ப்புண்டு.

## பின்நவீனத்துவச் சோதனைக் கதைகள்

இத்தொகுப்பில் உள்ள 'கதை', 'மூன்று பூனைகள் பற்றிய ஏழு குறிப்புகள்', 'மாயநதி', 'எழுத்தாளர் ஸ்டீபனின் வாக்கு மூலம்' போன்ற நான்கு கதைகளை இப்பகுப்பினுள் உள்ளடக்க முடிகின்றது.

'கதை' என்ற சிறுகதையை எடுத்துக்கொண்டால் '40 வயதிற்குப் பின் ஒன்றும் எழுத முடியாது' (ப.05) என்ற எஸ்.எம்.எஸ் என்ற ஓட்டமாவடியின் மூத்த எழுத்தாளரின் கூற்றைப் பொய்யாக்கி கதையொன்றை எழுதிவிட வேண்டும் என எடுத்துக்கொண்ட முயற்சியின் முன்னாயத்தங்கள் பற்றிப் பேசுகின்றது. கடைசியில் 'மனதில் இருந்த கதை கதவிடுக்கால் எனக்கு முன்னே நழுவிச்செல்வதைப் பார்த்தபடி வாசலை நோக்கி நடந்தேன்'. (ப.12) என்று முடிகின்றது. இக்'கதை'யின் உள்ளே பேசப்பட்டுள்ள விடயங்கள் ஒரு ஒழுங்கற்ற (*Non Linear*) முறையில் எறியப்பட்டு 'கதை' என்ற மையத்தை வைத்து அதன் விளிம்புநிலைகளைப் பற்றிப் பேசி முடிக்கப்படுகின்றது. பேசப்படும் விடயங்களுக்குள் ஆட்சியாளர்களின் 'எடுபிடிகள்' செய்யும் லீலைகள் பற்றி விலாவாரியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அரசனை மையப்படுத்திக் கதையை உருவாக்க முனைந்தவர் அரசனைச் சுற்றியுள்ள விளிம்புநிலைகளை – எடுபிடிகளை மையப்படுத்தி விளக்கிச்செல்கின்றார். கடைசியில் அரசனின் கதை எழுதப்படாமலேயே 'கதை' முடிவடைந்து விடுகின்றது. மையம் கைவிடப்படுகின்றது. சிதைந்துவிடுகின்றது. விளிம்புநிலைகள் மையம்கொள்கின்றன என்றவாறு விளக்கலாம். இதனை ஒரு பின்நவீனச் சிறுகதைப் படைப்பிற்கான ஒரு முயற்சி என்று சொல்லிவிடலாம். அத்துடன் இக்கதை பின்நவீனத்துவ சமூகம் எய்திநிற்கும் ஒரு மகிழ்ச்சியற்ற மனநிலையிலேயே முடிந்து விடுகின்றது என்பதனையும் 'கதவிடுக்கால் கதை நழுவிச்செல்கின்றது' என்ற வரியை அடிப்படையாகக் கொண்டு கோடிகாட்டி, கதை எழுதுவதைவிடக் கதை எழுதுவதற்கான முன்னாய்த்தங்களை எழுதுவதே 'கதை' என்ற நிலைப்பாட்டில் படைப்பாளி மகிழ்ச்சி காணவிழைகின்றார். ஒரு பொருளின் பயன் மதிப்பை விட அப்பொருளினால் வாழ்க்கையில் கிடைக்கும் அர்த்தம் முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றது. 'கதை' என்பதனால் கிடைக்கும் பயனை விடக் 'கதை' எழுதுவதைப் பற்றி எழுதுவதால் தனக்குக் கிடைக்கும் அர்த்தம் முன்னிலைப்படுத்தப்பட்டு இதனால் மகிழ்ச்சியின்மைக்குத் தள்ளப்படுகின்றார். எனவே இக்கதை பின்நவீனத்துவத்தின் மகிழ்ச்சியற்ற மனநிலையின் அலைதல் பற்றியது என்றும் இக்கதைக்கு மகுடம் சூட்டலாம்.

'மூன்று பூனைகள் பற்றிய ஏழு குறிப்புக்களில்' எழுத்தாளன் தனது ஆழ்மனதுக்கு இடைஞ்சல் கொடுத்து உணர்வுக்கொந்தளிப்புக்குள் தன்னை அழுத்திய, இயல்பான வெளிப்பாட்டு நிலைக்கு ஒவ்வாத விடயங்களை ஒரு குறியீட்டுக் கனவுபோல விலங்கினைக் (பூனையைக்) குறியீடாகப் பயன்படுத்தி படைப்பாளி உணர்வுச்சமநிலை எய்துகின்றார். அதிகாரத்தில் உள்ள அரசியல் மாந்தர்களின் சின்னத்தனங்களின் சிலுமிசத் தொகுப்பாக அது எம்முன் விரிந்து கிடக்கின்றது. 'அதிகாரத்திற்கான விருப்புறுதி என்பது மனித வாழ்க்கை முழுவதுமே இடைவிடாத போராட்டமாக இயங்கிக்கொண்டிருக்கிறது' என்ற நீட்ஷேயின் கூற்றுக்கமைவாக ஆசையுள்ள மனிதன் தனது ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றான். பூனைகள் ஆசை மிகுந்தவை. அவை நேரம் பார்த்து உண்டவீட்டுக்கே இரண்டகம் செய்பவை. அதிகாரமுடையவர் முன் இருக்கும்போது கண்ணை மூடித்தூங்கி மௌனமாய் இருக்கும் மரியாதைக்குரியவை. ஆனால் அந்த அதிகாரியின் பின் அவை பல பாசாங்குகளைத் திருட்டுக்களைப் புரிபவை. இந்த இலட்சணத்தில் அதிகாரிகளும் பூனைகள் என்றால் முன்பின் என்ற கதைக்கே இடமில்லை. அவர்கள் செய்யும் செயல்கள் மற்றைய மனிதர்களின் ஆசைகளில் மண்ணை அள்ளிப்போடுகின்றன. பொதுவாகப் பூனைக் குறியீட்டின் கருத்துருவாக்கம் ஆன்மீகம், கருவுறுதல், உள்ளுணர்வு, செழுமை, குணப்படுத்துதல் போன்ற பல நேரான பொருள்களைத் தருவதாகவும் இருள், சூனியம், வஞ்சனை போன்ற பல எதிரானபொருள்களைத் தருவதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தாளப்படுகின்றது. இக்கதையில் பூனைக்குறியீடு எதிரான கருத்துநிலையிலேயே கையாளப்பட்டுள்ளது. ஹோப்பி (*Hopi*) என்ற அமெரிக்கப் பழங்குடி மக்கள் மத்தியில் பெண்களுடன் அவமரியாதையாக நடந்து கொள்ளும் ஆண்களைக் காட்டுப்பூனை எனக் குறிப்பீடாக அழைக்கும் வழக்கம் இருக்கின்றது. இவ்வழக்கம் இக்கதையின் பூனைக் குறியீட்டோடு மிக நன்றாகப் பொருந்திப்போகின்றது. அறபாத் இக்கதையினை 'பொட்டல்வெளி, நான் தனியாக நிற்கிறேன், பூனைகள் கூட்டமாக இணைந்து என்னைத் துரத்தத்தொடங்கின. ஓடிச்சவுத்த கால்கள் இருண்ட குகைக்குள் தரிபட்டு நின்றன. அதிர்ச்சியில் உறைந்துபோகக் குகையைப் பார்க்கின்றேன். எல்லாப்பூனைகளும் குகைக்குள் கூடியிருந்தன. மினுங்கும் கங்குல் விழிகள், இடைவிடாத மீசைகளின் துடிதுடிப்பு, மரணத்தை வெல்லவே முடியாத பொறியில் மூடப்பட்ட குகைவாயில். நான் குகையைச் சுற்றிச்சுற்றி ஓடுகிறேன். கருப்புக்கடுவன் சீற்றத்துடன் விரட்டத்தொடங்கியது. உயிர் பிய்ந்து தொங்க குகையில் தலை முட்ட விழுந்து வீறிட்டேன். அவள் வந்து உலுக்கி என்ன என்றாள். உடல் வியர்வையில் தெப்பமாயிருந்தது. 'அந்தக் கருப்பு பூனை அந்தா.... என் நாக்குளறியது.' (ப-20) என ஒரு கனவோடு முடிவுக்குக் கொண்டுவருகின்றார். இக்கனவில் வரும் 'குகை' என்பதை யூங் குறிப்பிடும் தாய் மூலப்படிவத்தின் (*Mother Archetype*) குறியிடாகக் கொண்டு வாசிக்கின்றபோது அது பெண்ணின் பாதுகாப்பின்மை தொடர்பான பய உணர்வின் வெளிப்பாடாக வெளித்தெரிகின்றது என அர்த்தப்படுத்தலாம். இன்னும் நுட்பமாகப் பகுப்பாய்வு செய்கையில் அது வேறு தளங்களுக்குள் பிரவேசித்து வேறு உணர்வுசார்ந்த விடயங்களை வெளிப்படுத்தலாம். இக்கதையினைப் பொறுத்தவரையில் ஏழு சம்பவங்களின் துண்டுகளைப் பொருத்தியதன் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'மாயநதி' என்ற கதையும் இந்த ஆறு உபகுறிப்புக்களைப் பொருத்தி உருவாக்கப்பட்டுள்ளதோடு தன்னைச் சுற்றியுள்ள சமூகச் சூழலை நிர்ணயிக்கும் விடயங்களைக் கேள்விக்கு உள்ளாக்கும் அடிப்படையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்கதைகள் பின்நவீனத்துவத்தின் பால் வைக்கத்தகுந்தவை எனக் குறிப்பிடலாம்.

எழுத்தாளர் ஸ்டீபனின் வாக்குமூலம் என்ற கதையில் தமிழ் இலக்கிய வாதிகளால் உயர்வாகக் கருதப்படும் விருதும் அதற்கான தெரிவு நடைமுறைகளும் அங்கதமாகக் கவிழ்ப்பாக்கம் (*Supresive Writing*) செய்யப்பட்டுள்ளன. ஒருவரின் சுயத்தை மற்றமைகள் (மற்றவர்கள் அல்லது புறப்பொருள்கள்) கட்டமைக்கின்றன என்ற லக்கானின் கூற்றுக்கமைவாக எழுத்தாளர்களும் தமது படைப்பினை மற்றவர்கள் பாராட்டினால், தரமானது என்று குறிப்பிட்டால், விருதுகிடைத்தால் தமது படைப்பிற்கு ஒரு தகுதியும் அங்கீகாரமும் கிடக்கின்றது என்ற நினைப்புடையவர்களாக இருக்கின்றனர். இதனால் விருது கிடைப்பதென்பது ஒரு அங்கீகாரமாகப் பார்க்கப்படுகின்றது. எனவே அதற்கான வழியில் பலர் திட்டமிட்டு விருதுக்குரிய படைப்புகளை எழுதும் தம் எழுத்துப் பயணத்தை ஆரம்பித்து அதற்கான விண்ணப்பங்களையும் சிபார்சுகளையும் மேற்கொண்டு காத்திருக்கின்றனர். இந்தக் காத்திருப்பின் நீட்சியில், அதன் வளர்நிலையில் மற்றமைகளைத் தமது அதிகாரத்தினால் அடக்கித் தம்செல்வாக்கைப் பயன்படுத்தித் தம்மை நோக்கி விருதுக்கான தெரிவுக்குழுவை வழிப்படுத்தி விருதினைத் தமக்குரியதாக ஆக்கி அங்கீகாரம் பெறமுனைகின்றனர். இச்செயற்பாட்டால் விருதுக்கு ஆட்களைத் தெரிவுசெய்யும் குழுவும் போலித்தனம் உள்ளதாக, அதிகாரத்தின் செல்வாக்குக்கு உட்பட்டு மாற்றமுறுகின்றது, மதிப்பிழக்கின்றது. அதனைச் சீர்செய்யப் புலனாய்வு விசாரண தேவைப்படுகின்றது. எது எப்படிப் போனாலும் மனிதர்களின் விருது விருப்பம் ஆழ்மனத்தில் ஊஞ்சலாடிக்கிடக்கிறது. இது அபத்தமானது. எழுத்தாளர் ஸ்டீபன் அபத்தமானவர். அவரது செயற்பாடுகளும் தெரிவுக்குழு உறுப்பினர்களினது செயற்பாடுகளும் இங்கு அங்கதச்சுவையோடு கவிழ்ப்பாக்கம் செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன. விருதுகளும் அதன் தெரிவுகளும் உயர்ந்தவையாகக் கருதப்படும் நிலையில் அதனைக் கட்டவிழ்ப்புச் செய்து பார்த்திருக்கின்றார் அறபாத் என்றே எண்ணத்தோன்றுகின்றது. கவிழ்ப்பாக்கம் பின்நவீனத்துவத்தின் ஒரு கூறு அல்லவா.

இந்தவாறு இந்நான்கு கதைகளும் எமது வகைப்படுத்தலுக்கு இயைந்தவாறு வியாக்கியானம் செய்துகொள்ளும் வெளியைத் திறந்திருக்கின்றன. இதன் மூலம் இதனைப் பின்நவீனச் சோதனைக்கதைகள் அல்லது பின்நவீனத்துவக் கதைகள் என்று சொல்லிவிடலாம். இக்கதைகள் கட்டமைக்கப்பட்டுள்ள பாங்கில் சொல்லப்படும் முறைமையில் ஒரு வித்தியாசத்தைக்காட்டி செல்கின்றமையை இத்தொகுதியில் இளைப்பாறும் எவரும் கண்டுகொள்ளாமல் கடந்துசெல்லமுடியாது.

## பெண்களை முன்நிறுத்திச் சொல்லப்படும் கதைகள்

இப்பகுதியில் மண்புழு, முள்வேலி, சிறகினை உண்ணும் வண்ணத்துப்பூச்சிகள், அந்திமழை போன்ற நான்கு கதைகளை அடக்கலாம். அறபாத்தின் இத்தொகுதியில் உள்ள எல்லாக்கதைகளுக்குள்ளும் ஏதோ ஒருவகையில் பெண்கள சார்ந்த பிரச்சினைகளும் அவை தொடர்பான அக்கறைகளும் அவதானிப்புகளும் முன்வைக்கப்பட்டிருப்பதை கண்டுகொள்ளலாம்.

மண்புழு என்ற கதையில் ஒரு பெண்ணின் பாலியல் தேவைபற்றியும் முள்வேலி என்ற கதையில் கணவர் சுடப்பட்டு இறக்கக் கணவரது தம்பியை மறுமணம் செய்து வாழும் ஒரு பெண்ணின் அவலங்களைப்பற்றியும் சிறகினை உண்ணும் வண்ணத்துப்பூச்சிகள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையில் கடன் கட்டமுடியாமல் திணறி அறவிடுபவனின் பாலியல்தேவைக்கு உடன்படுமாறு நிர்ப்பந்திக்கப்படும் பெண்ணின் வாழ்க்கைபற்றியும் அந்திமழை என்ற கதையில் கணவனாலும் நண்பியாலும் ஏமாற்றப்பட்டு விபசாரத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு பெண்ணின் மனநிலைபற்றியும் அறபாத் பதிவுசெய்கின்றார்.

மண்புழு என்பது ஒரு குறியீடு, இக்கதையில் அது ஆண்குறியாக இருக்கலாம். ஒரு நிலத்தை இயற்கையாகப் பண்படுத்துவதற்குப் படைக்கப்பட்டது அது. நிலம் என்பது பெண்ணின் குறியீடு சோஃபகிளீஸின் அன்டிகனி என்ற நாடகத்தில் கிறியோன் அன்டிகனியைக் கொல்லத் தீர்மானிக்கின்றபோது அன்டிகனியின் தமக்கை இஸ்மினி 'என்ன சொந்த மகனின் மணமகளைத் தாங்கள் கொல்வீர்களா? என வினாவெழுப்புகின்றாள் அதற்கு 'நிச்சயமாக, உழவுக்கு வேறு வயல்கள் இருக்கின்றன அவனுக்கு.' என்பார் கிறியோன். வயல்நிலம் பெண்களின் குறியீடாகக் கொள்ளப்படுகின்றது.

'மச்சானின் சுருட்டுப்புகை வயிற்றைக் குமட்டும். கரிக்கோச்சி போவதைப் போல் மச்சான் தெருமுழுக்கப் புகையை ஊதிவிட்டபடி பஸ்சுக்கு காத்து நிற்பார். அவரின் காவிபடிந்த பற்களும் வெற்றிலை மென்று துப்பிய வாயும் பார்ப்பதற்கு வயிற்றைப் பிசையும்' என தனது தமக்கையின் கணவர் பற்றித் தம்பி சொல்வது தாம்பத்தியத்தின் மனத்தடையாக முன்நிற்கும் ஒரு கூற்றாகும். மண்புழுக் கதையில் தவிர்த்தல் நடத்தையே பின்பற்றப்பட்டுள்ளது. 'வாசற்படியில் நின்று மச்சான் குரல் கொடுத்தபோதும் ராத்தா வெளியே வந்து அவரை வழியனுப்பவில்லை. மச்சான் காத்திருந்து விட்டு நடையைக் கட்டினார்'. (ப.23) எனவே பாலியல் தேவைக்கு நிலத்தின் பண்படுத்தலுக்கு வேறு 'மண்புழு' தேவைப்படுகின்றது. வேறு தொடர்பு ராத்தாவிற்கு ஏற்பட்டுவிடுகிறது. 'சிகரெட்டின் வாசம் அறைமுழுக்கக் கவிந்திருந்தது தம்பி மூக்கைப்பிடித்து அதை இழுத்துப்பார்த்தான் இதமாக இருந்தது.' ராத்தாவிற்கும் அது பிடித்திருக்கிறது என்பது வெளிப்படுகிறது. அந்த நபரை வாசல் வரை சென்று வழியனுப்பி வைக்கிறார்.

இக்கதையில் இருண்மையான பக்கங்கள் நிறைய இருக்கின்றது. இருண்மை நீக்கி இன்னும் காத்திரமாக எழுதப்பட்டிருக்கலாம் போல எனக்குத் தோன்றுகின்றது. எல்லாவற்றையும் சார்த்தர் சொல்லுவதுபோல கண்ணாடிபோல் தெளிவாக எழுதவேண்டுமா என்ன? கதையில் 'டபுள் போக்கு'கள் பொருத்திய பழைய ரெலி சைக்கிள் முன்ரிம் மட்டும் சற்று மட்கிப்போய்த் தெரிந்தது மச்சானின் சைக்கிள் போலவும் இருந்தது.' என்றொரு வசனம் உள்ளது. எனவே இது டபுள் போக்குள்ள - இரட்டைப்போக்குள்ளவர்களின் கதை என்று முடித்துவிடலாம் என நினைக்கின்றேன். வசனங்களுக்கு இடையில் பல அர்த்தங்கள் மறைந்து கிடக்கின்றன. ஆனால் என்ன முன்ரிம் மட்டும் சற்று மக்கிப்போய் உள்ளது அவ்வளவுதான்.

முள்வேலி என்ற கதையில் சாரா என்ற பத்மா, தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றித்துவாழ்ந்த சூழலில் வளர்ந்து முஸ்லிம் ஒருவரைத் திருமணம் செய்து இஸ்லாத்துக்கு மாறி வாழ்ந்தவர். கணவர் 'ஆரோவால் சுடப்பட' அவரது குடிகாரத்தம்பிக்கு வாழ்க்கைப்பட்டு வாழ்வில் அவள் அடையும் கஷ்டங்களைப் பற்றிப் பேசுகின்றது. தனக்குச் சிறுவயதில் இருந்து அறிமுகமான தற்போது உளவள ஆலோசகராக இருக்கும் ஒருவரை எதேச்சையாகக் கண்டு தனது கதையை அவரோடு பகிரத்தொடங்கி, இறுதியில் கணவரின் இயலாமை கடன்பட்டவனின் பாலியல் சித்திரவதைகளை எதிர்கொள்ளும் அவலத்தில் தள்ளிவிட வாழ்க்கை 'சட்டியில் இருந்து அடுப்பில் உழுந்த பாவி' என்ற நிலையில் நிறுத்தப்பட்டுக் கதை முடிகிறது. கடன்படுதலால், கடனுக்குப் பொறுப்புநிற்பதால், கடன்கொடுத்தவனின் பாலியல் சீண்டல்களுக்கும் பாலியல் தேவைகளுக்குமான பாவனைப் பண்டமாகப் பெண்கள் மாற்றப்படுவது இன்றைய நடைமுறை யாதார்த்தமாக உள்ளது. 'எதனால் நாம் வாழ்கிறதாக கற்பனைசெய்கிறோமோ அதனாலே நாம் மடிந்து போவோம்' (மனவளமான சமுதாயம் - எரிக்ஃபிராங். ப.231) என்ற கருத்தாக்கத்திற்கு அமைவாகவே கடன்பட்டவர்களின் வாழ்க்கை அமைந்து விடுகிறது. ஆண்களும் பெண்களும் இக்கூற்றின் செயற்பாட்டாளர்களாகவே உள்ளனர். கடன்பட்ட புருஷனின் கடனுக்காகச் சாரா படும்பாடு மிகவும் வருந்தத்தக்கது.

இக்கதையின் அடுத்த விரிவாக்கமாகச் 'சிறகினை உண்ணும் வண்ணத்துப்பூச்சிகள்' என்ற கதை உள்ளது. கடனை அடைக்கக் கடன்பெறுதல் தற்கொலை செய்வதற்குரிய தூண்டுகோலாக இருப்பதோடு பலரது உயிரைக் காவுவாங்கியும் இருக்கிறது என்பது உண்மை. ஒப்பீட்டு மனப்பான்மையினால் பலர் தமது இயலுமைகளுக்கு அப்பாற்பட்டுச் சிந்திக்கத் தலைப்படுகின்றனர். ஒரு பொருளின் பயனைவிட அந்தப் பொருளினால் தமக்குக் கிடைக்கும் அர்த்தத்திற்கு ஆசைப்பட்டு தமது தெரிவுகளை மேற்கொள்கின்றனர். நீர் அத்தியாவசியமானது அது எமக்குத் தேவையானது அதனை அருந்துவது எமக்குப் பயன் உடையது. ஆனால் நாம் அந்த நீரை அருந்துவதற்கு உயர்ந்த கோப்பைகளை வேண்டிநிற்கின்றோம். ஏனெனில் உயர்ந்த கோப்பையில் நீர் அருந்தும்போது எமக்குக் கிடைக்கும் அர்த்தம் உயர்ந்ததாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே பயன் மிக்க நீரை விட அர்த்தம் தரும் கோப்பைகளை உயர்வாகக் கருதும் மனநிலையில் நின்று நாம் அல்லாடுகின்றோம். நீர் இருந்தாலும் அருந்த உயர்கோப்பை இல்லையே என்ற மனநிலை 'லோன்' போட வைக்கிறது. மகிழ்ச்சி போய்த்தொலைகிறது. 'சிறகினை உண்ணும் வண்ணத்துப்பூச்சிகள்' என்ற கதையில் உள்ள றம்ஸியா கடனை அடைக்க லோன் போட்டுச் சிக்கலில் மாட்டிக் கொள்கின்றாள். இறுதியில் 'ஒரு இலட்சத்தில அம்பதாயிரத்தை நான் கட்டுறேன் பெறகு வசதி கிடைக்கிற டைம்மில எனக்குத் தாங்க' என்ற வார்த்தைகளால் லோன் வசூலிக்க வந்தவனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்பொருளாக அவள் பேரம் பேசப்படுகின்றாள். 'அவன் கால்கள் அவளை நோக்கி ஊர்ந்து வந்தன' அத்தோடு கதை முடிகின்றது.

'அந்திமழை' என்ற கதையில் கணவன் 'தூள்' அடிப்பதற்குப் பெற்ற கடனுக்காக கடன்காரனுக்குக் கணவனால் கூட்டிக்கொடுக்கப்பட்டு இறுதியில் நண்பியால் ஏமாற்றப்பட்டு விபசாரத்தையே தொழிலாகக் கொண்டு வாழும் பெண்ணின் அவலம் அப்பெண்ணின் நிலைநின்று வெளிப்படுத்தப்படுகின்றது.

இக்கதைகள் நான்கும் (மண்புழு, முள்வேலி, சிறகினை உண்ணும் வண்ணத்துப்பூச்சிகள், அந்திமழை) ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்க்கக் கூடிய பண்புகொண்டவை. 'மண்புழு' தவிர்ந்த மற்றைய மூன்று கதைகளிலும் கடன் பெறும் கணவர்கள் உள்ளனர். எனினும் நான்கு கதைகளிலும் கணவர்களின் அரவணைப்பின்மையும் பிரிவும் பொறுப்புணர்வற்ற தன்மையும் பொதுவான விடயங்களாக இருக்கின்றன. கணவர்களின் கடனுக்காக கடன்கொடுத்தவர்கள் தம் பாலியல்தேவையைப் பூர்த்திசெய்யும் ஒரு பண்டமாகப் பெண்களைப் பயன்படுத்தும் முறைமையே முடிவாகக் காட்டப்பட்டு பெண்ணைப் போகப்பொருளாகப் பார்க்கும் ஆண்களின் மனநிலையும் அவர்களின் போக்கும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இத்தகைய போக்குள்ள ஆண்களால் விரிக்கப்பட்ட பாலியல்வட்டத்தின் விளிம்பில் சாரா (முள்வேலி) நிற்கின்றாள். தினம் தினம் மன உளைச்சலோடு வாழ்கின்றாள். றம்ஸியா (சிறகினை உண்ணும் வண்ணத்துப்பூச்சிகள்) விளிம்பினுள் இருந்து உள்ளே இழுக்கப்படுகின்றாள். பாத்திமா (அந்திமழை) அதனுள்ளே மூழ்கித் தன்வாழ்வை அமைத்து மனம்குலைந்து நிற்கின்றாள். இன்னொரு கோணத்தில் நோக்கினால் இந்நான்கு கதைகளிலும் உள்ள பெண்களின் பாலியல்தேவைகள் சரியான முறையில் கணவர்களால் கையாளப்படவில்லை என்பதும் இக்கதைகளுக்கு ஒரு பொதுத்தன்மையை அளித்து நிற்கின்றது எனலாம். 'நான் மக்கா போய் உம்ரா செஞ்சவள் என்ன பயன் என்னையும் கிருபையுடன் நோக்க அருள் விழிகள் இல்லையே' என்று பாத்திமா 'அந்திமழை'யில் கூறும் கூற்று மற்றைய கதைகளில் வரும் பெண்களினது ஆழ்மனக் கூற்றாகவும் அமைந்துவிடுகின்றது.

அறபாத் ஒழுக்கவீனங்களையும் சமுதாயத்தின் மீறல்களையும் தனது கதைகளினூடாக வெளிக்காட்டுவதன் மூலம் அவற்றுக்கு எதிரான கருத்துருவாக்கத்தை மனங்களுக்குள் முன்நிறுத்தி விழிப்புணர்வை ஊட்டுகின்றார். இவ்விடத்தில் 'உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி' என்ற நூலுக்கு றியாஸ் குரானா எழுதிய அறிமுகத்தில் 'இவருடைய கதைகளில் வசிக்கும் மனிதர்கள் பெரும்பாலும் ஒழுக்கத்தை நம்புபவர்களாகவும் அதன் பிரதிநிதிகளாகவும் தம்மை அடையாளப்படுத்த எத்தனிப்பவர்கள். ஒழுக்கத்திற்கு எதிரானவற்றை புறமொதுக்கும் மனிதர்களும் அவர்களுக்கிடையிலான உறவுகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட உலகம் இவருடைய கதைகள்' என்கின்ற கூற்றை மறுதலித்து றியாஸ் குரானாவின் இக்கருத்து நிலைக்கு முற்றிலும் எதிரான மனிதர்களின் கதைகளைக் கொண்ட ஒரு தொகுதியாகப் 'புத்தரின் நிழல்' தன்னை வெளிப்படுத்தி நிற்கின்றது எனக் குறிப்பிடலாம்.

## யுத்தச்சார்புடைய கதைகள்

எமது நாட்டினைப் பொறுத்தவரையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற மூன்று இனங்கள் முதன்மைக்குரியனவாக இருக்கின்றன. நடந்து முடிந்த யுத்தத்தின் நிழல் அனைவர் மீதும் வெவ்வேறு அளவுகளில் படிந்திருக்கின்றது. அந்நிழலின் மறைப்பினால் பலமனிதத்துயரங்கள் எதிர்கொள்ளப்பட்டு இன்றும் ஆறாத வடுவாய்ப் பல மனிதர்களில் உளவியல் பாதிப்பின் மூல ஊற்றுக்களாய் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன. 'எந்தவொரு பிரச்சினையையும் யுத்தம் தீர்த்து வைத்ததில்லை. அதன் உடனடியான விளைவுகளும் மறைமுகமான விளைவுகளும் எதிர்மறையானவையாகவோ, பேரழிவு மிக்கனவாகவோதான் இருந்துள்ளன.... யுத்தம், யுத்தத்தை மட்டுமே ஈனும் என்பதை, மனிதர்கள் அன்று அறிந்திருக்கவில்லை, இன்று வரை அறிந்துகொள்ளவும் இல்லை' என்ற சீ.வீ.வெஜவூட்டின் கருத்துக்கள் இவ்விடத்தில் ஞாபகத்திற்கு வருகின்றன.

இத்தொகுதியில் உள்ள 'புத்தரின் நிழல்', 'ஒரு புல்வெளிக்கனவு', 'ஊர்காவல் படை' என்ற மூன்று கதைகள் யுத்தப்பின்னணி சார்ந்தவை. முதலாவது கதை யுத்தம் முடிந்ததன் பின்னரான காலப்பகுதியில் நிகழ்வதாகவும் மற்றைய இருகதைகளும் யுத்தகாலத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் மீள்நினைவோட்டமாகவும் கருதத்தக்கன. யுத்தக்கண்கொண்டு பார்த்தால் இப்பிரிப்புக்குள் அடக்காத கதைகளின் மீதும் யுத்தத்தின் நிழல் படிந்துள்ளமையை வாசகர்கள் இனங்கண்டு கொள்வதைத் தவிர்க்கமுடியாது.
யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆயுதமுனையின் ஆக்கிரமிப்பும் அச்சுறுத்தலும் கைவிடப்பட்டதாக மனம் ஒரு போலி நம்பிக்கையை வளர்த்துக்கொண்டது. யுத்தத்தின்போது கண்முன்னே இருந்த பொது எதிரியை நோக்கிய பகைமை உணர்வு யுத்தத்தின் பின்னே தனது வடிவத்தைக் கண்ணுக்குப்புலனாகாத வகையில் மாற்றி வாழ்வியலின் எல்லா அம்சங்களுக்குள்ளும் ஊடுருவி நின்று தனது அதிர்வை வெளிப்படுத்தியது. புத்தரின் நிழலில் அறபாத் அந்த அதிர்வின் அலையை வெளிப்படுத்தியுள்ளார். மீளக்குடியமர வந்த தயாவதி டீச்சரும் இராணுவமுகாமைச் சேர்ந்த உதயா மாத்தையாவும் அந்த அதிர்வின் பாத்திரங்கள். உதயாவின் 'இந்தக்காணி உங்கட ஆக்கள்ர காணி. அவங்கட காணியில அவங்க இருக்கிற உரிமை இருக்கு. என்றாலும் நாங்க இந்த இடத்த விட்டுப் போனதுக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறகு எங்கட புத்தரையும் அரசமரத்தையும் என்ன செய்வீங்க...?' (ப-76) என்ற அகிம்சைக் கேள்வி அன்பு, அகிம்சை, ஆசைத்துறப்பு பற்றிப் பேசிய புத்தரைக் கூட ஆக்கிரமிப்பின் அடையாளமாக மாற்றும் அபத்தத்தை முன்மொழிகின்றது. புத்தரின் சாந்தமான முகமும் அவரது புன்சிரிப்பும் நைந்த மனத்தினரை ஆரத்தழுவி அமைதியுறவைக்கும் நிழலாக விரிந்து ஆறுதல் பெறவைக்கும். ஆனால் இங்கு கருந்திரையாகப் பரந்து பயமுறுத்தி விலகவைக்கும் 'புத்தரின் நிழல்' வலிந்து அறையப்பட்ட ஆணியின் வலியை உணரவைக்கின்றது. அது நாயைப்போல எமக்கு முன்னால் ஓடிச் சிங்களவர்களைச் சிறுமைகொள்ளச் செய்வதோடு தமிழரையும் முஸ்லிம்களையும் அச்சுறுத்துகின்றது.

'புல்வெளிக்கனவு' தமிழ் முஸ்லிம் முரண்பாட்டால் கண்முன்னே நடந்த படுகொலைகள் பற்றிய ஒரு அனுபவக் காட்சியாக விரிகின்றது. அப்படுகொலைகள் பற்றிய தனது மனவெளிப்பாடுகளையும் அறபாத் முன்வைத்துச் செல்கின்றார். சிறிய மனத்தில் பசுமையான புல்வெளி ஒரு பயங்கரக் கனவாகத் தங்கிவிடுகின்றது. இந்தவாறு சிறுபராயத்தின் துர்நிகழ்வுகளை உள்ளே அமிழ்த்தி அதனால் 'மனசில் ஆணி அடித்துக் கொழுவிய அந்தத் துர்கனவுகள்' அடிக்கடி எகிறிப்பார்க்க அசாதாரணர்களாய் இருந்துகொண்டு சாதாரண வாழ்க்கை வாழ்ந்த பலமனங்கள் காலம் தந்த மருந்தினால் பழக்கப்பட்ட ஒரு நிலையை அடைந்து தற்போது பொதுவெளியில் அதனைப் பகிர்ந்து கொள்வதால் இக்கதை யுத்தவடுவிற்கு உட்பட்ட மனிதர்கள் தமக்குத் தாமே அளிக்கும் சம்பவவிபரிப்புச் சிகிச்சையின் (*Narrative Exposuer Therapy*) இறுதி அமர்வில் வெளிப்பட்டு நிற்கும் மனவடு ஞாபக எழுத்துருவின் கலையாக்கப் பிரதியாகவே தோற்றம் பெற்றுநிற்கிறது.

'ஊர்காவல் படை' என்ற கதையில் இலங்கை முஸ்லிம்கள் என்ற அடையாளப்படுத்தலோடு இருக்கும் மனிதர்கள் ஈழப்போராட்டத்தில் இணைந்ததும் ஊர்காவல் படையில் இணைந்ததும் தம் விரல் கொண்டு தம்கண்ணைக் குத்தும் செயல் என்ற மதிப்பீடு வெளித்தெரிய கட்டமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு மூத்தம்மா 'தனது மகனின் சிரிப்பு விழுந்த இடத்தில் குந்தியிருந்தபடி அழுதுகொண்டிருக்கிறார்' இலங்கை முழுவதும் இந்த மூத்தம்மாக்களின் அழுகை ஓலங்களே கீதங்களாக இன்றுவரை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இன்று மகனை அல்லது மகளைத் தேடிய தாய் அல்லது தந்தை இறந்துவிட்டார் என்ற செய்திகள் இவ் ஓலங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தாலும் வாழ்பவர் மனங்களுக்குள் அத்தேடல்பற்றிய உணர்வு தொடரவே செய்கிறது. யுத்தத்தின் பாதிப்புக்கள் தனிமனித ஆளுமையைப் பொறுத்தும் அவை பார்க்கப்பட்ட கோணங்களைப் பொறுத்தும் ஆளுக்காள் இனத்திற்கு இனம் வேறுபட்டுக்காணப்பட்டாலும் யுத்தம் தந்த வடு என்பது மூவினத்திற்கும் - ஒட்டுமொத்த மனித இனத்திற்கும் பொதுவானது என்பதையே இவை உரத்து அறைகின்றன.

ரொலாண் பார்த் 'வரலாறு என்பது எமக்கு முன் கடந்து சென்ற விசித்திர யுகங்கள் பற்றியது. அதன் மூலம் நிகழ்காலத்தைப் பற்றி அது நமக்குக் கற்றுத் தருகின்றது. இறந்த கால வரலாறு நமக்குப் பயன்படக்கூடியது. ஏனென்றால் அது தரும் கதைகள் எமது நிகழ்காலத்தை அறிவுபூர்வமானதாக்குகின்றது.' என்கின்றார்.

## பொதுவான சமூகப்பிரக்ஞைகள் பற்றிய கதைகள்

ஒரு எழுத்தாளன் தனது துறையில் தீவிரமாக இயங்குகின்றான் என்றால் அவன் தன்னைத்தானே கேள்விக்கு உள்ளாக்குவதோடு தனது சமுகம்சார்ந்தும் கேள்விகளை முன்வைக்கவேண்டும். அவன் தனது எழுத்தில் அதனை வெளிப்படுத்தவேண்டும். அறபாத் இத்தகைய செயற்பாட்டுமுறை கொண்டவர். பின்நவீனத்துவச் சோதனைக் கதைகளில் வரும் கதைகளில் இவ்வியல்பு அதிகமாக வெளித்தெரிகின்றது. பெண்கள் பற்றிய கதைகளிலும், யுத்தம் சார்ந்த கதைகளிலும் கூட அறபாத் இத்தன்மையை வெளிக்காட்டிநிற்கின்றார்.

இப்பகுப்பைப் பொறுத்தவரையில் வாப்பாவின் சைக்கிள், ஒரு மாலையும் சில காகங்களும், இருள் போர்த்திய வீடு, இரு வீடும் மற்றும் அன்ரியும், மாத்திரை போன்ற கதைகளைக் குறிப்பிடலாம். இவற்றில் வாப்பாவின் சைக்கிள் மனதுக்கு நெருக்கமாகிறது. 'இது வாப்பாவின் சைக்கிள். ஐம்பது வருடமாக அவர் வாழ்வின் மூச்சில் உயிராகி ஒன்றித்திருந்த இரும்புக்காற்று'. எமது வாழ்வில் யுத்தகாலத்தில் எங்கும் நீக்கமற சைக்கிளே நிறைந்திருந்த காலம் இருந்தது. அது நினைவில் எழுந்ததைத் தவிர்க்க முடியவில்லை. அத்தோடு இக்கதையில் கணவன் மனைவிக்கிடையே நடக்கும் அதிகாரமாற்றம் ஒன்று பற்றியும் பேசப்படுகின்றது. முதுமையில் கணவன் தளர்ந்தபோது மனைவி அவரை மதிக்காது தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயல்வது மெல்லிழையாக இக்கதையினூடு பயணித்துச் செல்கின்றது. பல வீடுகளில் முதுமையுற்ற வேளையில் இனம் மதம் தாண்டி இது ஒரு பிரச்சினையாகப் பிள்ளைகளால் பேரப்பிள்ளைகளால் நோக்கப்படுவதை அவதானிக்கலாம். கணவன்மார் ஆரம்பகாலங்களில் மனைவியரை அடக்கித் தமது ஆண்மைத்தனம் என்ற மாயையால் மேற்கொண்ட செயலின் எதிர்விளைவாக முதுமையில் அவர்கள்மீது திரும்புகின்ற மனைவியின் அடக்கப்பட்ட உணர்வின் எதிர்விளைவாக இதனைக் கொள்ளலாம். ஆனால் அந்நியோன்யமாக உணர்வுகளை மதித்து நடந்த குடும்பங்களிற்கு இது பொருந்தாது.

'ஒரு மாலையும் சில காகங்களும்' கதையில் சல்மா என்ற சிறுமியின் நிறைவேறாத ஆசைகள் கனவில் வெளிப்பட்டுப் படுக்கை நனைத்தல் பிரச்சினையோடு முடிவுக்கு வருகின்றது. படுக்கை நனைத்தல் என்பது சிறுநீர்க் கட்டுப்பாடு வந்த ஒரு பிள்ளைக்கு மன அழுத்தம், பெற்றோர் பிரிவு, குடும்பவன்முறை, அதீத கண்டிப்பு, அதீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம், கழிவறைப்பழக்கத்தில் அதீத அக்கறை எடுத்தல் போன்ற பல்வேறு உளவியல் காரணங்களால் மீளக் கட்டுப்பாடின்றி படுக்கையில் சிறுநீர் கழிந்துவிடுகின்றது. சல்மாவின் சூழல் கண்டிப்பு மிக்கதாகப் பயம், பதற்றம் கொண்டதாக இருப்பது கதையின் ஊடுபுலனாகிறது. கதையில் 'சல்மா ஒரு பூனையைப் போல் பதுங்கியபடி வீட்டுக்குள் நுழைந்த தருணம்...'என்ற வரிகளும் 'நானாமார்களும் கண்டுவிட்டார்கள் உம்மாவிடம் சொன்னால் செம அடிதான் நினைக்கையில் நெஞ்சுக்குள் புறாக்கள் எழுந்து சிறகடிப்பது போல் தடதடவென அடிக்கத் தொடங்கியது'என்ற வரிகளும் அதற்குச் சான்று பகிர்கின்றன. 'இருள்போர்த்திய வீடு' என்ற கதையும் உளவியல் பின்னணி கொண்ட கதையாகவே தோற்றம் தருகின்றது. 'இரு வீடும் மற்றும் அன்ரியும்' என்ற கதை 'உறவுகள் மனிதநேயம் எல்லைகளையும் பிரதேசங்களையும் கடந்து, மனங்களில் ஊடுருவிப்பாயும்...' என்பதை எடுத்துச் சொல்லுகின்றது. மாத்திரை என்ற கதை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் எழுந்த ஒரு சமூகத்தின் மீதான சந்தேக மனப்பான்மையினால் கட்டமைக்கப்பட்ட கருத்துருவாக்கத்தின் அவலத்தைப் பதிவு செய்கின்றது.

ஒட்டுமொத்தமாக புத்தரின் நிழல் தொகுதியானது, அரசியல் சார்ந்தவர்களால் மக்களுக்கும், ஆண்களால் பெண்களுக்கும், பெண்களால் ஆண்களுக்கும், பிள்ளைகளால் பெற்றோருக்கும் பெற்றோரால் பிள்ளைகளுக்கும், ஓர் இனத்தால் இன்னொரு இனத்திற்கும், ஓர் இனத்தால் தன்னினத்திற்கும், மதகுருக்களால் சாமானியர்களுக்கும், எழுத்தாளர்களால் எழுத்தாளர்களுக்கும் என வாழ்வியலில் விதிக்கப்படுகின்ற அதிகாரத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஒரு பிரதியாகக் கட்டமைக்கப்பட்டு அதிகார ஒடுக்குமுறைகளினால் உருவாகும் விளைவுகளைப் பேசுவதன் ஊடாக அது தொடர்பான எதிர்க்குரலை எழுப்பிநிற்கின்றது எனலாம்.

## பின்நிழல்

இறுதியாக இந்நூல் பற்றிய சில அவதானிப்புக்களைச் சுட்டிக்காட்டிச் செல்ல மனம் விழைகின்றது. அது சார்பானதாகவும் எதிரானதாகவும் இருக்கலாம். இது அக்கறையில் சொல்லப்படுவதே அன்றி காழ்புணர்வில் முன்வைக்கப்படவில்லை. அறபாத்தின் மொழி, இனம், மதம் போன்றவை அவரது படைப்பினூடாக வெளித்தெரிகின்றபோதிலும் அது பெரும் இடையூறாக இருக்கவில்லை. மதம்சார்ந்த, வழக்குச் சார்ந்த அரபுமொழிச் சொற்பிரயோகங்களைக் கதைகள் பல இடங்களில் தாங்கி நிற்கின்றன. கிழக்குமாகாண இஸ்லாமிய பேச்சுவழக்கும் மொழிநடையும் வாசிப்பில் இடைவெளியை ஏற்படுத்தவில்லை. நூலின் பின்னே தந்திருக்கும் சொல்லடைவு இவற்றின் தடைகளை நீக்கி புரிந்து கொள்வதை இலகுவாக்கியது. எனினும் சில சொற்கள் (உதாரணம் உலவியம், சால் ஜாப்புக்கள், பாவ்லா, கொந்தராத்து - இது Contract என்ற ஆங்கிலச்சொல்லுக்கான பிரயோகமாய் இருக்கலாம்) பற்றிய தெளிவு எமக்கு ஏற்படவில்லை. அது அவரின் தவறன்று. எமது அறியாமையின் தவறென்றே நான் கருதுகின்றேன். அறிய அறியவன்றோ அறியாமை மறையும். தனது படைப்புக்களில் அவர் பயன்படுத்தும் தொன்மங்கள் அவரிடம் உள்ள தொன்மவியல் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன. இவரது மூத்தம்மா என்ற சிறுகதையை மையமாக வைத்து இது தொடர்பான வெளிப்படுத்துகைகளைப் பலர் ஆய்வுசெய்வது அதை உறுதிப்படுத்துகின்றது.

இத்தொகுதியைப் பொறுத்தவரையில் பொதுப்படையாக நோக்கினால் கதைகளுக்கிடையில் ஒரு தொடர்பினையும் சில கதைகள் ஒரே விதமான பாணியில் அமைந்தவையாக இருப்பதனையும் அவதானிக்கலாம். கதைகள் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டிருப்பினும் தொகுப்பில் ஒன்றாக நோக்குகின்றபோது பெண்கள்சார்ந்த பார்வைகள் அதிகமாகக் கதைகளில் இருப்பது புலனாகின்றது. அத்தோடு 'மதில்களின் மேல் காகங்கள் வரிசையாக குந்தியிருந்தன. நிவாரணம் எடுக்க வந்த ஏழைகள் போல்'(ப -57), 'எழுத்தாளனின் பெயர் கூட யானைக்கு மேல் சுண்டெலி இருப்பதைப்போல சின்னதாய் ஒரு மூளையில் இருக்கும் பதிப்பாளரின் பெயரோ அரசியல்வாதியின் போஸ்டர் போல புத்தகத்தில்' (ப- 93), 'தமிழ் இலக்கிய உலகு பிய்த்துப்போட்டு சொதி ஊற்றிய பராட்டாவாக ஊறிக்கிடக்கிறது' (ப- 102) போன்ற இரசிக்கத்தக்க உவமைகளும் உருவகங்களும் கதைகளில் ஆங்காங்கே பரவிக்கிடக்கின்றன.

இறுதியாகப் புத்தகத்தின் முன்அட்டையில் சிலுவையில் கைகட்டப்பட்டு ஆணியறையப்பட்ட கையொன்று கற்பாறையொன்றின் மீது கிடக்கிறது. எம் கையாலாகாத தனத்தினால் விளைந்த விளைவுகளின் நிழல் உருக்களாகவே உள்ளே இருக்கும் சிறுகதைகள் விளங்குகின்றன என்பதை முன்னறிவிப்புச் செய்வதாக அதனைக் கருதலாமோ என உள்ளே நுழைந்து மீண்ட பின்னர் எண்ணத்தோன்றுகின்றது. எமது கைகள் வெறுமனே கட்டப்பட்டவையாக மட்டும் இருக்கவில்லை. அவை நிரந்தரமாக அறையப்பட்டும் இருந்தன. கைகளைக் கட்டியவர்களும் அறைந்தனர். கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்து அதனை அவிழ்க்க முனைந்தவர்களும் அறைந்தார்கள். எல்லாம் முடிந்துவிட்டது. ஆனால் எமது கைகள் இன்னமும் ஆழமாக அறையப்பட்டுக் கைவிடப்பட்டுப் பல நிழல்களால் சூழப்படுகின்றோம். சூழும் நிழலில் புத்தரின் நிழலும் ஒன்று...... அறபாத்தின் புத்தரின் நிழல் புத்தியில் உறைக்கின்றது வலிந்து அறையப்படும் ஆணிகளின் சாட்சியமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி ஆ. தங்கராசாவின் `படிக்கம்`

## (சிறுகதைத் தொகுதி)

### சில அவதானங்கள்

### அறிமுகம்:

ஆரையம்பதி ஆ. தங்கராசா, மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதி கிராமத்தில் ஆறுமுகம் - மாரிமுத்து தம்பதியினரின் மகனாக 13.12.1941இல் பிறந்தார். எஸ்.எஸ்.சி சித்தியடைந்து 1962 – 1967 வரை பூண்டுலோயாவிலுள்ள தோட்டப் பாடசாலையொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1968 இலிருந்து இலங்கை போக்குவரத்து சபையில் இணைந்து பேருந்து சாரதியாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை ஆகிய இடங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றார். ‘கண்டதும் காதல்தானா’ என்னும் சிறுகதை மூலம் 1962இல் எழுத்துத்துறையில் கால் பதித்த இவர் தொடர்ந்து சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதி வந்தார். எண்பதாவது அகவை நிறைவுற்ற இவ்வேளை வரை எழுதிக்கொண்டே இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய முரசு, சுதந்திரன், சுடர், தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, ஈழநாடு, கலைச்செல்வி, தினக்குரல், வானவில் ஆகிய இலங்கை இதழ்களிலும் கல்கி, ராணி, குமுதம் ஆகிய தமிழ்நாட்டு இதழ்களிலும் இவரது கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும் வெளிவந்துள்ளன. அத்துடன் ஆக்க இலக்கியப் போட்டிகளிலும் பங்குகொண்டு பல்வேறு பரிசில்களையும் இவர் பெற்றுள்ளார்.

`யுகமொன்று உடைகிறது` என்னும் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 2001இல் வெளிவந்தது. இது 17 சிறுகதைகளை உள்ளடக்கியதாகும். அவ்வேளை அந்நூலுக்கான நயவுரையை நான் ஆற்றியிருந்தேன். 20 ஆண்டுகளின் பின் 2021இல் வெளிவந்த அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான படிக்கம் வெளிவந்துள்ளது. கிழக்கிலங்கையின் மூத்த படைப்பாளிகளுள் ஒருவரான இவரது முன்னைய படைப்புகள் இத்தனை வருடங்களுக்குப் பிறகு வெளிவருவது கவலை தரும் விடயமாயினும் அவரது ஆக்கங்கள் அனர்த்தங்களால் அழிவுற்றும் சிதைந்தும் போயிருந்த வேளையிலும் அவரது ஆக்கங்களைத் தேடிப் பெற்று இவ்விரு தொகுப்புக்களையும் அவரது மகனான த.மலர்ச்செல்வன் வெளிக்கொணர்ந்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

### ‘படிக்கம்’:

16 சிறுகதைகளை உள்ளடக்கி சுவிஸ் தாயதி வெளியீடாக `படிக்கம்` சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. இதிலுள்ள கதைகள், 2002 தொடக்கம் 2021வரை எழுதப்பட்டவை. தினக்கதிர், தினக்குரல், தினகரன், வானவில் ஆகிய பத்திரிகைகளிலும் மல்லிகை, செங்கதிர், ஞானம் ஆகிய சஞ்சிகைகளிலும் வெளிவந்தவை. ஒவ்வொரு கதையின் முடிவிலும் அது எழுதப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்.

‘தாயதி’யின் சமூக செயலூக்கத்திற்கான முன்னோடியான தில்லையின் வெளியீட்டுக் குறிப்புகள், `படிக்கம்` என்னும் படைப்பின் வீரியம்`` என்னும் தலைப்பில் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அதில் தாயதியின் முதலாவது சிறுகதைத் தொகுப்பாக இத் தொகுப்பு அமைவது பற்றியும் மட்டக்களப்பின் மண்வாசனைச் சொற்கள் இதில் ஆவணப்படுத்தப்பட்டிருப்பது பற்றியும் அவர் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இத்தொகுப்பின் ஆசிரியரின் உரை இடம்பெற்றுள்ளது. 1962 தொடக்கம் எண்பதாவது வயது நிறைவுறும் இன்று வரை தொடர்ச்சியாக தான் எழுதி வருவது பற்றியும் சிறுகதை எழுதுதலின் முக்கியத்துவம் பற்றியும் காலங்கடந்தும் போற்றப்படும் சிறுகதைகளின் தன்மை பற்றியும் அவர் எடுத்துரைத்துள்ளார். மேலும் இத் தொகுப்பில் உள்ள கதைகள் எவற்றைப் பேசுகின்றன என்பது குறித்து அவர் கூறியுள்ளவற்றைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

1. மண்ணின் பசுமை நினைவுகள்
2. போர் அவலங்கள்.
3. பாடுமீன் வாவி தரும் வளமான வாழ்க்கை.
4. மீன்பிடித் தொழிலின் மகத்துவமும் நுணுக்கங்களும்
5. போர்வெறி மனிதத்துவத்தை அழித்தல்.
6. தேரோட்டத்தின் சிறப்பும் மகிமையும்

இத்தொகுப்பு மேற்கூறியவற்றையே கருப்பொருள்களாகக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் அவலங்கள்:

உப்புக் கரைச்சை, தொடரும் துயரங்கள், தேரோட்டம், துறைக்காரன் ஆகிய கதைகள் போர் அவலங்களைக் கூறுகின்றன.

மண்முனைத் துறையிலிருந்து கொக்கட்டிச்சோலைக்குச் செல்லும் பிரதானவீதிக்கு வலப்பக்கம் பரந்து கிடக்கும் விவசாயத்திற்குப் பயனற்ற உப்பு விளையும் கரைச்சை உள்ளது. அங்கு அமைக்கப்பட்டிருந்த இறால் பண்ணையில் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றினர்.

யுத்த காலத்தில் 1987 ஜனவரி 28ஆம் திகதி அங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இங்கு பணியாற்றியோர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். உப்புக் கரைச்சை என்னும் கதை அதனை எடுத்துக் கூறுகின்றது. அத்துடன் தொடர்ந்துவந்த காலங்களில் மகிழடித்தீவு, முதலைக்குடா, முனைக்காடு முதலிய பிரதேசங்களில் இனவன்முறை மிகக் கொடூரமாக நடந்தேறியமை பற்றியும் இக்கதை பதிவு செய்துள்ளது. இந்த அவலம் அரங்கேறிய சந்தர்ப்பத்தில் மனிதருக்கு உதவுவதைவிடுத்து அப்பண்ணையிலிருந்த இறால்களை அள்ளிச் சென்ற மனிதாபிமானமற்ற கூட்டம் பற்றியும் இக்கதை குறிப்பிட்டுள்ளது.

போர் உக்கிரமடைந்த காலப்பகுதியில் உயிர் காப்பதற்காக வெளிநாட்டிற்குச் சென்ற ஒருவன் பதினைந்து வருடங்களின் பின்னர் பிறந்த நாட்டிற்கு வருகிறான். அப்போதும் நிலைமை சீரடைந்திருக்கவில்லை. அவனது நினைவுகளாகவே தொடரும் துயரங்கள் என்னும் கதை விபரிக்கப்படுகின்றது.

தேரோட்டம் என்னும் கதையில் தேரோட்டத்தின் சிறப்பும் மகத்துவமும் விபரிக்கப்பட்டாலும் போர்ச்சூழலில் மக்கள் வழிபாட்டிற்காக வராமல் அயல் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்த சூழலில் வழிபாடுகளும் தேர்த்திருவிழாவுமின்றி பொலிவிழந்து நின்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலின் நிலைமை எடுத்துரைக்கப்படுகின்றது.

துறைக்காரன் என்னும் கதை, வள்ளத்தைச் செலுத்தி மக்களின் போக்குவரத்திற்குப் பெருந்துணை புரியும் துறைக்காரனின் கதையைக் கூறுவது. நேரம் காலம் பாராது மக்கள் சேவையையே மகேசன் சேவையாக நினைத்துப் பணிபுரிந்த அவன், யுத்தத்தின் அவலத்துள் மடிந்து போகிறான். நடுநிசி கடந்த ஒரு பொழுதில் பிரசவ வலியால் துடித்த ஒரு பெண்ணையும் அவளுக்குத்




துணையாக வந்த இன்னுமொரு பெண்ணையும் ஏற்றிக்கொண்டு நகர்க்கரை நோக்கிப் பயணித்த சொற்ப வேளையில் துப்பாக்கி வேட்டுகள் அவ்வள்ளத்தையும் அதிலுள்ளவர்களையும் ஜலசமாதி ஆக்கிவிடுகிறது.

## மலையக மக்களின் வாழ்க்கை அவலங்களை வெளிப்படுத்துவன:

மண்ணை மீட்போம், சிலுவை சுமக்கப் பிறந்தவர்கள், கொழுந்தொன்று கருகிப் போகிறது ஆகிய கதைகள் அத்தகையன.

மண்ணை மீட்போம் என்னும் கதை பெரும்பான்மையினத்தவரால் ஆக்கிரமிக்கப்படும் தம் வாழ்விடங்களையும் சூழவுள்ள காணிகளையும் மீட்பதற்காக மலையக மக்கள் போராட வேண்டிய தேவையை வலியுறுத்தும் கதையாகும். அம்மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் இன்னல்களையும் இக்கதையிற் காணலாம்.

சிலுவை சுமக்கப் பிறந்தவர்கள் என்னும் கதை, இறப்பர் தோட்டமொன்றில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் தேர்தல் காலங்களில் எதிர்கொள்ளும் இன்னல்களையும் தாம் வாக்களித்த பிரதிநிதி தோற்றபோது ஏனைய இனத்தவரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவு கொள்ளப்படுவதையும் எடுத்துக் கூறுகின்றது. வென்ற மாற்றாளர்களால் லயங்கள் தீக்கிரையாக்கப்படுதல், பெண்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்படுதல், கொள்ளை, கொலை முதலானவைகளால் பாதிக்கப்படுதல் ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன.

கொழுந்தொன்று கருகிப் போகிறது என்னும் கதை, மலையகச் சிறுமிகளை கொழும்பு போன்ற இடங்களுக்கு வீட்டு வேலையாட்களாக அனுப்புவதனை மையமாகக் கொண்டது. இக்கதையில் வரும் சிறுமி தரகரது பேச்சுக்களை அறிந்து தன் தாயிடம் தன் விருப்பமின்மையைத் தெரிவித்து தன்னை அனுப்ப வேண்டாம் என மன்றாடுகின்றாள். அத்துடன் தான் முறைகேடான வழியில் தன் தாய்க்குப் பிறந்தவள் என்பதையும் அறிந்து கொள்கிறாள். இவற்றால் விரக்தியுறும் அச்சிறுமி ஓடும் ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொள்கிறாள்.

## மீன்பிடித்தொழிலின் மகத்துவத்தைப் பேசுவன:

இருள் விலகுக, ஒட்டிக்கூடு ஆகியன இத்தகையன.

மாயவலைகளைப் பயன்படுத்துவதனால் மீன்களின் பெருக்கம் அற்றுப் போவதையும் ஏனைய மீனவர்கள் பாதிக்கப்படுவதையும் இருள் விலகுக என்னும் கதை எடுத்தியம்பியுள்ளது.

ஒட்டி மற்றும் சள்ளல் மீன் வகைகளைப் பிடிப்பதற்காக வைக்கப்படும் கூடுகளிலிருந்து மீன்களைக் களவாடிச் செல்லும் நிலைமைகளையும் அதனால் குறித்த மீனவர்கள் பாதிக்கப்படுவதையும் ஒட்டிக்கூடு என்னும் கதை விளக்குகின்றது.

## சுனாமி தொடர்பானவை:

அது ஒரு அழிவுக்காலம், கலியுக அரங்கேற்றம் ஆகியன சுனாமி தொடர்பான கதைகளாகும்.

அது ஒரு அழிவுக் காலம் என்னும் கதை சுனாமி தந்த அவலங்களையும் தொடர்ந்து வந்த காலங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்டோருக்கு உதவியமை குறித்த விடயங்களையும் சிலர் அந்நிவாரணங்களை குடும்பத்திற்குப் பயன்படுத்தாமல் அவற்றை விற்று குடித்து அழித்தமையையும் யதார்த்தமாகப் பதிவு செய்துள்ள கதையாகும். குறிப்பாக வாழ்வாதாரத் தொழிலுக்காக நிறுவனத்தால் வழங்கப்பட்ட தோணிகளையும் அறாவிலைக்கு விற்று குடித்தமை பற்றியும் குடும்பப் பொறுப்பற்ற தன்மையினையும் இக்கதை எடுத்துக் கூறியுள்ளது.

சுனாமியின் பின்னர் திராய்மடு கிராமத்தில் குடியேற்றப்பட்ட ஒருவனது நினைவுகள் பின்னோக்கு உத்தி மூலம் கலியுக அரங்கேற்றம் என்னும் கதையில் கூறப்பட்டுள்ளன. சுனாமியின் அவலங்கள் இக்கதையில் காட்சிப் படிமமாக விபரிக்கப்பட்டுள்ளன. சுனாமியால் இறந்து போன பெண்களின் நகைகளைக் கொள்ளையடிப்பதிலும் தமது இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதிலும் ஈடுபட்டு சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய மனிதாபிமானமற்ற சிலரையும் இக்கதை குறிப்பிட்டுள்ளது.

## சமய மற்றும் சமூகம் தொடர்பானவை:

`தீர்த்தக்கரையினிலே` என்னும் கதை மட்டக்களப்பு மாமாங்கத் திருவிழாவிற்குச் செல்லும் பழைய நினைவுகளின் மீட்டலாக அமைந்துள்ளது. தீர்த்தக்கரை என்பது மட்டக்களப்பு மாமாங்கத் தீர்த்தத் திருவிழாவைக் குறிக்கும் குறியீட்டுச் சொல்லாக இப்பிரதேசத்தில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

சமூகத்தில் இடம்பெறும் தனித்துவமான பிரச்சினையை இனங்காட்டுவதாக அமைந்திருப்பது `எங்கிருந்தோ வந்தான்` என்னும் கதையாகும். வயோதிபப் பெற்றோரின் தனிமை வாழ்க்கைக்கு உதாரணமாக இக்கதை அமைந்துள்ளது. பெற்ற பிள்ளைகள் வெளிநாடு சென்றுவிட தனித்து வாழும் ஒரு வயோதிபப் பெண்ணுடன் சிறுவயது முதற்கொண்டே வளர்ந்துவரும் ஒரு சிறுவன், இளைஞனான பின்னரும் தனது ஆசாபாசங்களைத் துறந்து அவளுக்கு சேவை புரிந்து வாழ்வதையும் அவளது அந்திம காலத்தில் பிரதிபலன் எதையும் எதிர்பாராது பாசத்தோடு ஒத்தாசை புரிந்து இறுதிச் சடங்கினையும் செவ்வனே பொறுப்புடன் நிறைவேற்றுவதையும் வெளிநாட்டிலுள்ள பிள்ளைகள் தமது தாயின் இறுதிச்சடங்கை வீடியோ பதிவுகளில் காணவிழைவதையும் கூறும் இக்கதை நடைமுறை வாழ்க்கை அனுபவங்களின் பதிவாக உள்ளது. ``எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான். இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்தேனோ`` என்று கண்ணன் என் சேவகன் பாடலில் பாரதி கூறுவது இக்கதையில் குறிப்பிடப்பட்டிருப்பதையும் காணலாம். இத்தொகுப்பிலுள்ள கதைகளுள் விசேடமாக நோக்கப்பட வேண்டிய கதைகளுள் ஒன்றாக இதனைக் கொள்ளலாம். பெற்றோரின் உழைப்பு மற்றும் சொத்துக்களுக்காக பெரும்பாலும் அவர்களைப் பராமரிக்கும் பிள்ளைகள் வாழும் இச்சமூகத்தில் குறித்த வயோதிபப் பெண் தனது சொத்துக்களை அவனுக்கு எழுதி வைக்க விரும்பியும் அவளது இறப்பின் பின் அனாதைகளும் ஆதரவற்றோரும் அதனை அனுபவிக்கும் வகையில் அவளது சொத்துக்களை எழுதிவிடும்படி அவளை வற்புறுத்தி தனக்கென எதையுமே பெற்றுக் கொள்ளாமல் அவளுக்காகவே வாழ்ந்து சகல மரியாதைகளுடனும் இறுதிச் சடங்கினை நிறைவேற்றும் அவனது தியாகம் இக்கதையில் முதன்மை பெற்றிருக்கின்றது. பெற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்டு தனிமை வாழ்வில் அல்லலுறும் பெற்றோரின் அவல நிலையையும் உயிரோடு இருக்கும்போது கவனிக்காமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச்சடங்கை வீடியோ பதிவாகப் பெற்று பார்க்கும் பிள்ளைகளின் மனோநிலையையும் இக்கதை எடுத்துக் கூறியுள்ளது.

புதிர் என்னும் கதையும் சமூக நோக்குடைய விசேடமாகப் பார்க்கப்பட வேண்டிய கதையாகும். புதிர் உண்ணுதல் புதிராகிப்போன இக்காலத்தில் புதிரின் மகத்துவத்தையும் புதிர் உண்ணுதலில் அடங்கியுள்ள சமூக ஒருமைப்பாட்டையும் நல்லுறவையும் முன்னைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளையும் வரலாற்றுப் பதிவாக புதிர் என்னும் கதை விளக்குவதைக் காணலாம்.

பின்னோக்கு உத்தி மூலம் கூறப்பட்டுள்ள இன்னுமொரு கதை ஆற்றங்கரை பங்களா என்னும் கதையாகும். ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் மாடி வீட்டு பங்களா பாழடைந்து காணப்படுகிறது. அங்கு குரங்கு போன்ற அமைப்புடைய ஒரு ஜீவன் வசித்து வருகிறது. அதற்குப் பேசத் தெரியாது. அச்சூழலில் வாழ்வோருக்கு அது பழக்கப்பட்ட ஒன்று. அது யாருக்கும் தீங்கிழைப்பதில்லை. கொடுப்பதை உண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதன் பிறப்புப் பற்றிய தேடலில் கதைக் களம் விரிகிறது.

அப் பங்களாவிற்குச் சொந்தக்காரரான சீனித்தம்பிப் போடியாரின் மாந்தோப்பினையும் தென்னந்தோப்பினையும் குரங்குகள் நாசம் செய்ய அவற்றை விரட்டுவதற்காகப் பல முறை முயன்றும் முடியாமல் போகவே இறுதியாக துப்பாக்கியைக் கையில் எடுக்கிறார். ஒரு பெரிய குரங்கைக் குறி பார்க்கிறார். அது கையெடுத்துக் கும்பிடுகிறது. அவரது மனைவியும் தடுக்க முயலுகிறாள். ஆயினும் போடியாரால் அக்குரங்கு சுடப்படுகின்றது. போடியாரின் மனத்திரையில் அக்குரங்கின் உருவம் அழியாத படிமமாகின்றது. அவள் கருத்தரித்துப் பிள்ளையினைப் பெறுகின்றாள். ஆனால் அது மனித உருவத்தைக் கொண்டதாக இராமல் ஏறக்குறைய குரங்கினை ஒத்ததாக அமையவே விரக்தியடைகிறார் போடியார்.

இக்கதையின் முடிவில் குறிப்பிடப்படும் பின்வரும் பகுதி மூலம் இச்செய்தி வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். "குழந்தை பிறந்து `வீல்` என்ற அழுகுரல் உள்ளே கேட்டது. எதுக்கும் பயப்படாத மருத்துவிச்சி தங்கம்மாவே அந்த அதிசயப் பிறப்பைக் கண்டு பயந்தே விட்டாள். டக்கென்று மருத்துவிச்சி தங்கம்மாவின் மனதுக்கு சீனித்தம்பிப் போடியார் சுட்டு விழுத்தாட்டிய குரங்கின் ஞாபகமே வந்தது. சத்தம் போட்டு `போடியார் போடியார்` என்று மருத்துவிச்சி கத்தினாள். எல்லோரும் குழந்தை பிறந்த அறைக்குள் ஓடிப்போனார்கள். `போடியாரே கோபப்பட வேண்டாம். குரங்கு போட்ட சாபம் பலிச்சுப் போயித்து போல இருக்கு. அந்த உருவத்தப் பாத்தியளா, குரங்கு போல இருக்கு` மருத்துவிச்சி கூறியதுதான் தாமதம் அந்த குரங்கு உருவத்தை வெறித்துப் பார்த்து துப்பிவிட்டு ஆற்றங்கரையை நோக்கிப் போகிறார் சீனித்தம்பிப் போடியார்."

உயிர்கள்மீது இரக்கம் கொள்ளுதல் என்னும் அறத்தை வலியுறுத்தும் இக்கதை உளவியல் பாதிப்புக்களையும் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

இத்தொகுப்பில் இறுதியாக அமைந்திருக்கும் கதை, தொகுப்பின் தலைப்பாக இருக்கும் படிக்கம் என்னும் கதையாகும். 2021இல் எழுதப்பட்ட இக்கதை மட்டக்களப்புப் பாரம்பரிய மரபின் சின்னங்களுள் ஒன்றாக விளங்கும் படிக்கத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் விளக்கியுள்ளது.

வெற்றிலை வட்டாவின் இணையாக துப்பற் படிக்கமும் சபைகளில் உலா வருவது பழங்கால மரபு. வெண்கலத்தினால் செய்யப்பட்ட இவை கலை நுணுக்கங்களுடனான வேலைப்பாடுகளைக் கொண்டவை. பலர் சூழ்ந்திருக்கும் இடங்களில் வெற்றிலை போடுவது சம்பிரதாயமான வழக்காகும். அச்சூழலில் எச்சிலைக் கண்டவிடங்களில் துப்பாமல் படிக்கம் அதனைத் தாங்கிக் கொள்கிறது. படிக்கத்தின் பயன்பாடு சுகாதாரமான நடைமுறையினையும் சுதந்திரமான உரையாடலையும் அசூயையற்ற சூழலையும் ஊக்குவிக்கும் பிரதான பாத்திரமாகும். எச்சிலைத் தான் சுமந்து கொண்டு மேற்கூறிய அத்தனைக்கும் மறைமுக காரணியாக படிக்கம் விளங்குகிறது. வெற்றிலை வட்டாவிற்கு மட்டக்களப்புப் பாரம்பரியத்தில் மிகச் சிறப்பானதோர் இடமுண்டு. சுப காரியங்களிலாயினும் இழவு காரியங்களிலாயினும் தொழில் துறைகளிலாயினும் தனித்தோ கூட்டாகவோ அதன் பயன்பாடு அத்தியாவசியமான ஒன்றாக முன்னைய காலங்களில் இப்பிரதேசத்தில் இருந்து வந்திருக்கின்றது. வெற்றிலை வட்டா இருக்குமிடங்களில் படிக்கத்திற்கும் வேலையுண்டு. எனவே இவையிரண்டும் இணைபிரியாதவை. தற்காலத்தில் படிக்கத்திற்கு வேலையில்லாமற் போய்விட்டது.

இக்கதையில் சுபகாரியமொன்றில் படிக்கத்தின் பயன்பாட்டை ஆசிரியர் சித்திரித்துள்ளார். அதன் மூலம் தமிழரின் பண்பாட்டு நடைமுறையினையும் சபை நாகரிகத்தையும் எடுத்துக்கூறியுள்ளார்.

திருமணப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் வெற்றிலை வட்டா சபைக்கு வருகிறது. அனைவரும் வெற்றிலை போடுகிறார்கள். சிறிது நேரத்தில் படிக்கம் கொண்டு வரப்படுகிறது. வரிசையாக அனைவரும் வெற்றிலை எச்சிலை அதனுள் துப்புகிறார்கள்.

பேச்சு வார்த்தை இனிதே முடிய விருந்துபசாரம் நடந்தேறுகிறது. இறுதியாக மீண்டும் வெற்றிலை வட்டாவும் படிக்கமும் கொண்டு வரப்படுகின்றன. அனைவரும் வெற்றிலை போட்டுப் பின் படிக்கத்தை நிரப்புகிறார்கள். நிகழ்வு முடிவுக்கு வருகின்றது. அனைவரும் விடைபெற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற பின்னர் வேலையாட்கள் படிக்கத்தைத் தூக்கிகொண்டுபோய் வெட்டப்பட்ட மடுவில் எச்சிலைப் போட்டு மூடுகிறார்கள்.

சுப நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் இவ்விரு பாத்திரங்களின் முக்கியத்துவம் இதன் மூலம் உணர்த்தப்பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக படிக்கம் தங்கு தடையற்ற இடையீடு எதுவுமற்ற சுமுகமான செயற்பாடுகளுக்கு வழிவகுத்து தன் பங்களிப்பை நல்குவது குறிப்பிடத்தக்கது. இன்று அதன் பயன்பாடு அருகி விட்டது. வெற்றிலை போடும் பழக்கமும் குறைந்து விட்டது. எனினும் இழவு வீடுகளில் இதன் பயன்பாடு இன்றும் உள்ளமையைக் காணலாம்.

மட்டக்களப்பில் வெற்றிலையைத் தொடர்ச்சியாகப் போடுபவர்களை வெற்றிலைப்படிக்கம் என்னும் சொற்றொடரால் அழைப்பது வழக்கம்.

இத்தொகுப்பில் காணப்படும் சில சிறப்பு அம்சங்களையும் பார்க்கலாம்.

## பேச்சு வழக்கு:

மலையகம் பற்றிய சிறுகதைகளில் மலையகத் தமிழும், மட்டக்களப்புப் பிரதேசத்தைக் களமாகக் கொண்ட கதைகளில் மட்டக்களப்பு வழக்குத் தமிழும் சிறப்பாகவும் இயல்பாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

உதாரணம்: மலையகத்தமிழ்:

• "இத்தனைக்கும் காலம் காலமாக ஓழைச்சு ஓடாகத் தேஞ்சி மாஞ்சி போனோம். இப்ப எழும்பிக்கிட்டு போகச் சொன்னா எங்கிட்டுத் தம்பி போற?"

மட்டக்களப்பு வழக்குத் தமிழ்:

• ``ஒண்டா தம்பி சிவசம்பு. அப்படியும் சில பேர் புத்தியாக நடந்து முன்னேறுகிறானுகள்``

• ``இந்தக் கசவாரக் காட்சிகளக் காணத்தான் நாம் பிறந்திருக்கம். புள்ளையளப் பெத்த என்ன புண்ணியண்டா. தாயிர சாவுக்கு பக்கத்தில இல்லாத புள்ளை ஒரு புள்ளையா? ``

## உவமைகள்:

• நஞ்சு வேரின் சாறைக் குடித்த பொட்டியான் மீன்கள் போல மயங்குதல். மீன்பிடித் தொழிலோடு சம்பந்தப்பட்ட இந்த உவமையை இரு இடங்களில் நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

1. நஞ்சுவேரின் சாறைக் குடித்த மீன்கள் மயங்கிக் கிடப்பது போல்
வெடிச்சத்தங்களின் பயத்தால் மயங்கி பற்றைக்குள் ஒளிந்துகிடந்த உலையாண்டப்போடி...
(உப்புக்கரைச்சை)

2. அமிர்தம்போல சுவை காட்டும் பினைந்த புதிரை வாங்கிச் சாப்பிட்டு

3. நஞ்சுவேரின் சாறைக் குடித்த `பொட்டியான்` மீன்கள்போல கண்கள்
மயங்க......... (புதிர்)

4. தோல் உரிக்காத பாக்குப் பழம் போன்ற பொன்வண்டு (புதிர்)

5. மையோர்க் கிழங்கைச் சுட்டு விரித்தாற் போல பளிச்சென்று வெள்ளையாகத் தோன்றுதல்.

(மரவள்ளிக் கிழங்கு மட்டக்களப்பு வழக்கில் மையோர்க்கிழங்கு எனக் குறிக்கப்பெறும்)
(தேரோட்டம்)

## உவமைத் தொடர்கள்:

மிக அரிதான உவமைத் தொடர்களை நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார் இரு உதாரணங்களை இங்கு குறிப்பிடலாம்.

• திகைப்பூண்டை மிதித்த வழிப்போக்கன் போல திகைப்பூண்டு என்பது காட்டில் வளரும் ஒருவகைப் புல்லினமாகும். அதனை மிதித்தால் வழியைத் தொடர முடியாதவாறு ஒரு மயக்கநிலை தோன்றும் எனவும் வழி தெரியாது திகைப்புறும் நிலை தோன்றும் எனவும் கூறப்படுகின்றது. வழிப்போக்கனோ திட்டவட்டமான வழியை அறிந்தவனல்லன். கேள்விவழி மூலம் சென்றடையவிருக்கும் இடத்தை செல்வதற்கான வழியைத் தெரிந்தெடுப்பவன். அவன் இப்பூண்டை மிதித்தால் இன்னும் வழித்தெளிவின்மை ஏற்படும் என்பதை இவ்வுவமைத் தொடர் உணர்த்துகின்றது.

• சில்லாங்கொட்டை சிதறுவது போல

## பழமொழி:

• தூரத்துத் தண்ணி ஆபத்துக்குதவாது.

## அரிய சொற்றொடர்ப் பயன்பாடு:

வெளிநாட்டிலிருந்து வந்து தங்கியிருக்கும் தன் மகனை நீண்ட நாட்கள் தன்னுடன் தங்க வைக்க ஆசையிருந்தும் நாட்டின் சூழலால் மீண்டும் வெளிநாட்டிற்கே சென்றுவிடும்படி தாய் கூறும் சந்தர்ப்பம்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ‘‘எத்தன வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கா மகனே. எனக்கு ஒரே ஆம்புளப் புள்ள நீதான். எண்ட சா உனக்குக் கிடைக்குமென்று நான் நினக்கல்ல. கொஞ்ச நாளைக்குப் பிறகு உண்ட தேசத்துக்கு நீ பறந்து போயிடுவாய். போகாமல் இஞ்ச இருந்துதான் என்ன செய்யுற. இளந்தாரிப் புள்ளைகள வெடி மருந்துக்குத் தீனி போடுற இந்த மண்ணில எப்பிடிரா மகன் உன்ன நிக்கச் சொல்லுவன்’’.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதாவது இலங்கையில் இனவன்முறை இடம்பெற்ற காலத்தில் தமிழ் இளைஞர்கள் வகைதொகையின்றி வேட்டையாடப்பட்டமை, அச்சூழலில் தம் பிள்ளைகளின் உயிர் காப்பதற்காக வெளிநாட்டிற்கு பெற்றோர் பலவந்தமாக அனுப்பி வைத்தமை, இப்பிள்ளைகள் விருப்பமின்றியே பல இன்னல்களுக்கு மத்தியில் பிறந்த மண்ணை நேசித்த உறவுகளை விட்டுப் பிரிந்து சென்றமை முதலானவற்றை உள்ளடக்கிய வகையில் ‘இளந்தாரிப் புள்ளைகளை வெடி மருந்துக்குத் தீனி போடுற இந்த மண்’ என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

இவ்விதம் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ள இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கதைகள் நினைவு மீட்டல்களாக அமைந்துள்ளதுடன் அதனூடாக முன்னைய காலத்து விபரங்கள் மிக அதிகமாக இடம்பிடித்திருப்பதையும் காணலாம். மட்டக்களப்புப் பிரதேசத்தின் அனைத்து விடயங்களையும் ஒரு சிறுகதையுள் அடக்கிக் கூறிவிட வேண்டும் என்னும் ஆசிரியரின் அவா அச்சிறுகதையை எல்லை தாண்டும் நிலைக்கு இட்டுச் சென்று பிரதான கருத்திற்கு அழுத்தம் கொடுப்பதைத் தடை செய்வதாக அமைந்து விவரணச் சித்திரங்களாகிவிடுவதைக் காணலாம்.

## உதாரணம்:

1) புதிர் என்னும் கதையில் புதிர் எடுத்தல், சமைத்தல், பங்கிடுதல் ஆகியவற்றுடன் முன்னைய காலத்தில் விளையாடும் பல வகை விளையாட்டுக்களையும் வெட்டுக்கிளி பிடித்தல், வண்ணத்துப்பூச்சிகளைப் பிடித்து அவற்றின் வயிற்றில் நூல்கட்டி பட்டம் போல் பறக்கவிடுதல் முதலானவற்றுடன் விடலைப்பருவத்து சில்மிஷங்கள், கொக்கு பிடித்தல், பொன் வண்டு பிடித்தல் என அவை நீண்டு செல்வதைக் குறிப்பிடலாம்.

2) தீர்த்தக்கரையினிலே என்னும் கதையில் அனுமாருக்கும் அதற்கும் உள்ள தொடர்பு சீதாப்பிராட்டியாரின் நிலை பற்றிய செய்திகள் கூறப்படுதல்.

3) தேரோட்டம் என்னும் கதையில் தான்தோன்றீஸ்வரர் கோயிலின் உருவாக்கம், போர்த்துக்கேயத் தளபதி அவ்வாலயத்தை இடிப்பதற்கு வருதலும் சவாலிடலும் நந்திப் பெருமான் புல்லுண்டு சாணமிட்டு அற்புதத்தை நிகழ்த்துதலும் பற்றிய விவரங்கள் இவற்றுடன் அக்கோயில் பற்றி நிலவும் வாய்மொழிக் கதைகள் என மிக அதிகமான விவரணங்கள் கூறப்பட்டிருப்பதையும் குறிப்பிடலாம்.

இது அவரது பாணியாகும். அவரது முதல் தொகுப்பிலும் பெரும்பாலான கதைகள் இத்தகையனவே.

அவரது முதல் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் செ.யோகராசா இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

``இக்கதைகளில் இடம்பெறும் பாத்திரங்களுள் பெரும்பாலோர் ஏழைகள், மீன் பிடித்தும் விவசாயம் செய்தும் வாழ்பவர்கள் ..................... எப்போதும் நினைவுகளின் சாகரத்தில் மூழ்குபவர்கள் (இவ்வாறு மூழ்கிப் போவதனால் மட்டக்களப்பு மக்களது சம்பிரதாயங்களும் சடங்குகளும் விவரணச் சித்திரங்களாகி விடுகின்றன.) ``

(யுகமொன்று உடைகிறது: சிறுகதைத்தொகுப்பு: அணிந்துரை)

என அவர் குறிப்பிடுவதிலிருந்து இவரது கதைகளின் தன்மையினை அறியலாம். `படிக்கம்` என்னும் இரண்டாவது தொகுப்பிலும் இத்தன்மை அதிகமுண்டு. சில சந்தர்ப்பங்களில் இக்குறிப்புகள் வரலாற்றுத் தகவல்களாகவும் அமைந்து வாசகர்களுக்கு முன்னைய கால மட்டக்களப்பை மனக்கண் முன் கொணரவும் உதவுகின்றன. சென்ற தலைமுறையினருக்கு நினைவு மீட்டல்களாகவும் இன்றைய தலைமுறைக்கு பழம் பண்பாட்டை எடுத்துக் கூறுவதாகவும் அமைவதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். சிறுகதைக்காக சிலர் வரையறுத்து வைத்திருக்கும் சில வாய்பாடுகளைப் புறந்தள்ளிப் பார்த்தால் பழைய விடயங்களை அறிவதற்கு இவை பெருந்துணை புரிந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

கதை நிகழும் களத்தைக் கண்முன் கொண்டு வருவதற்கு அழகான வர்ணனைக் காட்சிகளை கச்சிதமாக வெளிப்படுத்தியதில் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார். உதாரணம்:

`புழுதி நாற்றத்தைக் கிளப்பி மண்வாசனையைக் காற்றோடு ஊரெங்கும் பரப்பி புதுமழை கொட்டு கொட்டென்று கொட்டும்போது ஏறுகெழுத்திகள் ஆயிரம் ஆயிரமாக உப்புக் கரைச்சையை மொய்க்கும். உலையாண்டப்போடி உப்புக்கரைச்சையிலே ஏறுகெழுத்திகள் வாரிவாரி அள்ளியதை நினைத்தவாறு உப்புக்கரைச்சையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரங்களில் தவம் கிடக்கும் கண்ணாப்பற்றைக்குள் கால் வைக்க எத்தனிக்கும்போது நீர்ப்பரப்பிலே மீனுக்குக் குறி வைத்துக் கிடக்கும் வெள்ளைக் கொக்குகளும் சாம்பல் நிற நாரைகளும் சிறகுகளை விரித்து கண்ணாக்காட்டை முற்றுகையிட மரங்களிலே குடிகொண்டு கிடந்த கொக்குகளும், விதம் விதமான பறவைகளும் ஒரே வீச்சில் பல கதம்ப ஒலிகளை ஓசைகளாக எழுப்பி பயங்கர அமைதியைக் கலைத்து அச்ச உணர்வுகளை விதைக்க உலையாண்டப்போடி கண்ணாக் குகைக்குள் புகுந்து கொள்கிறான். `

புதிர் குழைத்துண்ணும் காட்சி விவரணம் கண்முன்னே விரிந்து நாவில் ருசிக்கிறது.

``பெரிய ஆள் உயரத்தில் கம்பீரமாக நிற்கும் வெண்கலத் தேங்காய் எண்ணெய் விளக்கின் பகல் போல் வெளிச்சம் காட்டும் சுடர் ஒளியில் உள்வீட்டில் பெரிய தலைவாழை இலையைப் பக்குவமாகப் போட்டு வெண்கல அகப்பையால் சோற்றை எடுத்து இலையிலே அள்ளி அள்ளிக் குவித்து தேங்காய்ப் பாலை அதற்குள்ளே ஊற்றி அதற்கு மேலே தயிர்ப்பானையைக் கொட்டி மெது மெதுவாகப் பினைந்தெடுத்து பினையப் பினைய, ருசி காட்டும் சாமான்களான கூழ், பலகாரங்கள், சகல விதமான பழ வகைகள், சீனி, சர்க்கரை, கற்கண்டு, உடைத்த பனங்குட்டான், தேன், நெய் என்று எல்லாவற்றையும் எங்கும் பரவலாகப் போட்டுக் கையால் லாவகமாகப் பினைந்து பினைந்து புதிர் பினையும் கைங்கரியத்தை முடித்து விட்டு கையால் பினைந்த புதிரில் கொஞ்சத்தை எடுத்து வெண்கலத் தேங்காய் எண்ணெய் விளக்குத் திரியிலே வைத்து விட்டு எல்லோரையும் அழைத்து கற்பூரம் கொழுத்தி தேவாரம் பாடி முடித்துவிட்டு சகலருக்கும் பினைந்த புதிரைக் கொடுத்தார்''.

இவற்றின் மொழிநடைச் சிறப்பும் அவதானிக்கத்தக்கது. மிக நீண்ட வாக்கியங்களாக இவை அமைந்து காட்சிப்படுத்தலை வலுவூட்டுகின்றன.

தொகுத்து நோக்குமிடத்து இத்தொகுப்பு சில பலவீனங்களைக் கொண்டிருந்தாலும் மேற்கூறப்பட்டுள்ள சிறப்புக்களின் மூலம் சிறுகதையுலகில் கவனம் கொள்ளப்படும் சிறுகதைகளைக் கொண்டதாகக் கணிக்கப்பெறும்.


# கவிதை மரபும் தொல்காப்பியமும்

ஆசிரியர்:
பேராசிரியர் இராம.குருநாதன்

நூலைப் பெற:
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பிராட்வே,
சென்னை 600104.

விலை: ரூ.150.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரும்பிப் பார்த்தல்

சின்னஞ் சிறு வயதில்,
சித்திரக் குள்ளர்களும், குட்டித் தேவதைகளும்
ஒளித்துக் கிடக்கும் வீடுகளைப்
பசும் புற்களிடையே தேடும்போது
நான் எவ்வளவு உயரமாய் இருந்தேன்

அன்றைய தினத்தை
தங்கச் சூரியனின் மங்கு கதிர்கள்
மெல்ல மடித்து வைப்பதைப்
பார்த்திருந்தேன்

ஒளிச் சிரிப்பின்
இறுதிச் சொற்களை
கலகலக்கும் கூக்கபரா பறவைகளிடம்
கேட்டேன்

குளிர்காற்றுடன் கூதல் மழை
தகரக் கூரை உயரத்திலும், கண்ணாடிச் சன்னலிலும்
சடசடவென்று கொட்டுவதைக் கேட்டேன்
அம்மாவின் முத்தமொன்றில்
அச்சிறுவன் ஆனந்தமாய்க் கண்ணயர,
உண்மையிலேயே
அந்த நாள்
முடிந்துதான் போயிற்று

ஓ மனிதா!
காலங்கள் ஓடிக் கழிந்துவிட்டன
கடந்து போனவை மீண்டும் வருமோ எனக்
கலங்கி ஏக்கம் கொள்ளாதே

பசிய குளோவர் புற்களின் அடியில்
விஷக் கொடுக்குகள் பல
மறைந்திருக்கும் என்பது
இப்போது எனக்குத் தெரியும்.

ஆங்கில மூலம்: ஜாக் டேவிஸ் | தமிழில்: ஆழியாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக்கலை

ஒரு கவிதை உணரத்தக்கதாகவும்
கோளவடிவமான பழத்தைப் போல
சத்தமற்றும் இருக்க வேண்டும்

பெருவிரல் தாங்கியிருக்கும்
பழம் பதக்கங்கள் போல
ஊமையாய் இருக்க வேண்டும்

கீல்கள் பழுதடைந்த
பாசி படர்ந்த ஜன்னலின் கல் விளிம்புகள் போல்
அமைதியாயிருக்க வேண்டும்

ஒரு கவிதை பறக்கையில்
எடையற்றிருக்கும் பறவைகள்
போலிருக்க வேண்டும்
................
ஒரு கவிதை உதித்தெழும் நிலவு போல
காலத்திடையே அசைவுகளற்றிருக்க வேண்டும்
கிளை கிளையாக நிலவு விட்டுச் செல்லும்
இரவினைப் போலிருக்க வேண்டும்
நினைவைத் தொடர்ந்து நினைவு வரும் மனமென
பனிக்கால இலைகளின் பின் ஒளிரும்
நிலவென இருக்க வேண்டும்
ஒரு கவிதை உதித்தெழும் நிலவு போல
காலத்திடையே அசைவுகளற்றிருக்க வேண்டும்
ஒரு கவிதை உண்மையற்றதற்கு
சமமானதாயிருக்க வேண்டும்

ஏனெனில் எல்லாத் துயரச் சரிதங்களும்
ஒரு வெறுமையான கதவு வழி மற்றும் ஒரு மேப்பில்
இலையே

ஏனெனில் அன்பு
சாய்வுற்ற புற்கள் மற்றும் கடலுக்கு மேலான
இரு வெளிச்சங்கள்
ஒருகவிதை அர்த்தம் சொல்லக் கூடாது
ஆனால் (கவிதையாக) இருக்க வேண்டும்

The Art of Poetry", by Horace C. 19 BC | **தமிழில்: கலாப்ரியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமலரின் இசைப்பா

இயற்கையின் குரலால்
திரும்பத் திரும்பச் சொல்லப் படும்
அன்புச் சொல் - நான்
நீல நிறக் கூடாரத்திலிருந்து
பச்சைக் கம்பளத்தின் மீது
விழுந்த நட்சத்திரம் நான்
மழைக்காலத்தைக் கொண்டு
வசந்தக் காலத்தை கருவுயிர்த்த
மூலகங்களின் செல்ல மகள் - நான்
கோடைப் பருவத்தின்
மடியில் வளர்ந்து
இலையுதிர் பருவத்தின்
கட்டிலில் துயின்றவள் நான்
விடியலின் ஒளியின் வருகையை அறிவிக்க
இளங்காற்றுடன் இணைவேன்
மாலை வெளிச்சத்துக்கு விடையளிக்க
பறவைகளுடன் சேர்வேன்
எனது பற்பல வண்ணங்களால்
சமவெளிகள் அலங்கரிக்கப் படுகின்றன
காற்று என் வாசனையால்
நறுமணம் ஊட்டப்படுகிறது
நான் தூக்கத்தைத் தழுவுகையில்
இரவின் வழிகள் என்னைக் காத்து நிற்கும்
நான் விழிக்கும் போது,
பகலின் ஒரே விழியான
கதிரவனை நோக்குவேன்.
பனித் துளியை மதுவாய் பருகினேன்
பறவையின் இசையைக் கேட்டு
புல்லின் அசைவுக்கேற்ப ஆடுவேன்.
காதலர்களின் அன்பளிப்பு நான்
மணமக்களின் நெற்றிப்பட்டம் நான்
மகிழ்ச்சிப் பொழுதின் நினைவு நான்
மரணத்தின் கடைசிப் பரிசு நான்
இன்பத்தில் பங்கெடுப்பதும் நான்,
துன்பத்தில் பங்கெடுப்பதும் நான்.
ஆனால்,
நான் ஒளியை மட்டுமே பார்க்க
உயரே நோக்குவேன்
ஒருபோதும் நிழலைப் பார்க்க
கீழே நோக்கியதில்லை
இது தான் ஞானம்
இதனை
மனிதன் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆக்கம்: கலீல் ஜிப்ரான் | தமிழாக்கம் : செ.இராஜேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சொட்டுப் புள்ளியாக நழுவுதல்



ஒரு புள்ளியை வைத்துவிட்டு
பெரும்பாடு படவேண்டி இருக்கிறது.
அது ஒழுங்கான வட்டமாக இல்லை
நேர்த்தியான நிறத்தில் இல்லை
தோதான இடத்தில் இல்லை.
புள்ளி வைக்கும் முன்
நடுங்கிய விரல்கள் பற்றிய கவனம் சிதறடிக்கப்பட்டு
விடுகிறது.
ஒரு கோடாக நீளவேண்டியது
புள்ளி அளவிலேயே சுருங்கியதன் காரணம்
அற்பமாகவே புலப்படுத்தப்படுகிறது.
புள்ளி வைக்காமல்
பொருளற்றுப் போன வார்த்தைகள் பின்னால் அலைவது
தனிசுகம் போல.
அகன்ற பார்வைக்கான குவிமையமென
ஒற்றைப்புள்ளியை உருவகப்படுத்த
எவ்வளவு முயற்சிகள்?
சாட்டைக்குக் கட்டுப்பட்டு வட்டமேஜை மீதமர்ந்து
முன்னங்கால்களைத் தூக்கிய
பழங்கால சிங்கத்தைப் போலப்
புள்ளியின் மீது
நெடுநேரமாய்க் குத்த வைத்துள்ளீர்கள்.
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
எரிந்து விழும் புள்ளி போல
வாழ்வு,
ஒரு சொட்டுப் புள்ளியாக நழுவுவதை
மூக்குக் கண்ணாடியை மேலேற்றிப் பார்க்கிறது
யாருடையதோ காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டெடுக்கப்பட்ட புனிதப் பொருள்

போதையைக் கைக்கொள்வதற்கு
எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது?
அத்தனை சுலபமாகக் கிடைத்துவிடுவதில்லை பொய்கள்.
முகம் சுழிக்காத போதையில்
யாராவது என்னை முக்கியெடுங்கள்.
நிரம்பவே நிரம்பாத
கோப்பையைப் பரிசளிக்க
ஒருவருக்குக் கூடவா மனமில்லை?
வெள்ளையான என் குடலுக்கு
எதற்கு இத்தனை நிறங்கள்?
ஒரு சொல்லிலிருந்து
இன்னொரு சொல்லுக்குத் தாவ
எத்தனை கைத்தாங்கல்கள்?
மாற்றி மாற்றி எழுதுவதற்கும்
புரண்டு புரண்டு பேசுவதற்கும்
தொட்டுக் கொள்ள ஊறுகாய் எதற்கு?

தெளிவான சிந்தனை துலங்கும் போது,
ஒரு குவளை போதையைத்
தெளிப்பது போல்
மாற்று உத்தி வேறெதுவுமில்லை.
சாகப் பழகிக் கொள்ளக் கிடைத்த
அரிய வாய்ப்பை
நழுவவிடுவதா புத்திசாலித்தனம்?
சாகாவரம் கிடைத்தால்
சம்பந்தப்பட்டவர்களிடம் அடகு வைத்து
ஒரு மிடறு வாங்கிக் குடிப்பதைத் தடுக்க
ஏன் இவ்வளவு முயற்சி?
மண்ணோடு மண்ணாக
எவ்வளவோ விழுந்து கிடக்கும் போது
போதையை மட்டும் ஏன்
புனிதப் பொருளாகக் கண்டெடுக்கிறீர்கள்?
போதை மட்டுமா போதை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சி.ரமேஷ்

# சாந்தனின் புனைவு வெளியும் புலப்பாட்டு நெறியும்

யதார்த்தவாத மரபையும் நவீனத்துவ புனைவு மரபையும் ஒருங்கிணைத்து, தனிமனித அனுபவம், மொழி, கற்பனை சிந்தனை வழியாகக் கட்டமையும் புனைவிலக்கியம் மனிதவாழ்வின் நிகழ்தரிசனங்களாகத் துலங்குகின்றன. சமூக வாழ்வில் எழும் உறவுமுறைச் சிக்கல்கள் மற்றும் மனித வாழ்வின் அகப், புறத் தருணங்களை வெளிப்படுத்தும் புனைவுகள் துல்லிய அனுபவ வெளிக்கூடாகத் தம்மை நிலைநிறுத்துவதுடன் புலன்களின் அமைதியை உலுக்கி புதிய சாத்தியங்களை நிகழ்த்துகின்றன. ஆன்மாவை நெருக்கிவிடும் ஓர் உணர்வை, கவனச்சிதறலை உருவாக்கிவிடும் பிரதான சம்பவத்தைத் தேர்ந்த மொழியில் கச்சிதமான வடிவமைப்புக்குள் கலாபூர்வமாகக் கூறமுயலும் சாந்தனின் புனைவுகள் காலத்தைக் கடந்து சமூகத்தில் நிலைத்து நிற்கின்றன. 'ஒரு மொழியின் வாயிலாக வாழ்க்கை முறையை எடுத்துக்கூறுவதுதான் இலக்கியத்தின் அடிப்படை நோக்காக இருத்தல் வேண்டும்' என ஹட்சன் கூறுகையில் அதனைப் புனைவின்வழி படைப்பில் சாத்தியமாக்கியவர் சாந்தன். சாந்தனின் புனைவுவெளி அனுபவத்தாலானது. பொய்மைகளில்லாதது. போலிமைகளின் முகத்திரையைக் கிழித்து நிஜ உலகத்தை, வாழ்வின் நிகழ் தரிசனத்தை வெளிப்படுத்தி நிற்பது. அது மனித உணர்வுகளின் வழி கட்டமைவது. புறத்தோற்றங்களின் வாயிலாக உள்ளுணர்வின் தடத்தில் பரிணமிக்கும் இவ்வெளி மொழியின்வழி காலத்தைப் பிரதிபலிப்பது. இதனை அவரது கூற்றே தெளிவுபடுத்தி நிற்கிறது. சாந்தன் தன் சிறுகதைகள் குறித்து கூறும் போது,

"என் சொந்த அனுபவங்களாக லபித்தவை, அல்லது நான் முன் சாட்சியாக நிற்கநேர்ந்தவை - இவை பற்றி மட்டும்தான் இதுவரை என்னால் எழுதமுடிந்திருக்கிறது" என்கிறார். தூய இயல்புவாத சித்திரிப்பின் மூலம் நடுத்தர மக்களின் வாழ்க்கையைத் தன் சிறுகதைகளில் ஆழப் பதிவுசெய்தவர் சாந்தன். தான் வாழ்ந்த சூழலுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவையும், மனிதனுக்கும் சகமனிதனுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பையும் இவருடைய சிறுகதைகள் எளிமையாக வெளிப்படுத்திநின்றன. உத்வேகமில்லாமல் சம்பவங்களைச் சித்திரிக்கக் கூடிய கச்சிதமான மொழியும் பேசவேண்டிய விடயத்தை ஆழ, அகலமாக நோக்கும் பார்வையும் சாந்தனுக்கு இருந்தது. அவருடைய எழுத்துக்களில் பகட்டான சொல்லலங்காரத்தையோ வர்ணனைத் தன்மையான மேற்பூச்சையோ காணமுடியாது. வெறுமனே தகவல்களையும் மொழித் திருகல்களையும் வைத்து ஜோடனை செய்யப்பட்ட ஆக்கங்களாக இச்சிறுகதைகள் அமையாமல் தான் வாழ்ந்த காலச்சூழலை மனிதவாழ்வின் இருப்பை, அதன் பல்வேறு படிநிலைகளை, உணர்வுகளின் பல்வேறு பரிமாணங்களை, மரபுகளை உடைத்தெறிந்து மாற்றத்தை ஏற்படுத்த வல்ல மறுமலர்ச்சியை தூலமாகப் பதிவு செய்யும் இலக்கியக் கருவூலங்களாகவும் இவை அமைகின்றன. சாந்தனின் புனைவுலகம் குறித்து பேராசிரியர் க.கைலாசபதியின் கூற்று இதனை உறுதிப்படுத்தி நிற்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கதாசிரியரது நுண்காட்சித்திறம், சுற்றி வளைக்காமல் நேரடியாகப் பொருளுக்கு வரும் தன்மை, விஷயத்திலிருந்து ஓரளவு விலகி நிற்கும் நடுவுவுணர்வுநிலை, நுணுக்க விவரத்தில் கடைப்பிடிக்கும் கட்டுப்பாடான சிக்கனம், எளிமை என்பன தூலாம்பரமாயுள்ளன. இப்பண்புகளின் கூட்டுச் சேர்க்கை கதைகளின் தனிச் சிறப்பியல்புகளாக அமைந்துள்ளன.' பேராசிரியர் கூறுவது போல சாந்தனின் கதைகள் கூற வந்த விடயத்தை தெளிவாகவும் நேர்த்தியாகவும் நேரடியாகவும் கூறவல்லன.

1947இல் சுதுமலையில் பிறந்த சாந்தன் தனது ஆரம்பக் கல்வியைச் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் பயின்றார். அவரை எழுத்தாளன் ஆக்கியதில் முக்கிய பங்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியையே சாரும். இக்கல்லூரியில் பயின்ற காலத்தில் பண்பட்ட வாசிப்பு அவரை தேர்ந்த எழுத்தாளன் ஆக்கியது. அவரின் எழுத்தார்வத்தை தூண்டியவராக அக்கல்லூரியில் தமிழும் சைவமும் கற்பித்த வரதராஜன் ஆசிரியர் காணப்படுகிறார். இவருடைய ஏழாம் வகுப்பில் வகுப்பாசிரியரான வரதராஜன் மாஸ்டரால் தொடங்கப்பட்ட 'வாசிப்பு பிரியர் சங்கம்' என்ற நூலகமும் இவருடைய நடைமுறை வாழ்வில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. பின்னர் கலாநிதி ந.சண்முகரத்தினம் என்ற சமுத்திரனுடன் இவர் கொண்ட நட்பு இவரின் எழுத்துக்களைப் புடம் போடச்செய்தது. பின்னர் இந்துக்கல்லூரியில் கற்கும் காலத்தில் ஆங்கிலம் கற்பித்த கார்த்திகேசுமாஸ்டர், தேவன் ஆசிரியர், ந.சபாரத்தினம் ஆசிரியர் ஆகியோரின் தொடர்பு அவரை நாடறிந்த எழுத்தாளன் ஆக்கியது. தொழில்நுட்பவியல் கல்லூரியில் கற்கும் காலப்பகுதியில் மாவை.நித்தியானந்தன் உட்பட சில நண்பர்களுடன் இணைந்து "எழில் சஞ்சிகையை" வெளிக்கொணர்ந்து இலக்கியம் குறித்த புரிதலை சாத்தியப்படுத்தியவர்.

படிக்கும் காலத்தில் தையலம்மா, தம்பாபிள்ளை வாத்தியார், ராசவேலு வாத்தியாருக்கும் இடையில் இருந்த தொடர்பை அவருடைய முளைகள் சிறுகதையில் உயிர்ப்புடன் நினைவுகூருகிறார்.

மனிதவாழ்வில் தான் கண்ட அனுபவங்களை புலக்காட்சி வழியாக நுண்மையாகவும் திட்பமாகவும் பிசிறின்றி கூறவல்ல சாந்தனின் புனைவுலகை இன்னொரு வெண்ணிறவுத் தொகுப்பில் இடம்பெறும் 'தோல்வி', 'போக்கு', 'வாழ்க்கை' முதலானவற்றில் காணலாம். தனபாலும் கிருஷ்ணனும் ஒரே அலுவலகத்தில் நான்காண்டுகள் பணிபுரிந்தாலும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வதில்லை. ஏன்.... சிரித்துக் கொள்வது கூட இல்லை. மூர்த்தி என்பவனின் வருகைக்குப் பின் அவர்களிடத்தில் உறவு மலர்கிறது. தேநீர் குடிக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் தனபால் கிருஷ்ணனிடம் கூறுவான் 'மச்சான் உனக்குத் தெரியுமா – உன்னை மற்றப்படியான் எண்டெல்லோ எனக்கு முந்தி ஆரோ சொல்லி வைச்சான்கள்...? அப்போ ஆத்திரமற்று பக்குவப்பட்ட மனத்துடன் கிருஷ்ணன் கேட்பான் எந்தப்படியான் என்றால் என்ன? அப்பொழுது தனபால் கூறுவான் கனநாளைக்குப் பிறகு அண்டைக்கு இவன் மூர்த்திதான் சொன்னான் 'எட பேயா அவன் சுண்டியெடுத்த வெள்ளாளன்னெல்லோ... எண்டு' எனக்கூறி மனிதனின் சுயதரிசனத்தை அதன் இருப்பை அது பிரதிபலிக்கும் இயல்பைத் துல்லியமாக வெளிப்படுத்தும் சாந்தன்; கதையின் முடிப்புக்கூடாக மனிதமனத்தின் மெய்மைநிலையைத் தெளிவாகப் புலப்படுத்திச் செல்வார். நம்மை அறியாமல் நமக்குள் புரையேறிப் போய் வேரூன்றி நிற்கும் சாதியை, அது மனித மனங்களில் வேரூன்றி நிற்கும் தன்மையை அதற்குரிய இயல்போடும் பண்பாட்டோடும் எளிமையாகவும் அதேசமயம் சொற்சிக்கனத்துடனும் யதார்த்தமாக 'தோல்வி' என்ற இச்சிறுகதை பதிவு செய்கிறது.

மனித மனத்தின் பண்புசார் நடத்தைகளை அவரவர் கோணத்தில் பதிவு செய்யும் கதையே 'போக்கு'. கூட்டம் முடித்து ஒருவர் சைக்கிளை உழக்கிக் கொண்டு வீட்டுக்குச் செல்கிறார். அவர் செல்லும் வழியில் மினிபஸ் ஒன்று கண்ணைக் கூசச் செய்யும் பேரொளியுடன் அவரைக் கடந்து செல்கிறது. தெருவிளக்குகள் இல்லாத ஓரிடத்தில் இவருக்கு முன்னால் அவரின் வழியை மறித்தபடி இரு சைக்கிள்கள் சென்று கொண்டிருந்தன. அவர் பெல் அடித்தும் அவர்கள் விலகுவதாக இல்லை. அண்ணை பெல் அடிச்சாலும் விலத்திறீங்களில்லையே என அவர் கேட்கிறார். இரண்டு வினாடி மௌனத்துக்குப் பின் இரண்டு பேரும் திரும்பிப் பார்த்து விட்டு அதில் ஒருவன் கேட்பான், பெல் அடிச்சா விலத்த வேணுமெண்டிருக்கா என்பதோடு கதை முடியும். கதை விவரிப்பில் அவர்காட்டும் சொற்சிக்கனம் கதையை அலாதியாய் முன்னிறுத்துகிறது. கதை முடிந்த பின் அது எழுப்பும் மனச் சலனங்கள் பிரமாண்டமாய் பின்தொடர்ந்து கொண்டே இருக்கும். சாந்தனின் முதற்கதையான 'பார்வை' சிறுகதை அவருடைய பத்தொன்பதாவது வயதில் 1966 புரட்டாதி கலைச்செல்வி இதழில் வெளிவந்தது. இதைத்தொடர்ந்து இலங்கையில் இவருடைய சிறுகதைகள் விவேகி, கதம்பம், மல்லிகை, உள்ளம், கதம்பம், சமர், மூன்றாவது மனிதன், வெளிச்சம், இளம்பிறை, காலம், மகுடம் இதழ்களில் வெளிவந்தது. ஈழத்து சஞ்சிகைகளில் மாத்திரமன்றி நமது ஈழநாடு, முரசொலி, தினகரன், வீரகேசரி, ஈழமுரசு முதலான பத்திரிகைகளிலும் தொடர்ந்து எழுதினார். தமிழ் நாட்டில் கணையாழி, யுகமாயினி, சாவி, புதிய பார்வை, பாலம் முதலான சஞ்சிகைகளிலும் எழுதினார்.

1966களுக்கும் 1968களுக்கும் இடையில் இவர் எழுதிய ஆறு சிறுகதைகளைத் தாங்கி ஐம்பத்து மூன்று பக்கங்களுக்குள் வெளிவந்த தொகுதியே 'பார்வை' ஆகும். மாவிட்டபுரம், தெல்லிப்பழை யாழ் இலக்கிய நண்பர் கழக வெளியீடாக வெளிவந்த இவருடைய முதற்தொகுப்பான 'பார்வை' சிறுகதைத் தொகுப்பு தி.ச.வரதராசன் முகவுரையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் மொறட்டுவ உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் பயின்று கொண்டிருந்த காலத்தில் இத்தொகுப்பு வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து இவருடைய குறுங்கதைகள் கடுகு' என்ற பெயரில் இருபத்தைந்து சிறுகதைகளைத் தாங்கி எஸ். பொவின் முன்னுரையுடன் வெளிவந்தது. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுமுனைப்புக்களை இத்தொகுதி காட்டி நின்றது. இதனை "மிகநுணுக்கமாக இசைக்கப்பட்டுள்ள கனதியான சமுதாயப்பார்வையின் கோலங்கள்" என எஸ்.பொ. குறிப்பிடுவார். 1971 -1974 காலப்பகுதியில் எழுதப்பட்ட சிறுகதைகளை ஒன்று திரட்டி 'ஒரே ஒரு ஊரிலே' என்ற தொகுப்பை சாந்தன் கொண்டு வந்தார். இத்தொகுதி செம்பியன் செல்வனின் முன்னுரையைத் தாங்கி வெளிவந்தது. வாழ்வுப்பாட்டுக்காக நகரத்தில் மாட்டிக் கொண்டு அழுந்துகின்ற சராசரி மனிதன் தன்னைச் சுற்றியுள்ள நகர சமூகத்தைத் தன்கண் கொண்டு பார்ப்பதையும் சிந்திப்பதையும் இக்கதைகள் சுட்டி நிற்பதால் இத்தொகுதியில் இடம்பெறும் பெரும்பாலான சிறுகதைகள் பஸ்களையும் ரயில்களையும் நிகழ் களனாகக் கொண்டு இயங்குகின்றன. 1982ஆம் ஆண்டு இவருடைய முளைகள் தொகுப்பு வெளிவந்தது. பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் முகவுரையைத் தாங்கி வெளிவந்த இத்தொகுதி முளைகள் முதல் மனிதர்களும் மனிதர்களும் ஈறாக பன்னிரு சிறுகதைகளைக் கொண்டது. நேர்மையும் சிக்கனமும் நுண்காட்சித் திறனும் கொண்ட சாந்தனின் பார்வை இத்தொகுப்பில் சற்று விரிந்துள்ளது. சிறுசிறுகாட்சிகளின் விவரிப்பு முறையாலும் சொல்லாட்சித்திறனாலும் இத்தொகுப்பு சிறந்து விளங்குகிறது.

இவருடைய கிருஷ்ணன் தூது தொகுதி 1982இல் வெளிவந்தது. நீக்கல்கள் முதல் கிருஷ்ணன் தூது ஈறாக பதினொரு சிறுகதைகளை உள்ளடக்கியது. வழமையான இலக்கியப் புனைவுகளில் இருந்து இத்தொகுப்பு சற்று வேறுபாடானது. தமிழ்தேசிய இனம் தழுவிய புதிய அனுபவங்களை இத்தொகுதி பேசிநிற்கிறது. பல்லின மக்கள் வாழும் கொழும்புச் சூழலில் அகப்பட்ட மனிதனின் பல்வேறு அனுபவங்களை அர்த்தபுஷ்டியுடன் இச்சிறுகதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

காலங்கள் (1994) சிறுகதைத்தொகுப்பு இருகோடுகள் முதல் காலங்கள் ஈறாக பதினைந்து சிறுகதைகளைக் கொண்டது. இராணுவச்சூழலுக்குள் முகம் கொண்ட மனிதர்களின் துன்பியல் வாழ்வை இச்சிறுகதைகள் பேசுகின்றன.

சாந்தனின் 'யாழ்இனிது' தொகுதி 'உறவுகள் ஆயிரம்' குறுநாவலைத் தவிர்த்து நோக்குமிடத்து இத்தொகுப்பில் வெளிவந்த சிறுகதைகள் ஆழமானவை. அரசியல், இனமுரண்பாடு, பொருளாதார எற்றத்தாழ்வு, நல்லுறவு, ஐக்கியம் என விரியும் இச்சிறுகதைகள் பேசுபொருளாலும் வெளிப்பாட்டுத்திறனாலும் சிறந்து விளங்குகின்றன.



இவருடைய 'ஒரு பிடி மண்' 1999இல் நர்மதா பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளைத் தாங்கி வெளிவந்த இத்தொகுப்பில் ஒரு பிடி மண் முதல் நிழல் ஈறாக இருபத்தொன்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதைகள் காணப்படுகின்றன. தமிழகத்தில் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை மற்றும் மக்களின் அவல வாழ்வை இத்தொகுதி ஆழமாகவும் அழுத்தமாகவும் சொல்கிறது.

இவரது இன்னொரு வெண்ணிறவு தொகுப்பு அசோகமித்திரனின் முன்னுரையைத் தாங்கி வெளிவந்தது. இத்தொகுப்பில் இடைவெளி தொடக்கம் வாழ்க்கை ஈறாக பதினான்கு சிறுகதைகள் உள்ளன. கச்சிதமான உருவமைதிக்குள் கட்டுறும் இச்சிறுகதைகள் ஒப்பசெப்பமானவை. நுண்ணுணர்வோடு வடிவமைக்கப்பட்டவை. மானிடநேயத்தையும் மக்களின் நிகழ் வாழ்வையும் பேசுபவை.

இவருடைய எழுதப்பட்ட அத்தியாயங்கள் மல்லிகைப்பந்தல் வெளியீடாக 2001ஆம் ஆண்டு வெளிவந்தது. கலாநிதி நா.சுப்பிரமணியன் முன்னுரையுடன் வெளிவந்த இத்தொகுப்பு அவருடைய சிறுகதைகள், குறுநாவல்கள் உள்ளடங்களாக வெளிவந்தது. இத்தொகுப்பில் இடம்பெறும் கதைகள் மனித வாழ்வின் அனுபவங்களைப் பிழிசாறாகத் தருபவை. இனமுரண்பாட்டின் முக்கிய தருணங்களைப் பிரக்ஞைபூர்வமாக வெளிப்படுத்தி நிற்கும் இத்தொகுதி ஈழத்தில் அமைதிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளையும் நிர்பந்திக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைச் சூழலையும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

இவருடைய சிட்டுக்குருவி தொகுப்பில் (2014) ஒரு குறுநாவல் உட்பட பதினாறு சிறுகதைகள் காணப்படுகிறன. ஷங்கரநாரயணன் குறிப்பிடுவது போல பிரமைகளற்ற பிரமைசாயங்களற்ற சாந்தனின் எழுத்துக்கள் தனித்துத் துலங்கும்தன்மை கொண்டவை. நேர்மையான வாழ்வில் தனிமனிதன் ஊடாடிய கணங்களைப் பேசும் இச்சிறுகதைகள் நிகழ்வாழ்வின் பாதிப்பான தருணங்களையும் கணநேரமயக்கங்களையும் அன்றாட வாழ்வில் சமானிய மனிதன் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் பேசுகின்றன.

இவருடைய முதற் கதையான ‘பார்வை’ பயனற்ற மாணவருக்கு கற்பித்தலால் அவமானத்தை எதிர்கொண்ட ஆசிரியரின் உளநிலையைப் பதிவு செய்கிறது. பன்னிரண்டு வருடம் திருமணம் கூட முடிக்காமல் மாணவருக்காகவே வாழும் பொன்மணி ஆசிரியர் பஸ்ஸில் வரும்போது அவரது பழைய மாணவர்களான செல்வம், தனபாலன் ஆகிய இருவரின் அருவருப்பான பார்வை தன்னில் பட்டபோது கூசிக் குறுகிப் போகிறார். வாலிபக் கோளாரால் அவர்கள் கதைக்கும் கதைகளால் ஆசிரியர் தொழிலே வேண்டாம் என நினைத்து அதனை விட்டுவிடத் துணிகிறார். இந்நிலையில் தாயாருடன் கோயிலுக்குப் போகும் ஆசிரியர் கடும் மழை நேரத்தில் நீண்ட காலத்துக்கு முன் தான் கற்பித்த மாணவர்களான மகேசுவரியையும் அவளுடைய அண்ணன் தங்கராசாவையும் காண்கிறாள். அவர்களின் பண்பான நடத்தையும் பாசமான உபசரிப்பும் அவளின் மனநிலையை மாற்றுகிறது. இதனால் தான் எழுதிவைத்த ராஜிநாமாக் கடிதத்தைக் கொடுக்கப்போவதில்லை என்ற மனத்திடத்துடன் வீட்டுக்குச் செல்வதுடன் கதை நிறைவுக்கு வருகிறது. ஒரு ஆசிரியரால் தங்கராசுவைப் போல் நல்ல பண்புடைய மாணவர்கள் பலரை உருவாக்க முடியும் என்பதை இச்சிறுகதை ஆழமாக வலிறுத்தி நிற்கிறது. முதற்கதை என்று சொல்ல முடியாத அளவுக்கு கனதியான கச்சிதமான சிறுகதையாக இச்சிறுகதை விளங்குகிறது. நாம் அன்றாட வாழ்வில் தரிசிக்கும் மனிதர்களை அவருடைய இயல்பான நடத்தைகளை சாந்தனின் கதைகள் பகட்டின்றி தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. சிக்கலற்று எளிமையாக நகரும் இவர் கதைகளில் மனித உணர்வுகளே விஞ்சி நிற்கின்றன. பெரும்பாலும் சொந்த வாழ்வில் தாம் கண்ட சராசரி மனிதர்களை அவர்களுடைய வாழ்க்கைப் பின்னணியோடு சித்திரித்து தம் சிறுகதையில் பாத்திரங்களாக்கி நடமாடவிடுகிறார். கரு, பாத்திரப் படைப்பு, எழுதும் முறை, உளவியல் சித்திரிப்பு, நடை என்று அனைத்து நிலையிலும் சாந்தனின் சிறுகதைகள் சிறந்துள்ளதை நாம் உணர முடிகிறது.

ஹோட்டலில் பணியாற்றும் சிப்பந்திகளை அடிப்படையாகக் கொண்டு தமிழில் மு.தலையசிங்கத்தின் ‘அழகி’, அ.யேசுராசாவின் ‘வரவேற்பு’ எனப் பல கதைகள் வெளிவந்துள்ள நிலையில் இத்தொகுப்பில் இடம்பெறும் ‘மனிதன்’ சிறுகதை பொறளையில் உணவகமொன்றில் சிப்பந்தியாக பணியாற்றும் கந்தையாவின் கதையைச் சொல்கிறது. கந்தையா தம் முதலாளிக்கு விசுவாசமாகவும் அதேசமயம் வாடிக்கையாளர்களோடு அன்பாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளைப் பூர்த்தி செய்யும் இனிய மனிதராக இருந்தாலும் அவர் ஒரு குடும்பத்தலைவர் என்பதையும் தம் குடும்பத்தின் மீது கொண்ட அக்கறையால் மனைவிமீது அதிகாரம் செலுத்தும் ஒருவராக இருப்பதையும் இச்சிறுகதை கூறிநிற்கிறது.

'ஓ இந்த ஆண்பிள்ளைகள் என்ன தான் செய்கிறார்கள்' சிறுகதை தங்கைக்கு எழுதப்பட்ட காதல் கடிதமொன்றினால் வீட்டில் குடும்ப அங்கத்தவரிடையே எழும் உளச்சிக்கல்களை உணர்த்தி நிற்கிறது. சிவகுமாரன் என்பவனால் ஈஸ்வரனுடைய தங்கை ராஜிக்கு காதல் கடிதம் ஒன்று எழுதப்பட அதனை ராஜேஸ் தன் கணவன் ஈஸ்வரனுக்கு கூறுகிறாள். அவன் சட்டென்று உணர்ச்சிவசப்பட்டு கோபப்படக் கூடாது என்பதற்காக அவன் தனக்கு எழுதிய காதற் கடிதம் குறித்தும் உரைக்கிறாள். இதனால் ஈஸ்வரன் மனத்தில் எழும் எண்ணங்களும் ஈஸ்வரனுக்கு உண்மையைக் கூறியதால் ராஜியின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றங்களும் கணவனின் மனவுணர்களைக் கண்டு குமையும் ராஜேஸின் இயல்புணர்ச்சிகளும் இச்சிறுகதையில் உணர்வின் தளத்தில் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

பார்வைத் தொகுப்பில் இடம்பெறும் 'அப்பா பாவம்' என்ற சிறுகதையைத் தவிர அனைத்துக் கதைகளும் மனித வாழ்வின் பல்வேறு கோணங்களை வெவ்வேறு சூழ்நிலையில் பதிவு செய்கின்றன. மனித வாழ்வில் நடக்கும் சிறுமைகளை, நடிப்புக்களை, கசப்புக்களை, கயமைகளை இச்சிறுகதைகள் எவ்வித பாசாங்குகளுமற்று எடுத்துரைத்தன.

ஈழத்தில் 1970களில் சிறுகதைகளைத் தாண்டிய இலக்கிய வடிவமாக மினிக்கதைகள் தோற்றம் பெற்றன. மலையாளத்தில் சோதனை முயற்சியாக பி.கே. பாறக்கடவு என்பவரால் இவ்வடிவம் வெற்றிகரமாகக் கையாளப்பட்டது. கவிதைக்கும் சிறுகதைக்கும் இடையிலான மாற்றுக்குறையாத வடிவமாக இதனை இலக்கிய ஆய்வாளர்கள் கருதுவர். ஆயினும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே தமிழில் ஈசாப் நீதிக்கதைகள், பஞ்ச தந்திரக்கதைகள் குட்டிக்கதைகளாகவே வெளிவந்தன. இதைப்போல் ஜப்பானிலும் சீனாவிலும் ஒருவன் தன்னைத் தான் அறிந்து கொள்வதற்கும் தவறுகளில் இருந்து தன்னைத் திருந்திக் கொள்வதற்கும் வடிவத்தில் சிறியதாக அமைந்த ஜென்கதைகள் பெரிதும் பயன்பட்டன. உருவத்தில் சிறியதாக விளங்கும் இவை ஆழ்ந்த பொருட்பொதிவு கொண்டவை. ஈழகேசரியில் இவ்வாறான பரிசோதனைக் கதைகளை 1938களில் வ.இராசரத்தினம் (குள்ளநரி, செட்டியாரின் தந்திரம், காட்டில் சொக்கப்பனை, கைமேற்பலன்), ச.மு.(பன்றியும் குட்டிகளும், கிறிஸ்மஸ்மரம்), அ.ந.கந்தசாமி (ஏழையின் விமோசனம்), அ.செ.மு(காணாமற் போனவர்கள் கைப்பட்டனர்) முதலாக பலர் எழுதினார்கள். மேற்குறிப்பிட்ட கதைகளில் இருந்து வேறுபட்டு புதிய கோணத்தில் புதியபார்வையோடு 1975இல் சாந்தனின் 'கடுகு' குறுங்கதைத் தொகுதி வெளிவந்தது. இவருடைய 'கடுகு' குறுங்கதைத் தொகுதி 'பெயர்' தொடக்கம் 'பொடியன்' ஈறாக இருபத்தைந்து சிறுகதைகளை உள்ளடக்கியது. இக்கடுகுக் கதைகளுக்கான முன்னுரையை எஸ். பொன்னுத்துரை எழுதியுள்ளார். 'மினி இலக்கியத்தின் பலவீனங்கள்' என்ற தலைப்பில் அலை முதலாவது இதழில் முருகையன் ஒரு கட்டுரை ஒன்றை எழுதி இருந்தார். இக்கட்டுரையில் அளவில் சிறியதான படைப்புக்கள் பண்புகளை மட்டுப்படுத்தும் தன்மை கொண்டவை என்பதை அக்காலப்பகுதியில் வெளிவந்த கவிதைகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்கிறார். ஆனால் இந்நூல் அக்கட்டுரை வெளிவருவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் வெளிவந்தது. இக்கடுகுக் கதைகள் குறித்து எஸ்.பொன்னுத்துரை கூறும் போது இத்தொகுப்பில் எழுதப்பட்ட இருபத்தைந்து கதைகளும் எளிய மொழியில் தந்தி நடையில் எழுதப்பட்ட கதைகள். இச்சிறுகதைகளில் பூ வேலைப்பாடில்லை. பூச்சு இல்லை. சலிப்பின்றி பக்கம் பக்கமாகப் புரட்டலாம் என்பர்.

"கணபதிப்பிள்ளை ஒரு கடை போட முடிவுசெய்தார். வட்டிக்கடை. நல்லதாக ஒரு பெயர் வைக்கவேண்டுமென்று யோசித்தார். கனநாட்களாகியும் ஒன்றும் அகப்படவில்லை. இம்மாதிரி சங்கதிகளில் கெட்டிக்காரரான தன்னுடைய நண்பர் சுப்பிரமணியத்தைக் கேட்டார். மணியத்தார் கொஞ்சம் யோசித்து விட்டு ..... 'மக்கள் வட்டிக்கடை' என்று வையுங்கோ என்றார்.

ஆழப் பொருள் பொதிந்த இச்சிறுகதை மக்களை ஏய்த்துப் பிழைப்போரை இங்கிதமாக கேலி செய்கிறது. 'முதலாளிகள் பலவிதம்' என்ற சிறுகதை முதல் போட்டு கடை போட்டவன் மட்டும் முதலாளி அன்று எம்பியிட்ட காசு கொடுத்து வேலை எடுத்தவனும் முதலாளி தான் என்பதை உணர்த்தி நிற்கிறது.

புதிதாக உத்தியோகமாகி கொழும்புக்குச் சென்ற செல்வம் தனது சகபாடி சுந்தரம் கடை திறந்திருப்பதைக் கண்டு "எப்படி முதலாளி, எப்படி பிஸினெஸ் எல்லாம்?" என்று பாதி நக்கலாக கேட்டான். "மூவாயிரம் முதல் போட்டுக் கடைபோட்ட என்னை முதலாளி எண்டா எங்கடை 'எம். பி'யிற்ர ஐயாயிரம் ரூபா முதலைப் பொத்தி வேலை எடுத்த நீ ஆர்",

என சுந்தரம் செல்வத்துக்கு கொடுக்கும் பதிலில் ஆயிரம் அர்த்தங்கள் ஒளிந்துள்ளன. இன்றைய உலகின் யதார்த்த நிலையை அங்கதமாக இச்சிறுகதை பதிவு செய்கிறது. இதே போல 'வசதி' என்ற கதை தமிழ் ஆர்வலரான கந்தையரைப் பார்க்க ஒருவர் செல்கிறார். அவருடைய கந்தோரில் யாவருடனும் அவர் ஆங்கிலத்தில் உரையாடுகிறார். ஏன் என்று கேட்டதற்கு இந்த செக்சனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தான் கெட். மற்றவை எல்லாம் எனக்கு கீழே வேலை செய்யிற ஆக்கள். தமிழில்லை பேசுறதெண்டா நீர், நீங்கள் எண்டெல்லாம் பேசவேணும். இங்கிலீஷ் வலு வசதி. எல்லாருக்கும் யூ தானே. ஒருவருக்கு வசதியும் வாய்ப்பும் வரும்போது மனித இயல்பும் அவருடைய நடை, உடை பாவனைகளும் மாறும் என்பதை இச்சிறுகதை கூறிநிற்கிறது. கதைகளுக்கு சாந்தன் இட்ட தலைப்புக்களே கதையை விளங்கிக் கொள்ளவும் உள்ளடக்கத்தை அறிந்து கொள்ளவும் துணை செய்கின்றன.

'சலுகை' என்ற கடுகுக்கதை அரசகரும மொழிச் சட்டத்தை கடுமையாக விமர்சிக்கிறது. இங்கே துப்பாதே என்ற அறிவித்தல் பலகை அரச கரும மொழியில் மட்டுமே எழுதப்பட்டு தொங்க அதனைக் கண்ட ஒருவர் இந்த அறிவிப்பில் கூட பாரபட்சமா எனக் கேட்கிறார். அதற்கு மற்றொருவர் நீர் ஏன் கவலைப்படுகிறீர்? மற்றவங்களெல்லோ கவலைப்படனும்? தமிழர்கள் இங்கே துப்பலாம் என்றார்.

இத்தொகுப்பில் இடம்பெறும் முழம் என்ற சிறுகதை தமிழர்களின் வாழ்வில் புரையேறிப் போன இனத்துவேசத்தைக் கக்கி நிற்கிறது.

'பேப்பர் படித்துக் கொண்டிருந்த பொன்னையா திடுக்கிட்டாற் போல திரும்பி பக்கத்திலிருந்த நடராசாவைப் பார்த்துச் சொன்னார்.

பஸ்ஸோட பஸ் மோதி பதினெட்டு பேருக்கு மரண காயமாம். நாலு பேர் உடனே செத்துப் போனாங்களாம். பேரெல்லாம் பேப்பரில்ல போட்டிருக்கு. நடராசா நிமிர்ந்து பார்த்துக் கேட்டார்.

"அதில்ல தமிழர் எத்தனை பேர்? சிங்களவர் எத்தனை பேர்?"மனிதாபிமானமற்று இனத்துவேசத்துடன் புலுங்கித் தவிக்கும் தமிழ் அரசியல் நிலைப்பாட்டை இச்சிறுகதை ஆழ வலியுறுத்தி நிற்கிறது.

கடுகுக்கதைகளில் மிக முக்கிய கதைகளில் ஒன்று 'வர்மரின் வழி'. நவதர்மவர்மர் பல்லவர் காலத்தில் வாழ்ந்த சமணத்தலைவர். தமிழ்ச் சமூகம் முழுவதற்கும் வழிகாட்ட முனைந்த சிந்தனையாளர். பேதம் பாராட்டாது சைவக் கோயில் கிரியைகளை விமர்சித்து வந்தவர். வர்மரைச் சந்தித்த காஞ்சிப் பிராமணர் சிவானுப்பட்டர் வர்மரே சைவத்தைப் பற்றிய உங்களின் விமர்சனங்களை வரவேற்கின்றோம். ஆனால் அடிக்கடி எங்களிடம் இல்லாத குறைகளை இருப்பதாகச் சொல்லி சாடுவதுதான் புரியவில்லை என்றார். பட்டரே என் அத்தியந்த நண்பரான உம்மிடம் உண்மையைச் சொல்வதில் தப்பில்லை. உங்கள் மதத்தில் நான் சாட்டுகின்ற குற்றங்கள் எல்லாம் எங்கள் ஜனமதத்தில் தான் உள்ளன. ஆனால் அவற்றை நான் சொல்ல புறப்பட்டால் ஜன்முனிகளும் மக்களும் என்னை என்ன பாடுபடுத்துவார்கள் என்பதை நீர் அறியீரா? அதனால் வேறு வழியின்றி உங்கள் தலையில் என்றார். ஆழ்பொருள் கொண்ட இக்கருத்துக்களில் எத்தனை உண்மை இருக்கிறது. சாந்தனின் இச்சிறுகதைகள் அவருடைய முதிர்ந்த அறிவைப் புலப்படுத்தி நிற்கிறது. சாந்தன் தான் வாழும் சமூகத்தின் மீது கொண்ட அக்கறையை இச்சிறுகதைகள் பிரதிபலித்துக் காட்டுகின்றன. மனித அவலங்களையும் அசிங்கங்களையும் வெளிப்படுத்தும் இக்குறுங்கதைகள் அளவில் சிறியதென்றாலும் பொருளாழங்கொண்டவை.

வாழ்க்கையின் இயல்பையும் உணர்ச்சி சித்திரிப்பையும் அதன் அர்த்தத்தையும் வெளிப்படுத்தும் உணர்திறன்மிக்க கதைகளை சாந்தன் எழுதியுள்ளார். இக்கதைகளில் புறக்காட்சி சித்திரிப்புக்கள் தத்துரூபமாக அமையும். இவருடைய சிறுகதைகள் கிராமத்தை இயற்கைச்சித்திரிப்போடு காட்டுவதோடு அல்லாமல் கிராம மக்களின் வாழ்க்கை நெறிகளைக் கிராமத்தின் சமூக நடைமுறைகளை அவர்களது பிரச்சினைகளை கிராமத்திற்கேயுரிய இயல்பு குறையாது படம் பிடித்தும் காட்டுகின்றன.

இவருடைய 'முளைகள்' சிறுகதை அம்மன்கோவில், அதில் உறைந்திருக்கும் ஐதீகக்கதைகள், பாழ்கிணறு, நெல்லிமரத்தடி முனி, பாடசாலை என கிராமத்தை அதன் இயற்கை அழகு குன்றாது அதன் பண்பாட்டு வழக்கோடு காட்சிப்படுத்துகிறது. விக்கினராசா, விக்கினேஸ்வரன், கனகநாதன் என பள்ளிக்கூட மாணவரின் உளநிலையைப் பதிவு செய்யும் இச்சிறுகதை இராசலிங்கம் வாத்தியார் மாணவர்களைக் கையாளும் வழிமுறைகளையும் எடுத்துரைக்கிறது. பாடசாலையில் பன்னம் இழைத்தலில் மாணவர் படும் சிரமத்தையும் தையலம்மா ஆசிரியரோடு இணைந்து பெண்கள் தையலில் காட்டும் ஆர்வத்தையும் மாணவருக்குரிய இயல்போடு விளக்கும் இச்சிறுகதை இராசலிங்கம் வாத்தியார், சங்கீதவாத்தியார், தலைமைவாத்தியார் முதலானவர்களின் மனோநிலைகளையும் இயல்பான நடத்தைமுறைகளையும் எடுத்துரைக்கிறது. கொய்யாத்தடியால் பாடம் நடாத்தும் இராசலிங்கம் வாத்தியாருக்கு சூன்யம் வைக்கவேண்டும் என நினைத்து அவருடைய காலடி மண்ணைச் சேகரிக்க விளையும் மாணவர்கள் யாரோ ஒருவன் றோட்டில் காரால அடிச்சு அவரின் கையை முறித்துப் போட்டான் எனத் தலைமை ஆசிரியர் கூறியவுடன் அவருக்காக அழுவதை மாணவரின் உளவியல்த்தன்மையுடன் எடுத்துக் காட்டுகிறது.

மக்களின் வாழ்வியற் புலத்தை யாழ்ப்பாண மண்ணோடு இணைத்துக் காட்டும் சாந்தனின் சிறுகதைகள் குடும்ப கட்டுமானங்களையும் அதன் மாற்றங்களையும் வாழும் புறச்சூழல் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் எடுத்துரைக்கின்றன. யாழ்ப்பாணத்தின் புவியியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பை அதன் வனப்பை அதன் இயல்புகளோடு எடுத்துக் காட்டும் சாந்தனின் படைப்புக்கள் சாகா வரம் பெற்றவை. சாந்தனின் குமிழிகள் சிறுகதை இதற்கு தக்கசான்றாம்.

வாரத்தில் மூன்று முறை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் ஒருவன் கடுமையான மழைநாளில் எதிர் நோக்கும் வாழ்வின் நெருக்கடிகளை கூறிநிற்கும் சிறுகதையே சாந்தனின் 'குமிழிகள்'. யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்க்கைமுறையை காலநிலை மற்றும் புவியியல் சார்ந்த பின்னணியோடு காட்சிப்படுத்தும் இச்சிறுகதை அவரின் ஊர்சார்ந்த அனுபவமாக விரிகிறது. ஆயிரங்காய்ச்சி மாவடியில் நிற்கின்ற வெள்ளம் வீடுகளுக்குள் வரும்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கூறும் இச்சிறுகதை எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன்னால் பேய் வெள்ளத்தால் நந்தாவில் அம்மன் தாண்ட கதையையும் எடுத்துக் கூறுகிறது. ஒவ்வொரு காலமும் வரும் மழைநாட்களில் கதைசொல்லி அனுபவித்த வாழ்க்கை அனுபவங்கள் கதையெங்கும் நிறைந்து காணப்படுகின்றன. தேங்கிக் கிடந்த வெள்ளத்தை கான் வெட்டி கொத்தாவலை நதியுடன் சேர்த்தகதை சேதியாக வந்து போகிறது. அவசியம் படிக்க வேண்டிய கதைகளில் முக்கியமான கதையாக இக்கதை காணப்படுகிறது.

'மயிலுச்சாமி கோயில்' சிறுகதை குறிப்பிட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணத் தமிழர்களிடத்தில் காணப்பட்ட நம்பிக்கைகள் வழக்காறுகளையும் இயல்பு வாழ்க்கைக்கூடாக எடுத்துரைக்கிறது. குறிப்பிட்ட காலகட்டத்தில் நிலத்துடன் பின்னிப்பிணையப்பட்ட கிராமிய நம்பிக்கைகளை சமுதாய வாழ்வுடன் இணைத்துப் பேசும் இச்சிறுகதையின் உள்ளடக்கம் யதார்த்த நெறியோடு கலந்து சிறப்பிடம் பெறுகிறது.

சாந்தனின் மிகச் சிறந்த சிறுகதைகளில் மற்றொன்று சிட்டுக்குருவி. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் சிட்டுக்குருவிகளின் அழிவைப் பேசும் இச்சிறுகதை ரஜனியின் 2.0 திரைப்படத்துக்கு முன்னோடி. அ.செ.முருகானந்தன் புதுசு இதழில் பசுந்துளிர்கள் என்ற சிறுகதையை எழுதி இருந்தார். கிராமப்புறங்களில் மின்சாரம் வந்தபோது பறவைகள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகின்றன என்பதை அதில் அதன் இயல்பு நிலைமாறாது சித்திரித்து இருந்தார். அ.செ.மு.வின் தொடர்ச்சியை சாந்தனின் சிட்டுக்குருவியில் காணலாம். இச்சிறுகதையில் மனிதர்களது வாழ்வும் தம் வாழ்வாதாரத்துக்கு மனிதர்களை நம்பியிருக்கும் பறவைகள் தன்மையும் சிறுகதையில் இயல்புநிலை குன்றாது சித்திரிக்கப்படுகிறது. சிறுகதையின் உருவப் பிரக்ஞைக்குள் அகப்படா இச்சிறுகதை கருத்துச்செறிவாலும் காத்திரமான பாத்திர வார்ப்பாலும் கச்சிதமான கதைசொல்லும் முறைமையாலும் சிறந்து



விளங்குகிறது.

காலவோட்டத்துக்கமைய சமூக, பொருளாதார மாற்றங்களை அதன் முரண்பாடுகளை தன்சிறுகதையில் வெளிப்படுத்தியவர்களுள் ஒருவராகச் சாந்தன் காணப்படுகிறார். எழுத்தாளனின் சமூக முன்னேற்றம் தொடர்பான தரிசனத்தை முதலாளி தொழிலாளியைச் சுரண்டும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சாந்தனின் கதைகள் வெளிப்படுத்தி நின்றன. 'ஒரு திங்கள் மாலை', 'மாடுகளும் வண்டிகளும்', 'இராக்குருவி' முதலிய சிறுகதைகள் இத்தடத்தில் பயணிப்பவை. ஒரு விபச்சாரி தன் வாழ்க்கைப் போராட்டத்துக்காகப் படும் அவலத்தை மனத்தை தொடும் அளவுக்கு சிறுகதையில் காட்டியுள்ளார். பொலிசாரின் அச்சுறுத்தலுக்குப் பயந்து அவளோடு துணைக்குப் போகும் எட்டு வயதுப் பையன் நித்திரையின்றி அரைத் தூக்கத்தோடு அலையும் வாழ்வு கண்ணீர் பெருந்துயராய்க் கதையை நிறைத்துச் செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒரு திங்கள் மாலை' என்ற சிறுகதை நாளைய உணவுக்காக ஒரு திங்கட்கிழமை மாலை பாணுக்காக கியூவில் நிற்கும் கணங்களைப் பேசுகிறது. தனக்கு முன் நிற்பவனோடு பாண் முடிந்து போகும்போது ஒருவன் படும் வலி கதையில் உணர்வின் வெளிப்பாடாய் மானுட அவலமாய் காட்டப்படுகிறது. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் இச்சிறுகதை குறித்து உரைக்கும்போது சமூக ஏற்றத் தாழ்வுகள் குறித்த ஒரு வலிந்த சித்திரிப்பாக இது காணப்படுகிறது என்பார்.

வாடகை வண்டி ஓட்டிப் பிழைக்கும் வீராசாமியின் கதையைரசனை சார்ந்த அழகியலோடு வெளிப்படுத்தும் சிறுகதையாக 'மாடுகளும் வண்டிகளும்' சிறுகதை காணப்படுகிறது. இச்சிறுகதையில் நுஃமான் அவர்கள் கூறுவது போல் தேவையற்ற பொருத்தமற்ற உரையாடல்கள் சிலவற்றை தவிர்த்து இருந்தால் கதை தரமான சிறுகதைகளில் ஒன்றாக அமைந்திருக்கும்.
இல்லாதவன் இருக்கிறவனைப் பார்த்து ஆறுதல் அடைவதை சத்தியசீலன், செல்வலிங்கம் ஆகிய பாத்திரங்களின் ஊடாக 'ஆறுதல்' சிறுகதை எடுத்துரைக்கிறது. நன்றாகப் படித்து அரசவேலையில் சேர்ந்து பஸ்ஸில் வேலைக்குப் போகும் சத்தியசீலன் படிக்காது வியாபாரம் செய்து முன்னுக்கு வந்த செல்வலிங்கம் காரில் போவதைக் கண்டு தன் நிலையை எண்ணி வெட்கப்பட்டுக் கொண்டாலும் பின் சுதாரித்துக் கொண்டு என்னதான் இருந்தாலும் அரச உத்தியோகம் போல வருமா? எனக் கேட்டு தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்கிறான்.

சாந்தனின் கதைகள் மனிதநேயத்தையும் மானுடர்பால் கொண்ட நேசத்தையும் வெளிப்படுத்துபவை. உயர்ந்த பண்பாட்டு உணர்வை வெளிப்படுத்தும் சாந்தனின் சிறுகதைகள் மற்றவர்களின் மனத்தைத் துன்புறுத்துகின்ற, துன்புறுத்தியதற்காக வருந்துகின்ற பச்சாதபவுணர்வை சாந்தனின் கதைகளில் காணலாம். 'ஒரு இருபத்தாறாம் தேதி, காலை' என்ற சிறுகதை கந்தோரில் உள்ள கன்ரீனில் வார்த்தையால் காயப்படுத்திய பெண்ணுக்காக இரங்குகின்ற ஒருவனின் மனவுள்ளத்தை எடுத்துக் காட்டுகின்றது. மனிதநேயத்தின் வெளிப்பாடுகளை 'பாத்திரம்', 'ஒரு சின்ன வட்டம்', 'பூக்கோளம்', 'வடிகால்' முதலான சிறுகதைகள் பலவற்றில் இதனைக் காணலாம். இவருடைய 'பாத்திரம்' சிறுகதை ஒரு கணப்பொழுதில் மனித மனங்களில் நிகழ்ந்தேறும் மாற்றங்களைச் சித்திரிக்கிறது. கொழும்பில் இனக்கலவரமொன்றில் அகப்பட்டு சொத்துச் சுகங்களை இழந்து கணவனைப் பறிகொடுத்த பெண் ஒருத்தி வடக்கில் காணியொன்றுக்குள் சிறுவீடு கட்ட பொருளாதார உதவி கோரிய நிலையில் மகனின் எதிர்ப்புக்கு மத்தியில் அவளுக்குப் பொருளாதார உதவி செய்யும் தாயுள்ளத்தை நடைமுறை வாழ்வோடு இயைந்தநிலையில் காட்டும் சிறுகதையே பாத்திரம் சிறுகதையாகும். இரு பக்கங்களுக்குள் எழுதப்பட்ட இச்சிறுகதை முடிவுறாத பல பக்கங்களை வாசகர் மனோநிலையில் நின்று திறக்கிறது. சிறுபிள்ளையுடன் பொருளாதார உதவி கேட்டு வரும் நிலையில் கண்ணீர் மல்க அவள் கூறுகிறாள். 'இங்கே ஊரில் வீடில்லை. காணி மட்டும்தான். அம்மன் கோவிலுக்குக் கிட்ட அம்பல வாத்தியார் வீட்டடியில் இருக்கிறது'

அப்போது இளைஞன் கேட்கிறான் தெமட்டகொடையில் எங்கே இருந்தீர்கள்? அதற்கு அவள் கூறும் பதில் வெள்ளவத்தைக்குப் போற றோட்டில்ல' என்னது என்று கேட்ட இளைஞன் எந்த முகாம் என்று கேட்கிறான். அவள் வியாங்கொடையிலை என்று சொல்கிறாள். அவள் சொல்கின்ற கதைகள் அனைத்தும் பொய்யென இளைஞனுக்குப் படுகிறது. ஆனால் தாயார் பணத்தைக் கொடுத்து அவளை அனுப்புகின்றார் ஏன் குடுத்தனீங்கள்? சொன்னதெல்லாம் பொய் என இளைஞன் எரிச்சலுடன் கூற தாயார் கூறுகிறார் ' சீ பாவம்... அவள் வீட்டை விட்டு அதிகம் வெளிக்கிடாமல் இருந்து இருக்கலாம்...' அப்போது 'அப்படித் தான் இருக்கும்' எனக்கூறி தாயின் பதிலால் சமாதானம் அடைகிறான். நுட்பமாகச் சித்திரிக்கப்பட்ட கதையின் முடிவு பல்வேறு உள் அர்த்தங்களைக் கொண்டது. கருணையின் எல்லையில் நிற்கும் மனம் தான் ஏமாற்றப்படவில்லை என்பதை நம்புகிறது. அப்படித்தான இருக்கும் எனக் கூறி சுயசமாதானம் அடைகிறது. ஒரு சில நொடிகளில் தோன்றி மறையும் சம்பவங்களை அதன் தருணங்களை கதையாக்குவதில் வல்லவர் சாந்தன் என்பதற்கு இச்சிறுகதை சான்றாக அமைகிறது.

மனிதனையும் மற்றைய ஜீவன்களையும் இசையவைக்கின்ற இசையை இயல்பாய் ரசிக்கின்ற மனோபாவம் சாந்தனுக்கு இருந்துள்ளது. 'சித்தன் சரிதம்' சாந்தனின் இசை ஞானத்தை எமக்குணர்த்தி நின்றாலும் சிட்டுக்குருவி தொகுப்பில் இடம்பெறும் சொல்ல முடியாத பாடல் சிறுகதை சாந்தனுக்கு இசைமீது இருந்த அலாதியான பிரியத்தை எமக்குணர்த்தி நிற்கிறது. மனதை ஊடுருவி உயிரின் மையத்தை தொட விளையும் இசையின் மென்மையை அதன் நுண்மையை நுட்பமாக இச்சிறுகதையில் வெளிப்படுத்துவார்.

சாந்தனின் சிறுகதைகளில் அன்பு, காருண்ணியம், மனிதநேயத்துக்கப்பால் தேவையறிந்து உதவும் தன்மையும் காணப்படுகிறது. வண்டிகளும் மாடுகளும் கதையில் வண்டியோட்டி வீராசாமியின் ஏழ்மை கண்டு அவனுக்கு உதவுகிற நோக்கில் விறகைக் கொத்தித் தரும்படி கேட்கும் மனிதநேயமும் மனிதர்களும் மனிதர்களும் கதையில் கலவர சூழலிலும் வளர்த்த தாவரங்களையும் மீன்களையும் பாதுகாக்க நினைக்கும் மனப்பக்குவமும் சாந்தனுக்கேயுரியது. 'வேகம்' கதையில் ரயிலில் பயணிக்கும் போது கந்தசாமியின் செருப்பு கழன்றுவிட அதனை ஏழைத்தொழிலாளி ஒருவன் கண்டெடுத்து அல்லண்டா மாத்தயா என்று கூறியபடி எறிய அடுத்த பெட்டியில் மோதுண்டு ஆமணக்கு செடியடியில் விழ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஒற்றைச் செருப்பால் யாருக்கும் பயன் விளையாது எனக் கருதிய கந்தசாமி அதனை காட்டு ஆமணக்கு செடி நோக்கி எறிந்தான். சாந்தனின் கதையில் துலங்கும் பெரும்பாலான மனிதர்கள் மனிதநேயங் கொண்டவர்கள். ஆத்ம சுத்தி கொண்டவர்கள். தன் பாதையில் நேர்த்தியாக இயங்குபவர்கள்.

சாந்தனின் ஒரே ஒரு ஊரிலே என்னும் சிறுகதைத் தொகுப்பு ஒரு சின்ன வட்டம் முதலாகக் கொண்டு புதிய முதலைகள் ஈறாக பதினான்கு சிறுகதைகளைத் தாங்கி வெளிவந்த சிறுகதைத் தொகுதி. 1972 இல் இருந்து 1974 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த அரசியல், பொருளாதார, சமூக, இலக்கியப் பிரச்சினைகளை அலசும் இச்சிறுகதைகள் இனங்களுக்கு இடையிலான தேசிய ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. சாந்தனின் இச்சிறுகதையில் அமைந்திருக்கும் பெரும்பாலான பாத்திரங்கள் மனிதாபிமான உணர்ச்சியில் கட்டுண்டவை. சிங்கள நண்பர்களோடு வசித்தமையாலும் அவர்களோடு ஒன்றாக வேலை செய்து நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் ஏற்பட்டமையாலும் அவருடைய சிறுகதைகள் இனங்களுக்கிடையிலான தேசிய ஒற்றுமைக்கு வழிகோளுகின்றவையாக அமைகின்றன. 'ஒரு சின்ன வட்டம்' சிறுகதை இதற்கு சிறந்த உதாரணம். கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு விட்டு வீதியால் வரும் வழியில் குருடான பிச்சைக்காரன் ஒருவன் வாழைப்பழத்தோல் சறுக்கி விழுந்து விடுகிறான். அதனைக் கண்டு அவனுக்கு உதவ முன்வரும் நண்பனோடு சினக்கிறான் வேல்முருகு. காரணம் பிச்சைக்காரன் சிங்களவன் என்கிறான். அவனும் மனிதன் தானே என்கிறான் நண்பன். எங்கள அமத்திறவன்கள் என்கிறான் நண்பன். இந்தக் குருடனா என நண்பன் கேட்க மானங் கெட்ட பயல் என்கிறான் வேல்முருகு. நான் முதலிலை மனிதன் பிறகு தமிழன் என்கிறான் கதை சொல்லி. அதற்கு நண்பன் கூறுவான் நான் முதலிலை தமிழன் என்று. அதற்கு கதை சொல்லி கூறுவான் நாங்கள் மிகவும் பண்பட்ட ஒரு இனத்தில் வந்தவர்கள். இப்படியான இடங்களிலை இப்படியான பேதங்கள் பாக்கிறது எவ்வளவு ஒரு பெரிய அவமானத்தை எங்களினத்துக்கு தரும்? தமிழினம் அவ்வளவு தாழ்ந்த இனமா என்பான் கதை சொல்லி. அதற்கு வேல்முருகு சொல்வான் உனக்கு எல்லாம் கிரந்தம் தான் என்று. அத்தோடு கதை நிறைவுக்கு வரும். தமிழன் என்பதற்கு முன்னால் மனிதனாக இருப்பதே ஒருவனின் அடிப்படைத் தகுதி என்பதை இச்சிறுகதை ஆழமாக உணர்த்துகிறது. 'எழுதப்பட்ட அத்தியாயம்' தொகுப்பில் இடம்பெறும் 'மூண்டெறியுந் தீயின் மூலப்பொறி' இதனை அழுத்தமாக விவாதிக்கிறது.

"நான் மனிதன்
நீ தமிழன்
நான் மனிதன்
இல்லை நீ தமிழன்
நான் மனிதன் நான் மனிதன்
நீ தமிழன் நீ தமிழன்
சரி நான் தமிழன் நான் தமிழன்."

உண்மையில் இது கவிதைக்கான வடிவில் தன்னை முழுமையாக இனங் காட்டி நிற்கிறது. சாந்தனின் கடுகு கதைகளை வாசித்தவர்கள் இதனைக் கதையாகவே கருதுவர். இங்கு சாந்தன் பதியும் கூற்று முக்கியமானது. கருத்தினை வெளிப்படுத்துவதற்கு வடிவம் தேவையில்லை. ஆய்வாளன் எச்சட்டகத்துக்குள் அதனை உள்ளடக்கிப் பார்க்கின்றானோ அது அச்சட்டகத்துக்குள் தன்னை உட்படுத்திக் கொள்ளும். இதனை தெலூஸ் கத்தாரி "ரைஸோம்" என்பார். தமிழில் இதனை குறுக்கு மறுக்கு எனக் கூறுவார். குறுக்கு மறுக்கு என்பது வரைபடம் போன்றது. வரைபடம் என்பது ஒன்றை நகலெடுப்பதோ பிரதிபண்ணுவதோ அல்ல. வந்து சேரும் தன்மையால் தன்னை உருவாக்கிக் கொள்வது. குறுக்கு மறுக்கின் முக்கியமான குணாம்சம் தொகுத்துப் பார்ப்பது. இது மரத்தைப் போலவோ அல்லது வேரைப் போலவோ அல்லாது ஒரு முனையை பிறிது ஒரு முனையுடன் தொகுத்துப் பார்ப்பது. பன்முனை மையங்களாலான பன்மைப் பொருளாக்கத்தைக் கொண்டது. அது வடிவமற்ற வடிவமாகவும் இயங்கும் தன்மையைக் கொண்டது.

இத்தொகுப்பில் இடம்பெறும் பிறிதொரு கதையான 'வடிகால்' பஸ்ஸில் ஒரு இளம்பெண்ணைக் கண்டவுடன் உணர்வுகளினால் தடுமாறும் ஒரு இளைஞனின் கதை. மனித மனத்தின் நுண்ணுணர்வுகளான அன்பு, காமம் முதலானவற்றை விரசமின்றி வெளிப்படுத்தும் இச்சிறுகதை மனிதத்தை நேசிக்கும் சாந்தனின் உள்ளத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

'என் நண்பன் பெயர் நாணயக்கார' என்ற சிறுகதையும் இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வையும் தேசிய ஒற்றுமையையும் வலியுறுத்துவதற்காக எழுதப்பட்ட சிறுகதையாகும். உண்மையில் இச்சிறுகதையில் கையாளப்பட்ட புதிய உத்தி சுருக்க குறியீடு. சிங்களவர் சிங்களவரை அடித்தல் என்பதை 'சி'யை 'சி'யே அடித்தல் எனக்குறிப்பிடுவார். சுருக்க குறியைத் தாங்கி வெளிவந்த முதல் சிறுகதையாகவும் இச்சிறுகதை காணப்படுகிறது. சாந்தனின் 'பிரிப்பு' கதையும் தேசிய ஒற்றுமையை உணர்த்தி நிற்கும் கதைகளில் ஒன்று. சாந்தன் தமிழ் தேசியத்தில் ஆழப் பற்றுக் கொண்டவராக இருந்தாலும் இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு தேவை என்பதை உணர்ந்தவர். அவர் சிங்களவரை விரோதியாக பார்க்கவில்லை. அவருடைய இப்போக்கு இன்றைய சந்ததியினரிடம் கட்டாயம் வளர்க்கப்பட வேண்டும். நாம் முதலில் மனிதர் அதனைக் கடந்து பின்னர் தான் நாம் தமிழர் என்ற எண்ணம் உருவாக வேண்டும் என்பதை இவருடைய கதைகள் எமக்குணர்த்தி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நம்பிக்கைகள் அழிய வேண்டியதில்லை' என்ற சிறுகதை இன ஒற்றுமையை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் கதைகளில் முக்கியமானது. இனங்களுக்கு இடையில் பகைமையும் விரோதமும் நிலவிய நேரத்தில் இரு இனத்தவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நட்போடு வாழ மொழி அவசியம் என்பதை இச்சிறுகதை சுட்டி நிற்கிறது. தேசிய ஒருமைப்பாட்டுக்கான சாந்தனின் குரல் ஆழ ஒலிக்கிறது.

இலங்கையில் வேலையில் புதிதாக சேர்பவருக்கு வேலையை நிரந்தரமாக்குவதற்கு சிங்களம் தேவை என்ற அரச கரும மொழிச் சட்டத்தால் சிங்களம் பாஸ்பண்ண வேண்டிய நிர்ப்பந்தத்தால் தமிழர்கள் எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடிகளை தமிழ் மனவோட்டத்தில் வெளிப்படுத்தும் சிறுகதையே 'மனிதர்கள், மனங்கள், மானங்கள்'. இக்கதையில் சிங்களவர் எதிரிகள் அல்லர். இனரீதியான பேதங்களோடு வெறுப்புணர்வோடு ஒருவர் அவமதிக்கும்போது அதனைப் பொறுத்துக் கொண்டு செல்லுதல் தவறென்பதையும் இச்சிறுகதை எடுத்துரைக்கிறது. சிங்களப் பெயர்களுக்கும் தமிழ் பெயர்களுக்கும் இடையிலான உறவுமுறைகள் குறித்தும் இச்சிறுகதை பேசுகிறது. சாந்தனின் மிகச்சிறந்த சிறுகதைகளில் இதுவும் ஒன்று.

தமிழ் சிங்கள இனக்கலவரங்களை, முரண்பாடுகளை தமிழ் சிறுகதைகளில் வெளிப்படுத்தியவர்களுள் சாந்தனும் ஒருவர். இவருடைய கதைகள் இனமுரண்பாட்டின் தோற்றத்தை வெளிப்படையாகவும் நேரடியாகவும் பேசின. சாந்தனின் 'காலங்கள்' தொகுப்பு இனமுரண்பாடு கூர்மை பெற்று ஓங்கிய காலத்தில் வெளிவந்த தொகுப்பாகும். காலமாற்றத்துக்கேற்ப தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் யுத்தத்தால் அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் முதலானவற்றை இத்தொகுதி பேசிச் சென்றது. இவை போதனைகளாகவோ பிரச்சாரங்களாகவோ அமைவதில்லை. இவருடைய பெரும்பாலான கதைகள் விடயத்தை நேரடியாகப் பேசுவதும் இல்லை. கதை வாயிலாக அவர் உணர்த்த விளையும் எண்ணங்களை அவர் குறிப்பாலேயே உணர்த்திச் செல்வார். வரலாற்று அறிவில்லாதவனும் காலம் பற்றிய தெளிவில்லாதவனும் அவருடைய கதைகளை முற்றாக விளங்கிக் கொள்ளமுடியாது. 'இருகோடுகள்' சிறுகதை இதற்கு தக்கசான்று.

இக்கதையின் மறுபிரதிபலிப்பை 'முளைகள்' தொகுப்பில் இடம்பெறும் 'பூகோளம்' கதையில் காணலாம். கதை தொடங்கும் போதே இனவன்முறையின் மொத்தப் பிரதிப்பலிப்பான துட்டகைமுனுவின் வாசகங்களுடன் தொடங்குகிறது. 'கொழும்பு நடைபாதைகளில் நடப்பது இப்போதெல்லாம் பெரிய தொல்லையான வேலை. ஒரு புறம் கடல் மறுபுறம் தமிழன் என்று துட்டகைமுனு சொன்னது போல இங்கேயும் ஒரு புறம் வேலி மறுபுறம் வியாபாரிகள்'. இன, மதங்களைக் கடந்து மனிதர்கள் மேல் கதாசிரியர் கொண்ட பரிவும் அன்பும் கதையில் துல்லியமாக வெளிப்படுகிறது.

இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை பொதுவிடங்களில் தமிழர்களுக்கு எதிராகப் புலப்படுத்தப்படும் வன்முறைகளைப் பேசும் சிறுகதையே 'தமிழன்'. கன்ரீனில் கட்லட் ஒன்றால் இரு இனத்தவருக்கு இடையில் ஏற்படும் முரண்பாட்டைப் பேசும் இச்சிறுகதையில் தமிழர் பக்கம் நியாயங்கள் பல இருப்பினும் சிங்களவருக்கு எதிராகச் சென்று நீதி கேட்க மனோ தைரியமில்லாதவரின் இயல் இருப்பை யாழ்ப்பாணத்தவருக்குரிய மனோபாவத்தில் இச்சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழருக்கும் சிங்களவருக்மிடையிலான காதல் மற்றும் திருமணங்கள் உறவுமுறைகளுக்கிடையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன என்பதையும் யதார்த்த பூர்வமாக தன் எழுத்தில் கொண்டு வந்தவர் சாந்தன்.

'பார்வை'த் தொகுப்பில் இடம்பெறும் 'தொலைவு' என்னும் கதை தமிழ், சிங்கள விரோதத்தால் முறியும் காதலைப் பேசுகிறது.

சாந்தனின் சிறுகதைகள் வெறுமனே படைப்புக்களாக நிற்பதில்லை. அதன் தளங்களும் இயல்புகளும் பல்பரிமாணமுடையவை. நேரடித்தன்மையற்று, உள்முகத்தன்மையோடு கட்டமையும் சாந்தனின் சிறுகதைகள் மனித மனத்தை ஊடுருவி அலாதியான வாசிப்பின்பத்தை ஏற்படுத்தவல்லவை. அவர் கையாளும் அகச் சொல்லாடல் இறுக்கம் நிறைந்தது. சிறுகதைகளில் அவர் கையாளும் சுருக்க நடை நவீன எழுத்துக்கான அடுத்த கட்ட நகர்வை உருவாக்கியது. சாந்தனின் சிறுகதைகளில் முற்றிலும் வித்தியாசமான கோணத்தில் எழுதப்பட்ட சிறுகதையே 'விலகிப் போனவன்'. மனிதநேயமும் நன்னடத்தையும் உள்ள ஒருவன் கந்தோரிலுள்ள அனைவரிடம் இருந்து வேறுபடுகிறான். இதனையே விலகிப் போனவன் என்ற கதைத்தலைப்பும் எடுத்துரைக்கிறது. அவனின் நடத்தைவாத முறைகளைக் கந்தோரில் சொல்லப்பட்ட நடத்தைவாத முறைகளுக்கூடாக எடுத்துரைக்கிறார். சுப்பிரமணியம் ஒரு வேலை தேடிக் கொண்டு ஓமானுக்கு புறப்பட்ட போது அவன் மனைவிக்கு மூன்றே மாசம். விவேகம் குறைந்த வெகுளி அவளை கந்தையா வாத்தியார் வார்த்தைகளால் வலையில் விழுத்துகிறார். எடி இவன் சுப்பிரமணியனுக்கு என்ன பைத்தியமோ ஏனிப்படி அரைகுறையில விட்டிட்டு போறான். அப்போது அவன் மனைவி கேட்கிறார் ஏன் வாத்தியார் என்று. அதற்கு வாத்தியார் அவன் தலையை மட்டும் உண்டாக்கி விட்டு போயிருக்கிறான். இனி கை, கால் உடம்பெல்லாம் வைக்கிறது யாராம். அவள் பயந்து போனாள். வாத்தியார் கொஞ்சநேரம் அவனைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டிவிட்டு இனி என்ன செய்யிறது வேணுமெண்டா நான் வச்சுத்தாறன் என்று கூறிவிட்டு வாத்தியார் ஒரு நாளைக்கு ஒரு உறுப்பு வீதம் உருவாக்கத் தொடங்கினார். ஒரு வருடத்துக்குப் பின் ஊருக்கு வந்த சுப்பிரமணியம் தன் குழந்தையை ஆசையோடு கொஞ்சினான். அதனைக் கண்ட அவன் பெஞ்சாதி கூறினாள் 'போன வேளையில் தலையை மாத்திரம் வச்சிட்டு போயிட்டு இப்ப வந்து வலுசந்தோசமாய்க் கொஞ்சுறீங்கள். கந்தையா வாத்தியார் மாத்திரம் இல்லாமல் இருந்து இருந்தால் என்ன நடந்து இருக்கும் தெரியுமே? என்று கூற ஒரு கணம் சிரிக்க வைக்கும் இச்சிறுகதை மறுநொடியே வாசகரை சிந்திக்கவும் வைக்கின்றது. பகிடிக் கதை. ஆனால் இதைக் கட்டியவன் கலைஞனானாலும் எவ்வளவு குரூரக் கற்பனை. வாசகருக்கு கதை ஏற்படுத்தும் தாக்கம் அது தரும் விலகல் ஆழமானது.

சாந்தனின் 'நீக்கல்கள்' சிறுகதை யாரும் பேசாத புதியவிடயத்தைப் பேசும் சிறுகதை. திருமணமாகி குழந்தைப் பேறில்லாத ஒருவன் நண்பனின் அறிவுறுத்தலுக்கமைய வைத்தியசாலை செல்கிறான். அங்கு பரிசோதனைக்காக அவனுடைய விந்து தேவைப்படும்போது அதனை எடுக்கும் முயற்சியில் ஒருவன் அடையும் உளவியல் விடயங்களை இச்சிறுகதை பேசிச் செல்கிறது. பாலியல் சார்ந்த உளவியல் பிரச்சினையை எவ்வித விரசமுமற்று இச்சிறுகதையில் சாந்தன் வெளிப்படுத்திச் செல்வார்.

சாந்தனின் பல கதைகளில் கருத்துச் செறிவு துலக்கமாகத் தென்படுகிறது. அனுபவங்களின் பட்டறிவே கதையின் சாரம்சமாகத் துலங்குகிறது. செறிவிறுக்கத்தாலும் கச்சிதமாகக் கதைசொல்லும் போக்காலும் சாந்தனின் சிறுகதைகள் தனித்துத் துலங்குகின்றன. புதிய தரிசனங்களில் வரும் பிறைசூடி மாஸ்டர். கணக்கிலும் தமிழிலும் புலியான அவர் தன் மகளுக்கு திருமணம் பேசும்போது தனபாலிடம் ஜெயநாதன் பற்றி விசாரிக்கிறார். அவன் கொம்யூனிஸ்ற் என்று பதில் கூறிய தனபால் "அவன் எந்த கெட்டபழக்கமும் இல்லாதவன் என்றாலும் உங்கள் மகளுக்கு அவன் போக்குகள் ஒத்து வருமா?" எனக் கேட்கிறான். "அவன் கொமினிஸ்ட்.. வாத்தியார் குடும்பம் கோயில், குளமென்று திரியிற ஆக்கள் அதைத்தான் தனபால் கேட்கிறான்" என நினைத்துக் கொண்டு; வாத்தியார் கேட்டார் "என்ர மகள் கடவுள் பக்தி மிகுந்தவள் இவன் தனக்கு வருபவள் கடவுள் பக்தி மிகுந்தவள் என்றால் ஏற்றுக் கொள்வானோ?..." என்று அதற்கு தனபால் "அவன் அப்படியான ஆளில்லை. கடவுள் இல்லை என்றாலும் மனைவியின் சுதந்திரத்தை மதிக்கக் கூடியவன்" எனக் கூறுவான். அதற்கு வாத்தியார் கூறும் பதில் அலாதியானது.

'எங்கள பொறுத்தளவிலை அவன் கொம்யூனிஸ்ற் ஆக இருக்கிறதை பிழையாகவோ பிரச்சினையாகவோ எடுக்கவில்லை. ஏனெண்டால் கடவுள் இல்லையென்று சொன்னாலும் கடவுளுக்கு மிக நெருக்கமானவன் ஒரு நல்லகொம்யூனிஸ்ற்'

சாந்தன் இவ்வாறான நுட்பமான கதை சொல்லல் முறையால் தனித்து துலங்குகிறார்.

இலங்கையின் யுத்தநெருக்கடிக்குள் அகப்பட்டு நலிவுற்ற மக்களின் வாழ்க்கை முறைகளையும் இந்திய இராணுவத்தால் மக்கள் எதிர்நோக்கிய அல்லற்பாடுகளையும் சாந்தனின் சிறுகதைகள் ஆழமாகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்தி நின்றன. அரசியல், பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு தம் வாழ்க்கையை தொடரச் சிரமப்படும் மக்களின் அவலங்களே சாந்தனின் பாத்திரங்கள். பொருளாதாரத்தடை, இடம்பெயர்வு, குண்டுவீச்சு, துப்பாக்கி பிரயோகம், சுற்றிவளைப்பு, உயிர், உடமை இழப்புக்கள், கைதுகள், சித்திரவதைகள், உயிர் அச்சுறுத்தல்கள் என விரியும் சாந்தனின் புனைவுலகம் கசப்பான அனுபவங்களால் கட்டுண்டது. துன்புற்ற மக்களின் மனோபாவங்களால் செதுக்கப்பட்டது. மக்களின் எதிர்பார்ப்புக்களையும் ஏக்கங்களையும் எவ்வித முகப் பூச்சுமின்றி இயல்பாய் வெளிப்படுத்துவது.

யுத்தத்தையும் யுத்தநிலைகளால் மனிதர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் வெளிப்படுத்தி நிற்கும் சிறுகதையே 'வாழ்க்கை'. கவிதை போல் விரியும் இச்சிறுகதை பிரச்சினை நிகழ்ந்தேறிய கணங்களையும் அது முடிவுற்று வழமைக்குத் திரும்பிய இயல்பு வாழ்க்கையையும் கண்முன் விரித்துச் செல்கிறது.

சம்பவங்கள், நிகழ்வுகள், பாத்திரங்களின் உரையாடல் வழி இயங்கும் சாந்தனின் புனைவுலகம் தேசியம், விடுதலை, சமத்துவம் என்ற அடிப்படையில் தமிழர் வாழ்வில் நிகழ்ந்தேறிய சமானிய சம்பவங்களை எளிமையாகவும் சுவாரசியமாகவும் சித்திரிக்கிறது. இவருடைய 'கிருஷ்ணன் தூது' சிறுகதை இதற்குத் தக்கசான்றாகும். அலுவலகம் ஒன்றில் சங்கத்தின் சார்பில் லெட்டர்பாட் ஒன்றை தமிழ், சிங்களவர் இருவரும் ஒன்றிணைந்து தயாரிக்க முனைகையில் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டிய அவசியத்தை இயல்பாகச் சித்திரித்துச் செல்கிறது. இச்சிறுகதை சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இனமுரண்பாட்டின் உச்ச போக்குகளை சம்பவச் சித்திரிப்பின்றி அறிவுபூர்வமான அனுபவத்தளத்தில் நின்று அணுகுகிறது. தமிழ்த் தேசியம் முனைப்புப் பெற்ற காலப்பகுதியில் இச்சிறுகதை வந்த போதிலும் இச்சிறுகதை தமிழ்தேசிய ஒடுக்குமுறையை பிரச்சாரம் பண்ணவில்லை. ஏனெனில் கதையின் ஒரு கட்டத்தில் சுப்பிரமணியம் விவேக்கிடம் "சிங்களமும் தமிழும் இன்றி அடுத்தமுறையிலிருந்து லெட்டர்பாட்டை இங்கிலீஷில் அடிப்போம்" என்கிறார். அதற்கு விவேக் 'அய்யா, அவங்களிலை சிலபேர் நினைக்கிற மாதிரித்தான் நீங்களும் நினைக்கிறீர்கள் - சிங்களத்தில் போட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு பிடிக்கேல்லை எண்டு. பிரச்சினை அதில்லை. தமிழில் போடாமல்விட்டதுதான் எங்கட பிரச்சினை. நீங்க தனியா இங்கிலீஷிலை அடிக்க வெளிக்கிட்டா, அதை எதிர்க்கிற முதல் ஆளாக நானிருப்பன்..'' என்கிறார்.

உண்மையில் தமிழர்களின் பொதுவான பிரச்சினை சிங்களத்தை எதிர்ப்பது அன்று. சிங்களவருக்கு நிகரான உரிமையை தமிழர்களும் பெற்றுக் கொள்வதே ஆகும். இச்சிறுகதை தமிழர் அன்றைய நிலையை, அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை பாத்திரங்களின் உணர்வுநிலையில் நின்று இயல்பாகச் சித்திரித்துச் செல்கிறது. நல்ல இலக்கியம் பிரச்சாரமாகாது என்பதற்கு இச்சிறுகதை தக்க சான்று. இதனாலேயே சாந்தன் ஈழத்து சிறுகதையுலகில் தனித்து அடையாளம் காணப்படுகின்றார். போருக்குள் பிறந்து வளர்ந்தவர்கள் எப்போதும் போர் சார்ந்த எண்ணங்களுடன் இருப்பார்கள் என்பதை சாந்தனின் 'தலைமுறைகள்' கதை எடுத்து விளக்கி நிற்கின்றது. போர் நிகழும் காலகட்டத்தில் வாழும் மனிதர்களின் வாழ்வின் சகலவிடயங்களிலும் போர் நிறைந்திருக்கும் என்பதை இச்சிறுகதை நன்குணர்த்தி நிற்கிறது.

யாழ்ப்பாண மக்களின் மனோபாவத்தை வெகு துல்லியமாக தன்சிறுகதைகளில் பதிவுசெய்தவர்களில் சாந்தனும் ஒருவர். இதற்கு தக்க உதாரணம் 'உறுத்தல்' சிறுகதையில் வரும் கந்தையர். வைரவர் கோவில் மணி கேட்கும் போது நாலரை மணிக்கு விழித்தெழும் கந்தையர் தன் கடன்களை முடித்து மாடு, கன்று, தோட்டம், சந்தை என யாவற்றையும் முடித்து வரும்போது மதியம் ஆகும். கடையில் சென்று பேப்பரை வாங்கும்போது இரவல் படிப்பவருக்குத் தெரியாமல் பைக்குள் மறைத்து வைத்துவிட்டு குளித்து வந்து ஒரு மணிக்கு படித்து விட்டு தூங்கி எழும் தன்மை கொண்டவர். பேப்பர் படனம் அவரின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்று. நாட்டில் என்னதான் அனர்த்தங்கள் நடந்தாலும் அவரின் இச்செயற்பாடு மாறாது. போரினாலும் குண்டு வீச்சினாலும் மக்கள் படும்பாட்டையும் பேப்பரின் வாயிலாக அறிந்த கந்தையர் மனம் நொந்து போகிறார். இதெல்லாம் ரசனைக்குரிய செய்தியாக அவருக்குப் படவில்லை. இந்தச் சனம் இவ்வளவு பாடுபடுகையில் இருக்க உணவுமின்றி உயிருக்கு உத்தரவாதமுமின்றி சனம் அகதிகளாக ஓடிவருகையில் ஆறுதலாக இருந்து இவ் அவலங்களைப் படிப்பது தவறு எனப்பட குற்றவுணர்ச்சியால் புளுங்குகிறார் கந்தையர். யாழ்ப்பாணத்தாரின் இயல்பு மனோபாவம் மாற்றப்பட வேண்டும் என்பதை கந்தையர் பாத்திரத்தின் ஊடாக உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டிச் செல்கிறார் சாந்தன்.

காலங்கள் தொகுப்பில் இடம்பெறும் 'வீடு', 'சுரண்டல்', 'ரிஷ்கா', 'நன்றி' முதலான கதைகளும் வெவ்வேறு கோணத்தில் தனித்து இயங்கும் சிறுகதைகள் ஆகும். போர்க்காலத்தில் தமிழர்களுடைய வீடுகள் எதிர்கொண்ட விளைவுகளை இவருடைய 'வீடு', 'குயில்வீடு, 'கட்டிடங்கள்' முதலான சிறுகதைகள் பேசியுள்ளன. சாந்தன் வீடுகளை வெறுமனே கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்ட சடப்பொருளாய்க் கண்டவரல்ல. மனிதன் தன்னை ஆழ ஊன்றுவதற்கான வேர்களாகக் கண்டவர். கலவரத்தால் ஒருவன் வீட்டை இழந்து இடம்பெயர்ந்து அநாதரவாக சிற்றப்பா வீட்டில் வாழ முற்படும்போது அவன் எதிர்கொண்ட உள நெருக்கீட்டை விளக்கும் சிறுகதையே 'வீடு'. சொந்த நிலத்தில் வாழ முடியாது வெளியேறிய மக்கள், தமக்கு விருப்பமான செடியைக் கூட நட்டு வளர்ப்பதற்கு நிலமற்று வாழும் அவலநிலையை இக்கதை சுட்டிநிற்கிறது. வலித்தது என்னும் ஒரு சொல் தரும் ரணம் சிறுகதையை வாசிப்பவன் மனத்தில் முள்ளாய் இறங்கும்.

'குயில் வீடு' சிறுகதையும் வீட்டை விட்டு நீங்கி இடம்பெயர்ந்து வாழும் ஒருவனுக்கு மதிலோடு நிற்கும் மரம் போதி மரமாகின்றது. குயில்கள் ஒதுங்கிச் சிறகடிக்கும் மரம் அவற்றின் வீடுகளாக இருப்பதைக் கண்டு அவன் மகிழ்ச்சி அடைகிறான். வசித்த வீட்டை பார்க்க முடியாது அதனை இழந்து வாடும் அவனுக்கு குயிலின் வீடு ஒரு உலகாய் விரிகிறது. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான நேசிப்பைச் சாந்தன் மனித உணர்வுகளுக்கூடாக வெளிப்படுத்துகிறார்.

போரினால் இடம்பெயர்ந்து வசித்த ஒருவன் தன் வீட்டைப் பார்க்கச் சென்றபோது உள்மனத்தில் தோன்றிய அனுபவங்களைப் பேசும் சிறுகதையே சனம். 1983ஆம் ஆண்டு திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்திக்கருகில் நடந்த வன்முறைச் சம்பவங்களை உள்ளடக்கி விரியும் இச்சிறுகதை சனமற்று வெறுமை பூண்ட யாழ்ப்பாணக் கிராமமொன்றின் நிலையைப் புலக்காட்சிகளுக்கூடாக வெளிப்படுத்திச் செல்கிறது.

சாந்தனின் 'போர்க்காலப்பூக்கள்' யுத்தகாலத்தில் நெருக்கடிக்குள் சிக்குண்டு அல்லற்பட்டு வாழ்ந்த மக்களின் அவல வாழ்வைக் காட்சிப்படுத்திச் செல்கிறது. வீதியில் நடக்கும் புதினங்களுக்கூடாகக் கதைசெல்லி வாயிலாக நகரும் இச்சிறுகதை மண்ணெண்ணெய் தட்டுப்பாடான காலப்பகுதியில் கள்ளக் கறண்ட் எடுத்து இறைக்கும் மக்களின் பெருந்துயரையும் பெற்றோலுக்கு அலையும் மக்களின் அன்றாட வாழ்வையும் வீதியில் பிரயாணம்செய்யும் போது ஹெலியில் சரமாரியாகச் சுடும் இராணுவத்துக்குப் பயந்து நொந்து நொடிந்து தம் வாழ்வைக் கடனென நினைத்து வாழ்ந்து முடிக்கும் மக்களின் நெருக்கடியான கால கட்டத்தையும் பதிவு செய்கிறது. சாந்தனின் 'அதிர்வு' சிறுகதையும் இப்பின்னணியிலேயே எழுதப்பட்ட சிறுகதையாகும். மனிதமனத்தின் உபாதைகளையும் வலிகளையும் போர்க்கால வடுக்களையும் நிதர்சனமாக வெளிச்சம் போட்டுக் காட்டும் இச்சிறுகதையில் மனிதநேயமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களுக்குள் இயல்பாகவே தார்மீக அறமும் நுண்ணுணர்வின் தடத்தில் வெளிப்படுகிறது. 'பறக்கும் நினைவுகள்' சிறுகதையும் பொம்பர் அடிக்குப் பயந்து அல்லற்படும் மனிதவாழ்வைத் தத்துரூபமாக எடுத்து விளக்கும் சிறுகதையாகும்.

போரினாலும் இடம்பெயர்வினாலும் அழிவுண்ட கிராமங்களின் கதையே சிட்டுக்குருவி தொகுப்பில் இடம்பெறும் 'பாதை'. இச்சிறுகதை யாழ்ப்பாண மக்களால் பயன்படுத்தப்படும் பாதையின் அமைப்பை புவியியல் தன்மையுடன் எடுத்து விளக்குவதுடன் புலம்பெயர்வினாலும் இடம்பெயர்வினாலும் சின்னாபின்னமாகி அழிவுண்ட வீடுகளையும் விபரணத்தன்மையில் இச்சிறுகதை காட்சிப்படுத்துகிறது. இச்சிறுகதை சாந்தன் ஆங்கிலத்தில் எழுதி அவரால் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. இதேபோல் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு வந்த பிறிதொரு சிறுகதையே கோழை. தன்கையாலாகாததனத்தால் தன்னை விட்டுச் சென்ற நிறைவேறாத காதலை மனத்தில் இருத்தி நைந்து வாடும் ஒருவரின் மனவோட்டத்தை நனவோடைப் பாணியில் சொல்லும் இச்சிறுகதை நிகழ்ந்தேறிய சம்பவங்களையும் சம்பவத்தின்போது அரங்கேறிய காட்சிகளையும் உயிர்ப்போடு பதிவு செய்கிறது.

சாந்தனின் 'கட்டடங்கள்' சிறுகதை மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான கட்டங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. மாணவர், ஆசிரியர் விரிவுரை வாயிலாக விரியும் இச்சிறுகதை மனிதர்களுக்கு 'வாழ்வு' நம்பிக்கையின் குறியீடுகளாக அமைவதையும் சுட்டி நிற்கிறது. இச்சிறுகதையில் சாந்தன் உண்மையான கட்டடங்கள் எதுவென்பதை திட்டவட்டாக வரையறுக்கிறார். 'கட்டடங்களுக்கு மனிதர்கள் இடும் அத்திவாரங்கள் வெறுமனே அவற்றைத் தாங்குவதுடன் நின்றுவிடுவதில்லை. மண்ணில் மக்கள் விடும் வேர்களிலொன்றாகவே அவை கொள்ளப்படுகின்றன'. இதைக் கூறி ஆசிரியர் விரிவுரை நிகழ்த்தும் போது அடுத்தடுத்து குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. அப்போது பிள்ளைகள் கூறுகிறார்கள் இளவாளைப் பக்கத்திலை வீடுகளை உடைக்கிறாங்கள் ஸேர்... என்று கூறுவதுடன் கதை நிறைவுக்கு வருகிறது. சாந்தன் கதையில் கையாளும் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்பன கதைக்கு புதுப்பொழிவைத் தருகின்றன.

தமிழர் பகுதிகள் சிங்களவரால் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்படுகின்றமையை வாழ்க்கை எதிர்கொள்ளும் ஜீவனுள்ள அனுபவங்களுக்கூடாக விளக்கும் சிறுகதையே 'அந்நியமாக உண்மைகள்'. யாழ்ப்பாணத்தில் இருந்து தன் மச்சான் வீட்டுக்கு திருகோணமலைக்குச் செல்லும் சிவம் தமிழைத் தவிர வேறுமொழிகள் பேசத்தெரியாதவன். இதனால் திருகோணமலை என்ற தமிழ்ப்பிரதேசத்தில் அவன் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளை இச்சிறுகதை



பேசிநிற்கிறது. மக்கள் அத்தியாவசியத் தேவைகளுக்காகப் புளங்கும் பஸ்நிலையம், சந்தை முதலானவற்றில் ஆதிக்கம் பெற்றிருந்த சிங்களமொழியால் தம் அன்றாடத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாது தமிழ் மக்கள் அல்லாடுவதை இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது. சாந்தனின் உருவவமைதி பற்றி அசோகமித்திரன் கூறும்போது அவருடைய கதைகள் எங்கு முடியவேண்டும் என்பதில் அவருக்குள்ள நிர்ணயத்திறன் அபூர்வமானது என்பார். அவருடைய படைப்புக்கள் சிறந்த எழுத்துச் சிக்கனத்தோடு கனதியாக விளங்குவதற்கும் இதுவே காரணம் எனலாம். ஏனெனில் தமிழர்களின் பூர்வீக பூமியான திருகோணமலையில் சிங்களவரின் ஆதிக்கம் முதன்மை பெற்ற நிலையில் அதனைச் சாந்தன் நுட்பமாகக் காட்சிப்படுத்துவார்.

'பஸ் முழுவட்டமடித்து திரும்பிய போது தூரத்தில் கோணேசர் கோவில் தெரிந்தது. அதனருகே மேலே இரவெல்லாம் செம்புள்ளியாகத் தெரிகிற தொலைத் தொடர்புக் கோபுர விளக்கு அணைந்து போய்க் கம்பிக் கூண்டு மட்டுமே தெரிந்தது. நகரின் ஒடுங்கிய தெருவில் எதிரே வந்த கார் ஒன்றிற்காக இந்த பஸ் ஒதுங்கி நின்று வழிவிட்ட போது தெருக்கரைச் சுவர் ஒன்றில் பெரிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டிருந்த வாக்கியம் சிவத்தின் கண்ணில் பட்டது. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களே அரபு பிரதேசத்தை விட்டு வெளியேறுங்கள்'

கதையின் முடிவுப்பகுதியாக வரும் இவ்விடம் தமிழ் மக்களுக்கு சொல்லாத பலவுண்மைகளை உணர்த்தி நிற்கிறது. கதைக் கரு கூறவேண்டிய பிரதான பகுதியாகவும் இதுவே அமைகிறது. 'ஒரு விருந்தின் முடிவு' சிறுகதையும் இதனையே உணர்த்தி நிற்கிறது. பதினாலு வருடச் சேவையை உதறிவிட்டு அரபுநாடு செல்லும் தில்லைநாதனுக்கு கந்தோரில் விருந்து நடக்கிறது. தமிழ், சிங்கள மொழி பேசும் இருவரும் அவ்விருந்தில் கலந்து கொள்கின்றனர். அவ்விருந்தின் பேச்சின் சாரம்சமாக அமைந்த 'கடந்த காலத்திலே இந்த ஊரிலே கூட எவ்வளவோ நடந்தும் எங்கள் கந்தோரில இருந்த வடபகுதி சகோதரர்களுக்கு ஒன்றும் நடவாமல் விட்டது தில்லைநாதன் போன்ற நண்பர்கள் இங்கிருந்ததை நினைத்துத்தான். அப்படிப்பட்டவர் தில்லை...'. இப்பேச்சினால் விருந்து குழம்புகிறது. இவ்விடத்தில் சாந்தன் எழுப்பும் கேள்வி முக்கியமானது. 'கலவரம் என்று வந்தால் அடிக்கிறவர்கள் அடிபடவேண்டியவர்களை இவன் எமக்கு தீங்கு செய்தவன் என்பதை முத்திரை குத்தியா அடிக்கிறார்கள். அடிப்பதற்கு ஏதேனும் ஒரு நியாயத் தேவை இருக்கிறதா? அடிக்க வேண்டியது ஒரு கடமை தானா என்ன...' தர்க்கபூர்வமான கேள்விகளை எழுப்பி இச்சிறுகதை வாசகரைச் சிந்திக்கவும் செயற்படவும் வைக்கிறது.

1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ப் பகுதிகளில் தனிநாடு கோரிக்கையை முன்வைத்து பெரு வெற்றி பெற்றதை அடுத்து, தமிழ்ப் பகுதிகளுக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழருக்கு எதிராக இந்த வன்முறைகள் கலவரமாக மாற்றமடைந்தன. அனுராதபுரம், கொழும்பு உட்பட சிங்களப்பகுதிகள் பலவற்றில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலில் முந்நூறுக்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டதாக அரச விசாரணைகள் தெரிவித்தாலும் அரசசார்பற்ற ஊடகங்களின் கருத்துப்படி இத்தொகை அதற்கும் அதிகமானவை. சாந்தனின் 'மனிதர்களும் மனிதர்களும்' நெடுங்கதை 1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிநிலைகளையும் தமிழர்கள் தாங்கள் வேலை செய்யும் இடங்களில் முகங்கொண்ட துர்ப்பாக்கிய நிலைகளையும் விளக்கி நிற்கிறது. கலவரச் சூழலில் தமிழர்கள் அஞ்சி அஞ்சி வசித்த துர்ப்பாக்கிய நிலையை உணர்வும் உயிர்ப்புமாகச் சாந்தனின் இச்சிறுகதை பேசினாலும் இச்சிறுகதை ஏனைய தமிழ்ச் சிறுகதைகள் போன்று இனத்துவேசத்தைக் கக்கவில்லை. கலவரம் நடந்து அடுத்த நாள் ரயிலில் கிருஷ்ணனும் அவன் மனைவி வேணியும் போகத் தீர்மானித்த பின்னர் அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் மன அவஸ்தைகளையும் இந்நெடுங்கதை வெளிப்படுத்தி நிற்கிறது. நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட நிலையில் கொழும்பு கதிரேசன் கோவில், கதிரேசன் மண்டபம், பீற்றஸ் கொலிஜ் எல்லாம் அகதிகள் நிரம்பி வழியும் தருணத்தில் தமிழ்மக்கள் அந்தரித்து திரிந்த அவலநிலையை விளக்கும் இச்சிறுகதை தமிழ் மக்களுக்கு இன, மத, பேதமின்றி உதவி செய்யும் சிங்களவரின் இயல்பான மனோபாவங்களையும் எடுத்துரைக்கிறது. கிருஷ்ணனும் அவன் நண்பன் சாம்பனும் மற்றும் இருவரின் மனைவிமாரும் டக்ஸி ஒன்றில் புறப்பட்டு அச்சத்தோடு மனப்பதக்களிப்போடு கொழும்பு கோட்டையை அடைந்தபோது கீழ் இறங்கிய சாம்பன் கிருஷ்ணன் சூட்கேஸை எடுக்க காருக்குள் குனிவதை அறியாது கார் கதவைச் சாத்துகிறான். அப்போது கிருஷ்ணனின் கைவிரல் கார் கதவின் இடுக்கில் பட்டு நெரிந்து இரத்தம் ஒழுகும்போது பார்க்க முரட்டுத்தனமாக இருந்த சிங்கள டிரைவர் தன்கைக்குட்டையை இரண்டாகக் கிழித்து தண்ணீரில் நனைத்து அவனுக்கு கட்டுப்போட்டு தான் மனிதன் எனக் காட்டுகிறான். டிரைவரின் நடத்தையைக் கண்ட கிருஷ்ணன் அவன் கேட்ட கூலி இருபது ரூபாவை விட ஐந்து ரூபா கூடக் கொடுக்கிறான். வேண்டாம் மாத்தையா கூடுதலாக வாங்கிறது சரியில்லை என்று கூறிவிட்டு சென்று விடுகிறான். ஆபத்தில் உதவும் சிங்களவரின் மனிதநேய நடத்தைகளை சாந்தன் இச்சிறுகதையில் அத்தநாயக்கா முதலியோரின் நடத்தைவாத முறைகளுக்கூடாகவும் எடுத்துக் காட்டுகின்றார்.

1977ஆம் ஆண்டு யுத்தத்துக்குப் பின் கந்தோர்களில் சிங்களவரோடு கொண்டிருந்த உறவுமுறைகள் துண்டிக்கப்பட்டமையை 'பழி' என்னும் சிறுகதை எடுத்துரைக்கிறது. துண்டாடப்பட்ட நட்பு மனதளவில் தனிமனிதன் ஒருவனை எவ்வாறு பாதித்தது என்பதையும் இச்சிறுகதை எடுத்துரைக்கிறது. நாட்டில் இருக்க இடமும் குந்தியிருக்கக் குடிசையும் இல்லாத நேரத்தில் மலையக மக்களுக்கு கிடைத்த பிரஜாவுரிமைச் சட்டத்தால் என்ன பயன் என்பதை அலசும் கதையே 'தொடர்ச்சி'. தமிழ் மக்களின் வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் ஏழைச்சிறுவர்களின் வாழ்வைப் பேசும் இச்சிறுகதை அடிக்கடி நிகழும் தண்ணீர் வெட்டுக்களால் பாதிக்கப்படும் நடுத்தர மக்களின் வாழ்வையும் பேசிச் செல்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு வரும் போது அவர்களால் எதிர் கொள்ளும் விளைவுகளைப் பற்றி பேசும் சிறுகதையே 'அஸ்பெஸ்ரஸ்'. இலங்கை மக்களின் மனோநிலையை மற்றும் அவர்களின் பிரச்சனைகள் குறித்து சிறிதும் விளங்கிக் கொள்ளாத புலம்பெயர்வாழ் தமிழர்கள் தாங்கள் அங்கு வாழும் சூழலை மட்டுமே மனத்தில் எண்ணிக் கொண்டு இங்கு வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை குற்றமும் குறையுமாகப் பார்ப்பதை அங்கதமாக இச்சிறுகதை பதிவு செய்கிறது. புலம்பெயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் இவ்வகையான அபத்தமான உரையாடல்கள் மிகப்பெரிய விலகல்களைத் தொடக்கி வைக்கின்றன. புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து பாலாவும் அவன் மனைவியும் சிவாவின் வீட்டிற்கு வருகின்றனர். கடந்த காலத்தில் நிகழ்ந்தேறிய சம்பவங்கள் குறித்து இருவரும் உரையாடுகின்றனர். ஈற்றில் கட்டிய வீடு வெள்ளை அடிக்காது இருப்பது குறித்து பேச்சுத் திரும்புகிறது. அப்போது அஸ்பெஸ்ரஸே போட்டிருக்கிறியள்? என்கிறான் பாலா. ஷெல்லுக்கு கொங்கிரீட் கூட தாங்காது என்கிறாள் சிவாவின் மனைவி ஈஸ்வரி. வெளிநாட்டில் அஸ்பெஸ்ரஸ் சுவாசநோய்களை உருவாக்கும் என்பதால் அதனைத் தடை செய்துவிட்டார்கள் என்றும், ஏற்கனவே இருந்த இடங்களில் இருந்தும் அஸ்பெஸ்ரசை அகற்றி விட்டனர் என்றும் கூறி, ஏன்டாப்பா இதைப் போட்டனி எவ்வளவு ஆபத்தான விடயம்? என்று கேட்கின்றான் பாலா. பொருளாதார கஷ்டங்களுடன் போராடி ஒரு வீட்டைக் கட்டி ஒப்பேற்றும் சூழலில் அதனைக் குறித்து சிறிதும் சிந்தியாது பாலா வார்த்தைகளை விடும்போது அது சிவாவுக்கு சிரிப்பைத் தருகிறது. இவ்விடத்தில் சாந்தன் அந்நிகழ்வை இவ்வாறு பதிவு செய்வார். 'இதைக் கேட்டு, விருந்தினர் என்ன நினைப்பார்களோ என்று கூட பாராமல் பலமாகச் சிரிக்கின்றான் சிவா. அச்சிரிப்பில் ஆயிரம் அர்த்தங்கள் உறைந்துள்ளன. அச்சிரிப்பில் பொதிந்துள்ள அர்த்தங்கள் குறித்து ஆசிரியர் விவரிக்கவில்லை. போதனை செய்யவில்லை. பாடம் நடத்தவில்லை. வாசகரிடம் விடையை விட்டு நகர்ந்து விடுகிறார்.

29.07.1987இல் இலங்கை அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியப் படைகள் அமைதிப் படைகள் என்ற பெயரில் இலங்கையில் கால் பதித்தன. வந்து குறுகிய காலப்பகுதிக்குள் விடுதலைப் புலிகளுக்கும் அமைதிபடைக்கும் இடையில் போர் மூண்டது. இப்போரில் அப்பாவிப் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டதுடன் அவர்களின் உடமைகளும் சேதமாக்கப்பட்டன. அமைதிப் படையினரால் நிகழ்த்தப்பட்ட வன்முறைகளை ஜெயகாந்தன், வாஸந்தி, ஜெயமோகன் முதலான இலக்கியவாதிகள் மறுத்து வரும் இந்நிலையில் சாந்தனின் படைப்புக்கள் பல அவ்வன்முறைகளை அதன் காலப்பின்னணி, காலச்சூழலுடன் இணைத்துப் பதிவுசெய்துள்ளன. 'வேலிகளின் கதை' இவ்வகையில் முக்கிய படைப்பு. கிருஷ்ணன், சிங்கர் என அப்பாவித் தமிழர் இருவரை இந்திய இராணுவம் பிடித்துச் செல்லும்போது அவ்விருவரும் எதிர்கொள்ளும் உள நெருக்கடிகளை இச்சிறுகதை பேசுகிறது. இராணுவ அச்சுறுத்தலால் அவ்விருவரும் பட்டபாடுகளை, வலிகளை ஈழபூமியில் என் போன்ற பலரும் அனுபவித்துள்ளனர். மக்கள் அச்சத்தோடு வாழ்ந்த வாழ்வையும் மக்களின் உடமைகள் அந்நியப்

காலச்சுவடு
வெளியீடு




'சித்தன் சரிதம்'

(நாவல்)

ஆசிரியர் : சாந்தன்

பக். 368 | விலை: ரூ.450



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளால் எவ்வாறு சேதமாக்கப்பட்டன என்பதையும் இச்சிறுகதை நுண்மையான மனவுணர்களுக்கூடாக பதிவு செய்கிறது.

காலங்கள் தொகுப்பில் இடம் பெறும் 'எழுதாக் கடிதம்' இந்திய இராணுவம் ஈழத்தை விட்டு வெளியேறிய காலப்பகுதியை கடித உத்திக்கூடாகப் பேசும் சிறுகதை. இந்திய இராணுவம் எமக்கிழைத்த கொடுமையையும் தாண்டி அவர்களை மன்னித்து வழியனுப்பி வைக்கும் சாந்தனின் மனம் விசாலமானது. 'நாங்கள் போகத்தான் வேணும், நான் திரும்பிப் போகப் போகின்றேன்' என்று ஒரு முறை சொன்ன இந்திய இராணுவ வீரனை 'உங்களவர்கள் எல்லாரும் போல ஒரு முகந்தான். ஆனால் முறுக்கிய கூர் மீசைக்குப் பின்னால் ஒரு குழந்தை எட்டிப் பார்த்தது' என்று எழுதாத கடிதத்தில் சாந்தன் விழித்துக் கூறுவது போல எந்தத் தமிழனாலும் கூறமுடியாது. இந்திய இராணுவம் செய்த கொடுமையை அவர்கள் ஏற்படுத்திய வலியை மறந்து மன்னித்து இவ்வாறு எழுதுவது ஈழத்திலக்கியத்தில் சாத்தியமன்று. ஆனால் இச்சிறுகதையில் சாந்தன் அதனைச் சாத்தியமாக்கியுள்ளார். பாலியல் வல்லுறவு, சித்திரவதை, கொலை உட்பட பலவித மோசமான மனித உரிமைகளை மீறும் செயல்களில் ஈடுபட்ட இந்திய இராணுவத்தை சாந்தனைப் போல் எந்த மறத்தமிழனும் மறக்க மாட்டான். 1987 ஒக்டோபர் 21ஆம் நாள் வைத்தியசாலையில் சேவையில் இருந்த மூன்று வைத்தியர் இரு தாதிமார் ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 68பேர் கொல்லப்பட்ட சம்பவம் இக்கதையை வாசித்தபோது என் மனத்தில் நின்று நிழலாடிச் செல்கிறது. முடிக்கும்போது 'உங்களைப் போல் இன்னும் வேறு எத்தனைபேர் இருந்திருக்கலாம். ஆனால் எய்யப்பட்ட அம்புகள் நீங்கள்...' என முடிப்பார். திட்டமிட்ட முறையில் நிகழ்ந்தேறிய இச்சம்பவங்களுக்குப் பின்னால் இருக்கும் கொடூர பெரும்சக்திகளை கண்டிக்க வேண்டிய நிலையில் அம்புகளை நோவதால் எப்பயனும் விளையப்போவதில்லை என்பதை சாந்தன் இச்சிறுகதையில் ஆழமாக விமர்சித்துச் செல்கிறார்.

காலச்சூழலுக்கமைய மாறும் மனித மனத்தின் இயல்பை 'நன்றி' சிறுகதையில் தொட்டுக் காட்டுகிறார். இந்திய இராணுவம் நாட்டில் இருந்த அவ்வளவு காலமும் வீட்டிலிருந்த பெட்டை நாயை அவர்கள் நாட்டை விட்டு வெளியேறியதும் அடித்து விரட்டுகின்றார் மணியத்தார். 'பெட்டையெண்டாலும் அதை நம்பித்தானே இருந்தனாங்கள் இவ்வளவு நாளும்' என்று சொல்லும் மனைவியிடம் மணியத்தார் கூறுவார் 'அது அப்ப... இப்ப இந்தியன் ஆமி போட்டுது. இனி என்ன சவத்துக்கிதை?'. அக்காலப்பகுதியில் நாய்கள் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அருந்துணையாக இருந்த உண்மையை இச்சிறுகதையில் சாந்தன் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறார். சோதனை, ரோந்து நடவடிக்கை என்ற பெயரில் இந்திய இராணுவம் தெருக்கள், வீடுகளுக்குள் இறங்கும்போது அவர்களின் சப்பாத்தி மற்றும் எண்ணை வாடைகளை நாய்கள் மோப்பம்பிடித்து குரைக்கத் தொடங்கிவிடும். ஊர் நாய்கள் குரைப்பதை வைத்தே மக்கள் ஆமிக்காரர்கள் சுற்றிவளைப்பதை ஊகித்துவிடுவார்கள். குறிப்பாக இரவு வேளைகளில் வித்தியாசமான முறையில் நாய் குரைப்பதை வைத்து இந்திய இராணுவத்தின் நடமாட்டத்தை மக்கள் அறிந்து கொள்வதுடன் எச்சரிக்கையாகவும் இருப்பர். இந்திய இராணுவ காலத்தில் இறந்தவர்களுக்கு இந்தச் சிறுகதை நெருக்கமாக இருக்கும். இதன் தொடர்ச்சியை அவரது 'சுற்றி வளைப்பு' சிறுகதையிலும் காணலாம். குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தைப் போட்டுவிட்டு அறுபது வயதுக்கு கீழ்ப்பட்ட அனைவரையும் குறிப்பிட்ட இடத்துக்கு வரும்படி கூறிவிட்டு செல்லும்போது மக்கள் மனத்தில் ஏற்படும் உயிரச்சத்தை நுட்பமான மனோவுணர்வுகளுக்கூடாக வெளிப்படுத்தும் கதையே 'சுற்றிவளைப்பு' ஆகும்.

ஈழவிடுதலைப் போராட்டம் குறித்த தீர்க்க சிந்தனையுடன் கூடிய தெளிவான பார்வை சாந்தனுக்கிருந்தது. அவருடைய எழுதப்படாத அத்தியாயம் நாவலில் அவர் அதனைத் தெளிவுபடுத்தி உள்ளார். ஈழப் போராட்டம் செல்ல வேண்டிய பாதையை அவர் தெளிவாகவே வரையறுத்தார். இன்று நமது உரிமைகளுக்கு போராட வேண்டிய சூழலில் எமது எதிர்ப்பை எவ்வகையில் காட்ட முனைய வேண்டும் என்பதை ரிஷ்கா கதையில் காட்டியுள்ளார். இக்கதையை முடிக்கும்போது அசோகமித்திரனின் கதையொன்று தான் ஞாபகம் வந்தது எனக் கூறி 'ரிக்ஷா?...' ஆ ரிஷ்கா!' எனக்கூறி முடிப்பார். சாதாரண மனிதருக்கு இது வெறும் சொல். ஆனால் அசோகமித்திரனின் கதையை வாசித்தவருக்கு இச்சொல் ஒரு துருப்புச் சீட்டு. அசோகமித்திரனின் ''ரிக்ஷா'' என்ற சிறுகதையில் மகன் 'ரிக்ஷா'எனச்சொல்லாது அச்சொல்லை 'ரிஷ்கா' என்றே தவறாக உச்சரிப்பான். தகப்பன் பலமுறை முனைந்தும் மகன் அச்சொல்லைத் தவறாகவே உச்சரிப்பான். மகனைத் திருத்த முயன்று தகப்பனின் முயற்சி தோல்வியில் முடியும் தருணத்தில் சந்தைக்குச் சென்ற மனைவி குடையை மறந்துபோய் அங்கேயே விட்டு விட்டு திரும்பி வந்தது நினைவுக்கு வருகிறது. மறுபடியும் கடை வரை செல்ல வேண்டுமே என்ற அலுப்பு அவளுக்கு. அச்சமயத்தில் கணவன் கூறுவார். 'ரிஷ்கா'வில போய் வந்திடேன்' என்று அதற்கு மனைவி குழப்பத்துடன் ஒருமாதிரி அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு 'என்ன சொன்னீர்கள்?' என்று கேட்பாள். அக்கணத்தில் கணவன் தன் தவறைத் திருத்திக் கொண்டு 'ரிக்ஷாவில் போய் வந்திடேன்னு சொன்னேன்' என்பான். 'என் காதுல என்னமோ 'ரிஷ்கா'ன்னு சொன்னமாதிரி விழுந்தது' என்பாள். அதோடு கதை முடியும். 'ஒருவனுடைய தவறைத் திருத்த முனையும் வேளையில் நாங்களும் நம்மை அறியாமல் அத்தவறை புரிந்தவராவோம்' என்பதற்கு இச்சிறுகதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல உதாரணம். அது போலத்தான் ஈழப்போராட்டம், தமிழர் உரிமை என்று வரும்போது நாம் நம்மை மாற்றத் தயாரில்லை. ஓடிய வழித்தடத்திலேயே இயங்க முற்படுகிறோம். புதியபாதைகள் குறித்த தெளிவு நம்மிடம் பலருக்கு இல்லை. எதனை நாம் செய்ய வேண்டும் என்பதை சாந்தன் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்.

'இங்கே பேசிய பிரதிநிதிகள் இதை ஒரு ஹர்த்தால் என்றும் துக்கதினம் என்றும் குறிப்பிட்டார்கள். அது தவறு. நாங்கள் அநுஷ்டிக்கப்போவது எதிர்ப்பு தினம். எங்கள் எதிர்ப்பை – இனப்படுகொலைக்கு எதிரான மக்கள் எதிர்ப்பை அகில உலகிற்கும் எடுத்துக்காட்டப்போகிற தினம் அது'

சாந்தனின் இப்பதிவு முக்கியமானது. எம்மால் அணுகப்பட வேண்டிய பொறிமுறையை நாம் அன்றைய சூழலில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாட்டை இச்சிறுகதை விளக்கி நிற்கிறது. சாந்தனின் கதைகளில் போதனைகள் கிடையாது. அவர் தனக்கேயுரிய சொல்லாடல்களுக்கூடாக எழுப்பும் சலனங்கள் ஆழமானவை.

'அதே விதியெனில்' சிறுகதையும் சாந்தனின் அரசியல் நிலைப்பாட்டை விளக்கி நிற்கிறது. பெரியவருக்கும் கதை சொல்லிக்கும் இடையிலான உரையாடலே சிறுகதையாக விரிகிறது. இன்றைய அரசியல் நிலைப்பாட்டை அன்றைக்கே பேசும் இச்சிறுகதை தீர்க்க தரிசனமான முடிவொன்றையும் கூறி நிற்கிறது. 13ஆம் திருத்தச் சட்டப்படி வடக்கு கிழக்கு இணைப்புக்கு சர்வசன வாக்குரிமை தேவையென்றால் இலங்கையோடு இணைந்திருப்பதில் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு சர்வசன வாக்குரிமையை நடாத்த வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றையும் இச்சிறுகதை முன்வைக்கிறது.

தலைமுறைகளை இணைத்து கதை சொல்கின்ற உத்தியை நாவல்களில் நீலபத்மநாபன், சிவசங்கரி முதலியோர் முறையே தலைமுறைகள், பாலங்கள் நாவல்களில் கையாண்டுள்ளனர். ஆனால் காலங்களை இணைத்து கதை சொல்லும் உத்தியை சாந்தன் 'காலங்கள்' சிறுகதையில் கையாள்கிறார். கல்லுண்டாய் வெளியைத் தளமாக வைத்து எழுதப்பட்ட இச்சிறுகதையில் புலம் ஒன்று காலத்துக்கேற்ப அது கொண்ட காட்சிகளே வெவ்வேறானவை. 1963, 1973, 1988, 1989, 1990, 2003 என்று வெவ்வேறு காலப்பகுதியில் கல்லுண்டாய்வெளிப் பகுதியில் நிகழ்தேறிய மாற்றங்களை வரலாற்று ஆவணமாக இச்சிறுகதை பதிவு செய்கிறது. வீடோ, கடைகளோவன்றி வெறும் பொட்டல் வெளியாய் 1963 இல் காட்சியளித்த கல்லுண்டாய்வெளி 1973 இல் மடம், பொளிகல்லு, கேணி என விரிகிறது. தாவரவியல் படிப்பதற்கான இடமாகவும் கருதப்படும் கல்லுண்டாய்வெளி 1988களில் சோதனைச் சாவடி என்ற பெயரில் தமிழ் மக்கள் நிம்மதியை குலைக்கும் இடமாகவும் மாறுவதைக்காட்டும் சாந்தன் 1989இல் மக்கள் ரசிக்கும் கண்ணுக்கினிய இடமாகவும் 1990களில் இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சுக்கு அஞ்சி ஒதுங்குகின்ற இடமாகவும் காணப்படுகிறது. 2003இல் இவ்விடத்தின் புறச்சூழலானது முற்றிலும் மாறிப்போய் நவீன குடியிருப்பு வசதிகள் கொண்ட இடமாகவும் மக்கள் மனங்கவரும் இடமாகவும் காணப்படுகிறது. கல்லுண்டாய்வெளியின் நாற்பது வருட கால இருப்பை பன்னிரண்டு பக்கத்துக்குள் பதிவு செய்கிறது இச்சிறுகதை.

சாந்தனின் 'புதிய முதலைகள்' இன்றைய விமர்சகர்களின் நிலையை அன்றே எடுத்துக்காட்டிய சிறுகதை. புத்தக வெளியீட்டு விழாவில் நூலை வாசியாது விமர்சனம் என்ற பெயரில் வாய்க்கு வந்ததை கூறிச் செல்லும் போலி விமர்சகர்களின் முகத்திரைகளை வெளியுலகுக்கு அம்பலப்படுத்தும் சிறுகதை. அறிவுப் போராட்டத்தின் ஊடாக இத்தகைய விமர்சகர்களின் முகமூடிகள் கிழித்தெறியப்பட வேண்டிய அவசியத்தையும் இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது. விமர்சக எதிர்புணர்வின் காரணமாக எழுதப்பட்ட இச்சிறுகதை கதைக்கரு, களம், பாத்திரவார்ப்பு என சிறுகதைக்குரிய அம்சங்களைக் கொண்டு விளங்குகிறது. பேராசிரியர் நுஃமான் கூறுவது போல இச்சிறுகதை தனிநபர் தாக்குதலல்ல. விமர்சனம் என்ற பெயரால் மேடையைக் கேலிக்குரிய தளமாக அமைத்துக்கொண்டு சமுதாய மறுமலர்ச்சி என்ற பெயரில் ஏமாற்று வித்தைகளைச் செய்யும் போலி இலக்கியவாதிகளைக் கண்டிக்கிறது.

சாந்தனின் கதையில் வாழும் மனிதர்கள் வாழ்க்கையின் சாரத்தைப் பிரதிபலிப்பவர்கள். தன் சிறுகதைகளில் *Documentary Realism* எனப்படும் செய்தித் தொகுப்பு நடப்பியலைத் தவிர்த்து *Critical Realism* எனப்படும் விமர்சன நடப்பியலைச் சமூக, உளவியல் அடிப்படையில் கையாண்டவர். தனிமனித அனுபவத்தின் வெளிப்பாடக அமையும் சாந்தனின் படைப்புலகம் மானுட நேசிப்பை அவாவி நிற்பவை. இப்புனைவுகள் ஓரிலங்கைக்குள் ஒன்று பட்ட உணர்வுடன் இனபேதமின்றி வாழ்வதற்கான எத்தனங்களைப் படைப்பின் வழி சாத்தியப்படுத்தியவை. சாந்தனின் பெரும்பாலான சிறுகதைகள் ஒரு கணத்தில் நடப்பதால் சம்பவங்கள், நிகழ்ச்சிகள் விவரணத்திரட்டாக அமையாது உள்ளியல்பான எல்லைப்பாடுகளைக் கொண்டதாக அமைகின்றன. சாந்தனின் அலாதியான சரளமான வெளிப்பாட்டுத் திறனை ஒரு சில கதைகளில் விளங்கிக் கொள்வதற்கு வரலாற்றறிவுடன் இலக்கிய அறிவும் தேவைப்படுகிறது. இதனால் அவருடைய சிறுகதைகள் தனித்துப் பயணிக்கின்றன. ஈழத்திலக்கிய வரலாற்றில் சாந்தனின் சிறுகதைகள் பேசுமுறைக்கூடாகவும் சொல்ல முயலும் உத்திக்கூடாகவும் வடிவம் சார்ந்த அமைப்புக்கூடாகவும் புதிய பாதையை வகுத்து தனித்துப் பயணிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனின் நாவலும் குறுநாவல்களும்

## ஓர் அறிமுகம்

1970 இல் வெளிவந்த ''பார்வை'' என்ற சிறுகதைத்தொகுதி மூலம் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகமான சாந்தன் தொடர்ச்சியாக இலக்கிய உலகில் சஞ்சரித்திருப்பதை அவரது படைப்பிலக்கியப் பட்டியல் காட்டுகின்றது. இவ்விலக்கியப் படைப்புகளுள் 1978 டிசெம்பரில் யாழ்ப்பாணம் வரதர் வெளியீடாக வெளிவந்த 84 பக்கங்கள் கொண்ட ஒட்டுமா என்ற நாவலையும், கிருஷ்ணன் தூது(1981), மனிதர்களும் மனிதர்களும் (1981), ஆரைகள் (1984), எழுதப்பட்ட அத்தியாயங்கள் (1987), தேடல்(1994), வேலிகளின் கதை (1994), உறவுகள் ஆயிரம் (1997) என்ற குறுநாவல்களையும் இக்கட்டுரை கவனத்தில் கொள்கிறது. இவை பற்றிய சுருக்கமானதோர் அறிமுகத்தை அளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இது 31.07.2021 அன்று இலக்கியவெளி சஞ்சிகையின் இணையவழிக் கலந்துரையாடல் -அரங்கு 9 இல் வாசிக்கப்பட்ட கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவமாகும்.



சாந்தனின் எல்லாப் புனைவுகளுமே அரசியலை வெளிப்படையாகப் பேசுவதில்லை எனினும், அரசியலே அவற்றின் அடிநாதமாக விளங்குகின்றது எனில் அது தவறாகாது. எனவே இந்நெடும்புனைவுகளை அவை எழுந்த அரசியல், சமூகப் பின்னணியில் வைத்து விளங்கிக் கொள்ளல் பயனுடையது. பொதுவாக, இலங்கையின் தமிழ்-சிங்கள தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடே இப்புனைவுகளின் பின்னணியாக அமைகின்றது. சமகால வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யும் ஊடகமாகப் புனைகதை தொழிற்படுதலையும் இங்கு அவதானிக்கலாம். நிகழ்வுகள் தோற்றுவிக்கும் உணர்ச்சிகளை விட, அவை குறித்த சிந்தனைகளே புனைவுகளை வியாபித்து நிற்கின்றமைக்கு ''ஆரைகள்'', ''எழுதப்பட்ட அத்தியாயங்கள்'' என்ற குறுநாவல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஒருவித ''நடுநிலைத்'' தன்மையுடனே இக்கதைகள் பொதுவாகக் கூறப்படுகின்றன. அதற்கேற்பத் தெளிவாகவும், எளிமையாகவும் உள்ள அவரது மொழிநடையில் காணப்படும் பேச்சுமொழி வழக்குகள் மனம் கவர்பவையாக இருக்கின்றன. கதைகளின் கருப்பொருள் இன்னதென்பதை அடையாளம் காண அவர் கவனமாகத் தேர்ந்தெடுத்துச் சூட்டிய தலைப்புகள் உதவுகின்றன. குறியீடு, ஊடுபனுவலாக்கம் (*Intertextuality*), நினைவு மீட்பு, முரண்கள் முதலியன இவர் புனைவுகளிற் காணப்படும் இலக்கிய உத்திகளுட் சிலவாகும்.

### ஒட்டுமா (1978)

1972 இல் எழுதப்பட்டு 1976 இல் தினகரன் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்த ஒட்டுமா நாவல் இரண்டு வெவ்வேறு இனங்களுக்கிடையிலான கலப்புத்திருமணம் மூலம் இனஒற்றுமை சாத்தியமாகுமா? என்ற கேள்வியை எழுப்புகின்றது. 1960 களை ஒட்டிய காலப்பகுதியில் கட்டுப்பெத்தையில் படிக்கும் சதா எனும் மாணவனுக்கும், அவன் தங்கியிருக்கும் பீரிஸ் எனும் சிங்கள வீட்டுரிமையாளரின் பெண் பிள்ளைகளுள் ஒருத்தியான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்திக்குமிடையில் காதல் மலர்கிறது. எனினும், நிலாந்தி தன் பெற்றோரின் விருப்பத்திற்கிசைய அவ் உறவிலிருந்து விலகிக் கொள்கிறாள். அதற்காக இது ஒரு துன்பியல் காதல் கதை என்று சொல்வதற்கில்லை. சிங்கள -தமிழ் கலப்புத்திருமணத்தின் வழியாக அதிகமாகப் பாதிக்கப்படுவது சிறுபான்மையான தமிழினமே என்ற கருத்தினை சதா கொண்டிருப்பவன். அதனால் நிலாந்தியின் முடிவினால் அவன் முற்றாக மனமுடைந்து போகவில்லை." சதா மெல்லத் திரும்பி,



கடற்கரையோரமாகத் தன் அறையை நோக்கி நடந்தான். உடம்பே கனத்தது. அதே சமயம், ஏதோ பாரங் கழன்றது போல, இனம் புரியாத உணர்வு ஒன்றும் ஏற்பட்டது. தூரத்தே, ஒளிப்புள்ளிகள் மின்னிக் கொண்டிருந்தன" என்று நாவல் நிறைவுறுகின்றது.

தமிழ் - சிங்களக் கலப்புத்திருமணத்தைச் சுட்டுவதற்கு இந்நாவலின் தலைப்பான ஒட்டுமா என்பது மிகச் சிறந்த குறியீடாகும். எனினும் நாவல் தலைப்பு வாசகருக்குக் கொடுக்கும் எதிர்பார்ப்புக்கும், கதை முடிவிற்குமிடையில் முரண்பாடு உண்டு.

## கிருஷ்ணன் தூது (1981)

கிருஷ்ணன் தூது என்ற தலைப்பு மகாபாரதத்தில் வரும் முக்கிய நிகழ்ச்சியை நினைவுபடுத்துவது. அவ்விதிகாசத்தில் பாண்டவர் சார்பாக தூது சென்ற கிருஷ்ணனிடம், பாண்டவர்களுக்கு ஐந்து ஊர் கூடக் கொடுக்கவியலாது என துரியோதனன் மறுத்து விடுகிறான். அதன் விளைவே பதினெட்டு நாட்களாக நடந்த, இருசாரார்க்கும் பேரழிவினை ஏற்படுத்திய மகாபாரதப் பெரும் போர். இக்கதையில் அலுவலக நலன்புரிச்சங்க "லெட்டர் ஹெட்டில்' சிங்கள, ஆங்கில மொழிகளுடன் தமிழிற்கும் சம அந்தஸ்து கோரி, தமிழ் ஊழியர்கள் விடுத்த நீதியான கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது. அதனால் தமிழ் ஊழியர்கள் கூட்டாக நலன்புரிச்சங்க உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகின்றனர். இத்தகைய மொழிப்புறக்கணிப்பால் நாட்டில் தோன்றும் யுத்தமும், அழிவும் சூசகமாகக் கதைத்தலைப்பால் உணர்த்தப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1981இல் வெளிவந்த இக்கதை "இனப்பிரச்சினையின் மிகப்பெரிய வரலாற்றுப் பரிமாணத்தை ஓர் அலுவலக நிகழ்ச்சிக்கூடாக உணர்த்துகின்றது" என்பார் பேராசிரியர். நா. சுப்பிரமணியன்.

## மனிதர்களும் மனிதர்களும் (1981)

தனிநாடு கோரி ஆயுதப்போராட்டங்கள் தொடங்கப்பட்ட பின்னர், இலங்கையின் தலைநகரான கொழும்பிலும், பிற சிங்களப் பிரதேசங்களிலும் வாழ்ந்த தமிழர்கள் காலாகாலம் அனுபவித்த வன்முறை அதிகம் பேசப்படாது போய்விட்டது. அவ்வகையில் 1977 இனக்கலவரகாலத்தை மையப்படுத்தி எழுதப்பட்ட மனிதர்களும் மனிதர்களும் என்ற கதை மிக முக்கியமானது. இனக்கலவரகாலத்தில் தமிழ்மக்கள் பட்ட அந்தரங்களையும், அவதிகளையும் இக்கதை பேசுகிறது. அதே சமயம் நடுவுநிலைமையில் நின்று கொண்டு பேசுகிறது. "அந்த அமைதியான கிராமத்தின் மக்கள் இப்படி இருப்பார்கள் என்று நினைக்க முடிந்ததில்லை" என்று ஒரு ஆதங்கப் பெருமூச்சுடன் தொடங்கும் கதை" அவர்கள் கத்தியும், பொல்லுமாய் வந்து யாழ்ப்பாணம் சென்ற ரயிலைத் தாக்கியபோது எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பார்க்க முடியாமலிருந்தது" என்று இனக்கலவரத்தின் உச்சக் கொடூரத்தினைத் தொட்டுக் காட்டுகின்றது.

1950 களில் வளர்ச்சி கண்ட சிங்கள-பௌத்த மேலாண்மையின் கோரதாண்டவத்தை, இக்கதை மிக இயல்பாகச் சொல்லிச் செல்கிறது. ஒரு சூட்கேஸில் உடுப்புகளுடன் யாழ்ப்பாணம் தப்பிச் சென்று விடலாம். ஆனால் வளர்த்த மீன்களையும், பூஞ்செடிகளையும் என்ன செய்வது என்று கதையின் பிரதான பாத்திரம் யோசிப்பது சாந்தனது கதைகளிற் அதிகம் காணப்படாத வாசகர்களை நெகிழ்ச்சிக்குள்ளாக்கும் தருணங்களில் ஒன்று. தமிழர்களைத் தாக்கும் சிங்களவர்களை வைத்துச் சிங்கள இனத்தினர் அனைவரையும் எடைபோடுவதைக் கதை தவிர்த்து, வாடகை வண்டியில் கைவிரல் நசுங்கிய ஆபத்து வேளையில் விரைந்து செயற்பட்டவனாகச் சிங்கள வண்டியோட்டியை அறிமுகப்படுத்துகின்றது. அதேசமயம், சிங்களவர்களின் தாக்குதல்களுக்குப் பயந்து கொழும்பை விட்டும் ஓடும் தமிழர் சிலர் புகையிரத ஆசனங்களுக்காகத் தமக்குள் சண்டையிடும் முரண்பாட்டினையும் கதை காட்டுகின்றது. இது, பின்னர், இலங்கை அரசை எதிர்த்து உருவான தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கிடையிலான பூசல்களை நினைவுபடுத்துகிறது. தாக்கும் சிங்களவர்கள், தாக்கப்படும் தமிழர்கள் எனும் இருதரப்பினரையும் எதிர்நிலையில் வைத்துப் பார்த்தல் எவ்வளவு தூரம் சரியானதாக இருக்கும் என்ற கேள்வியை இக்கதை எழுப்புகிறது. இனரீதியாக மக்களை ஒரே குணாதிசயங்கள் கொண்டவர்களாகப் பார்ப்பதன் (ethnic stereotype) பிழைபாட்டை உணர்த்துகின்றது.

ஆரைகள் (1982) எனும் குறுநாவல் 1977 இனக்கலவரத்தின் பின்னர் கொழும்பில் மீண்டும் பணியாற்ற வந்திருப்பவனுடைய பார்வையிலிருந்து சொல்லப்படுகின்றது. இக்கதையின் பிரதான பாத்திரம். மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த தமிழ்ப் பாத்திரம் ஆகையால், மத்தியதர வர்க்கத்தினர் பிரச்சினைகளும், கொழும்பில் தமிழனாயிருத்தலின் பிரச்சினையும் இணைத்தே பேசப்படுகின்றன.

நகரமயமாக்கலின் தீவிர வளர்ச்சியினால் எழும் பிரச்சினைகள், சொந்தமாக வீடு வாங்கவியலாத மத்தியதர வர்க்கத்தினர் பிரச்சினை, வாடகை வீட்டுரிமையாளரால் ஏற்படும் பிரச்சினை, இனக்கலவரத்தின் பின்னர் பொது வெளியில் தமிழர் தமிழைப் பேசமுடியாத இக்கட்டான நிலை, ஆனால் முஸ்லிங்கள் தமிழைப் பேசக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாயிருக்கும் முரண் நிலை, இனக்கலவரத்தின் பின்னர் தமிழர் பொது வெளிகளை முன்பொருகாலும் இல்லாதவாறு அந்நியமாய் உணரல், முன்னர் மாதிரி குடும்பத்துடன் ஒன்றாக வாழ முடியாது குடும்பம் ஊரிலும் தாம் மட்டும் தலைநகரிலும் வாழும் நிலை, வாடகைப் பிரச்சினை காரணமாக அலுவலகத்திலிருந்து தூரத்தே ஆனால் தமிழர் செறிந்து வாழும் பகுதியில் வாழவேண்டிய நிலை. ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்தலால் ஏற்படும் மனச்சலிப்பு, நடுத்தர ஊழியர் வேலை அலுப்புகள், அலுவலகத்தில் இலைமறைகாயாகக் காணப்படும் சாதியம் என இக்கதை பல பிரச்சினைகளைத் தொட்டுச்செல்கின்றது.

இக்குறுநாவலைப்பற்றி பேராசிரியர்.நா. சுப்பிரமணியன், "சூழ்நிலையின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு சிங்களவர்களுடன் ஒத்து மேவி வாழ முற்படும் ஒரு சராசரி மனிதனை இக்குறுநாவல் தரிசிக்க வைக்கின்றது. தனி மனித நிலையிலான 'தான்' என்ற தளத்தில் நின்று விரிந்து, குடும்பம், சமூகம், இனம், வர்க்கம், உலகம், பிரபஞ்சம் என்ற வகையில் பார்வை விரிந்து செல்வதை இதிற் காணலாம்" என்று கூறுவார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் வாசித்த கதைகளுள் தனிமனித நிலையில் நின்று அதிகமான விரக்தி, அவநம்பிக்கை என்பவற்றை வெளிப்படுத்தும் புனைவு இதுவாகும், எல்லை மீறிச் செல்லும் நகரமயமாக்கல், இனவன்முறை காரணமாகத், தனிமைப்படல் (*isolation*), வாழ்வில் அர்த்தமின்மை (*meaninglessness*), வாழ்வை மாற்றும் ஆற்றலின்மை (*powerlessness*) என்பவற்றை உணரும் ஒருவனின் கதை இது. இத்தகைய எதிர்மறையான மனவுணர்வுகளுடன் போராடும் ஒருவன் இயற்கையழகு தொழிற்சங்க வேலை, வாசித்தல் எனும் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி "இருக்க" முற்படுதலையே இக்கதை சொல்கிறது எனலாம்.

எழுதப்பட்ட அத்தியாயங்கள் 1987 ஜுலையில் சுதுமலை அம்மன் கோயில் முன்றிலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வொன்று நடைபெறவிருந்த சமயத்தில், அந்த நிகழ்விற்கு வழிகோலிய இலங்கையின் இனப்பிரச்சினையின் வரலாறு, பிரதான பாத்திரமான கிருஷ்ணனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடனும் அனுபவங்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டு, காலக்கிரமத்தின்படி விமர்சனங்களுடன் முன்வைக்கப்படுகின்றது. சாதாரண பொதுமகன் வாயிலாகக் கூறப்படும் இக்கதையின் தலைப்பு உணர்த்தும் விடயம் கவனிக்கப்பட வேண்டியது. எழுதப்பட்ட என்ற இந்த செயப்பாட்டுப் பெயரெச்சம் செயலாண்மையற்ற (*agency*) இல்லாத, தம் தலைவிதியை தாமே நிர்ணயிக்கவியலாத பொதுமக்களின் கையறு நிலையைக் குறிக்கிறது. அதிலும் விசேடமாக, ஆயுதப்போராட்ட காலத்தில் பொதுமக்களின் பங்களிப்பு என்ன என்பது குறித்த கேள்வியை எழுப்புகின்றது.

"போராளிக்குழுக்களும் தலைவர்களும் போராட்டங்களை முன்னெடுப்பவர்களாயிருக்கலாம். ஆனால் அவற்றில் பங்கெடுப்பவரும் வெற்றி கொள்ள வைப்பவர்களும் மக்களேயாவர். மக்கள் பங்களிப்பில்லாது எப்படிப் போராட்டமாகும்? அது இங்கே எவ்வளவு சாத்தியமாயிற்று?' காலங்காலமாக தமிழ்ப் பொதுமக்களின் தலைவிதி அந்தந்தக்காலங்களில் அதிகாரத்தில் இருப்பவர்களினால் தீர்மானிக்கப்பட்டு வருவது. உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு வெறும் பார்வையாளராக மட்டுமே வாழ்ந்து கொண்டிருந்த பொதுமக்களின் பிரதிநிதியாகவே கிருஷ்ணனைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

## வேலிகளின் கதை (1994)

வேலிகளின் கதை இந்தியன் அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் நிலைகொண்ட போர்க்காலச் சூழலின் பின்புலத்தில் எழுதப்பட்டது. முகாமில் இருப்பவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக உணவை ஒழுங்கு செய்ய முனையும் இரு பொதுமக்களின் கதையான இது ஓர் அரசியல் புனைவு ஆகும். இந்திய அரசினால் எவ்வாறு தமிழர்கள் ஏமாற்றப்பட்டு அழிக்கப்பட்டனர் என்பதே இக்கதை உணர்த்தும் கருப்பொருள்.

கதையின் மூன்றாம் பக்கத்திலுள்ள வர்ணனை 1987-88 காலத்தில் இந்திய அமைதிப்படை நாட்டில் ஏற்படுத்திய பேரழிவின் சிறு சித்திரமாக இருக்கிறது: "சரிதான். முன்னால் போகிறவன் இடது பக்கமாகத்தான் திரும்பப் போகிறான். திரும்பினார்கள். என்ன இது? கிருஷ்ணன் திகைத்தான். தெருவின் இருபுறத்து வேலிகளும் எரிந்து, கதியால்கள் கருகி... மதில்கள் உடைந்து கதிரேசு கடைப்பலகைகள் கூட. இதென்ன? உயிரசைவே இல்லாத வெறுமை உறைத்தது." பொதுமக்களாகிய அவ்விருவர்க்கும் நிகழவிருக்கும் அனர்த்தத்தை முன்னறிவிக்கும் உத்தியாகவும் இவ்வர்ணனை தொழிற்படுகின்றது..

"வேலிகளின் கதை" எனும் தலைப்பில் உள்ள 'வேலிகள்' என்பது வேலியடைத்து வாழ்ந்த யாழ்ப்பாணப் பொதுமக்களைக் குறிப்பதாக நான் எண்ணினேன். ஆனால், கதாசிரியர் இந்திய அமைதிப்படையினரைக் குறிக்கவே 'வேலிகள்' என்ற பதத்தைக் கையாண்டார் என்று இலக்கியவெளி கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. "வேலியே பயிரை மேய்ந்தாற் போன்று" என்ற தொடர் தமிழில் இருக்கின்றதல்லவா? அவ் அர்த்தத்தில் அச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

தேடல் (1994) என்பது வாழ்வா, சாவா என்று நிச்சயமற்ற அச்சம் நிறைந்த போர்க்கால நாட்களில் தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பிற்காகப் புத்தகங்களைத் தேடி அலைபவனின் கதை. இதை வாசித்தபோது எனக்கு சந்திரபோஸ் சுதாகரின் ''புத்தகம் மீதான எனது வாழ்வு'' என்று தொடங்கும் கவிதை நினைவிற்கு வந்தது.

போர்க்காலத்தில் மனிதர்கள் இயல்பான வாழ்க்கை வாழமுடியாவிட்டாலும் கூட, குண்டுவீச்சுகள், பொருளாதாரத் தடைகள், பொருள் தட்டுப்பாடு, போக்குவரத்துக் கஷ்டங்கள் என்பனவற்றுக்கு மத்தியில் 'புதிய'' ஓர் இயல்பான நிலைக்குத் தம்மைப் பழக்கப்படுத்தி வாழ முயன்றுள்ளனர் என்பதை இக்கதை உணர்த்துகிறது. போருக்கு முன்னர் புத்தகங்களை வைத்திருப்பதனால் பிரச்சினை வருமோ என்று அஞ்சி அவற்றை எரித்தும், புதைத்தும் வந்த கதையின் பிரதானபாத்திரமான ரமணன் போர் மும்முரமாக நடக்கும் காலத்தில் புத்தகங்களிடம் சரண் புகுகின்றான். அவற்றைத் தேடித் தேடி வாசிக்கின்றான். ஓர் இனத்தின் அடக்குமுறையானது அதன் சிந்தனையைக் கட்டுப்படுத்துவதிலிருந்துதான் ஆரம்பிக்கின்றது. எனவே நூல்களைப் பெற்றுக்கொள்ளும் ரமணனின் ஒவ்வொரு எத்தனமும், சேகரிக்கும் விழைவும் அவ்வடக்குமுறையை எதிர்ப்பதுதான் என்றும் கொள்ளலாம். போர் மும்முரமாகத் தொடங்கிய பின்னர், இராணுவம் மற்றும் பொலிஸ் கெடுபிடிகளுக்கு அஞ்சிப் புத்தகங்களை முன்னர் எரித்தமை குறித்துக் கழிவிரக்கப்படுகிறான்.

ஊடுபனுவலாக்கம் எனும் இலக்கிய உத்திப் பயன்பாட்டிற்கு இக்கதை சிறந்த எடுத்துக்காட்டு. ஊடுபனுவலாக்கம் என்பது ஒரு பிரதியின் அர்த்தத்தை மற்றொரு பிரதியால் வடிவமைப்பதாகும். "ஷோலக்காவுடன் (*Sholokhov*) மீண்டும் எல்லாம் ஆரம்பமாகின" என்று இக்கதை தொடங்குகின்றது. *1990* களின் ஆரம்பத்தில் வாசித்த அக்கதாசிரியரின் "தோன் நதி அமைதியாக ஓடுகிறது" (*And quiet flows the Don*) என்ற நாவலை மீண்டும் வாசிக்க ரமணன் ஆசைப்படுகின்றான். இந்த ரஷ்ய நாவலை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணமுண்டு. அதைக் குறிப்பிடும் பந்தியில் இக்கதையின் ஆன்மாவை உணரலாம்: "தோனின் குளிர் நிரம்பிய காற்றை எங்கள் சோழகத்தில் உணர முடிந்தது. இரண்டுமே வேட்டொலிகளையும் வெடிமருந்தின் மணங்களையும் சுமந்து வந்தவை. போர் என்கிற பிரளயம்! இருப்புகளை அசைக்கும் அந்த எரிமலைக் குமுறல்! எந்தக்காலமென்றால் என்ன, எந்தத் தேசமென்றால் என்ன... கிரிகோரி மெலிக்காவுடன் சேர்ந்து ரமணனும் அந்த நாலு தொகுதிகளையும் வாழ்ந்து முடித்தான்.'' சுதந்திரத்திற்காகப் போர்த்துன்பங்களைத் தாங்குகின்ற அதே சமயம் அவற்றுக்கு அடிபணியாத மனிதரின் கதை இது என்று சொல்லலாம்.

## உறவுகள் ஆயிரம் (1997)

இக்கதை சாந்தனின் "ஒளிசிறந்த நாட்டிலே" என்ற ரஷ்ய பயண நூலினை நினைவுபடுத்துவது. *1980*களின் நடுப்பகுதியில் இலங்கையிலிருந்து ரஷ்யமொழி கற்க ரஷ்யாவுக்குச் செல்லும் கதைசொல்லிக்குப் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பலவேறினத்தவர் அறிமுகமாகின்றனர். அவர்களுட் பலர் அவருக்கு இலங்கையில் ஏற்கனவே தெரிந்தவர்களின் தோற்றச்சாயலில் இருக்கின்றனர். குறுகிய கற்கைக்காலத்தில் கீதா எனும் மலையாளப் பெண்ணிடத்தில் அவருக்கு நேசமும் பிறக்கின்றது. கற்கை முடிவில், "கட்டுநாயக்காவில் வந்திறங்கும் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனராம்'' எனும் வதந்தியின் மத்தியில் அவர் இலங்கை திரும்புகின்றார். தமிழர்களுக்கு இலங்கையில் கெடுபிடிகள் ஆரம்பித்து விட்ட காலகட்டத்தை இது காட்டுகின்றது. "உறவுகள் ஆயிரமிருப்பினும் எதுவுமே நிரந்தரமானவை அல்ல'' என்ற எண்ணம் கதை வாசித்து முடித்த பின்னர் ஏற்பட்டது. "விடைபெற்றுக்கொள்வதென்பது எவ்வளவு கவலையான விஷயம்'' என்ற வரி இக்கதையின் முடிவுப்பகுதியில் இடம் பெறுகின்றது. மீண்டும் சந்தித்தல் என்பது நிச்சயமற்ற தருணத்தில் விடைபெற்றுக் கொள்ளல் என்பது கவலை அளிக்கும் விடயந்தான்.

திருக்குறளில் நிலையாமை அதிகாரத்தில் இடம் பெறும் "கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே" என்ற வரி இக்கதையை வாசிக்கும்போது நினைவுக்கு வந்தது. அதாவது, கூத்தைப் பார்ப்பதற்காக மக்கள் ஒன்று திரள்வதும், கலைவதும் போலக் குறுகிய கால கற்கைநெறியில் ஒன்றாகப் படித்தவர்கள் பின்னர் தத்தம் நாடுகளுக்கு மீளச்செல்கின்றார்கள். கதைசொல்லியைப் பொறுத்தவரையில் ஓர் இனிய கனவு திடீரென முடிவுற்றது போன்றதுதான் இது. அவன் மனதின் கனதியை வாசிக்கும்போது உணரக்கூடியதாக இருந்தது. தத்துவதளத்திலிருந்து அணுகக்கூடிய கதை போற் தோன்றியது. இக்கதையில் கறுப்பினத்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல் தற்போது அவர்களை இழிவுபடுத்தும் வார்த்தையாகக் கருதப்படுதலால் தவிர்க்கப்படவேண்டியது.

நிறைவாக, சாந்தனின் நெடும்புனைவுகளை அவை பிரதிபலிக்கும் காலக்கிரமத்தின்படி ஒழுங்குபடுத்தி வாசிப்பின், *1956* க்குப் பிற்பட்ட இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றின் வெவ்வேறு பரிமாணங்களை அறியலாம். மொழியுரிமை மறுக்கப்பட்ட காலத்திலும், சிங்களக் குண்டர்களால் தாக்குண்ட காலத்திலும், இனக்கலவரத்தினை அடுத்து வேலை நிமித்தம் கொழும்புக்குச் சென்ற காலத்திலும், இந்திய அமைதிப் படை வடக்கு, கிழக்கில் நிலை கொண்ட காலத்திலும், பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட காலத்திலும், ராணுவக்கெடுபிடிகள் நிறைந்த யுத்த சூழலில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வர நேர்ந்த காலத்திலும் தமிழர்களின் "இருத்தல்'' என்பது எப்படி இருந்தது என்பதை உணர இக்கதைகள் உதவுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்னஸ் வார்தா: எதிர்நீச்சலெனும் அழகியல்

அக்னஸ் வார்தாவைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது? ஒரு காலத்தில் அதிகம் பேசப்படாத பெண் இயக்குனர் என்று சென்னை பிலிம் சேம்பரில் பிலிம் சொஸைட்டி சார்பில் வார்தாவின் 'க்ளியோ ப்ரம் 5 டு 7' திரையிடப் படுகையில் பேசியது நினைவில் இருக்கிறது. பின்னர் அதை எழுத்துவடிவில் தமிழில் வந்த இணைய இதழில் பதிவு செய்ததும் மனதில் ஓடுகிறது. கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்குப் பின் இணையத்தில் எனது கட்டுரையை காணக் கிடைக்கவில்லை. ஆயினும் அதைவிட பல்மடங்கு அருமையான பதிவுகளை இணையம் தன்னுள் இணைத்துள்ளது. வார்தாவின் அரிய பண்புகளில் ஒன்று வாழ்வின் தினசரித் தன்மையிலிருக்கும் வியத்தகு தருணங்களை ஊடுருவி வாஞ்சையுடன் அவரது கேமரா அள்ளி அடுக்குவது. அரியதொரு பறவையின் குரலில் மனதை வருடும் கீதங்களாக வார்தாவுக்கேயுரிய ஒளிச்சித்திரங்கள் அன்றாடம் நம்மைக் கடந்து செல்கின்றன. அவரைப் பற்றிய சிலாகிப்பும் நினைவுகளும் குவிந்து கிடக்கின்றன. என்னைப் போன்று அன்றாடம் யதேச்சையாக வார்தாவின் படங்களுடன் நெடும்பயணம் மேற்கொள்வோருக்கு நம்மைத் தொட்டுச்





செல்லும் நிகழ்வுகளை மனம் லயிக்கத் தக்கவகையில் மீயதார்த்த கவிதைகளாக அவர் தந்துள்ளார்.

1970களின் பிந்தைய மற்றும் 1980களின் முந்தைய க்ளேர் ஜான்ஸ்டன் போன்று ஸ்க்ரீன் சஞ்சிகையின் மூலம் கொண்டாடப்பட்ட பெண்ணியவாதிகள் வார்தாவை உள்ளிணைக்காது கோட்பாட்டளவில் விமர்சித்து ஒதுக்கியும் வந்தனர். ஆனால் அக்னஸை இன்று கீதா ராமனாதன் பெண்ணிய ஆசிரியையாகவும் ஸாண்டி ப்லிட்டிர்மேன்-லூயிஸ் வேறுபட்ட இச்சையின் (*desiring differently*) உருவகமாகவும் பார்க்கிறார்கள். வர்ஜினியா பொனெர் வார்தா தனது 'க்ளீனர்ஸ் எண்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ' (2000) போன்ற ஆவணப்படங்களில் திரைக்கும் பார்வையாளருக்குமான இருமை எதிர்வை தானே கதாபாத்திரமாகத் (இரண்டாவது நபர்/முன்னிலையாக) தோன்றி நேரிடையாக பார்வையாளரிடம் பேசி அழிப்பதை அலசியுள்ளார். அதற்கும் மேலாக "நாம் லீ' தனது முனைவர் பட்டத்திற்கான "ரீதிங்கிங் பெமினிஸ்ட் சினிமா: அக்னஸ் வார்தா அண்ட் பிலிம்மேகிங் இன் த பெமினின்," என்கிற ஆய்வேட்டில் பெமினின் என்பதை உயிரியல் கூறாக அல்லாமல் நெறிமுறை சார்ந்த பதமாக "பிறனு"க்கு தன்னை திறந்து வைத்திருக்கும் தன்மையாக வார்தாவின் அழகியலை விரித்தெடுத்துள்ளார்.

"நாம் லீ' நம்மை வார்தாவின் அன்றைய வாழ்விற்கும் நினைவலைகளுக்கு உள்ளும் இட்டுச்செல்கிறார். புதிய அலை என்று ப்ரான்ஸில் தோன்றிய சினிமா இயக்கம், பொதுவாக த்ருபோவின் த 400 ப்ளோஸில் (1959) ஆரம்பித்து கோதாரின் ப்ரத்லஸ் (1960) வழியாக ரோமரின் மை நைட் வித் மாட் (1969) மற்றும் சாப்ராலின் லெ பூச்சே (1970) என கிட்டத்தட்ட ஒரு பதின் வருட காலம் நீண்டதாக வருணிக்கப்படுகிறது. அந்த அலையின் முக்கிய படங்களாக த்ருபோவின் ஷூட் த பியானோ ப்ளேயர் (1960), மற்றும் ஜூலே ஜிம் (1961), கோதாரின் மை லைப் டு லிவ் (1962), கான்டெம்ப்ட் (1963), பேண்ட் அபார்ட் (1964), பிரே லா பூ (1965), அல்பாவில் (1965), சாப்ராலின் லா போன் பாம் (1960), ரோமரின் க்ளேர்'ஸ் நீ (1970), ரிவத்தின் பாரிஸ் பிலாங்ஸ் டு அஸ் (1960), மற்றும் செலின் அண்ட் ஜூலி கோ போடிங் (1974) போற்றப்படுகின்றன.

இந்த அலை வீசிய சமகாலத்தில் இதற்கு இணையான மாற்று சினிமா சார்ந்த பாதிப்பை ஏற்படுத்திய இயக்குநர்களான அலன் ரெனே, க்ரிஸ் மார்க்கர் மற்றும் அக்னஸ் வார்தாவை நியூ யார்க் திரைப்படவிழாவின் (அமோஸ் வோகெலுடன்) சக ஸ்தாபகரும் கஹியே து சினிமாவின் லண்டன் நிருபருமான ரிசர்ட் ரௌட் லெப்ட் பாங்க் (இடது கரை) பிலிம்மேகர்ஸ் என்று வரையறுத்தார். Seine எனப்படுற செயின் ஆற்றுக்கு மறுகரையிலுள்ள இடதுசாரி கலைஞர்களாக வார்தா, மார்க்கர் மற்றும் ரெனே வகுக்கப்பட்டார்கள். இக்கரையில் புதிய அலை மேதைகளான கோதார், சாப்ரால், த்ருபோ, ரிவத் மற்றும் ரோமர் இருந்தார்கள். ஆனால் அதிலும் ரேனேயிற்கும் மார்க்கருக்கும் அந்த காலத்தில் கிடைத்த விழிமையும் புகழும் வார்தாவின் படங்தளுக்கு கிடைத்ததா என்பது கேள்விக்குறியே. வார்தாவின் படங்களில் க்ளியோ ப்ரம் 5 டு 7 (1962) மட்டுமே விமர்சகர்களால் போற்றப்பட்டு பலரின் பட்டியலில் இடம் பெற்றது. இந்த ஆண்மைய ப்ரஞ்சு சினிமா இயக்கத்தின் ஒரே பெண்ணாக வார்தாவின் நிலை எப்படி இருந்தது என்பதை அவரது நேர்காணல்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்: "எனக்கு அந்த இளைஞர்கள் பரிச்சயமில்லாததால் என்னுடைய நினைவிலோடும் அவர்களுடைய முகஜாடையை வைத்து சாப்ரால், த்ருபோ, (அப்பொழுது வேறு பெயரில் அறியப்பட்ட) ரோமர், ப்ரையலி, டேனியல்-வால்க்ரோஸ் மற்றும் கோதார் அந்த மாலைப் பொழுதில் அங்கிருந்தார்கள் என்று எண்ணுகிறேன். அவர்களுடைய உரையாடலை என்னால் முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் ஆயிரக் கணக்கில் படங்களின் பெயர்களை உதிர்த்து ரேனேயிற்கு பல ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகத் துரிதமாகப் பேசினார்கள். மகிழ்ச்சியாக அரட்டை அடித்தார்கள். எல்லா இடத்திலும் அமர்ந்தார்கள் கட்டில் படுக்கை உட்பட. நான் தவறுதலாக அங்கமர்ந்திருப்பவளாக உணர்ந்தேன். குறுகியவளாக, ஏதும் அறியாதவளாக, அந்த கஹியே ஆண்களினூடாக இருந்த ஒரே பெண்ணாக." இது திருநெல்வேலியில் எனது கிராமமான வழுதூரில் திண்ணையில் உட்கார்ந்து இன்றளவும் அளவளாவும் ஒரு ஆண்களின் கூட்டத்தின் சித்திரத்தையே அளிக்கிறது. கலைக்கும் வாழ்வுக்குமான இடைவெளி எவ்வளவு பெரிய அலைகள் வந்தடித்தாலும் எளிதில் நிரப்ப முடியாததாகவே இருக்கும்போலும்.

மற்றும் வார்தா அந்த பிரஞ்சு இயக்குனர்களைப் பற்றி என்ன கூறுகிறார் என்று (அரட்டை சுவாரசியத்தில்) பின் தொடர்ந்து பார்ப்போம்: "புதிய அலை என்பது 1959லிருந்து 1970வரை படமெடுத்துக் கொண்டிருந்த பலரை அடையாளப் படுத்த ஒரு சௌகரியமான முத்திரை என்று வைத்துக் கொள்ளலாம். அவர்களின் பொதுவான அடையாளம் என்பது என்ன? அவர்களெல்லோரும் 30 வயதுக்கு கீழே உள்ளவர்களாகவும் 30 மில்லியன் பிரான்க்ஸ்க்குள் தெருக்களில் அதிக காட்சிகளைக் கொண்ட படங்களை எடுப்பவர்களாகவும் இருந்தார்கள்... அவர்கள் விவாதங்களில் ஆழமாக ஈடுபட்ட அளவிற்கு வித்தியாசமாக எதுவும் சாதித்து விடவில்லை. த்ருபோவின் எழில்மிகு படங்களில் நவீனமாக ஏதுமில்லை. அவரது செறிவான கதையாடல்கள் நேர்கோட்டில் கட்டமைக்கப்பட்டு உணர்வெழுச்சியைத் தூண்டுவதாக இருக்கின்றன. ரேனே நினைவுகள் சார்ந்த ஆய்வில் ஈடுபட்டவர். மார்க்கரும் அப்படியே. கோதார் தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டவர். பிரஞ்சு சினிமா ஆராய்ச்சியாளர்களில் அவர் ஈடிணையில்லாதவர். அவர் ஒரு ஜீனியஸ். அவரை சினிமா மாற்றியது; அவர் சினிமாவை மாற்றினார். அவர் நினைவில் கொள்ளத்தக்கவர். மற்றவர்களில் பிற்காலத்தில் மாரிஸ் பியலாத் பெரிய கலைஞர்."

மாரிஸ் பியலாத் தன்னுடைய படங்களிலிருந்த ஒரு வித யதார்த்தத்தன்மைக்காக பிரபலமடைந்தார். ஆயினும் அந்த யதார்த்தம் நாம் பொதுவாக எண்ணும் யதார்த்தத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பாஜானுடைய யதார்த்தத்தைப் பற்றியும் இங்கு நாம் சிந்திக்க வேண்டும். அந்தக் காலகட்ட பிரஞ்சு இயக்குநர்களின் மேல் மிக முக்கிய தாக்கத்தைச் செலுத்தியது அவரது எழுத்துக்களே. பாஜானின் யதார்த்தம் வாழ்வனுபவமும் சார்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















வாழ்வை அதன் லயத்துடன் சட்டகப்படுத்துவதில் சினிமாவின் உச்சபட்ச சாத்தியங்களைக் கண்ட பாஜான் அத்தகைய ஒரு அழகியலுக்கு மோண்டாஜ் போன்ற துரித தொகுப்பழகியலை தடங்கலாக பார்த்ததினால்தான் அதை நிராகரித்தார். கால அளவில் நீண்டு, நெடுநேரம் விரிந்து, நம்மை பார்வையாளராக உள்ளிழுத்து, நம்மைச் சூழ்ந்திருந்தும் நமக்குப் புலப்படாத வாழ்வின் சிக்கல்களையும், பலதளங்களில் விரியும் அதன் சூக்குமத்தையும் புலப்படுத்தக் கூடிய லாங் டேக்கை, உள்ளடக்கிய அழகியல் அவருக்கு சினிமாவின் இயல்பாகப் பட்டது.

அக்னஸ் வார்தாவின் முதல் படமான லா ப்வாந்த் கோர்த் (*La Pointe Courte*, 1955) மீனவ பட்டணத்தில் உருவாக்கப்பட்டது. கணவன் மனைவிக்கு இடையில் உள்ள விரிசலை வார்தா, பிரஞ்சு அறிஞர் கேஸ்டன் பேசலாரின் கோட்பாட்டிற்கிணங்க, மானுட உணர்வுகளுக்கும் மனிதர்களை சூழ்ந்துள்ள திடப்பொருள்களுக்கும் உள்ள உளவியல் உறவாகச் சித்தரிக்கிறார். குறிப்பாக வார்தாவின் கையில் அத்தம்பதிகளின் விரிசல் மரக்கட்டைக்கும் எஃகிற்கும் உள்ள உறவாக பிரதிபலிக்கிறது. சில்வியா மோன்போர்ட் மற்றும் பிலிப் நுவாரெட் போன்ற தொழில்முறை நடிகர்களுடன் லா ப்வாந்த் கோர்த்தின் சாதாரண மக்களும் அப்படத்தில் இணைந்து நடித்திருந்தார்கள். அத்தகைய ஒரு இணைப்பை வார்தாவின் பலபடங்களில் பின்னர் காணக்கிடைக்கிறது. ஆவணப்பட யதார்த்தம் சார்ந்த அழகியலுக்கு ஒரு பிரதான இடத்தை வழங்குவது அவரது தனித்துவம் என்பர். லா ப்வாந்த் கோர்த்திலும் ஒரு நியோரியலிஸ அழகியல் கூறைக் காணலாம். பலவிதங்களில் இன்று லா ப்வாந்த் கோர்த்தை பிரஞ்சு புதிய அலையின் முன்னோடியாக விமர்சகர்களும் ஆராய்ச்சியாளர்களும் முன்னிறுத்துகிறார்கள். ஹிரொசிமா மோன் அமோரை எடுத்த அலன் ரேனே லா ப்வாந்த் கோர்த்தில் எடிட்டராக பணியாற்றினார். வார்தாவை பிரஞ்சு புதிய அலையின் "பாட்டி"யாக விமர்சகர்கள் செல்லமாகக் குறிப்பிடுவதில் அர்த்தமிருக்கிறது. ரேனே அவர் படத்துக்கே எடிட்டராக பணியாற்றியிருக்கிறார் என்றால் எண்ணிப்பாருங்கள்.

நிழற்படத்தில் ஆர்வம் கொண்டு நிழற்படக் கலைஞராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கலைவாழ்வை தொடங்கிய வார்தா வாழ்வு குறித்தான யதார்த்த சிருட்டிகளில் ஈடுபாடு கொண்டது புரிந்து கொள்ளக்கூடியதே. கருத்தரித்த பெண்ணின் போர்ட்ரெயிட்டாக ஆவணப்படத்தை 50களில் எடுத்த வார்தா தனது போட்டோக்களைக் கொண்டு உருவாக்கிய ஆவணப்படமான சினிவார்தாபோட்டோவைச் (2004) சமீபத்தில் காணக் கிடைத்தது. டெட்டிபியர் சேகரிப்பாளரைப் பற்றியும், க்யூப புரட்சியின் ஆரம்ப கால உத்வேகத்தைப் பற்றியும், தான் எடுத்த ஒரு இறந்த ஆட்டின் பழைய போட்டோவை பற்றியும் அவை சார்ந்த தனது தியானிப்புகளாக விரியும் மூன்று படங்களின் தொகுப்பான சினிவார்தாபோட்டோ சமீபத்தில் காணக்கிடைத்த கவிநயமிக்க சினிக்கட்டுரைகளில் தலையாயது. வார்தாவின் நெடிய பயணத்தில் ஆவணப்படங்களுக்கு அதிமுக்கிய இடமுண்டு. பிற்காலத்தில் அவரது கவனத்தை ஆவணப்படங்கள் ஈர்த்தது இயல்பானதே. அவரது வாழ்வில் நிழற்படங்களின் முதன்மையை அறிந்து கொண்டோமென்றால் இதனை ஓரளவுக்கு புரிந்து கொள்ளலாம். ஆயினும் வார்தா வாழ்வின் யதார்த்தத்தை அக்கறையுடன் அணுகிய கலைஞராகக் காணப்பட்டார். மீயதார்த்ததின்பால் தனக்கிருக்கும் ஈர்ப்பையும் ஆர்வத்தையும் வாழ்வோடு ஒன்றிணைத்து அரிய படைப்புக்களைச் சாத்தியமாக்கினார். அதுவே அவரது படங்களை தனித்துவம் நிறைந்த கலைப் படைப்புகளாக பரிணமிக்க வைத்தன. உதாரணத்திற்கு, தனது கடைசிப்படம் என்று வார்தா அறிவித்திருக்கும் பீச்சஸ் ஆப் அக்னஸ் (அக்னஸின் கடற்கரைகள், 2008). அப்படத்தில் வார்தா தனது வாழ்வை அவருக்கேயுரிய பிரத்யேக ஹாஸ்யத்துடனும் எழில்மிகு நேர்த்தியுடனும் நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார். நெடுந்தூரம் தனியே பயணித்த ஒரு அபூர்வ கலைஞரின் வண்ணமயமான நினைவோடையில் தாவி நாமும் அவர் கூட நீந்துகிறோம். கடலில் மனம் பறிகொடுத்த அக்னஸ் கடற்கறையில் பெரிய பெரிய கண்ணாடிகளை கொண்டு வந்து அடுக்கி எல்லையற்ற வெளியை எல்லையற்றதாக சட்டகப் படுத்துவதிலுள்ள சிக்கலை தனக்கேயுரிய அழகியலான யதேச்சத் தன்மையுடன் இயல்பாக தன்னுடன் பங்குபெறும் (திரைப்படப் பள்ளி) மாணவர்களின் துணைகொண்டு சித்தரிக்கிறார். படத்தின் ஆரம்பத்தில் தனது கதையைச் சொல்லும் புஷ்டியான மனதிற்குகந்த ஒரு வாயாடிக் கிழவியாக அக்னஸ் வந்து செல்கிறார். ஆயினும் "எனது நாட்டம் பிறரின்பால்தான், அவர்களைப் படம் பிடிப்பதில்தான்" என்கிறார். வார்தாவின் படங்களில் மனம் பறிகொடுத்தோருக்கு இந்த அறிமுக வார்த்தைகளே இதயத்தை வருடுவதாக இருக்கும்.

அவர் வசிக்கும் டாகுரோடைப்ஸ் வீதியிலுள்ள சாதாரண மக்களின் வாழ்க்கையை 74 நிமிஷம் ஓடக்கூடிய டாகுரோடைப்ஸ் சித்திரமாக 1978ல் வார்தா எடுத்தார். ஐம்பது வருடங்களாக வார்தா வாழும் அண்டை வீட்டாரான தொழிலாளிகளைப் பற்றிய சித்திரமது. 1970களில் தமக்கு உடைகளையும் உணவையும் அளிக்கும் தொழிலாளிகளை வார்தா இப்படத்தில் அணுகியிருக்கும் விதம் அவரிடம் இருக்கும் மானுடத்தின் சாட்சியாக உள்ளது. மனம்போல் வாழ்வென்பதைப் போல வார்தாவின் இதயத்திலிருக்கும் அன்பே அவரை சூழ்ந்துள்ள சாதாரண மக்களின் உள்ளத்தை திறக்க வைக்கிறது. அவர்கள் வார்தாவைப் போன்றே இணையில்லாத பொக்கிஷங்களாக பரிணமிப்பதை நம் கண் முன்னே காண்கிறோம். அபரிமிதமான அழகுடன் சூதுவாதில்லாத ஒரு கலைஞரும் வார்தாவுள் இருப்பதை இச்சித்திரத்தின் மூலமாக உணர்கிறோம். 1970களிலிருந்த தெரு இன்று மாறியிருக்கலாம். ஆயினும் அன்றலர்ந்த மலராக மானுட கரிசனம் வீசும் வார்தாவை 40 வருடங்கள் கழித்து அக்னஸின் கடற்கரையில் மீண்டும் நுகர்கிறோம். படம் பார்த்துக் கொண்டிருக்கையில் சுவரில் பலபடங்கள் நிறைந்த ஒரு காட்சியைக் காணும் வார்தா கண்கலங்குகிறார். அழுகிறார். குதூகுலம் நிறைந்த வார்தா காலம் சென்ற தனது கணவர் இயக்குனர் ழாக் டெமியின் நிழற்படத்தைக் கண்டு கடந்த கால நினைவில் கரைகிறார். நாமும் அதில் கரைகிறோம்.

வார்தா தனது கணவர் டெமியைப் பற்றி எடுத்த ஆவணப்படம் நினைவில் ஓடுகிறது. டெமி இறக்கும் தருவாயில் லுவார் நதியை ஒட்டிய நான்ட்ஸ் நகரில் தனது பருவவயதை, பதின்மகாலங்களை நினைவு கூறியதை ஒட்டி வார்தா உடனடியாக அவரது வாழ்க்கையை ஆவணப்படுத்த விரும்பி டெமி வாழ்ந்த வெளிகளுக்கு விரைந்தார். கடந்த கால ஆவணங்களுடன் ஒரு நெகிழ்வான அஞ்சலியாக டெமி 1990இல் இறப்பதற்கு சில நாட்கள் முன்னர் அப்படத்தை முடித்தார்.

ம்யூஸிகல் படங்களுக்கு பெயர்போன டெமியும் புதிய அலைக்கோ மாற்று சினிமாவிற்கோ உரியவரல்ல. வார்தாவை டெமியுடனான உறவு ஆர்ட் சினிமா வட்டத்திலிருந்து அன்னியப்படுத்தியது என்றே கூறவேண்டும். டெமியின் த அம்ப்ரெல்லாஸ் ஆப் செர்போர் (1964) என்ற படத்தை பல தடவைகள் பார்த்திருக்கிறேன். ஐயோவாவில் ஆவுஸ்த்ரேலிய இசை ஆய்வாளரான பில் ப்ரோபியுடன் பார்த்து அது குறித்து விவாதித்தது மறக்க முடியாத அனுபவம். பேரழகியான கேதரின் டினூவுடன் டெமி உருவாக்கிய செர்போரின் கொடைகள் முக்கிய தருணங்களை நுண்மையாக வெளிப்படுத்தி நிற்கிறது. தனது அன்னையுடன் செர்போரில் கொடைகள் விற்கும் ஜெனெவீவிற்கும் ஆட்டோ மகானிக்கான கய்யிற்கும் இடையிலான காதலே இதன் கதை. அன்றாட வாழ்வின் தினசரி அனுபவங்களையும் உணர்வுகளையும் காதலையும் ஊடலையும் காவியமாக விரித்துச் செல்கிறது இத்திரைச் சித்திரம்.

ஜெனெவீவ் கய்யின் காதல் அவனது அல்ஜீரிய போருக்குச் செல்லும் கட்டாயத்தின் பேரில் நிறைவேறாமல் நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடுகிறது. பின் அவன் மீண்டும் செர்போர் வருகையில் அந்த கொடைக்காரியும் அவளது கடையும் அங்கு இல்லை. தன் மீது காதல் கொண்டிருந்த மற்றொரு பெண்ணான மடீலினை மணந்து பெட்ரோல் பங்க் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கும் கய்யை பல வருடங்கள் கழித்து மெர்சிடஸ் கார் ஒன்றில் வரும் ஜெனெவீவ் தற்செயலாக சந்திக்கிறார். காரில் இருக்கும் அவர்களது பெண்ணான ப்ரான்சுவாவை சந்திக்க மறுக்கும் கய் ஜெனெவீவிடமிருந்து விடை பெறுகிறான். கடைசி காட்சியில் தனது மகனுடன் வெண்பனியில் கய் விளையாடிக் கொண்டிருப்பதுடன் படம் முடிகிறது. முற்றிலும் பாட்டுகளினால் கட்டமைக்கப்பட்ட ம்யூஸிகல் டெமியின் படம். கான் திரைப்படவிழாவில் விருது பெற்று கௌரவிக்கப்பட்ட அப்படத்தை பூனே திரைப்பள்ளியில் படம் முடிந்து நான் சிலாகித்து பேசிய போது நண்பர்களால் என் ரசனைக்காக விமர்சிக்கப்பட்டேன். படம் முடிந்து வெளியே வருகையில் விஸ்டம் மரத்திற்கு அடியில் நின்று நான் டீ குடித்துக் கொண்டிருக்கையில் ஸ்மிதா படீல் (அப்போது ஓஷோவில் நாட்டம் கொண்ட ஜானி பக்ஷி மற்றும் வினோத் கன்னாவுடன் பூனே வரும்போது திரைப்பள்ளிக்கு வருவார்) டெமியின் படத்தைப் பற்றி அருமையாகச் சொன்னீர்கள் என்றார். இறுக்கமாக இருந்த என் நெற்றி இளகி இயல்பானதை உணர்ந்தேன். அதன்பின் ஸ்மிதா அவர்கள் பூனே வந்த போதும் அந்த டெமி—அக்னஸ் வார்தாக்காரன் எங்கே என்று தேடியதாக எனது பக்கத்து ரூம்மேட்டின் (திரைப்பள்ளி) படத்தில் நடித்துக்கொண்டிருந்த ஸ்வாதி அவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

புதிய அலையின் ஒளிப்பதிவு மேதை (குறிப்பாக சாப்ராலுடனான கூட்டுக்கு பெயர் போன) ழான் ராபியருடன் டெமியினால் இணைந்து ஈஸ்ட்மேன் கலரில் செதுக்கப்பட்ட செர்போரின் கொடைகள் மூல சாயத்தை இழந்து தொய்ந்திருந்தன. ஆயினும் தீர்க்கதரிசியான டெமி ஈஸ்ட்மேன் கலரின் மூல வர்ணமான மஞ்சள், சையான், மேஜண்டா வண்ணங்களின் பிரிவினை மாஸ்டரை கறுப்பு வெள்ளையில் எடுத்து வைத்திருந்ததினால் அப்படத்தின் ஐம்பது ஆண்டு விழாவை ஒட்டி வார்தா 2013ல் இசை அமைப்பாளர் மிஷெல் லெக்ராணின் துணை கொண்டு படத்தை டெமி எண்ணிய கனவுருவான வண்ணங்களில் மீட்டுருவாக்கம் செய்தார். அல்ஜீரிய போரைப்பற்றிய குறிப்புகள் படத்திலிருந்தால் கூட சென்சார் போர்ட் கைவைக்கும் எனப் பயந்து பெரும்பாலான பிரஞ்சு இயக்குநர்கள் அப்போரை உருவகமாக சட்டகப்படுத்திக் கொண்டிருக்கையில் அதனைத் துணிந்து தன் படத்தில் வடித்தார். டெமியைவிட ஒரு படி மேலே சென்று வார்தா தனது க்ளியோ ப்ரம் 5 டு 7ல் (1962) ஒரு இளம் பாரிசியன் பெண்ணான கிளியோவின் வாழ்க்கையை நுண்மையாகச் சித்திரித்தார். க்ளியோ புற்று நோய்க்கான பயோப்ஸி டெஸ்ட் கொடுத்துவிட்டு அதன் முடிவை எதிர்ப்பார்த்திருக்கும் அகால சூழலையும் மன அவஸ்தைகளையும் பதட்டமான இடைவெளியில் பாரிஸ் தெருக்களில் அலைந்து திரியும்போது அந்நகர வாசிகளுடன் அவர் எதிர்கொள்கின்ற அனுபவங்களையும் இப்படம் இரண்டு மணிநேரத்தில் துல்லியமாக வெளிப்படுத்திச் செல்கிறது. அவரது அனுபவங்களே இத்திரைப்படம். கடைசியாக அவர் சந்திக்கும் நபர் அல்ஜீரிய போரிலிருந்து திரும்பியிருக்கும் பிரஞ்சுப் படைவீரன்.

க்ளியோவைப் பார்க்க பாஜான் உயிரோடு இல்லை. நீண்ட நேரம் ஓடக்கூடிய லாங் டேக் மூலம் வார்தா பாரிஸை சுற்றி பல ஷாட்டுகளை எடுத்திருப்பார். கையில் வைத்து ஆடிக் கொண்டிருக்கும் அழகியலை நிராகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழற்பட பின்னணியிலிருந்து வந்த வார்தா தீர்க்கமான கோணங்களில் அழகாக பாரிஸை சட்டகப்படுத்தியிருப்பார். நியோரியலிஸ அழகியலையும் அதில் காணலாம். ஆயினும் படங்களை அதிகம் பார்த்திராத வார்தா ஓவியத்திலும் கவிதையிலும் தனது உந்துதலைப் பெறுவது நியோரியலிஸ படங்களில் எளிதில் காணக்கிடைக்காத கவிதையை க்ளியோவில் அவர் புனைய உதவுகிறது. ஸான்றின் போனெரை அலைந்து திரிபவளாக த வேகபாண்டில் (1985) சித்தரிக்கும் வார்தா அவரை நவீன இருண்ட உலகின் நாடோடியாக, அந்நியமாதல் வாழ்வியல் யதார்த்தமாகிவிட்ட இன்றைய சூழலின் குறியீடாக அமரத்துவம் அடையச் செய்துவிட்டார். த வேகபாண்டிலும் போனெரின் வாழ்வியல் சூழலை மற்றவர்கள் அவளைப் பற்றி கூறுவதைக் கொண்டு கட்டமைக்கும் போது ஒரு ஆவணப்பட அழகியலையும் இணைத்து தனது தனித்துவத்தை வார்தா முன்னிறுத்துகிறார். என்னை இருண்ட வாழ்வியல் யதார்த்தங்கள் சார்ந்து ஆழமாக பாதித்த படங்களில் வார்தாவின் த வேகபாண்டுக்கும் அலெய்ன் டேனரின் மெஸ்ஸிடொருக்கும் (1979) தனிப்பட்ட இடமுண்டு.





வார்தாவுடனான எனது நெடும்பயணம் க்ளீனர்ஸ் அண்ட் ஐயுடன் தனது உச்சத்தை எட்டிவிட்டதாக உணர்கிறேன். 2000த்தில் எடுக்கப்பட்ட வார்தாவின் ஆவணக்கவிதையான க்ளீனர்ஸ் அண்ட் ஐ கடந்த இரு பதின்வருடங்களில் புனையப்பட்ட சினிக்கவிதைகளில் தலையாயது. அன்றலர்ந்த வார்தா செயற்கை டிஜிடல் வானகத்தை தனது வாசத்தின் மூலம் உயிர்ப்புறச் செய்யும் சினிமலர். சேகரிப்பாளர்களின் சேகரிப்பை தனது சிறிய டிஜிடல் கேமரா மூலம் சேகரிக்கும் வார்தா ஓவியத்திற்கும் உருளைக் கிழங்கிற்கும் வித்தியாசம் பார்ப்பதில்லை. வார்தாவின் கைகளில் எல்லா திடப் பொருள்களும் உயிருள்ள ஓவியங்களாக மாறுகின்றன. கடைந்து எறியப்பட்ட பொருள்களும் கிடங்கில் வீசப்பட்ட பொருள்களும் வாழ்வின், பசியின் உந்துதலால் இரு கைகளாலும் அணைத்து சேகரிக்கப்படும்பொழுது ம்யூஸியத்தில் இருக்கும் கலைப் பொருட்களுக்கு இல்லாத உயிர்கொடுத்து உயிர்பெறும் அரிய தன்மையை அடையும் ரசவாதத்தை நாம் வார்தாவின் படத்தில் காண்கிறோம். வீதியில் அழுக விடும் சாதாரண பொருட்களைக் கொண்டு தனது எல்லையற்ற அன்பினாலும் நேர்த்தியான அழகியலாலும் வார்தா நம் கண் முன்னே அத்தகைய ரசவாதத்தை நடத்திக் காட்டுகிறார். வார்தாவின் பாதை அவருக்கேயுரியது என்று ராப் இடெல்மான் போன்றவர்கள் கூறியுள்ளது முற்றிலும் பொருத்தமானது. என் வழி தனி வழி என்று அசலிலே எவ்வளவு பேரால் கூற முடியும்? வார்தாவின் க்ளீனர்ஸை பார்க்கும்போது நிகரில்லா சினிகவிதாயினி வார்தா, பிரளயத்தின் போது ஏன் கவிதையை சேகரித்து தனது மடியில் பாதுகாக்க வேண்டும் என்றெண்ணுகிறார் என்று புலப்படுகிறது. "ம்யூஸியத்துக்குப் போனால் உடன் புத்துயிர்ப்படைகிறேன்" என்று கூறும் வார்தா சினிமா படைப்பாளிகளைவிட மோனே, பிக்காஸோ, ப்ரான்ஸிஸ் பேகன் போன்றவர்களின்பால் ஆகர்ஷிக்கப்பட்டு அவர்களின் ஓவியத்தை தனது படங்களில் சுட்டுவது தெரிகிறது.

அக்னஸின் கடற்கரையில் மறைந்த நடிகர் நண்பர் ழான் விலாரின் மனைவி ஆன்ட்ரே விலார் எப்படி தனது மறைந்துவரும் நினைவுகளை சேகரித்து தக்கவைத்துக் கொள்கிறார் என்பதை வார்தா பதிவு செய்திருக்கிறார். ஆய்வாளர்களால் அதிகம் சுட்டப்பட்ட அக்காட்சியில் ஆன்ட்றே கவிதையை மீண்டும் மீண்டும் ஒப்பித்து வயது காரணமாக தன்னை விட்டு அகலும் தனது நினைவுகளை தக்க வைத்துக் கொள்கிறார். வாழ்வு யதார்த்தம் மட்டுமில்லை என்கிற நம்பிக்கையை ஆன்ட்றேயின் கவிதையைக் கொண்டு, கடந்த காலத்தை நினைவு கூறுவதன் மூலமாக - தனது ஞாபகத்தை தூண்டுவதன் மூலமாக - வாழ்க்கையைப் பற்றும் செயலாக வரிந்து தனக்கு நம்பிக்கை அளிப்பதாக ஆகவாசமுறும் வார்தா தனக்கு அத்தகைய ஒரு காலகட்டம் வருமெனில் பாதலேர், ப்ரெவெர், அரகான், மற்றும் ரில்கேயின் கவிதையைத் தவிர மற்றதெல்லாம் கணக்கில் கொள்ளத் தக்கதல்ல என்கிறார். ழாக் ப்ரெவெரை எடுத்துக் கொண்டால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








சினிமாவின் பாதிப்பு அவரது உன்னத கவிதைகளில் தெரியும். ப்ரான்ஸை சேர்ந்த வார்தா கவிதையை உன்னத கலைவுருவாக கொள்வது இயல்பானதே. அத்தகைய சினிகவிதைகளை வடிக்கும் கோட்பாடாக "சின்கிரிச்சர்" என்கிற தனது சினி எழுத்து சார்ந்த எண்ணங்களை முன்வைக்கிறார் வார்தா. சினிக்ரிச்சர் என்பது திரைக்கதை அல்ல. அது கதையாடலை உள்ளடக்கியது ஆயினும் மொத்த சினி உருவையும் அதன் கலைசாத்தியங்களையும் உள்ளடக்கியது.

கேமராவின் ஆட்டம் வார்தாவுக்கு முக்கியமானது. க்ளீனர்ஸ் அண்ட் ஐயில் கையடக்க டிஜிடல் கேமராவை வைத்துக் கொண்டு படம் பிடிக்கும் வார்தா சிறிய நூலினால் அந்த கேமராவுடன் இணைந்த அதன் லென்ஸ் கேப் கேமராமுன் சட்டகத்திற்கு உள்ளும் வெளியும் ஆடுவதைப் படம் பிடித்திருப்பார்... க்ளியோவில் கேமராவை ட்ரைபாடில் அமர்த்தி அசையாத அதன் சட்டகங்களின் அமைதியான நேர்த்தியை பாரிஸின் வீதிகளில் பயணிக்கும் க்ளியோவின் உளைச்சல் நிறைந்த மனநிலைக்கு முரண் அழகியலாக தேர்ந்தெடுத்திருந்த வார்தா திரைப்பட இயக்குநராக வேண்டும் என்ற கனவில் இருப்பவர்களுக்கு வாழும் வழிகாட்டியாக இருக்கிறார்.

மானுடரைத் திறந்தால் நிலக்காட்சியை காணலாம் என்று கூறும் வார்தா தனது கதாபாத்திரங்களின் மனதை திறந்து மணல் வெளியில் பயணிக்கும் ஒரு அசாத்திய கலைஞர். கவிதையும் ஹாஸ்யமும் கலந்து டிஜிடல் கேமராவை ஒருகையிலேந்தி படம் பிடிக்கும் வார்தா தனக்கேயுரிய யதேச்சையான பாணியில் க்ளீனர்ஸில் ரெம்ப்ராண்டின் ஓவியத்திலுள்ள மாதுவின் மென்மையான கைகளிலிருந்து தனது கேமராவின் பார்வையை டில்டும் பேனும் செய்து கீழேயுள்ள தனது மற்ற கைமேல் செலுத்துவார். அவரது கைகளிலுள்ள சுருக்கங்கள் வேகமாக கடந்து கொண்டிருக்கும் காலத்தை எமக்கு அறிவித்துக் கொண்டிருக்க அவருடன் நெடுநாட்களாக பயணித்த என்போன்றோரின் கண்களில் நீர் வார்க்கும். அவர் கைகளிலிருந்து மானசீகமாக எனது கைகளில் அவரது கேமராவின் பார்வையை மெதுவாக கீழிறக்குகின்றேன். அவருடனான நீண்ட நெடுநாள் பயணத்தின் சுவாரசியத்தில் கணக்கில் கொள்ள மறந்த கால அளவை எனது கைகளிலும் கண்டு மீண்டும் பழைய நினைவில் அமிழ்கிறேன்.

அன்பின் இனிய வார்தா ( *30 மே 1928 — 28 மார்ச் 2019*) இன்று நம்மிடம் இல்லை. ஆயினும் அவரது கவிமனதில் உருக்கொண்ட சினிமா நம்மிடம் இருக்கிறது—காலத்தால் அளக்க முடியாத அவரது கானங்கள் திரையில் இசைத்துக்கொண்டுள்ளன. "*Nature respects us when we work; But she loves us when we sing,*" என்று தாகூரின் கவிதையை நான் எனது குறும்படமொன்றில் பாவித்தது இப்போது நினைவிலோடுகிறது. வார்தாவைப்பற்றிய கட்டுரை கவிதையுடன் முடிவதே பொருத்தமானதாகப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கு.சின்னப்ப பாரதியின் வாழ்வும் தமிழ்ப்பணியும்

## க.பஞ்சாங்கம்

இலக்கியம் சமூக மாற்றத்திற்கான கருத்தாயுதக் கருவி என்று உறுதியாக நம்பியவர் சமீபத்தில் மறைந்த எழுத்தாளர் சின்னப்ப பாரதி (1935-2022). இந்த நம்பிக்கைக்கு ஏற்ப மார்க்சிம் கார்க்கி வளர்த்தெடுத்த சோசலிச யதார்த்தவாதம் என்ற ஓர் இலக்கிய முற்போக்குக் கோட்பாட்டு அடிப்படையில் தன் எழுத்துக்களைத் திட்டமிட்டு அமைத்துக் கொண்டார். எழுத்தாளர் என்பவர் மனிதர்களின் சமூகத்தைக் கட்டி எழுப்பும் பொறியியல் அறிஞர் என்பதில் உறுதியாக நின்றார். இதுபோலவே எழுத்தாளர் ஒரே நேரத்தில் புதிதாகப் பிறப்பவற்றைக் கையில் ஏந்திப் பேணும் மருத்துவச்சியாகவும் இருக்க வேண்டும் காலாவதியான பழையவற்றை ஆழக் குழி தோண்டிப் புதைக்கும் வெட்டியானாகவும் இருக்க வேண்டும் என்ற புகழ்பெற்ற வாசகத்தை மனதில்வாங்கி நிறுத்திக்கொண்டு தன் எழுத்துப்பயணத்தைத் தொடர்பு அறாமல் நடத்தினார். எனவேதான் நாற்காலி எழுத்தாளராக மட்டுமில்லாமல் களத்தில் இறங்கிப் போராடுகிறவராகவும் இயங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பொன்னேரிப் பட்டி என்ற சிற்றூரில் பிறந்து வளர்ந்த சின்னப்பன் என்ற சின்னப்ப பாரதி அன்றைய இளைஞர்களின் பொதுவான போக்கிற்கு ஏற்பத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இயக்கங்கள் நடத்திய பொதுக்கூட்டங்களால் சமூக உணர்வு பெற்றுள்ளார். கூடவே அவருக்கு ஆசிரியராக அமைந்த மு.வரதராசனார் எழுத்துக்களை ஒன்றுவிடாமல் வாசித்துச் சொற்கள் தரும் சுவையையும் அறிந்து இலக்கிய உணர்வும் பெற்றுள்ளார். இத்தகைய பின்புலத்தில் மார்க்சியம் அறிமுகமானபோது அத்தத்துவத்தால் ஈர்க்கப்பட்டு 1960இல் தனது 25 வயதிலேயே இடதுசாரி இயக்கத்தின் முழுநேர ஊழியராகச் சேர்ந்து இறுதிவரை கட்சிக்காக உழைத்துள்ளார். கல்லூரியில் படிக்கிற காலத்திலேயே நில உச்சவரம்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு 650 கிலோமீட்டர் நடைப்பயணம் மேற்கொண்டு உள்ளார். 1964இல் கட்சி இரண்டாகப் பிளவுண்ட போது மார்க்சியப் பொதுவுடமைக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அதனுடைய தொழிற்சங்க நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கு கொண்டார். அதே நேரத்தில் இலக்கிய உணர்வு மிக்கவர் என்பதனால் கட்சிக்கு ஓர் இலக்கியப் பத்திரிகை வேண்டும் என்று "செம்மலர்" - புகழ்பெற்ற பல எழுத்தாளர்களை உருவாக்கிய இதழ் - தொடங்குவதற்கும் காரணமாக அமைந்தார். "தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்" உருவாவதற்கும் அடிப்படையாக அமைந்தார். மதுரையில் செம்மலர் அலுவலகத்தில்தான் இச்சங்கத்திற்கான வேர் ஊன்றப்பட்டது என்பது வரலாறு.

இவ்வாறு சமூகக் களத்தில் ஒரு செயற்பாட்டாளராக இயங்கியது போலவே இலக்கியப் படைப்புத் தளத்திலும் கள ஆய்வுகள் செய்தே தன் எழுத்துப் பயணத்தை நடத்திக் காட்டியுள்ளார். தான் சார்ந்த மார்க்சியக் கொள்கைக்கு ஏற்பச் சமூகத்தில் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்கள் பக்கம் நின்றே தனது எல்லா எழுத்துக்களையும் எழுதிக் காட்டி உள்ளார். தாகம், சங்கம், சர்க்கரை, பவளாயி, சுரங்கம், தலைமுறை மாற்றம், பாலை நில ரோஜா ஆகிய ஏழு நாவல்களும் கவுரவம், தெய்வமாய் நின்றான் என்கிற இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களும் வெளிவந்துள்ளன. "தாகம்" நாவல் காவேரி பாயும் தஞ்சாவூர் நிலவுடமைச் சமூக அமைப்பில் விவசாயக் கூலிகளாக ஏழை மக்கள் அடிமை வாழ்வு வாழும் வாழ்க்கையை எதார்த்த பாணியில் எடுத்துரைத்துள்ளது. இந்த நாவலை எழுதுவதற்காகத் திருவாரூரில் மாதக்கணக்கில் தங்கி விவசாயிகளின் வாழ்க்கைப்பாட்டைக் கண்டும் கேட்டும் உணர்ந்து எழுதியுள்ளார்.

"சங்கம்" நாவல் எழுதுவதற்கும் கொல்லிமலை மக்களோடு வாழ்ந்து அனுபவம் பெற்றுப் படைத்துள்ளார். மலைமேலே உற்பத்தியாகும் பொருட்களை மலைக்குக் கீழே கொண்டு வந்து சந்தைப்படுத்த வேண்டிய நெருக்கடியில் பொருளுக்கு ஏற்ற விலை கிடைக்காமல் சுரண்டப்பட்ட கொல்லிமலை மக்களின் துயரத்தை இந்த நாவலில் படைத்துக் காட்டியதோடு அம்மக்களைத் திரட்டித் தொழிற்சங்கம் ஏற்படுத்திப் போராட்ட உணர்வைத் தூண்டிச் சந்தையை மலைக்கு மேலேயே கொண்டு சென்ற வரலாற்று நிகழ்வை இந்த நாவலில் பதிவு செய்துள்ளார். இந்த நாவலை வெளியிட்ட கவிஞர் மீராவின் வேண்டுகோளின் படிப் புதுச்சேரியில் பாரதி சிந்தனைப் பேரவை மூலமாக வெளியீட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யும் பொழுதுதான் முதன் முதலில் சின்னப்ப பாரதி அவர்களைப் பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. எழுத்தாளர் இராஜேந்திர சோழன் அந்த நூலைக் குறித்து ஏறத்தாழ 1:30 மணி நேரம் விரிவாகப் பேசினார். நிறைகுறைகளை அவருக்கே உரிய பாணியில் அலசி ஆராய்ந்து கொட்டினார். பாரதி தான் எழுதிய இந்த நாவல் மேல் பெரிதும் ஆர்வமும் பெருமையும் கொண்டிருந்தார். எனவே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்று மீராவிடம் வலியுறுத்தினார். ஆனால் மீராவின் அன்னம் பதிப்பகத்தில் அப்போதெல்லாம் ஆங்கில அச்சு எழுத்து வாங்கி இருக்கவில்லை என்பதை அறிந்த நாவலாசிரியர் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில எழுத்துக்களை வாங்கிக்கொடுத்து ஆங்கிலத்திலும் வெளியிட்டார். தொடர்ந்து வங்காளம், குஜராத்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராட்டியம், பிரஞ்சு, சிங்களம் முதலிய 13 மொழிகளில் நாவலை வெளிக்கொணர்ந்தார். அவரிடம் வெளிப்பட்ட இந்த விடாப்பிடியான முயற்சி அவரது இறுதிக்காலம் வரை தொடர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நாவலுக்கு 1986 இல் இலக்கியச் சிந்தனை விருது கிடைத்தது.



சின்னப்ப பாரதி, தானே ஒரு விவசாயி என்பதனால் உணவு உற்பத்திக்கான நிலத்தில் பணப் பயிரான கரும்பைச் சாகுபடி செய்யத் தொடங்கிய காலத்தில் அது குறித்த விசாரணையை விரிவாகத் தனது "சர்க்கரை" நாவலில் எழுதிச் செல்கிறார். மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடன் தொழிலாளராக வாழ்ந்து அந்த நாவலை எழுதி உள்ளார். இந்த நாவலில் பெண்களைத் தொழிற்சங்கங்களில் உறுப்பினராக்கி அரசியல் மயப்படுத்த வேண்டிய தேவையின் முக்கியத்துவத்தை அழுத்தமாக வலியுறுத்துகிறார். பெண்களின் வீட்டு வேலைகளை உழைப்பு சக்தியாகக் கணக்கெடுக்க வேண்டும்; அதற்கான சம்பளத்தையும் நிர்ணயிக்க வேண்டும் என்றெல்லாம் பேசுகிறார். வீட்டில் ஒரு மனையாளின் வேலைப்பளுவை இப்படிச் சித்தரிக்கிறார்:-

"அவளுக்கோ எத்தனையோ வேலைகள். வண்டிக்குக் கரும்புப் பாரம் ஏற்றி விடுவது, கறவை மாட்டைப் பிடித்துக்கொண்டு மேய்த்தல், மாலையில் வந்தவுடன் ஆட்டுரலில் பயிர் வகைகளை ஆட்டித் தாழியில் ஊற்றி மாட்டுக்குத் தண்ணீர் காட்டல், பால் கறத்தல், அதைக் காய்ச்சுதல், தண்ணீர் எடுத்தல், இரவுச் சமையல், உணவு பறிமாறல், பாத்திரம் தேய்த்தல், சாப்பிட்டு விட்டுத் தலை சாயுதல், ஒரு கோழித் தூக்கம், முதல் கோழி கூவும்போதே எழுந்து தயிர் கடைதல், சோளமோ, கம்போ உரலில் இடித்துக் களி கிண்டுதல், ஆனங்காய்ச்சி முடித்தல், தூக்குப் போணியில் காலை ஆகாரத்தை எடுத்துக்கொண்டு விடிவதற்கு முன்பே கரும்பு வெட்டக் காட்டுக்குச் சென்று சேர்தல்- இப்படி இருக்கிறது பெண்களின் வேலை (சர்க்கரை, ப.234)". சி.பாரதியின் நடை இது.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பெருந்துயரை விவரிக்கும் "சுரங்கம்" நாவலை எழுதுவதற்கும் மேற்கு வங்காளத்தில் அசன்சாவிலும், பத்துவானிலும் உள்ள சுரங்கத்திற்குச் சென்று கள ஆய்வு செய்துள்ளார். 55 வயதுக்கு மேல் சுரங்கத்திற்குள் செல்ல அனுமதி இல்லை என்ற நிலையிலும் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி 77 வயதில் சுரங்கத்திற்குள்ளும் சென்று தகவல்களைத் திரட்டி உள்ளார். இவ்வாறு பெரும் முயற்சியில் பிறந்தவை சின்னப்ப பாரதியின் எழுத்துக்கள்.

பெரிதும் சமூகப் பிரஞையோடு தன் எழுத்து வாழ்க்கையை அமைத்துக் கொண்ட சின்னப்ப பாரதி தனது கடைசிக் காலங்களில் தன் எழுத்திற்கான அங்கீகாரங்களை ஆவலோடு எதிர்பார்த்து ஏங்கினார். இலக்கிய அரசியல் கொடிகட்டிப் பறக்கும் தமிழ் இலக்கியப் புலத்தில் நம்பிக்கை அற்றவராகத் தானே எழுத்தாளர்களுக்குப் பரிசு வழங்கும் அமைப்பை உருவாக்கிச் செயல்படுபவராக மாறினார். "கு.சின்னப்ப பாரதி இலக்கியக் கருத்தரங்க நினைவு அறக்கட்டளை" என்று அறக்கட்டளை தொடங்கி உலகம் முழுவதும் இருக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்குப் பரிசு வழங்கி மகிழ்ந்தார். ஒரு சிறு கிராமத்தில் குப்பண்ணன், பெருமாயி அம்மாள் என்ற பெற்றோருக்கு மகனாகப் பிறந்த சின்னப்ப பாரதி நிறைவாழ்வு வாழ்ந்து தனது 87வது வயதில் 13-06-22 -அன்று தன் வாழ்வை முடித்துக்கொண்டார். விளிம்புநிலை மக்கள் மேன்மையையே தனது லட்சியமாகக் கொண்டு வாழ்ந்த பெருந்தகை எழுத்தாளர் கு.சின்னப்ப பாரதி அவர்களுக்கு நமது செவ்வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வோம். வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை அச்சமின்றி எடுத்துரைத்தவர் தெணியான்

## மு.அநாதரட்சகன்

தெணியான் (கந்தையா நடேசன்) ஈழத்தின் முற்போக்கு இலக்கியத்தளத்தில் நீண்ட காலம் இயங்கிய மூத்த எழுத்தாளர். சமூக விடுதலைப் போராளி. பரந்தளவில் நாவல் இலக்கியத்தில் கவனத்தை ஈர்த்த படைப்பாளி. ஈழத்து இலக்கியத்தின் ஜனநாயக முற்போக்கு, யதார்த்தப் படைப்பு முன்னோடிகளுள் ஒருவர். பொதுவுடைமைக் கொள்கையில் நாட்டமும், சமதர்ம வேட்கையும் மிக்கவர். சாதிய அடக்குமுறை கண்டு மனம் கொதித்தவர். மானுட விடுதலை எழுச்சியில் விழிப்புற்றவர். மனித நேயத்தைப் போற்றியவர். சமூகத்தை நேசித்தவர்.

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமான ஆளுமையாக அடையாளப்படுத்தப்படுபவர் தெணியான். ஈழத்து இலக்கியம் பற்றிப் பேசும்போது தெணியானின் பங்களிப்பினைத் தவிர்த்துவிட முடியாது. படைப்புத் துறையின் பல தளங்களையும் அலங்கரித்த ஓர் படைப்பாளி. 1942 இல் வடமராட்சிப் பிரதேசத்தில் பொலிகண்டிக் கிராமத்தில் பிறந்து கடந்த 22.05.2022 வரை எம்முடன் வாழ்ந்தவர். இதில் தெணியானின் எழுத்துலக வாழ்வென்பது அரை நூற்றாண்டுக்கும் மேலானது. தெணியான் 'விவேகி' என்ற சிற்றிதழில் 'பிணைப்பு' என்ற சிறுகதையுடன் 1964 இல் இலக்கிய உலகில் பிரவேசித்தார்.

தெணியான் விரும்பிச் செய்த பணி ஆசிரியப்பணி. முறையாகத் தமிழைக் கற்ற தமிழாசிரியராக நீண்டகாலம் பணியாற்றியவர். அதன்மூலம் சமூகத்தில் தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்டவர்.

தெணியானின் படைப்புலகம் விசாலித்தது. இதுவரை நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், பத்து நாவல்கள், மூன்று குறுநாவல்கள், முப்பது கவிதைகள், ஐந்து வானொலி நாடகங்கள், இரண்டு தன்வரலாற்றுச் சித்திரங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், விமர்சனங்கள், நேர்காணல்கள் என விரிவு கண்டவை ஏராளம். ஈழத்தில் சாதியம் பற்றி அதிகளவில் சிறுகதைகள் படைத்தவர் தெணியான். வடமராட்சி மண்ணின் முதலாவது நாவலாசிரியர் என்ற பெருமைக்கும் உரியவர்.

தனது படைப்புக்களில் அடிநிலை மக்களின் துன்ப துயரங்களை மனித நேயத்துடன் வெளிப்படுத்தியவர். மனிதத்தின் வீழ்ச்சியையும் பிறழ்வையும் தடுமாற்றத்தையும் அனுதாபத்துடன் பார்த்தவர். ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பின்மீது அதிக குறைகளைக் கண்டு இனங்காட்டியவர் தெணியான். நெருக்கடிமிக்க போர்க்கால வாழ்விலும் ஏற்றத்தாழ்வினை சமூகம் கைவிடவில்லை என்கிற யதார்த்தத்தினை வெளிப்படுத்தியவர்.

தெணியான் தனது படைப்புக்களில் முரண்களை உருவாக்கி நல்ல அனுபவங்களை வாசகனிடத்தில் தொற்ற வைப்பதில் கைதேர்ந்தவராக இருந்தார். அவரது படைப்புக்களில் மொழி, வடிவம், உள்ளடக்கம், உத்தி என்பவற்றில் புதுமை செய்ய முனைந்து நின்ற படைப்பாளியாக வாழ்ந்தவர்.

ஈழத்தில் சாதியச் சிந்தனைக்கு எதிர்வினையாற்றிய டானியல், டொமினிக்ஜீவா, என்,கே ரகுநாதன், செ. கணேசலிங்கன், நீர்வை பொன்னையன் வரிசையில் அவர்களது பணியில் அறுபடாத தொடர்ச்சியைப் பேணியவர் தெணியான். தனது கருத்தியலுக்கு அப்பால் எதிர்நிலைப்பட்டவர்களுடனும் சுமுகமான உறவைப் பேணியவர்.

தெணியானின் படைப்புக்களில் பொதுமைப் பண்புகளாக வெளித்தெரிபவை சாதிய ஒடுக்குதல்கள், மேலாதிக்கச் சமூகத்தின் மனோவியல்புகள், உணர்வுகள், சுரண்டல்கள், உறவுச் சிதைவுகள், உள நெருக்கீடுகள் என மனித உள்ளங்களைப் பாதிக்கின்ற சமூக யதார்த்தங்களைத் தொட்டுக் காட்டுபவை. தனது சிறுகதைகளிலும் சரி, நாவல்களிலும் சரி பாத்திரங்களின் உருவாக்கத்தில் கவனங் கொள்பவர் தெணியான். தனது படைப்புக்களின் ஊடாக அவர் சொல்லவரும் செய்தி முக்கியமானது. மனிதாபிமானம் என்பது மனித மாண்புகளைப் போற்றுவதுடன் நிற்பதில்லை. அதற்காகப் போராடுவதுதான் என்பதை செய்தியாக முன்வைப்பார்.

எண்பதுகளுக்குப் பின்னான அவரது சிறுகதைப் படைப்புக்கள் இன்னொரு தளத்தில் இருப்பவை. போரில் சிக்குண்டு போனவர்களைப் பற்றிப் பேசுபவை. மக்கள்மீது திணிக்கப்பட்ட போரின் அவலங்கள், இடப்பெயர்வுகள், உளநெருக்கீடுகளைப் பரிவுடன் தருபவை. அம்மக்களது பரிதவிப்பில் அவர் கொள்ளும் நெகிழ்வும் பரிவும் கலை நேர்த்தியுடன் பதிவாகியுள்ளன. அவ்வகையில் உவப்பு, நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளப்படவேண்டும், இன்னுமா என்பவற்றைக் கூறலாம். நில உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள் மேலாதிக்க சாதியினரை நம்பி வாழும் அடிமை குடிமைகளே என்ற யதார்த்தம் அவரது நாவல்களில் வெளிப்பட்டிருக்கின்றது. குறிப்பாக அவரது நாவல்களான மரக்கொக்கு, பொற்சிறையில் வாடும் புனிதர்கள், குடிமைகள், ஒடுக்கப்பட்டவர்கள் என்பவற்றில் இதனை அவதானிக்கலாம்.



தெணியான் தனது நீண்டகால இலக்கியப் பணிக்காக பல விருதுகளைப் பெற்றவர். கலாபூஷணம் (2003), ஆளுநர் விருது (2008), சாகித்திய ரத்னா(2013), கொடகே விருது, சாகித்திய விருது (3 தடவை) கு. சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது எனப் பல அடங்கும்.

தவிர, மல்லிகை 1989 மார்ச் மாத இதழின் முன்னட்டையில் அவரது உருவப்படத்தைப் பதித்து கௌரவித்தது. ஜீவநதி தெணியானைப் பல வழிகளில் கௌரவித்தது. அவரது 75ஆவது அகவை நிறைவில் தனது 106ஆவது இதழை அவரது பவளவிழா மலராக வெளியிட்டதுடன் அவரது படைப்புக்கள் குறித்தான நூல்களை வெளியீடு செய்தது. அத்துடன் மூன்றாவது மனிதன், படிகள், ஞானம், ஜீவநதி போன்ற சிற்றிதழ்கள் அவரது நேர்காணலை வெளியிட்டன. கனடாவில் இருந்து வெளிவரும் காலம் 33ஆவது இதழானது தெணியானுக்கென சிறப்புப் பகுதி ஒன்றை வெளியிட்டு கௌரவித்திருந்தது. அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழியில் சிறப்புப் பாடமாகத் தெரிவு செய்த பல மாணவர்கள் தெணியானின் படைப்புக்கள் பற்றி ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளனர். தெணியானின் சிறப்பு, சாதியத்தின் கொடுமைகளை பல தளங்களில் நின்று பார்க்கக்கூடியவராக இருந்தார். அதனால்தான் வர்ணப்படிநிலையில் மேனிலைப்பட்ட பிராமணர்கள் பற்றியும் எழுதினார். கீழ்நிலைப்பட்ட பஞ்சமர்கள் பற்றியும் எழுதினார். இன்றுங்கூட சாதிய அடையாளங்களைத் தாண்டிய தமிழ் அடையாளம் ஒன்றை ஏற்பதற்கான பொதுப்பண்பாட்டு வெளி தமிழரிடம் உருவாகவில்லை என்ற கருத்தை வலியுறுத்தியவராக தெணியான் இருந்தார். அவரது படைப்புக்கள் எந்தளவுக்கு வெளிப்படைத்தன்மையானவையோ அந்தளவுக்கு அவருடைய வாழ்க்கையும் பகிரங்கமானது. அதனால்தான் தன் சுயவரலாற்று நூல்களை (பூச்சியம் பூச்சியமல்ல, இன்னும் சொல்லாதவை) அவரால் படைக்க முடிந்தது. சோர்வில்லாத இலக்கியப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தெணியான் எக்கணமும் அதைப் பற்றியே சிந்தித்தார். தன்னிடம் வருபவர்களை வரவேற்று இறுதிவரை உற்சாகத்துடன் உரையாடியவர். இதற்குக் காரணம் தன்னை இலக்கிய வெளியில் இற்றைப்படுத்தி (Updete) வைத்திருந்தமைதான். அவருக்கு இலக்கியம் என்பது பதவியோ பொழுதுபோக்கோ அல்ல. அது அவரது வாழ்க்கை வாசனையுங்கூட. அதில் அவருக்கு அலட்சியமோ சமரசமோ இருந்ததில்லை. தெணியான் முற்போக்கு இலக்கிய அணியைச் சார்ந்தவர். இலக்கியத்தில் முற்போக்குவாதம் காலாவதியாகிவிட்டது எனச் சிலர் வாதிக்கின்றார்கள். யதார்த்தத்தின் சமகால வாழ்வின் குறைகள் நீங்கிய இன்னும் சிறந்த வாழ்வை நோக்கிய பயணத்தினைப் படைப்பின் இலட்சியமாகக் கொண்டதே முற்போக்கு இலக்கியம். எழுத்தில் எதை எப்படி யாருக்குச் சொல்லப் போகிறாய் என்ற கேள்விகளே இங்கு அடிப்படையானவை. தவிர இன்றைய உலகமயமாக்கல் சூழலில் வாழ்க்கை யதார்த்தம் என்பது மனிதனை மனிதன் சுரண்டுவதையே குறியாகக் கொண்டது. இச்சுரண்டலும் வறுமையும் நீடிக்கும் வரையில் முற்போக்குவாதம் இருக்கத்தான் செய்யும் என அடிக்கடி தன் உரையாடல்களில் தெணியான் கூறுவார். சமூகத்தின் மனச்சாட்சியைத் தொட்டு உலுக்கும்படியான இலக்கியங்களுக்கு இன்னும் தேவை இருக்கிறது. அவை கலை நேர்த்தியுடன் படைக்கப்படவேண்டும் என்பதே அவரது உறுதியான கருத்தாக இருந்தது.

தெணியான் பொதுவுடைமைக் கொள்கையில் நாட்டம் மிக்கவர். அதேவேளை இனவிடுதலைக்கு முன் சமூக விடுதலையை முன்நிபந்தனையாகக் கொண்டிருந்தார்.

இத்தகைய ஆளுமைப் பண்புகள் நிரம்பிய தெணியானுடன் சமகாலத்தில் வாழ்ந்து பழகிய அனுபவங்கள் கிடைத்தற்கரியன. அந்தப் பொழுதுகள் பெறுமதியானவை. இறுதிவரை ஒரு முற்போக்கு இலக்கியவாதியாக அவர் திகழ்ந்தார். எழுத்துக்கும் எழுத்தாளனுக்கும் வேண்டிய உண்மையும் நேர்மையும் அவரிடம் நிறைந்திருந்தது. அவரது எளிமை, நேர்மை ஒடுக்கப்பட்ட மக்கள்மீது அவருக்கு இருந்த பரிவு ஆகியன எமக்கு தொடர்ந்து வழிகாட்டட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

இலக்கியவெளி கிடைத்தது. மகிழ்ச்சி சார். மிக அருமையாக இதழ் வெளிவந்துள்ளது. சி.சு.செல்லப்பாவின் 'எழுத்து' பத்திரிகைபோல இலக்கியவெளியும் காலத்தில் நிலைபெறும் சார். உங்கள் உழைப்பும் அர்ப்பணிப்பும் பக்கம்தோறும் தெரிகிறது. மனங்கனிந்த வாழ்த்துகள் சார்.

- பேராசிரியர் கல்யாணராமன், சென்னை

இன்றைய நவீன தமிழ்க் கவிதைகளின் போக்குகள் பற்றி அறிந்துகொள்ள விளைபவர்களுக்கு பயனுள்ள ஒரு சஞ்சிகையாக கவிதைச்சிறப்பிதழ் அமைந்திருக்கிறது.

- சுகந்தி இளங்கோ. நல்லூர், யாழ்ப்பாணம்

இரண்டு இலக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள் வந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. தேர்ந்த கேள்விகளுக்கூடாக இரண்டு ஆளுமைகளையும் பற்றி அறிந்திராத பல புதிய விடயங்களைத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

கதை, கவிதைகள் சிறப்பாக இருந்தன. சில ஆய்வுக்கட்டுரைகள் நீளமாக இருந்தன. கனதியான கட்டுரைகள் ஆனால் தேவையான விடயங்களை மட்டும் குறிப்பிட்டு அதிக விரிவாக்கமின்றி கட்டுரை அமைந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

- சுதர்சன், இலண்டன்.

இலக்கியவெளிச் சஞ்சிகையின் "கவிதைச் சிறப்பிதழ்" ஜூன் மாதம் வெளிவந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 55 கவிதைகளோடு கட்டுரைகள், நேர்காணல்கள், கதைகள் என முக்கியமான பதிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளதோடு மிக முக்கியமான வரலாற்று ஆவணமாகவும் காணப்படுகின்றது.

ஈழத்தில் வாழும் இலக்கியத் திறனாய்வாளர்களில் முதன்மை பெறும் சி.ரமேஸ் எழுதிய "ஈழத்து நவீன கவிதையின் அன்றைய இன்றைய போக்குக்கள்" என்னும் கட்டுரை ஈழத்து கவிதை முறைமையின் மாற்றங்கள் போக்குக்கள் பற்றி அலசுகின்றது. "மொழியின் சோதனைச் சாலையாக இயங்கும் கவிதை, ஒற்றை அர்த்தங்களுக்குக்குள் கரைந்துவிடாது சொல் புனைவும் அர்த்த சிருஷ்டிக்கூடாக அலங்காரத்தன்மையற்று உள்ளுணர்வின் தளத்தில் மொழியின் உள்ளுமைகளால் கட்டமைகின்றது." என ஆரம்பித்து ஈழத்தில் கவிதை எழுதியவர்களைப் பற்றிய பதிவாக அமைந்துள்ளது. ஈழத்தில் கவிதை மலையகக் கவிதைகள், கிழக்கிலங்கைக் கவிதைகள் என பன்முகத் தன்மை கொண்டது. "பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே சமுதாய உயர்வினைப் பிரதிபலிக்கத் தொடங்கிய புலவர்கள் மரபுவழி வந்த வடிவங்களைப் பயன்படுத்தி புதிய எண்ணங்களையும் நிகழ்வுகளையும் வெளிப்படுத்தினர்" எனக் குறிப்பிட்டுக்காட்டும் கட்டுரையாளர் 1892ல் வெளியாகிய தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் 'தத்தை விடு தூது" என்பதனை நவீன கவிதையின் ஆரம்பப் புள்ளி என எடுத்துக்காட்டி பாரதியின் காலத்தில் கவிதை எழுதிய பாவலர் துரையப்பாபிள்ளை தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் தமிழ் மரபுக்கவிதை சார்ந்து வெண்பாவை யாத்தவர் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழத்தில் பத்திரிகைகள் கவிதைகளை வளர்த்தெடுத்த வரலாற்றையும் இளையோட விட்டுள்ளார். நவாலியூர் சோமசுந்தரப்புலவர் போன்றோரின் பங்களிப்பையும் பதிவிட்டுச் செல்கின்றார். 1950களின் பின்னர் எழுந்த அரசியல் மாற்றங்கள் - கவிதைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை கோடிட்டுக்காட்டி உணர்ச்சி மிக்க கவிதைகளின் பிரவாகத்திற்கு அரசியல் போக்குகளில் 1980களின் பின்னர் சிங்களத் தேசியத்திற்கு எதிரான கருத்துக்களை புரட்சிகரச் சிந்தனைகளுக்கு ஊடாக பீறிட்டெழச் செய்த கவிஞர்கள் பற்றிய பதிவுகளைம் காணமுடிகின்றது. நுஃமான், முருகையன், ஜெயபாலன், சோ. பத்மநாதன், சேரன், ஜெயசீலன் போன்றோரது கவிதைகளின் கருப்பொருட்கள் பற்றியும் பதிவாக்கியுள்ளது கட்டுரை. 1990 களின் பின்னர் நவீன கவிதைகள் ஆரோக்கியமான வழியில் பயணிப்பதாகவும் அரசியல் போக்குக்கள், சமுதாய நிலைகள் பற்றியும் பதிவிட்டுள்ள கவிதைகள் பற்றி குறிப்பிட்டுச் செல்லும் கட்டுரையில் மக்கள் வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து செல்லும் அவலங்களையும் பதிவாக்கிய கவிதைகள் பற்றிப் பேசப்படுகின்றது. வில்வரத்தினம் போன்றோரின் முஸ்லிம்களுக்கு எதிராக இயக்கங்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் பற்றி பேசும் கவிதைகள் பற்றி நிதானமாகப் பதிவிடப்படுகின்றது. 2019ல் சேரனால் எழுதப்பட்ட 'அஞர்' என்னும் கவிதை நூலுக்கு விருது கிடைத்ததைப் பாராட்டும் ரமேஷ் அவரது கவிதைகளில் உயிர்த்துடிப்பற்ற நிலைமை காணப்படுவதையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை.

கி.வ.ஜெயபாலன், திருமாவளவன், கி.பி.அரவிந்தன், பா.அகிலன் ஆகியோரின் கவிதைத் திறனை பாரட்டி அவர்களின் படைப்புக்களைப் பட்டியலிட்டுள்ளார். ஈழ்போரின் சாட்சியங்களாக விளங்கிய கருணாகரன், நிலாந்தன், விஷ்ணு போன்றோர் போரின் உக்கிர வெறியாட்டத்தைப் பிரதிபலிக்கும் கவிதைகளை எடுத்துக்காட்டுகின்றது கட்டுரை.

கடந்துபோன கசப்பான அனுபவங்களைப் பேசும் நிலாந்தனின் வன்னி மண்ணின் நிலைகளைச் சித்தரிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகளைக் காட்டுகின்றன. பெண்ணியம் பற்றிப் பேசப்படும் கவிதைகளும் பெண் கவிஞர்கள் பற்றிய பதிவுகளும் இடம்பெறுகின்றன. தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்புப்பற்றி நிறையவே பேசப்படுகின்றது. கவிஞர் நுஃமானின் பங்களிப்புப்பற்றியும் பேசுகின்றது.

சி.ரமேஷின் ஆய்வுக்கட்டுரை இவ்விதழில் 6 தொடக்கம் 37 பக்கங்களுக்கு வியாபித்துள்ளது. அவரின் ஆய்வுச் சுருக்கமாகவே இலக்கியவெளி சஞ்சிகையில் இது பதிவாகியுள்ளமை சாதாரண வாசகர்களுக்கு மட்டுமல்ல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வரப்பிரசாதமாக அமைகின்றது என்பது கருத்திற்கொள்ளற்பாலது.

இரண்டாவதாக "புதுவைக் கவிஞர்களின் படைப்புலகம்" என்னும் பா. இரவிக்குமாரின் கட்டுரை இடம்பெற்றுள்ளது. புதுவைக் கவிஞர்களின் சிறப்பியல்புகளைக் கோடிட்டுக்காட்டி பெண்கவிஞர்களின் கவிதைகள், புதுவைக் கவிஞர்களின் பன்முகப் பரிமாணம் என்னும் பொருட்களில் ஆய்வு செய்துதந்துள்ளார். புதுச்சேரியின் மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சிநிறுவனத்தின் இயக்குநர் இரா. சம்பத், 122 மரபுக் கவிஞர்களை பதிவிட்டுள்ளமையைச் சுட்டிகாட்டுகின்றார். புதுவையின் பெண் கவிஞர்களில் முக்கியமானவராக இரா. மீனாட்சி பற்றிப் சிறப்பித்துப் பதிவிட்டுள்ளது கட்டுரை.

மூன்றாவதாக இரா.பிரேமாவின் "நவீன தமிழ்க் கவிதை உருவாக்கத்தில் பெண்களும் பெண்கள் சார்ந்த பதிவுகளும்" தன்னிலையை வெளிப்படுத்தல், பொருளை விடுவித்தல், புதிய சொற்களின் கையாடல், கூர்மை, தீவிரம், காலவரிசை, பொருள் தொடர்ச்சி என்பனவற்றை நிராகரித்து புதிய பரிமாணங்களையும் உருவகங்களையும் வெளிப்படுத்துவதாக வரையறுக்கின்றார். பத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து நூலுருக்கொடுத்து சித்திரலேகா மௌனகுருவின் முயற்சி பெண்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்ததாகக் குறிப்பிடும் கட்டுரையாளர் 1990களில் பெண் கவிஞர்களின் அபரிமிதமான எழுச்சியைக் கண்டதாகக் குறிப்பிடுகின்றார். இக்காலகட்டத்தில் கவிதை படைத்தவர்களில் முக்கியமானவர்களை பட்டியலிடுகின்றார். அவ்விதமே இரண்டாயிரமாம் ஆண்டில் பெண்களின் கவிதைகள் நிறையவே வெளிவந்ததாகவும் கோடிட்டுக்காட்டுகின்றார். பெண் கவிஞர்கள் பெண்கள் விடுதலைக்காகவும், ஈழத்துப் போராட்டத்தைப் பற்றிய கவிதைகளைப் படைத்ததைச் சுட்டிக்காட்டி அன்னிய மண்ணில் வாழும் பெண் கவிஞர்கள் புலம்பெயர் மண்ணோடு தங்கள் பண்பாட்டு முரண்பாடுகளையும் அவற்றின் தாக்கத்தையும் பதிவிட்டுள்ள கவிஞர்களையும் குறிப்பிடுகின்றார். பெண் விடுதலை, பெண்களின் உடல் நிலை, பெண்களின் மனவெளுச்சி பற்றிய கவிதைகள் சில இங்கு பேசுபொருளாக அமைந்துள்ளன. நான்சி




ஹென்சியின் 'உடல் அரசியல்' என்னும் நூல்பற்றி எடுத்துக்காட்டி ஆணியத்தின் ஆதிக்கத்தை குத்திக்காட்டி பெண்கள் படும் அவலங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. தொடர்ந்து சமூகத்திலும் இயற்கையிலும் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கவிதைகள் அண்மைக்காலங்களில் பதிவாகியுள்ளமையும் பெண்களின் பங்களிப்புப்பற்றியும் பேசுகின்றது கட்டுரை. பெண்களைச் சந்தைப்பொருளாக 'பெண் அழகிப் போட்டிகள்' வைப்பதனால் பெண் இனத்திற்கு ஏற்படும் அவமானம் பேசப்படுகின்றது. பெண் கருப்பையை வாடகைக்குவிடும் நிலையும், வாடகைத்தாய் என்னும் இழிநிலைப்பதம் பணத்தின் முன் மறைந்து போகின்றது. பொதுவாக பெண்கள் படும் அவலங்கள் பெண்களாலேயே சித்தரிக்கப்படுவதனைக் குறிப்பிட்டுக்காட்டுன்றார் கட்டுரையாளர்.

சிங்கப்பூர் புதுக்கவிதை – நோக்கும் போக்கும் என்னும் கட்டுரையைத் தந்துள்ளார் கோட்டி திருமுருகானந்தம். சிங்கப்பூர் புதுக்கவிதையின் தோற்றம், அதற்கு எதிரான குரல்கள், வளர்ச்சி, சமூக அமைப்புக்களின் பணி, உள்ளடக்கக்கூறுகள், புதுகவிதையின் இன்றைய நிலைபற்றிப் பார்க்கின்றது இக்கட்டுரை. "சுவை புதிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்புதிது வளம்புதிது சொல்புதிது சோதிமிக்க நவகவிதை'' என்னும் பாரதியின் வரைவிலக்கணத்தை முன்வைத்து சமுதாய மாற்றம் நோக்கு போக்கு என்பனவற்றிற்கேற்ப கவிதை உலகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் சிங்கை மண்ணையும் விட்டுவைக்கவில்லை என்னும் கருப்பொருளை வெளிக்காட்டுவதாக அமைகின்றது. மரபுக்கவிஞர்கள் புதுக்கவிதைகள் பற்றிய எதிர்வினையாற்றுவதை சுட்டிக்காட்டியமைக்கு எதிராக புதுக்கவிதையின் நன்மை, இலகு, பொருள், இலகு தன்மை பற்றிக்கட்டுரை எடுத்துக்காட்டுக்களைத் தந்துள்ளது. உரைக் கவிதை, உரை வீச்சு எனக்குறிப்பிட்டுள்ளமைபற்றி புதுக்கவிதையை ஆதரிப்போருக்கும் மரபாளர்களுக்கும் இடையேயான வாதப்பிரதவாதங்களை எடுத்துக்காட்டுகின்றார் கட்டுரையாளர்.

''கட்டுப்பாடு மரபு என்று
களைப்பின்றிச் சத்தமிடும்
யாப்புப்படித்த கவிகளே! இல்லை
ஆப்புப் பிடித்த கைகளே

எனத் தொடங்கும் கவிதையில் இலக்கண அமைதி உண்டு என்பதனை குறிப்பிட்டு புதுக்கவிதைகளுக்கும் யாப்பிலக்கணம் உண்டு எனக்காட்டுகின்றார். இதனை எதிர்த்து கவிஞர் இளமாறன் எழுதிய ஒரு கவிதை:

கலிவிருத்த வண்ணம் சிந்து கனியாகும் கும்மி வெண்பா
பொலிவாகத் தீட்டு வீரே புகழ்கிடைக்கும் குமுகா யத்தில்
எலிபோலும் சாக்க டைக்குள் இனப்பெருக்கம் செய்தல் போல
மலிவான படைப்பு மாக்கல் மனந்தங்கி நிற்கு மாமோ?

எனப் புதுக்கவிதைநிலைக்காது என 2001ல் பதிவிட்டுள்ளமையைக் காட்டுகின்றார். இதற்கு எதிராக வழி சமைத்த சிங்கப்பூர் தமிழ் முரசு ஆற்றிவரும் சேவைபற்றியும் குறிப்பிடுகின்றது கட்டுரை.

சிங்கப்பூர் அரசின் ஆதரவுபற்றியும் அதனால் ஆங்கிலம், சீனம், தமிழ் மொழிக் கவிதைகளை பதிவிடுகின்றது. பதிவாகும் கவிதைகளில் அரைப்பங்கிற்கு மேலானது புதுக்கவிதை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் உள்ள பத்திரிகைகள், சமூக அமைப்புக்களின் கவிதை வளர்ச்சிக்கான பங்களிப்புக்கள் பற்றியும் கவிஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகள் பற்றியும் விரிவாக தகவல்களைத் தருகின்றது கட்டுரை.

மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைகளின் தற்காலப் போக்குகள் 2000-2021 என்னும் கட்டுரையை ராஜம் காளியப்பன் எழுதியுள்ளார். புதுக்கவிதைகளின் வரலாறு நான்கு பிரிவுகளாக வகுத்து ஆராயப்பட்டுள்ளது. (1. தொடக்க காலம், 2.வானம்பாடிக் காலம், 3.வானம்பாடிக்கு பிந்திய காலம், 4. மறுமலர்ச்சிக்காலம், 5. நவீன காலம்) ஆரம்ப காலத்தில் மரபாளர்களால் புதுக்கவிதைகள் ஓரங்கட்டப்பட்டன எனக்குறிப்பிடும் அவர் அக்காலகட்டத்தில் புதுக்கவிதை படைத்தவர்களின் பட்டியலை தந்துள்ளார். வானபாடிப் பத்திரிகையோடுதான் புதுக்கவிதை பரவலாகப் பேசப்பட்டது எனக்குறிப்பிடுகின்றர். அடுத்த காலகட்டத்தில் புதுக்கவிஞர்களின் வரவு அதிகரித்தபோதும் வானப்பாடிக் காலத்தில் எழுந்தது போன்று இல்லை எனக்குறிப்பிடுகின்றார்.

மறுமலர்ச்சிக்காலத்தில் மீண்டும் புதுக்கவிதைக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டதாகவும் கவியரங்கங்கள் இடம்பெற்றதாகவும் பதிவிடுகின்றார். மறுமலர்ச்சிக் காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற்று வீறுநடை போடத்தொடங்கியுள்ளது எனவும் 2006க்குப் பின்னர் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் இளம் தலைமுறையினர் புதுக்கவிதைகளை செப்பனிட்டுத் தந்துள்ளதால் புதிய வீறுநடையைக் கவிதை உலகம் பெற்றுக்கொண்டதாகவும் சமுதாயத்தில் எற்பட்ட மாற்றங்கள் அவற்றிற்கு எதிரான கருத்துக்களைப் பாடுபொருளாகக் கொண்டு புதுக்கவிதைகள் இடம்பெற்றன. இந்தியத் தமிழர்களின் நிலைபற்றிய விளிப்புணர்வை ஏற்படுத்துவனவாக புதுக்கவிதைகள் படைக்கப்பட்டன.

நமது வகுப்பறைகளும் கவிதை வாசிப்பும் என்னும் கட்டுரையை பேராசிரியர் க.பஞ்சாங்கம் எழுதியுள்ளார். கணியன் பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளிர் பாடபோதனை பற்றிய தான் பெற்ற அனுபவத்தை பதிவிடுகின்றார். செய்யுளின் கருத்தைக் கற்றுத்தருவது பல்கலைக்கழகக் கல்வி வரை ஆசிரியர்களால் பின்பற்றப்பட்டு வருவது யதார்த்தம் என்பதனைக் குறிப்பிட்டு இதுதான் கல்வி கற்றுத்தரும் முறைமையா என்னும் கேள்வியையும் எழுப்புகின்றார்.

''கவிதையின் பொருளை அல்லது அதன் இலக்கணத்தை மட்டும் கற்றுக்கொடுத்தாகி விடுமா என்ற புரிதலே இல்லாமல் இருப்பதுதான் இதற்குக் காரணம். கவிதை- என்கின்ற வடிவம் தோற்றம், தன்மை, வரலாறு, கவிதைக்கும் மொழிக்குமுள்ள உறவு அதன் ஓவியம் முன்வைக்கும் தத்துவம் தனி மனிதர்களுக்கும் கவிதைக்கும் உள்ள உறவு சமூகத்தின்மேல் அது நிகழ்த்தும் லீலை முதலியன பற்றி எல்லாம் நடந்து கொண்டிருக்கும் விசாரணைகள் குறித்து எதுவித வாசிப்பும் புரிதலும் அறவே இல்லாமல் வகுப்பெடுக்கிறவர்கள் தான் இங்கே அதிகமாக இருக்கிறார்கள். எனவே தமிழ் மண்ணில் கவிதைகள் எழுதப்படுகின்ற அளவிற்கு அவை குறித்த அலசலும் தேடலும் ருசித்தலும் நுகர்தலும் சிறப்பாக இல்லை'' என்கிறார் பேராசிரியர் க.பஞ்சாங்கம்.

இக்கவிதையில் உள்ள முரண்தொடை அமைப்பின் சிறப்பையும் இணை முரண்கள் எனக்காட்டி தீதும்-நன்றும், நோதலும் -தணிதலும், சாதலும்-வாழ்தலும், இனிது- இன்னாது, பெரியோரை- சிறியோரை வியத்தல்- இகழ்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றை மிக அழகாக எடுத்துக்காட்டுவதோடு மார்க்சிச கோட்பாட்டின்படி எதனையும் வரலாற்றுப்பின் புலத்தில்தான் வாசிக்க முயலவேண்டும் எனக் குறிப்பிட்டுச் செல்கின்றது அவரது கட்டுரை என்பதற்கு மேலாக "யாதும் ஊரே .... என்னும் ஒரு சமூகத்தின் சிறுபுள்ளியில் பிறந்த இந்தக்கவிதை இன்று உலகெலாம் வியாபித்து புகழ்பரப்பி நிற்பது பற்றி மிகத் தெளிவான கருத்தாடலைத் தந்துள்ளார். இக்கவிதையில் இருந்து கற்றுக்கொள்ளும் பாடம் என்ன என்பதே அவரது இக்கட்டுரையின் அடிநாதமாக அமைகின்றது என்பதனைக் கோடிட்டுக்காட்டுவதன் மூலம் கவிதையின் கடமை என்ன என்பதற்குப் புதிர்போடுகின்றார்.

மனித வாழ்வு விதிவழிதான் என்பதனை சமூக ஓட்டத்திற்கேற்ப வாழக் கவிதை கற்றுத் தருகின்றது என்பதனையும் எடுத்துக்காட்டி ஒரு கவிதைக்குள் பயணிப்பதற்கு எவ்வளவு சாத்தியப்பாடுகள் இருக்கின்றனவோ அவ்வளவையும் பயன்படுத்திக் கற்றுக் கொடுக்கும் போது மாணவர் உள்ளத்தில் பல்வேறு காட்சிப் படிமங்களையும் சிந்தனைச் சிதறல்களையும் ஆசிரியர்கள் விதைக்கமுடியும் என்பதோடு வகுப்பறைக் கற்றல் மேம்பாட்டை அடையச் செய்யமுடியும் என்பது அவரது கருத்தாக அமைகின்றது. சங்கப்புலவனது ஒரு கவிதையை எனத்தனை கோணங்களில் எடுத்துக்காட்டுகின்றார் என்பதனை பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் பரந்துபட்ட பார்வையை பேராசிரியர் பஞ்சாங்கத்திடம் காணமுடிகின்றது.

ஈழத்துக் கவிதைகளில் தேசமும் தேசியமும் எனும் க.இரகுபரனின் கட்டுரையில் தேசியம் என்பது மக்களிடம் திணிக்கப்பட்டுள்ள அடக்குமுறைகள், கட்டுப்பாடுகள் விடுவிக்கப்பட்டு இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளும் சுயாதீனம் அவர்களிடம் இருக்கவேண்டும் என்னும் கருத்தை அடிநாதமாகக் கொண்டு அமைகின்றது. ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசிய வாதம் ஆசியாவிற்குள் மாற்றங்களை ஏற்படுத்திய வரலாற்றடிப்படையில் தேசிய வாதத்தின் போக்கை காட்டுகின்றது கட்டுரை. அன்னியருக்கு எதிரான தேசிய வாதமும் மற்றும் மாறுபட்ட கிளை தேசிய வாதமும் காணப்படுவதைக் கோடிட்டுக்காட்டுகின்றார். பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் வெவ்வேறு இறைமை மிக்க அரசுகள் இல்லாதொழிக்கப்பட்டமையால் இன்று ஏற்பட்டள்ளஅவல நிலையைக் கருத்திற் கொண்டு அலசுகின்றது கட்டுரை. "பிரித்தானியரின் அடக்குமுறை ஆட்சிக்குள் ஒன்றுபட்ட இந்திய தேசமாக உருப்பெற்றமை வரலாறு. இலங்கையிலும் நிகழ்ந்தது அதுவே" எனக்குறிப்பிட்டு பல வகுப்புவாத இனங்களை உருவாகவும் வழிவகுத்ததை சிலாகிக்கின்றார். பிரித்தானிய ஆட்சியின் வாயிலாக உயர் குழாம் உருவானதாகவும் இது சமுதாயத்திற்குச் சாபக்கேடாக அமைந்தது என்பதனையும் கட்டுரை எடுத்தியம்புகின்றது. யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தொடர்ச்சியாக இலக்கியப் படைப்புக்கள் எழுந்துள்ளன அவை வரலாற்றுப் படைப்புக்களாக அமைந்தமையைக் சுட்டிக் காட்டியுள்ளார் ஆசிரியர். தேசியம் பற்றிய கவிதைகள் அன்னியர் ஆட்சிக்கெதிராக எழுந்துள்ளன. அவை மக்களை தூண்டும் கவிதைகளாக அமைந்துள்ளமையை எழுத்துக்காட்டுகின்றார்."போராட்ட காலத்தில் எழுந்த கவிதைகள் தமிழ்த்தேசியத்திற்கு முன்பாக உணர்ச்சியற்ற சொற் கூட்டமாக மக்கள் மனதைக் கவராதவையாய்ப் போய்விட்டன" எனக்குறிப்பிட்டு இன ஒற்றுமை பற்றி வற்புறுத்தப்பட்ட பாடல்களும் பெரிதாக தாக்கத்தை எற்படுத்தவில்லை என்பதையும் பதிவிடுகின்றார்.

சீதா ரஞ்சனி: மனிதத்தின் பாடலிசைக்கும் சிங்களக் கவிதாயினி என்னும் கட்டுரையை ஈழத்தைச் சேர்ந்த இஸ்லாமியரான லறீனா அப்துல்ஹக் எழுதியுள்ளார். இனபேதத்திற்கு எதிரான மனிதத்தை பாடுகின்ற கவிதாயினியாக சீதா ரஞ்சனி உயிராபத்தையும் கருத்திற்கொள்ளாது இன ஒற்றுமைக்காகக் குரல் கொடுத்தவர். "சீதா ரஞ்சனியின் மனித உரிமைக்கான பல செயற்பாடுகளின் மூலம் மட்டுமன்றி அவரது பல்வேறு படைப்புகளின் ஊடாகவும் நாம் அப்பண்புகளை அடையாளம் காணலாம்" எனக் கட்டுரையாளர் குறிப்பிடுவதோடு அவரின் கவிதைகளுக்காக வழங்கப்பட்டுள்ள விருதுகளையும் பட்டியலிட்டுள்ளார். இன ஐக்கியத்துக்கான விருதினை அவரது "ராமன்" என்னும் நூலுக்கு 2000ல் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடுவது பெரும்பான்மை இனத்தவரிடையேயும் இனச் சமத்துவம் பேசப்படுவதனைக் காணமுடிகின்றது. "யுத்தமும் சமாதானமும்' என்ற கவிதையில்

> 'கதிரவனும் நெட்டுயிர்த்தான்,
> மதியவளும் அழுத ரற்றினாள்
> முகில்களால் முகம் மறைத்து
> தாரகைகள் எட்டிப்பார்த்தன மெதுவாய்
> இரவெல்லாம் உறங்காமல்
> விழித்திருக்கும் எனைப் போல
> மலர்களும் கண்ணீர் உகுக்கும்'

என அவர் எடுத்துக்காட்டுவதோடு அரச இயந்திரத்தின் அதிகார இருப்புக்கான எத்தனங்கள் எல்லை வரைக்கும் செல்லக்கூடியவை. அதிகாரவர்க்கத்தின் ஒடுக்குமுறைகளை உள்ளபடி அங்கீகரித்து, அவற்றின்முன் தலைதாழ்த்திப் பணிந்து, தமக்கான சுயாதீன வெளியை முற்றிலும் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு வாழ்வோர் அந்த ஒடுக்குமுறைகளின் பங்குதாரர்கள் ஆகின்றனர். அத்தகையவர்களை அப்பாவிகள் என்று நாம் கூறிவிட முடியுமா என்ற கேள்வியை எழுப்புகிறது அவரது கவிதைகள் எனக் குறிப்பிடும் கட்டுரையாளர் சீதா ரஞ்சனியை ஒரு மனிதபண்பாட்டாளராகக் காண்பிக்கின்றார். உண்மையான சுதந்திரமும் சமாதானமும் கானல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் மாறிப் போயிருக்கும் அவலத்தை மறைமுகமாக எடுத்துக்காட்டுவதாக மக்கள் தமது சுயத்தோடும், சொந்த அபிலாஷைகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் வகையிலும் அனுபவிக்கும் விதத்திலும் அமையாதவரை சுதந்திரம், சமாதானம் என்பன எல்லாம் வெறும் வார்த்தைகள் மட்டுமே என்ற ஆழ்ந்த கருத்தை வலியுறுத்தும் வகையிலும் அமைந்துள்ளன என எடுத்துக்காட்டுகின்றது கட்டுரை.

மின்னி மறைந்த பேரொளி: கவிஞர் எஸ்போஸ் என்னும் கட்டுரையை இயல்வாணன் எழுதியுள்ளார். இளம் வயதில் மறைந்துவிட்ட மகத்தான ஒரு கவிஞனின்- போராளியின் வரலாற்றைப் பதிவாக்கியுள்ளார். கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் பிறந்த அவர் போராட்டக் களத்தில் குதிக்க இயக்கத்தில் இணைந்து பின்னர் அதிலிருந்து வெளியேறி மணம் முடித்து இரு பிள்ளைகளுக்குத் தந்தையான அவர் பத்திரிகைத்துறையில் பணியாற்றி தனது எழுத்தின் தாக்கத்தினால் சுட்டுக் கொல்லப்படுகின்றார். அவ்வளவிற்கு அவரது கவிதைகள் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. அதிகாரம் அரசாங்கத்தில் இருந்துவந்தால் என்ன இயக்கத்தில் இருந்து வந்தால் என்ன அதனிடையே மக்கள் படும் அவலங்களை நேரடியாகப்பார்த்து அனுபவித்து மனம் நொந்து பாடும் கவிதைகள் பற்றிப் பேசுகின்றது கட்டுரை.

> "ஆணவத்தாலும் அதிகாரத்தின் வழியாகவும்
> கோரமாக்கப்பட்டு
> அழைத்துச் செல்லப்பட்டேன்
> மனிதர்களற்ற சூனியத் தீவிற்குள்
> வேதனைகளால் கரைகின்றன நிமிடங்கள்
> தமிழனின் ஆதிக்குடி பற்றியும்
> இந்த மண்ணுக்கு அவனே
> சொந்தக் காரனென்றும் சொல்லிக் கொண்டிருப்பதில்
> சலித்துப் போயிற்று என் பேனா?
> நான் தமிழன்
> எனக்கொரு அடையாளம் வேண்டும்
> அதற்கு கவிதை போதாது
> துப்பாக்கி, கத்தி, கோடரி
> ஏதாவது ஒன்று அல்லது மூன்றும் உடனே
> வேண்டும்.

இயக்கங்கள் வலுக்கட்டாயமாக இளைஞர்களை குடும்பத்திலிருந்து பிரித்து கூட்டிச் சென்று பயிற்சி வழங்கியதை எடுத்துக்காட்டி தமிழின அடையாளத்திற்கு போராட்டம் தான் வழி என்று அறிதியிடுகின்றது கவிதை. போராளிகளின் கனவுலகத்தைப் பதிவிடுகின்றது இன்னொரு கவிதை:

> கட்டளையிடுதல் உணவைவிட அவசியமாயிருந்தது
> அவர்களுக்கு
> தமது கனவுகளால்
> மிகப்பெரிய கோட்டைகளையும் சாம்ராஜ்ஜியகளையும்
> சூரியனைக் கூடத் தமது காலடிக்கு கொண்டு
> வந்துவிடுகிறார்கள்.
> ......................................................
>
> ஒரு நதியில் கலந்த விசத்துளியைப் போல
> காற்றில் எறிந்துவிடப்பட்ட பஞ்சுப் பொதியைப்
> போல
> எங்கும் பரவுகிறது.
> மக்கள் தங்கள் கனவுகளை இழந்தார்கள்

என்பனபோன்ற போராட்டத்தால் மக்களின் அவல நிலையை எடுத்துரைக்கின்றது கவிதை வழியாக கட்டுரை.

எழுத்தே உலகம் என புத்தகங்களோடு காலத்தை ஓட்டிய சுதாகர் 2007ல் வவுனியாவில் வீட்டினுள் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்படும் வரை 12 ஆண்டுகள் அவனது பேனா கிறுக்கிக்கொண்டே இருந்துள்ளது. இதனை விரும்பாத ஆயுததாரிகளின் துப்பாக்கி வேட்டுகளுக்கு இலக்கானார் அந்த இலக்கியவாதி.

அவரது கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள், கதைகளைத் தொகுத்து வெளியீடு செய்யப்பட்டுள்ள செய்தியும் பதிவாகியுள்ளது.

பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் நேர்காணல்: அடக்குமுறைக்கும் எதிர்ப்புணர்வுக்கும் இன, மத, வர்க்க, தேச எல்லைகளும் அடையாளமும் கிடையாது. அதனால்தான் எதிர்ப்புக் கவிதைகள் உலகெங்கும் ஒன்றுபோலவே இருக்கின்றன என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொண்டு செயற்பட்டு வரும் பேராசிரியர் நுஃமானை இலக்கியவெளி சஞ்சிகையின் ஆசிரியர் அகில் நேர்கண்டு பதிவாக்கியுள்ளார். பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்றோடு ஒட்டிய அவரது கவிதைகள் பற்றிய வரலாறாக நேர்காணல், இதழின் 94வது பக்கத்திலிருந்து 103 பக்கங்களை வியாபித்துள்ளது. 50களில் எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் போது ஆரம்பித்தது எனது கவிதை எண்ணம் என்று குறிப்பிட்ட அவர் வீரகேசரியில் நான் எழுதிய வெண்பா வெளிவந்தது என்ற அவர் மட்டக்களப்பில் 1963ல் எஸ். பொன்னுத்துரை ஏற்பாடு செய்திருந்த தமிழ் விழாவில் கவிதை வாசித்தமையைப் பதிவிடுகின்றார்.

> வாக்கினிலே ஒளியருளும் வரம்வேண்டித்
> தவறணையில் வரிசை சேர்ந்தால்
> சாக்கடையைக் காவலிடும் சண்டியராய்
> நியமிப்பான், சரிதான் அங்கே
> போக்கிரிகாள் என்பார்கள் பூனாவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்த பொன்மொழிகள்
ஆக்கிடுவார் அவையெல்லாம் அடல்ஸ்ற் ஒன்லி
வார்த்தைகளோ? அறிவின் சோதி

இக்கவிதை தனக்கு அடையாளத்தைத்தந்ததோடு மட்டுமல்ல எதிர்வினையையும் தந்தது எனக் குறிப்பிட்டுத் தன்னைப் பாராட்டி வீரகேசரியில் எழுதிய தளையசிங்கத்தின் வரிகளையும் பதிவிடுகின்றார். ''மட்டக்களப்பான் மரபோடு மனிதனாகவும் வாழ்கிறான், யாழ்ப்பாணத்தான் வெறும் மரபாக மட்டும்தான் வாழ்கிறான்'' என்னும் கருத்தை எதிர்வினையாற்றிய ஒரு நாடகாசிரியனுக்கு இறுத்த பதிலாக பதிவாகியுள்ளது.

மஹாகவிக்கு மட்டும் முக்கியம் கொடுக்கவில்லை நான் மதிக்கும் ஈழக்கவிஞர்களில் நீலாவாணன், முருகையன் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள் என்பதனை குறிப்பிடுகின்றார்.

1977ல் எழுதிய 'தாத்தாமார்களும் பேரர்களும்' என்பது அன்று பேசப்பட்ட கவிதைத் தொகுப்பு ஆனால் இன்றைய இளையர்களிடம் மாற்றமடைந்துள்ளது என்பதனை சுட்டிக்காட்டுகின்றார். நேற்றைய மாலையும் இன்றைய காலையும், ஹோசிமின் நினைவாக, புத்தரின் படுகொலை, போன்ற ஒடுக்குமுறை, தமிழர் விடுதலைக்குச் சார்பான கொள்கைகளில் என்னை முஸ்லிம்களுக்கு எதிரானவனாக முஸ்லிம்களும், நுஃமான் நம்மாள் எனத் தேசியவாதிகளும் கருதுகின்றார்கள். நான் ஒடுக்கு முறைக்கு எதிராக இவற்றிற்கு வெளியே நிற்கின்றேன் என்பதை ஆணித்தரமாகப் பதிவிடுகின்றார்.

அவரது மொழிபெயர்ப்புக்கள் பற்றியும் உரையாடலில் பதிவாகியுள்ளது. பாலஸ்தீனக் கவிதைகள், பிரவாதம் இதழ், கிழக்கிலங்கைக் கவிஞர்கள், மலையகக் கவிதைகள், நாவல் இலக்கியம் பற்றிய விமர்சனங்கள், வெங்கட சாமிநாதன் போன்றோரின் எதிர்வாதம், இன்றைய ஈழத்தின் கவிதைப் போக்குகள் பற்றிய குறிப்புக்கள் பதிவாகியுள்ளன. மொத்தத்தில் அகவயமான ஒரு கட்டுரையாகப் படுகின்றது.

கவிதைகள் பற்றிய பதிவுகளில் மா.காளிதாஸின் 'உங்களால் அடையாளம் காணமுடியாது, உண்டியலில் போட்ட சாவி, பூச்சாண்டி காட்டும் இசை, ஷெல்லுக்குத் தப்புதல், கண்கூசும் இரவு, சாவியைத் தொலைத்த கதவுகள், நெளிநெளிவான பாதைகளைப் பின்தொடர்தல்', சித்தாந்தனின் 'சேகுவேராவின் மயிர், இன்று வேறு மழை', சி.ரமேஷின் 'துட்டகைமுனுவின் பேரர்களும் போதிசத்துவரின் சீடர்களும், அரூபத்தின் இசை, துரோகத்தின் நிழற்படம் ஆகிய கவிதைகள் பதிவாக்கப்பட்டுள்ளதோடு சாந்தன் மொழிபெயர்ப்பில் ருவண்டாக் கவிதைகள், நான் ருவண்டன், உனக்கெது பெருமை என்பனவும், சந்திரா மனோகரனின் மொழிபெயர்ப்பில் அனானின்ஏதுமிலியும், சொ. பத்மநாதனின் மொழிபெயர்ப்புக் கவிதைகளும் பர்மிய மூலக் கவிதையான என் வரலாறு என்னுடையது அல்ல, தொங்கு பை என்பன போன்ற 55 கவிதைகள் இவ்விதழை மெருகூட்டுகின்றன.

கவிஞர் நா.சுகுமாரனை கல்யாணராமன் நேர்கண்ட ''இலக்கியத்தில் என் இருப்பின் சாட்சியம் அவரது வாழ்வியலோடு ஒட்டிய கவிதை வாசிப்பாக இடம்பெற்றுள்ளது. அவரது அனுபவப்பார்வைகள் கருப்பொருளாக்கப்பட்டுள்ளன.

வாசுதேவனின் ''என் புழுதி ரசம்' கவிதைகளை முன்வைத்து ஈர மண்சுவரில் அப்பிய கையடையாளம் என்னும் தலைப்பில் சு.குணேஸ்வரன் கட்டுரை வரைந்துள்ளார். ''எப்படிப் பார்த்தாலும் ஒவ்வொருத்தரும் ஏதோவொரு தூண்டில் போட்டுவிட்டு காத்துக்கொண்டிருக்கின்றோம் என வாசுதேவனைப் பதிவாக்குகின்றார். அத்தோடு நந்தினி சேவியரைப் பற்றியும் சுருக்கமான ஒரு பக்கத்துக்கு நீளும் கட்டுரையையும் பதிவாக்கியுள்ளார்.

''ஓர் எளிய கேள்வி'' எனும் டெம்சுலாவின் ஆங்கில மூலத்தைத் தமிழில் தருகின்றார் எம்.ஏ.சுசீலா. இந்தியாவின் வடகிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டதாக இப்படைப்புக்கள் பதிவாகியுள்ளமையை எடுத்துக்காட்டியுள்ளார்.

ஈழத்து இலக்கியப் புலத்தில் கணேசலிங்கன் என்னும் கட்டுரையை வடிவமைத்துத் தந்துள்ளார் சாங்கிருத்தியன். இக்கட்டுரை கணேசலிங்கனின் சமுதாயப் பார்வை, சமவுடமை நோக்கு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது கட்டுரை.

வாசகர் கடிதங்களும் இணைக்கப்பட்டுள்ள இதழில் இன்று பல்வேறு அரசியல் தாக்கங்களுக்கு இலக்காகி விமர்சிக்கப்படும் 'ஜெய்பீம்'' படம் தரும் பழங்குடியினரும் உருவகிப்பும் பற்றி ஸ்வர்ணவேல் ஈஸ்வரன் கருத்தாக்கம் செய்துள்ளமையும் வாசகர்களை இன்னோர் கோணத்தில் சிந்திக்கவைக்கும் பதிவுகளாகக் காண்ப்படுகின்றன.

இலக்கியவெளியின் இரண்டாவது இதழ் கவிதைச் சிறப்பிதழாக வந்து அறியப்படாத, அறியவேண்டிய பல்வேறு இலக்கிய தளங்கள் பற்றிப் பேசுகின்றது. வாசகர்கள் பயனடைவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

- திரு.த.சிவபாலு, ரொறன்ரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அச்சு, தொலைக்காட்சி, சமூக ஊடகங்களில் ஒரு செய்தி திரும்பத் திரும்ப அதிவேகமாக சுழலும்போது உடன் அந்த அலைகளின் மீது நாமும் பயணிக்காமல் அதைக் கொஞ்சம் சந்தேகம் கொல்ல வேண்டும் என்பதில் நான் எப்பொழுதும் ஒரு தெளிவுடன் இருப்பேன்.

சபா மரியம் என்கிற பேராசிரியர் தன் மாணவர்களின் பெரும் ஆதர்சமாய் விளங்குகிறார். மாணவர்கள் அனைவரையும் வழிகாட்டுகிறார். எதிர்காலத்திற்கு தயார் செய்கிறார், அவரைச் சுற்றிலும் உற்சாகத்தின் அலைகள் வீசுகிறது. அப்படியான பேராசிரியர் உடலை எரிக்கப்பட்ட நிலையில் காவல்துறை கண்டுபிடிக்கிறது. சபா மரியம் எப்படிக் கொல்லப்பட்டார், எதற்காக கொல்லப்பட்டார் என்பது தான் ஜண கண மன கதை.

இந்தச் சம்பவம் நிகழும் மாநிலத்தின் உள்துறை அமைச்சர் உடனடியாக இதனை விசாரிக்க தான் தேர்வு செய்யும் ஒரு அதிகாரியை நியமிக்கிறார். எந்த சமரசமும் இல்லாமல் இந்த கொலையாளிகளை பிடித்தே தீருவேன் என்று களத்தில் இறங்கும் காவல்துறை அதிகாரியாக சஜன் குமார் வருகிறார். சபா மரியத்தின் தாயிடம் ஒரு மாதத்தில் கொலையாளிகளை பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துகிறேன் என்று வாக்குறுதியளித்து கொலையாளிகளை அவர் வேட்டையாடுகிறார்.

தடயங்கள், சாட்சியங்கள், தொலைபேசி அழைப்புகள், சூழ்நிலைகள் என மெல்ல மெல்ல சஜன் குமார் கொலையாளிகளை நெருங்குவது பெரும் பரபரப்பாக திரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலையாளிகளை விரைந்து பிடித்து விட்டார், அவர்களை அதிரடியாக என்கவுண்டரில் கொலை செய்து அதிரடியாக தண்டனை வழங்கியதன் மூலம் துரிதமான நீதியை அடைந்துவிட்டார் என்று காவல்துறை அதிகாரியை திரை அரங்கமே பாராட்டும் நேரம் கதை அப்படியே தலைகீழாக மாறுகிறது.

# ஜண கண மன



## சமகால அரசியலின் குணகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதுவரை நாம் திரைப்படத்தில் பார்த்தது எல்லாம் பொய், இட்டுக்கட்டிய செய்தி என்று நீதிமன்றத்தில் அதிரடியாக ஆஜராகும் வழக்கறிஞர் பிரித்விராஜ் நிருவுகிறார். ஒரு கால் ஊனமாக அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் பிரித்விராஜ்.

வழக்கறிஞராக வரும் பிரித்விராஜ் மெல்ல மெல்ல ஒவ்வொரு கேள்வியாக முன்வைத்து நீதியை நோக்கி வழக்கை அழைத்துச் செல்கிறார். அவர் பேசப் பேச நாம் ஏற்கனவே பார்த்த ஒவ்வொரு காட்சியும் கட்டுடைக்கப்படுகிறது.

இந்தத் திரைப்படத்தில் இடம் பெறும் ஒவ்வொரு சம்பவமும் கடந்த பத்து ஆண்டுகளில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்கள் என்பதை நமக்கு திரைக்கதை உணர்த்துகிறது, அதை எல்லாம் எப்படி நம் ஆட்சியாளர்கள் மக்களை முட்டாளாக்க பயன்படுத்தினார்கள் என்பதை திரைப்படம் நகர நகர உணருகிறோம்.

ஒரு வன்புணர்வு எப்படி தேசிய தலைப்புச் செய்தியாக மாறுகிறது, எல்லா வன்புணர்வுகளும் ஏன் தேசிய செய்திகளாக மாறுவதில்லை? தேர்வு செய்யப்பட்ட வன்புணர்வுகளில் மட்டும் எப்படி தேசிய மகளீர் ஆணையம் தலையிடுகிறது? எப்படி இந்தியாவில் 15 நிமிடங்களுக்கு ஒரு முறை நிகழும் வன்புணர்வுகளை ஊடகங்கள் கண்டும் காணாமலும் போகின்றனர் என்பதை பிரித்விராஜ் கேள்விகளாக அடுக்கும்போது நமக்கு 2012யில் நிகழ்ந்த நிர்பயா கும்பல் வன்புணர்வும் அது எப்படி ஒரு தேசிய செய்தியாக தலைப்புச் செய்திகளில் மாதக்கணக்கில் நிலைத்திருந்தது என்பதும் புலனாகிறது. அப்பொழுது ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பாஜக கையில் எடுத்த ஒரு வழக்கு அது. ஆனால் இன்று பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு பாலியல் வன்புணர்வுகள் அதிகரித்தவண்ணம் உள்ளது. ஆனால் அவர்கள் எப்படி இன்றைக்கு அதிகாரத்திற்கு வந்து வாய்மூடி மௌனமாக இருக்கிறார்கள் என்பது நினைவிற்கு வந்தது.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் 2019ல் பெண் மருத்துவர் ஒருவர் கூட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொடூரமான நிலையில் கொலை செய்யப்பட்டார். இந்த குற்றத்தில் ஈடுபட்டவர்கள் அந்த பெண்ணின் உடலை பின்னர் எரித்ததாகவும் இந்த செய்திகள் தொலைக்காட்சிகளில் இரண்டு மூன்று நாட்கள் நேரலையில் ஓடியது. இந்த குற்றச் செயலில் ஈடுபட்டதாக நான்கு பேர் கைது செய்யப்பட்டு, உடனடியாக காவல்துறையினரால் என்கவுண்டர் செய்யப்பட்டார்கள். அவர்கள் தப்பியோடியதால் என்கவுண்டர் செய்தோம் என்று காவல்துறை விளக்கமளித்த போதும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் இது பொய் என்பது அப்பட்டமாகத் தெரிந்தது. ஆனால் ஊடகங்கள் காட்டிய திசையில் மக்கள் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



என்கவுண்டர்களைக் கொண்டாடினார்கள். “இன்ஸ்டண்ட் காபி போல, இன்ஸ்டெண்ட் நீதி” என்று மக்களையும் ஒரு கொலையில் உற்சாகம் கொள்ள வைக்க ஊடகங்களால் முடியும் என்பதை இந்த திரைப்படம் நமக்கு அங்குலம் அங்குலமாக விளக்குகிறது. ‘பெரும்பான்மையினர் விரும்புகிறார்கள் என்பதால் உணர்ச்சி வேகத்தில் முடிவெடுக்கலாமா? என்கிற கேள்வியை திரைப்படம் அழுத்தமாக முன்வைக்கிறது.

மத்திய பல்கலைகழகத்தில் வேலை செய்த தன் ஆசிரியரின் மரணத்திற்கு நீதி கேட்டு போராடுகிறார் அவரது மாணவி கௌரி, கௌரி பல்கலைகழக வளாகத்திலேயே கூலிப்படைகளால் தாக்கப்படுகிறார். அவர் தாக்கப்படுவதை காவல்துறை வேடிக்கை பார்க்கிறது. இந்த காட்சிகளில் கூலிப்படைகளை சேர்ந்த குண்டர்கள் அனைவரும் காவி உடை அணிந்திருக்கிறார்கள். சமீப ஆண்டுகளில் புதுதில்லியின் ஜெ.என்.யு பல்கலைகழகம் மற்றும் ஜாமியா பல்கலைகழகங்களில் போராடும் மாணவர்களை எப்படி பாஜக-சங் பரிவாரங்களின் குண்டர் படைகள் தாக்கினார்கள் என்பதையே இந்த காட்சிகள் துல்லியமாக சித்தரித்துள்ளது. எப்படி இதனை எல்லாம் ஊடகங்கள் கண்டிப்பதோ, எழுதுவதோ இல்லை என்பதையும் இந்த நிகழ்வு நமக்கு நினைவுபடுத்துகிறது. புதுதில்லியில் போராடும் மாணவர்களைப் பார்த்து துப்பாக்கி ஏந்தி சென்றார் ஒருவர், எப்படி இன்று சங் பரிவார் அமைப்புகள் தங்களின் தொண்டர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கிறது என்பதையும் பிடிபடும் பட்சத்தில் அவர்களை ஊடகங்கள் மனநிலை சரியில்லாதவர்கள் என்று ஒன்று போல் அழைப்பதும் நினைவிற்கு வந்து சென்றது.

ஒரு மத்திய பல்கலைகழகத்தில் ஆய்வு செய்யும் தலித் மாணவரை அவரது பார்பன பேராசிரியர் எப்படி நடத்துவார் என்கிற நிதர்சனத்தை கச்சிதமாக காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குனர் டிஜோ ஜோஸ் ஆண்டனி. இட ஒதுக்கீட்டில் இன்று இந்தியாவின் உயர் ஆய்வு நிறுவனங்களில் பட்ட மேற்படிப்பிற்கு செல்லும் மாணவர்கள் எப்படி நடத்தப்படுகிறர்கள், கேலி செய்யப்படுகிறார்கள், சிறுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை இந்த திரைப்படம் ஆவணப்படுத்தியிருக்கிறது.

சென்னை ஐஐடி மாணவி பாத்திமா லத்தீ·ப் தற்கொலை செய்து கொண்டது முதல் அவ்வழக்கை எப்படி ஊடகங்கள் கையாண்டன என்கிற பத்திரிக்கை செய்திகளில் இருந்து தான் கேரளா மாநிலம் அதற்கு எப்படி கொதித்தெழுந்தது என்பதில் இருந்து தான் இந்த திரைப்படம் உருவாகியிருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். சென்னையில் தற்கொலைக்கு தள்ளப்பட்ட பாத்திமா லத்தீ·ப்பின் மரணத்திற்கு ஒரு சமர்ப்பணமாகவே இந்த முழு திரைப்படம் அமைந்திருக்கிறது. இந்தியாவெங்கும் மாணவர்கள் உயர் ஆய்வு நிறுவனங்களில் செய்து வரும் தொடர் தற்கொலைகளை எப்படி இன்றைய தனியார் ஊடகங்கள் மூடி மறைக்கிறது என்பதையும் இந்த சமூகம் விவாதிக்க முன்வரவேண்டும்.

ஒரு சினிமாவாக அல்லாமல் இந்த சமூகத்திற்கே ஒரு பாடமாக இந்த திரைப்படம் மாறுகிறது. *The Pied Piper of Hamelin* கதையில் அவருக்கு பின்னால் செல்லும் எலிகள் போல் இன்று உலகின் மனிதர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஜன கண மன தெளிவுபட காட்சிப்படுத்தியிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REALTOR®
MLS
MULTIPLE LISTING SERVICE

RE/MAX ACE
BROKER
INDEPENDENTLY OWNED
AND OPERATED
YOUR PLACE

**SRI NADARAJASUNDRAM**
Sales Representative

**Direct: 416 276-6666**
@ sri@remaxace.com

#1
RE/MAX



416.270.1111
416.270.7000

**3-1286 Kennedy Rd,**
**Toronto, ON.**
**M1P-2L5.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org